Anayae [illegible] (Private)

# SAMPASIVAM-GNANAMIRTHAM

OR

# THE TREASURE OF VIRTUE

## AN INTERESTING TAMIL NOVEL


BY

A. NAGALINGAM, (Karai)

JAFFNA

(PRESENTLY OF TREASURY, KUALA PILAH, F.M.S.)



PRINTED BY S. LAZAR & SONS, 13, SCOTT ROAD,

KUALA LUMPUR.

—

1927.

உ

சிவமயம்.

---

# சாம்பசிவம்-ஞானமிர்தம்

அல்லது

# நன்னெறிக் களஞ்சியம்

ஓர்

இனிய கற்பனு சரிதம்

---

இஃது


யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரையம்பதி

அ. நாகலிங்கம்

இயற்றியது.


---


கோலாலம்பூர்

எஸ். லாஸர் அண்டு ஸன்ஸ் அவர்களால் அச்சிடப்பட்டது.

—

1927.



*(All Rights Reserved.)*

PRINTED BY
S. LAZAR & SONS, 13, SCOTT ROAD, KUALA LUMPUR.




ஸ்ரீ நடராஜமூர்த்தி.

# இந்நூலி லடங்கியுள்ள பதினேழு அத்தியாயங்களின் தலையங்கங்கள்.


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | இல்லற மல்லது நல்லற மன்று ... ... | 1 |
| 2. | அழிவுக்கு முந்தியது அகந்தை ... ... | 19 |
| 3. | யாருமற்ற வருக்குத் தெய்வம் துணை ... | 37 |
| 4. | குடியின் கேடு ... ... ... | 52 |
| 5. | ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் ... | 70 |
| 6. | நோன் பென்பது கொன்று தின்னமை ... | 87 |
| 7. | காதலின் நறுமணம் ... ... ... | 118 |
| 8. | நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் | 136 |
| 9. | கேள்விச் செல்வமே சிறந்தது ... ... | 158 |
| 10. | அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் | 192 |
| 11. | மனங் கொண்டது மாளிகை ... ... | 207 |
| 12. | ஆலயம் தொழுவது சாலவு நன்று ... | 224 |
| 13. | அடாது செய்தவர் படாது படுவர் ... | 241 |
| 14. | விதித்த விதியை விட வேறு நடக்குமா ... | 257 |
| 15. | சுற்றத்திற் கழகு சூழ விருத்தல் ... ... | 271 |
| 16. | காவல் தானே பாவையர்க் கழகு ... ... | 287 |
| 17. | காதலின் வெற்றி ... ... ... | 316 |

## இந்நூலில் அடங்கியுள்ள சில விஷயதான அட்டவணை.


| இலக்கம் | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1 | அறம் செயவிரும்பு | 72 |
| 2 | ஆலயம் தொழுவது சாலவு நன்று | 225 |
| 3 | ஆன்மா, சிருஷ்டியின் நோக்கம், மானிடப் பிறவியின் சிறப்பு, சைவசமய மாட்சி | 93, 94, 95 |
| 4 | இல்லற மாட்சி | 4 |
| 5 | ஒற்றுமையும் பொறுமையும் | 180 |
| 6 | கல்வியின் பெருமை | 55 |
| 7 | கல்வியும் கைத்தொழிலும் | 170 |
| 8 | கற்புடைமை | 296 |
| 9 | காமம் | 242 |
| 10 | காலவேற்றுமையும் சாதிவேற்றுமையும் | 174 |
| 11 | குடியின் கேடு | 61 |
| 12 | கைக்கூலி வாங்கல் | 200 |
| 13 | சங்கங்கள் | 162 |
| 14 | சீதனம் | 153 |
| 15 | சுற்றந்தாங்கல் | 284 |
| 16 | செய்ந் நன்றி யறிதல் | 49 |
| 17 | தந்தை தாய் பேண் | 172 |
| 18 | தமிழின் மாட்சி | 166 |
| 19 | தற்கால நாகரீக முழக்கம் | 182 |
| 20 | நாடகம் | 78 |
| 21 | நிலையாமை | 75,113 |
| 22 | பத்திரிகை வாசிப்பதனாலாய பயன் | 88 |
| 23 | பால்ய விவாகம் | 122 |
| 24 | புத்திரப் பேறு | 7 |
| 25 | புலானுண்ணல் | 97–116 |
| 26 | பெண் கல்வி | 84 |
| 27 | போதுமென்ற மனத்திருப்தி | 206 |
| 28 | மானிடப் பிறவியின் பயன் | 240 |
| 29 | விதவா விவாகம் | 119 |
| 30 | விவாகம் | 311 |
| 31 | வேளாண்மையின் பெருமை | 168 |

உ

சிவமயம்.

---

# சாற்று கவி.

யாழ்ப்பாணம், காரைநகர் இயற்றமிழ்ப் போத காசிரியரும், வித்துவானுமாகிய

## ம-௱-௱-ஸ்ரீ த. நாகமுத்துப்பிள்ளை அவர்கள்

இயற்றிய

## நிலைமண்டில ஆசிரியப்பா.

பூமலி சாம்ப சிவம்புக ழார்ந்த
நாமலி ஞானா மிர்தநன் னூலினிற்
சிந்தையி லூன்றித் தெளிந்தறி விதியார்
விந்தைசேர் நுண்ணிய விடயங்க ளாவன:—
பெண்களின் கல்வி பேணவர் கற்பு
கண்களை நிகர்க்குங் கல்வியின் பெருமை
சமையா சாரஞ் சார்ந்தவில் லறநிலை
எமையாள் விக்கிர கங்களி னிலக்கணஞ்
சீலமி லூன்றினல் சேர்குடி கேடு
ஆலய வழிபா டவற்றின் மாட்சிமை
வேசிதா சிகளால் விளையுந் தீமை
நாசலோ பிகளின் நகைபண மழிவிதம்
உத்தியோ கத்தினா லுற்றிடு நிலைமை
மெத்துவே ளாண்மையால் விளங்கிய மேனிலை
விரதா திகளின் விளக்கம் பொறுமையாற்
சாதமாய் வந்து தாக்குநிர்ப் பாக்கியம்
புத்திரப் பேறுமெய் பூதிநிலை யாமை
சத்திய வைதிக சமையத்தின் பெருமை
ஆன்ம விளக்க மார்பா லியமணம்
மேன்மையில் லாத விதவா விவாகம்

## VI.

நவினநா கரிகம் நற்றமிழ் மாண்பு
செவியுளோர் வெறுக்குஞ் சீதனச் சிறுமை
சங்கங் கைத்தொழில் தந்தைதாய்ப் பேணல்
பங்கமில் காலம் பகர்சாதி வேற்றுமை
ஒற்றுமை யின்மை யுறுபரி தானம்
கற்றுணர்ந் தறிந்த காதலின் சிறப்பு
இன்ன பிறவு மெழில்பெறப் பகுத்தே
நன்னெறிக் களஞ்சிய நன்னூ லெனவதை
பாவலர் நாவலர் பகர்ந்துகொண் டாடக்
காவலர் புகழுங் கண்ணிய வரோதயன்
பொன்னியாழ்ப் பாணமாம் பூவையின் றிருநுதன்
மன்னிய பொட்டென மாண்புகொண் டொளிருங்
காரை நகரான் காராளர் திலதன்
பேரை யுடைய பிரபல பிரபு
பூநீதி முதலி போந்திடு வமிசன்
மாநீதி யாளர் மதிபுரு டோத்தமன்
கருணா நிதியெனக் காசினி யோர்புகழ்
அருணா சலத்தி னருந்தவப் புத்திரன்
தேவியல் செந்தமிழ்ச் செல்வரா தியர்செந்
நாவிலும் பாவிலும் நடிக்கும் புகழ்மணி
ஆதுலர்க் கிருநிதி யறத்தின் வேலி
வேதியர்ப் போற்றிடு விரத நியமம்
கல்விக் களஞ்சியங் கற்றோர்க் கிலஞ்சியம்
செல்வத் தனதன் றிருமகள் வசிகரம்
ஈச னடியே யிரும்பவப் புணையென
நேச முடன்பணி நித்திய விரதன்
நவரசம் தசவனம் நாற்பொருள் பிறநலம்
சிவமுற மலிந்து திகழ்ந்திட வியற்றினன்
போகமார் புவியுளோர் புகழ்ந்து கொண்டாடு
நாக லிங்கமாய் நவில்பண் டிதனே.

௳

சிவமயம்.

---

# மதிப்புரை.

தென் இந்திய திருநெல்வேலியைச் சேர்ந்த
திருவாளர்
## R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L.
## (High Court Vakil)
இந்நூலைப்பற்றிக் கூறிய அபிப்பிராயம்.

கற்பனைக் கதைகளெனப் பெயர் புனைந்து காமவெறி யூட்டும் கதைகள் மலிந்த இக்காலத்தில், சாம்பசிவம்—ஞானாமிர்தம் என்னும் இந்நவீனம், இன்பமும் பயனும் இனிதளிக்கும் நூலாய் இலங்குகின்றது. இந்நூலை ஆக்கிய அன்பர்க்கு அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் அமைந்துள்ள தலையாய ஆர்வம் இயல்பாகவே இக்கதையில் பொங்கித் ததும்புகின்றது. செந்தமிழ் மொழியின் செம்மை சான்ற நலம் நுகர்ந்த நல்லியற் புலவரிடமே இத்தகைய ஆர்வம் அமைந்து திகழ்வதாகும். கற்பிற் சிறந்த மங்கையை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு நிகழும் இல்லறத்தின் பெருமையும், செழுங்கிளை தாங்கும் செல்வரது சீர்மையும், சைவ சமயக் கொள்கைகளின் செம்மையும், இந்நூலில் இனிது விளக்கப்பட்டுள்ளன. சைவசமய உண்மைகளைக் கதைத் தலைவனாகிய சாம்பசிவமே விளக்கப் போந்தது சாலவும் பொருத்த முடையதாய்த் தோன்றுகின்றது. மெய்ப் பொருளாய சாம்பசிவத்தை அறிந்து

அடைவது ஞானத்தாலேயே சாலும் என்னும் உண்மை ஞானமிர்தம் சாம்பசிவத்தின் பெருமையை அறிந்து அவனை எய்தும் பான்மையால் இனிதுணர்த்தப் படுகின்றது. இன்னும் இல்லறமாய நல்லறத்தை நடத்தும் பெண்களுக்குக் கல்வி இன்றியமையாத தென்றும், ஆங்கில மொழி பயின்று ஆங்கில மக்களது பழக்க வழக்கங்களையும் நடை உடைகளையும் பின் பற்றுதல் பொருத்தமற்ற தென்றும், ஒழுக்கமே உயர்குலமென்றும், கொல்லாமையாகிய அறமே எல்லா அறங்களினும் ஏற்றமுடைய தென்றும், மயக்கும் மதுவருந்தும் வழக்கம் தீமை பயக்கும் என்றும், மனம் பொருந்தாத மணத்தால், மட்டற்ற துன்பம் விளையுமென்றும், அறிவிலும் உருவிலும் குணத்திலும் குலத்திலும் பொருந்திய காதலர் இருவரும் கருத்தொருமித்து நிகழ்த்துவதே இல்வாழ்க்கை யென்றும் இந்நூல் இனிது எடுத்துரைக்கின்றது. இத்தகைய பல உண்மைகள் பொதிந்த கற்பனைக் கதையை எளிய தமிழ் நடையில் இனிய படங்களோடு எழுதி அமைத்த நற்றமிழன்பர் நாகலிங்கம் பிள்ளை அவர்களுக்குத் தமிழகத்தார் நன்றி என்றும் உரியதாகும். இந்நூலால் வரும் பொருளைக், காரையம்பதியிலமைந்த திருக்குளத்தைத் திருத்திப் பழுது பார்க்கும் பணியிலேயே செலவு செய்வதாக திருவாளர் நாகலிங்கம் பிள்ளை அவர்கள் கருதி யிருப்பதால், அறநெறி போற்றும் அறிஞர் யாவரும் இந்நூலை வாங்கிக் கற்று இருமைப் பயனையும் எய்துமாறு வேண்டுகின்றேன்.

26-10-27 R. P. சேதுப்பிள்ளை.

இந்து சாதன பத்திரிகாசிரியரும்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப்
போதகாசிரியருமாகிய

## ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

இந்நூலைப்பற்றிக் கூறிய அபிப்பிராயம்.

சாம்பசிவம்—ஞானமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம் எனப்படும் இக்கற்பனு சரித்திரத்தின் சில அத்தியாயங்களைத் தொடர்பாகப் படித்தேம். இதன்கண் இல்லறமல்லது நல்லறமன்று முதலாகக் காதலின் வெற்றி என்பது ஈறுகப் பதினேழு அரிய விஷயங்கள் அதிகாரந்தோறும் பிரதிபாதிக்கப் பட்டுள்ளன. மேலும் தருமம், ஆலயவழிபாடு, கல்வியின்பெருமை, மதுபானத்தால் வருங்கேடு, பெரியாரைப் பேணல், புலாலுண்ணுமை, மனாம்மியம், வேளாண்மை முதலானவைகளின் மாட்சி ஆங்காங்கு விளக்கப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியராகிய ஸ்ரீமத். அ. நாகலிங்கமவர்கள் இதனை இனிய செந்தமிழ் நடையில் திரிசொற்கள் கிராமியச் சொற்கள் அதிகம் விரவுதலின்றி அற்ப கல்வியுடையோரும் இலகுவிற் படித்து விஷயங்களைக் கிரகிக்கக்கூடிய வசனநடையில் எழுதியிருக்கின்றனர். சென்னை முதலாம் இடங்களிற் பிரசுரமாகும் காமசிருங்காரவர்ணனையோடு கூடிய கற்பனு சரித்திரங்களை மிக்க ஆவலோடு வாங்கிப் படிக்கும் இங்குள்ள ஆடவர் மகளிர் அவற்றை யொழித்து சற்போதம் பயக்கும் இந்நூலை ஆர்வத்தோடும் ஏற்றுப் படித்துப் பயனடைதல் சாலவும் நன்றும்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க
நிர்வாக அங்கத்தவரும்
யாழ்ப்பாணக் கச்சேரியில் உத்தியோகம்
பார்ப்பவருமாகிய

## செ. இராசநாயக முதலியார் அவர்கள்

(Office Assistant, Kachary, Jaffna)

எழுதிய மதிப்புரை.

மலாய் நாட்டுக் கோலப்பில்லா வாசியாகிய திருவாளர் அ. நாகலிங்கம் அவர்கள் இயற்றிய சாம்பசிவம்—ஞானாமிர்தம் என்னுங் கற்பனாலங்கார சரித்திரம் நண்பர் ஒருவர் உதவியால் எம்பார்வைக்கு எட்டியது. இன்மொழியாகிய நந்தமிழ்மொழி தன்புராதன வனப்புஞ் சிறப்புமிளந்து பாராட்டுவாருஞ் சீராட்டுவாரு மின்றித் தளர்ந்து குன்றிப் போகுமிக் கலிகாலத்திற் பத்திய ரூபமாயேனுங் கத்திய ரூபமாயேனும் வெளிவருந் தமிழ் நூல்களை இன்புடன் ஏற்றுப் பொன்போற் போற்றி வருவது தமிழ் மக்களின் கடமை யென்றெண்ணி யேற்றேமாயினும், அந்நூலின் அட்டவணையிற் குறிப்பிட்ட தலையங்கங்களைப் பார்த்தவுடன் அந்நூலைப் படிக்கும் ஆவல் தூண்டப்பட்டேம். இக்காலத்துக்குத் தேள்வையான கல்வியின் குறைவால் நோந்து வளரும் நவநாகரீகங்களைக் கைக்கொள்ளும் அற்ப அறிவினரைத் தெருட்டிப் பலமேற் கோள்களினால் உண்மைகளைப் புகட்டி, நல்லொழுக்கங்களின் முறைகளை விளக்கி எவரும் இலகுவில் விளங்கக்கூடிய இனிய வசன நடையில் எழுதியிருப்பது மன்றி எம்மொழிக் கோரிளமையை ஈந்து அதன் பண்டை உரிமைகளை மீண்டுங் கொடுத்து நிறுவ முயன்றிருக்குந் திருவாளர் நாகலிங்கத்தின் உழைப்

பு மிகவும் பாராட்டற் பாலதாகும். ஓர் பயனையு முதவா து நேரத்தை மாத்திரங் களிக்கு முகாந்திரமாய் எழுந்து மலிந்து கிடக்கும் நவீன கதைகளை அறவே யொளித்து இதுபோன்ற கற்பனை சரித்திரங்களை ஆவலுடன் ஏற்றுக் "கற்றபின் நிற்க அதற்குத்தக" வென்னும் எண்ணத்து டன் படித்தால் தமிழ் மக்கள் அளவிறந்த நற்பயனை யடை யப் பெறுவார்களென்பது திண்ணம். திருவாளர் நாகலிங் கத்தின் நன் முயற்சிக்கும் ஊக்கம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பண்டிதரும்

சை சங்க அங்கத்தவரும்,

யாழ்ப்பாணத்து செயின்ற் பார்றிக்ஸ் கல்லூரியில்

(Saint Patricks College)

தலைமைத் தமிழாசிரியருமான

## ஸ்ரீமத் பண்டித வ. சு. இராச ஐயனார்

அவர்களால் எழுதப்பட்ட மதிப்புரை.

நன்னெறிக் களஞ்சியம் என்னும் புனைந்துரை நூலானது மலாய் நாட்டிலே ஆள்வோன் அலுவலை மேற்கொண்டு வருவோரும், அன்பு நிரம்பிய நெஞ்சினருமான திருவாளர் அ. நாகலிங்கம் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. புனைந்துரை நூல்கள் எழுதும் வழக்கம் பண்டைநாளிலிருந்த எந்தமிழறிஞருக்குள் யாண்டும் இருந்திலது. பிற்றைஞான்று தமிழில் வந்து நிலவிய ஒரு சில நூல்களும் ஒரோ ஒரு நயம்பற்றி வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப்பட்டனவா மென்று உணரல் வேண்டும். உள்ளதை உள்ளவாறே அறிந்தும் உணர்ந்தும் போதரும் வாழ்க்கை வாய்மை தவழும் வாயினரான் தமிழநன்மக்களுக்கே இயல்பாயிருந்த தென்பதைச் சங்கச் சான்றோரான புலவர் பெருமக்கள் எழுதிவைத்த சங்கநூல்களால் அறியக்கிடக்கின்றது. கலித்தொகை, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு என்னும் நூல்களைக் கற்றவருள்ளம், பொருந்தாப் புனைந்துரைகளான இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன்கதை, சிந்தாமணிக்கதை, கொங்குவேண்மாக்கதை, முதலியவற்றைக் கற்றற்கு விரும்புமோ? அறிவுடையீர் சொல்லுமின்! இனித் திருத்தொண்டர் புராண வரலாறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முதலியன இயைபு பிறழாமல் படிப்போருணர்வை ஈர்த்து உருகச்செய்து அறி

வுச் சுடர்கொளுத்தி வருகின்றன என்பதை யார் தாம் அறியாதாருளர். ஆதலால் தமிழுமக்களுக்கே பெரிதும் இயைதலில்லாத புனைந்துரை நூல்கள் அவ்வியையு மிகுதியும் வாய்ந்த ஆரியப்புலவராலே எழுதப்பட்டு வந்தன என்பதும் தமிழரும் ஆரிய மக்கள் தம் கூட்டுறவால் நாளடைவிலே அவர் புனைந்துரைநூல்களைத் தம்து வாய்மை சிவணும் செவ்விய தமிழிலும் மொழி பெயர்த்துப் படிப்பான் தொடங்கினர். தொடங்கினரல்லது தாமாகவே புதிய புனைந்துரைகள் தமிழில் ஆக்குதற்கு விழைதலிலராய் மொழி பெயர்க்கப் பட்டனவற்றையே படித்து உழிதருவாராய் நின்றமை ஒன்றே தமிழறிஞர்க்குப் புனைந்துரை எழுதும் வழக்காறு யாண்டும் இருந்திலதென்ற எமது கொள்கையை வலுப்படச் செய்தற்குப் போலும் என்பதை ஆன்றோர் அறியக்கடவர். அது கிடக்க ஆங்கில அறிஞர் புனைந்துரைநூல்களை ஒருகால் மிகப் பெருக்கி வளர்த்தலிலேயே ஈடுபட்டனர். பின் அங்ஙனம் எழுதும் நூல்கள் அறிவுசான்ற பெரியோரால் பாராட்டப்படாமை கண்டு தமது முனைப்பையும், முயல்வையும் ஒருவாறு குறைத்துவிட்டனர். ஆங்கிலர் தாமும் இவ்வழக்கத்தை உரோமை நகரப் புலவர்பாற் பெற்றனரன்றித் தமக்கும் உரிமையாகப் பெற்றிலர். ஆழ்ந்த அறிவும், அமைதியும் வாய்க்கப் பெற்றார்க்கு புனைந்துரை நூல்கள் பயன்படா என்கின்றேம். வேற்று வேந்தர் ஆணையினடங்கித் தம்முரிமை யிழந்து வலிகெட்ட மொழிகள் கற்பாருங் கேட்பாருமின்றி மழுங்கி வருதல் இயல்பாதலின்லே எமது மொழியும் எல்லோரானும் விரும்பிக் கற்கப்படுகின்றிலது. இதனை நீக்கும் பொருட்டு மருண்ட நம்மவரைத் தெருட்டுதற்கு; எளிதான நடையில் நன்மைப் பாலவாய அறநெறிகள் சொட்சொட்டப் புதிது புதிதாய்ப் பல அறிஞர்களும் பலவேறு நூல்களை எழுதி

வெளியிடுகின்றார்கள். இவரை யொப்ப இந்நூலாசிரிய ரான தமிழறிஞரும், அறப்பயன் நோக்கி இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். இந்நூலாசிரியர் தம்மாலியன் றவரை முயன்று மெல்லென்ற சொற்களால் நன்மைதரும் நெறிகளைப் பொருத்தி எழுதியது பாராட்டற் பாலதே ஆங்காங்கே எடுத்துக்காட்டுக்கள் பல இவ்வாசிரியாற் சேர்க்கப்பட்டிருப்பன நன்மையைத் தருமென நம்புகின் றேம். இந்நூலில் மிகுதியும் பயின்று வரும் வடசொற் களை நீக்கிச் சொற்றொடர்கள் சிறிது சிறிதாய்த் தொடுக்கப் பட்டிருப்பின் தமிழுக்கு மிக ஆக்கமாகும் என்பதே எமது கருத்து. காமங்கண்ணிவரும் பகுதிகள் சிலவும் இல்லாம லே புனைந்துரைகள் எழுதுதல் எளிது என்பதற்கு இந்நூ லாசிரியர் ஓர் எடுத்துக் காட்டாயினர் கண்டீர்! இனி இந் நூலில் இடையிடையே வரையப்பட்ட கடிதங்கள் இன் னும் சிறிதாக வரையப்பட்டிருப்பின் மிக அழகை நல்கு மென எண்ணுகின்றேம். சாம்பசிவம் என்பார்மேல் ஞான மிர்தமென்னும் நங்கையார்க் கெழுந்த காதற்கிழமையினைத் தமிழ்மரபுபற்றிச் சிறப்பித்து ஆங்கு சில கலிப்பாட்டுக்க ளும் வரையப்பட்டிருப்பின் அது பெரிதும் அழகுறும் என் பது எமக்குப் புலப்படுகின்றது.

இயன்ற மட்டில் நன்கு எழுதப்பட்ட இந்நூல் சைவ வளர்ச்சிக்கும் அறம் ஆற்றுதற்கும் பயன்படுக என நோன்பு செய்யும் ஆசிரியர் கருத்து இனிது நிறைவேறுக என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேம். அன்பு என்று பொருள்தரும் சிவத்தை வழிபட்டு இன்பமென்று பொருள்தரும் தமிழை ஓதிவரும் சைவத் தமிழரான நம்ம வர் இந்நூலைப் போற்றி இந்நூலாசிரியர்பால் அன்பு செய் யக்கடவர் நலம்.

## சாம்பசிவம் ஞானமிர்தம்.

யாழ்ப்பாணம் காரை நகர் வாசியும், ஐக்கிய மலைய நாட்டில் கோலப் பிலா கஜானவில் உத்தியோகஞ் செய்பவருமான திரு. அ. நாகலிங்கம் இயற்றிய சாம்ப சிவம் ஞானமிர்தம் என்னும் நாவல் வரப் பெற்றோம். இது ஓர் அழகிய கட்டுக் கதை யாகும். எளிய இனிய நடையில் எல்லோருக்கும் விளங்கத்தக்க தமிழில் எழுதப்பட் டிருக்கிறது. இது வெறுங் காதற் கதையாயின்றிப் பல அரிய நீதி களைப் புகட்டுவதா யிருக்கிறது. சைவ சமயத்தின் பெருமை, புலால் உணவின் தீமை முதலிய பல விஷயங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. இப் புத்தகத் தில் வரும் ஊதியத்தை இந் நூலாசிரி யர் தமது ஊரான காரை நகரில் மருதடி சித்தி விநாயகர் கோவிலை அடுத்துள்ள பழைமையான திருக் குளத்தைச் சீர் திருத்தி நாற்புறமும் கற்படிகள் அமைத் துக் கட்டும் திருத் தொண்டுக்குப் பயன்படுத்தக் கருதி யிருக்கிறார். இத்த கைய திருப்பணியில் விருப்புள்ள அன் பர்கள் இந்நூலை வாங்கிப் படித்து இன் பமும் பயனும் அடைவதுடன் குறித்த புண்ணியத்தையும் பெறுமாறு வேண்டு கின்றோம். டிம்மி பக்கம் 360. இதற்கு விலை குறிக்கவில்லை. இரண்டு ரூபாய் முதல் எத்தனை ரூபாய் வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

சுதேசமித்திரன் 5.7.28

ஸ்ரீகாலஸ்ரீ 18·2·28

## சாம்பசிவம்—ஞானமிர்தம்

அல்லது

## நன்னெறிக் களஞ்சியம்

இவ்வரிய கதாமிர்தம் ஒன்று நம்பார்வைக்கு ஆக்கியோனால் அனுப்பப்பெற்றது இது ஓர் இனிய கற்பனை சரித்திரம்—நாங்கள் நடந்துகொள்ளவேண்டிய சகல விஷயங்களும் மேற்படி பிரதியில் அமைந்திருக்கின்றன. இதனை ஆக்கியோன் நம் காரையம்பதி வாசரும் கோலப்பிலாவில் உத்தியோக ஸ்தானத்தி விருப்பவருமாகிய ஸ்ரீமாந் அ. நாகலிங்கம்பிள்ளையவர்கள். எமக்கு அனுப்பியபிரதியை அன்புடன் ஏற்றுக்கொண்டு மனமார்ந்த ஆசீர்வாதம கூறுகின்றேம். ப—ர்.

---

தமிழ் நேசன் 28·3·28
கோலாலம்பூர்

***

## சாம்பசிவன்--ஞானமிர்தம்

நவீன கதைகளிற் சிலவற்றை உயர்தர நாவல்களென்று ஆங்கிலர் வகுத்து வைத்துப் போற்றுவது வழக்கம். அத்தகைய நாவல்களில் இந்நூல் ஒன்று. சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தக்க மேற்கோட் செய்யுட்களை இடைப்பெய்து படிப்பவரது மனத்தை உயர்த்தும் இந்நூல் கோலப்பிலா டிரெஷரியிலுள்ள அ. நாகலிங்கம் (காரைநகர்) அவர்களால் எழுதப்பெற்றளது

***

உ

கணபதி துணை.



# ஓர் விண்ணப்பம்.

" அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்"—(நாயனார்.)

பாரத மாதாவின் புத்திர சிகாமணிகளாகிய பிரிய
சகோதரர்களே!

எமது பரத கண்டமாகிய இந்தியாவின் தென் பாகத்துள்ள இலங்காபுரிக்கு வடக்கே, யாழ்ப்பாணக் குடா நாட்டைச் சேர்ந்த காரையம்பதி யென்னும் ஊரில், மருதடி சித்திவினாயகாலயத்திற்குத் தென்புறமாகச் சென்ற நூற்றாண்டுகளுக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள திருக்குளமானது தற்சமயம் மிக்க ஆபத்தான நிலைமையிலிருக்கின்றது. இதைப் பழுதுபார்த்து நாற்புறமும் கற்படிகளமைத்து இத்திருத்தொண்டைச் செய்து முடிப்பதற்கு எளியேன் விருப்புற்று இச்சிறு நூலை வெளியிடலானேன். இத்தொண்டைச் செய்து முடிக்க 10,000 ரூபாய் வேண்டியிருக்கின்றது. இந்நூலில் தற்சமயம் 1,000 பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. அச்சுக்கூலிக்கும் மற்றும் செலவுகளுக்குமாக 800 வெள்ளி செலவாய்விட்டது. ஆகவே செலவு நீங்க மேற் சொன்ன தொகையை இவ்வாயிரம் புத்தகங்

களைக் கொண்டே சேர்க்கவேண்டியிருப்பதால், பரோபகார சீலர்களும், மற்றும் சமயாபிமானிகளும் இதற்குதவி செய்து எம்மை ஊக்கப்படுத்திவிடுமாறு மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேம். இன்னுமொரு விஷயம் இங்கே குறிப்பிடத்தக்க தென்னவெனில், நாள்வீதம் நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து ஸ்நானஞ் செய்தும், ஆடு மாடுகள் நீரருந்தியும் வருகின்ற மேற்சொன்ன இத்திருக் குளத்தைத் திருத்திவைப்பதற்கு எளியேன் எடுத்துக்கொண்ட முயற்சியை ஊக்கப்படுத்திவிடுமாறு மலாய் நாட்டைச் சேர்ந்த நகரிசெம்பிலான் மாகாண சுதேச மன்னர் சேர் முகமது ஷா அவர்களைக் (Sir, Mohamed Shah, K.C.M.G. K.C.V.O., His Highness the Yang di Pertuan Besar of Negri Sembilan) கண்டு கேட்டதில், அவர் உடனே 100 வெள்ளி கொடுத்துதவியிருக்கின்றனர். இவருடைய பரோபகார சிந்தனையை நாம் பெரிதும் பாராட்டுகின்றேம். முதன் முதல் இத்தொண்டிற்காக ஊக்கப்படுத்திய மன்னரைப்போல் மற்றும் பரோபகார சீலர்களும் அபிமானிகளும் முன்வருவார்களானுல் எமது கோரிய காரியம் கூடிய சீக்கிரத்திற் கைகூடு மென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை.

ஆனதால் நண்பர்காள்!

உலகில் நாமிருப்பது நிச்சயமல்ல. இருக்கும் பொழுதே அறங்களைச் செய்யவேண்டும். பின்னுற் செய்வோமென்று நாளைப் பின் போக்கினுல் நாம் கடைத்தேற மாட்டோம்.

"காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலைக்
கிடந்தான் எழுதல் அரிதால்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு."—(அறநெறிச்சாரம்)

என்பது ஆன்றோர் திருவாக்கும்.

இனி, அறங்களுள்ளும் பழுதடைந்திருக்கும் ஆலயங்கள், கேணிகள், கிணறுகள், குளங்கள், மடங்கள் முதலியன வற்றைப் பழுதுபார்த்து வைப்பதே மிகவும் மேலான தர்ம மென்பது உங்கள் எல்லீருக்கும் சொல்லாமலே விளங்கும். ஆனதால் அன்பர்களே! இவ்விஷயத்தை யனுகூலமடையச் செய்வதற்கு உதவிபுரிய முன் வாருங்கள்! பரம்பொருள் கிருபை பாலிப் பாராக.

இங்ஙனம்,
ஆக்கியோன்.

குறிப்பு:—இத்திருத் தொண்டிற்காக உதவி புரிந்து புத்தகம் வாங்கும் ஒவ்வொருவருடைய பெயரும் விலாசமும், கொடுக்கும் தொகையும், பிரபல்யமான தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவிடப் படும்.

சிவமயம்.

---

# நூன்முகம்.

எமது பரத கண்டத்தில், தற்சமயம் அன்னிய நாகரீகம் தலை காட்டித் தாண்டவமாட, நமது நாட்டின் ஆசாரங்களும் நடவடிக்கைகளும் பெரும்பான்மை ஒதுங்கிவிட்டன. உலகில், நாம் என்னத்திற்காக வுதித்தோமென்பதைச் சிறிது முணராமல் கண்டதே காட்சி கொண்டதே கோல மெனப் பலர் நடக்கத் தலைப்பட்டதால், நமது மதக் கொள்கைகளும் மற்றும் ஆசாரங்களும் பெரும்பான்மை மாறிவிட்டன. எமது தாய் மொழியாகிய தேனினுமினிய தமிழ்ப் பாஷையானது தனது முன்னிருந்த நிலைமையினின்றும் கீழிறங்கிவிட்டது. இவற்றை யெல்லாம் கவனித்த பல அறிஞர், எமது நாட்டின் நன்மையைக் கருதிப் பல நூல்கள் எழுதி யுள்ளார்கள். சிற்றறிவுடையோனாகிய எளியேனும் தமிழ் நங்கை மீதுள்ள காதலின் மிகுதியால் ஏதோ மனதிற் றோன்றிய சில விஷயங்களைத் தொடுத்துச் சங்கரன் மைந்தன் கரிமுகனருளால் இந்நூலை வெளிவிடத் துணிந்தேம். எம்மால் சில பத்திரிகைகளில் வெளிவிடப்பட்ட பல வியாசங்கள் இந்நூலின் கண்ணே இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதிற் காணப்படும் விஷயங்கள் எமது நாட்டாருக்குப் பயன்படுமென்பதே எமது முழு நம்பிக்கையும். இனி, இந்நூல் எமது முதல் நூலாதலால், இதிற் காணப்படும் குற்றங்களைக் களைந்து குணத்தை மாத்திரம் கைக்கொள்ளுமாறு மிக மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேம். மேலும், இந்நூலிற் கூறியுள்ள கதா நாயகன்—கதா நாயகி, இவர்களின் பிற்கால சீவியத்தைப்பற்றி, ஈசுவரன் அருளும் பரோபகார சீலர்களின் உதவியும் கிடைக்கப் பெறின், இரண்டாவது பாகம் வெளிவிட எண்ணியிருக்கின்றேம்.

கோலப்பிலா,
11-9-1927.

இங்ஙனம்,
ஆக்கியோன்.

சிவமயம்.

# சாம்பசிவம்-ஞானமிர்தம்

அல்லது

# நன்னெறிக் களஞ்சியம்.

விநாயகர் வணக்கம்.

*சாம்பசிவ-ஞானமிர் தம்மெனுநூல் தண்டமிழிற்*
*றேம்பலின்றிக் சத்தியமாய்ச் செப்பவே—பாம்பணிந்த*
*வஞ்சுமுகத் தானளித்த வானைமுகத் தானிரண்டு*
*கஞ்சமலர்ச் செஞ்சரணங் காப்பு.*

## முதலாம் அத்தியாயம்.

"இல்லற மல்லது நல்லறமன்று"

நீர்வளம், நிலவளம், பொருந்திய நம்பரதகண்டமாகிய இந்தியாவின் தென்பாகத்துள்ள இலங்காபுரிக்கு வடக்கே யாழ்ப்பாணக்குடா நாட்டில், பண்டைக்காலத்தில், தமிழரசர் அரசாண்டுவந்த தலைநகராகிய, நல்லூரென்னும் கிராமத்தில், தற்பெருமை, அகங்காரம், பொறாமை, வஞ்சகம், சூது, கொலை, களவு, கள், காமம், குருநிந்தை முதலிய கெட்ட குணங்களில்லாதவரும், சிவபெருமானையே அநுதினமும் நினைப்பவருமாகிய, வேளாள குலத்துதித்த, பொன்னம்பல மென்னும் பெயரையுடைய ஒருவர் வசித்து வந்தார். இவருடைய தாய் தந்தையர் மிக வறிய குடும்பத்திலுள்ளவர்களாதலால், மரிக்கும் பொழுது, அற்ப பொருளேனும் வைத்துப்போகவில்லை. பொன்னம்பலம் தனது நிலைமையையுணர்ந்து, ஏதோ தன்னாலியன்ற மட்டும்

வேளாண்மையினால் தமது வாழ்வை நடாத்தி வந்தனர். இவருக்கு மூன்று*பரப்புத் தோட்டம் தானுள்ளது. அதில் ஒரு சிறு வீடு கட்டித் தனியே யிருந்தார். சில காலஞ் சென்றபின்னர், சிறிது சிறிதாக, அற்ப பணம் சம்பாதித்து அம்பிகை யென்னும் கற்பிற் சிறந்த ஓர் பெண்ணை விவாகஞ் செய்து கொண்டார். இவருடைய ஓர் விசேடித்த குண மென்னவெனில், கடவுள் மேல் இடைவிடாத பக்தியா யிருந்ததே. பொன்னம்பலம் மிகச்சிறிதாக நூல்களைப் படித்திருந்தும், அதிக அறிவுள்ளவராகக் காணப்பட்டார். ஆனால், முற்பிறவியில், இவர் அதிக அறநூல்களைக் கற் றிருக்க வேண்டுமென்பதே எமது கருத்தும். எங்ஙன மெனில்,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வியொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்னும் திருவள்ளுவ நாயனார் வாக்குக் கிணங்க, ஒருவற்கு ஒருசென்மத்தில் கற்ற கல்வியானது எழு பிறப்புக்குஞ் சென்று உதவுமென்று தெள்ளிதில் விளங்கக்கிடக்கின்றது. ஆனதுபற்றி, பொன்னம்பலமும் பூர்வ சென்மத்தில் அதிகங் கல்வி கற்றிருந்தபடியாற்றான், இச்சென்மத்தில், கடவுள் பக்தி ஏற்பட்டதென்று நினைக்க வேண்டியிருக்கின்றது. இவருக்கு வாய்த்த மனைவியாகிய அம்பிகை யென்பவள் கற்பில் அருந்ததியை நிகர்த்தவள். தான்வறிய குடும்பத் தில் விவாகஞ் செய்தேனே யென்று சிறிதேனும் நினைத் திருக்கமாட்டாள். "கல்லானாலுங் கணவன் புல்லானாலும் புருஷன்" என்றபடி தன்கணவன் சொற்படியே நடந்து வருவாள். தன்வீட்டில் வேலைகளைச் சீக்கிரம் முடித்துக்

*பரப்பு என்பது யாழ்ப்பாணத்தில் வழங்கும் ஓர் அளவை. அதாவது பதினாறு பரப்புச சேர்ந்தது ஒரு எக்கர் என்று வழங்கு வார்கள்.

கொண்டு, தன் கணவனுடன் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலும், நிலத்தைத் திருத்திப் பண்படுத்துவதிலும், எருயிடுவதிலும், இன்னும் தோட்டத்தோடு சேர்ந்த எவ்வித வேலைக்கும் சேர்ந்துழைப்பாள். கணவனுக்குத் தொந்தரவில்லாதபடி குடும்ப வேலைகளைத் தானே சுமந்து கொள்வாள். தன் புருஷன் விரும்பக்கூடிய உணவையே சுத்தமாகச் செய்துவைப்பாள். புருஷன் கோபித்தாலும் தான் கோபிக்கமாட்டாள். "பெண்டிர்க்கழகு எதிர்பேசா திருத்தல்" என்ற பழமொழிப்படி தன் புருஷனுடன் எதிர்த்துப் பேசமாட்டாள். புருஷனுக்கு ஏதும் வருத்தம் வந்தால் அவளுக்கும் வருத்தம். புருஷன் சந்தோஷமா யிருந்தால் அவளும் சந்தோஷமாயிருப்பாள். புருஷனுக்கு எதில் விருப்பமோ அவளுக்கும் அதிலேயே விருப்பம். புருஷன் எப்படித் தரித்திரனாயிருந்தாலும் அவளுக்கு மிக்க குபேரனாகத் தோன்றும். புருஷன் சாப்பிட்டால் அவளு டைய பசியாறிவிடும். ஏழைகள் யாரேனும் யாசகத்திற்கு வந்தால், தான் வறியவளென்றெண்ணுவதை விட்டு தனக் கில்லா விட்டாலும், வந்தவர்களை மிக்க முகமலர்ச்சியுடன் அன்பாய் உபசரித்துவிடுவாள். பிற உயிர்களையும் தன்னு யிரைப் போலவே கருதி நடப்பாள். செல்வந்தர் வீட்டிற் பெண்கள் நல்ல உடைகளையும், நல்லாபரணங்களையும் அணி ந்துகொண்டு, மிக்க ஆடம்பரமாக உலாவுவதைக் கண்டும், தனக்கும் அக்கதி வரவில்லையே யெனச் சிறிதேனும் எண் ணமாட்டாள். தன்கணவனை நகை வேண்டுமென்றும், விலை உயர்ந்த ஆடைகள் வேண்டுமென்றும் கேட்கமாட் டாள். புருஷன் தானகவே அவற்றை வாங்கிக் கொடுத் தாலும், அவையெல்லாம் அனாவசியமெனச் சொல்லிவிடு வாள். மிக்க ஒறுப்பனவாகவே காலத்தைக்கழிப்பாள். வரவுக்குத் தகுந்த செலவையே செய்வாள். தன்வீட்டிற்

காரியங்களைப் பிறரிடம் போய்ப் பேசமாட்டாள். புருஷன் தன்னை வைது அடித்தாலும் தாய் வீடு போகமாட்டாள். தன்புருஷனே அவளுக்குத் தெய்வம். இன்னும் அவளு டைய குணங்களை யெடுத்துச் சொல்லுவதற்கு இச்சிறு புத்தகம் இடங் கொடாததலால் மிகச்சுருக்கி விட்டோம். இவ்விதமாகப் பொன்னம்பலமும் அம்பிகையும் உடலும் உயிரும் போலவும், பூவும் மணமும் போலவும், மிக்க ஐக் கியமாக வாழ்ந்து வந்தார்கள். இப்படியான ஐக்கிய வாழ் வைத்தான் இல்லறமென்று சொல்லலாம்.

இல்லறம், துறவறம் என இருவகைப்பட்ட அறங் களுள், இல்லறமே மிகச் சிறந்ததெனப் பெரியோர்கள் கூறுகின்றனர்:-

" அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று."

" அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்."

" இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை."

என்று திருவள்ளுவ நாயனாரும்

" இல்லற மல்லது நல்லற மன்று "

என்று ஔவையாரும், இன்னும் பிறவவற்றுனும் இல்லறத் தை மிக்க புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இல்லறம் என் இவ்வாறு புகழப்பட்டதோவெனில், உலகில் நாமடைய விரும்பும் இன்பங்களை யனுபவித்துக்கொண்டே பேரின்ப முத்தியடையலா மென்பதினாலேயே. இதைச்சார்ந்தே ஔவையாரும்

" ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்று பாடியிருக்கின்றனர். ஆனால் துறவறத்தால் முத்தி யடைய முடியாதென்றல்ல. துறவறம் உலகத்தில் வாழும் மாந்தர்கள் அனுசரித்து நடப்பது மிகவும் கடினம். இல்லறம் இலௌகிகத்தோடு சேர்ந்திருப்பதால், அதனைச் சர்வ ஆன்மாக்களும் அனுசரித்து நடக்கலாம். மேற்சொன்ன வற்றாலேயே இல்லறம் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டது. இனி இவ்வில்லறத்தை நடத்துவதற்கு அன்புடைய மனைவி வேண்டும். உதாரணமாக ஓர் வண்டியை யிழுக்கும் மாடுகள் இரண்டும் ஒரு மாடு இழுப்பதுபோல யிழுத்தாற்றான் வண்டி சரியே செல்லும். ஒன்று பிந்தியும் ஒன்று முந்தியும் இழுத்தால் வண்டி சரியே செல்ல வியலாது அலங்கோலமாகப் போய்விடும். ஆனபடியால் இரண்டும் ஒரே மாதிரி சேர்ந் திழுக்கக்கூடிய மாடுகள் எப்படி வண்டிக்கு அவசியம் வேண்டுமோ அவ்விதமே இவ்வில்லறமென்னும் வண்டியைக் கொண்டு நடத்துவதற்கு அன்புள்ள மனைவியும் கணவனும் வேண்டும். இதனாலன்றோ அறநெறிச்சாரத்தில்

> "மருவிய காதல் மனையாளும் தானும்
> இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
> இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
> செல்லாது தெற்றிற்று நின்று."

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் கற்புவாய்ந்தவளும் நற்குணமுள்ளவளும், ஜீவகாருண்ய முள்ளவளும் புருஷனுக்கு எவ்விதத்தும் அடங்கி நடப்பவளும், *நாணம் மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும்

---

*நாணம் என்பது வெட்கம். மடமென்பது எல்லாமறிந்தும் அறியாததுபோலிருத்தல். அச்சமென்பது ஒருநாளும் சாணாததைக் கண்ட விடத்து அஞ்சுதல். பயிர்ப்பென்பது கணவனல்லாத கைமேற்படின் உடம்பு அருவருத்தல்.

காக்கக்கூடியவளாயும் வம்பு பேசாதவளும், இன்னும் இன்னோரன்ன நற்குணங்களமையப் பெற்ற பெண்ணுடன் கூடி இருவர் மனமும் எக்காரியத்திலும் ஒரே மனதுடையோராய் வாழ்வதே இல்லறமென்று சொல்லப்படும். இவ்விதம் வாழ்ந்தால் எவ்விதத்தும் மோட்சமடையலாமென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. இப்படியாக ஓர் கணவனும் மனைவியும் மிக ஒற்றுமையாகவும் ஒரே மனதுடையோராயும் இல்லற நெறி தவறாது நடப்பாராகில், இவர்கள் உலகத்தில் மனித சென்மமெடுத்தாலும் தேவலோகத்தில் வாழும் தேவர்களுள் ஒருவராக எண்ணப்படுமாம். இதற்குப் பிரமாணம் திருக்குறளில்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வில்லறத்தை விரிக்கிற் பெருகுமென விடுத்து நமது கதைபாற் செல்வாம்.

இப்படியாகப் பொன்னம்பலமும் அவர்மனைவி அம்பிகை யென்பவளும் மதனும் இரதியும் போலவும், வசிஷ்டரும் அருந்ததியும் போலவும், திருவள்ளுவரும் வாசுகியும் போலவும், தமயந்தியும் நளனும் போலவும், மிக ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். ஓர்நாள் பொன்னம்பலம் தன் வீட்டிற் றிண்ணையிலுட்கார்ந்து கொண்டு மார்க்கண்டேய புராணத்தை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, சடுதியாக அவர் மனம் தடுமாறி அவதிக்குட் பட்டிருந்ததைக் கண்ட அவர் மனைவி அம்பிகை யென்பவள் விரைந்தோடி வந்து, "நாதா! தங்களுடைய செந்தாமலர்போன்ற முகமானது வாடியிருக்கின்றதே. யான் ஏதும் குற்றம் செய்தேனோ? தங்களுடைய பணிவிடைகளிலெவற்றையேனும் தவற விட்டேனோ? அல்லது வேறு தான் கவலை யென்ன

வோ? சடுதியில் கவலையுற்றிருக்கின்றீர்களே! தயவுசெய்து தெரிவியுங்கள்; யானதைத் தீர்த்துவைப்பேன்," என்றனள்.

பொன்னம்பலம்—பெண்ணே! யான் உம்மை விவாகஞ் செய்து பத்து வருஷங்களாகியும் புத்திரப் பேறில்லாததை நினைக்க நினைக்கப் பெரிய மனவருத்தமாகின்றதே. இவ்வுலகில் எவ்வகைப்பட்ட இன்பத்தைப் பார்க்கினும் மக்கட்பேறன்றோ மிகப் பெரியது. மக்கட்பேறில்லாத இவ்வில்லறத்தில் யானிருந்து தான் என்ன பிரயோசனம்! இதனாலன்றோ திருவள்ளுவ நாயனாரும்

" மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு "

" பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

என்று புத்திரப் பேற்றினை மிகச் சிறப்பாகக் கூறியிருக்கின்றார். இதைவிட இன்னும்

" மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்ற பொய்யாமொழிப்படி, நீ எனக்குத் தகுந்த மனையாளாய் வந்து வாய்த்திருந்தும், மக்கட்பேறில்லாத இவ்வில்லறத்தை யோரறமென்று கூறுவதெப்படி! ஒருவற்கு மெய்க்கின்பம் மக்களது மெய்யைத் தீண்டுதல். செவிக்கின்பம் அவரது மழலைச் சொல்லைக்கேட்டல்,

" மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு."

என்றார் பெருநாவலரும். இன்னும் புறநானூற்றில்

" படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்
பயக்குறை யில்லைதாம் வாழுநாளே."

என்ற வண்ணம், ஒருவனுக்கு மக்கட்பேறில்லாத வாழ்வும் ஓர் வாழ்வாமோ? யான் முற்பிறப்பில் என்ன கொடிய பாவத்தைச் செய்தேனோ யறியேன். புத்திரப் பேறில்லா திருப்பதைப் பார்க்கிலும் இறந்து விடுவதே மிக நலமென எண்ணுகின்றேன். பெண்ணே! பிள்ளையில்லாத மலடனென்ற பேரை யெடுத்தேனே. எனது குலத்திற்குச் சந்ததியில்லாமற் போய்விட்டதே. யான் என்செய்வேன். உலகத்திலே சில குடும்பங்களில் வேண்டாம் வேண்டாமெனப் பிள்ளைப்பேற்றை வெறுக்க மென்மேலும் பெருகுகின்றது. இப்பாவியாகிய எனக்கு மக்கட்பேறு கிடைக்கவில்லையே. யான் இதைப்பற்றிச் சென்ற பத்து வருஷங்களாக யோசித்து வந்தும், இன்றையதினம் என்னையறியாமல் அபூர்வமாக என்மனத்தில் இவ்வெண்ண மூன்றிவிட்டது."

அம்பிகை—நாதா! தாங்கள் இப்படியான மன வருத்தத்துடனிருக்க என் மனமானது பதறுகின்றதே. இவ்விஷயத்தையிட்டு யானும் பெரிய கவலை யடைந்து கொண்டே வருகின்றேன். இப்பாவியாகிய யான் தங்களை விவாகம் செய்து கொண்டதனாலன்றோ, இப்பெருங் கவலையைத் தங்களுக்கு வருவித்தேன். ஆனால் என் பிராண நாதா! துக்கப்படாதீர்கள்; சிவபெருமானுடைய திரு மலர்ப்பாதங்களை மனம் தளராது தொழுதால் எங்களுக்கு என்ன பேறுதான் கிடைக்க மாட்டாது.

போன்:—பெண்ணே! நீ சொல்வது சரிதான். ஆனால் யான் உம்மை விவாகம் செய்யு முன்னரேயும்

கடவுள் பக்தியுள்ளவனாகவே யிருந்தேன். இப்பொழுது மிருக்கின்றேன். இவ்வளவு காலமுமிரங்காத கடவுள் இனிமேல் இரங்கப் போகின்றாரா?

அம்:—நாதா! தாங்கள் எவ்வளவோ ஞானங்களைக் கற்றிருந்தும் "கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்" என்னும் பழமொழியை நம்பவில்லையா?

போன்:—அப்படியாயின் என்ன வழியைத் தேடுவது நலமென நினைக்கின்றாய்.

அம்:—நாதா! பன்னிரண்டு வருஷங்களுக்கொரு முறை வரும் *மகாமக தீர்த்தமென்று ஓர் விசேஷ தீர்த்தம் கும்பகோணத்திலிருக்கின்றதாம். அதில் விதிப்படி ஸ்நானம் செய்தவர்கள் தாம் தாம் நினைத்த பலன்களை யடைவார்களெனப் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். வருகிற மாசி மாசம் அத்தினம் வருகின்றமையால் நாங்களிருவரும் அத்தீர்த்தத்திற் போய் ஸ்நானம் செய்து, கடவுளை வேண்டி வருவதற்குத் தங்களுக்குச் சம்மதமுளதாயின் போய் வருவோம் வாருங்கள், என்றாள்.

போன்:—பெண்ணே! நீ சொல்வது சரிதான். ஆனால் அத்தீர்த்தத்தில் நீராடிப் பலனடைந்தவர்களின் சரித்திரங்களேதும் கேள்விப்பட்டிருக்கின்றாயா?

அம்:—நாதா! கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டாரென்று தெரிந்துகொண்டும் சரித்திரங்களைக் கேட்கின்றீர்களே! ஆயினும் தாங்கள் கேட்டவண்ணம் "திருக்

---

*இம்மகாமக தீர்த்தத்தின் பெருமையை யெழுதுவதற்கு இச்சிறு புத்தகம் இடங்கொடாதென்றஞ்சி அதை விட்டுவிட்டோம். அறிய விரும்புவோர் "மகாமக மகத்துவம்" என்னும் புத்தகத்திலாவது அல்லது பெரிய ஸ்தலபுராணத்திலாவது வாசித்து அறிந்து கொள்ளலாம்.

குடந்தை ஸ்தலமான்மியம்" என்னும் புத்தகத்தில் வாசித்த சரித்திரங்களி லொன்றைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன்.

"இந்தியாவின் தென்பாகத்தில் ஓர் சிற்றூரில், சகல கலைகளுமுணரப்பெற்ற ஓர் பிராமணன் வசித்து வந்தான். அவனுடைய நல்லதிட்டத்தால் அதிகம் செல்வமுடையவனுயிருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் காந்திமதி. இவள் விவாகம் செய்து சில நாட்கள் கழிந்த பின்னர் ஏதோ ஓர் நோய் கண்டு சடுதியிலிறந்து போனுள். சில காலம் சென்றபின்னர் இன்னுமோர் பெண்ணை இரண்டாவதாக விவாகம் செய்து கொண்டான். அவளுமிறந்துபோக பின்னரும் ஓர் பெண்ணை மணக்க, அவளுமிறந்தாள். இப்படியே ஐந்து பெண்களிறந்தனர். அதிகம் செல்வமுள்ளவனுதலால் ஆருவதாக விசித்திராங்கி யென்னும் பெயரையுடைய ஓர் பெண்ணை விவாகம் செய்து வாழ்ந்து வருங்காலத்தில், அவளுக்கோர் ஆண்மகவுபிறந்தது. பிள்ளைபிறந்து மூன்று மாசத்தால் இறந்துபோய்விட்டது. இவ்விதமே அவள் வயிற்றில் பதினெட்டு ஆண்களும் ஓர் பெண்ணும் பிறந்து விதிவசத்தால் இறந்து போயின.. இவற்றைக் கவனித்த இப்பிராமணன் பெரிய மனக்கவலையுற்று பின் வருமாறு யோசிக்கலானுன்:—"ஐயோ தெய்வமே! யான் என்ன கொடிய பாவத்தைச் செய்தேனே? யாருக்குத் துரோகம் செய்தேனே? யாருடைய பொருளை வீணில் அபகரித்தேனே? பிள்ளைகள் பிறந்து பிறந்து இறக்கும் காரணம் எனக்குப் புலப்படவில்லையே. முன்னர் யான் விவாகம் செய்து கொண்ட பெண்கள் இறந்தார்களே! தற் சமயம் பிள்ளைகள் பிறந்து பிறந்து இறக்கின்றனவே! யான் என் செய்வேன். இப்பணத்தை வைத்திருந்து யான் என் செய்வது. ஓர் புத்திரனென்றாலும் சந்ததிக்கு வேண்டு

மன்றோ ?" என்று பலவாறுகப் புலம்பி, பிள்ளைகளிறந்து போகும் தோஷத்தை நிவிர்த்திக்கக் கருதி, தான தருமங்கள் செய்யத் தலைப்பட்டான். தேவாலயங்களில் அதிக திருப்பணி வேலைகள் செய்வித்தான்; தர்மமடங்கள் கட்டுவித்தான்; ஏழைகளுக்கு அன்னமளித்து வந்தான்; கோவில்களில் விசேஷ ஆராதனைகள் செய்வித்தான். இன்னும் அனேக தான தர்மங்களைச் செய்துவந்தான். இவ்விதமெல்லாம் செய்து வந்தும், புத்திரப் பேற்றை யவனடையவில்லை. என்றாலும் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டு கைச்செலவிற்கு மட்டும் போதுமான பணத்தை யெடுத்துக்கொண்டு எஞ்சிய தெல்லாவற்றையும் தன் பிராண சினேகித னொருவனிடம் ஒப்படைத்து, அவனிடம் தான் யாத்திரை போவதாகவும் மகபபேறில்லாமல் திரும்பி வந்தால் தன் சொத்துகள் யாவும் அவனுக்கே உரியதென்றும் சொல்லிவிட்டுத் தன் மனைவியையு மழைத்துக் கொண்டு யாத்திரைக்குப் புறப்பட்டான். நாடுகள் நகரங்களெல்லாம் கடந்து சில வாரங்கள் சென்றபின்னர், திரிகாலமுமுணர்ந்த ஓர் முனிபுங்கவரைக் காணநேர்ந்தார்கள். அவருக்குத் தம் விருத்தாந்தத்தை யெடுத்துரைத்தார்கள். முனிபுங்கவர் அப்பிராமணனைப்பார்த்து, " ஓய் பிராமணோத்மா! நீ பல பெண்டீர் பிள்ளைகள் இழந்ததைப் பற்றி யான் நல்லாக அறிவேன். முன் நீ செய்த பாவத்தால் இவையெல்லாம் நிகழ்ந்தன. அவற்றைச் சொல்லுகின்றேன் கேள்! நீ முன் ஜென்மத்தில் பலகலைகளையு முணரப்பெற்ற ஓர் பிராமணனாக வேதபுரியென்னும் பட்டினத்தில் பிறந்து அங்கு வசிக்குங் காலத்தில், அங்கிருந்த ஓர் கிருஷ்ணன்கோவில் மிக்க மழையால் இடிந்து கீழேபோக, அதற்காகப் பொருள் யாசகம் பண்ணி அதைப்பழுது பார்த்து வைத்தாய். இதன்பயனாக அதிக புண்ணிய பேற்றையு மொருவாறு அடைந்தாய்.

ஆனால் நீ செய்த பாவத்தையும் சொல்லுவேன் கேட்பா யாக! அதற்கு முன் ஜென்மத்தில், குண்டிரபுரமென்னும் பட்டினத்தில் நீ ஓர் பிராமணனாகப் பிறந்து மனையாளுடன் கூடி இல்லறம் நடத்திவருங் காலத்தில், உமக்குப் பத்துப் பெண்கள் பிறந்திருந்தார்கள். அப்பெண்களை ஒரு பெண் ணுக்கு ஐந்நூறு வராகன் வீதம் வாங்கிக் கொண்டு வயது முதிர்ந்த கிழப்பிராமணர்களுக்குக் கன்னிகாதானம் பண்ணி வைக்க, அப்பெண்கள் அக்கிழவர்களுடன் ஒருவித இன்பத் தையு மனுபவிக்க வியலாது, சிலர் ஆற்றில் வீழ்ந்தும், சிலர் விஷம் தின்றும் தம்முயிரை விட்டனர். இக்காரணங்களால் பல பெண்டீர்களை யிழந்தாய். பின்னர் பல பிள்ளைகளையு மிழந்தாய். இதைவிட சிவாலயத்திற்போய் அங்கிருக்கும் நந்தவனத்திற்குள் நுழைந்து கனிவர்க்கங்களைத் திருடிச் சென்றாய். இக்காரணத்தாலும் சில பிள்ளைகளை யிழந்தாய். ஆனால் இப்பாவங்களை யெல்லாம் போக்கி நற்கதியடைவ தற்கு ஓர் வழியிருக்கின்றது. அதென்னவெனில், கும்ப கோணத்தில் மகாமக மென்னும் கன்னியா தீர்த்தத்தில், நீவிரிருவரும் போய் ஒரே மனதாய் கடவுளை நினைத்து ஸ்நானம் செய்வீராகில், நீங்கள் செய்த பாவங்களெல்லாம் தொலைவதுமல்லாமல் நற்புத்திரப்பேற்றையு மடைவீர்கள்" என்றார். பின் இருவரும் முனிபுங்கவரை நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு உடனே கும்பகோணம் புறப்பட்டுப்போய் அப்புண்ணிய தீர்த்தத்தில் விதிப்படி நீராடி யியன்ற தானதருமங்களுஞ் செய்த பின்னர் தம் மூருக்குத் திரும்பினர். சென்ற சில நாட்களுக்குப் பின் னால், அப்பிராமணனுடைய மனைவியானவள் கர்ப்பவதியாகி ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். பின்னரும் சற்புத் திரர்களடையப் பெற்று இருவரும் மிக இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்." ஆதலால் என் நாதா! நாங்களும் போய் அத்

தீர்த்தத்தில் நீராடி வருவோமென்று அம்பிகையென்பவள் தன் கணவனாகிய பொன்னம் பலத்திற்குச் சொன்னாள்.

போன் :—பெண்ணே! போவது சரிதான். காசுக்கு வழியில்லையே ; அதற்கென்செய்வது ?

அம் :—நாதா ! எங்களுக்குப் பொருள்பண்டம் பெரிதல்ல. பொருள் இன்றைக்குச் சேரும் நாளைக்கு அழிந்துவிடக்கூடிய தன்மையுடையது. எங்களுக்குப் புத்திரன் தான் வேண்டும். ஆனதுபற்றி யாம் பிறரிடம் போயிரப்பதைப் பார்க்கிலும் எங்கள் மூன்று பரப்புக்காணியில் ஒரு பரப்பை விற்று அக்காசைக் கொண்டு யாத்திரை செல்லலாம், என்றனள்.

போன்:—பெண்ணே! மூன்று பரப்புத்தான்—ஆக உள்ளது. அதில் ஒரு பரப்பை விற்று விட்டால் பின் நாம் எப்படி வயிறு வளர்ப்பது ? உனது தமயனார் கனகேந்திரம் பிள்ளை பெரிய செல்வந்தனன்றோ? அவரிடம் சிறிது பணம் வேண்டக்கூடாதா ? பின்னால் கொடுத்து விடலாம்.

அம்:—என்நாதா! கடன்பட்டு யாத்திரை செய்வதைப் பார்க்கிலும் போகாமல் விடுவது மிக்க நலமாகும். இதை விட எனது தமயனாரின் குணம் தங்களுக்குத் தெரியாதா? மகா உலோப குணமுள்ளவர், ஜீவ இரக்கமற்றவர், தர்மசிந்தனையற்றவர், சுற்றத்தாரைக் கவனிக்காதவர், இப்பேர்ப்பட்ட குணங்கள் வாய்ந்தவரிடம் நாம் எப்படிப் பணம் கேட்பது. அவரைக்கேட்டுப் பின் துக்கப்படுவதிலும் பார்க்க கேளாமல் விடுவதே மிக உசிதமென நினைக்கின்றேன். யான் சொன்ன படியே தங்களுக்கு விருப்பமுளதாயின் ஒரு பரப்புக் காணியை விற்றால் அப்பணமே எங்களுக்குப் போதியதாகும்.

"அத்திமுதலெறும் பீறான வுயிரத்தனைக்கும்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானே காக்கக் கடனிலையோ
அற்பனோவன்னையரன்."

என்றபடி, படைத்தவன் படியளப்பான் நாதா! தாங்கள் இது காரியங்களைப்பற்றி நல்லாக அறிந்தும் இதில் யோசிக்க வேண்டியதென்ன!

பொன்:—பெண்ணே!

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு."

என்ற வாக்குப்படி ஒவ்வொரு கருமமும் நன்றாக ஆலோசித்துத்தான் செய்யவேண்டும். ஆனால் இவ்விஷயத்தில் நீ சொன்னபடியே நிலத்தை விற்று அக்காசைக் கொண்டு யாத்திரைக்குச் செல்வது தான் புத்தியென எனக்கும் தோன்றுகின்றது.

அவ்வாறே ஒரு பாப்புக் காணியையும் நாறுரூபாய்க்கு விற்று, பொன்னம்பலமும் அம்பிகையும் யாத்திரைக்குப் புறப்பட்டுப் போய் கும்பகோணஞ் சென்று கடவுள்மேல் மிகப் பக்தியுள்ளவர்களாயும், தாம் நினைத்துப்போன கருமத்தில் மிக்க எண்ண முள்ளவர்களாயும் குறிக்கப்பட்ட தினமாகிய மகாமகத் தன்று விதிப்படி ஸ்நானஞ் செய்து, கும்பலிங்கப்பெருமானை யன்புடன் தெரிசித்து, இயன்ற தருமங்களும் செய்த பின்னர், ஊர்வந்து சேர்ந்தார்கள். சேர்ந்த இரண்டு மாசங்களுக்குப் பின்னால், அம்பிகையானவள் கர்ப்பவதியாய் விட்டாள். இதையறிந்த பொன்னம்பலமும் மிகச் சந்தோஷமுற்றார்.

மேலும் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை நற்குண நற்செய்கை முதலிய மேலான குணங்களுக்குக் கொண்டு

வருவது தாயிலே தங்கியிருக்கின்றதென்பதை அம்பிகை பல அறிவாளிகள் சொல்லக் கேட்டிருக்கின்றாளாதலால், தானும் தன் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை உயர்ந்த குணங்களமையப் பெறுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்ய ஆரம்பித்தனள். கர்ப்பமாயிருக்கும் தாயானவள் தான் கர்ப்பவதியாயிருக்கும் தன் காலத்தை எப்படிக் கழித்தாளோ அவ்விதமாகவே அவள் குழந்தையும் செய்யுமென்பது பல அறிவாளிகளின் றுணிபு. இதை நினைப்புற்று அம்பிகை யென்பவள் கர்ப்பமானதும், தன் காரியத்தில் மிக்க கவனஞ் செலுத்தினள். அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்து விடுவாள். சிறிதுநேரம் கடவுளை வணங்கிய பின்னர் தன் பர்த்தாவை நினைத்துத் தொழுவாள். புருஷன் நித்திரை விட்டெழும்பு முன்னமே தன் காலைக் கடன்களெல்லாவற்றையும் முடித்து விடுவாள். காலைப் போசன மளித்துப் புருஷனை வேலைக் கனுப்பிய பின்னர், தன் மடைப்பள்ளி வேலைகளை யொருவர் உதவியின்றியும் செய்து வைப்பாள். தேகத்திற்கு அதிக பலத்தைக் கொடுக்கும் வண்ணம் தானாகவே நெற்குத்துதல், மெழுக்கிடுதல், அம்மியிலரைத்தல், இன்னும் வீட்டைச்சார்ந்த எல்லா வேலைகளையும் வியர்வையோடச் செய்து முடிப்பாள். மத்தியானம் போசனம் முடிந்த பின்னர், சிறிது நேரம் சமயநூல்களையும் இன்னும் பெண்களுக்குரிய அறிவான நூல்களையு மெடுத்து வாசிப்பாள். விளங்காத சந்தேகங்களைத் தன்கணவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாள். சாயங்கால வேளைகளில், தன் புருஷனுடன் தோட்ட வேலைகளை யியன்றமட்டும் புரிந்து வருவாள். இரவிலும் சிறிது நேரம் நல்ல நூல்களை வாசிப்பாள். வீண் வேடிக்கைகளுக்கும் பேச்சுகளுக்கும் போகவே மாட்டாள். இன்னும் அவளுடைய சிறந்த குணங்களை விரிக்கிற் பெருகும்.

ஆனால் தற்காலப் பெண்களுட் சிலர் அம்பிகையின் செயல்களைப் பின்பற்றுவதே கிடையாது. இப்பெண்களுக்குப் பதிலாக வீட்டில் வேலையாட்களிருப்பார்கள். இனிமேல் இப்பெண்கள் கட்டில் நாற்காலிகளிலிருந்துகொண்டு கெட்ட நாவல்களை வாசிப்பதிலும், தங்களைப் போலொத்த பெண்களுடன் வீண்வேடிக்கையான கதைகளைப் பேசுவதிலும், தம் புருஷர்களுடைய வேலைத் திறமையைப் பற்றிப்பிறருடன் பேசுவதிலும், பிற ஆடவர் பெண்டீர்களுடைய கதையைத் தூக்கிப் பேசுவதிலும், நாடகம், படக்காட்சி, விநோத சாலைகள் முதலிய அனாவசியமான விடங்களுக்குப் போவதிலும், இன்னும் அனாவசிய செயல்களிலும் தம்நேரத்தைச் செலவழிப்பார்களே தவிர, பெண்களுக்குரிய வீட்டு வேலைகளைச் செய்ய விரும்புவதில்லை. மேற்சொன்ன இப்பெண்கள் வீட்டுக்குப் பாரமாக ஓர் வித சுறு சுறுப்பின்றிச் சோம்பேறிகளாக யிருப்பதால் பிரசவ வேதனையில் அதிகம் வருந்துகின்றார்கள். இனி இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பெரும்பாலும் மந்தபுத்தியுள்ளவர்களாயும், சோம்பேறிகளாயும், கல்வியில்லாத மூட ஆத்மாக்களாயும், தயை கொடை ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களமையப் பெறாதவர்களாயும் பூமியிற் பிறந்து, உலகுக்கோர் விதமாயேனும் நன்மையைச் செய்ய வியலாதவர்களாகின்றனர். அந்தோ! என்ன பரிதாபம்! இவர்களுடைய புருஷர்களாகுதல் இதைப்பற்றிக் கவனிக்கின்றார்களா? தற்காலத்தில் சில புருஷர் தம் மனைவிகளைக்கொண்டு வீட்டுவேலை செய்விப்பதேயில்லை. பெண்களைவைத்து நடத்தக்கூடிய புருஷதத்துவம் இவர்களுக்கில்லையென்றே நாம் எண்ணவேண்டியிருக்கின்றது. உலகத்தைப்பற்றிய நல்லறிவு இவர்களுக்குத் தெரியாது போலும். இத்தன்மையான புருஷர்களாலும் பெண்களா

னும் உலகிற்குத் தீமையே யல்லாது நன்மையே கிடை யாது. இப்புருஷர்கள் கேவலம் சிற்றின்ப மொன்றைக் கருதியே விவாகம் செய்கின்றார்களேயன்றி, விவாகமென்று லென்ன, இல்லற மென்றாலென்ன, என்ற உலகவியல்பைத் தெரிந்து கொள்ளாது மிருகங்களைப்போலக் காலத்தைக் கழித்து வருகின்றார்கள். இவற்றை யெல்லாம் விரிக்கிற் பெருகுமெனவிடுத்து எமது கதையின்பாற் செல்வாம்.

இவ்விதமாக அம்பிகை யென்பவள் தான் கர்ப்பவதி யாயிருக்குங் காலத்தில், தன்நேரத்தை நல்வழியிற் செலவு செய்து, பத்து மாசமுஞ் சென்றபின்னர் பாலசூரியன்போல ஓர் ஆண்குழந்தையை யீன்றெடுத்தனள். பொன்னம்பலத் துக் குண்டான சந்தோஷம் எவ்வளவென்று சொல்லமுடி யாது. அவ்விதமே அம்பிகையும் மிக மகிழ்ச்சியடைந்தாள். எல்லாம் ஈசன் செயலால் நிகழ்ந்ததென்று நினைத்து மென் மேலும் கடவுள்மேல் அன்புபூண்டொழுகினார்கள். கடவுளை நம்பினோர் கைவிடப் படமாட்டாரென்னும் தேவவாக்கை நல்லாக உணர்ந்து கொண்டார்கள். இதெல்லாவற்றிற்கும் காரணம் மெய்யன்பே. இவ்வன்பினால் நாமெல்லா வற்றையும் அடையலாம். இவர்களிருவரும் கடவுள் மேல் ஒரே வித பக்தியுடையவர்களா யிருந்தபடியால் தாம் நினைத்த வரத்தைப் பெற்றனர். ஆனால் தற்காலத்தில் இவ்வித பக்தசிகாமணிகள் கிடைப்பது மிக அரிது.

மேலும் பொன்னம்பலமும் அம்பிகையும் தம் புதல் வனை மிக்க அன்பாக வளர்த்து வந்தார்கள். அப்புத்திர னுக்குச் "சாம்பசிவம்" என்னும் பெயரை யிட்டனர். சாம்பசிவம் இளம்பிறைச் சந்திரன் போல நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வந்தான். பொன்னம்பலம் தனது தோட்டத்தில் கிடைக்

கும் காய்கறிகளை விற்றுச் சம்பாதிக்கும் பணம் வயிறு வள ர்ப்பதற்கு மாத்திரமே கண்டு கொண்டு வந்தது. சாம்ப சிவத்திற்கு வயது நாலு முடிந்து ஐந்தாவது ஆண்டு பிறந்து விட்டது. இவனைப் பள்ளியில் வைப்பதற்குத் தன்னும் பணம் பொன்னம்பலத்தினிடமில்லை. சாம்பசிவத்தின் தாய் மாமனார் கனகேந்திரம்பிள்ளை (அம்பிகையின் தமயனார்) தனது பணச் செருக்கால் இவர்களைக் கவனிப்பதே கிடையாது. வறியவர்களானதாலன்றோ? ஆனால் " சுற் றத்திற்கழகு சூழவிருத்தல் " என்னும் திவ்விய வாக்கைச் சிறிதேனு முணராமல், கனகேந்திரம்பிள்ளை இவர்களைச் சற்றேனும் மதியாமல் நடந்து வந்தார். அற்ப பணமாகு தல் கொடுத்துதவுவோ மென்ற எண்ணம் இவர் மனதில் உதிக்கவில்லை. இப்படியாயிருந்து வருங்காலத்தில், பொன் னம்பலத்திற்குச் சடுதியாக ஓர் ஆபத்தான நோய்கண்டு, மரணமடையுந் தருணமாயிருக்கும் பொழுது தனது அன் பிற் சிறந்த நாயகியாகிய அம்பிகை யென்பவளை யழைத்து, " எனது மாதரசே! எனது காலமோ வந்து விட்டது; என் னைப்பற்றி நீ கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் எனது கண்மணியாகிய புத்திரன் சாம்பசிவத்துக்கு அற்ப கல்வியை யாகுதல் ஊட்டிவிடக்கடவாய் " என்று சொல்லிப் புத்திரனை முத்தமிட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய ஆன்மா உடலை விட்டு நீங்கிவிட்டது.

---




அம்பிகையும் புத்திரனும் புலம்பல் 19-ம் பக்கம் பார்க்க.

## இரண்டாம் அத்தியாயம்.

"அழிவுக்கு முந்தியது அகந்தை"

"ஐயோ! என் நாதா! சென்று விட்டாயோ! தெய்வத்துக்குத் தெய்வமாயிருந்த துரையே! என்னை விட்டுப் பிரிந்தாயோ! என் கண்ணுளா! எங்குதானிருக்கின்றாயோ! சடுதியாக இம்மண்ணுலகை விட்டுச் செல்வீரென்று யான் காத்திருக்கவில்லையே! உங்களுடைய உருவமானது என் கண்களுக்கு முன்பாக இன்னும் தோன்றுகின்றதே; ஐயோ! தெய்வமே! இதுவும் உன்னருளோ! எனக்கு ஆண் குழந்தையைக் கொடுத்து விட்டு, என் நாதனைக் கொண்டு சென்றாயோ! என் நாதா! இப்புத்திரனைப் பெறுவதற்காகவோ நீங்கள் இம்மண்ணுலகில் தோன்றி யிருந்தீர்கள். யான் இனிமேல் இங்கிருப்பதால் என்ன பிரயோசனம். என் நாதா! யான் தங்களை விட்டுப் பிரிய என்ன கொடிய பாவம் செய்தேனோ? என் அப்பா! என் துரையே! என் கண்ணுளா!" என்று அம்பிகையானவள் கண்ணீர் தாரை தாரையாகச் சொரிந்து கொண்டிருக்கத் தலைவிரி கோலமாய்ப் புலம்பிக் கொண்டிருந்தாள். இதற்கிடையில், அண்டை வீட்டுச் சனங்களும் சுற்றத்தார்களும் சாவீடு வந்து சேர்ந்தனர். மரணக் கிரிகைகள் யாவும் சரிவர நடந்தன. அம்பிகையின் தமயனார் கனகேந்திரம்பிள்ளையே இவற்றை யெல்லாம் கொண்டு நடப்பித்தார். சில நாட்கள் கழிந்த பின்னர், கனகேந்திரம்பிள்ளை தன் தங்கையாகிய அம்பிகையையும் அவள் பிள்ளையாகிய சாம்பசிவத்தையும் தனது கிருகத்தில் வந்து குடியிருக்குமாறு ஒழுங்குகள் செய்தனர். அம்பிகையும் தனக்கு இனிமேல் வேறு ஒருவர் துணையுமில்லை யென்று கருதித் தன்

தமயனார் கிருகத்தில் அவரே தனக்குக் கதி யென்று நம்பி யிருந்தாள். ஆனால் அவளுக் காறுதல் சொல்வார் ஒருவரு மில்லை. ஏனெனின் வறியவளல்லவா? இனிமேல் அம்பிகை யும் பிள்ளையும், கனகேந்திரம்பிள்ளையின் மேற் பார்வை யிலேயே யிருக்க வேண்டி வந்தது. தமயனார் கிருகத்திலே இவர்களிருவரும் குற்றேவல் செய்து வயிறு வளர்த்து வருவாராயினர். கனகேந்திரம்பிள்ளைக்கு ஓர் ஆண் குழந் தையும் ஓர் பெண் குழந்தையுமிருந்தனர். அவர் மனையா ளின் பெயர் கனகாம்பாள். கண்ட பாவனையிற் கொண்டை முடிப்பது போல் தற்கால நாகரீகத்தில் சிறிது கைப்பற்றி யிருந்தாள். கனகேந்திரம்பிள்ளை வேளாண்மைத் தொழி லையே முதன்மையாகக் கைக்கொண்டவர். அவருக்கு அனேக காணி பூமிகளும் வயல் தோட்டங்களுமிருந்தன. இனி கனகேந்திரம்பிள்ளை வீட்டில், அவர் தங்கையாகிய அம்பிகையும் அவள் பிள்ளை சாம்பசிவமும் எவ்விதம் காலத் தைக் கழித்து வந்தார்களென்பதைச் சிறிது வரைவோம்.

கனகேந்திரம்பிள்ளையின் குமாரனின் பெயர் ஆனந்த ராசா. அவர் குமாரியின் பெயர் அன்னமலர். ஆனந்த ராசா, வயது ஐந்தானதும் பள்ளியில் விடப்பட்டிருந்தான். அம்பிகையும் தன்மகன் சாம்பசிவத்துக்கு எப்படியும் சிறிது கல்வி கற்பிக்கவேண்டுமென்று கருதித் தன் தமயனாரைத் தன் பிள்ளையையும் பள்ளியில் வைக்குமாறு மிக வேண்டி னள். இதை யறிந்த அவர் மனைவி கனகாம்பாள், அம்பி கையைப் பார்த்து, "அடீ! சிறுக்கி! குடிக்கக் கஞ்சிக்கு வழியில்லையே, உடுக்கக் கந்தைக்கு வழியில்லையே யென்று தெரு வீதிகளில் அலைந்து கொண்டு திரியாமல் எனது வீட் டில் உன்னைக் கூப்பிட்டுச் சோறு போடுவது போதாதா? உன் பிள்ளைக்கு கல்வியா கற்பிக்கவேண்டும்? உத்தியோகம் பார்க்கும் பொருட்டோ? நீ மனத்துணிவாய்க் கேட்டதை

யானென்னென்று சொல்லுவேன். உனது பொடியன் எனது பெண் குழந்தை அன்னமலரைப் பராக்காட்டி வர வேண்டும். பள்ளியாவது! கல்வியாவது! வீண் கதை யொன்றும் பேசாமல் மடைப்பள்ளிக்குப் போய் உனது அலுவலைப்பார்," என்று கடுகடுப்பாகப் பேசினாள். அம்பிகையானவள் சிறிது மனங் கலங்கினவளாய், "என் அண்ணீ! என் மேல் கோபிக்க வேண்டாம்; யானோ என் அருமைப் பர்த்தாவையு மிழந்து மனமானது மிகக் கலங்கிக்கொண்டு உதவி செய்வதற்கு எனக்கு ஒருவருமில்லையே யென்று உனது கிருகத்தில் எனது தமயனாரின் உத்தரவுப்படி உங்கள் தஞ்சமே யென்றேகி இங்குள்ள ஏவல்களெல்லாம் செய்து எனது பாழ் உடம்பைக் கழுவி வருகின்றேன். ஆனால் எனது அருமைப் பாலன் சாம்பசிவம் உங்கள் பிள்ளை ஆனந்தராசாவுடன் பள்ளியிற் படிக்க விரும்பிக் கேட்டபடியால், யான் தங்களின் உத்தரவைக் கேட்டேன். விருப்பமாயின் அவனைப் பள்ளிக்கனுப்புங்கள். அல்லாவிடில் அவன் வீட்டு வேலையைச் செய்து தன் வயிற்றையும் கழுவட்டும்," என்று சொன்னாள். கனகேந்திரம்பிள்ளைக்குப் பையனைப் பள்ளிக்கனுப்பச் சிறிது விருப்பமிருந்தும் தனது மனைவியின் மொழிகளைக் கேட்டதே சற்றே மனம் மாறிப் பையனைப் பள்ளிக்கனுப்பும் சங்கதியைப் பற்றிப் பேசாமற் போய்விட்டார். ஏனெனில் கனகேந்திரம்பிள்ளையின் மனைவியின் சொற்படியே எக்காரியங்களும் நடந்து வந்தன. அந்தோ! இல்லறமே! பெண்களுக்குப் பயந்து நடக்கும் மூட புருஷர்கள் தற்காலத்தில் அநேகர் மலிந்து கிடக்கின்றனர். இப்பேர்ப்பட்டவர்கள் இல்லறத்திலிருப்பதால் என்ன பிரயோசனமோ யாமறியேம். பெண்களின் யோசனை கேட்பதால் வருங்கெடுதிகளைப் பின்னர்தான் இப்புருஷர்கள் அறிந்து கொள்ளுவார்கள். ஆனால் பெண்

களிடமிருந்து யோசனைகேட்க வேண்டிய காலங்களுமிருக்கின்றன. மேலும் பிள்ளையைப் பள்ளியில் வைப்பதற்கு அவர்கள் மறுத்ததைத் தெரிந்து கொண்ட அம்பிகையென்பவள் மிகவும் மனஸ்தாபப்பட்டு, "யான் வன் அவர்களை நோக வேண்டும்; வேலை யொழிந்திருக்குங் காலங்களில் யானே என் பிள்ளைக்குச் சிறிது சிறிதாகக் கல்வியைக் கற்றுக் கொடுப்போம்," என்று தீர்மானித்தனள். இனிமேல் அம்பிகை செய்யும் நாள் வீத வேலையைச் சிறிதுரைப்போம். அதிகாலையிலே யெழுந்து வீடு வாசல்களைப் பெருக்கிச் சுத்தம் செய்தல் வேண்டும். பின்னர் சட்டி பானை முதலிய பாத்திரங்களைக் கழுவிச் சுத்தஞ் செய்து வைக்க வேண்டும். அதன் பின்னர் காலைப்போசன வகைகள் செய்து வைக்கவேண்டும். காலைச் சாப்பாடும் தயார் செய்து முடிய, கனகாம்பாளும் குழந்தைகளும் நித்திரை விட்டெழுந்து விடுவார்கள். உடனே அவர்களுக்காக வேண்டிய குற்றேவல்களைச் செய்து போசன மளித்த பின், பகல் வேளைப் போசனம் முழுதும் தானாகவே செய்து வைப்பாள். அம்பிகை, பின்னும் அழுக்குத் துணிகள் தோய்த்தல், மாடு கன்று பார்த்தல் முதலிய வேலைகளையும் செய்யவேண்டும். இவ்வளவில் மணியுமிரண்டாகி விடும். அதன் பின்னர் சிறிது நேரம் ஓய்ந்திருப்பாள். சாயங்காலமானதும் கோப்பி, தேநீர் முதலிய பானங்களும், இன்னும் சிற்றுண்டி முதலிய வகைகளும் செய்து வைக்கவேண்டும். பின்னர் இராப் போசனத்தையு முண்டாக்கி வைப்பாள். பொதுவாக நாள்வீதம் வீட்டு வேலைகள் யாவும் அம்பிகையே செய்துவருவாள். கனகேந்திரம்பிள்ளையின் மனைவி கனகாம்பாளின் வேலை என்னவெனில், வீட்டு வேலைகளை அம்பிகையைக் கொண்டு செய்விப்பதும், தனது இளைய பெண் குழந்தையாகிய அன்னமலரை அம்பிகையின் குமாரனாகிய

சாம்பசிவத்தைக் கொண்டு பாராக்காட்டுவிப்பதும், மேசை நாற்காலிகளில் மேட்டிமையாயிருந்து கொண்டு கெட்ட நாவல்களை வாசிப்பதும், இன்னும் தன்னைப் போலொத்த பெண்களுடன் உல்லாசமாய்க் கூடிக் குலாவிப் பேசிக் கலைத்துப்பொழுது போக்குவதுமே. அம்பிகை இவளுடைய வீட்டுக்கு வந்ததும் முன்னர் வீட்டு வேலைக்காகச் சம்பளத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த இராமன் என்னும் வேலைக்காரன் நிறுத்தி விடப்பட்டான். அம்பிகை யென்பவள் அதிக நூல்களைக் கற்றிராவிட்டாலும் தமிழிலே ஐந்தாம் வகுப்பு முடியக் கற்றிருந்தவளாதலினால் நாள் வீதம் வேலை யொழிந்திருக்கும் சாயங்காலவேளைகளில் தனது குமாரனாகிய சாம்பசிவத்துக்குச் சிறிது சிறிதாகத் தமிழ்ப் பாடம் கற்றுக்கொடுப்பாள். இதைக் கவனித்த கனகாம்பாளுக் கடங்காத ஆத்திரமிருந்தும் வீட்டு வேலைகளிலொருவித குறைவு மில்லாததால் கவனியாமல் விட்டு விட்டாள். அத்துடன் இந்தப் பையன் இவளிடமிருந்து என்ன கல்வியைப் பெறப் போகின்றானென்ற எண்ணமுமிருந்தது. நாள் வீதம், இரவில், வீட்டில், கனகாம்பாளின் குமாரன் ஆனந்தராசாவுக்கு ஆங்கிலேயம் கற்றுக் கொடுக்கப் பிறிதாக ஓர் உபாத்தியாயர் நியமிக்கப் பட்டிருந்தார். உபாத்தியாயர் ஆனந்தராசாவுக்கு ஆங்கிலேயக் கல்வி கற்றுக்கொடுக்கும் நேரங்களில், சாம்பசிவம், அவ்விடத்தில் அங்குமிங்குமாகப் பெண் குழந்தை அன்னமலரைக் காவிக் கொண்டு திரிவது போலேயும், குற்றேவல் செய்வது போலேயும், அவர்களுக்கிடையில் போய்க் கொண்டிருக்குங்கால் நாள் வீதம் சிறிது சிறிதாக உபாத்தியாயர் கற்றுக் கொடுக்கும் ஏ—பீ—சீ—டீ (A—B—C—D) முதலிய ஆங்கிலேய எழுத்துக்களைக் கிரகித்துக் கொள்ளுவான். பின்பு படுக்கப் போகும்பொழுது தனக்குள்ளே ஒவ்வொன்

றையும் மறுபடியு முச்சரித்துச் சிறிது காலத்திற்குள் முதலாம் வகுப்புப் புத்தகம் வாசிக்கப் பழகிக்கொண்டான். ஆனால் இவன் இப்படியாக ஆங்கிலேயத்தைக் கற்று வருவது யிவன் தாயாருக்கு மாத்திரம் தெரியுமே யொழிய மற்றவர்களுக்குத் தெரியமாட்டாது. தமிழ்ப் பாடத்திலும் ஐந்தாம் வகுப்புப் புத்தகம் வாசிக்கக் கற்றுக்கொண்டான். தற்சமயம் கனகேந்திரம்பிள்ளையின் புத்திரி அன்னமலருக்கு நாலு வயது முடிந்து விட்டது. அவளுக்கும் சிறிது சிறிதாகக் கல்வி யூட்டப் பட்டே வந்தது. கனகேந்திரம்பிள்ளை தன் குமாரனுக்கு ஆங்கிலேயத்தையே அதிகம் கற்பிக்க வேண்டுமென்று எண்ண முள்ளவரா யிருந்தபடியால் தமிழ்ப் பாடங்களைப் பார்க்கிலும் ஆங்கிலேய பாடங்களையே மிக்க கவனமாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று உபாத்தியாயரிட மறிவித்திருந்தார். ஆனந்தராசாவுக்கு இப்போது வயது பதின்மூன்றாகி விட்டது. இவனுக்குப் பிறிதாகப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தும் படிப்பில் மிக்க கட்டையாகவே யிருந்தான். இப்படியாகக் கற்று ஆங்கிலேயம் ஆறும் வகுப்பில் தேர்ச்சி படைந்தான். அன்னமலரும் தமிழில் மிகச் சிறிது கற்றபின்னர், ஆங்கிலேயம் கற்கும் பொருட்டு ஓர் விடுதிப் பெண்பாடசாலையில் விடப்பட்டிருந்தாள். அங்கே சென்றதும் நவீன நாகரீகத்தைப் படிப் படியாகப் பழகிக்கொண்டே வருவாளாயினள். சிறிது காலஞ் சென்ற பின்னர் ஆனந்தராசாவும் ஆங்கிலேயத்தில் உயர்தரக்கல்வி கற்கும் பொருட்டு சென்னைச் சர்வகலாசாலைக் கனுப்பப்பட்டிருந்தான். கனகேந்திரம்பிள்ளை செல்வந்தனா யிருந்த படியால் அதிக செலவு செய்து படிப்பிக்கத் தக்க நிலைமை யிருந்த தென்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். கனகேந்திரம்பிள்ளை அதிக செல்வமுடையவரா யிருந்தும், பரோபகாரம், ஜீவகாருண்

யம், கொடை முதலிய குணங்களில்லாததால் அவருடைய
பெயர் அவ்வளவாய் விளங்கவில்லை. சாம்பசிவத்திற்கு
இப்போது வயது பன்னிரண்டாகி விட்டது. தன்னுடைய
மாமனாரின் புதல்வன் சென்னைக்கு உயர்தரக் கல்வி கற்க
விடப்பட்டிருந்ததும், அன்னமலர் விடுதிப் பெண் பாட
சாலைக்கு விடப்பட்டிருந்ததும், சாம்பசிவம் நன்றாயறிந்து
கொண்டான். ஆனால் தன்னைப் படிப்பிப்பதற்கு ஒருவரு
மில்லையே யென்று மிகவும் கவலை கொண்டான். சாம்ப
சிவம் சிறு பிள்ளையா யிருந்தும் அதிக புத்திசாலி. ஏனா
யின் தன்னைத் தன் மாமனாரும் மாமியும் பிறருடைய பிள்
ளையைப் போலப் பார்த்து வந்ததும், தன்னைப் பள்ளியில்
வைத்துப் படிப்பிப்பதற்கு முன் வாராதிருந்ததும், தனது
தாயாரை யொரு வேலைக் காரியாக நடத்தி வந்ததும்,
வெகு விரைவிலறிந்து கொண்டான். அரியதாகிய மானி
டப் பிறவியை யெடுத்தும் இளமையிலேயே தன் தந்தை
யை யிழந்து வறுமை நோயென்னும் கொடிய நோயால்
வருந்தவும் மாமனாரின் கிருகத்திலிருந்து கொடிய வேலை
களெல்லாஞ் செய்து வயிறு வளர்க்கவும் வந்ததை யிட்டு
மிகவும் மன வருத்தமுடையவனா யிருந்தும், எல்லாம் ஈசன்
செயலென்று தனக்குள்ளே மனதையாற்றிக் கடவுளை
நம்பினோர் கைவிடப்பட மாட்டா ரென்னும் பழமொழி
யைக் கேள்வியுற்ற வனாதலால் கடவுள் மேல் நம்பிக்கை
கொண்டு ஒருவாறு மனதைத் தேற்றி ஏதாகிலுமோர்
வழியைத் தேடவேண்டு மென்று எண்ண முள்ளவனா
யிருந்தான். தனது மாமனார் கனகேந்திரம்பிள்ளை தன்னைப்
பள்ளியில் வைக்க மாட்டாரென்பதை நல்லாக அறிந்து
கொண்டான். ஒரு நாளிரவு கனகேந்திரம்பிள்ளையும் மனை
வியும் இராப் போசனம் முடித்து நித்திரைக்குச் சென்ற
பின்னர், சாம்பசிவம் தன் தாயினிடமணுகி, "அம்மா!

எனக்குப் படிக்க வேண்டுமென்ற அவாவானது மிகப் பெருகிவிட்டது. அப்படிப் பெருகியும், தங்கள் தமயனுராகிய எனது மாமா என்னைப் பள்ளியில் வைத்துப் படிப்பிப்பதற்கு ஒருகாலமு மிசையமாட்டார் அவருக்கப்படி விருப்ப முளதாயின், தன் பிள்ளையைப் பள்ளிக்கனுப்பும் போது என்னையும் விட்டிருப்பார். வறியவளுடைய பிள்ளையானதா லன்றோ யான் விலக்கப்பட்டேன். "யாரு மற்றவருக்குத் தெய்வம் துணை" என்பதை யானறிவேனாதலால் என்னைச் சிறு வயதென்று தாங்கள் யோசியாமல் இங்கிருந்து *சிங்கப்பூருக் கனேகர் அடுத்த கப்பலுக்குப் போகவிருப்பதால் என்னையு மவர்களுடன் விட்டால் யான் அங்கே சென்று ஏதாகிலும் பிழைத்துக் கொள்ள வழி தேடுவேன்;

"எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானொருவ னல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்."

என்று திருவள்ளுவர் கூறிவிட்டுத் தாயைப் பிரிந்த வாக்கையும் யான் அறிவாளிகள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேனாதலால் தாங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. தற்சமயம் தங்களிடம் யான் தமிழ் ஐந்தாம் வகுப்புப் புத்தகம் வாசிக்கக் கற்றுக் கொண்டேன். அத்துடன் ஆங்கிலேயத்திலும் ஆனந்தராசா, வீட்டில் படித்த காலங்களில் சிறிது யான் கிரகித்துக் கொண்டேன். இனிமேல் ஈசன் செயல் எப்படியோ யானறியேன். ஆனதுபற்றி என்னைச் சிறுபிள்ளை யென்று நினையாமல் பயணம் போகும் மற்றவர்களுடன் என்னையும் அனுப்பிவிடுங்கள். செலவுக்

*சிங்கப்பூரென்பது பொதுவாக மலாய் நாட்டையே குறிக்கின்றது.

குத் தன்னும் பணம் எனது மாமனுர் கொடுக்க மாட்டா ராதலால் தாங்கள் வைத்திருக்கும் அற்ப நகைகளை விற்று அறுபது ரூபாய் கொடுங்கள்" என்று சொன்னுன்.

அம்பிகை :—என் அருமைக் கண்மணியே! உன்னை யான் எப்படிப் பிரிந்திருப்பேன்? உனது பிதாவையுமிழந்து யான் இங்கே அடிமை வேலை செய்து கொண்டு, ஒருவரா குதல் துணையில்லையே யென்று கவலைப்பட்டுப் பொல்லாத மனத் துயரத்திலாழ்ந்து கொண்டிருக்கையில், நீ என்னை விட்டுப் புறப்படுவது ஏற்குமா? என் அருமைக் குழந்தாய்! யான் எப்படித் தனித்திருப்பேன்! நீயோ சிறு பிள்ளாய்; நீ எங்கே போய் நிற்க முடியும்? உனக்கு ஏதும் தீங்கு வந்தால் யார்தான் பார்ப்பார்கள். எட்டாத்தேசத்திற்குப் போய், என் கண்களுக் கெட்டாதபடி உன்னை விட்டு யான் இவ்விடத்தில் தனியே எப்படி யிருப்பேன்? இங்கே யிருந்து தெரு வீதிகளில் யாசகஞ் செய்து வயிறு வளர்த் தாலும், தம்பி, நீ சிங்கப்பூருக்குப் போக வேண்டுமென் றெண்ணுவதை விட்டுவிடு; என் அருமைப் பாலா!

சாம்பசிவம்—"எனது அருமைத்தாயே! யான் சொல் லுவதைத் தாங்கள் இன்னும் விளங்கிக்கொள்ளவில்லை. இனிமேல் யான் இங்கிருப்பதால் ஒருவித பிரயோசனமு மில்லை. எனது மாமா எனக்குச் செலவு விட்டுப் பள்ளியில வைக்கப் போவதுமில்லை; அல்லாவிடில் ஏதாகிலுமோர் முயற்சியைக் காட்டி விடப்போவதுமில்லை. இங்கு அடிமை யாயிருப்பதைப் பார்க்கிலும், எங்கேயாகிலும் சென்று ஓர் வழியைத் தேடுவது மிக்க நலமென எனக்குத் தோன்றி விட்டது. யான் தங்களை விட்டுப் பிரிகிறேனென்று மனக் கவலை கொள்ளாதீர்கள். தங்களுக்கு யான் பிரிந்து போவது எவ்வளவு கவலையைக் கொடுக்கின்றதோ, அவ்விதமே யானும் தங்களை விட்டுப் பிரிவது எனக்கு மகா கவலையைக்

கொடுக்கின்றது. தாயுடன் பிள்ளை நெடுங்காலமிருக்க முடியுமோ? அந்தந்த வயது வரச் சீவியத்திற்குரிய வழிகளைப் பார்க்க வேண்டுமன்றோ? இங்கிருப்பதால் எனக்கு ஒருவித ஓத்தாசையும் கிடையாதென்பதை யான் தெளிவாக அறிந்துகொண்டேன். ஆனபடியால் சந்தோஷமாய் என்னை யனுப்பி வையுங்கள். யானும் தங்களை மறுபடியும் திரும்பி வந்து பார்க்கக் கடவுள் தனது கிருபை யென்னும் சமுத்திரத்தைச் செலுத்துவாராக," என்றான்.

அம்பி:—தம்பீ! யான் சொல்வதைக் கேளாமல், நீ சொல்வதே சரியென்றும், மேலான தென்றும், கடவுள் மேல் நம்பிக்கையுள்ளவனாகவு மிருக்கின்றபடியால், நீ சென்று வர விடை கொடுக்கின்றேன். ஆனால் உனது மாமா பிரியப்படுவாரோ வென்பது தான் தெரியவில்லை.

சாம்ப:—"மாமா பிரியப் பட்டாலென்ன, பிரியப் படாமலிருந்தாலென்ன; எப்படியும் யான் போகவே தீர்மானித்துவிட்டேன். செலவுக்குத்தான் பணத்தை யொழுங்கு பண்ணிவிடுங்கள்," என்றான்.

அம்பி:—"தம்பீ! நாளைக் காலமே எல்லாம் யோசித்து ஒழுங்கு பண்ணுகின்றேன். தற்சமயம் மணியும் பன்னிரண்டாகி விட்டது. நாமிருவரும் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. அவர்களுடைய நித்திரைக்கும் ஒரு சமயம் பங்கம் வரக் கூடுமாதலால், பேசாமல் படுத்திரு," என்று சொல்லித் தானும் படுத்துத் தூங்கினாள்.

சாம்பசிவம் நல்ல நித்திரை போய் விட்டான். ஆனால் அம்பிகைக்கோ நித்திரை யென்பது வரவேயில்லை. தன் மகனைப் பற்றிய யோசனை யவள் மனதில் பற்றி விட்டது. படுத்திருந்துகொண்டு பின்வருமாறு யோசிக்கலானாள்:—

"ஐயோ! யான் இளமையிலேயே விவாகம் செய்து என் அருமைப் பிராணநாதனையு மிழந்து மிகக் கஷ்டத்துக்

குள்ளானேன். ஐயோ! என்னைவிடப் பாவி உலகில் யார் தானிருப்பார்கள். அத்துடன் எனது அண்ணர், யான் எனது நாதனையு மிழந்து பெரிய மனத் துக்கத்தி லாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, வறியவளா யிருத்தல் கண்டு என்னைத் தன் சகோதரி யென்றும் சிறிதுஞ் சிந்தியாமல் மனையாளின் சொல்லைக்கேட்டுக் கொண்டு என்னைப் புறக் கணித்து வீட்டிலோர் வேலைக்காரியாக வைத்திருக்கின் றரே. யான் இப்படியாக இவருடைய வீட்டில் அடிமை வேலை செய்து வயிறு வளர்க்க முன் சென்மத்தில் என்ன கொடுமை செய்தேனே யானறியேன். எல்லாவற்றிற்கும் காரணம் கொடிய வறுமை யன்றே? இதனாலன்றே ஒளவையாரும்,

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை"

எனப் பாடியிருக்கின்றனர். அத்துடன் எனது அருமை யான ஒரேயொரு புத்திரன் சாம்பசிவமும் இவர்களுடைய குணத்தை யறிந்து கொண்டபடியால் இவ்வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சிங்கப்பூர் போக வேண்டுமென்று நிற்கின் றனே. எனக்குத் துணையாயிருக்கும் என் அருமைக் குழந்தையைப் பிரிந்து யான் எவ்வாறு தனியே யிருக்கப் போகின்றேன். எனக்கு ஆறுதல் கூறுவாரு மொருவரு மில்லையே. சாம்பசிவமும் பிடிவாதமாய்ச் சிங்கப்பூருக்குப் போக வேண்டுமென்று நிற்கின்றனுதலால் யான் இனிமேல் அவனைத் தடுக்கவுமியலாது.

"என் செயலாவ தியா தொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன் செயலேயென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன் செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே."

என்று பட்டினத்தடிகள் கூறிய வண்ணம் எம்பெருமானின்

திருவருட் செயலா லொழிய பாவியாகிய என்னாலாவ தொன்றுமில்லை," என்று தனக்குத் தானே ஆறுதல் கூறி ஒருவாறு அயர்ந்தாள். அம்பிகை அதிகாலையிலே நித்திரை விட்டெழுந்து காலைக் கருமங்களெல்லாம் முடித்த பின்னர் சுமார் பத்து மணியளவில் தமயனார் கனகேந்திரம்பிள்ளை யினிடம் போய்த் தன் மகனுடைய அபிப்பிராயத்தைப் பற்றிக் கூறினாள். இதற்கிடையில் அவர் மனைவி கனகாம் பாளும் இவர்கள் பேசுவதை ஒளி மறைவாய் நின்று கேட்டுக் கொண்டிருந்தாள். கனகேந்திரம்பிள்ளை தன் தங்கையைப் பார்த்து, அட்டகாசத்துடன் பெலத்த சத்த மாய், "பிச்சைக்காரப் பயலுக்கு சும்மாயிருந்து தின்று கொண்டிருக்க விருப்பமில்லையாமோ? தெருத் தெருவாய்ப் போய்ப் பிச்சை யெடுப்பதற்கா? சிங்கப்பூரில் இச்சோற்று மாட்டை யார்தான் தேடுவார்கள்? யார்தான் இக் கழுதைக்கு ஒரு நேரம் சாதமளிப்பார்கள்?" என்று சொல் லுவதற்கிடையில், கனகாம்பாள் சட்டென்று வந்து, "இச் சண்டாளியும் பையனும் இங்கிருப்பது போதுமப்பா! இச்சுட்டித் தலையனுக்கு மூட்டையரிசியை யாக்கிப் போ டத் தின்று விட்டுச் சும்மா யிருக்கமுடியாமல் சிங்கப்பூ ருக்குப் போகவேண்டுமாமோ? உத்தியோகம் பார்க்கும் பொருட்டோ? எப்படியாகுதல் சனியன் தொலைந்து போகட்டும். கழுதை! நமக்கென்ன, உமக்கென்ன; ஆனால் செலவுக்கு ஒரு துட்டுக் காசு தன்னும் கொடுத்துவிடமாட் டேன். அவள் தாயும் பிள்ளையும் பட்டதுபாடு," என்று படபடப்பாய்ப் பேசிவிட்டுத் திரும்பினள். கனகேந்திரம் பிள்ளையும், "ஏதோ நீ விரும்பியபடி செய்" என்று தங் கைக்குச் சொல்லி விட்டுப் போய்விட்டார். ஆனால் செல வுக்குப் பணத்தையாகுதல் கொடுத்து விடுவோ மென்று கிஞ்சித்தேனும் நினைத்தவரல்லர். அடுத்த நாள் அம்பிகை

பென்பவள் தான் வைத்திருந்த அற்ப நகைகளை அண்டை வீட்டுக்காரர்களிடம் கொடுத்து அறுபது ரூபாய் வாங்கித் தன் மகனையு மழைத்துக் கொண்டு சிங்கப்பூருக்குப் போவதற்கு ஆயத்தமாயிருக்கும் கந்தப்புவினிடம் போய் தன் மகனைக் காட்டி அந்த ரூபாய் அறுபதையும் அவரிடம் கொடுத்துத் தன் மகனைக் கூட்டிக்கொண்டு போய்ச் சிங்கப்பூரில் இறக்கிவிடும்படியாய் மிகக் கெஞ்சிக்கேட்டாள். அம்பிகையும் அவள் பிள்ளையும் கனகேந்திரம்பிள்ளையின் கிருகத்தில் வேலை செய்து வயிறு வளர்த்து வருவது கந்தப்புவுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய எளிய நடையைப்பற்றி மிகவும் துக்கப்பட்டுத் தான் அவ்வண்ணமே சாம்பசிவத்தைச் சிங்கப்பூரிற்கொண்டு போயிறக்கி விடுவதாகவும் இன்னும் வேண்டிய வுதவியை யவனுக்குச் செய்வதாகவும் வாக்களித்தார். அம்பிகை கந்தப்புவைப் பார்த்து, "ஐயா! தாங்கள் செய்யப்போகும் உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்," என்று சொல்லித் தன் மகனைக் கட்டி யணைத்து முத்தமுட்டுத், "தம்பீ! என் அருமைப் புதல்வா! என் பசுங்கிளியே! உனது விருப்பத்தின்படியே யான் உன்னைச் சிங்கப்பூருக்கு அனுப்புவதற் கிசைந்தேன். ஏதோ இனிமேல் எல்லாம் ஈசன் செயல். ஆனால் என்றும் சிவபெருமானையே மனத்தில் தியானித்துக் கொள்," என்று சொல்லி ஆசீர்வதித்து இன்னுமோர்முறை மகனை முத்தமிட்டபின்னர் கந்தப்புவினிடம் விடை பெற்றுக்கொண்டு தமயனார் கனகேந்திரம்பிள்ளை வீடு வந்து சேர்ந்தாள். வீடு வந்து சேரும் வரைக்கும், தன் பிள்ளையை நினைந்து நினைந்து மனம் நொந்தாள். குரங்குக்கும் தன் குட்டி பொன் குட்டியல்லவா? கந்தப்புவும் அவரைச் சேர்ந்தோரும் அடுத்த நாட் காலமே சிங்கப்பூருக்கு வெளிக்கிட்டுப் பிரயாணமாகி யாழ்ப்

பாணப் புகையிரத ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இனிமேல் கந்தப்பு யாரெனில் யாழ்ப்பாணப் பகுதியில் ஓர் பிரபல கலியாணத் தரகர். இவரைக் கலியாணக் கந்தப்பு என்றும் சொல்லுவார்கள். இவருடைய வேலை யென்னவெனில், விவாகம் செய்து கொள்ளும் இருபகுதியாரிடமும் சென்று பெண்ணைப்பற்றியாகுதல், மாப்பிள்ளையைப் பற்றியாகுதல் பொய்யாக வியந்து கூறித் தானும் காசை வாங்கிக்கொண்டு விவாகங்களை ஒழுங்கு பண்ணிவிடுவதேயாம். இன்னும் இவர் செய்யும் கொடுமைகளை இங்கே எழுதுவதென்றால் இதற்கென்றே பிறிதாக ஓர் புத்தகம் வேண்டும். நல்ல அழகுள்ள பாலியப் பெண்களை பெருந்தொகையான பணத்தை மாப்பிள்ளை பகுதியாரிடம் வாங்கிக்கொண்டு கிழத்தடியர்களுக்கும், முன்னமே விவாகம் செய்து பெண்களை யிழந்து குழந்தைகளுடனிருப்பவர்களுக்கும், நல்ல அந்துஸ்துடையவர்களென்றும், பெரிய உத்தியோகத்தி லிருப்பவர்க ளென்றும் வியந்து கூறிப் பெண் வீட்டாரை யனுப்பி விவாகங்களை அநீதியாய் ஒழுங்கு பண்ணிப் பின்னர் இக்குடும்பங்கள் கலையுமாறு செய்துவிடுவதே கந்தப்புவின் முயற்சி. கந்தப்புவின் வீட்டில் இரவு பன்னிரண்டு மணிக்குத் தன்னும் ஆட்களைக் காணலாம். இவ்வித விவாகங்களை யொழுங்கு பண்ணி விடுவதில் கந்தப்பு மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். சில சமயங்களில் ஒரு விவாகத்திற்கு ஐந்நூறு ரூபாய்க்கு மேலேயும் கிடைக்கும். இத்தொழிலை யெளிதில் கந்தப்புவைப்போல் மற்றவர்கள் கற்றுக்கொள்ள முடியாது. இவற்றை யெல்லாம் விரிக்கிற் பெருகும். ஆனால் இவர் சிங்கப்பூருக்கு வெளிக்கிட்ட நோக்கத்தை மாத்திரம் சொல்லுவோம். மலாய் நாட்டில், கிள்ளான் என்னும் பட்டணத்தில், அரசாங்க உத்தியோகப் பகுதிகளி லொன்றில் தலைமை லேக

கராய் உத்தியோகம் பார்த்தவராகிய கனகசூரியர் என்பவர் கலியாணமாகிப் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பின்னால் அவருடைய மனைவியார் இறந்து விட்டார். அவருக்கு நாலு பெண்குழந்தைகளும் மூன்று ஆண் குழந்தைகளு மிருந்தனர். மனைவியார் இறக்கும் பொழுது கனகசூரிய ருக்கு நாற்பத்தைந்து வயது முடிந்தது. கனகசூரியர் அதிக பணம் சம்பாதித்து மிக்க செல்வந்தனாய் விளங்கியி ருந்தார். மறுபடியும் விவாகம் செய்யவேணு மென்ற எண்ணம் இவர் மனதில் பற்றிக் கொண்டது. ஆனால் வயது சென்றபடியால் தனக்குப் பெண் கொடுப்பார்களோ வென் று சந்தேகங்கொண்டார். கனகசூரியர் கந்தப்புவை நெடுங் காலமாகவே தெரியுமாதலால் அவருக்குப் பின் வருமாறு ஒரு கடிதம் எழுதியிருந்தார் :—

கிள்ளான்,

மாசி, கஅ—உ.

மகா-ள-ள-ஸ்ரீ கனம் பொருந்திய எமது பிரிய நண்பர் கந்தப்புபிள்ளையவர்களுக்கு அடியேனாகிய கனகசூரியர் எழு திக்கொள்வது இவ்விடம் யானும் என்னைச் சேர்ந்தவர்களும் மிக்க தேக சௌக்கியமாக யிருக்கின்றோம். தாங்களும் கடவுள் அனுக்கிரகத்தினா லவ்வண்ணமே யிருப்பீர்க ளென்று நம்புகிறேன். எனது மனைவியார் சென்ற ஆண்டில் இங்கே யிறந்ததைப் பற்றித் தாங்கள் அறிந்திருப்பீர்க ளென்றே நினைக்கின்றேன். சென்ற மாசத்திற்றான் ஆட் டைத்திதி நடந்தேறியது. எனக்கு நாலு பெண் குழந்தை களும் மூன்று ஆண் குழந்தைகளு மிருக்கின்றனர். இக் குழந்தைகளைப் பார்ப்பதற்கு வீட்டில் ஓர் ஆளில்லாமல் பெரிய சங்கடமாயிருக்கின்றது. யான் தனியே இக்குடும் பத்தை எப்படி நடத்த முடியு மென்பதைத் தாங்கள் அறி

யாமலிருக்கமாட்டீர்கள். சென்ற ஒரு ஆண்டும், யான் பட்ட பாட்டை எழுதுவதில் இனிமேல் பிரயோசனமில்லை. எப்படியும், மறுபடி ஒரு விவாகம் செய்ய வேண்டு மென்பதே என்னுடைய நோக்கம். எனது மனைவியு மிறந்தபடியால், ஒரு ஆண்டு செல்லட்டு மென்று நினைத்திருந்தேன். இனிமேல், என்னால் வீட்டுக் காரியங்களைப் பார்க்க முடியாது. தாங்கள்தான் இதற்குத் தகுந்த ஆளென நினைத்துத் தங்களுக்கு இக்கடிதத்தை யெழுதலானேன். ஆனால் எனக்கு வயது சென்று விட்டபடியால், பெண் ஒழுங்கு பண்ணுவது மிகவும் கஷ்டமாயிருக்கும். ஆனபடியால் அதற்குத் தகுந்த யோசனை செய்து, ஏதோ தங்கள் அனுக்கிரகத்தால், அதிசீக்கிரத்தில் இவ்வூருக்குத் தாங்களே பெண்ணையு மழைத்துக் கொண்டு வருமாறு மிகவணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன். தாங்கள் செய்யப் போகும் உதவிக்கு யான் தகுந்த கைம்மாறு செய்வேனென்பதை உறுதியாக வாக்குப் பண்ணுகின்றேன். தற் சமயம், தங்கள் கைச்செலவிற்கு மாத்திரம் இன்று தங்கள் விலாசத்திற்கு இருநூறு ரூபாய் அனுப்பி யிருக்கின்றேன். இக்கடிதத்திற்கு மறுமொழி தாங்கள் எழுதாமல் பெண்ணுடன் வருவீர்களென்று நம்பியிருக்கிறேன். ஆனால் கப்பலேறுவதற்கு இரண்டு மூன்று நாளைக்கு முன்னரே தங்கள் வரவைப் பற்றித் தந்தி மூலமாக எனக்கு அறிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்,

**கனகசூரியர்**

சில நாட்கள் கழிந்த பின்னர், இக்கடிதம் கந்தப்புவின் கையில் கிடைத்தது. வாசித்ததும், அடங்காத ஆனந்தம் கொண்டார். செலவுக்குக் காசில்லையே யென்று யான் எண்ணிக் கொண்டிருக்கக் கடவுள் எனக்கு இருநூறு ரூபாயைக் கொடுத்திருக்கின்றார். என்னைப்போல அதிட்ட சாலி யார்தான் இவ்வுலகி லிருப்பார்கள். இன்னும் எவ்வளவு தொகையான பணம் வர யிருக்கின்றது. இனிமேல், தனக்கு நல்ல காலம் பிறந்து விட்டதென்று அதிக சந்தோஷமுள்ளவராய்ப் பெண் விசாரிக்கும் அலுவலில் கண்ணும் கருத்துமா யிருந்தார். பத்துப் பதினைந்து நாட்களாக அனேக இடங்களெல்லாம் சுற்றிப் பார்த்து ஈற்றில் ஒரு வீடு வந்து சேர்ந்தார். அங்கே இரண்டு மூன்று பருவமடைந்த பெண்களிருப்பதை யறிந்து கொண்டார். ஆனல் அக்குடியானது வறுமை யென்னும் நோயால் பீடித்ததாகவே காணப்பட்டது. எங்கள் கந்தப்பு அப்பெண்களின் தந்தையினிடம் மெல்ல வணுகி அவரைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லலுற்ருர்:—"எனது நண்பரே! நீர், என் பெண்களை வீட்டில் வைத்துக் கொண்டு கஷ்டப்படவேண்டும். அவர்களுக்கு அந்தந்தக் காலத்தில் எங்கேயாகிலும் விசாரித்து விவாகம் செய்து வைப்பதன்றே முறை. எத்தனை நாட்களுக்குத்தான், இவ்விதமாக வைத்திருக்கப் போகின்றீர். ஆனல், யான் அறியத்தக்கதாக, ஓர் மாப்பிள்ளை சிங்கப்பூரிலிருக்கின்ருர். அவருடைய குணங்களைப் பற்றி யான் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனல், முன்னெருமுறை விவாகம் செய்து பெண்ணை யிழந்தவர். இரண்டொரு குழந்தைகளு மிருக்கின்றனர். பெரிய உத்தியோகத்தி லமர்ந்திருக்கின்ருர். வயதும் அவ்வளவு செல்லவில்லை. அவருடைய சம்பளம் மாசம் இருநூறு வெள்ளி. இதைவிட, வெளி வரும்படியால் வரும் தொகைக்கோர்

கணக்கில்லை. உலகத்திலே இப்படியான விவாகங்கள் அனேகம் நடக்கின்றன. இவ்விதம் நீர் கஷ்டப் படுவதைப் பார்க்கிலும் ஒரு பெண்ணையாகுதல் கரை சேர்த்து விட்டால், எவ்வளவு பாரம் நீங்கு மென்பதை யோசித்துப் பாரும். எல்லாவித தானங்களிலும், கன்னிகா தான மன்றோ மிகச் சிறந்தது. நீர் படும் கஷ்டத்தைக் கண்ட பின்னர்தான், யானும் இதில் பிரவேசிக்க நேர்ந்தேன். விருப்பமுளதாயின், இப்பொழுதே எனக்குத் தெரிவியும்'' என்று மிகக் கபடமாகவும் அந்தரங்கமாகவும் சொன்னார். அப்பெண்களின் பிதாவாகிய கதிரவேலு வென்பவர், இவருடைய கபடமான வார்த்தையா லேடுபட்டு, ஒருவித யோசனையு மில்லாது, பதினைந்து வயதுள்ள விசாலாட்சி யம்மாள் என்னும் பெயரையுடைய மூத்த பெண்ணைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணி விட்டார். சில நாட்கள் கழிந்த பின்னர், கதிரவேலுவும், புத்திரி விசாலாட்சியும், தரகர் கந்தப்புவும், சிங்கப்பூருக்குப் பிரயாணமாகி யாழ்ப் பாணப் புகையிரத ஸ்தானத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆனால், விசாலாட்சியம்மாளுக்கு வயது சென்ற கிழவர் தனக்குக் கணவனாக வரயிருப்பதைப் பற்றித் தெரியாது. மேற் சொன்ன இவர்களுடன் தான், எங்கள் அம்பிகையின் புத்திரனாகிய சாம்பசிவமென்னும் சிறுவனும் சிங்கப் பூருக்குப் பிரயாணமாய் வருகின்றான். விசாலாட்சியம் மாளின் விவாகத்தைப் பற்றிய சங்கதிகள் யாவும் பின் அத்தியாயங்களிற் காணலாம்.

---

# மூன்றும் அத்தியாயம்.

"யாருமற்ற வருக்குத் தெய்வம் துணை."

ஐக்கிய மலாய் நாட்டின் தலைநகராயுள்ள கோலா லம்பூர் என்னும் பட்டினத்தில் அரசாங்க உத்தியோகப் பகுதிகளிலொன்றில், தலைமை லேககர் உத்தியோகம் பார்த்து வந்தவராகிய சபாபதிப்பிள்ளை யென்பவர், ஒரு நாட் சாயங்காலம் ஐந்து மணியளவில், தன் மனைவி தங்கம் மாளுடன் கைக்காடியில் சென்றூல் என்ற இடத்திற்குத் தன் சினேகித உத்தியோகஸ்தர்களு ளொருவராகிய சங்கரப்பிள்ளை யென்பவரைக் கண்டு தெரிசிக்குமாறு போயிருந்தனர். சங்கரப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்ற தும், சங்கரப்பிள்ளையின் மனைவி பொன்னம்மாள், தங்கம் மாளைப் பார்த்து "வாருங்கள், வாருங்கள், நெடுநாட்களாக யிந்தப் பக்கம் நீங்கள் வரவில்லை; முன்னர் அதிகமாக வருவீர்கள்," என்று சொல்லி யறைக்குள்ளே தங்கம்மாளை யழைத்துக் கொண்டுபோய் நாற்காலி கொடுத்து உட்கார வைத்தாள். வீட்டின் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த சாய்நாற்காலி மீதுட்கார்ந்து கொண்டு சங்கரப்பிள்ளையும் சபாபதிப்பிள்ளையும் உலக விஷயங்களைப்பற்றியும் தங்கள் உத்தியோக கருமங்களைப்பற்றியும் ஒரு மணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால், உள்ளே பேசிக் கொண்டிருந்த பெண்மணிகளுக்கோ, கதை ஓய்ந்த பாடில்லை. கவனியாது விட்டால், அவர்கள் விடியும் வரைக்கும் பேசிக்கொண்டே யிருப்பார்கள். அப்பெண் மணிகள் பேசிய கதையி லொரு பாகத்தைக் கூறுவோம்.

பொன்னம்மாள்—"நீங்கள் உடுத்திருக்கும் சேலையை யெங்கிருந்து எடுப்பித்தீர்கள்? நல்ல அழகான சேலையா

யிற்றே. இதைவிடப் புதுமாதிரியாக ஓர் மார்பணி (Brooch) யணிந்திருக்கின்றீர்களே. யானு மொன்று இவ்விதம் செய்விக்கவேண்டும்," என்றாள்.

தங்கம்மாள்—"இதுவுமோர் சேலையா? இன்னும் எத்தனை வகையான சேலைகளிருக்கின்றன. இதைத் தான் மதனப்பூர் கத்திரிப்பூச் சேலை யென்று சொல்லுவார்கள். இதைக் காசியிலிருந்து எடுப்பித்தோம். இன்னும் விசேஷ மான சேலைகள் எவ்வளவோ யிருக்கின்றன. எனது நாதரிடம் புதுவிதமான சேலைகள் எடுப்பிக்கவேண்டு மென்று கேட்டால், என்னை யடிக்க வந்து விடுவார். யான் பயந்து அவரை யதிகம் கேட்பதில்லை. மார்பணியைப் பற்றிக் கேட்டீர்கள். இதுதான் தற்கால நாகரீகத்துக் கேற்றதென்று சொல்லுவார்கள். இன்னும் வித்தியாசங்க ளேற்படக்கூடும். இதில் ரோசாப்பூவும் இலையும் மொட் டும் சேர்ந்திருக்கின்றன. ஆனால் தங்கம் சொற்பம்தான். ஏனெனின் எங்களுக்கு மற்றவர்களைப் போல மேல்வரும்படி யில்லை யாதலால் அதிகம் செலவு செய்யக் கட்டாது. பொதுவாக உலகத்தோ டொத்ததாகச் சில நகைகளைச் செய்தே வைத்திருக்கின்றேன்," என்றாள்.

பொன்:—"சேலைகள் விஷயமிருக்கட்டும். என்ன விதமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இருக்கிற சேலை களை யுடுப்பதற்கே தருணமொன்றும் வருவதில்லை. ஆனால் இவ்வித மார்பணி யொன்று அவசியம் யான் செய்விக்க வேண்டும். யான் வைத்திருப்பது அவ்வளவு நாகரீக மாகத் தோற்றவில்லை," என்றாள்.

தங்க:—"உங்களுக்கென்ன? காசுக்குத்தான் பஞ் சமோ? அவர்தானே (உங்கள் புருஷன்) பகிரங்க வேலைப் பகுதியில் பெரிய உத்தியோகத்தி லமர்ந்திருக்கின்றார்.

வரும்படி யதிகம் வருமாதலால் நினைத்ததெல்லாம் செய்விக்கலாம் தானே."

போன்:—"அப்படிச் சொல்லாதீர்கள். ஏன் உங்களுக்கு வரும்படி யில்லையோ? உங்கள் புருஷன் பெரிய கந்தோரிலிருக்கின்றாரே; பல சாதிக்காரரும் கொண்டு வந்து வெள்ளி வெள்ளியாய்க் கொட்டுவார்களே."

தங்க:—சிரித்துக்கொண்டு, யான் சொல்வதை நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் உண்மையைச் சொல்லுகிறேன். என் நாதர் கைக்கூலி வாங்குவதே கிடையாது. வலியக் கொண்டு வந்து கொடுத்தாலும் திருப்பிக் கொடுத்து விடுவார். வலிய வந்த வரும்படியை ஏன் விடுவானென்று யான் பேசினால், அவர் கேட்பதில்லை. கைக்கூலி வாங்கிச் சம்பாதிக்கும் பணம் நிலைத்து நிற்கமாட்டாதென்றும் அப்படிச் சம்பாதிப்பதனால் அதிகம் கெடுதிகளேற்படக் கூடுமென்றுஞ் சொல்லிவிடுவார்.

போன்:—"ஏன்? கைக்கூலியால் வந்த செல்வம் ஓடிவிடுமாமோ? முன்னமே கல்வீட்டைக் கட்டி விட்டால் தொந்தரவில்லையே. ஆனால், கைக்கூலி வாங்கித்தான் உலகில் கல்வீடு கட்டுகிறார்களென்று யான் இங்கே சொல்ல வரவில்லை. நாங்கள் முன்னமே கல் வீட்டைக் கட்டிவிட்டோம். பிள்ளை குட்டியுள்ளவர்களாயிருக்கும் எங்களுக்குச் சம்பளம் மட்டு மெடுத்து என்ன விதமாய்க் காலத்தைத் தள்ளலாம். உங்களுக்கு யான் மெய்யைச் சொன்னேனென்ன. ஆனால் உங்களுக்கு வரும்படி யில்லை யென்பதை யான் நம்ப மாட்டேன். உலகத்திலே அப்படியான யோக்கியர்களுமிருக்கின்றார்களா? யான் இங்கே உங்கள் நாயகனை யோக்கிய மற்றவர் என்று கூறவரவில்லை."

தங்க:—" நீங்கள் நம்பினாலென்ன, நம்பாமல் விட்டா லென்ன, உண்மையைத்தான் யான் சொன்னேன். எங்கள் நடைபாவனைகளில் யாரும் அறிந்து கொள்ளக்கூடும். நகைகள் அணிந்திருக்கிறே னென்று நீங்கள் ஒரு சமயம் விளங்கக்கூடும். எந்த உத்தியோகஸ்தன் வீட்டிலும் தேவையான நகைகளி ருக்கின்றனதான். அதுபோல, அவசியம் தேவையான நகைகளைச் செய்வித்து வைத்திருக் கிறேனே தவிர, உங்களைப்போல கும்பகோண அட்டிய லொன்று, புதுச்சேரி அட்டியலொன்று, இரண்டு விதமான காப்புகள், இருசோடி கொலுசுகள், தங்கமாலைகள், பாவற்கொட்டைச் சங்கிலியொன்று, நெற் சங்கிலியொன்று, இப்படியாகப் பல நகைகளை யான் வைத்திருக்கவில்லை," என்றாள்.

போன்:—" சரி-சரி-இதெல்லாமிருக் கட்டும். உங்கள் பிள்ளைகள் என்ன படிக்கின்றார்கள்?"

தங்க:—" மூத்த தம்பி, ஆங்கிலேயம் படிக்கின்றான். தமிழில், நாலாம் புத்தகம் வரைக்கும் கற்றுக்கொண்டான்; இளையவனையும் தங்கைச்சி ஞானாமிர்தத்தையும் தமிழ்ப் பாடசாலைக் கனுப்பி யிருக்கின்றோம். உங்கள் பிள்ளைகள் என்ன படிக்கின்றார்கள்?"

போன்:—" நாங்கள் எல்லோரையும் ஆங்கிலேயம் கற்கவே அனுப்பியிருக் கின்றோம். தற்காலம், ஆங்கில மொழி தான் பெண்களுக்கும் நல்லதென்று சொல்லு கின்றார்கள்."

தங்க:—" பெண்கள் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்ப்பதற்கா? தமிழைத்தான் நன்றாய்க் கற்கவேண்டும். பெண்களுக்குத் தேவையான தெல்லாம் தமிழிலேயே யிருக்கின்றன. ஆங்கிலம், எமது பெண்மணிகளுக்குத் தேவையில்லை யென்பதே அனேகருடைய அபிப்பிராயம்."




சாம்பசிவம் சபாபதிப்பிள்ளை வீடடைதல். 42-ம் பக்கம் பார்க்க.

இப்படியாக இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், சபாபதிப்பிள்ளை, "ஏன்! வீட்டுக்குத் திரும்புவதில்லையா," என்று மனைவியாருக்குக் கேட்கும்படி சொல்லினர்.

தங்க:—"இதோ வந்து விட்டேன்," என்று பொன்னம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு இருவருமாகக் கைக்காடியில் வீடு திரும்பலாயினர்.

இதற்கிடையில், தாகர் கந்தப்புவும், கதிரவேலுவும், மகள் விசாலாட்சி யம்மாளும், சாம்பசிவத்துடன் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சிங்கப்பூர் வந்திறங்கிக் கோலாலம்பூருக்கு, அன்று சாயங்காலமே வந்து சேர்ந்தார்கள். சாம்பசிவத்தைப் "புடு" என்ற இடத்திற் கொண்டு வந்து, "தம்பீ—சாம்பசிவம்! இவ்விடத்தி லிருப்பவர்க ளெல்லாரும் நமது ஊர் வாசிகள்தான்; அத்துடன் அனேகர் இல்லறவாசிகள். எங்கேயாகிலும் ஓர் வீட்டுக்குச் சென்றால் பிழைத்துக் கொள்ளுவாய். யான் இங்கே நிற்கமாட்டேன். கிள்ளான் என்ற அயலூருக்குப் போகவேண்டும்," என்று சொல்லிச் சாம்பசிவத்தை அவ்விடம் விட்டுவிட்டுக் கந்தப்புவும், கதிரவேலுவும், மகள் விசாலாட்சி யம்மாளும், கிள்ளானுக்குச் செல்லும் மார்க்கமாகச் சலனரதத்தில் (Motor Car) ஏறினார்கள். சாம்பசிவம், மலாய் நாட்டிற்கு இதே முதன் முறையாதலாலும், தனது சிற்றூராகிய நல்லூரை விட்டு அயலூர் தன்னும் சென்றிருக்கவில்லையாதலாலும், திக்குத் திசையொன்றும் தெரிந்து கொள்ள முடியாமல் திகைத்து நின்றான். என்றாலும், ஒரு வீட்டையணுகுவோமென்று முன்னே சொன்ன சபாபதிப்பிள்ளை வீட்டை நோக்கியே சென்றிருந்தான். அச்சமயம் சூரிய பகவானும் தன் கிரணங்களை யொடுக்கி மேற்றிசையில் மறையக் குளிர்ச்சி பொருந்திய பூரண சந்திரனைவன்

கீழ்த்திசையிற் றோன்றி யருளினான். சாம்பசிவம் வீட்டிற் கருகே சென்றதும், சபாபதிப்பிள்ளையின் புதல்வியாகிய ஞானாமிர்தம் சிறுவனைக்கண்டதும் விரைந்தோடி வந்து, அவனுடைய அலங்கோலமான நிலையைக் கண்டு மனம் சகிக்காதவளாய் அவனைப்பார்த்து, "நீ யார்? எங்கிருந்து வந்தாய்? நீ வந்த காரணமென்ன?" என்பதற்குள், ஞானாமிர்தத்தின் மூத்த தமயன் ஓடி வந்து, "அடே! என்னடாப் பயலே! ஏன் இங்கு வந்தாய்? ஓடிப்போய் விடு; நின்றால் அடித்துக் கொன்று விடுவேன்," என்று வெருட்டினான். அப்பொழுது ஞானாமிர்தம், "அண்ணா! அப்படியாக வெருட்டாதே. பையனுடைய கோலத்தைப் பார்க்குமிடத்து மிக ஏழையாகத் தோன்றுகின்றான். ஆனால் அவனுடைய முகவழகைப் பார்க்குமிடத்து பெரிய இடத்திற் பிள்ளைபோல எண்ணவேண்டி யிருக்கின்றது. இடர்ப்பட்டு வருபவர்களை யடித்துத் துரத்தி விடுவது பெரிய பாவமன்றோ? அவனைத் துன்பப் படுத்த வேண்டாம்; அவனுடைய சங்கதியைப் பற்றிக் கேட்போம்," என்றாள். ஞானாமிர்தம் சிறுமியாக விருப்பினும் அச்சிறுவயதிலேயே அடக்கம், பொறுமை, சாந்தம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்க ளமைந்திருந்தமை மிக வியக்கத்தக்கதே. அவளுடைய தமயன் விளையாட்டுப் பிள்ளையாதலால் எப்படியாகுத லென்று நினைத்து அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். பின்பு, ஞானாமிர்தம், சாம்பசிவத்தைப் பார்த்து: "நீயார்? எங்கிருந்து வந்தாய்? உன்னுடைய விருத்தாந்த மென்ன?" என்று கேட்பதற்குள், சென்னனுக்குச் சிநேகிதரைக் காணச் சென்ற சபாபதிப்பிள்ளையும் மனைவியும் கைக்காடியில் வீடு வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்ததும் இச்சிறுவனைக் கண்டார்கள். சபாபதிப்பிள்ளை, ஞானாமிர்தத்தைப் பார்த்து,

"குழந்தாய்! இந்தப் பையன் யார்? ஏன் இங்கு வந்தான்?" என்று கேட்டார். ஞானமிர்தம், "ஐயா, ஐயா! இப்போது ஐந்து நிமிஷங்களுக்கு முன்னர்தான் இந்தப் பையன் இங்கு வந்தான். இவனைக் கண்டதும் அண்ணர் அடித்துத் துரத்தி வெருட்ட முயன்றார். யான் அப்படிச் செய்ய வேண்டாமென்று தடுத்து இவனுடைய வரலாற்றைக் கேட்பதற்குள், தாங்களும் வந்து சேர்ந்தீர்கள். இவ்வளவும் தான் நிகழ்ந்த செய்தி. இனிமேல் தாங்களே விசாரித்துக் கொள்ளுங்கள்," என்றாள்.

சபாபதிப்பிள்ளை பையனைக் கண்ட மாத்திரத்தில் பெரிய இடத்திற்பிள்ளையாயிருக்க வேண்டுமென்றும், வறுமை காரணமாக இக்கோலத்தை யெடுத்திருப்பானென்றும் யூகித்துக் கொண்டாலும், இன்னும் கேட்டறிவோமென்று பையனைப் பார்த்து, "நீ யார்? உன் விருத்தாந்தமென்ன?" என்று வினவினார். சாம்பசிவம் பெரிய மனக்கவலையுடன் கண்களினின்றும் நீரானது கங்கா நதிப் பெருக்கெடுக்க, "ஐயா! நானிருப்பது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர். என் பெயர் சாம்பசிவம்; என் தகப்பனார் பெயர் பொன்னம்பலம்; என் தாயார் பெயர் அம்பிகை. என் தந்தை, நான் ஐந்து வயதாயிருந்த காலத்து பரமகதி யடைந்து விட்டார். எங்கள் குலத்தை வேளாளர் என்றழைப்பார்கள். நாங்கள் மிகவும் வறிய குடும்பத்தவர்கள். நாங்களிருந்த குடிநிலம் ஆக இரண்டு பரப்புத்தான். அதிலே தோட்டச் செய்கை செய்து நாள் வீதம் சம்பாதித்த பணம் ஜீவனத்திற்கு மாத்திரமே கண்டு கொண்டு வந்தது. என் தந்தை யிறந்த பின்பு நானும் எனது தாயாரும் வயிறு வளர்ப்பதற்காக எனது தாயாருடைய தமயனாரின் கிருகத்தில் (எனது மாமா வீடு) அடிமை வேலை செய்து வந்தோம். எனது

மாமாவுக்கும் பிள்ளை குட்டிகளுண்டு. ஆனால், அவரும் மனைவியும், என்னையோர் கூலிக்காரனாகவும், எனது தாயாரை யோர் சமையற்காரியாகவும், வைத்துப் பாவித்து வந்தார்கள். எனக்குக் கல்வியில் அதிக விருப்பம். அவர்களுடைய குழந்தைகளுடன் என்னையும் பள்ளியில் வைக்கும்படி என் தாயார் அவர்களைக் கேட்டதில், அதற்கு வறியவளுடைய பிள்ளையும் படிக்கவேண்டுமோ வென்று சொல்லி மறுத்து விட்டனர். எனது மாமாவுக்கு வந்து வாய்த்த மனைவியோ காந்தாரிக்குச் சமானமானவள். பள்ளியில் வைப்பதற்குத் தன்னும் தடுத்தது அச்சண்டாளிதான். பொதுவாக எனது மாமா எவ்விஷயங்களிலும் தனது மனைவியார் சொற்படியே நடக்கவேண்டும். இப்படியாயிருந்து அவர்களிடம் அடிமை வேலை செய்து வயிறு வளர்ப்பதைக் காட்டிலும் எங்கேயாகிலும் தேசாந்தரமாய்ப் போய்ப் பிச்சை யெடுத்தாலும் நல்லதென்று யோசித்து, எனது தாயார் வைத்திருந்த அற்ப நகைகளை அறுபது ரூபாய்க்கு விற்று வழிச்செலவுக் கெடுத்துக் கொண்டு சிங்கப்பூருக்குப் பயணமாக வெளிக்கிட்ட தாகர் கந்தப்புவுடன் கடவுளருளால் இவ்விடம் வந்து சேர்ந்தேன். நான் இங்கு புறப்பட்டு வந்தது எனது தாயாருக்கு அவ்வளவு விருப்ப மில்லையாயினும், எனது பிடிவாதத்தின் பேரில் ஈற்றில் உடன்படவேண்டியே வந்தது. எனது தாயார் சிறிது தமிழைக் கற்றிருந்தபடியால் வீட்டில் வேலை செய்து ஓய்ந்திருக்குங் காலங்களில் எனக்குத் தமிழைச் சிறிது கற்பிப்பதுண்டு. இப்போது தமிழ் ஐந்தாம் வகுப்புப் புத்தகம் வாசிக்க என்னால் முடியும். தற்சமயமும் எனது தாயார், அவர்களின் கிருகத்திலே அடிமை வேலை செய்து ஜீவனம் செய்து வருகின்றாள். இவ்வளவும் தான் எனது விருத்தாந்தம். இனிமேல் தாங்கள் என்

மேல் இரக்கங் கொண்டு என்னை யாதரித்தால் மிகவும் புண்ணியமாகும்,'' என்று அழுது கொண்டு சொன்னான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சபாபதிப்பிள்ளையின் புத்திரியாகிய ஞானாமிர்த மென்பவளின் கண்களினின்றும் நீரானது அவளையறியாதபடி ஆறுகப் பெருகியது. சபாபதிப்பிள்ளையும் சிறிது மனங்கலங்கினார். தன் நாயகி தங்கம்மாளுடன் யோசித்த பின்னர் சாம்பசிவத்தைத் தங்கள் வீட்டிலேயே வைத்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். இதைக் கேள்வியுற்ற *ஞானாமிர்தத்துக் குண்டான ஆனந்தத்திற்கோர் எல்லையில்லை. சபாபதிப்பிள்ளையின் குழந்தைகளுடன் சாம்பசிவமும் பள்ளிக் கனுப்பப்பட்டிருந்தான். ஞானாமிர்தமும் இளைய குமாரனும் தமிழ் வித்தியாசாலையில், கல்வி கற்று வந்தார்கள். மூத்த குமாரனுடன் சாம்பசிவம் ஆங்கிலம் கற்க விடப்பட்டிருந்தான். சாம்பசிவம், முன்னர் தன்னூரில், தன் மாமனார் கிருகத்தில் அவரின் புத்திரன் ஆங்கிலங் கற்று வருங்காலத்தில் தானாகவே சிறிது ஆங்கிலம் கிரகித்திருந்தபடியால், இங்கே பள்ளிக்கூடத்திலவனைச் சோதித்துப் பார்த்ததில் இரண்டாம் வகுப்பிற் படிக்கக் கூடிய அறிவிருந்தமை கண்டு, அவ்வகுப்பிலேயே விடப்பட்டிருந்தான். பின் சிறிது காலத்திற்குள் படிப்பில் மிகவும் திறமை காட்டி வந்தபடியால், உடனே நாலாம் வகுப்பிற் கேற்றிவிட்டார்கள்.

---

*ஞானாமிர்த மென்பவள் சிறுமியாக விருப்பினும் ஜீவகாருண்யமுடையவள். சாம்பசிவத்தின் பரிதாபமான வரலாற்றைக் கேட்ட மாத்திரத்தில், அவனை யாதரித்துக் காப்பாற்றினாலோ வென்ற எண்ணம் முதலில் அவள் மனதிலுதித்தும், தன் பெற்றோர் அதற்குடன் படுவார்களோ வென்ற ஐயமேற்பட்டிருக்குஞ் சமயம், தன் தந்தையானவர் தான் நினைத்தவண்ணமே இசைந்தாரென்பதை யறிந்தவுடன், அவள் மனமானது எல்லையில்லா ஆனந்தத்தை யடைந்தது.

சபாபதிப்பிள்ளையும் மனைவியும், தம் குழந்தைகள் படிப்பில் மிக்க கட்டையா யிருக்கின்றார்க ளென்று மனஸ்தாபப் பட்டபோதிலும் சாம்பசிவத்தினுடைய கெட்டித்தனத் தைக் கண்டு பொறாமை கொள்ளவில்லை. இப்படி யிருக் குங் காலத்தில், சாம்பசிவம் ஒருநாள் தனது தாயாருக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதி யிருந்தான்:—

உ
சிவமயம்.

கோலாலம்பூர்,
கார்த்திகை மீ உஎஉ.

என்னைப் பத்து மாசமும் சுமந்து பின் ஈன்றெடுத்துக் காப்பாற்றி அருமையாய் வளர்த்து வந்த எனது ஆசைத் தாயாருக்கு எழுதிக் கொள்ளும், செய்தி யென்னவெனில், அருவம், அருவுருவம், உருவமுமாய் விளங்கி நிற்கும் பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானுடைய திவ்விய அனுக்கிரகத்தால் தேக சௌக்கியமாயிருக்கின்றேன். அவ்வண்ணமே தாங்களு மிருக்கக் கருணாநிதி கிருபை செய்வாராக. தாகர் கந்தப்பு என்னைக் கோலாலம்பூர் என்ற இடத்திற் கொண்டு வந்திறக்கி விட்டுச் சென்று விட்டார். "யாருமற்றவருக்குத் தெய்வம் துணை" என்ற திவ்விய வாக்குப்படி சிவபெருமானுடைய அருளினால் இங்கு ஓர் கனவானின் கிருகத்தில் வந்து சேர்ந்தேன். அவருடைய ஊரும் யாழ்ப்பாணம்தான். அவர் என் னுடைய விருத்தாந்தத்தைக் கேட்ட பின்னர், என்னைத் தனது வீட்டி லிருக்கும்படி கிருபை புரிந்திருக்கின்றார். அவர் என்னைத் தன் பிள்ளை மாதிரியாகவே நடத்திவரு கின்றார். முதன்மைப் பொருளாகிய சிவபெருமானே என்னை இந்த வீட்டிற் போய்ச் சேரும்படியாகத் திருவுளம்

பற்றினுரென்று யான் மனதார எண்ணியிருக்கின்றேன். அவருடைய தலைவியாரும் என்னைத் தன் பிள்ளை போலவே பார்த்து வருகின்றார். அவருடைய குழந்தைகளும் என் மேல் மிக்க நட்பாகவே நடந்து வருகின்றனர். அக்கனவானின் பெயர் சபாபதிப்பிள்ளை. பெரிய உத்தியோகத்திலமர்ந்திருக்கின்றார். அவர் பாரியாரின் பெயர் தங்கம்மாள். அவருக்கு இரு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையுமிருக்கின்றனர். மூத்த குமாரனின் பெயர் பரஞ்சோதி. புத்திரியின் பெயர் ஞானமிர்தம். மிகவும் நற்குணம் வாய்ந்தவள்; ஜீவ இரக்கமுள்ளவள். இளைய குமாரனின் பெயர் அருட்சோதி. சபாபதிப்பிள்ளை யென்பவரும் மிகவும் நற்குணசாலி. கடவுள் பக்தியுள்ளவர். மேலும் இவருடைய குழந்தைகளுடன் என்னையும் பள்ளியில் வாசிக்கும்படி இக்கனவான் அருள் புரிந்திருக்கின்றார். இப்போது ஆங்கிலம் நாலாம் வகுப்பில் படித்து வருகின்றேன். கடவுள் என்னைக் கைவிட மாட்டாரென்பதே எனது முழு நம்பிக்கை. ஏதோ நடப்பது நடந்து தான் தீரும். தாங்கள் என்னைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டியதில்லை. சிவபெருமானின் அனுக்கிரக மிருந்தால் தங்களைச் சிறிது காலம் போக வந்து காண்பேன். அவ்வளவிற்கும் தாங்களிருந்து வந்த மாதிரியாகவே மாமா வீட்டில் அவர்களிட்ட வேலையைச் செய்து வயிற்றைக் கழுவுங்கள். கஷ்டப்பட்டபோதிலும் நன்மைக்கென்றே எண்ண வேண்டும்.

> "இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
> விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்டப்
> பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
> நெஞ்சமே யஞ்சாதே நீ."

என்று ஔவையார் கூறிய வண்ணம் கடவுளிருக்கின்று

ராதலால் யாதொன்றுக்கும் கவலை கொள்ள வேண்டாம். யான் வந்திறங்கியவுடன் காகிதம் எழுதாமல் விட்டதைப் பற்றி மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒரு நிலையில் வந்த பிற்பாடு எழுதலாமென் றெண்ணி யிருந்தேன். எனது அன்பான முத்தங் கொடுத்து இவ்வளவில் கடிதத்தை நிறுத்துகின்றேன்.

தங்களின் சுகசெய்தியை யெதிர்பார்க்கும்
தங்கள் அன்பான புத்திரன்,
**சாம்பசிவம்.**

இப்படியாகச் சபாபதிப்பிள்ளையின் குழந்தைகளும் சாம்பசிவமும் கல்வி கற்று வருங்காலத்தில், சாம்பசிவ மென்பவன் மிகக்கெட்டித்தனமாகப் படித்துத் தனது பதினேழாம் பிராயத்தில் "சீனியர்" என்று சொல்லப்படும் பரீட்சையிற் றேறிவிட்டான். ஆனால், சபாபதிப்பிள்ளையின் மூத்த குமாரன் இன்னும் ஏழாம் வகுப்பிலாவது தேர்ச்சியடையவில்லை. புத்திரி ஞானமிர்தத்திற்கு வயது பன்னிரண்டாகி விட்டது. தமிழ்மொழியில் ஐந்தாம் வகுப்பு முடியக் கற்றுக்கொண்டாள். ஆனால், ஆங்கிலம் படிக்க ஞானமிர்தம் விடப்படவில்லை. மேலும், சாம்பசிவம், சபாபதிப்பிள்ளை வீட்டில் படிக்குங் காலங்களில், குற்றேவல் வேலைகளும் செய்து கொண்டு வந்தானென்பதை வாசகர்களுணர்ந்து கொள்ளவேண்டும். தானாகவே வேலைகளைச் செய்வதற்கு முன் வருவான். இரவில், பெரிய தமிழ்நூல்களை வாசித்து ஆராய்ச்சி பண்ணிவருவான். அத்துடன் ஞானமிர்தத்திற்கும் அவள் தம்பி அருட்சோதிக்கும் தான் கற்றுக்கொள்ளும் தமிழில் சிலவற்றை யோதிவருவான். சாம்பசிவம் அழகில் மன்மதனை யொத்திருந்

தான். வரவர ஞானமிர்தத்திற்குச் சாம்பசிவம் பேரில் அதிக அன்பு ஏற்பட்டுவிட்டது. சாம்பசிவம் ஓய்ந்திருக்குங் காலங்களில் தமிழ் நூல்களையே ஆராய்ச்சி செய்து வருவான். அவனுக்கு இனிமேல் ஆங்கிலம் கற்றுக்கொள்ள விருப்பமில்லை. ஏதாகிலும் முயற்சி பார்க்க வேண்டுமென்பதே அவனுடைய முக்கிய நோக்கம். சபாபதிப்பிள்ளைக்கும் இது சங்கதியைப்பற்றி யறிவித்திருந்தான். அவரும் அவன்மே லிரக்கங் கொண்டு எப்படியும் அவனை நன்னிலையில் வைத்து விட்டாற் போதுமெனக் கருதி ஏதாகிலுமோர் உத்தியோகத்திற் சேர்த்துவிடப் பல வழிகளாலும் தெண்டித்துக் கொண்டுவந்தார். சாம்பசிவத்தினுடைய நல்லதிட்டத்தின் பயனாக ஓர் ஆங்கிலேய உபாத்தி வேலையவனுக்குக் கிடைத்தது.

சாம்பசிவம் சபாபதிப்பிள்ளையைப் பார்த்து, "ஐயா புண்ணிய பிரபுவே! என் பிதாவிற்குச் சரியானவரே! தாங்கள் என்னைத் தங்கள் பிள்ளைபோலப் பார்த்து என்னைப் பராபரித்துப் படிப்பித்து உத்தியோகமுமெடுத்துக் கொடுத்து என்னை யிவ்வித நற்பதவிக்குக் கொண்டு வந்ததற்காக யான் என்ன கைம்மாறு செய்யப்போகின்றேனோ தெரியவில்லை.

> "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
> வானகமு மாற்ற லரிது."—(குறள்)

எனக்கு இடுக்கணெய்திய காலத்தி லென்னை யாதரித்துக் காப்பாற்றிய தங்களுக்கு, யான் என்ன பதிலுபகாரந்தான் செய்வேன்! இவர்க்கு இது செய்தால் இன்னது கிடைக்கும் என்று பதிலுபகாரத்தைக் கருதாது எனக்குச் செய்த வுதவியை, யான் என்னென்றுதான் உரைப்பேன்!"

> "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
> னன்மை கடலிற் பெரிது."—(குறள்)

என்று சொல்லித் தேம்பித் தேம்பி யழுதான். சபாபதிப் பிள்ளைக்கு முன்னிருந்ததற்கு மேலாக அன்பு மேலிட்டுச் சாம்பசிவத்தைப் பார்த்து, "தம்பீ—சாம்பசிவம்! அழ வேண்டாம். ஏன் அழுகின்றாய்? இதுவோர் பெரிய காரியமல்ல. யான் செய்யவேண்டிய கடமையைச் செய்தேனே யொழியப் பிறிதொன்றல்ல. இதெல்லாம் யான் செய்தவ னன்று. எம்பெருமான் திருவருளாற் செய்ததே," என்று சொல்லி அவனைத் தேற்றி, "நீ இனிமேல் சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்து நீடூழியாக வாழக் கடவது," என்று ஆசிர்வதித்தார். சபாபதிப்பிள்ளையின் மனைவி தங்கம்மாளுக்கும் அதிக அன்பு சாம்பசிவம் மேலுண்டாய் விட்டது. ஆனால் எல்லோரிலும் பார்க்க ஞானமிர்தத்துக் கிருந்த அன்பும் ஆனந்தமும் எவ்வளவென்பதைச் சொல்லமுடியாது. மேலும், சாம்பசிவம் உத்தியோகமாய் விட்டபடியால் ஒருசமயம் வீடு வாடகைக் கெடுத்துப் பிறிதாக விருப்பாரோ வென்ற சந்தேகங் கொண்டவளாய், ஞானமிர்தம், தன் தாயை யணுகி, "அம்மா! அம்மா! அவரை இனிமேலும் எங்கள் வீட்டிலேயே யிருக்கும்படி ஒழுங்குபண்ணுங்கள். யானும் தமிழ் நூல்களை யவரிடம் கற்றுக்கொள்ளலாம்," என்றனள்.

தங்கம்மாள்—யாரைக் கேட்கின்றாய், அவரென்றது யார்?

ஞானமிர்தம்—சாம்பசிவத்தைத்தானம்மா.

தங்க:—என்னே! முன் சாம்பசிவம்—சாம்பசிவம் என்று பேர் சொல்லி யழைத்தாயே. இப்போது அவர்—அவர்—என்கின்றாயே, காரணமென்ன?

ஞான:—"ஏன்—அம்மா! அவர் என்னிலிருந்து வயதுக்கு மூத்தவர்; நன்றாகக் கற்றவர்; அத்துடன் உத்தி

யோகமும் பார்க்கின்றார். இனிமேல் அவரைப் பேர் சொல்லியழைப்பது தகுதியா? மாமா வென்று தான் யான் அழைக்கப் போகின்றேன்,'' என்றாள்.

தங்க :—"சரி—பிள்ளாய் நீ நல்ல புத்திசாலிதான். எப்படியாகுதல் உனக்கு விருப்பமானபடி யழைத்துக் கொள். ஆனால், சாம்பசிவம் நீடித்து எங்கள் வீட்டிலிருக்க முடியுமா? முன்னர் சிறு பிள்ளையாயிருந்தபடியால் உங்களுடன் கூடி விளையாடிக் கொண்டு திரிந்தான். தற்சமயம் வாலிபனாகவும் உபாத்தியாயராகவும் வந்து விட்டபடியால் எங்கள் வீட்டில் இனிமேல் நீடித்திருக்க முடியாது,'' என்றாள்.

ஞானு:—(மனவருத்தத்துடன்) "இல்லை—அம்மா! அவர் இங்கேயே யிருக்கட்டும். இப்போது என்ன தான் வந்தது? இவ்வளவு காலமு மிருந்தவர்தானே. அப்படியாகத் தற்சமயமு மிருந்தா லென்ன? அவர் இங்கிருப்பதால் எங்களுக்கு வந்த தொந்தரவென்ன. எவ்வளவு புத்திசாலியும் நற்குணமும் வாய்ந்தவர். இங்கிருந்தால் யான் அவரிடம் தமிழையும் கற்கலாமன்றோ?''

தங்க :—சரி குழந்தாய்! சிறிதுகால மிங்குதானிருப்பானென்று மகளிடம் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

சாம்பசிவம், சபாபதிப்பிள்ளை வீட்டாருடன் மிக்க மரியாதையாகவும், ஒழுக்கமாகவும், ஒற்றுமையாகவும், நடந்து வந்தாலும், அவர்கள் வீட்டில் நீடித்து இனிமேலிருப்பது சரியல்லவென்று நினைத்துக் கொண்டான். ஆனால் அவர்கள் செய்த நன்றியையும் அவர்களுடன் கொண்ட சினேகத்தையும் மறப்பதற்கல்ல. தான் வாலிபனாக விருப்பதால் உலகம் தன்னை வித்தியாசமாக ஒரு சமய மெண்

ணக் கூடுமென்ற யோசனை மாத்திரமே அவன் மனதிற் பட்டது. வசதியாய் வருங்காலத்தில் வேறு வீடெடுத்திருப்பதற்கே எண்ணிக்கொண்டான். தான் உத்தியோக மான செய்தியைப் பற்றித் தன் தாயாருக்குக் கடிதமூல மா யறிவித்திருந்தான். தனது தாயாரையும் கூடிய சீக்கிரத்தி லழைப்பதற்கு எண்ணமுள்ளவனு யிருந்தான். ஞானமிர்த மென்பவள் மனதிலே சிறிதேனும் வித்தியாச மான எண்ணங்க ளுடையவளா யில்லாவிட்டாலும், அவனை யறியாதபடி சாம்பசிவம் பேரில் அதிக ஆசை கொண்டாள்.

---

## நாலாம் அத்தியாயம்.

### "குடியின் கேடு."

ஓர் நாள் பள்ளிக்கூடத்தில் எங்கள் சாம்பசிவ உபாத்தியாயர் மாணவர்களுக்குப் பாடங் கற்றுக் கொடுக்கும் பொழுது அற்றை நாள் "குடியின் கேடு" என்ற பாடம் வந்தது. பள்ளிக்கூட மாணவர்களுள் மலாய்க்காரர், சீனர், தமிழர், வங்காளிகள் முதலிய பலசாதிப் பிள்ளைகளுமிருந்தனர். உபாத்தியாயர், ஆங்கிலேயத்திலே அப்பாடத்தை விளங்கப்படுத்திப் பிள்ளைகளுக்கு நல்லறிவு வரட்டுமென்ற காரணத்தினுல் பலவிதமாகப் போதித்தனர். குடியினுல் வருங் கேடுகளைப் பற்றியும், அதனுல் அதிக மதிப்புக் குறைவும் பணச் செலவு மேற்படுமென்றும், ஒவ்வொருவரும் மிகக் கவனமாயிருக்க வேண்டுமென்றும், பிள்ளைகளின் பெற்றோர் யாரேனும் மதுபான மருந்தினுல், புத்தி கூறிப் பிடிவாதமாய் அக்குடியினின்றும் அவர்களை விடுவிப்பதற்கு

முயற்சி யெடுக்கவேண்டுமென்றும் போதித்தார். அவ் வகுப்பில் படித்த மாணவர்களு ளொருவனாகிய சிவப்பிர காசம் என்னும் வாலிபன் மாத்திரம் தலை குனிந்தவனாய் மிகநாணி மனங்குளம்பிப் பெரிய அவஸ்தைக்குள் ளிருந் தான். அவன் ஏன் மனஸ்தாபப்பட்டானென்பதை வாச கர்கள் சுலபமாக வறிந்து கொள்ளலாம். பள்ளிக்கூடம் விட்டது தாமதம், ஏனைய பிள்ளைகளுடன் யாதொன்றும் பேசாமல் சிவப்பிரகாசம் வீடுபோய்ச் சேர்ந்தான். சிறிது நேரஞ் சென்ற பின்னர் சிவப்பிரகாச மென்பவன் தன் தந்தையை யணுகி, "என் அருமைப் பிதாவே! யான் தங்களுக்கு அருமையாக வுதித்த ஒரே யொரு புத்திரன். எனக்குப் பெண் சகோதரமுமில்லை. தற்சமயம் எனக்கு வயது பதினைந்து. யான் இப்போது யூனியர் என்ற வகுப் பில் படிக்கின்றேன். தாங்கள், என்ன கருத்துக்கொண்டு ஆங்கிலேயமும் தமிழும் எனக்குக் கற்பிக்கின்றீர்கள்? யான் தமிழ் மொழியிலும் சிறிது கற்றுவிட்டேன். எனக்கு வீட் டிலே தமிழைக் கற்றுக் கொடுக்கும் எனது குருவாகிய பண்டிதர் கனகமுதலியாரிட மிருந்து அநிக ஞானங்களைப் படித்திருக்கின்றேன். அவர் அதிகமாகப் பஞ்சமா பாதகங் களைப்பற்றிச் சமயம் வாய்ந்த நேரங்களில் எனக்குப் போ திப்பதுண்டு. இதைவிட எமது சாம்பசிவ உபாத்தியாய ரும் உலக ஜீவியத்தில் முக்கியமாய்ப் 'பஞ்சமா பாதகங்களை விலக்கி நடப்பதே சரியான முறை யெனப் போதிப்பார்."

மயில்வாகனம்பிள்ளை.—"என் அருமைப் புதல்வா! நீ இச் சிறுவயதில் நமது தமிழ் மொழியைச் சிறிது வாசிக் கவும், எழுதவும், கேட்கவும், கற்றுக் கொண்டதைப் பற்றி மிகச்சந்தோஷப் படுகின்றேன். இதைவிட நீ ஆங்கிலேய பாஷையிலும் பாண்டித்தியம் பெறத்தக்க வல்லமையுடன் கற்று வருவதைப் பற்றியும் ஆனந்த முறுகின்றேன்.

ஆனால் "என்னை என்ன கருத்துக் கொண்டு ஆங்கிலேயமும் தமிழும் கற்பிக்கின்றீர்கள்," என ஒரு கேள்வியைக் கேட்டாய். எனக்கு அதுவோர் பெரிய அதிசயமாயிருக்கின்றது. ஏனையின் ஒரு நாளேனும் இவ்வித கேள்வியைக் கேட்டிருக்கமாட்டாய்,"

சிவப்பிரகாசம்.—"என் தந்தையே! யான் இவ்வளவு காலமும் கேள்வி கேட்கத்தக்க அறிவுள்ளவனாயிருக்கவில்லை. யாருக் கென்றாலும் படிக்கப் படிக்கத்தானே அறிவு கூடும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

என்னும் திருவள்ளுவர் வாக்குக் கிணங்கச் சிறிது கற்றுக் கொண்டவளவில் சில கேள்விகளைக் கேட்கவே எண்ணம் கொண்டேன்," என்றான்.

மயில்:—சரி, பிள்ளாய்! நீ கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்கலாம். யான் விடை கூறத் தயாரா யிருக்கின்றேன்.

சிவப்:—"என் தந்தையே! யான் கேட்ட முதற் கேள்விக்கு விடையளித்தால் பின்னால் எல்லாவற்றையும் கேட்பேன், என்றான்."

மயில்:—அதென்ன முதற் கேள்வி? ஆங்கிலேயமும் தமிழும் படிப்பிப்பது என்ன கருத்துக் கொண்டோ வென்பதைப் பற்றியா?

சிவப்:—ஆம்—தந்தையே!

மயில்:—"மகனே! இது உமக்குத் தெரியாமலிருப்பதைப் பற்றி மிக விசனப் படுகின்றேன். உலகிலே, மக்களைப் படிப்பிப்பது சகல நன்மைகளுக்குமென்றே நீ யுணர

வேண்டும். கல்வியைக் கற்ருல் அறிவு விசாலிக்கும். கற்ரோர் சபையில் முன்னின்று எதையும் பேசலாம். ஓர் அரசனுக்குத் தன் தேசத்திலேதான் மரியாதை யுண்டு. ஆனால் கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

"மன்னனு மாசறக் கற்ரோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ரோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன் தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்ரோர்க்குச்
சென்ற விட மெல்லாஞ் சிறப்பு."

என்னும் ஔவை பாடலைக் கவனிக்க வில்லையா? இதை விடக் கல்வியால் மோட்சத்தையு மடையலாம். இதற்குப் பிரமாணம் நீதிநெறி விளக்கத்தில் குமரகுருபர சுவாமிகள்,

"அறம் பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்று பாடி யருளி யிருக்கின்றனர். இன்னும் கல்வியால் வரும் நன்மையைப் பற்றிச் செப்பப்புகின் நாட்கள் போதா. இன்னும் திறக்குறளில்

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்னும் பொய்யா மொழிக் கிணங்க ஓர் தந்தையானவன் தன் புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது கல்வியைக் கற்பித்து வைத்து கற்றவர் சபையின் கண்ணே முந்தியிருக்கச் செய்விப்பதே. இதைக் கருதியே உமக்குத் தமிழ்க் கல்வி கற்பிப்பதற்காக ஓர் தமிழ்ப் பண்டிதரைப் பிறிதாக மாதம் இருபத்தைந்து வெள்ளி சம்பளங் கொடுத்து வீட்டில் வந்து கல்வியைக் கற்றுக் கொடுக்கும்படி வைத்திருக்கின்றேன். ஆங்கிலேய பாஷை தற்காலம் அரச பாஷையாயிருப்பதால் அதையுங் கற்று அதிலும் பாண்டித்தியம்

பெற்று நற்கீர்த்தி யடையுமாறே, உமக்கு ஆங்கிலேயமும் கற்பிக்க எத்தனித்தேன். ஆனால் ஆங்கிலேயம் கற்பது உத்தியோகத்திற் கென்று நினைக்க வேண்டாம். சிலர் அரசாங்க உத்தியோகத்திற் காகவென்றே ஆங்கிலேயம் கற்பிக்கின்றனர். உத்தியோகத்திற் கென நினைத்துக் கல்வியைக் கற்றால், மேலான அறிவையடைய முடியாது. அறிவு வளர்ச்சிக் காகவே கல்வியைக் கற்கவேண்டும். பின்னால் என்ன முயற்சியேனும் செய்து ஜீவனம் பண்ணிக் கொள்ளலாம். இவை யெல்லாவற்றையுங் கருதியே யான் எமது தாய் மொழியாகிய இனிய தமிழ்க் கல்வியையும், அரசபாஷையாகிய ஆங்கிலேயக் கல்வியையும், உனக்குக் கற்பிக்க எத்தனித்தேன்," என்று மயில்வாகனம்பிள்ளை தன் மகனுக்குச் சொன்னார்.

சிவப்:—"எனது அருமைத் தந்தையே! யான் சொல்வனவற்றில் தயவு செய்து கோபம் கொள்ளாதீர்கள். எல்லா ஞானங்களையும் போதிக்கும் தாங்கள், ஒழுக்கம் தவறி நடப்பதை நினைக்க வென் மனம் புண்ணாகின்றது. எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்கலாம். யான் இவ்வளவு காலமும் சிறிய பிள்ளையாயிருந்தேன். தற்சமயம் தான் தங்களுடைய நடையைக் கவனிக்க ஏதுவானேன். உலகிலே, தாங்கள் நெறி தவறி ஒழுக்க மில்லாமலும், பலர் இகழத் தக்கதாகவும், தங்கள் சீவியத்தைக் கழிக்கின்றமையால், யான் கல்வியைக் கற்பதினால் வரும் பிரயோசன மென்ன? உலகிலே ஒழுக்க மில்லாம லிருப்பதைப் பார்க்கினும் இறத்தல் மிகவும் நன்றாம். ஒழுக்கம் தவறினால் ஒருவனுடைய குலமும் அழிந்து தாழ்ந்த வருணமாய் விடும். இதனாலன்றோ திருவள்ளுவ நாயனாரும்,

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்."


BASTIAN STUDIO

னைப் பாடி யிருக்கின்றனர். தாங்கள் எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தும் கல்லாதவர்களுக்குச் சமமாயே யெடுக்க வேண்டும். இதற்குப் பிரமாணம், திருக்குறளில்

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்."

என்னும் பாடலைத் தாங்கள் கவனிக்க வில்லையா? ஆனபடியால் யான் கல்வியைக் கற்காமல் சும்மா மூட ஆத்மா வாயிருந்து விடுவதே மிக நலமென நினைக்கின்றேன். தாங்கள் முன் சொன்னபடி

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்னும் பொய்யா மொழிக்கிணங்கத் தந்தை செய்த வுதவிக்கு மகனானவன் தந்தைக்குச் செய்யும் உதவி யென்னவென்றால்,

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."

என்றபடி இவனுடைய கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் கண்டார் இவனைப் பெறுதற்கு இவன்றந்தை என்ன தவம் தான் செய்தானோ என்று சொல்லும் சொல்லை நிகழச் செய்வதே. ஆகவே, என் அருமையான பிதாவே! இவ்வுதவியை யானும் தங்களுக்குச் செய்ய முடியாமலிருக்கின்றது," என்றான்.

மயில்:—அடே, தம்பி! ஒழுக்கம் தவறியா நடக்கின்றேன்? நீ சொல்வதைப் பார்த்தால் பெரிய நூதனமாயிருக்கின்றது. "அதென்ன சொல்லு பார்ப்போம்" என்பதற்குள், தமிழ்ப் பண்டிதர் கனகமுதலியாரும் சிவப்பிரகாசத்துக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்க வழக்கம்

போல் வந்து விட்டார். உடனே மயில்வாகனம்பிள்ளை சிவப்பிரகாசத்தி னிடம் எல்லாவற்றையும் பின்பு கேட்டுக் கொள்வோ மென்று சொல்லி யவனைக் கனகமுதலியாரிடஞ் சென்று பாடங்களை யொப்பிக்குமாறு அனுப்பிவிட்டார். சிவப்பிரகாசம் கனகமுதலியாரிடம் தமிழ்ப்பாடம் ஒப்பிக் கப் போகத் தந்தையாகிய மயில்வாகனம்பிள்ளை, தனியே யோர் அறைக்குட் சென்று, ஓர் சாய் நாற்காலிமீது படுத் துக் கொண்டு பின் வருமாறு யோசிக்கலானார்:—"இன்றை யதினம் என்மகன் நூதனமாகப் பல வார்த்தைகளைப் பேசி னனே. அதன் கருத்துக்கள் எனக்கு நன்றாகப் புலப்பட வில்லை. என்னை உலகம் இழிவாகப் பேசுகின்றார்களாம். அப்படியாக உலகிற்கு யாதொரு தீமையும் செய்யவில்லை யே. ஒருவரைக் கெடுக்க வில்லையே. யானும் என்பாடு மாகத் திரிகின்றேனே. ஒரு சமயம் என் மனைவியை யடித்து ஆய்க்கினைப் படுத்துகிறே னென்றோ? அல்லது என்ன நியாயத்தின் பொருட்டோ தெரியவில்லை. இன்னும் பல சாதியாரும் மரியாதை பண்ணுகின்றார்களே தவிர ஒரு வரேனும் குற்றமாகச் சொல்லவில்லையே. தமிழ் மக்க ளென்ன, சீனவியாபாரிகளென்ன, மலாய்க்காரர்களென்ன, இன்னும் மற்றும் சாதியார்களென்ன, என்னை நீதிஸ்தலத் திற் கண்டால், ஐயா—ஐயா என்பவரும், பிரபு—பிரபு என் பவரும், இன்னும் பல மாதிரியாக மரியாதை யல்லவா பண்ணுகின்றனர்! இவையெல்லா மிப்படியிருக்க உலகம் இழிவாகப் பேச வேண்டிய காரண மென்னவோ யானறி யேன். என்றாலும் என் மகனை இன்று கேட்டு என் சந்தே கத்தைத் தீர்த்து விடுவேன்," என்று சொல்லிக்கொண்டு சாய்நாற்காலியை விட்டெழுந்தார். இதற்கிடையில் பண் டிதர் கனகமுதலியாரும் பாடம் கற்றுக் கொடுத்துவிட்டு வீடு திரும்ப ஆயத்தமாய் நின்றனர். கனகமுதலியார் மயில்

வாகனம்பிள்ளையை நோக்கி, "ஐயா, இன்று தங்கள் மகனை வன் பாடங்களைச் சரிவர ஒப்பிக்கவில்லை. ஏதோ அவனு டைய மனமானது இன்று வியாகுலமாயிருந்திருக்க வேண் டுமென்று நினைத்து, என்ன காரணமென்பதைச் சொல்லும் பொருட்டு கேட்டேன். ஆனால் அதற்கு அவன் மறுமொழி கூறச் சம்மதிக்கவில்லை. எல்லாவற்றையும் தாங்களே விசா ரித்துக்கொள்ளுங்கள்," என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு வீடு போய்விட்டார். பண்டிதர் கனகமுதலியார் வீடு சென்றதும், மயில்வாகனம்பிள்ளையும் மனைவி சொர் ணம்பாளும் புத்திரனாகிய சிவப்பிரகாசமும் இராப் போச னத்தை முடித்தனர். அதன் பின்னர், மயில்வாகனம் பிள்ளை தன் மகனை யழைத்துக் கொண்டுபோய் வீட்டுத் திண்ணையி லுட்காரவைத்து, "மகனே! இன்று நீ பாடமும் சரிவர ஒப்பிக்கவில்லை; போஜனமு முண்ணவில்லை. உனது மனவியாகுலமென்ன," என்று பணிவாய்க் கேட்டார்.

சிவப்:—"எனது அன்பான தந்தையே! யான் ஒன் றையும் பற்றி வியாகுலமடையவில்லை. தங்களைப்பற்றி நினைக்க நினைக்க என் மனம் பதறுகின்றது. நாவுழல்கின் றது. படிக்கவும் மனத்தைக் காணேன். தெரு வீதிகளிற் போய் வரவும் வெட்கமா யிருக்கின்றது. பள்ளிக் கூடத் திற்குப் போய் எனது சாம்பசிவ உபாத்தியாயருக்கு முன் பாக முழிக்கவும் வெட்கமாயிருக்கின்றது. ஏனைய மாண வர்களை யான் காணும் பொழுது தலையை மறுபக்கமாகத் திருப்ப வருகின்றது. உலகிலே புத்திரரைப் பெறுவதற்கு எத்தனையோ தவங்களுஞ் செய்து புத்திரபாக்கிய மில்லாது தவிக்கின்றனர். எத்தனையோ பேர் சந்ததிக் காக்குதல் பிள்ளை யில்லை யென்று மனங்கலங்கி வாடுகின்றனர். மழ லைச்சொற் கேளாத பாவிகளானோ மெனத் தாங்களே தங் களைப் பேசித் திட்டுகின்றனர்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

என்று பெருநாவலர் கூறிய வண்ணம், தாங்கள் செய்த தவப்பயனால், அருமையாய் யான் வந்து தங்களுக்குப் புத்திரனாக வுதித்தேன். புத்திரனாக வுதித்தும் தங்களுடைய கூடா வொழுக்கத்தால், யான் நற்கீர்த்தி யடையவும், சந்தோஷமான வாழ்வைப் பெறவும், கொடுத்து வைக்கவில்லை. என்னைப் போலப் பாவி யார்தான் இவ்வுலகி லிருப்பார்கள்," என்று சொல்லிக் கொண்டே கண்களினின்று நீரானது ஆறாகப் பெருக விம்மி விம்மி யழுதான்.

மயில்:—மகனைக் கட்டி யணைத்து, "என்னருமைப் புதல்வா! நீ என்னால் கவலை கொள்ளவேண்டிய அவசரமொன்றையுங் காணேன். யான் நெறிதவறி நடக்கிறேனென்று சொன்னாய். அதைப்பற்றித்தான் யானும் நீ கனக முதலியாரிடம் பாடம் ஒப்பிக்கப் போகச் சதா யோசனையிலாழ்ந்திருந்தேன். ஆனால் எல்லா விபரங்களையும் யானறியும்படி சொன்னால் உன் வியாகுலத்தை இந்தட்சணமே தீர்த்து வைப்பேன்," என்றார்.

சிவப்:—(மனதிற்குள் சிறிது சந்தோஷமுள்ளவனாய்) "என் பிதாவே! யான் எல்லாம் விபரமாகச் சொன்னால், தாங்கள் தங்கள் தீயொழுக்கத்தினின்றும் நீங்கிவிடுவீர்களா?"

மயில்:—மகனே! அப்படி நடப்பேனாயின் யான் தடையின்றி நீங்கிவிடுவேன்.

சிவப்:—"எனது தந்தையே! தங்களுடைய ஒழுக்கயீனங்களைச் சொல்வதற்கு நாட்கள் தன்னும் போதா. ஆனபடியால், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமோ அல்லது முழு விபரத்தையு மறிய விரும்புகின்றீர்களா?"

மயில்:—ஏதோ காரியம் பெலத்துத்தா னிருக்க வேண்டு மென்று மனதிற்குள் நினைத்து எல்லாவற்றையும் விபரமாகவே சொல்ல வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தார்.

சிவப்:—"என் அருமையான பிதாவே! தாங்கள் ஓர் நற்குலத்திலுதித்து அடக்கமான கல்வியைக் கற்றுத் தற்சமயம் நீதிஸ்தலத்தில், பெரிய உத்தியோகத்தி லமர்ந்திருக்கின்றீர்கள். அப்படிப் பெருமையான உத்தியோகத்திலிருந்து ஓர் வித பெருமையை யடைந்திருப்பினும், அதற்கு மாறுகப் பஞ்சமா பாதகங்களிற் கொடுங் கூற்றுகிய "கள்" என்னும் கொடிய பாதகத்தைச் செய்கின்றபடியால், ஓர் பெரிய இழிவையு மடைந்திருக்கின்றீர்கள். இந்த இழிவானது தங்கள் மேலுள்ள தாயினும் சராசரியாய் என்னிலும் என் தாயாரிலும் பங்கு பெறக் கூடியதாயிருக்கின்றது. தாங்கள் சம்பாதிக்கும் சம்பளத்தில் மாச வீதம் சரி யரைவாசியைக் குடிக்குச் செலவழித்து மெய்யறியாமை கொள்கின்றீர்கள்.

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்."—(குறள்)

அடுத்த அறைக்குள் ளிருக்கும் குடித்து விட்டெறிந்த போத்தல்களைக் கணக்கிடுவதற்குக் கணித சாஸ்திரத்தில் தீர்ந்த வல்லவன் வேண்டும். முழுப் போத்தல்கள் குறையாமல் எந்த நாளும் அலுமாரியில் அடுக்கி யிருப்பதைப் பார்த்தால் ஓர் பெரிய குடிவகைக் கடைக்குச் சமானமாயிருக்கின்றது. தாங்கள் குடித்துவிட்டு வீட்டிற் செய்யும் திருவிளையாடல்களை ஆதிசேடனாலும் சொல்ல முடியாது. சில சமயங்களில், வீடு திரும்பி வரும் பொழுது, பிரசண்ட மாருதம் மோதிக் கொண்டு வருவதுபோல வீட்டிற் கதவுகளைத் தள்ளி மோதிக் கொண்டு உள்நுழைந்ததும், "அடே-நாயே! சீ—சீ—கழுதை" என்று கொஞ்சமும் தங்கள் ஆசை

மனையாளென்றும் மதியாமல் என் தாயாரை, என்ன இழிவான வார்த்தைகளிருக்கின்றனவோ அவ்வார்த்தைகளால் ஏதிச் சாப்பாட்டில் அவசரமில்லாதபடி குற்றங்குறை சொல்லிச் சட்டி பானைகளைத் தவிடு பொடியாக்கிக் கைகளாலும் கால்களாலும் எனது தாயாரை யடித்துதைத்து, யான் பிடித்து விலக்க வந்தால், என் தலையிற் குட்டியும், கன்னத்திலறைந்தும் விடுகின்றீர்கள். அப்படித் தாங்கள் அடித்துதைக்குங் காலங்களில் "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்" என்னும் வாக்கை நினைப்புற்று, என் தாயார் மௌன மாயிருந்து விடுகின்றாள்.

"தூற்றும் பெண்டீர் கூற்றெனத்தகும்"

என்னும் ஔவை வாக்கை நினைப்புற்றுத் தங்களைத் தூற்றித் திரிகின்றாளா? எமது குறைகளைத் தனது தாய் தந்தையரிடம் போய்ச் சொல்லி மூட்டுகின்றாளா? தங்கள் பொருளை வீணில் அழிக்கின்றாளா? தங்களுக்குச் செய்யும் பணிவிடைகளிலேதும் குறைய விட்டாளா? தன் வீட்டில் வேலைகளைச் செய்யாமல் உல்லாசமாய்க் கட்டில், சாய்நாற்காலிகளிற் படுத்திருந்துகொண்டு கெட்ட நாவல்களை வாசித்து வீண்பொழுது போக்குகின்றாளா? என்ன குற்றந்தான் செய்கின்றாள். சில சமயங்களிற் சாப்பிடும் பொழுது, "இந்தக் கறிக்குப்பில்லை, அந்தக் குழம்புக்குப் புளியில்லை, இதேன் இப்படி, அதேன் அப்படி, நாளைக்குத் தயிர்க்குழம்பு வைக்க வேண்டும், பாற்கறியும் பாயசமும் வேண்டும், என்று சொன்னபிரகாரம் வைத்தால், அடீ! மட்டி! கழுதை! இவற்றை யார் வைக்கச் சொன்னது, என்று சுழற்றி யெறிந்து விடுவது மல்லாமல், எனது தாயாரைப் படுத்துகிற ஆய்க்கினையைச் சொல்லவும் வேண்டுமா? தங்களுக்கேற்ப என்னவிதமாய் நடந்தாலும், ஈற்றில் அடியும் உதையும் பேச்சும், ஏச்சும், பொல்லாங்கும் கேட்பது தான்

மிச்சம். இவ்வளவு பொறுமையுடையவளும் கணவனுக்குப் பயந்து நடப்பவளும், இல்லற விஷயங்களி லொருவித குற்றங் குறையின்றி நடப்பவளும், இன்னும் பெண்களுக்குரிய நற்குணங்களும் பொருந்திய எனது தாயாராகிய கற்புக்கரசியைத் தாங்களடையப் பெற்றதற்கு என்ன தவம் தான் செய்திருக்க வேண்டும். அப்படியாக அடையப்பெற்றும், பாவிக்கத் தெரியாமல், உலகம் பழிக்க வாழ்கின்றீர்கள். எனக்கு முன்பாகவே இவ்வளவு ஆக்கினைகளையுமடையும் என் தாயார், நான் சிறுவயதாயிருந்த காலத்தில் என்ன கஷ்டம்தா னடைந்தாளோ,'' என்று சொல்லித் தேம்பித் தேம்பி யழுதான். அழுகையை யொருவிதமாக ஆற்றிக்கொண்டு பின்னும் சிவப்பிரகாசம் சொல்லுகின்றான் :—''தாங்கள் ஒருநாள் என்னையும் கூட்டிக்கொண்டு ஓர் சிநேகிதன் வீடு சென்று அங்கே சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது அவ்வீட்டுக்காரர்கள் ஏதேன் நினைப்பார்களே யென்று சிறிதுஞ் சிந்தியாமல் தங்கள் சட்டைப் பைக்குள் வாங்கிக் கொண்டுவந்த உவிஸ்கிப் போத்தலைத் திறந்து ஒரு வெட்கமுமில்லாமல் மடமடவென்று அருந்தினீர்கள். தங்களுடைய பெருமையல்லவா பெருமை? இன்னோர் முறை எனக்கு வயது பதின்மூன்றாயிருக்கும் பொழுது, என்னையும் கூட்டிக்கொண்டு ஒரு பிரிய நண்பர் வீடு அடைந்தீர்கள். காத்திராப் பிரகாரமாக அவ்வீடும் குடிகாரன் வீடாகவே எனக்குத் தோன்றிற்று. அச்சமயம் தங்களுக்கிருந்த சந்தோஷமென்றால் ஓர் அளவு கணக்கில்லை. யான் சிறிது கவனித்ததில் அவ்வீட்டிலும் எனது வீட்டில் நடக்கும் திரு விளையாடல்களைப் போலத்தான் தெரிந்தது. இதை யெப்படி யூகித்தேனெனில், அங்கே சாப்பாட்டறைக்குள் ஓர் அலுமாரியில், சில உவிஸ்கிப் போத்தல்களும், பிறண்டிப் போத்தல்களும், அடுக்கியிருந்

தன. இதைவிட அவ்வீட்டிலிருந்த அம்மாளுடைய முகத்திலும் செழிப்பில்லா திருந்தமையால், எனது தாயாரைப் போலவே அந்த அம்மாளும் கஷ்டப்படுவாளென்று நினைத்துத் துக்கப்பட்டேன். அந்த அம்மாளும் ஓர் கற்புக்கரசியாகவே தோற்றப்பட்டாள். பின்பு சிறிது நேரஞ் செல்லத் தாங்களும் தங்கள் சினேகிதனுமாக என்னையு மழைத்துக் கொண்டு சாப்பாட்டு மேசைக்குச் சென்றிருந்தீர்கள். அங்கு வேறு சிலருமிருந்தனர். ஆனால் அவர்கள் மதுபானம் பாவிக்கின்றவர்க ளல்லர். இப்படிப் பலருமிருக்கத் தக்கதாக, நீங்களிருவரும் மாறி மாறிக் கிண்ணங்களில், உவிஸ்கியை யூற்றி மட மட வென்று குடித்தும், ஒருவருடைய கோப்பைக்குள் ளிருந்ததை மற்றவர் எச்சிற்கையாற் பொறுக்கி யெடுத்துண்டும், இன்னும் அவசரமில்லாத வார்த்தைகளைப் பேசியும், அத்துடன் போதாமல் எனக்குந் தன்னும் தங்களுடைய கெட்ட பழக்கத்தைப் பழக்குமாறு உவிஸ்கியுடனிருந்த கிண்ணத்தை "குடியடா" என்று நீட்டினீர்கள். எனக்கு அச்சமயம் வந்த ஆத்திரமோ கொஞ்சமல்ல. ஆனால் மௌனமாயிருந்து விட்டேன். அல்லது தங்களுடைய சினேகிதக் குடியர் தன் வீட்டிற் பல ஆட்களு மிருக்கத்தக்கதாக இவ்வித கெட்ட பழக்கத்தைச் செய்யக்கூடாதென நினைத்தாரா? இப்படிப்பட்ட வான்மாக்களைப் பிரமன் என்ன எண்ணங் கொண்டுதான் படைத்தானோ யானறியேன். தங்களுக்குக் குடிகாரன் எவனோ அவன் அண்ணை அல்லது மச்சான். ஒரு நாள் குடி மயக்கத்தால் பெற்ற மகனென்றும் தெரியாமல் என்னை "அடே அண்ணே!" என்று கூப்பிட்ட ஞாபகமிருக்கின்றது. இவைகளெல்லாம் வீட்டிலே செய்யும் அக்கிரமங்கள். ஆனால், தாங்கள் வெளியிலே செய்யும் தீச்செயல்களையும் யான் கேள்விப்பட்டவளவிலும், கண்ணாரக் கண்டவளவி

னும் சொல்லுகின்றேன் கேளுங்கள்; யான் சொல்லு மெவற்றி லேனும் கோபம் கொள்ளக்கூடாது. ஓர் மகனு க்குத் தந்தையானவன் புத்தி சொல்லுவதற்குப் பதிலாக மகனானவன் தந்தைக்குப் புத்தி சொல்வது உலக இயற் கைக்கு விரோதமானதும் மிக ஆச்சரியப்படத் தக்க துமே. இது கலியின் கொடுமையோ யானறியேன். என் அருமையான பிதாவே! தாங்கள் வீட்டில் போத்தல் போத்தல்களாகக் கொண்டுவந்தடுக்கி வைத்துக் குடிப்பது ஒரு பக்கமிருக்கத் தாங்கள் நாள் வீதம் வேலைச் சாலையிலி ருந்து சாப்பாட்டுக்கு வரும் பொழுதென்ன, சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும் பொழுதென்ன, குடிவகைக் கடைக் குச் சென்று அங்கேயும் காசைச் செலவழித்துக் குடிக்கின் றீர்கள். சிலசமயங்களில், கெட்ட சிநேகிதர்களுடன் கூடிக் குலாவிக் குடித்து வெறித்துத் தெரு வீதிகளிற் கிடந்து பலரு மிகழத் தக்கதாக வீடுதன்னும் திரும்பி வரு கின்றீர்களில்லை. இதைவிட வெட்கம் உலகத்தில் வேறு தான் என்ன! ஓர் உத்தியோகத்தனு யிருந்தும் மரியாதை யாக நடக்கத் தெரியாதா? தங்களுக்குச் சிறிதேனும் வெட்கமில்லையா? உலகநடையை யறியாமலிருப்பது பெ ருந் துக்கப்படத்தக்கதே.

> "குலந்தவங் கல்விகுடிமை மூப்பைந்தும்
> விலங்காம லெய்தியக் கண்ணு—நலஞ்சான்ற
> மையறு தொல் சீருலக மறியாமை
> நெய்யிலாப் பாற் சோற்றி னேர்."

என்னும் நாலடிச் செய்யுளைத் தன்னும் தாங்கள் கவனிக்க வில்லையா? இல்லாத ஞானமெல்லாம் ஓதுவீர்கள்; ஈற்றில் பார்த்தால் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவி லாய் முடிகின்றது. தாங்கள் மதுபானமருந்தாமல், சுய அறிவுடனிருக்குங் காலத்தில், இன்னொருவன், மதுபான

மருந்தித் தெருவண்டையிற் றடுமாறி விழுந்துருண்டு, எதிர்ப்பட்டவர்களுடன் சண்டையிட்டு, ஊர்க்காவற்காரரால் கைவிலங் கிடப்பட்டுப் பிடித்திழுக்கப்பட்டுப் பின் மேலதிகாரிகளால் விளங்கப்பட்டு யாவராலும் இகழப் படுவதைப் பார்த்திருந்தும், தங்களுக்கும் இன்றோ ரன்ன விதமாய் நிகழுமென்று கருதக்கூடாதா ?

" கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு."—(குறள்)

ஒரு சமயம் உத்தியோக விஷயமாய்த் தங்களுக்கு மதிப்பிருக்கின்றதெனத் தாங்கள் எண்ணக்கூடும். அப்படியாகத் தன்னுமில்லை யென்றே யான் எண்ண வேண்டியிருக்கின்றது. ஏனெனில் பெரும்பான்மையாகத் தங்கள் உத்தியோகசாலைக்கு வருபவர்கள், தங்கள் விஷயம் முடிப்பதற்காக, ஐயா! ஐயா! என்று மிகக் கஷ்டமான வார்த்தைகளைத் தங்களுக் கிசைவாகச் சொல்லித் தம் காரியம் முடித்த பின்னர், "போகின்றான் குடிகாரப்பயல்," என்று சொல்லிக்கொண்டு போய்விடுகின்றார்கள். யார் கதைத்தாலும் தங்கள் குடியைப் பற்றித்தான்; குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போல, எங்கள் குலத்திற்குச் சீர் கேடு விளைவிக்கவா பிறந்தீர்கள்? "இக்குடியை யிம் மனுஷன் விடக் கூடுமாயின், அப்பொழுதுதான் இவன் கீர்த்தியடைவான்," எனப் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். தாங்கள் மதுபான மருந்தாமலுக்குப் போய் ஓர் சபையில் நியாயத்தை நீதியாகப் பேசினாலும், தங்கள் பேச்சைக் கூட்டில்லை யென்றே தள்ளி விடுகின்றனர். இதைப் பலமுறையும் யானும் கவனித்திருக்கின்றேன். எவ்வித நற்கீர்த்திக்கும் தடையாயிருப்பது இப்பாழ் பட்டகுடியே. பெரியோர்களால் மதிக்கப்படமாட்டாதவர்களே மதுபானத்தை யருந்துவர்.

"உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்."

என்னும் தெய்வப் புலவரின் பொய்யா மொழிகளை யுணரவில்லையா? ஆனதுபற்றி எனது அருமைத் தந்தையே! தாங்கள் இம்மது பானத்தை யருந்தி வருவதால் அதிக இழிவை யடைந்து வருகின்றீர்கள். யான் எவ்வித ஞானங்களையும் கற்றுணர்ந்திருந்தாலும், ஓர் குடிகாரனுடைய பிள்ளைதானே யென்று கற்றவர் சபையில் என் வார்த்தைகளை யங்கீகரிக்க மாட்டார்கள். அனேகர் என்னைக் குடிகாரனுடைய பிள்ளையென்று கேலி பண்ணுவதை நினைத்தால், எனக்குப் பெரிய வெட்கமாயிருக்கின்றது. காரியம் உண்மையாயிருக்க அப்படிப் பேசும் மனுஷரையும் யான் குற்றம் சொல்ல வழியில்லை. என்னுடன் வகுப்பிற் படிக்கும் மாணவர்களும் என்னை நாள் வீதம் கேலி பண்ணுகின்றனர். யான் அவர்களுடன் கூடிக் குலாவிப் பேசவும், விளையாடவும், ஓர் பெரிய கூச்சமாயிருக்கின்றது. யான் கல்வியைக் கற்று நற்கீர்த்தியடையத் தங்களுக்கு விருப்பமாயின், இந்தக் குடியை யின்று தொடக்கமாக விட்டுவிடுங்கள். எனது தாயாரும் இனிமேலாகுதல் சந்தோஷமாயிருக்கட்டும். குடியினால் வருங் கெடுதிகளுக் காளாக வேண்டாம். அந்தோ! இக்கொடிய மதுபானங்கள், குடிப்பவர்களை, நாள் ஆக—ஆக, நாடி நரம்புகளை யெல்லாம் தளர்த்திச் சீரண சக்தியைக் குறைத்துக் கயரோகம், இரத்தக் கழிச்சல், குடலெரிச்சல், நீரிழிவு, கண்ணெரிச்சல், கை கால் நடுக்கம், ஞாபகக் குறைவு, வாயுளறல், நித்திரையின்மை, காதுகள் மந்தம், முதலிய பலவித கெட்ட நோய்களுக் குள்ளாக்கி யந்த மருந்துகள் கொடுத்தாலும் உடலில் ஒட்டச் செய்யாமல், பராபரிப்பு, பத்தியம் முதலியவைகள் பாங்காக விருக்க மனங் கொடுக்காதபடி சற்றில் பாழ்படு

பாயுமன்று அழுந்தியிருக்கச் செய்துவிடுமன்றோ? மதுபானத்தைப் பார்க்கினும் விஷபானம் மிக நல்லது. விஷம், குடித்தவர்களை வெகு சீக்கிரத்திற் கொன்று உடலுக்குமுயிருக்கும் சம்பந்தமில்லாமற் செய்துவிடும். மதுபானமோ உயிரை வைத்துக்கொண்டு உடலை வாட்டிச் சித்திரவதை செய்யும். எவ்விதத்திலும் மனிதப் பிறப்பிற்கு மகா துன்பத்தைக் கொடுப்பது கள், உவிஸ்கி, விறண்டி முதலிய கொடிய மதுபானங்களே. உலகில் ப்ராகுதல் காசைக் கொடுத்துக் குத்துமாடு வாங்குவார்களோ? தாங்கள் எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தும் அவற்றைக் கல்லாதவரென்றே யான் உணரவேண்டியிருக்கின்றது. ஏனெனில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

என்று பெருநாவலர் கூறிய வண்ணம் நூல்களைப் பழுதறக் கற்றால் அதற்குத்தக அவை சொல்லுகின்ற நெறிக் கண்ணே நிற்கவேண்டும். ஆனால், தாங்கள் அப்படியாக நெறியின் கண்ணே நிற்கவில்லை. ஏனெனின், நெறிதவறி நடப்பதற்குத் துணையாக மதுபானத்தைக் கைப்பற்றிக் கொண்டீர்கள். இன்னும் யான் திருமந்திரத்திலுள்ள ஓர் பாடலைத் தங்களுக்குக் காட்ட விரும்புகின்றேன்.

"உள்ளுண்மை யோரா ருணரார் பசுபாசம்
வள்ளன்மை நாத னருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணு மாந்தர் கருத்தறி யாரே."

இப்பாடலால் குடியர்களின் தன்மையைத் தாங்களறிந்து கொள்ளலாம். தாங்கள் படித்த ஞானங்களெல்லாமெங்கே மழுங்கினவோ யானறியேன். இனிமேல், இதற்கு மேலாக இன்னுஞ் சொல்ல என்னறிவு உயரவில்லை. ஆனதுபற்றி, இன்று தொடக்கமாகவே இச்சனியனைத் தொ

லைத்து விடுங்கள். அல்லாவிடில் யான் கல்வி கற்கமாட்டேன். குடிகாரன் பிள்ளையென்று பேர் கேட்பதிலும் பார்க்கத் தூங்கியிறந்து விடுவதே மிக்க நலம். அங்ஙனம் யானிறப்பதற்குக் கூடிய சீக்கிரத்தில் வழிதேடுவேன்,'' என்று கண்ணீர் தாரை தாரையாகப் பாய்ந்து கொண்டிருக்கச் சிவப்பிரகாசம் தன் தந்தையாகிய மயில்வாகனம் பிள்ளைக்குச் சொன்னான்.

மயில்:—தனக்குள் யோசிக்கின்றார்:—''காரியம் பெலத்துக் கொண்டது. எனது மகனோ அதிக ஞானமடைந்திருக்கின்றான். யான் அவனைச் சிறுபிள்ளை யென்று கூறுவதில் இனிமேற் பிரயோசனமில்லை,'' என்று மனத்திடங் கொண்டு மகனைக் கிட்ட வழைத்து, ''கற்பாகிய உடையையுடுத்து, அன்பாகிய மலரைக் கொண்டையிற் சொருகி, நாணமாகிய சந்தனத்தை யுடம்பிலே பூசி, நற்குண நற்செய்கையுமாகிய ஆபரணங்களைப் பூண்டொழுகும், எனது அன்பிற் கிசைந்த நாயகியின் வயிற்றிலே, யான் செய்த தவப்பயனால் வந்துதித்த அருந்தமிழ்ப் புதல்வா! ''சிவப்பிரகாசம்'' என்னும் பெயர் உனக்கே தகும், என்று அவனைக் கட்டி யணைத்து முத்தமிட்டு, என்மகனே! அஞ்ஞானமாகிய வெங்காரிருளை, மெஞ்ஞானமாகிய உன் போதனையாலகற்றி, இச்சிறு வயதிலேயே யெனக்குப் போதித்ததை நினைக்க நினைக்க என்னகமானது மீளா வானந்தத்தை யடைகின்றது. நீ நன்னிலைக்கு வருவதற்கு யான் தடையாயிருக்க மாட்டேன். நீ இன்னும் சகல ஞானங்களையுங் கற்றுணர்ந்து உலகிலே நற்கீர்த்தி யடையக் கடவாய்,'' என்று ஆசிர்வதித்து, அவனை யனுப்பிவிட்டு வீட்டிற்குள் நுழைந்து, அலுமாரியி லடுக்கியிருந்த உவிஸ்கிப் போத்தல்க ளெல்லாவற்றையு மெடுத்துடைத்து, அன்று தொடக்கமாகவே நஞ்சினுங் கொடியதாகிய குடியை நிறுத்தி

விட்டார். மயில்வாகனம்பிள்ளையின் மனைவியாகிய சொர்ணம்பாள், தான் தன் கணவனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லியுங் கேளாது தன் மகனால் தன் பர்த்தா குடியை விட்டதை நினைத்து மிகக் களிப்படைந்து தன் புத்திர சிகாமணியைக் கட்டியணைத்து முத்தமிட்டு அவனை ஆசிர்வதித்தாள். சிவப்பிரகாசமும், மிகச் சந்தோஷமாக, முன்னர் போற் கூச்சமில்லாது பள்ளிக்கூடத்தில் கல்விகற்று வந்தான்.

---

## ஐந்தாம் அத்தியாயம்.

"தீயார் தேட்டைத் தீயார் கொள்வர்."

சென்ற இரண்டாம் அத்தியாயத்தில், கனகேந்திரம்பிள்ளையின் குமாரனாகிய ஆனந்தராசா, உயர்தரக் கல்வி கற்பதற்குச் சென்னைச் சர்வகலாசாலைக்கு விடப்பட்டிருந்தானென்றும், அவர் இளைய குமாரத்தி அன்னமலர், ஓர் விடுதிப் பெண்பாடசாலைக்கு, ஆங்கிலம் கற்பதற்கு அனுப்பப்பட்டிருந்தாளென்றும், இவற்றையெல்லாம் கவனித்த அம்பிகையின் புத்திரன் சாம்பசிவம் தன்னையவர்கள் கவனிக்கவில்லையென்று தன் தாயினிடம் விடை பெற்றுக்கொண்டு சிங்கப்பூருக்குச் சென்றிருந்தானென்றும் சொல்லியிருந்தோம். சென்னைச் சர்வ கலாசாலையில், கனகேந்திரம்பிள்ளையின் குமாரன் ஆனந்தராசா கல்வி கற்று வரும் விதத்தைக் கூற முன்னர், கனகேந்திரம்பிள்ளையின் குணதிசயங்களைச் சிறிதுரைப்போம். கனகேந்திரம்பிள்ளைக்கு அனேக காணி பூமிகளும் வயல் தோட்டங்களுமிருந்தன. எல்லாவற்றையும் விலைமதிக்கப் பெறின் ஐம்பதினாயிரம்

ரூபாய்க்கு மேலே யென்றே சொல்லலாம். இவ்வளவு பொருளையும் கடவுள் அனுக்கிரகத்தால் கிடைக்கப் பெற்றே னென்பதைச் சிறிதுஞ் சிந்தியாது, கனகேந்திரம்பிள்ளை மிக உலோபியாகவே யிருந்தார். அவருக்குத் தருமமென்னுஞ் சொல் என்னவென்பது தெரியாது. "அறஞ்செய விரும்பு" என்னும் பழமொழியை நல்லாயறிந்திருந்தும், அதனது சரியான கருத்தை யுணர்ந்திலர். யாராகுதல் பிச்சைக்கு வந்தால் ஒரு பிடி யன்னம் தன்னும் கொடாமல் நாயை யேவித் துரத்திவிடுவார். யாராகுதல், கோவில், கேணி, கிணறு, குளம் முதலிய திருப்பணி வேலைகள் செய்வதற்குப் பொருள் சேகரிக்க வந்தால், "ஐயா, யான் படும்பாடு உமக்குத் தெரியுமோ? கோவிலாவது குளமாவது, "தன்னைக் கண்டு தானம் வழங்கு" என்னும் பழமொழியைக் கேட்கவில்லையா? பையனுக்குப் பள்ளிக்கூடத்திற்குப் பணமனுப்பவேண்டும், பிள்ளையென்ன, குட்டியென்ன, வயல் தோட்டங்களுக்கு முதல் விட்டுப் பயிர் செய்வதற்கே வழியில்லாமல், யாரிடமாகுதல் கடன் வாங்கவேண்டுமென்றும், இன்னும் இவ்வித சங்கடங்க ளுடனிருக்கின்றேன். இப்படியான இடைஞ்சல்களுடன் யானிருக்கும்பொழுது உங்களுக்கு எப்படித் தர்மம் செய்யமுடியும்?" என்று சொல்லி விடுவார். யாருக்கும் இவ்விதமாகவே சொல்லி விடுவது இவரது வழக்கம்.

"வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
றாழாதறஞ் செய்ம்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மே லுறநின்றான் றிருக்கேதார மெனீரே." —(தேவாரம்.)

என்னும் பாடலைச் சிறிதேனுஞ் சிந்தியாது தனக்குச் சாவு இல்லை யென்றே எண்ணியிருந்தார். இவருக்கு வந்த மனைவியும் சாதிக்கேற்ற மூடி போலவே யிருந்தாள். இவர் தரு

மம் செய்யாவிடினும், "சுற்றத்திற்கழகு சூழ விருத்தல்" என்றபடி, தன் இனத்தாரைக் கவனித்தாரா? தன் சகோதரி அம்பிகையை நடத்தின மாதிரியில் எவ்வித குணங்களமைந்திருந்தாரென்பது யாவருமறியக் கிடக்கின்றது. ஒரு நாளாகுதல் நல்ல சோறு கறி தின்றிருக்கமாட்டார். குறிக்கப்பட்ட நேரத்திற் றன் போசனத்தை யருந்தமாட்டார். வெளியூருக்கு அலுவலாகப் போக நேர்ந்தால் காசு செலவழிந்து விடுமென்றஞ்சி வண்டி பிடிக்கமாட்டார். கால் நடையாய்ப் போய்த் தன் அலுவலை முடித்துக் கொண்டு பின்னும் இடையிற் பசிக்க நேர்ந்தாலும் வாங்கிப் புசியாமல் திரும்பி வீடு வந்து சேர்ந்து விடுவார். இன்னும் இவருடைய லோப குணத்தை விரிக்கிற் பெருகு மென்றஞ்சி மிகச் சுருக்கி விட்டோம். ஆனால் இங்கே "தர்மம்" என்பதைப் பற்றிச் சிறிது காட்ட விரும்புகின்றோம்.

தர்மம், அறம் என்பன ஒரு பொருட் சொற்கள். சாதாரணமாகப் பிறருக்குப் பொருளை வாரியிறைப்பதே தர்மமெனப் பெரும்பாலாருடைய கொள்கை போலத் தெரிகின்றது. "அறம்" என்பதற்குச் சரியான பொருள் கடமை யென்பதே. அதாவது, நாம் இம்மண்ணிற் பிறந்து இறக்குமளவும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடிப்பதேயாம். நாம் வைத்திருக்கும் பொருளெல்லாம் எம்பெருமானாகிய கடவுளாற் கொடுக்கப் பட்டதன்றோ? நமக்கும், பிறர்க்கும், ஆன்ம சுகத்தின் பொருட்டும் பொருளை யுபயோகிக்க வேண்டுமென்பதே கடவுளுடைய கருத்து. இனிமேல் கடமை செய்வதிலும், முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய விஷயமொன்றுளது. அது என்னவெனில், எவ்வெக்காலங்களில் எவ்வெவர்க்கு எவ்வெக் கடமைகள் செய்ய வேண்டியிருக்கின்றனவோ அவ்வக் காலங்களில் அவ்வவர்க்கு அவ்வக் கடமைகளைச் செய்து

முடிப்பதே. இப்பிறவியில், கடவுளுடைய விதிக்கு மாறாக நடந்து கொள்வோமானால், அவராற் றண்டிக்கப்பட்டு மீளா நரகத்திற் காளாகுவோ மென்பது திண்ணம். சிலர் தங்களாலியன்ற மட்டும் பொருளைச் சம்பாதித்துத் தாமே யதை யனுபவியாதும், பிறர்க்குக் கொடாமலும், பந்துக்களுக்குக் கொடுத்துதவாமலும், பணத்தைப் பொத்தி வைத்திருக்கின்றனர். சிலர், மக்கட்பேறில்லாதிருந்தும், தேடிய பொருளை யெல்லாம் சிறிதேனும் தருமம் செய்யாது கட்டி வைத்து விட்டு, உயிர் விடுகின்றனர். இவர்களுக்குப் பின், இவர்களுடைய சுற்றத்தார் உமக்கு எனக்கு என்று குத்துமல்லுப்பட்டு, ஈற்றில் ஒருவருக்கு மில்லாது முக்காலே மூன்று வீசமும் தாகர்மாருக்கும், நியாயவாதிகளுக்கும், அரசாட்சியாருக்கும் செலவாய் விடுகின்றன. கொஞ்சமேனும் தருமம் செய்ய விருப்பமில்லாத பாவிகள் பெருமைக்கும் புகழுக்கும் விவாக முதலிய சடங்குகளில் பெருந்தொகையான பணத்தைப் பாழாக்குகின்றனர். சிலர், உண்பதும், உடுப்பதும், ஆபரணம் தரித்தலும், தம் சொந்தப் பெண்டீர்களைவிட்டு விலைமாதர்களைப் புணர்வதும், குடித்து வெறிப்பதும், கூத்துப்பார்ப்பதும், சூதாடுவதும், இன்னும் இப்படிப் பட்டவைகளே மனிதப் பிறப்பிற்கு மிக மேலான தென்றெண்ணிக் காசெல்லாவற்றையும் வீணிலழித்துவிடுகின்றனர். சிலர், பசிதாகத்தினால் களைத்துப் போய் வரும் ஏழைகளுக்கு ஒரு பிடியன்னங் கொடாது, தம் குழந்தைகட்டும் தம் கெட்ட பழக்கத்தைக் கற்பிக்குமாறு, வீட்டில் வளர்க்கும் நாய்களை சூ—சூய்—என்று அவ்வேழைகள் மீது பாயும் பொருட்டுச் சைகை காட்டிவிட்டுப் பூரணமாகச் செல்வ மடைந்திருக்குஞ் சினேகிதர்களை யழைப்பித்து, ஆடு கோழி முதலிய அற்ப பிராணிகளை ஜீவகாருண்யமில்லாமல் வெட்டுவித்தும் உவிஸ்கி,

விறண்டி, வீர் முதலிய குடி வகைகளை வாங்கியும் பெரிய விருந்திடுகின்றனர். சிலர், மாதா பிதா முதலிய பந்துக்கள் பசியினால் வருந்தித் துன்பப்படத் தம் பெண்டீர்கட்கு நல்ல கும்பகோணப் பட்டுச் சேலையும், பிள்ளைகட்குக் காஷ்மீரன் சால்வையு மெடுத்துடுத்தியும், அறுவகை ருசியுடன் உண்டு களிப்புற்றிருக்கின்றனர். சிலர், கோவிற் திருப்பணி வேலைக்கும் நித்திய பூசைக்கும் ஒரு பைசா வேணும் கொடாது, உற்சவ காலங்களிலே, வாண வேடிக்கைகளிலும், ஏறுபடி மேளவாத்தியங்களிலும், தாசிகளைவிட்டு நடனம் செய்விப்பதிலும், இன்னும் வீண் ஆடம்பரமான செலவுகளிலும், காசைப் பாழாக்குகின்றனர். சிலர், பழைய காலந் தொட்டு வழங்கி வந்த ஆலயங்கள், கிணறுகள், கேணிகள் முதலியன பழுதுபட்டுப் போயிருக்கத் தாம் கீர்த்தி புகழடைய வேண்டுமென்று கருதிப் புதிதாகத் தேவையில்லாத விடங்களில் அவற்றைக் கட்டுவிக்கின்றனர். இன்னும் இப்படிப் பலவுள. ஆனால் இவை யெல்லாம் "நான்" என்ற ஆணவத்தினால் செய்யும் அக்கிரமங்களன்றோ? இவ்வித செய்கைகள் பெரியோரால் வேண்டப்படா. நாம் முக்கியமாய் என்னென்ன தர்மம் செய்யவேண்டு மென்பதைச் சிறிது சொல்லுவோம். தாய் தந்தையர்களைத் துன்பப்படுத்தாது அவர்களுக்காக வேண்டிய எவ்வித கடமைகளையும் செய்தல் வேண்டும். சமயநூல்கள், லௌகிக நூல்கள், முதலிய நன்னூல்களைக் கற்பதற்கு வித்தியா சாலைகள் ஸ்தாபித்தல் வேண்டும். கல்வியில் விருப்பமுடைய வறிய பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பிப் படிப்பிப்பதற்குச் செலவு விடவேண்டும். கல்வியிலும் கடவுள் பக்தியிலும், நல்லொழுக்கத்திலுஞ் சிறந்த பிரசாரகர்களைக் கொண்டு கோவில்கள், மடங்கள் வித்தியாசாலைகள் முதலிய புண்ணிய இடங்களில், ஜனங்களுக்குச் சமயத்தைப் பற்

றிப் போதித்து அறிவை யூட்டி வரவேண்டும். வைத்திய சாலைகளில்லாத விடங்களில், வைத்தியசாலைகள் கட்டுவித்தல் வேண்டும். அன்ன சாலைகளில்லாத விடங்களில் அன்ன சத்திரங்களமைப்பித்துத் தொழில் செய்து ஜீவனம் பண்ணமுடியாத சொத்தி, முடம், குருடு முதலிய பரம ஏழைகளுக்கு அன்னமிடல் வேண்டும். எல்லா உயிர்கள் மேலும் ஜீவகாருண்யமா யிருத்தல் வேண்டும். கோவிலில்லாத ஊர்களில் கோவில்கள் கட்டுவித்து விதிப்படி பூசைகள் நடத்தி வரல்வேண்டும். பழுதடைந்திருக்கும் கோவில்கள், கேணிகள் முதலியன வற்றைப் பழுது பார்த்து வைத்தல் வேண்டும். நிழல் மரங்கள் வைத்துண்டாக்கல் வேண்டும். ஆவுரிஞ்சி, சுமைதாங்கி, தேவையான இடங்களில் கட்டிவைத்தல்வேண்டும். பந்துக்களைக் காக்கவேண்டும். தேசமுன்னேற்றத்திற்குரிய கடமைகளில் பங்கு பெறல் வேண்டும். இன்னும் விரிக்கிற் பெருகும். ஆகையால் மேற்சொன்ன விஷயங்களில் நாம் இயன்றவரையில் தர்மம் செய்வதில் பின்னிற்கக் கூடாது. எல்லாம் பின்னால் செய்வோமென்று நாளைப் போக்கக் கூடாது. ஏனெனில், நாம் இவ்வுலகில் உயிருடன் நிலைத்திருப்பது மிகச் சொற்ப நாட்களே. இதற்குப் பிரமாணம்

"· · · · · · · · · · · · ·
நாளை நாளை யென்பீராகில்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
நம்முடை முறைநா ளாவது மறியீர்
எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
· · · · · · · · · · · · · "

என்று கபிலரும்

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்று திருவள்ளுவரும்,

"புன்னுனி மேனீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்கவறவினை—யின்னினியே
நின்றானிருந்தான் கிடந்தான் றன்கேளலறச்
சென்றா னெனப் படுதலால்."

என்று நாலடியாரிலும்,

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவும் திடமில்லையே"

என்று தாயுமானவரும்,

"நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சய மென்றே யெண்ணிப்
பாக்களவாயன்னம் பசித்தோர்க்களியாமல்
போக்குளெமதூதன் பிடித்திழுக்கும் போது
ஆர்படுவரென்று யறிந்திலையே நெஞ்சமே"

என்று பட்டினத்தடிகளும் இன்னும் பிறவவற்றானும் இக்காயமானது நிலையில்லாதபடியால்,

"அற்கா வியல் பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்"

என்னும் திருவள்ளுவர் வாக்குக் கிணங்க நில்லாத வியல்பினையுடைய செல்வத்தைப் பெற்றக்கால் அச்செல்வம் பெற்றபோதே அறங்களைச் செய்து உய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடின் யாமெடுத்த யாக்கையால் ஒருவித பிரயோசனத்தையு மடையமாட்டோ மென்பது திண்ணம். இவற்றை விரிக்கிற் பெருகுமென விடுத்து, நமது கதைபாற் செல்வோம்.

மேலும், சொல்லப்பட்ட அறங்களைச் செய்யாதபடியே கனகேந்திரம்பிள்ளை தன் காலத்தைக் கழித்து வந்தார். கனகேந்திரம்பிள்ளையின் குமாரன் ஆனந்தராசா சென்னைக்குப் போய் இரண்டு வருஷங்களுக்கு மேலாயின. தன் மகனை நன்றாகப் படிக்கவைத்து உயர்தர நியாயவாதி

(Barrister) பரீட்சையிற் றேர்ச்சி யடையச் செய்து, இன்னும் உள்ள பணத்துடன் கூடச் சம்பாதிக்க வேண்டுமென்பதே கனகேந்திரம்பிள்ளையின் நோக்கமாதலால், சிறிது காலம் கூடச் சென்றாலும் அவனை யப்பரீட்சை முடியும் வரைக்கும் கற்பிப்பதற்கே எண்ண முள்ளவராயிருந்தார். ஆனந்தராசாவுக்கு மாசவீதம் செலவுக்காக நூறு ரூபாய் சென்னைக்கு அனுப்பிக்கொண்டே வந்தார். மேலும், ஆனந்தராசா சென்னையில் எப்படிக் காலங்கழித்து வந்தானென்பதைச் சிறிது வரைவோம். தனக்கெனவோர் வீடு வாடகைக்கு மாசம் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து எடுத்திருந்தான். தன் தகப்பனார் தன்னைச் சென்னைக்கனுப்பியதின் நோக்கம் முழுதும் மறந்து விட்டான். நாற்காலி, கட்டில், சோவா, மேசைகள் முதலிய சாமான்களாலும், ஆங்கிலேயருடைய பலவித படங்களாலும், இன்னும் பலவித தற்கால நாகரீக சாமான்களாலும், தானிருந்த வீட்டை யலங்கரித்து வைத்திருந்தான். கெட்ட சினேகிதர்களுடன் கூடிக் குடித்துக்கொண்டு தெருவீதிகளில் மிக ஆனந்தமாகவே காலத்தைக் கழித்து வருவானாயினன். நேற்றிருந்தவனை யின்றைக்குக் காணவில்லையென்று சொல்லும் உலகமாதலால், இருக்கும் பொழுதே எல்லாவித இன்பங்களையும் அனுபவிக்கவேண்டு மென்பதே ஆனந்தராசாவின் நோக்கம். கூடாவொழுக்கங்களையும் இவன் இன்பங்களென்றே விளங்கியிருந்தான். பள்ளியில் வாசிக்கிற நேரம் தவிர இவனுடைய காலம் முழுவதும், கெட்ட சினேகிதர்க ளுடனேயே சென்றது. இரவில், தன் கெட்ட சினேகிதர்களுடன் கூடிக்கொண்டு படக்காட்சி, நாடகம் முதலிய இடங்களுக்குப் போய்க் காசை வீணிற் செலவழிப்பதுமல்லாமல், வேசி தாசிகளின் இல்லத்திற்கு மேகப் பழகிக்கொண்டான். நாடகத்திற்குப்

போய் அங்கு நடிக்கும் பெண்களின் சாமர்த்தியத்தைக் கண்டு, தங்கப் பதக்கம், கணையாழி முதலியன செய்வித்து மற்றவர்கள் தன்னை மெச்சுகிறார்களென்றெண்ணிப் பார்ப்பவர் கரகோசஞ் செய்ய அப்பெண்களுக்குப் பரிசாயளிப்பான்.

தற்கால நாடகத்தைப் பற்றி யெழுதப் புகின் மிக விரியு மாதலால் சிறிதுரைப்போம். தற்காலம் நாடகம் பார்க்கப் போகும் ஜனங்களுக்குப் புத்திகூறி யவர்களை நாடகங்களுக்குப் போகாமல் செய்து விடுவதற்கு அறிஞர்கள் முயற்சி யெடுக்க வேண்டும். ஏனெனில் பெரும்பான்மையாக யாவரும் வந்து பார்க்கக் கூடிய மாதிரியாகத் தற்கால நாடகம் நடத்தப்படுவதில்லை. பண்டைகாலத்தில், இவ்வித நாடகங்கள் காசின்றி ஆண் பெண் யாவரும் வந்து கண்டுணர்ந்து நல்லறிவைப் பெற்றுப்போகும் வண்ணம் பகிரங்கமாக நடிக்கப்பட்டு வந்தன. புராண இதிகாசங்கள், நீதிகளை விளக்கிக்காட்டும் சரித்திரங்கள், கற்பாஸ்திரீகளின் சரித்திரங்கள், நாயன்மார்களின் சரித்திரங்கள், இன்னும் இப்பேர்ப்பட்ட நல்லறிவை வளர்த்துக் கடவுள் மேல் அன்பென்னும் வலையை வீசக்கூடிய சரித்திரங்களே, நல்லொழுக்கமுள்ள அறிஞரால் நடிக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்காலத்தில் நடித்துக் காண்பிக்கப்படும் நாடகங்கள் பெரும்பாலும் நல்லறிவு விர்த்திக்குப் பதிலாகத் தீயொழுக்கத்தை வளர்த்துக் கேவலம் காமத்தீயை மூட்டிக் காசை வீணிலழிப்பது மல்லாமல் கெட்டவியாதிகளுக்கு முள்ளாக்கி விடுகின்றன. ஏனெனின், தற்காலம் நாடகங்களிலுள்ள சரித்திரங்களை வேறு விதமாக நடித்துக் காண்பிப்பதுமல்லாமல், சரித்திரத்திற்கு மாறான பாடல்களை யியற்றிப்பாடுவதால் பெரும்பாலார் மனதிலும் கெட்ட எண்ணங்களே யுதிக்கின்றன. அந்தோ! என்ன பரிதாபம்!

எவ்வளவோ வாலிபர்களும் வாலிபப் பெண்களும் தற்கால நாடகங்களுக்குப் போவதினால் கெட்டலைந்து திரிகின்றார் களென்பது கண்ணாரக் கண்ட செய்தி. இவ்வித நாடகங் களை யின்னும் கற்றுணர்ந்தோரும், சட்டசபையங்கத்தவ ரும் நீக்குவதற்குரிய வழிகளைத் தேடாமலிருப்பது வருந் தத் தக்கதே. ஆனால் பண்டைக்கால முறைப்படி நாட கங்கள் நடத்துவதானால் குற்றமாக மாட்டா தென்பதே எமது துணிபு.

இவ்வித நாடகக் கொட்டகைக்கே ஆனந்தராசாவும் போய்ப் பணத்தைச் செலவழிப்பதுமல்லாமல் கெட்ட செய்கைகளிற் பிரவேசித்து நாடகம் நடிக்கும் ஸ்திரீகளுட னேயும் சிநேகிதம் புரிந்து வருவானாயினன். சிலசமயங் களில் இப்பெண்களைத் தானிருந்த வீட்டிற்கு மறைத்து வருவான். இதெல்லாவற்றிற்கும் துணையாகப் பணமும் இவனிடமிருந்ததே ஒருவாறு காரணமாகும். இவன் மிக்க அன்பாகக் கொண்டாடி வந்த நாடக ஸ்திரீக்குப் பெயர் மாயாசௌந்தரி. இவள்தான் அச்சமயம் நாட கத்தில் முதன்மை வாய்ந்தவள்; கீர்த்தி பெற்றவள். அநேக பரிசுகளைப் பெற்றவள். இவள் பொருளொன் றைக் கருதியே ஆனந்தராசாவுடன் சிநேகிதமா யிருந்தா ளேயன்றி, அவனுடன் கொண்ட மன அன்பினாலல்ல. வேசியின் மனம் பொருளைமட்டும் தானே குறிக்கும். இத னாலன்றோ தெய்வப்புலவரும்,

> "பொருட் பொருளார் புன்னலம் தோயா ரருட்பொரு
> ளாயு மறிவி னவர்."

> "அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
> ரின்சொ லிழுக்குத் தரும்."

என்று பாடியிருக்கின்றனர். ஒரு நாள், மாயாசௌந்தரி ஆனந்தராசாவைப் பார்த்து, "எனது அன்பிற் கிசைந்த

காதலனே! தங்களுடன் யான் எவ்வளவு அன்பாகவும் விசுவாசமாகவும் நடந்து வருகின்றேன். ஆனால் எனக்கு என்ன நகைகள்தான் செய்து கொடுத்திருக்கின்றீர்கள்? பணத்தை யள்ளியிறைத்ததில் என்ன பிரயோசனம்? நகைகள் செய்து கொடுத்தால் யான் நினைவாக அவற்றை யணிந்து தங்களை மறக்கவும் மாட்டேனன்றோ? இனிமேல் நாடகத்திலும் என் தோற்றம் மிக அழகாயிருந்தால் தங்களுக்குத் தானே புகழுண்டாகும். எனக்கு ஒரு கல்லிழைத்த தங்கப்பதக்கமும், ஓர் தங்கமாலையும், செய்து கொடுக்கவேண்டும்," என்றாள்.

ஆனந்தராசா.—"என் கண்மணியே! இவற்றைத் தானா கேட்டாய்? இவை யெனக்கு ஓர் பெரிய காரியமல்ல. யான் எப்படியும் பணம் வரவழைத்து அவற்றைச் செய்து கொடுப்பேன்," என்றான். மாயா சௌந்தரி யிதைக் கேட்டு மிகக் களிப்பை யடைந்தாள். அடுத்த நாள், ஆனந்தராசா தன் வீட்டில் தனிமையா யிருந்து பின்வருமாறு ஒரு கடிதம் தன் தந்தைக்கு எழுதியிருந்தான்:—

சர்வகலாசாலை,
சென்னை,
மார்கழி—மீ உஎ—ௗ.

எனது அன்பான தந்தைக்கு எழுதுவது இவ்விடம் யான் நல்ல சேமமாயிருக்கின்றேன். தங்கள் சுகசெய்தியையு மறிய மிக ஆவலுள்ளவனாயிருக்கின்றேன். அம்மாவின் சுகத்தையு மெழுதவும். என் தங்கை அன்னமலர் தற்சமயமும் கல்லூரியில் வாசித்து வருகின்றாளா? மேலும், யான் எனது எவ். ஏ. (F. A.) பரீட்சையிற் றேறி அடுத்த மாசம் தொடக்கமாக பீ. ஏ. (B. A.) வகுப்பில் படிக்கப் போகின்றேன். இங்கே வரவாக் கலா

சாலையில், செலவுகளெல்லாம் கூடிக்கொண்டே வருகின்றன. யான் பிறிதாக வீடெடுத்திருந்த படியாற்றான் யானும் என்பாடுமாகப் படித்துச் சென்ற பரீட்சையிற் றேற நேர்ந்தது. அத்துடன் தங்கள் அதிட்டமென்றும் சொல்லலாம். வருகிற வருஷம் பீ. ஏ. (B. A.) என்ற வகுப்பிற் றேர்ச்சி யடைந்தால், பின்னர், உயர்தர நியாய வாதியாய் (Barrister) வருவதற்குப் படிக்க வேண்டுமென்பதே யெனது விருப்பம். தற்சமயம் சம்பளமும் உயர்ந்து விட்டது. புதுப் புத்தகங்கள் வாங்குவதற்குப் பணம் அவசியம் வேண்டும். வீட்டு வாடகை, பள்ளிக் கூடச் செலவு, சாப்பாட்டுச் செலவு, இன்னும் மற்றும் செலவுகளுக்கும் தங்களை மாசம் மாசம் தொந்தரவு பண்ணிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை. ஒரேமுறையில், ஆயிரம் ரூபாயை யனுப்பிவிட்டால் மிகவும் நல்லது. பின்பு தேவையாயின் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். யான் வீணிற் செலவழிக்க மாட்டேனென்பது தங்களுக்கே தெரியும். தாங்கள் எவ்வளவு பாடுபட்டுப் பணத்தைத் தேடினீர்களென்பது எனக்குத் தெரியாதா? குறிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாகச் செலவு செய்ய எனக்கு விருப்பமில்லை. என்னுடைய குணம் தங்களுக்குத் தெரியும்தானே. அதிக மெழுதவில்லை. பணத்தை மட்டும் எதிர்பார்க்கின்றேன். இன்னும் மூன்று நாலு மாசங்கள் செல்ல, விடுமுறை நாட்களுக்கு உங்கள் எல்லோரையும் பார்க்க வருவேன். முன் எழுதி வந்தபடி, "தங்கசாலைத் தெரு மேல்மாடவீடு" என்றே விலாசம் எழுத வேண்டும்.

இப்படிக்கு,
உங்கள் அருமையான மகன்,
ஆனந்தராசா.

ஒருநாள் விடியற்காலையில் ஆனந்தராசாவின் தாயாகிய கனகாம்பாள் காலைப் போசன மருந்திய பின்னர், வீட்டிற் றிண்ணையிலிருந்த நாற்காலிகளி லொன்றிலிருந்து கொண்டு ஏதோ நினைத்துக் கொண்டிருக்கையில், தனது புத்திரனின் எண்ணம் ஏற்பட்டுப் பின்வருமாறு யோசிக்கலானாள்:—"என் மைந்தனின் கடிதங்கள் இப்போது இரண்டு மூன்று மாசங்களாகக் காணவில்லை. பரீட்சை கிட்டும் தினங்களாதலால் பாடங்களைச் செவ்வனே ஆயத்தப் படுத்துகிறதில் நேரம் செலவழிகின்றது போலும். இம் மார்கழி மாசத்தில் "எவ். ஏ." என்ற பரீட்சையிற் றேறி விட்டானென்றால் அடுத்த வருஷம் "பீ. ஏ." என்ற வகுப்பிற் படித்துப் பின்னால் உயர்தர நியாயவாதியாகி விடுவான். பின்பு எங்கள் பாடு அதிட்டம்தான். ஏனெனில் மாசம் மாசம் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கலாம்," என்று எண்ணாத எண்ணமெல்லா மெண்ணி ஆழ்ந்த யோசனையி லிருக்கத் தன் நாயகன் எதிரில் வரக் கண்டு, "நாதா! தம்பியின் காகிதங்கள் அனேக நாட்களாய் வரவில்லை; அவனைப்பற்றி யின்று அதிகம் யோசனையு மேற் பட்டிருக்கின்றது. இன்று ஒருசமயம் காகிதம் வந்திருக்கலாம்; போய்ப் பார்த்து வாருங்கள்" என்று சொன்னாள். கனகேந்திரம்பிள்ளை உடனே பாதரட்சைகளைக் காலில் மாட்டிக்கொண்டு கையிற் குடைபிடித்தவராய்த் தபாற் சாலைக்குச் சென்று விசாரித்ததில், தன் மகனுடைய காகித மொன்று வரக்கண்டார். காகிதத்தைத் திறந்து வாசித்து மிகவும் சந்தோஷப்பட்டவராய், அதிலே கண்டிருக்கும் செய்திகளை மனையாளிட மறிவிப்பதற்காக அதிசீக்கிரமாக வீடு வந்து சேர்ந்தார். கனகாம்பாள் திருப்பித் திருப்பிப் பலமுறையும் அக்காகிதத்தை வாசித்து மிகச் சந்தோஷமுற்றாள். பின்னர் காகிதத்திற் கண்டபடி, ரூபாய் ஆயி

ரத்தையும் உடனே யனுப்பி விடுமாறு தன் கணவனிடம் சொன்னாள். ஆனந்தராசா, சென்னைக்குச் சென்று நாலு வருஷங்களாய் விட்டன. இந்த நாலு ஆண்டுகளுக்குள்ளாக, அவனுக்குப் பள்ளிக்கூடச் செலவின் பொருட்டு அனுப்பியிருந்த தொகை மூவாயிரம் ரூபாய்க்கு மேலே யென்றே சொல்லலாம். அத்துடன் இந்த ஆயிரம் ரூபாயையும் உடனே கனகேந்திரம்பிள்ளை தன் மகனுக்குச் சென்னைக்கனுப்பிவிட்டார். தங்கள் மகன் இன்னும் இரண்டு மூன்று மாசங்கள் கழிந்து விடுமுறை நாட்களுக்கு ஊருக்கு வருவானென்று மிக மகிழ்ச்சி யுடனிருந்தார்கள். இது இப்படியிருக்க, இங்கே விடுதிப் பெண்பாடசாலையில் அன்னமலருக்கும் அதிகமாகச் செலவுவிட்டுப் படிப்பித்தார்கள். அன்னமலர், தமிழ்ப் பாடங்களில் கரிசனையில்லாமல், ஆங்கிலத்திலே அதிகம் கவனம் செலுத்தி வந்தாள். அவள் வேண்டிய யாவும் தன் தாய் தந்தையராலடையப் பெற்றாள். ஆங்கிலத்தில் "யூனியர்" என்ற பரீட்சையிற் றேறிச் "சீனியர்" என்ற வகுப்பில் கற்று வந்தாள். பாடசாலையிலே தமிழ் சிறிதாகக் கற்றுக் கொடுத்து வந்திருந்தும், இவளுக்கு அத்தமிழ்ப் பாடங்களிற் கவனமே கிடையாது. அநாகரீகமெனை நினைத்து விடுவாள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பொழுதே, நவீன நாகரீக மென்னும் வலையிற் சிக்கிக்கொண்டாள். எமது பழக்க வழக்கங்களை யெல்லாம் மறந்துவிட்டாள். விடுமுறை நாட்களுக்காக வீட்டுக்கு வந்தால் வீட்டுவேலை யொன்றும் செய்ய மாட்டாள். கல்லூரியில் பிள்ளை வாசிக்கிறவள்; அத்துடன் ஆங்கிலேயமும் கற்றுக்கொள்ளுகிறவள் ; வீணைவாத்தியங்களும் வாசிக்கிறவள்; இப்படிப்பட்டவளைக்கொண்டு வீட்டுவேலை செய்வித்தல் தகாதெனை நினைத்து அவள் தாய்தந்தையரும் அவளை அவ்வேலைக்கு விடுவதில்லை. இன்னும் அன்னமலர் சாயங்

காலங்களில் உலாத்துக்குச் சலனரதத்திற் (மோட்டர் வண்டி) போய் வருவாள். எவ்விதமாய் நடப்பதற்கும் இவளின் பெற்றோரும் இசைவாகவே நடந்து வந்தார்கள். அந்தோ! என்ன மடமைத்தனம்! இப்படியான பெற்றோர்கள் தற்காலத்திலு மில்லாமலில்லை. இவர்களின் செய்கையைக் கண்டு நாம் வருந்துவதே யல்லாது பிறிதொன்றும் செய்யமுடியாம லிருக்கின்றது. இதெல்லாவற்றிற்கும் முதற்காரணம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதனாலன்றோ? பெரும்பான்மையாக ஆங்கிலம் கற்றுவரும் பெண்களின் செய்கைகளே நமது நாட்டிற்குப் பெருங் கெடுதி யாயிருக்கின்றன. இப்பெண்கள் ஆங்கிலம் கற்கத் தொடங்கவே அவர்களை யறியாதபடி ஓர் தற்பெருமையான எண்ணம் அவர்கள் மனதிலுதித்து விடுகின்றது. பின்னர் நாட்கள் செல்லச் செல்ல நமது ஆசாரங்களைக் கை நெகிழ விடுகின்றனர். கல்வி கற்று வருங்காலத்தில் இயற்கையாகவே யிருக்கும் பெண்களுக்குரிய தலைபுச்சி யொன்றைப் பிரித்து அறுபத்து நான்கு உச்சிகளாக்கித் தலைமயிரை வெவ்வேறாய்ப் பின்னிப் பின் எல்லாவற்றையும் தொடுத்து ஒவ்வொன்றிலும் விதம் விதமான நாடாக்களைக் கட்டித் தொங்கவிட்டு முகமெல்லாம் புசர்மாவால் வெள்ளையடித்து ஆங்கிலேயருடைய உடையை முழங்கால் வரைக்கும் உடுத்திப் பள்ளிக் கனுப்பி விடுகின்றார்கள். இவர்களுடைய ஆகாரம் எப்படியா யிருக்கு மென்பதை வாசகர்களே உணர்ந்து கொள்வார்கள். வீட்டிலிருக்கும் காலங்களில் இப்பெண்கள் மடைப்பள்ளி வேலை செய்ய விரும்புவதில்லை. அநாகரீகமென நினைத்துக் கட்டில் நாற்காலிகளிலிருந்து *வலைகளைப் பின்னிக் கொண்டும் கெட்ட நாவல்

---

*வலைகளென்பது நாற்காலிகள், மேசைகள், சன்னல்கள் முதலியவற்றில் அழகிற்காகக் கட்டித் தொங்கவிடும் பின்னற்றுணிகளையே குறிக்கின்றன.

கலை வாசித்துக்கொண்டும் பொழுதைப் போக்குவார்கள். இப்பெண்களுள் அநேகர் விவாகம் செய்து கொண்ட காலத்திலும் வீட்டிற் கடமைகளைச் செய்ய வேண்டுமென்று எண்ணுவதே கிடையாது. இவர்களுக்குப் பதிலாகச் சுயம்பாகிக ளிருப்பார்கள். சிலபெண்கள், தம் புருஷர் வேலையை விட்டு வீட்டுக்குத் திரும்பி வருங்காலத்தில் அவர்களை யெதிர் கொண்டு உபசரித்து அன்னமளிக்காமல் சாய்நாற்காலிகளிற் படுத்துக் கொண்டு உல்லாசமாயிருப்பார்கள். சிலர் குழந்தைகளைப் பெற்றெடுத்து ஆயாள் பொறுப்பிலேயே விடுகின்றனர். இதனால் அநேக குழந்தைகள் நல்லபார்வையில்லாமல் வருத்தத்தி லாழ்ந்து கிடக்கின்றன. சில குடும்பங்களில், புருஷரே குழந்தைகளையும் பார்க்கவேண்டும். இன்னுஞ் சில குடும்பங்களில் இப்பெண்கள் உலாத்திற்காவது, படக்காட்சிக்காவது, சங்கங்களுக்காவது போக, வீட்டில் புருஷர்களே காவலிருக்க வேண்டும். இன்னும் இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். பண்டைக் காலத்தில், நமது பெண்மணிகள் நமது தமிழ்ப் பாஷையைக் கற்றுக் கற்புக்கரசிகளாக விளங்கியிருக்கவில்லையா? நமது பெண்மணிகளுக்குத் தேவையானயாவும் நமது தமிழ்ப் பாஷையிலேயே யிருக்கின்றன. நாம் தீர ஆராய்வோமாயின், தமிழ் எண்ணிறைந்த பாஷைகளுக்குள் முதலுற் பத்தியாகித் தெய்வ பாஷையாயிருப்பதாலும், அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் ஆன்மார்த்த விஷயங்களைப் போதிப்பதாலும், பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய பதிவிரதா தர்மங்களையும் எமது மார்க்கத்திற்குரிய போதனைகளையுமெடுத்துரைப்பதாலும் பிரதானமாக, நம்பெண்மணிகள், அதையே கற்கவேண்டும். எல்லாவகையான தானதர்மங்களையும் பாவபுண்ணியங்களையு மெடுத்துரைப்பது எமது

தமிழ் மொழியல்லவா? எமது தாய்ப் பாஷையை மறந்து அன்னிய பாஷையைக் கற்பதால் இப்பெண்களடையும் பயனென்ன? ஒவ்வோர் தேசத்திலும் பெண்கள் தம்தம் மொழியையே கற்று வருகின்றனர். ஆங்கிலம் கற்பதால் மேல்நாட்டாரின் ஆசாரங்களே இயல்பாக வந்துவிடும். தமிழ்க்கல்வி எமது ஆசாரத்தையே கொண்டுவரும். இன்னோர் தேசத்துப் பழக்க வழக்கங்கள் எமது நாட்டிற்குப் பயன் தரமாட்டா. எமது ஆசாரங்களைக் கைப்பற்றுவதற்கும், இல்லற முறையைச் சரிவர நடத்துவதற்கும் எமது பெண்மணிகள் எமது சிறந்த தேனினும் இனிமையாகிய தமிழைக் கற்றால் போதுமானதே. இதைச் சற்றேனும் கவனியாது பெண்கள் ஆங்கிலம் கற்கவேணு மென்று சொல்லும் அறிவாளிகளை நாம் என் சொல்வது? ஆனால் இந்நவீன நாகரீகத்தாலடையும் தீமைகளை யிவர்கள் தொடக்கத்திலே யறியாவிடினும், காலம் செல்லச் செல்லத் தாமாகவே யறிந்து கொள்ளுவார்களென்பது உண்மையிலு முண்மையே.

இவ்விதமாகக் கனகேந்திரம்பிள்ளையின் புத்திரியாகிய அன்னமலரும் ஆங்கிலத்தைக் கற்று எமது ஆசாரங்களைக் கைநெகிழ விட்டு அன்னிய நாட்டாரின் நாகரீகத்தையே கைப் பற்றியிருந்தாள். கனகேந்திரம்பிள்ளையாகுதல் அல்லது அவர் மனைவி கனகாம்பாளாகுதல், தம் புதல்வியின் எதிர்கால நன்மையைப் பற்றிச் சிறிதேனும் சிந்தித்தவர்களல்லர். பொருளதிக மிருந்தபடியால் எவ்விதத்தும் பெரிய உத்தியோகஸ்தனுக்கே தம் புதல்வியை விவாகம் செய்து கொடுப்போமென்றும், இன்னும் அவள் மிக்க உல்லாசமாகத் தன் காலத்தைக் கழித்து வருவாளென்றும், மிக உறுதியாக நம்பியிருந்தார்கள். அன்னமலரும் தான், ஓர் உயர்தர நியாயவாதியையே (Barrister) விவாகம் செய்

யவேண்டு மென்று எண்ண முடைய வளாயிருந்தாள். இதே எண்ணத்தையே இவள் பெற்றோரும் ஒருவாறு எண்ணியிருந்தனர்.

---

## ஆறும் அத்தியாயம்.

"நோன் பென்பது கோன்று தின்னாமை."

சென்ற மூன்றும் அத்தியாயத்திற் சாம்பசிவம், உபாத்தி வேலையி லமர்ந்ததும், பின்னும் சபாபதிப்பிள்ளை வீட்டிலேயே யிருந்து வருகிறானென்றும், சபாபதிப்பிள்ளையின் புத்திரி ஞானமிர்தம் தன்னை யறியாமல் சாம்பசிவம் பேரில் அதிக ஆசை கொண்டாளென்றும் சொல்லி யிருந்தோம். மேலும் சாம்பசிவம் ஓய்ந்திருக்குங் காலங்களில், சமயநூல்களையும் மற்றும் அறிவு கொடுக்கக் கூடிய நூல்களையும் ஆராய்ச்சி செய்வதிலேயே தன் நேரத்தைக் கழித்து வந்தான். தமிழ்ப் பாஷையிலேயே அவனுக்கு அதிக கவனமிருந்தது. ஏனையின் மேலான அறிவை யடையக்கூடிய விஷயங்களெல்லாம் எமது தாய் மொழியிலேயே யிருப்பதை யுணர்ந்து கொண்டான். ஆங்கிலேய மொழி எமக்கு ஓர் பிழைப்புக்கு மாத்திரமே பயன் படுமென்பது சாம்பசிவத்தினுடைய எண்ணம். ஒருவித உதவியுமில்லாது சாம்பசிவம் அனேக தமிழ் நூல்களை எப்படி யாராய்ச்சி செய்திருப்பானெனச் சிலர் எண்ணக்கூடும். ஆனால் இது ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஒருவனுக்குக் கற்க வேண்டுமென்று முதல் ஆசை வேண்டும். அதன் பின்னர் முயற்சி வேண்டும். முயற்சி எப்பொழுதும் நன்மையை விளைவிக்கும். இதனாலன்றோ திருவள்ளுவரும்

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." என்றார்.

சாம்பசிவத்திற்குத் தொடக்கத்தில் ஐந்தாம் வகுப்புப் புத்தகம்தான் வாசிக்கத் தெரியும். பின்பு சிறிது சிறிதாகத் தானாகவே கற்று வந்தான். பின்னர் புதினப் பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து வந்தான். பெரும்பாலும் நூல்களைக் கற்பதற்குப் புதினப் பத்திரிகை வழி காட்டியாயிருக்குமென்பது சாம்பசிவத்தின் நோக்கம். தற்காலத்தில் எமது நாட்டார் பத்திரிகை வாசிப்பதனாலாய பயனை யின்னும் கால் வீசமாவது உணர்ந்து கொள்ளவில்லை. அந்தோ! என்ன அறியாமை! இதைப் பற்றிச் சிறிது இங்கே கூற விரும்புகின்றோம்.

பத்திரிகையாவது, மானிட ஜாதியார்க்கு வேண்டிய நல்லொழுக்கத்தைச் சார்ந்தபோதனை முறைகளையும் உலக புதினங்களையும் எடுத்துரைக்கும் ஓர் ஞான சாதனமாம். ஆதித்தன் எவ்விதம் இருளை நீக்கி வெளிச்சத்தைக் கொடுக்கின்றானோ, அவ்விதமே பத்திரிகையும் அஞ்ஞானமாகிய இருளை யோட்டி மெஞ்ஞானமாகிய வெளிச்சத்தைக் காட்டும் ஞான பானு சோதியாம். பத்திரிகை வாசிப்பதனால் நமக்குத் தேச, பாஷை, சமய முதலிய அபிமானங்கள் சேருமென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. பற்பல விடங்களில் நடக்கும் சம்பவங்களையும், அவ்வவ்வூரில் வழங்கும் ஆசார ஒழுக்கங்களையும், நாம் பத்திரிகை மூலமாய் அறிவதால் நமக்கு எவ்வளவு உலக ஞானமேற்படுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இக்காரணத்தினாலன்றோ மேலைத்தேச வாசிகள் கல்வியிலும், செல்வத்திலும், இராசாங்கத்திலும் மேம்பட்டவர்களாய் விளங்குகின்றனர். இவர்கள் தத்தம் தேசங்களிலே பத்திரிகாசிரியர்களுக்கும், பத்திரிகை நடப்பிப்போருக்கும், பரிசு கொடுத்து அவர்களைப்

போற்றி வருகின்றனர். இதை விட அத்தேசங்களில் சகல வித தொழிலாளர்களும் பத்திரிகை வாங்கி வாசித்து வருகின்றனர். கல்வி கற்காதவர்கள் கூட பத்திரிகைகளை யெடுப்பித்து கற்றுணர்ந்த ஒருவரைச் சம்பளத்திற்கு நியமித்து நாள்வீதம் எல்லோரும் ஓர் பொது இடத்திற் கூடியிருந்து, அவரை வாசிக்கச் சொல்லித் தாம் கேட்டு அறிவையும், உலக ஞானத்தையும் அடைகின்றனர். ஆனால் நமது நாட்டிலுள்ளவர்களுள் பெரும்பாலார் இன்னும் பத்திரிகையின் பலனைச் சிறிதேனும் அறியாதவர்களாயிருக்கின்றனர். அந்தோ! இதென்ன கொடிது! சிறிது நூலைக் கற்றவர்கள் கூடப் பத்திரிகைகளை யலட்சியம் செய்து விடுகின்றனர். தற்காலத்தில் யாராகுதல் பத்திரிகைக்குச் சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு வந்தால், சிலர், "பத்திரிகையாவது! படிப்பாவது! பிழைக்க வழியில்லாமலித் தொழிலை யேற்றுக் கொண்டீரோ? போய், உமது அலுவலைப் பாரும்," என்று அவரை ஊக்கப் படுத்தி விடுவதற்குப் பதிலாக நிந்தித்து விடுகின்றனர். சிலர், "பத்திரிகை வாசிப்பதற்கு நேரமேது, நமது வேலையைப் பார்ப்பதற்கே நேரமில்லை யென்று நாமிருக்கும்போது, அத்துடன் பத்திரிகையை யெடுத்து நாமென் செய்வது," என்றும், இன்னுஞ் சிலர், பணம் சம்பாதிக்கும் பொருட்டுப் பத்திரிகையைத் தொடங்கி யிருக்கிறார்களென்றும் தாம் ஏன் அதை வாங்கி வாசிக்க வேண்டுமென்றும், தத்தமக்கிணங்கியவாறு பத்திரிகை நடத்துவோரைப் புறக்கணித்துப் பேசி விடுகின்றனர். இதெல்லாம் அறியாமையினாற் செய்யும் செயல்களென்றே நாம் எண்ண வேண்டியிருக்கின்றது. உலகத்திலே வாழும் மிருகங்கள் பறவைகள் இன்னும் மற்றும் ஜீவன்களும் கூட தமது நாட்களைக் கழிக்கும் பொருட்டு முயற்சியுடையவர்களா யிருக்கின்றனதான். ஆறறிவுள்ள மானி

டாகிய நமக்குக் கடவுள் பகுத்தறியும் தன்மையைக் கொடுத்திருக்கும்போது உலகில், நாம் என்னத்திற்காக வுதித்தோ மென்பதைச் சிறிதுஞ் சிந்திக்க வேண்டாமா? இப்படி யிருப்பதால் நமது நாடு எப்படி முன்னுக்கு வரும்? தற்காலத்தில், சில பிரபுக்களுக்குத் தமிழ்ப் பத்திரிகைகளென்றால், சற்றேனும் பிடிப்பதில்லை. அவற்றை யெல்லாம் வீணெனத் தள்ளி விட்டு, ஆங்கிலேய பத்திரிகைகளைக் கைக்குப் பாரமாக ஏதோ மிக்க கௌரவமெனக் காவிக் கொண்டு திரிகின்றனர். ஆனால் இவர்களுடைய தோலும் வெள்ளையா யிருக்கக் கூடுமாயின் தம்மை ஆங்கிலேயர் என்றும் சொல்லுவார்கள் போலும். அந்தோ! என்ன விநோதம்! நமது தாய் நாடு முன்னுக்கு வரவேண்டுமானால், தமிழ்ப் பத்திரிகைகள் இன்னுமதிகம் நிலவ வேண்டும். அறிஞர் இதில் முயற்சி யெடுத்து மந்தப் புத்தியுடையோர்க்குப் புத்தி புகட்டிப் பத்திரிகைகளைப் பரவச் செய்து நமது நாட்டை மேல் நிலைக்கு வரக்கூடிய வழிகளைத் தேடுவதற்கு முன்வர கடவுள் அநுக்கிரகம் செய்வாராக.

இவ்விதமாகச் சாம்பசிவமும் முதலில் பத்திரிகைகளை வரவழைத்துப் படிக்கப் படிக்கக் கல்வியின் பெருமையையும், தமிழின் சிறப்பையும், உலக ஞானத்தையு மறிந்து கொண்டான். பின்னர் இவற்றுடன் பெரிய தமிழ் நூல்களை வரவழைத்து ஆராய்ச்சி செய்து வந்தான். இப்படியாக யாரும் செய்யலாம். நாம் துணிவதில்லை. மேலும், சாம்பசிவம் ஞானமிர்தத்துக்கும் அவளின் தம்பி அருட்சோதிக்கும் தமிழ்நூல்கள் கற்பித்துக் கொண்டே வருவானாயினன். சபாபதிப்பிள்ளையின் குழந்தைகளும் வர வர ஊக்கமாகவே கல்வி கற்று வந்தார்கள். ஆனால் ஞானமிர்தம் தான் கல்வியில் மிகத் திறமையாகக் காணப்பட்டாள். பெரிய புராணம், பாரதம், இராமாயணம், திருவிளையாட்

புராணம் முதலிய நன்னூல்களையும், பதிவிரதைகள்சரித்திரம், இல்லறநூல்கள் முதலிய கற்பிலக்கண நூல்களையும், இன்னும் மேலான அறிவு கொடுக்கக்கூடிய அறநூல்களையெல்லாம் சாம்பசிவம் மூலமாகக் கற்றுக் கொண்டாள். சபாபதிப்பிள்ளையும் அவர் மனைவியும் சாம்பசிவத்தின் விசேஷ குணங்களைக் கண்டறிந்தவர்களாதலாலும், நீடித்தே தங்கள் பிள்ளைகளைப்போல் பாவித்து வந்தபடியாலும், மனதில் யாதொரு வித்தியாசமான எண்ணமில்லாததாலும், ஞானமிர்தம் பிராயமடைந்திருந்தும், அவனிடம் தமிழ்நூல்கள் கற்றுவர விடப்பட்டிருந்தாள். நாளுக்கு நாளாக சாம்பசிவம் மேல் அன்பென்னும் பாசம் அவளைப் பற்றிக்கொண்டது. சாம்பசிவம் எங்கேயாகிலும் சென்று திரும்பிவரக் காலதாமசமேற்படின், அவள் படும் பாடு மிகக் கொஞ்சமல்ல. சாம்பசிவமும் அவளிடம் மிக அன்பாகவே நடந்து வந்தான். ஆனால் அவள் மேல் காதல் கொண்டல்லவென்பதை வாசகர்கள் நன்றாக வுணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு நாளிரவு, சாம்பசிவம் ஞானமிர்தத்திற்குப் பாடம் கற்றுக் கொடுக்கும் பொழுது, திருக்குறளில் கொல்லாமை யென்னும் அதிகாரம் அன்றையதினம் பாடமாக வந்தது. அந்த வதிகாரத்தைப் படித்த மாத்திரத்தில், ஞானமிர்தம் சாம்பசிவத்தை நோக்கி, "மாமா! இந்த அதிகாரத்தில் கொல்லாமையைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கின்றதே. இன்னும் தாங்கள் எனக்குச் சொல்லிக் கொடுத்த பல நூல்களிலும் கொல்லாமையைப் பற்றிக் காண நேர்ந்தேன். ஆனால் இவ்விஷயத்தில் எனக்குப் பலவிதமான சந்தேகங்கள் உண்டாகின்றன. அச்சந்தேகங்களைத் தீர்ப்பீர்களானால் யானும் தங்களைப்போல் தாவர போசனியாக மாறிவிடுவேன்" என்றாள்.

சாம்பசிவம்:—"குழந்தாய் ஞானமிர்தம்! நீ கேட்ட

விஷயமோ மிகப் பெரிது. ஆனால் இதைப்பற்றிச் சொல்லப் புகின் இந்நேரம் தகுந்ததல்ல. போசனமருந்திய பின்னர் உன் தாய் தந்தையரையு மழைத்து எல்லோர் சமுகத்திலும் பேசிக் கொள்வோம்," என்றான்.

ஞானமிர்தம்:—"மாமா! மிகவும் நல்லது," என்று சொல்லித் தாயினிடம் சென்று சங்கதியை யறிவித்து எல்லோரும் போசனத்தை யருந்தச் சென்றார்கள். சாப்பாடு முடிந்ததும், சபாபதிப்பிள்ளை இவ்விஷயத்தைத் தானும் சிறிது கேட்க வேணுமென்று சொல்லி எல்லோரும் வெளியறையில் வந்துட்கார்ந்தார்கள்.

## சாம்பசிவத்திற்கும் ஞானமிர்தத்திற்கு மிடையே நடந்த சம்பாஷணை.

சாம்பசிவம்:—ஞானமிர்தத்தை நோக்கி "நீ வணங்கும் அல்லது அனுசரிக்கும் சமயத்திற்கு என்ன பெயர்?"

ஞான:—மாமா! சைவசமயம்.

சாம்ப:—ஆனபடியால், சைவ சமயத்தில், ஏவை விதிக்கப்பட்டனவோ அவற்றை யெடுத்துக்கொண்டு விலக்கப்பட்டனவற்றை நீக்கி விடவேண்டுமென்பது முறைதானா?

ஞான:—"விதிக்கப்பட்டவைகளையே நாம் அனுசரித்து நடக்கவேண்டும். விலக்கப்பட்டவைகளை அவசியம் தள்ளிவிடவேண்டும். மாமா! ஆனால் இவை யெல்லாவற்றையும் கேட்டறியு முன்னர், ஆன்மாவைப் பற்றியும் சிருஷ்டி நோக்கத்தைப் பற்றியும், மனிதப் பிறப்பின் சிறப்பைப் பற்றியும், சிறிது விளங்க வைக்க வேண்டும். அதன் பின்னர் தான், யான் கேட்க வேண்டிய சந்தேகங்களைக் கேட்கலாம்" என்றாள்.

சாம்ப:—சிறிது சொல்லுகின்றேன் கேட்பாயாக:— "ஆன்மாக்கள் நித்நியமாயும், வியாபகமாயும், சரீரம் தோறும் வெவ்வேறாயும், வினையின் பலனை அனுபவிப்பவைகளாயும் இருக்கின்றன. இவ்வான்மாக்களுக்கு ஓர் முதல்வன் இருக்கவேண்டுமென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்கது. அம்முதல்வன் தான் பரமாத்மா. பரமாத்மாவென்பது கடவுள். மற்றவையாவும் ஜீவான்மாக்கள். இப்பேர்ப்பட்ட ஜீவான்மாக்கள், நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்துநான்கு நூறுயிர பேதமான சிருஷ்டிகளையு மெடுக்கின்றன. அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் நான்குமே நால்வகைத் தோற்றமாம். முட்டையிற் றோன்றுவன அண்டசமென்றும், வியர்வையிற் றோன்றுவன சுவேதசமென்றும், வித்து வேர் முதலிய வற்றிற் றோன்றுவன உற்பிச்ச மென்றும், கருப்பையிற் றோன்றுவன சராயுச மென்றும் சொல்லப்படுகின்றன. இனிமேல் தேவர், மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னு மேழுமே எழுவகைப் பிறப்புக்களாம். இவ்வேழினுள்ளும், பட்சி சாதிகளும், பலவகை மச்சங்களும், ஊர்வனவும் முட்டையிலே பிறக்கின்றன. பேன், புழு முதலியன வியர்வையிலிருந்து தோன்றும். கொடி, செடி, மரங்கள் முதலிய தாவரங்கள், வித்து வேர் முதலியவற்றிலிருந்து தோன்றுகின்றன. தேவரும், மனிதரும், நாற்கால் விலங்குகளும், கருப்பையிலிருந்து தோன்றும். இவ்வேழு பிறப்புக்களுள்ளும், தேவர் முதல் நீர் வாழ்வன இறுதியாகிய ஆறு பிறப்புக்களையும் சங்கமங்கள் அல்லது சரங்கள் என்று சொல்லப்படும். தாவரம் என்பதை அசரம் என்று சொல்லப்படும். அசரமென்பது நிலையியற் பொருள். இவ்வான்மாக்கள் வாழும் பொருட்டு பரமான்மாவாகிய கடவுள் இவைகளுக்குச் சில

அறிவுகளைக் கொடுத்திருக்கின்றார். இவை ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுமுள. அவை பரிசம், இரசம், கந்தம், ரூபம், சத்தம், சித்தம் என்பவைகளேயாம். ஓரறிவுயிர்கள் தாவரங்கள் மட்டுமாம். ஈரறிவுயிர்கள் சங்கு சிப்பி முதலியனவாம். புழு, நத்தை முதலியன மூவறிவுயிர்களாம். நாலறிவுயிர்கள் வண்டு மீன் முதலியனவாம். ஐயறிவுயிர்கள் மிருகங்களும் பட்சிசாதிகளுமாம். இவ்வையறிவுடன் பகுத்தறியும் தன்மையுடைய தேவர்களும் மானிடர்களுமே, ஆறறிவுடைய உயிர்களாம். முன் சொன்ன சராசர பேதங்களில், அசரமாகிய தாவரங்கள் சங்கமங்களாகிய அறுபிறப்புக்களிலும் மிகக் கீழ்ப்பட்டனவாகும். இனி, அறுபிறப்புக்களாகிய சங்கமங்களுள்ளும், ஆறறிவுடைய மக்கட் பிறவியே மிகச் சிறந்தது. இம்மக்கட் பிறவி வாய்ப்பது அரிதினுமரிதே. முன் செய்த பூர்வ புண்ணியத்தினாலன்றோ இம்மக்கட் பிறவியை யாமெடுத்தோம். இம்மானிடப் பிறவியின் சிறப்பைப் பற்றிச் சிவஞானசித்தியாரிலும்

"அண்டசஞ் சுவேதசங்களுற் பிச்சஞ் சராயுசத்தோடு
எண்டரு நாலெண்பத்து நான்குநூறா யிரத்தாய்
உண்டு பல்யோனி யெல்லாம் ஒழித்து மாநுடத் துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்"

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதைவிட ஒளவையாரும்

"அரிது அரிது மானிடராதலரிது"

என்றும், தாயுமானவர்,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதா
னியாதினு மரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ வறிகிலேன்,"

என்றும், மனிதப் பிறவியின் சிறப்பைப் பற்றிக் கூறியிருக்

கின்றனர். மேலே சொன்ன வண்ணம் ஒவ்வொரு ஆன் மாவும் புல்லாயும், பூண்டாயும், மரமாயும், கல்லாயும், பட்சி மிருகமாயும் இன்னும் எவ்வளவோ கணக்கற்ற பிறவிகளெ டுத்துக் கடைசியில் அரிதாகிய இந்த மானிடப் பிறவியை யடைகின்றது. ஆன்மா நித்தியம்; உடல் அநித்தியமாத லால், நித்தியமான ஆன்மாவானது உலக போகங்களைக் களைந்து ஞானத் தேர்ச்சியை யடைந்து திரும்பவும் தனது தாய் வீடாகிய பரமான்மா வென்னும் பரம் பொருளுடன் கூடிக் கலப்பதே சிருஷ்டியின் நோக்கமாகும். பரம்பொரு ளென்பது கடவுள். இக்கடவுள் தான் சிவபெருமான். இனிமேல் கடவுள் ஒன்று. ஆனால், அவரைப் பலவழிக ளாலும் வழிபட்டுய்யலாம். எப்படி ஓர் ஆற்றின் கிளைகள் வெவ்வேறு மலைகளிலும், வாவிகளிலும், மேடுகளிலும் காடு களிலுமிருந்து உற்பத்தியாகிப் பின் எல்லாம் ஈற்றில் சேர்ந் து ஒன்றாகக் கடலின் கண்ணே போய் விழுகின்றனவோ, அவ்விதமே நாமும் பலவழிகள் மூலமாகக் கடவுளைக் கிட் டிச் சேரலாம். இவ்வழிகளைத்தான் பற்பல சமயங்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் சமயங்களுள்ளும் சகல புண்ணியங்களையும் எடுத்துரைப்பது சைவசமய மொன்றே யாம். இதனாற்றான் தாயுமானவரும்

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்றார். இதனால் சைவசமயத்தின் பெருமை கூறப்பட் டது. ஏனைய சமயங்களெல்லாம் ஆற்றின் கண்ணே கிளை கள் இடையிற் றோன்றுவனபோல இடையிலே தோன்றி யன. ஆனால் சைவசமயம் எப்போது தோன்றியதெனச் சொல்வதற்கு யாதொரு திருட்டாந்தமும் கிடையாது.

ஆகவே சைவசமயம் என்றும் உள்ளது. மானிடப் பிறவியிலும் சைவர்களாக வந்துதித்ததற்கு என்ன புண்ணியம் தான் செய்திருந்தோமோ யாமறியேம். எமது சமயத்தைச் சரிவரக் கற்றுணராமல் சைவர்களாயிருந்து விட்டுப் புறச்சமயங்களுக்குப் பாயும் அறிவாளிகளை நாம் என் சொல்வது! இவை யெல்லாவற்றையும் விரிக்கிற் பெருகும். மேலும் இச்சீவான்மா, ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களால் கட்டுப்பட்டிருக்கின்றது. இக்கட்டவிழ்ப்பட்டுவிட்டால், பரமான்மாவினுடன் கலந்து விடும். ஆகவே, மும்மலங்களையும் அகற்றிவிட நாம் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்யாவிட்டால், இம்மானிடப் பிறவியால் நாமொரு நன்மையையு மடையாது பின்பும் பல இழிவான பிறவிகளெடுத்துழல்வோ மென்பது திண்ணம். இப்பரமான்மாவாகிய சிவபெருமானை நாம் அன்பின் வழியாகத்தான் தேடலாம். ஏனெனில் அன்பும் சிவமும் ஒன்று. இதனைற்றான் திருமூலநாயனுரும் தமது திருமந்திரத்தில்

“ அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலர்
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே”

என்றருளியிருக்கின்றனர். ஆகவே அன்பு மயமான சிவபெருமானை அன்பின் வழியாகத்தான் காணலாம். இவ்வழியே யொழியப் பிறவழிகள் இல்லையேயில்லை. இவ்வன்பே குடிகொண்டிருக்கும் சிவபெருமானை நாம் கிட்டிச் சேரவேண்டுமானுல், உலகமாயையிற் சிக்குண்ட ஆசாபாசங்களைக் களைந்து, கொலை, களவு, கள், காமம், குருநிந்தை யென்னும் பஞ்சமா பாதகங்களையும் நீக்கி அன்பென்னும் வலையை வீசவேண்டும். கடவுள் எங்குமிருக்கின்றார். பாலின்கண்

நெய்போலவும், பழத்தின்கண் இரசம்போலவும், பாட்டின் கண் பண்போலவும் எங்கும் வியாபித்திருக்கின்றார். அவ ரில்லாத இடமில்லை. அன்பு வலை வீசுகிறவர்களிடம் தான் அகப்படுவார். எங்கும் கடவுள் விளங்குகிறபடியால், சகல ஜீவன்களும் அவரது இருப்பிடமே. இப்பொழுது ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய மிருகங்களை நாம் சொந்தச் சகோதரர்களாகவே பாவிக்க வேண்டும். ஏனென்றால், நாம் முற்பிறப்பில் என்ன பிறவிகளாயிருந்து மேலான இம்மானி டப் பிறவியை யடைந்தோமோ அப்படியே இம்மிருக சாதி களும், மற்றும் ஜெந்துக்களும் மனித சரீரத்தை யெடுக்க முயல்கின்றன. மானிடப் பிறவியாற்றான் நாம் பிறவியை யொழிக்கலாம். ஏனெனில், கடவுளை யறிந்து வழிபட்டுய் யும் பொருட்டு மனிதப்பிறப்பிற்குப் பகுத்தறியும் தன்மை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுத்தறிவைக் கொண் டே நாம் இவ்வுலகில் வாழ்ந்து வரவேண்டும். இவை யெல் லாவற்றையும் விரிக்கிற் பெருகும். இனி நீ கேட்கவேண் டிய சந்தேகங்களைக் கேட்டறியலாம்'' என்று சாம்பசிவம் ஞானமிர்தத்திற்குச் சொன்னான்.

ஞானு:—''மாமா! ஆன்மா, கடவுள், சைவசமயம், மனிதப் பிறவியின் சிறப்பு முதலியவற்றை இப்போது நல் லாக விளங்கிக் கொண்டேன். ஆனால் சில சந்தேகங்களைக் கேட்க ஆரம்பிக்கின்றேன்,'' என்றாள்.

சாம்ப:—''குழந்தாய்! நன்றாகக் கேட்கலாம்'' என் றான்.

ஞானு:—ஆன்மா நித்திய மென்றும், உடல் அநித்திய மென்றும் தெரிய வருகின்றபடியால், அழியும் உடலைக் கொல்வதால் வரும் பாவமென்ன?

சாம்ப:—குழந்தாய்! கவனமாய்க் கேட்பாயாக:— உதாரணமாக ஒரு மண்குடமொன்றைச் செய்வதற்கு

நமக்கு முதலாவதாக துணைக் கருவிகளாகிய மண்ணும் தண்ணீரும் வேண்டும். இத்துடன் இவை யிரண்டையும் சேர்த்துக் குடத்தைச் செய்து முடிக்க ஓர் குயவனும் வேண்டும். குயவன் இல்லாமல் மண்ணும் தண்ணீருமிருந்தும், ஒருவித பிரயோசனமில்லை. இதுபோலப் பஞ்ச பூதங்களாலாக்கப்பட்ட இத்தேகமானது, ஜென்ம வினைகளுக்குத் தகுந்தபடி கடவுளா லாக்கப்பட்டிருக்கின்றது. இனி இத்தேகமில்லாமல் ஆன்மாவால் ஒன்றும் செய்யமுடியாது. அவ்விதமே, ஆன்மா வில்லாமல் தேகத்தாலும் ஒன்றும் செய்யமுடியாது. இப் பூமியின் கண்ணே வினைப் பயன்களை யனுபவிக்கும் பொருட்டே இவ்வான்மா உடலுடன் வசிக்கின்றது. உடலுட்னிருந்துதான், இவ்வான்மா சகல நன்மைகளையும் செய்து வினைப்பயனை யனுபவித்துப் பரமான்மாவினுடன் சேர்வதற்கு அன்பென்னும் பக்தியைச் செலுத்த வேண்டும். ஆகவே, இவ்வான்மா வசிக்கும் இத்தேகமானது ஓர் ஆலயத்திற்குச் சமானமாகின்றது. ஆன்மா அதில் வசிக்கும் கடவுளுக்குச் சமானமாகின்றது. ஆனதுபற்றி ஆலயத்திற்குச் சமமாகிய உடலை யழிப்பதால் இவ்வான்மா வசித்துய்யும் பொருட்டு விடாமல் அதற்குத் தடையாயிருப்பது முறைதானா?

ஞான:—சரி-சரி இப்போது தான் சிறிது விளங்குகின்றது. ஆனால் ஓர் உயிரைக் கொல்லும் பொழுது அவ்வுயிரின் வினைப் பயன்தான் எம்மைக் கொல்லும்படியேவினதென்று லென்ன?

சாம்ப:—"நன்றாயிருக்கின்றது. அப்படியாயின் உம்மை நான் இப்பொழுது கொல்ல, நீ சம்மதிப்பாயா? ஒரு காலமும் சம்மதிக்கமாட்டாய். இது முரட்டான கேள்வி. ஏனெனில், ஆன்மாக்கள் பக்குவமடைய வேண்டிய காலங்களில், உடலை விட்டு நீங்குவதே யொழிய, நாம் உயிரை

நீக்க நமக்குத் தத்துவ மொருநாளுமில்லை.''

ஞானு:—சிங்கம், கரடி, புலி, முதலிய மிருகங்கள், ஆடு மாடுகளைப் பிடித்துத் தின்பதும், பறவை, கோழி முதலிய பட்சி சாதிகள் தம்மிலும் சிறியதாகிய பூச்சி, புழு, எறும்பு முதலியவற்றைப் பிடித்துத் தின்பதும் வழக்கம்போல, மானிட சாதியாரும் தம்மிலும் சிறியதாகிய பிராணிகளைக் கொன்று தின்றாலென்ன? எமது ஆகாரத்திற்காகத்தான் அவைகள் படைக்கப்பட்டிருக்கின்றன வென்று எண்ணினாலென்ன?

சாம்ப:—குழந்தாய்! ஞானுமிர்தம்! கவனமாய்க் கேட்பாயாக:—சில சமயத்தவர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டிருக்கின்றாய் போலும். அவர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு மயங்க வேண்டாம். யான் நன்றாக விளக்கிக் காட்டுகின்றேன். இயற்கையிலேயே, உயிர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், ஒருவகை மாமிசம் தின்னத்தக்க அமைப்பையுடையனதாயும், இன்னோர் வகை தாவரம் மட்டும் புசிக்கக் கூடிய அமைப்பு வாய்ந்தவையாயும், மற்றோர் வகை இரண்டையும் புசிக்கக்கூடிய அமைப்பை யுடையனதாயும், படைக்கப்பட்டிருக்கின்றன. கரடி, புலி, சிங்கம் முதலியன மாமிசம் மட்டும் புசிக்குமே யல்லாது பிறிதொன்றல்ல. குரங்கு, ஆடு, மாடு, யானை, குதிரை, மான் முதலிய மிருகங்கள், இலை, காய், கனி முதலிய உணவுகளையே தின்னும். இனிமேல் மானிட சாதியார்க்கும் தாவரமே இயற்கைப் போசனமா யிருக்கின்றது. நாய், பூனை, கோழி, வாத்து, காகம் முதலிய மிருகங்களும், பட்சிசாதிகளும், இருவகைப் போசனத்தையு மருந்தக்கூடிய தன்மையுடையனதாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றன. சிங்கம், கரடி, புலி முதலிய மிருகங்களினுடைய பற்களுக்கும், தாவர போசனமே

இயற்கையிலமர்ந்துள்ள ஜீவராசிகளினுடைய பற்களுக்கும், அதிக வித்தியாச மிருக்கின்றது. சிங்கம், காடி முதலிய மிருகங்களினுடைய பற்கள் நீண்டதாயும், மாமிசத்தைக் கிழித்துத் தின்பதற்கு ஏற்றதாயும் காணப்படுகின்றன. அவைகளினுடைய கூரிய நகங்களைப் பார்த்தாலே மிக்க பயங்கரத்தைக் கொடுக்கும். ஆனால், மனுஷசாதியாருடைய பற்கள் தட்டையாயும் தாவர போசனத்திற் கேற்றதாயும் தெரியக் கிடக்கின்றன. தாவரம் மட்டும் தின்னும் மிருகங்களுக்கும் மனிதனைப் போலவே பற்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நன்றாக இதைப்பற்றி ஆலோசித்துப் பார்த்தால் மனிதவர்க்கத்திற்குத் தாவர போசனமே ஏற்றதெனத் தெரியவரும். மிருகங்களைப் போல, நாமும் மற்றப் பிராணிகளைப் பிடித்துத் தின்றால் மிருகங்களுக்கும் நமக்குமுள்ள பேத மென்ன? ஆறறிவுடைய மக்களென்று நம்மைச் சொல்வதற்கு ஏதும் காரணமிருக்கின்றதா? பகுத்தறியும் தன்மை யில்லாத மிருகங்களாகிய பசு, ஆடு, குதிரை, குரங்கு முதலியன தாவர போசனிகளாயிருக்கப் பகுத்தறிவுள்ள நாம் பிராணிகளைக் கொன்று தின்றால், அப்பிராணிகளினும் மிக்க கடையவ ரென்றே எம்மைச் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட எமக்குக் குலமேது நலமேது?

"  . . . . . . . . . . . . .
புலை யன்றன் மலமுண்ணு மெமையுண்ணும்
புலையர்க்குக் குலமென்ன நலமென்ன
கூ-கூ-வென்றன கோழி," என்னும்

வாக்கியம் எமக்கு நினைவில் வருகின்றது. ஒவ்வொரு ஆன்மாவும் தன் தன் வினையை யனுபவிக்க வுதித்ததே யன்றி ஒரு ஆன்மாவுக்காக இன்னோர் ஆன்மா படைக்கப் பட்டிருக்கின்ற தென்பது அறிவிலார் கொள்கையாகும். அங்ஙன

யாயின், காட்டில் வசிக்கும் சிங்கம், கரடி, புலி முதலிய மிரு கங்கள் புசிப்பதற்காகவே, மனிதர்களாகிய நம்மைக் கடவுள் படைத்திருக்கிறு ரென்று கருதி, ஏன் நம்மவருட் சிலரை இடையிடையே காட்டுக்கனுப்பலாகாது?

ஞானு:—மாமா! இப்போது விளங்கிவிட்டது. ஆனால் கொன்று தின்ருற்ருனே பாவமென் று சொல்லுகின்றீர்கள். மாமிசத்தை விலைக்கு வாங்கிப் புசித்தால் பாவம் வரமாட்டாது தானே?

சாம்ப.—"நீ கேட்கும் வினு மிகவும் நன்ருயிருக்கின்றது. விற்கின்றவர்கள், தாம் பணம் சம்பாதிப்பது ஒன்றைக் கருதியே யிருக்கின்ருர்களாதலால் அவர்கள் கொல்லும் பாவம் மிகக் குறைவாகும். ஏனெனின் வாங்கிப் புசிப்பவர்களுக்காகவே அவர்கள் உயிர்களைக் கொல்கின்ருர்கள். ஆனபடியால் புசிப்பவர்களுக்கே முழுப்பாவமும் சேர்கின்றது. புசிப்பவர்களாகிய நாம் புசிக்காவிட்டால், கொலை செய்து விற்கின்றவர்களு மிருக்கமாட்டார்கள். இக்கருத்தைக் கொண்டே பெருநாவலரும்,

> " தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
> விலைப்பொருட்டா லூன்றருவா ரில்"

என்று பாடியிருக்கின்றனர். இன்னும்

> "கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன்
> ஒன்றிய பொருள்கொடுத் துவந்து கொண்டவன்
> நன்றடு மடைமகன் நாவிற் பெய்தவன்
> என்றிவ ரறுவரும் நரகி லெய்துவார்."

என்னும் பாடலாலும் அறிந்து கொள்வாய்," என்றனன். பின்னும் சாம்பசிவம் ஞானமிர்தத்தைப் பார்த்துச் சொல்லுகின்ருன்:—"குழந்தாய்! நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, உனது வட்டிலில் ஓர் புழுவை அல்லது ஈயைக் காண நேர்ந்தால் என்ன செய்வாய்?"

ஞானா:—"அப்படியே யெல்லாவற்றையும் விட்டு விட்டுச் சாப்பிடாமல் எழுந்து விடுவேன்; அல்லாவிடில், வட்டிலிலுள்ள உணவை யெடுத்துப் புறத்தே கொட்டிவிட்டு மறுபடி சுத்தம் செய்த பின்னர்தான் புசிப்பேன்," என்றாள்.

சாம்ப:—இது, ஏன் இப்படியாகச் செய்யவேண்டும். புழுவுடன் சேர்த்துண்டா லென்ன?

ஞானா:—சீ—சீ தாங்கள் சொல்லவே உவாந்தியெடுக்க வருகின்றதே. வட்டிலிற் படைத்த சாதம் புழு விழுந்ததால் அசுத்தமாயிற்றே. அப்படிப்பட்டதை யார் தான் புசிப்பார்கள்?

சாம்ப:—"இவ்விதமாகச் சொல்கின்ற நீ, கோழியைப் பிடித்துக் கத்தக் கத்த அறுத்துப் பின் பக்குவமாக அப்பிரேதத்தை வெட்டிச் சட்டியிற் போட்டு ஆக்கிச் சோற்றில் சேர்த்துண்கின்றாயே? அதற்கு மனம் வருகின்றதா?"

இதைக் கேட்டவுடனே ஞானாமிர்தம் ஓங்காள மெடுத்தாள். பின் ஒருவாறு தெளிந்து சாம்பசிவத்தைப் பார்த்து, மாமா! தாங்கள் சொன்னதெல்லாம் சரியே. அதிக உண்மைகளை யானும் அறிந்துகொண்டேன். ஆனால் இன்னுமோர் சந்தேகமிருக்கின்றது. அதென்னவெனில், யாருக்காவது வருத்த மேற்படுமாயின் சில வைத்தியர்கள் கோழிச்சூப்பு போட்டுக் குடிக்கச் சொல்லுகின்றார்களே. அதற்கென் செய்வது?

சாம்ப:—குழந்தாய்! எமது சமய அறிவில் மேம்படாதவர்களே வைத்தியருடைய சொல்லைக்கேட்டு அப்படி நடப்பார்கள். சைவ சமயத்தில் அன்பும் அபிமானமுமுள்ளவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஏனெனில், கர்ம வினையை யனுபவிக்கவே வருத்தம் வந்ததென்பதை முதல் ஒருவன் உணரவேண்டும். இரண்டாவதாக, ஆன்மாக்கள் ஈடேறுவதற்குக் கொடுத்த வுடம்பை யிவன் அழிப்பதால்,

தான் அனுபவிக்கப் பிறந்த வினைகளுடன் இன்னும் கோழியைக் கொன்ற பாவத்தையும் சேர்த்துப் பாவ மூட்டையைக் குறைப்பதற்குப் பதிலாக இன்னும் பெரிதாகக் கட்டிக் கொள்ளுகின்றான். கோழிச் சூப்பிலிருந்து துவரம் பருப்பு, வெண்டைக்காய்ச் சூப்பு பதின் மடங்கு நல்லெனெ அநேக கற்றறிந்த வித்வ வைத்திய சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். மச்ச மாமிச வகையைச் சேர்ப்பதால் பலவித கெட்ட வருத்தங்களுண்டாகு மென்பதைச் சில மேலைத் தேசவாசிகள் கூடக் கண்டறிந்து அப்போசனத்தை விலக்கி நடக்கின்றனர். ஒருவன் தன் ஆயுள் முழுவதும் தேக சௌக்கிய முடையவனாகவும், திடகாத்திரனாகவும், அறிவிவேகியுமாக விருக்க விரும்பினால், அவன் மாமிச போசனத்தை விலக்கிச் சைவ உணவையே கைப்பற்ற வேண்டுமென்று அமெரிக்காவில் ஓர் பிரபல வைத்திய நிபுணர் கூறுகின்றார்.

ஞான:—மாமா! யான் தங்கள் நேரத்தைப் போக்குவது முறையன்று. என்றாலும் இன்னும் சில சந்தேகங்களிருக்கின்றன.

சாம்ப:—"குழந்தாய்! நேரம் செல்வதைப் பற்றிப் பாதகமில்லை. விஷயத்தை முற்றாக நீ யறிந்து கொள்ள வேண்டு மென்பதே எனது விருப்பம். அரை குறையிலிருப்பது பிசகு. ஆனதால் தோன்றும் சந்தேகங்களைக் கேட்டறிந்து கொள்வாய்," என்றனன்.

சபாபதிப்பிள்ளையும் மனைவியும் இச்சம்பாஷணையை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சாம்பசிவத்தின் கல்வித் திறமையைப் பற்றியும், விவேக அறிவைப் பற்றியும் வியந்து பேசினர். மணியும் கடிகாரத்தில் பதினொன்று அடித்தது. ஆனால் ஞானமிர்தம் இன்னும் சில சந்தேகங்களைக் கேட்கவே ஆரம்பித்

தாள். சாய்நாற்காலி மீது படுத்திருந்த சபாபதிப்பிள்ளை ஞானாமிர்தத்தைப் பார்த்து, "பிள்ளாய்! நேரமோ சென்று விட்டது. கெதியில் முடிக்கிற பருவத்தைக் காணவில்லை. சாம்பசிவத்தை யதிகம் தொந்தரவு செய்யாதே. அதி சீக்கிரத்தில் கேட்க வேண்டியதைக் கேட்டுக்கொண்டு சாம்பசிவத்தை நித்திரைக்கு போக விடவேண்டும்," என்றார்.

ஞானா:—ஐயா! இதோ முடிந்துவிட்டது. இன்னும் சிறிது நேரத்திற்குள் எனது சம்பாஷணை முடிந்து விடுமென்று சாம்பசிவத்தைப் பார்த்துக் கேள்வி கேட்பதற் கிடையில், பின்வருமாறு யோசிக்கின்றாள்:—"இவருடைய கல்விக்கும், ஞானத்திற்கும், விவேகத்திற்கும், நற்குணத்திற்கும், விசாலித்த அறிவிற்கும், மன்மதனை யொத்த அழகிற்கும், யார்தான் இவரை விரும்ப மாட்டார்கள். இவரை யன்றோ யான் விவாகம் செய்யவேண்டும். அப்படி யெனக்குக் கிடைக்குமாயின், என்ன தவம்தான் முற்பிறப்பில் செய்திருப்பேன்," என்று தனக்குள்ளே சாம்பசிவத்தின் மீதுள்ள ஆசையால் நினைத்தாள். பின்பு சாம்பசிவத்தைப் பார்த்து, "மாமா! எல்லாம் சொன்னீர்கள்; ஆனால் இன்னோர் வினாவைக் கேட்கின்றேன். அதாவது சிறு தெய்வங்களாகிய மாடன், முனியாண்டி, கறுப்பண்ணன், முத்துக்கறுப்பன், காட்டாரி, காளியாயி, மதுரைவீரன், மாப்பிள்ளைவீரன் முதலிய தெய்வங்களுக்கு மிருக பலியிட்டுண்டு உலகில் வழிபடுகின்றார்களே. இக்கொலையால் ஒரு பாவமு மேற்பட மாட்டாதா? தங்களுடைய நியாயங்கள் உலகில் பொருந்தத்தக்கதாய்க் காணவில்லையே; இதற்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்," என்றாள்.

சாம்ப:—"குழந்தாய், ஞானாமிர்தம்! சமய அறிவு அதிகம் கற்றுவிட்டா யென்றல்லவோ யான் எண்ணிவிட்டேன். பெண்கள் பேதமைக் குணத்தைக் காட்டிவிட்

டாய். உனக்குக் கற்றுக்கொடுத்த ஞான மெல்லா மெங்கே? சிறு தெய்வ வழிபாட்டைப் பற்றி முன்னொரு நாள் உனக்குச் சொல்லி யிருந்தேனல்லவா? சைவசமயிகளாகிய நமக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவுளாவர். அவரை யன்றி நாம் வேறு தெய்வங்களை வணங்கவேண்டிய விதி யொன்றையும் காணோம். தற்காலத்தில் நமது சைவசமய மக்களுட் பெரும்பாலார், சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பதைத் தெரிந்து கொள்ளாமல் குட்ட தேவதைகளாகிய கறுப்பன், மாடன், வழிமறிச்சான், வீரன் முதலிய ஆன்மாக்களைக் குல தெய்வங்களாகப் பாவித்து வணங்குகின்றார்கள். அத்தெய்வங்களுக்குக் காணிக்கையாகக் கணக்கற்ற ஆடு, கோழிகளை வெட்டிப் படைத்தும், கள் முதலிய பானங்களைப் படைத்தும் பின் அவற்றை யுண்டு களிக்கின்றனர். இவர்களை ஆறறிவுள்ள மனித சென்மமென்று சொல்வதெப்படி? உயிருள்ள பிராணிகளைக் கொல்வதற்கு எம்பெருமான் சம்மதிப்பாரா? அவர் அப்பிராணிகளை வெட்டிப் படைக்கும்படி கேட்கின்றாரா? அறியாமையினாற் செய்யும் செயல்களைக் கண்டு நாம் விதி யென்று எப்படி யெடுப்பது? இதனால் எமது சைவ சமயம் எப்படி முன்னுக்கு வரும்? இதனாலன்றோ புறச் சமயத்தவர்கள் கோடிக் கணக்கான தெய்வங்களை நாம் வைத்து வணங்குகின்றோ மெனச் சொல்லுகின்றனர். நமது சமயம் முன்னுக்கு வரவேண்டுமாகில், சிறு தெய்வ வழிபாட்டை யொழிக்க நம்மவருட் பெரும்பாலார் முன்னுக்கு வரவேண்டும். அறிவில்லாத மூட ஆத்மாக்களுக்குச் சைவ சமயத்தின் பெருமையைப்பற்றியும், சிவபெருமானைப் பற்றியும், அவர் செய்த திருவிளையாடல்களைப் பற்றியு மெடுத்துரைத்து, அவர்களைச் சைவசமய சிவநெறி பற்றி வாழ்வதற்குக் கொண்டு வரவேண்டும். அறியாதவர்கள் செய்யும் செய்கை

களை நீ இங்கே கொண்டு வருவது புத்தியல்ல. இன்னும் சந்தேகமிருந்தால் கேட்கக் கடவாய்," என்றனன்.

ஞான:—மாமா! மன்னிக்க வேண்டும். யான் இதைப்பற்றி முன்னர் தங்களிடம் கற்றிருந்தும் மறந்ததை யிட்டு மிக மனவருத்தப் படுகின்றேன். பல நியாயங்களுடன் இதையும் வாய் தடுமாறி யெடுத்துரைத்தேன். ஆனால் இப்போது நன்றாக விஷயத்தை யறிந்து கொண்டேன். எனினும் இன்னுமோர் சந்தேகமிருக்கின்றது. அதாவது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய கண்ணப்பர், மாமிசம் புசித்தும், மாமிசத்தைச் சிவலிங்கத்திற்கு முன்பாகப் படைத்தும், ஒரு பாவத்திற்கு மாளாகாமல் மோட்ச பதவி யடைந்தாரென்று படித்திருக்கின்றேமே. ஆதலால் நாமும் படைத்துப் புசித்தாலென்ன?

சாம்ப:—இதுவுமோர் நல்ல கேள்விதான். ஆனால், கண்ணப்பர் மாமிசம் புசித்தும், சிவலிங்கத்திற்குப் படைத்தும் முத்தி யடைந்தா ரென்பது மெய்தான். அதுபோல மற்றவர்களும் மாமிசம் புசித்தும், சுவாமிக்கு முன்பாகப் படைக்கவும் கூடாது. ஏனெனில், பூர்வ சென்மத்திற் செய்த புண்ணிய வசத்தால், அவர் மோட்ச பதவியடைந்தார். அவர் வேடர் குலத்துதித்து, வேடர் வழக்கத்தைக் கைப்பற்றிப் பட்சி மிருகசாதிகளை வேட்டையாடிப் புசித்து வந்தவர். அவருக்குப் பாவமின்ன தென்பதும், புண்ணியமின்ன தென்பதும் தெரியாது. நூல்களைக் கற்றவருமல்லர். பிறர் சொல்லக் கேட்டறிந்த வருமல்லர். பக்தி மிகுதியாற் செய்தாரே யன்றி, ஞானநூல்களின் விதிப்படி செய்தவரல்ல. இவரின் பக்தி மார்க்கத்தை நாம் எடுக்கக் கூடாது. அப்படி யெடுப்போமாயின் கண்ணப்பர் மாமிசம் நிவேதித்தது மல்லாமல், வாய் நீரால் சிவலிங்கத்திற்கு அபிடேகமும் செய்து, செருப்புக்காலால் உதைத்து மிருக்

கின்ருர். அவர் வழியைப் பின்பற்றி யார்தான் இவ்வுலகில் இந்த வேலையைச் செய்யக்கூடும்? அப்படிச் செய்தால் அவர்கள் போகும் நரகத்திற்கு மோர் எல்லையுமுண்டோ? இனி, அவர் தன் கண்ணைப் பிடுங்கிச் சிவலிங்கத்திற்கு அப்பியிருந்தார். யார்தான் இவ்வுலகில் தற்சமயம் தம் கண்ணை இவ்விதமாய்ப் பிடுங்க முடியும்? ஆனபடியால், குழந்தாய், ஞானமிர்தம்! அவரின் பக்தி மார்க்கத்தை நாமெடுப்பது பிசகு. பக்தி மிகுதியாற் செய்தனவற்றை நாம் விதி யென்றெடுக்கக் கூடாது. நமது சைவ சமய நூல்களின் கொள்கையைப் பின் பற்றியே நடக்க வேண்டும். இன்னும் சந்தேகங்களிருந்தால் கேட்கலாம்.

ஞாஞ:—மாமிசத்தைப் புசித்துக் கொண்டு வந்தவன், அது பாவமெனக் கண்டு இடையில் விட்டால் முன் தின்றதற்குப் பாவம் அனுபவிக்க வேண்டும்தானே. ஆனபடியால் தொடுகத் தின்பதே சரி.

சாம்ப:—நீ குழந்தையா யிருந்த பொழுது மலத்தைக் கையா லெடுத்துப் புசித்திருப்பாய். தற்சமயம் எடுத்துப் புசிப்பாயா? குழந்தையா யிருந்த காலத்தில் நிர்வாணமாயிருந்தாய். இப்போதும் அப்படியிருப்பாயா? ஆனதுபற்றி, நமக்கு அறிவு ஏற்பட்டு இது பாவமெனக் காண்பதால், தின்பவன் எவனுகிலும் உடனேயே விட்டு விடவேண்டும். அறிந்து கொண்டும் பாவங்களைச் செய்பவன் இன்னும் மேலான நரகத்திற்குப் போவா னென்பது திண்ணம்.

ஞாஞ:—தாங்கள் சொன்னவற்றை யொத்துக் கொள்ளுகின்றேன். ஆனுல், மாமிசம் புசிக்கப் பழகினவர்கள், இடையில் விட்டால் வாயு உண்டாகப் பார்க்கிற தென்றும், தாவரம் சாப்பிட்டால் ஜீரணிக்கிறதில்லை யென்றும், மாமிசத்தை விலக்கி நடப்பது மிகக் கடின மென்றும் சொல்லு

கின்றார்களே. அதற்கு என் செய்யலாம்.

சாம்ப:—இவ்வித சில்லறைக் கேள்விகளுக்கு விடை கொடுக்க யாரால் முடியும்? ஆற்றாதவன் கேட்கும் கேள்விகளை நீ குதர்க்கமாகக் கேட்கின்றாய். பெண்கள் பேதமைக் குணத்தைக் காட்டிவிட்டாய். என்னத்திற்கும் மனம்தான் காரணம். மாமிசபோசனத்தை விட்டுவிட மனமில்லாதவர்களே, இவ்வித வார்த்தைகளைச் சாதாரணமாகப் பேசுவார்கள். ஒரு காரியத்தை நன்றாக ஆலோசித்துப் பிழை யெனக் கண்டால், எந்த விதத்தும் பிழையைத் திருத்தி நடத்தவே யாரும் முன் வருவார்கள். யாராகுதல், காம மிகுதியால் தாய் சகோதரத்தைப் புணர்வதற்குத் துணிவாரோ? ஆன்படியால் பாவமெனக் கண்டவன் மனம் துணிந்து விட்டுவிடுவதே முறை.

ஞான:—மாமா! இன்னும் இரண்டொரு சந்தேகங்கள் தானிருக்கின்றன. அதாவது மாட்டிலிருந்து பாலைக் கறந்து அருந்துகின்றோம். அது உயிர் வதை யில்லையா? மாமிசத்தோடு சேர்ந்த இரத்தம் தானே.

சாம்ப:—சிவபெருமானுடைய பூசாதிரவியங்களுக்கு வேதாகம முறைகளால் விதிக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்னும் பஞ்ச திரவியங்களையும் தருகின்ற பசுவானது சரங்களுள் மிருக வர்க்கத்தில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. அதிலிருந்து பாலை யெடுப்பது வதை யென்று சொல்ல முடியாது. நாம் பசுவை உயிர் போகும்படி கொல்லவில்லை. கன்று குடித்து, விட்ட பாலைக் கறக்கின்றோமே யல்லாது அதை வதைக்கவில்லை. அதனால் அது உபத்திரவப்படவுமில்லை. அப்படியானால் பெண்களிடமிருந்து தேவைக்காக முலைப்பால் கறப்பதும் வதை யென்றல்லோ சொல்லவேண்டும். பசுவினிடமிருந்து பாலைக் கறக்கும்போது, சில முறைகளை நாம் அனுசரிப்பதே

தவிர, அதனது பாலை யெடுப்பது வதையல்ல. அதனால் ஒரு பாவமு மேற்படா தென்பதே வேதாகம நூல்களின் றுணிபு. குறைந்தது ஒரு மாசத்திற் காகுதல் பாலைக் கன்று பருகும்படி விடவேண்டும். அதன் பின்னர், கன்று பாலைக் குடித்து முலையை விடுத்த போதே நாம் கறத்தல் வேண்டும். ஆசை மிகுதியால் கன்றுக்குப் பால் கணக்காய் விடாமல் பின்னங்கால் முன்னங் கால்களை யிறுகக் கட்டி அதை யுபத்திரவப் படுத்திக் கறந்தவர் நரகத்திலே கிடந்தழுந்திப் பின் பூமியிற் பிறந்து பசி நோயால் வருந்தித் திரிவரெனப் புராணங்கள் கூறுகின்றன.

ஞானு:—சரா சரங்களெல்லாம் ஆன்மாக்களென்று முன் சொன்னீர்களல்லவா? அப்படியாயின் அசரங்களாகிய மரம், செடி, கொடி முதலிய தாவர ஆன்மாக்களைப் பக்குவமாகப் பிடுங்கி யாக்கிப் புசிக்கின்றீர்களே. அதுவும் பாவம்தானே. அவற்றிற்கு முயிருண்டுதானே. இக்கேள்விக்கு என்ன விடையளிக்கப் போகின்றீர்கள்.

சாம்ப:—(சிரித்துக்கொண்டு) பிள்ளாய், கவனமாய்க் கேள். சராசரமெல்லாம் ஜீவனுதலின் சொல்லப்பட்ட எழுவகைத் தோற்றத்துள் அசர ஜீவிகள் (தாவரங்கள்) தாழ்ந்த பருவத்தினை யுடையதாதலின் அசரமாகிய காய் கறி வர்க்கங்களைக் கொன்று புசிப்பதால் வரும் பாவம் மிகச் சிறிதாகும். இதைவிட சில மரங்கள், செடிகள் கொடிகளை வெட்டிப் பிறிதோரிடத்தில் வைத்தால் பின்பும் தழைத்து உயிர் பெற்று விடுகின்றன. இப்படியாகச் சரங்களிற் செய்ய முடியாது. இனிமேல் மண்ணிற் பிறந்த மனித ஜாதியார்க்கு உலகின் கண்ணே வாழ்வதற்கு உணவு வேண்டும். உணவு இல்லாமற் சீவிக்க முடியாது. கடவுளால் விதிக்கப் பட்ட தாவரத்தையே நாமுண்ணவேண்டும். மாமிசம் விலக்கப்பட்டதால் அதை நீக்கவேண்டும். அப்படி விலக்கி

நடவாதவர்கள் எமது சமய பிரமாணங்களைத் தவறி நடந்த வராவர். அவர்களுக்குப் பாவமே யொழியப் புண்ணியமே கிடையாது.

ஞான:—சரங்களைக் கொல்வதில் அதிக பாவமென்றும் அசரங்களாகிய தாவரத்தைக் கொல்வதில் மிகச் சிறிய பாவ மென்றும் தாங்கள் தானே சொல்லுகின்றீர்கள். ஆனபடி யால் பாவமென்றாற் பாவம்தானே. அப்படியாயின் சிறிய பாவத்திற்கு யாதேனும் நிவிர்த்தி யிருக்கின்றதா?

சாம்ப:—சரங்களிற் பாவம் கூடுமென்பதும் அசரத் திற் குறைவு மென்பதும் சரியே. ஆயின் ஆடு, கோழி முத லிய சரக் கொலையாற் செய்த பாவத்தை நிவிர்த்தி செய்ய முடியாது. இதனாலன்றோ

"கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையிலாத ஞானதத்துவ முணர்ந் திட்டாலும்
பொங்குறுபுலால் புசிப்போன் போய்நா கடைவனன்றே"

என்று வள்ளலார் சுவாமிகளும் பாடியிருக்கின்றனர். தா வரமாகிய அசரக் கொலையாற் செய்த பாவத்தை நிவர்த் திக்க வழியிருக்கின்றது. அதெப்படியெனில், அசர பதார்த் தங்களை நாள்தோறும் கடவுள், அக்கினி, குரு, அதிதிகள் என்னும் நால்வகையோர்க்கும் முன்னூட்டிப் பின்னுண் டால் இச்சிறிய பாவம் அன்றன்றைக்கே தீர்ந்துவிடும். இவை யெல்லாம் யான் என் மனம் போனபடி சொன்ன வையல்ல; வேதாகமங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பெரியோர் பலநூல்கள் வாயிலாக விளக்கியிருக் கின்றனர். அந்நூல்கள் சொல்லும் வண்ணம் நடக்க வேண்டியதுதான் எமது கடமை. அப்பொழுது தான் நாம் சைவரென்று அழைக்கப்படுவோம். வெளித் தோற் றத்திற்கு முருங்கைக்காய் நீள மளவு திரு நீற்றைப் பூசி

சங்கரா—சம்போ—சுப்பிரமணியா—என்று சொல்லிக்கொண்டு, கொலையும், களவும், கள்ளும், உருட்டும், பிரட்டும், அழுப்பும், பொறாமையும், அன்னியர் பணத்தைத் தட்டிப் பறிப்பதும், கோள் சொல்லலும், உலகத்தை யழுப்பிப் பொருள் பறிப்பதும், இன்னும் கெட்ட செய்கைகளையும் செய்யும் பாவிகள் உலகிலிருப்பதால் யாது பிரயோசனம்? இப்படிப் பட்டவர்கள், கடவுள் மேல் வைக்கும் அன்பு மெய்யன்பாக மாட்டாது. ஆனபடியால் குழந்தாய்! ஞானாமிர்தம்! இவ்விஷயத்தில் சந்தேகம் கொள்ள வேண்டிய காரணமென்ன? இன்னும் சந்தேகங்களிருந்தால் கேட்பாய்!

ஞானு:—அனேக சந்தேகங்கள் தீர்ந்துவிட்டன. ஆனால் தாய் தந்தையர் தம் பிள்ளைகளுக்கு இப்பழக்கத்தை இளமையிலேயே பழக்கி விடுகின்றார்களே. அதென்ன காரணம்? நற் பழக்க மென்று தானே அவர்கள் தம் பாலிய குழந்தைகளுக்குக் கூட மாமிசத்தை ஊட்டுகின்றார்கள். இதன் காரண மென்ன?

சாம்ப:—சைவ சமயத்தைப் பற்றி நினைக்காதவர்களும், பாவத்திற் கஞ்சாதவர்களும், தம் குழந்தைகளைத் தேறுவதற்கு விருப்பமில்லாதவர்களும், தம்பிள்ளைகள் நற் பழக்க முள்ளவர்களாக வருவதற்குத் தடையாயிருப்பவர்களும், இன்னும் இப்பேர்ப்பட்ட மேலான அறிவில்லாதவர்களே, தம் பாலிய குழந்தைகளுக்கு இந்தக் கொலைப் பாவத்தை முன்னுக்கே பழக்கி விடுகின்றார்கள். இவர்களைச் சைவர்களென்று சொல்வதற்கு ஏதும் பிரமாணமிருக்கின்றதோ யானறியேன். யானறிந்த வரையில், எத்தனையோ பேர்கள் தாம் குழந்தையா யிருந்த காலத்தில், இத்தீய பழக்கத்தைத் தம் தாய் தந்தையர் பழக்கி விட்டார்களே யென்று மிகவும் வருந்துகின்றனர். ஆஇ

யிலேயே இப்பழக்கத்தைப் பழக்காவிட்டால், தாம் தாவர போசனிகளாகவே நெடுக இருந்திருப்போமென்று சொன்ன அனேக பேர்களை யானறிவேன். எனினும் அனேகர் நல்லறிவடைந்தவுடன், இத்தீய பழக்கத்தை விலக்கி நடப்பதையும் யானறிவேன். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிப்படி, தாய் தந்தையர்கள் இத்தீய பழக்கத்தைச் சிறுவயது தொடக்கத்திலேயே தம் குழந்தைகளுக்குப் பழக்காமலிருக்க வேண்டும். இதனால் எமது சமயமும் இன்னும் மேலான நிலையை யடைந்துகொண்டு வரும். இனிமேலாவது இவ்விஷயத்தில் தாய் தந்தையர்கள் கவனம் செலுத்துவார்களா?

ஞான:—இக்கொலை விஷயத்தில் எல்லாச் சந்தேகங்களும் தீர்ந்துவிட்டன. இன்னுமொன்று தானிருக்கிறது. அதாவது, இக்கொல்லாமையே விரதமாகக் கொண்டு நன்னெறிப்படி நடந்து வருங்காலத்தில், யாரேனும் ஒருவன், தன்னை யறியாமல் நடக்கும்போதும், ஓடும்போதும், இருக்கும் போதும், கால்களுக்குள்ளகப்படும் ஈ, எறும்பு முதலிய சில ஜீவ செந்துக்களைக் கொல்ல நேர்ந்தால், அக்கொலையால் ஏதும் தோஷமுண்டோ?

சாம்ப:—குழந்தாய்! எவ்விஷயத்திலும் விலக்குண்டு. உதாரணமாக, ஒரு குருவுக்குக் கீழே யிருக்கும் நற்சீடனானவன் குரு வாக்கை நல்வாக்கெனமதித்துக் கீழ்ப்படிந்து நடந்து வருங்காலத்தில், யாதாயினும் ஓர் சிறிய பிழையைத் தன்னையறியாதபடி செய்ய நேரிட்டால், குருவானவர் அதைக் குற்றமாயெடாமல் மன்னித்து விடுவது வழக்கம்போல இவ்விஷயத்திலும் அவனை யறியாதபடி நடக்கும் கொலைகளாதலின், கடவுள் மேலுள்ள மிகுந்த பக்தியால் இத்தோஷமும் நசிந்து விடும். இன்னுமென்ன கேட்க யோசிக்கின்றாய்?

ஞானு :—மாமா! சகல போதனைகளையு மெடுத்து ஸாத்த பக்தியிற் சிறந்தவரே! இக்கொல்லாமையைப் பற்றி யான் கேட்க வேண்டிய சந்தேகங்களைக் கேட்டறிந்து கொண்டேன். ஆனால் பொதுப்பட இக்கொலையால் வரும் பாவங்களைப் பற்றியும் இதை விலக்கி நடந்தால் அடையும் பலன்களைப் பற்றியுமே கடைசியாகக் கேட்க விரும்புகின்றேன்.

சாம்ப :—"குழந்தாய்! சொல்லுகின்றேன் கேட்பாயாக:—நாம் சரீர மெடுத்தது சிவபெருமானை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே. இந்த மானிட ஜென்மம் எடுப்பது அரிதென்பதை முன்னரே சொல்லி விட்டேன். இனி, இவ்வுலகில் நாம் நெடுகச் சீவித்திருக்கவும் முடியாது. ஏனெனில் இவ்யாக்கை அநித்தியம். இதற்குப் பிரமாணம்,

"வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
றாழாதறஞ் செய்ம்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுறநின்றான் றிருக்கேதாரமெனீரே"

என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளும்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்று திருவள்ளுவரும்,

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவும் திடமில்லையே"

என்று தாயுமானவரும்,

"நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன் பூரணமே"

என்று பட்டினத்தடிகளும்,

"................
எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்"

என்று கபிலரும் இன்னும் மற்றும் வருவன வற்றாலும் காண்க. இவ்வாழ்க்கை அநித்தியமாதலால் இருக்கும் பொழுதே அறம் செய்ய வேண்டும். அறங்களுள்ளும் கொல்லாமையே மிகச் சிறந்ததாகும். இதனாலன்றோ தெய்வப்புலவரும்,

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

என்றருளி யிருக்கின்றனர். ஆதலின் தம்முயிர் போக விரும்பினும் பிற வுயிர்களைக் காப்பதே விரத மெனக் கொண்டோர் உயர்ந்தோராவர்.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்றார் முதற் பாவலரும்.

"நோன்பென்பது கொன்று தின்னாமை"—(ஔவையார்)

அதாவது ஒரு உயிரையும் கொன்று தின்னாமலிருப்பதே விரதமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இதனாலன்றோ தாயுமானவரும்,

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

என்று பாடியிருக்கின்றனர். இதைவிடத் தன்னுடம்பு பெருத்தற் பொருட்டென் றெண்ணி ஜீவ இரக்கமில்லாது பிறவுயிர்களைக் கொன்று புசிப்பதனால் ஒருவனுக்கு அன்பு எப்படி யுண்டாகும்? இவனுக்கு எப்படிக் கடவுள் அருள் கிடைக்கும்? இதற்குப் பிரமாணம்

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்,"—(குறள்)

"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு."—(குறள்)

கபிலரும், "புலையும், கொலையுங், களவும் தவிர்," என்றார். இப்படியாக அறநூல்களெல்லாம் கொல்லாமையைப் பற்றி முழக்கஞ் செய்து கொண்டிருக்க அவற்றைச் சிறிதுஞ் சிந்தியாது மாமிசம் புசிக்கும் மாந்தர்களைச் சைவர்களென்று என்னென்றுதான் அழைக்கலாம்? இவர்கள் போய் விழும் நரகத்திற்கு மோர் எல்லையுமுண்டோ?

**திருமந்திரம்.**

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே"

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
யெல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே."

**திருவள்ளுவர்.**

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு."

**வள்ளலார்.**

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னிடரெல்லாம் இன்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரையமென்றாற் புசித்தவர்க்கென் சொல்லுவதே"

**சிவஞான தீபம்.**

"எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன் கோவில்"

இன்னும் பிறவவற்றானும் கொல்லாமையே மிகச் சிறந்த அறமாகும். ஆனபடியால் ஒருவன் கொல்லா விரதமென்னும் மேலான அறத்தைக் கைக்கொண்டு நன்னெறிப்பற்றி

வாழ்ந்து வருவானாயின், இம்மையிலே சகல பாக்கியங்களை யும் பெற்று நற்கீர்த்தி யடைவது மல்லாமல் மறுமையிலே பேரின்பத்தையு மடைவா னென்பது திண்ணம். ஆனதால், குழந்தாய், ஞானமிர்தம்! நீயும் இன்று தொடக்கமாக மாமிச போசனத்தை விலக்கிக் கொல்லாமை யென்னும் அறத்தைக் கைப்பற்றி வாழவேண்டுமாறு சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றேன்,'' என்று சொல்லித் தன் சம்பாஷணையை முடித்தான்.

ஞான:—''தமிழ்ப் புலவரே! ''சர்க்கரைப்பந்தலின் கீழ்த் தேன்மாரி பொழிந்தது போல,'' இவ்வளவு ஞானங்களையு மெடுத்துரைத்ததற்காக யான் தங்களுக்கு மிகக் கடமைப் பட்டவளாக விருக்கின்றேன். எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தாலும் அவற்றின் சரியான பொருளைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டலே மிகவும் சிறந்தது. இதனாலன்றோ பெருநாவலரும்,

> ''செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
> செல்வத்து ளெல்லாந் தலை''

என்று கூறியிருக்கின்றனர். இதைவிடக் கற்றறிந்தார் சொல்லக் கல்லாதவர்கள் தன்னும் கேட்டாலும், அதிக அறிவு வளர்ச்சியை யடைவார்க ளென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. இதனாற்றான் நாலடியாரிலும்

> '' கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
> னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல் சிறப்பி
> னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
> தண்ணீர்க்குத் தான் பயந் தாங்கு''

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மாமா! யான் ''கொல்லாமை'' என்ற விஷயத்தைப் பற்றிப் பூரணமாக வறிந்து கொண்டேன். அறிந்து கொண்டும் மாமிசபோசனத்தை யுண்பேனாகில், பொல்லாப் பாவத்திற் காளாகுவேனாகை

யால், இன்று தொடக்கமாகவே மாமிச போசனத்தை விலக்கித் தாவர போசனியாய் ஆகிவிடுகின்றேன்,'' என்று ஞானமிர்தம் சொன்னாள். சாம்பசிவம் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷ முற்றான். இச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த சபாபதிப்பிள்ளையும் மனைவியும் சாம்பசிவத்தினுடைய கல்வித் திறமையைக் கண்டு மிக மெச்சினார்கள்.

ஓர் தாய் தந்தையருக்கு மக்கட்பேறு கிடைப்பது அரிது. அப்படிக் கிடைப்பினும் அறிவுள்ள மக்களாகக் கிடைப்பின் மிக அரிதாம். இந்த அறிவோடு கூடிய புகழும் கிடைக்கக் கூடிய புத்திரப் பேறடையப் பெற்றால் உலகில் வேறு என்ன பாக்கியம் தான் வேண்டும்? இதனாலன்றோ தெய்வப் புலவரும்,

> "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்று பாடியிருக்கின்றனர்.

இச் சம்பாஷணை முடிந்தவுடன் எல்லோரும் நித்திரைக்குப் போய்விட்டார்கள். ஆனால் ஞானமிர்தம் சாம்பசிவத்தினுடைய பேச்சு வல்லமையையும், ஞான அறிவையும், இன்னும் அவனுடைய மேலான நற்குணங்களையும் கண்டு அவன்மேல் முன்னுள்ளதைப் பார்க்கினும் அதிக அன்பு மேலிட்டு அவனுடைய எண்ணமே மனதிற் குடிகொண்டவளாய்ச் சதா யோசனையிலாழ்ந்து நித்திரை போயிருந்தாள்.

# ஏழாம் அத்தியாயம்.

"காதலின் நறுமணம்."

சென்ற மூன்றாம் அத்தியாயத்தில், சாம்பசிவம் பிறிதாக வீடெடுத்திருக்க வேண்டுமென்றும், தன் தாயாரைக் கூடிய சீக்கிரத்திலழைக்க வேண்டு மென்றும் எண்ணியிருந்தானென்று சொல்லியிருந்தோ மல்லவா? அதேபிரகாரம், சாம்பசிவம் தனது தாயாரை யாழ்ப்பாணத்திலிருந்து அழைப்பித்துக் கோலாலம்பூரில், வத்துரோட்டில், ஓர் வீடு வாடகைக் கெடுத்து இருவருமாக இருந்து வந்தார்கள். ஊரால் வந்திறங்கியவுடன், சாம்பசிவத்தின் தாயார் அம்பிகை யென்பவள் சபாபதிப்பிள்ளை வீட்டிற்கே வந்தாள். தான் விவாகம் செய்து கணவனிறந்ததைப் பற்றியும், பின் தன் தமயனார் கனகேந்திரம்பிள்ளை வீட்டில் வேலை செய்து வயிறு வளர்த்ததைப் பற்றியும் இன்னும் தான் பட்டகஷ்டங்க ளெல்லாவற்றையும், சபாபதிப்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் கண்ணீர் தாரை தாரையாக விழுந்து கொண்டிருக்க, எடுத்துரைத்த பின்னர், அவரை நோக்கி அம்பிகை யென்பவள், "ஐயா புண்ணிய சீலரே! எனது ஏழை மைந்தன்மேல் ஜீவ இரக்கங்கொண்டு, அவனைக் காப்பாற்றிப் படிப்பித்து, ஓர் முயற்சியையு மெடுத்துக் கொடுத்து, இந்நன்னிலையில் வைத்ததற்காக யான் என்ன கைமாறுதான் செய்வேன்! தங்களுடைய விசேஷ குணத்தை யான் எப்படித்தான் விரித்துரைப்பேன்! புண்ணிய குருவே! தரும சீலரே! ஜீவகாருண்ய முள்ளவரே! பரோபகார சிந்தனை ததும்பியவரே! *தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும், செல்வமும், புகழும், கீர்த்தியும், நீடூழி வாழ்வும் சிவபெருமான் மென்மேலும் அளிப்பாராக" என்று ஆசீர்வதித்துப்

பின்னும் ஒருவாறு புலம்பினாள். சபாபதிப்பிள்ளையின் மனைவி தங்கம்மாள் அவளைப்பார்த்து, "அம்பிகை! ஏன் அழுகின்றாய்? யாம் என்னத்தை விசேஷமாகச் செய்தோம். இவ்விதமாக எங்களைப் புகழ வேண்டியதில்லையே" என்று சொல்லி அம்பிகையைத் தேற்றினாள். இவ்விதமாகச் சாம்பசிவமும் தாயாரும் பிறிதாக வீடெடுத்து வாழ்ந்து வருங்காலத்தில், சாம்பசிவத்தின் தாயார் அம்பிகை யென்பவள் சபாபதிப்பிள்ளை வீட்டுக்கு இடையிடையே போய்க் கொண்டு வருவாள். இப்படியாகப் போய்க் கொண்டு வருங்காலத்தில், ஒருநாள் சபாபதிப்பிள்ளையின் மனைவி தங்கம்மாள், அம்பிகையைப் பார்த்து, "அம்பிகாய்! நீ விவாகமாகி உனது பர்த்தா, இறந்த பின்னால், இன்னுமோர் விவாகம் செய்திருந்தால், இவ்வளவு கஷ்டங்களையும் பட்டிருக்க மாட்டாயன்றோ? உலகத்திலே விதவா விவாகம் நடக்கவில்லையா?"

அம்பிகை:—"அம்மா, தாயே! தாங்கள் சொல்வது சரிதான். ஆனால் பெண்களுக்கு விதவா விவாகம் கற்புடையதல்ல. சுருங்கச் சொல்லுமிடத்து ஓர் பெண்ணானவள், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் கைவிடாமல் கொண்ட கணவனைத் தெய்வமாகக் கருதி எவ்விதத்தும் அவனுக்குக் கீழ்ப்பட்டுப் பக்தி விசுவாசத்தோடு நடப்பதுதான் "கற்பு" என்று சொல்லலாம். கற்பு தெய்வத் தன்மை பொருந்தியது; ஒரு வித மாசற்றது; எவ்வகைத் துன்பத்தினின்றும் நீங்கக்கூடிய வல்லமையுடையது; மிகப் பரிசுத்தமானது; ஆனால் இவ்வித கற்பானது ஒரு ஆடவன்—அதாவது கொண்ட கொழுநனிடம் மாத்திரமே பொருந்தி யிருக்குமே யன்றி வேறு ஆடவரை எள்ளளவேனும் சிந்திக்க உரிமையாயிருக்க மாட்டாது. இதனாற்றான் திருவள்ளுவரும்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

எனப் பாடியிருக்கின்றனர். அதாவது கற்பு நிலையினின்றும் வழுவாமல் தன்னைக்காத்துக் கொண்ட கொழுநனையும் உண்டி முதலியவற்றாற் பேணிப் பெண்களுக்குரிய நற்குணங்களி னின்றும் தவறாது சீராயிருப்பவளே "பெண்" என்று சொல்லப்படும். அப்படியாக ஒரு பெண் கற்பினின்றும் தவறாமல் தன் கொழுநனையே மாத்திரம் தெய்வமாகக் கருதி வணங்கி வருவாளேயானால் பெய் என்றவுடன் மழை பொழியுமாம்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்று பெரு நாவலரும் பாடியிருக்கின்றனர்.

"வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே"

இன்னும் பிறவவற்றானும் அறியலாம்.

ஒரு கணவனுடனிருந்து வாழ்க்கைப்பட்டு அவனிடம் மிகுந்த பக்தியாயும் கற்பாகவும் நடந்த ஓர் பெண்ணானவள், அவனிறந்த பின்னர், இன்னோர் ஆடவன் மேற் காதல் கொண்டு அவனை மணப்பாளாயின் அப்பெண்ணைக் கற்புடையவளென்று சொல்லுவ தெப்படி? இன்னும் நாலடியாரிலும்

"அரும்பெறற் கற்பி னயிராணியன்ன
பெரும் பெயர்ப் பெண்டிரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையேபேணு
நறுநுதலா ளன்மைத் துணை"

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது இந்திராணிக் கொப்பானவளானாலும், தன்னைத் தன் கொழுநன் தவிர பிறரிச்சியாதிருக்க அலங்காரஞ் செய்யாதிருப்பவளே கற்புடையவள் என்பதாம். ஆனபடியால், ஓர் பெண்ணானவள் தன் கொழுநன் இறந்த பின்னர், இன்னோர் ஆடவனை நோக்கினாலும், இச்சித்தாலும், மனத்தில் நினைத்தாலும், கற்புடை யவளாகமாட்டாள். இவற்றைக் கவனியாது அவள் திரும்பவும் மணம் செய்வாளாகில் அவளை விபசாரி யென்றேயான் சொல்லவேண்டும். ஏனெனின் கொண்ட கணவனுக்குத் துரோகம் செய்தவளாகின்றாள். கொண்ட கணவனுடன் பக்தியாக நடந்த ஓர் பெண்ணானவள், இன்னோர் ஆடவனுடன் பரிசுத்தமான அன்புடனிருக்க எப்படி மனங் கொள்ளுவாள்? அவளுடைய மனச் சாட்சியே விடமாட்டாதே. அம்மா தாயே! இது விஷயங்களைத் தாங்கள் கேட்டது மிகவும் ஆச்சரியத்தையும், ஒருபால் துக்கத்தையும் வருவிக்கின்றது, எனது நாதன் இப்பொழுதும் உயிருடன் தானிருக்கிறாரென்று யான் எண்ணியிருக்கின்றேன். எனது நடவடிக்கைகளை இப்போதும் தான் அவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அவருடைய உடல் மாத்திரம் அழிந்ததேயன்றி அவரது ஆன்மா இப்பொழுதும் நம்முடன் சம்பந்தப்பட்டேயிருக்கின்றது. எனது நாதன் மேல் யான் வைத்த பக்தி என்னுயிர் நீங்குமளவும் விட்டுப் பிரிய மாட்டாது. ஆகையாற்றான், யான் மறுவிவாகம் செய்து கொள்ளவில்லை. அப்படிச் செய்திருப்பேனாகில், என்னைப் பெண்ணென்று அழைப்பதற்கு ஓர் நியாயமுமில்லை. அத்துடன் போய் விழும் நரகத்திற்குமோர் எல்லையுமில்லை,'' என்றாள்.

தங்கம்மாள்—அம்பிகையைப் பார்த்து, "அம்பிகாய்! வருத்தப்படவேண்டாம்! யான் இதுவிபரம் தெரியாதபடி

யால் கேட்டேன். அத்துடன் உலகில் சில இடங்களில் மறு விவாகம் செய்து கொள்வதைக் கண்ணாரக் கண்டபடி யால், இதை விசாரித்தேனே தவிரப் பிறிதொன்று மல்ல,'' என்றாள். அம்பிகையின் கற்பு நெறியைப் பற்றியும் அவளின் ஞான அறிவைப் பற்றியும் சபாபதிப்பிள்ளையின் மனைவி தங்கம்மாள் மிக வியப்புற்றாள்.

இப்படியாகத் தங்கம்மாளும் அம்பிகையும் இன்னும் வேறு பல கதைகளையும் பேசி முடித்த பின்னர் அம்பிகை யென்பவள், தங்கம்மாளிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள்.

இங்கே ஒரு விஷயம் காட்டத்தக்கது என்னவெனில், புஷ்பவதியாகி முறைப்படி விவாகம் செய்து கணவனிறந்த பின்னர், இன்னோர் ஆடவனை விவாகம் செய்வதால் பெண்கள் கற்பு அழியு மென்பதை யொத்துக் கொள்கின்றோம். ஆனால், நமது நாட்டில், சில சாதியார்களுக்குள் பால்ய விவாக மென்னும் வழக்கம் நடந்து கொண்டு வருகின்றது. இவ்விவாகம் எப்படியெனில், பெண் பிறந்தவுடனாகுதல் அல்லது ஐந்து அல்லது ஆறு வயதானவுடன், அப்பெண்ணுக்கு ஓர் மாப்பிள்ளையைத் தேடி விவாக ஒழுங்கு பண்ணி விடுகின்றனர். ஆனால், இப்பெண்குழந்தைக்கு விவாக மென்றாலென்ன, கற்பு என்றாலென்ன, ஆடவன் என்றாலென்ன, இல்லற மென்றாலென்ன, என்று இவ்வித விஷயங்களைச் சிறிதேனும் தெரியமாட்டாது. இப்படியாகப் பேசிய பெண்ணின் குறித்த மாப்பிள்ளை சில மாசங்கட்குப் பின்னாலாவது அல்லது இவள் பருவ மடைவதற்கு முன்னராவது, இறக்க நேரிட்டால் இப்பெண்ணானவள் மறு விவாகம் செய்யமுடியாமல் தன் ஆயுள் முழுவதும் விதவையாயிருக்க நேரிடுகின்றாள். அந்தோ! இதென்ன கொடுமை! என்ன பரிதாபம்! பின்னால் இப்பெண் புஷ்பவதியாய் அறி

வு வந்த காலத்தில் தன் கதியை யுணர்ந்து இப்படியாக எனக்கு வந்து விட்டதே யென்று மனங் கலங்கித் தன் ஆயுள் முழுவதும் நிர்ப்பாக்கியமுள்ள ஜீவியத்துடன் முக்காடிட்டு வாழ் நாளைக் கழிக்கின்றாள். இப்பால்ய விவாக ஏற்பாட்டினால் தற்சமயம் இலட்சக் கணக்கான பால்ய விதவைகளிருக் கின்றார்களென அறிகின்றோம். சிலர் காம மிகுதியால் பல ஆடவர்களுடன் கூடித் தம்மிச்சையை நீக்குகின்றனர். இதனால் நமது நாட்டில் கற்பு மங்கிவர இயல்பு ஏற்படுகின்றது. பண்டைக் காலத்தில் இவ்வழக்கம் ஒரு சமயம் ஒரு வித பயனை யளித்திருக்கலாம். ஆனால் தற்காலத்திற்கு இவ்வழக்கம் கெடுதியை விளைவிக்கு மென்பதே அறிவாளிகளின் அபிப்பிராயம். "பழையன போதலும் புதியன புகுதலும்" என்றபடி தற்சமயம் எமது நாட்டின் சேமத்திற்கு இவ்வழக்கம் கெடுதியா யிருப்பதால் இப்பால்ய விவாகத்தை யொழிப்பதற்குக் கற்றோர்களும் பெரியோர்களும் முயற்சி யெடுக்க வேண்டுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இதைப்பற்றி விரிக்கிற் பெருகுமென விடுத்து எமது கதையின்பாற் செல்வாம்.

மேலும், சாம்பசிவம் அதிகம் கல்வி கற்றிருந்தபடியால் அவனுடைய பெயர் எங்கும் தொனியாய் விட்டது. சைவசமயத்தைப் பற்றிய பிரசங்கங்களும் செய்யத் தொடங்கி விட்டான். தேசத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணமும் அவனைப் பற்றிக் கொண்டே வந்தது. கற்றோர் சபையில் சாம்பசிவம் தலைமை பெற்று விளங்கினான். புதினப் பத்திரிகைகள் வாயிலாகவும் அவனுடைய பெயர் விளங்கி விட்டது. அனேகர் இவனுடைய கல்வி யறிவைக் கண்டு மிக ஆச்சரியப்பட்டனர். சாம்பசிவத்தினுடைய தாயாரும் தன் மகனின் கல்வித் திறமையை யறிந்து மிக்க களிப்பை யடைந்தாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்" —(குறள்)

சாம்பசிவத்திற்கு இப்போது வயது பதினாறுமேழும் என்று சொல்லலாம். உபாத்தி வேலையிலமர்ந்து ஏறக்குறைய நாலைந்து வருஷங்களாய் விட்டன. அழகில் மன்மதனை யொத்திருந்தான். சாம்பசிவம்மேல் ஞானாமிர்தம் என்பவள் வைத்த அன்பும் ஆசையும் ஈற்றில் அவன்மேற் காதல் கொள்ளவே நேர்ந்தது. ஆனால், சாம்பசிவம் அவளின் மேல் வித்தியாசமான எண்ணமொன்றையும் நினைத்தவனல்லன். ஞானாமிர்தம் சாம்பசிவத்தினிட மிருந்து பாடம் கற்றுக் கொள்ளும் வழக்கமும் நாட்கள் போக நிறுத்தி விடப்பட்டது. சாம்பசிவம் பிறிதாய் வீடெடுத்திருந்த படியால் அதிகமாகச் சபாபதிப்பிள்ளை வீட்டுக்கு வருவதில்லை. ஆனால் அவர் தனக்குச் செய்த நன்றியை யொருநாளும் மறந்தவனல்லன். ஞானாமிர்தம் என்பவள் தன் எண்ணத்தைச் சாம்பசிவத்துக்கு எப்படி வெளியிடலாமென யோசித்துத் தருணம் எப்போது வருமெனக் காத்திருந்தாள்.

இது இப்படியிருக்க, ஒரு நாட் சாயங்காலம் சபாபதிப் பிள்ளை சாய்நாற்காலி மீதிருந்து ஏதோ சில பத்திரங்கள் வாசித்துக் கொண்டிருக்கையில், தபாற்காரன் அவருக்காக வந்த கடிதங்களையும் புதினப் பத்திரிகைகளையும் கொடுத்து விட்டுச் சென்றான். புதினப் பத்திரிகைகளை ஒருபக்கமாக வைத்துவிட்டுக் காகிதங்களைத் திறந்து வாசித்தார். அக் கடிதங்களுள் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப் பட்டிருந்தது. அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

நல்லூர்,
ஆனி-மீ கவ

எனது அன்புள்ள மைத்துனர் அவர்களுக்கு எழுதுவது, இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்வண்ணமே தாங்களும் தங்களைச் சேர்ந்தோரும் இருக்கக் கடவுள் கிருபை செய்வாராக. தாங்கள் சீக்கிரம் ஊருக்குப் புறப்படுவதாகச் சில மாசங்கட்கு முன் எழுதியிருந்தீர்கள். தங்களுடன் முன் யான் யோசித்துத் தாங்களும் உடன் பட்டபடியே எனது மகன் ஜீவரத்தினம்பிள்ளையைத் தங்கள் மகள் ஞானுமிர்தத்துக்கு விவாகம் செய்து கொடுப்பதில் ஓர் தடையுமில்லை யென்பதைத் தெரிவிக்கின்றேன். ஞானுமிர்தம், தமிழில் மிகப் பாண்டித்தியம் பெற்று விளங்கி யிருக்கிருளென்று கேள்விப்பட்டு மிகச் சந்தோஷப்படுகின்றேன். அவளின் நல்லொழுக்கங்களைப் பற்றியும், மேலான அறிவைப் பற்றியும் இன்னும் பலர் சொல்லவும் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனல் நவீன நாகரீகம் முழுவதையும் வெறுத்தவளாகச் சிலர் பேசுகின்றனர். எனது மகன் ஆங்கிலேயம் அதிகம் கற்று பீ. ஏ. பரீட்சையிற் றேறித் தற்சமயம் நியாயவாதியாய் (Lawyer) வர இருக்கின்றமையாலும், தற்கால நாகரீகத்திலே அதிகம் பிடித்திருக்கின்றமையாலும், ஞானுமிர்தத்தின் நடைகள் அவனுக்குத் தோதாகவிருக்கமாட்டாதாகையால், சிறிது நவீன நாகரீகத்தில் அவளுக்குச் சிலவற்றைக் கற்றுக் கொடுக்கவேண்டும். அதாவது, சாயங்கால வேளைகளில், இருவருமாகச் சலன ரதத்தில் உலாத்துக்குப் போய் வரவேண்டும். பெண்கள் சங்கத்திற்குப் போய், அங்கு நடக்கும் விஷயங்களிற் பங்குபற்றி நடக்கவேண்டும். இன்னும் தற்கால நாகரீக முறைப்படியெல்லாம் செய்து வரவேண்டும். சில சமயங்களில், சில வெள்ளைத் துரைமார்களோடு ஆங்கிலேயத்திற் பேசிக் கை

குலுக்கி மரியாதையாக நடித்து வரவேண்டும். இவற்றிற் கெல்லாம் தங்கள் மகள் இசைந்தே நடக்கவேண்டும். விவாகம் செய்த பின்னர், இழுபறிப்பட்டுக் கொண்டிருப் பது நல்லதல்ல. இவற்றையெல்லாம் கவனித்து இப்பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டே வரவேண்டும். பெரும் பான்மையாகத் தற்காலத்துப் பெண்கள் இவ்வித நாகரீகத் தைக் கைப்பற்றிவரத் தங்கள் மகள் கருநாடக முறையை யனுசரிப்பது எமக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கின் றது. அப்படியாக இவ்விவாகத்தைச் செய்யத் தங்களுக்கு விருப்பமாயின், மேலே சொன்னவற்றை முக்கியமாகக் கவ னிக்க வேண்டும். அத்துடன் சீக்கிரம் ஊருக்குப் புறப் பட்டுவரவேண்டும். ஏனெனில் அதிகமானவர்கள் பெண் கொள்ளும்படி கேட்கின்றார்கள். சீனியர், யூனியர் என்று சொல்லும் ஆங்கிலேய பரீட்சையிற்றேறிய அனேக பெண் களிருக்கின்றனர். எனது மகனுக்கும் அவ்வித பெண் களை நாடத்தான் மனதில் விருப்பம். எனது ஆய்க்கினை யால் ஒருவாறு அடங்கியிருக்கின்றான். விவாகம் செய்கிற தானால் சீக்கிரம் தாங்கள் ஊருக்குப் புறப்படவேண்டும். எனது மகனும் சீக்கிரம் விவாகம் செய்யவேண்டுமென்றே நிற்கின்றான். ஆனால் ஞானமிர்தத்துக்குத் தற்கால நாகரீ கத்தை வடிவாய்ப் பழக்கிவிட வேண்டு மென்பதை மறுப டியும் நினைப்பூட்டி விடுகின்றேன். எல்லாவற்றிற்கும் தங் கள் மறுமொழியை யெதிர் பார்க்கும்

தங்கள் அன்புள்ள மைத்துனர்,

**காசிநாதபிள்ளை.**

இக்காகிதத்தை வாசித்து முடித்தபின்னர், சபாபதிப் பிள்ளை தன் மனைவியிடஞ் சென்று காகிதத்தை வாசிக்கக் கொடுத்தார்.

தங்கம்மாள்:—(சந்தோஷத்துடன்) "நாதா! இனிமேல் தாமதிப்பதில் ஒருவித பிரயோசனமில்லை. ஊருக்குச் சீக்கிரம் போவதற்கு வழியைப் பார்க்க வேண்டும். இன்னும் நாலைந்து மாசங்களால் ஊருக்குப் புறப்பட விருப்பதாகவும், காகிதத்திற் கண்டபடியே விவாகம் செய்து கொள்வதற்குக் கூடிய சீக்கிரத்தில் வந்து விடுவதாகவும், இன்னும் ஞானமிர்தத்துக்கு நவீன நாகரீகம் கற்றுக் கொடுக்கின்றோமென்பதாகவும் எனது அண்ணருக்கு உடனே காகிதம் எழுதிவிடுங்கள்," என்றாள்.

சபாபதிப்பிள்ளை:—ஆனால் நவீன நாகரீகம் எப்போது கற்கப் போகின்றாள்?

தங்க:—"நாதா! ஊருக்குப் புறப்படுவதற்குக் குறைந்தது நாலைந்து மாசங்கள் செல்லும், இந்நாலைந்து மாசங்கட்குள்ளாக நவீன நாகரீகத்தைப் பழக்கிவிடலாம். சாம்பசிவத்தினிடம் சொல்லிவிட்டால் சிறிது ஆங்கிலேயமும் கற்றுவிடுவாள்," என்றாள்.

சபா:—"பெண்ணே! நீ சொல்வது சரிதான். ஆனால் ஆங்கிலேயம் பெண்களுக்குத் தேவையில்லையென்பதாகத் தர்க்கம் செய்தவள், இனிமேல் ஆங்கிலேயம் படிக்கவும், மேல் நாட்டாரின் கொள்கைகளைப் பின்பற்றவும் எப்படி உடன்படுவாள்? அத்துடன் மாமிசத்தையும் விலக்கியிருக்கின்றாள்."

தங்க:—"நாதா! தாங்களே இவ்விதம் சொன்னால் அவள் எப்படித்தான் திருந்துவாள்? சும்மா—வீண் கதை பேசாமல் கடைக்குப் போய்த் தலைக்குப் பின்னிக் கட்டுவதற்குச் சிவப்பு நிறத்தில் மூன்று நாடாக்களும், பச்சையில் மூன்றும், நீலத்தில் மூன்று நாடாக்களும், நல்ல வாசனையுள்ள சவுக்காரமும், புசர்மாப் பெட்டியும், பாவாடைக்கு நல்ல சித்திரத்தையலுள்ள துணியும், (Embroidery) இன்

னும் அதற்குரிய துணிகளும், இரண்டு சோடி சப்பாத்துக்களும், நாலு ஜோடி கால் மேசுகளும், பட்டுக் கைக்குட்டைகளும், இன்னும் பெண்களுக்குரிய நவீன சாமான்களும் வாங்கி வாருங்கள். யான் அதிகம் முயற்சி யெடுத்து எப்படியும் நவீன நாகரீகத்தைப் பழக்கிவிடுவேன். ஆனால் இதெல்லாவற்றிற்கும் முன்னர் காகிதத்தை யெழுதி விடுங்கள்,” என்றாள்.

சபா:—“பெண்ணே—ஏதோ—உன் எண்ணத்தின்படியே நடக்கச் சித்தம்,” என்று சொல்லி ஊருக்குக் கெதியில் வந்து விடுவதாகவும், ஞானமிர்தத்துக்கு நவீன நாகரீகம் பழக்கப்படுவதாகவும், விவாகத்தை ஐப்பசி மாசத்தில் வந்து செய்து கொள்வதாகவும், காசிநாதபிள்ளைக்கு ஓர் காகிதமெழுதி மேல் உறைக்குள் வைத்து முத்திரை ஒட்டி யனுப்பிவிட்டுத் தன் மனையாள் சொன்ன சாமான்களை வாங்குமாறு ஓர் பெரிய கடைக்குள் நுழைந்தார்.

சபாபதிப்பிள்ளை வெளியே சென்றதும், தங்கம்மாள் ஞானமிர்தத்தினிட மணுகி, “என் அருமைக் கண்மணியே! நீ அனேக தமிழ் நூல்களைக் கற்றதை யிட்டு யான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். ஆனால் தற்கால நாகரீக முறைப்படி சிறிது ஆங்கிலேயமும் கற்றுக்கொண்டால் மிகவும் நல்லது. உன்னைப் போலொத்த பெண்களெல்லோரும் ஆங்கிலம் கற்றிருக்க, நீ மாத்திரம் அதைக் கற்காமலிருப்பது எனக்கு அதிக மனவருத்தத்தைக் கொடுக்கின்றது. பிள்ளாய்! இனிமேல் நாம் இவ்வூரில் அதிக நாட்கள் இருக்கவும் மாட்டோம்; உனது ஐயா, உபகாரச் சம்பளத்தில், இன்னும் நாலு மாசங்களால் ஊருக்குப் புறப்படயிருக்கின்றார். அதற்கு முந்தி நீ சிறிது ஆங்கிலம் கற்றுக் கொள்ள வேண்டும். உனக்கு, முன் கற்றுக்கொடுத்த சாம்பசிவத்தைக் கொண்டே ஆங்கிலம் கற்றுக் கொடுக்கலாம்.”




சாம்பசிவத்தினிடம் ஞானாமிர்தம் தன்னை விவாகம்
செய்யும்படி கேட்டல் 132-ம் பக்கம் பார்க்க.

ஞானுமிர்தம்:—(ஆங்கிலம் படிக்கவேணு மென்ற அபிப்பிராய மில்லாவிட்டாலும் சாம்பசிவத்தினிடம் தருணம் வாய்ந்த பொழுது தன தெண்ணத்தையும் வெளி விடலா மென்ற யோசனை மனத்தி லுதித்தவளாய்) "அம்மா! மிகவும் நல்லது. சிறிது ஆங்கிலம் கற்றுக்கொள்ள எனக்கும் விருப்பமாய்த் தானிருக்கின்றது. தமிழைக் கல்லாது ஆங்கிலம் கற்பதுதான் மிகவும் கெடுதி. ஆனல் யான் தமிழில் அதிகம் கற்றபடியால் சிறிது ஆங்கிலமும் கற்றுக் கொள்வது மிகவும் நலம்தான்," என்ருள்.

இதைக் கேட்ட தங்கம்மாள் மிகவும் சந்தோஷமுற்றுத் தன் புதல்விக்குப் படிப்படியாக நவீன நாகரீகத்தைப் பழக்கி விடலாமென எண்ணிக்கொண்டாள். இதற்கிடையில் சபாபதிப்பிள்ளையும் நவீன சாமான்கள் வாங்கிக் கொண்டு வீடுவந்து சேர்ந்தார். வந்தவுடன் தங்கம்மாள் தம் புதல்வி ஆங்கிலம் கற்க விருப்பமாயிருப்பதைப் பற்றித் தன் நாயகனிடம் அறிவித்தாள். சபாபதிப்பிள்ளையும் சிறிது சந்தோஷப்பட்டார். பின் சாம்பசிவத்தினிடம் போய்த் தன் மகளுக்கு ஆங்கிலம் கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். இவ்வளவு காலமு மிருந்து விட்டுத் தற்சமயம் ஆங்கிலம் கற்பிக்குமாறு என்ன காரணம் கொண்டு விரும்பினர்களோ வென்று சாம்பசிவம் மிக அதிசயப்பட்டான். ஆங்கில பாடம் கற்றுக் கொடுக்க ஒவ்வொரு நாளும் அந்திப் பொழுதில் சபாபதிப்பிள்ளை வீடு வருவான். ஞானுமிர்தத்திற்குத் தற்சமய முண்டான ஆனந்தம் கொஞ்சமல்ல. சிறிது காலமாகச் சாம்பசிவத்துடன் சம்பாஷிக்க முடியாமலிருந்து தற்சமயம் மறுபடியும் அவனுடன் கூடயிருந்து பேசவும் கற்கவும் நேர்ந்தமை அவளுக்கு மிக்க ஆனந்தத்தைக் கொடுத்தது. இப்படியாக ஆங்கிலம் கற்று வருங் காலத்தில் அவன்மேல் வைத்த மிக்க அன்பினல் பின் வரு

மாறு யோசிக்கலானாள்:—

"ஆகா! என்ன அழகு! இவருடைய புருஷ லட்சணத்தை எப்படித்தான் விபரிக்கலாம்! இவரின் கல்வித் திறமைக்கு யார்தான் நிகர் நிற்க முடியும். இவரின் தயாள குணமும், தரும சிந்தனையும், ஜீவ இரக்கமும், கோப மின்மையும், பொறுமைக் குணமும், இன்னும் இவருடைய நற்குணங்களை எவ்வாறு விரித்துரைப்பேன். இவரன்றோ எனக்குகந்த கண்ணாளன். இவரையே யான் விவாகம் செய்ய வேண்டும். மனதார இவரையே யான் நினைத்துவிட்டேன். பெண்கள் பல புருடரை விரும்புவதுதான் அழகல்ல. எனது எண்ணத்தை அவரிடம் எப்படித்தான் வெளியிடுவேன். மனம் துணிந்து வாய்விடப் பயமாயும், ஒருபக்கம் வெட்கமாயு மிருக்கின்றதே. அப்படியாக யான் வாய்விட்டுக் கேட்ட பின்னர் அவர் ஒரு சமயம் மறுத்து விட்டால், எனது ஜீவியம் என்ன நிர்ப்பாக்கிய மடையுமோ தெரியாது. எவ்விதத்தும் யான் தருணம் வரும் சமயத்தில் எனது எண்ணத்தை வெளியிடவேண்டும்," என்று எண்ணாததெல்லா மெண்ணித் தருணத்தை யெதிர் பார்த்திருந்தாள்.

இப்படியாகச் சாம்பசிவம் ஞானமிர்தத்திற்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்குங் காலத்தில் ஓர் நாள் சாயங்காலம் ஆறுமணி யளவில் சபாபதிப்பிள்ளையும் தங்கம்மாளும் யாரோ ஓர் சினேகிதர் வீடு போயிருந்தனர். திரும்பி வருவதற்குச் சிறிது நேரமாகுதல் செல்லுமென்று ஞானமிர்தத்திற்குத் தெரியும். சாம்பசிவமும் இதற்கிடையில் வழக்கம் போல் வந்து சேர்ந்தான். ஞானமிர்தம் தன் அறைக்குளிருந்து பாடங்களை மிக்க கவனமாகப் படிப்பது போல நடித்துக் கொண்டிருந்தாள். அவளின் சகோதரர்களிருவரும் வேறு அறைக்குள் படித்துக் கொண்டிருந்தார்கள். வீட்டிலிருந்த சமையற்காரன் இராமனென்பவன்

தன் குசினி வேலை யெல்லாம் முடித்து விட்டபடியால் வெளியே கதவண்டையில் காவலாக உட்கார்ந்திருந்தான். ஞானமிர்தம் தான் ஊருக்குப் போவது மிகச் சமீபித்து விட்டபடியாலும், இனிமேல் சாம்பசிவத்தோடு பேசிக் கொண்டாடுவதற்குத் தக்க நேரம் வருமோ வென்ற சந்தேகத்தினாலும், அன்றைக்கே தன் எண்ணத்தை யவனிடம் வெளியிடத் துணிந்தாள். சாம்பசிவமும் அவளிருந்த அறைக்குட் சென்று நாற்காலி மீதுட்கார்ந்தான். ஆனால் ஞானமிர்தம், ஏதோ ஒரு விஷயத்தில் மிக்க யோசனையி லாழ்ந்திருப்பது போல மேலே பார்த்துக் கொண்டிருந் தாள்.

சாம்ப:—குழந்தாய்! ஞானமிர்தம்! என்ன யோசிக் கின்றாய்? ஏதோ பெரிய விஷயத்தில் மனதைச் செலுத்து கின்றாய் போலும். யாதேனும் படித்த நூல்களில் சந்தே கம் தோன்றுகின்றதா?

ஞான:—மாமா! யான் தங்களிடம் ஓர் விஷயம் கேட் கும் பொருட்டு வெகு நாட்களாக எண்ணியிருந்தேன். கடவுள் செயலால் இன்றுதான் கேட்கலாமென்று யோசிக் கின்றேன்.

சாம்ப:— அதென்ன விஷயம்? பயப்படாமற் சொல் வாய்!

ஞான:—"அவ்விஷயத்தைச் சொன்னால், அதற் குடன் பட்டு நடப்பீர்களா? அப்படியானால் எனக்கு முன் னதாகவே வாக்குப் பண்ணுங்கள்," என்றாள்.

சாம்ப:—உடன்படக்கூடிய விஷயமானால் வாக்குப் பண்ணுவேன்.

ஞான:—உடன்பட்டு நடக்கக்கூடிய விஷயத்தைத்தா னே தங்களிடம் கேட்பேன்.

சாம்ப:—விஷயத்தைச் சொல்லு! பின்னால் யான் அதற் குத்தரமளிப்பேன்.

ஞானு:—"யான் தங்களுடனிருக்கவே எண்ணங் கொண்டேன்," என்று மெதுவாகச் சொன்னாள்.

சாம்ப:—குழந்தாய்! அதென்ன? சரியாய் எனக்கு விளங்கவில்லை. இப்பொழுதும் என்னுடன் தானே யிருந்து பேசுகின்றாய்.

ஞானு:—(மிக நாணி) "யான் தங்களை...விவா...க ...ம்...செய்து கூடயிருக்கவே எண்ணிவிட்டேன்," என்று அரை குறையாக வாய்க்குள் மெதுவாகச் சொன்னாள்.

சாம்ப:—(பெலத்துப் பேசவும் பயமாயிருக்கின்றது) "பரமசிவமே! என்னே! உன்—துணிவு! கற்ற கல்வியெல்லாமெங்கே? பெண்கள் பேதமைக் குணத்தைக் காட்டிவிட்டாயே. உனது தாய் தந்தையர் இல்லாத நேரத்தில் இவ்வித பேச்சைப் பேச உனக்கு எப்படி மனத் துணிவு உண்டானது? இப்பேச்சை இவ்வளவில் நிறுத்திவிடக்கடவாய். இல்லாவிடில் யான் இந்தட்சணமே சென்று விடுவேன்," என்றான்.

ஞானு:— (சிறிது மனத்துணிவுடன்) "என்னை விவாகம் செய்து கொள்வே னென்று வாக்குப்பண்ணு வீராகில் இப்பேச்சை இவ்வளவில் நிறுத்துவேன்," என்றாள்.

சாம்ப:—"எனது குழந்தாய்! மோசம் வரப் போகின்றது. வீணான கதைகளைப் பேசாமல் உனது பாடங்களைப் படிப்பாய்," என்றான்.

ஞானு:—"யான் வீண் கதை பேச இங்கே வரவில்லை. நல்ல கதையைத்தான் பேசுகின்றேன். ஸ்திரீகள் பலபுருடரை விரும்புவதுதான் மிக்க கொடிதாகும். ஆனால் யானோ தங்களை மாத்திரம் மனதார நினைத்துவிட்டேன். தங்

கள் குணநிசயங்களும், கல்வித் திறமையும், அழகும் என் பாற் பற்றிவிட்டன. இனிமேல், தாங்கள் இவ்விஷயத்தில் மறுத்தால் என்கதி அதோகதிதான் என்பதை யுணர்ந்து கொள்ளுங்கள்,'' என்றாள்.

சாம்ப:—அவளைப் பார்த்து, யான் சொல்வதைச் சிறிது கவனமாய்க் கேட்பாயாக:—''யானோ வறிய குடும்பத்தி லுதித்தவன். மிக ஏழையாக வளர்ந்தவன். முட்டாள் வேலை செய்து ஜீவனம் பண்ணினவன். எனது தாயோ அடிமை வேலை செய்து வயிறு வளர்த்தவள். 'அப்படிப் பட்ட வறியவளுடைய பிள்ளையை நீ விரும்புவது அழகல்ல. உனது தாய் தந்தையருக்குக் கௌரவக் குறைவை ஏற்படுத்தவா எண்ணினாய் போலும்? உனது பிதாவோ நற்குலத்திலுதித்தவர்; சற்பாக்கிய மடையப் பெற்றவர்; தருமகுண சீலர்; பெரிய உத்தியோகத்தி லமர்ந்தவர்; சற்குண சீலர்; இனஜன முடையவர்; அவர் உங்கள் குலத்திற் கேற்ப உனக்குத் தகுந்த கண்ணாளனை விசாரித்து விவாகம் செய்து வைப்பார். சிறிதும் யோசியாமல் உங்கள் வீட்டிலே பிச்சை யேற்றுப் பிழைத்த அடியேனாகிய ஏழையை நீ விரும்புவது கௌரவமல்ல. இது விஷயம் உனது பெற்றோர் அறிய வருமாயின் என்மேற் தான் குற்றம் சுமத்துவார்கள். ஈற்றில் எனக்கும் கெட்டபேர் விளைவிக்க நீ துணிந்து விட்டாய் போலும்! பெண்கள் பேதமைக் குணத்தைக் காட்டி விட்டாய். ஆனபடியால், ஞானமிர்தம்! என் மேலுள்ள விருப்பத்தைத் தொலைத்து நல்மனதுடையவளா யிருப்பாயாக,'' என்று சாம்பசிவம் சொன்னான்.

ஞான:—''பேதமை யென்பது மாதர்க் கணிகலம்,'' என்று ஔவைப்பாட்டியாரே சொல்லியிருக்கின்றார். எவ்வளவு கல்வியைக் கற்றிருந்தாலும் பெண்களுக்குப் பேதமைக் குணமுண்டுதான். ஆனால் யான் கேட்டவற்றால்

தாங்கள் அடைந்த அவமான மென்ன? தங்களை "நாதா" என்று கூப்பிடவே மனம் ஏவுகின்றது. யான் தங்களை மணப்பதற்குத் துணிந்திருக்கும் பொழுது தாங்கள் மறுப்பது தகுதியல்ல. "கைநிறைந்த பொன்னைப் பார்க்கிலும் கண் நிறைந்த கணவனன்றோ," விசேஷம். அது போலத் தங்களை யான் மனதில் எப்போது நினைத்தேனோ இனிமேல் அதை மறப்பது முடியாத காரியம். ஆனதால் என் எண்ணத்திற்குத் தாங்கள் இணங்கி வரவேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகின்றேன்," என்றாள்.

சாம்ப:—"மோசம் வரப் போகின்றது. இப்பேச்சை இவ்வளவில் நிறுத்துவாய். இந்நேரத்தில் இவ்வித வார்த்தையாடுவது உன்னைப் போலொத்த பெண்களுக் கழகல்ல. உன் தாய் தந்தையர் இது விபரம் அறிந்தால் என் கதி அதோகதிதான். உன்னிலே குற்றமிருப்பினும் என்னையே யிகழ்ந்து என்மேல் குற்றம் சுமத்துவார்கள். பின்வரும் காரியங்களைச் சிறிதேனும் சிந்தியாது என்ன துணிவுடன் நீ இவ்விஷயத்தைக் கேட்டாய். உன் தாய் தந்தையர்கள் வரும் நேரமாய் விட்டது. வீணான கதைகளைப் பேசாமல் உன் பாடங்களைப் படிப்பாய்," என்றான்.

ஞான:—(கிட்டவணுகி) "என்னை விவாகம் செய்து கொள்வேன் என்று வாக்குப் பண்ணுவீராகில் யான் இவ் விஷயத்தை நிறுத்துவேன்," என்றாள்.

சாம்ப:—"குழந்தாய், ஞானாமிர்தம்! ஏழையாகிய என்னை ஏன் வீணாக நினைக்கின்றாய். உனக்கு விவாகம் செய்து கொடுக்கத் தாய் தந்தையர் இருக்கின்றார்கள். அவர்கள் விரும்பி வருங்காலத்தில் யான் உன்னை விவாகம் செய்து கொள்ளலாம்," என்று அவளுடைய ஆய்க்கினை

யால் வேண்டா வெறுப்பாகச் சம்மதம் கூறினான். இதற்கிடையில் வெளியே போயிருந்த சபாபதிப்பிள்ளையும் மனைவியும் வீடு வந்து சேர்ந்தார்கள். நேரமாய் விட்டபடியால் சாம்பசிவமும் உடனே விடை பெற்றுக் கொண்டு வீடு செல்லலாயினான். போகும் பொழுது சாம்பசிவம், "ஐயோ—பெரிய மோசம் வரப் போகின்றதே, இவ்விஷயம் ஞானமிர்தத்தின் தந்தைக்குத் தெரியவந்தால் என்னைக் கெட்டவன் என்றல்லவோ இழிவாகப் பேசுவார். இப்பெண்ணோ என்னில் மிக்க காதல் கொண்டிருக்கின்றாள். அவள் மனம் என்னையே பற்றிவிட்டது. இனிமேல் அவள் என்ன கோலங்களைக் கொள்ளுவாளோ யானறியேன். ஆனால், தாய் தந்தையர் என்ன எண்ணத்துடன் இருக்கின்றார்களோ தெரியாது. அவர்கள் இவ்விஷயத்தை யெடுத்துப் பேசினாலும் குற்றமில்லை. இதற்கு யான் என்ன செய்வேன். நடந்த சம்பாஷணையை அவள் தந்தைக் கறிவிக்கவும் பயமாயிருக்கின்றதே. அப்படி யறிவித்தாலும் எல்லாம் என் சூழ்ச்சியென்றே விளங்கிக் கொள்ளுவார்," என்று எண்ணுவதெல்லாம் எண்ணித் தன்மேல் ஏதும் குற்றம் வருமோ வெனப் பயந்தவனாய்ச் சதா யோசனையிலாழ்ந்து கொண்டே சென்றான். ஞானமிர்தமும் தான் கேட்டதற்குச் சாம்பசிவம் சம்மதிக்கவில்லையே யென்று மிகவும் வருந்தினவளாய் முகத்தில் ஓர்வித சந்தோஷமு மில்லாது பெரிய வாட்டத்துடனிருந்தாள். தான் முக வாட்டத்துடன் இருப்பதைத் தன் தாய் தந்தையருக்குத் தெரியாதபடி நடித்துக் கொண்டாள்.

---

## எட்டாம் அத்தியாயம்.

"நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்."

மலாய் நாட்டில், கிள்ளான் என்னும் பட்டினத்தில், உத்தியோகம் வகித்திருந்த கனகசூரியர் என்பவர் தனது மனைவியார் இறந்தபடியால், மறுபடியும் விவாகம் செய்ய வேண்டுமென்று எண்ணமுள்ளவராய், பெண் ஒழுங்கு பண்ணிக்கொண்டு வரும் பொருட்டு ஒரு கடிதம் யாழ்ப்பாணம் தாகர் கந்தப்புவுக்கு எழுதியிருந்தாரென்று சென்ற இரண்டாவது அத்தியாயத்திற் சொல்லியிருந்தோம். மேலும் கனகசூரியர் காகிதமெழுதி இரண்டு மாசங்கள் சென்றும் மறுமொழி கிடைக்காததால் மிகவும் விசனப் பட்டார். என்றாலும் ஒருநாட் காலமே பத்து மணியளவில் கொழும்பிலிருந்து கப்பலேறி விட்டதாகத் தந்தியொன்று தாகர் கந்தப்புவினிடமிருந்து கிடைத்தது. கனகசூரியருக்குண்டான ஆனந்தம் எவ்வளவென்று சொல்லமுடியாது. ஆனந்தமேலீட்டினு லென்ன செய்வதென்றும் தோன்றாது சிறிது நேரம் யோசனையிலாழ்ந்திருந்தார். பின்பு தனது வீட்டிலிருந்த சாமான்களெல்லாம் பழசு பட்டிருந்தபடியாலும், சில சாமான்கள் இல்லாமலிருந்தபடியாலும், சீக்கிரம் விவாகம் செய்துகொள்ளப் போவதாலும், புதுச்சாமான்கள் வாங்கிவரும் பொருட்டும், இன்னும் விவாகச் செலவுகளுக்குமாகக் கைவசம் பணமில்லாததால் 'க. ப. ச. ம. வி. உ. தம்பிச்செட்டியாரிடம் சென்றார்.

தம்பிச்செட்டியாரின் விசேஷ குணத்தைச் சிறிது காட்ட விரும்புகின்றோம். தம்பிச்செட்டியார் மிகவும் தர்ம குண சீலர். பொறுமையும் சாந்தமு முள்ளவர். கோபமென்பதே அவரிடம் கிடையாது. பணத்தில் வாஞ்சை

யில்லை. பெருமைக் குணமென்பதே கிடையாது.—முருகன் பக்தியில் மிகச் சிறந்தவர். மெய்யான அன்பையுடையவர். சில செட்டிமார்களைப் போலக் கோவிலிற் சென்று சங்கரா—சங்கரா—சம்போ—கெங்காதரா—முருகா! என்று சொல்லிப் பக்தியாக நடித்துக் காட்டிப் பின் வீட்டிற் போய் அன்னியர்களிடமிருந்து அநியாய வட்டி வாங்குவதே கிடையாது. அநியாய வட்டி வாங்குவதால் ஈற்றில் எவ்விதத்தும் தீங்கு விளையு மென்பதை நன்றாக வுணரப் பெற்றவர். பணம் வாங்கவரும் ஆட்கள் கடைக்கு வந்தால் "அடே! கறுப்பையா! என்னடா செய்கின்றாய் எடே, கழுதை! சாப்பாட்டிராமா! உன்னை யிங்கே கணக்கன் என்று வைத்திருப்பதில் என்ன பிரயோசனம்? நடைப் பிணமே! மோட்டுக் கழுதை! சாப்பாட்டிராமா! மனுஷர் வந்திருப்பதைக் கவனிக்கவில்லையா? சுருட்டு வெற்றிலை யெடுத்து வாடா!" என்று கபடமாக ஆசை வார்த்தை சொல்லி மிக அன்பாக உபசரித்துப் பின்னர் பணத்தைக் கொடுத்து அநியாய வட்டி வாங்கும் சில செட்டிமார்களைப் போலல்லாது, மிக நேர்மையும் நீதியுமுடையவர். இப்படியான விசேஷ குணங்கள் அமைந்திருந்தமையால் கடவுளும் அவருக்கு மென்மேலும் அதிக செல்வத்தை யள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

தம்பிச் செட்டியார் கனகசூரியரைக் கண்டதும் "வாருங்கள்—வாருங்கள்! ஏதோ மிக்க அவசரமாக கடும் வெய்யிலென்றும் பாராமல் வெளிக்கிட்டிருக்கின்றீர்களே. காரணம் என்னவோ?" என்றார்.

கனகசூரியர்:—"செட்டியாரே! விசேஷ மொன்றுமில்லை. யான் இரண்டாவது விவாகம் செய்ய வேண்டுமென்று தங்களுக்கு முன் சொல்லியிருந்தேனல்லவா?

இப்போது ஊரிலிருந்து பெண் புறப்பட்டிருப்பதாகத் தந்தி யின்று கிடைத்திருக்கின்றது. தற்சமயம் என்னிடமிருக்கும் பணம் போதாதாகையால், கைமாற்ருகத் தங்களிடம் பணம் கேட்கும் பொருட்டு வந்தேன்,'' என்ருர்.

தம்பிச்செட்டியார்:—மிகவும் நல்லது. இப்போது எவ்வளவு தேவையாயிருக்கின்றது?

கனக :—ஆயிரம் வெள்ளி வேண்டியிருக்கின்றது.

தம்பி:—சரி—ஆகட்டும், என்று பெட்டியைத் திறந்து ஆயிரம் வெள்ளியையு மெடுத்துக் கொடுத்தார். கனக சூரியர் ஆயிரம் வெள்ளிக்கும் ஓர் சீட்டை யெழுதித் தன் கையொப்பத்தை வைத்துக் கொடுத்து விட்டுச் செட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்டு கடைப் பக்கம் எதிர் நோக்கிச் சென்ருர்.

கடைக்குப் போய் எட்டுச் சோடி நாற்காலிகளும், இரண்டு வட்டமான மேசைகளும், இரண்டு நாற் சதுரமான மேசைகளும், மூன்று சாய்நாற்காலிகளும், இரண்டு இரும்புக் கட்டில்களும், அவற்றிற்கு வேண்டிய மெத்தை தலையணைகளும், ஒரு கண்ணுடி அலுமாரியும், இன்னும் வேறு சில தளபாடங்களும் சொன்ன விலையைக் கொடுத்து வாங்கி இரண்டு மாட்டு வண்டிகளி லேற்றித் தமதிருப்பிடம் கொண்டு வந்து சேர்த்தார். இன்னும் கோலாலம்பூரிலிருந்து பட்டிழைத்த கண்ணுடிப் படங்களும் இரண்டு நிலக் கண்ணுடிகளும், எடுப்பித்தார். வீட்டை மிகச் சிங்கார மாகச் சோடித்தார். படங்களின் காட்சியானது யாவர் மனதையும் பிரமிக்கச் செய்துவிடும். இப்படி அரசமாளிகையைப் போல் வீட்டை யலங்கரித்த பின்னர், நகைகள் தேவை வருமெனக் கருதி வேண்டிய தற்காலத்து நகைகள் யாவும் வாங்கி வைத்தார். நாலைந்து பட்டுச் சேலைகளும்

வாங்கி அலுமாரிக்குள் அடுக்கிவிட்டார். தாகர் கந்தப்புவும் அவரைச் சேர்ந்தோரும் வந்திறங்குவதற்கு இன்னும் இரண்டு மூன்று தினங்கள் தானிருக்கின்றன. கனகசூரியருக்கு வயதானபடியாலோ அல்லது வேறு என்ன காரணத்தாலோ, தலைமயிர் முழுதும் நரைத்துப் போய்விட்டது. சிறிது கூனிக் கூனியே நடப்பார். மீசையும் நரைத்துவிட்டது. மேல்வாயிலும் சில பற்கள் விழுந்து போயின. என்ருலும் தான் விவாகம் செய்யப்போகின்றமையால், தான் ஓர் வாலிபனுக நடிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டவராய், விழுந்த பற்களுக்குப் பதிலாக தங்கப் பற்களைக் கட்டுவித்தார். மீசையை வைத்திருந்தால் நரைமயிர் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடுமென்று கருதி யதை யெடுத்து விட்டார். முகச் சௌரம் சிறிது காலத்திற்கு நாள் வீதம் செய்விக்கலாமென்று எண்ணியிருந்தார். தலையிலேயிருக்கும் மயிரும் நரை மயிராய்த் தோற்றுமென்று கருதியதைச் சிறிது நாளைக்குத் தெரியவிடாதபடி ஆங்கிலேயருடைய தொப்பியைப் பகல் முழுதும் கழற்ருமல் மாட்டிக் கொள்ள எண்ணியிருந்தார். கையில் பத்தரைமாற்றுத் தங்கப் பூண் போட்ட பிரம்பொன்று பிடித்துக் கொண்டார். கைவிரலிலே விலையுயர்ந்த நீலக்கற் பதித்த மோதிரமொன்று அணிந்திருந்தார். இப்படியான ஆயத்தங்களுடன் வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்து கொண்டு இன்று எப்படியும் வந்து விடுவார்களென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கலானுர். சிறிது நேரஞ் சென்றபின்னர் ஓர் மோட்டார் ரதம் அவர் வீட்டுக்கு நேராக வருவதைக் கண்டார். உடனே ஓடோடியும் சென்று தொப்பியை யெடுத்துத் தலையில் மாட்டிக்கொண்டு வெளியே வர, மோட்டர் ரதமும் அவர் வீட்டண்டை வந்து நின்றது. பின்னர் தாகர் கந்தப்புவும், கதிரவேலுவும், அவரின் புத்திரி விசாலாட்சியம்மா

னும் ரதத்தை விட்டிறங்கியவுடன், கனகசூரியர் எதிர்கொண்டழைத்து வீட்டுக்குள் இட்டுச்சென்றார். சாடையாகக் கடைக்கண்ணால் விசாலாட்சியம்மாளின் வடிவழகைப் பார்த்து மிகவும் மனச் சந்தோஷமானார். கனகசூரியருக்குப் பெண் கொண்டுவந்த சங்கதி பகிரங்கமாய்விட்டது. அநேகமானவர்கள் கேள்வியுற்று மிக ஆச்சரியப்பட்டனர். இந்தத் தள்ளாத வயதில், இவருக்கென்ன விவாகம் என்றவர் சிலர். ஏழெட்டுக் குழந்தைகளிருப்பதால் வீட்டில் ஓர் பெண் தேவைதானே என்றவர் சிலர். குழந்தைகளுடன் இருக்கும் கிழப்பிணத்திற்குக் கலியாணமென்ன கலியாணம் என்றவர் சிலர். விவாக தினத்தில் வேடிக்கை பார்ப்போமென்றவர் சிலர். பதினைந்து வயதுப் பெண்பிள்ளை இக்கிழவனுடன் என்ன சுகத்தை யனுபவிக்கப் போகின்றாள் என்றவர் சிலர். இப்படியான விவாகத்தை ஒழுங்குபண்ணிய தாய் தந்தையரின் மூளை களிமண்ணாயிருக்கலாம் என்றவர் சிலர். இக்கிழவனுடன் கூடி இப்பெண் வாழ்க்கைப்படுவதிலும் பார்க்க ஓர் ஏழை வாலிபனுக்குக்கீழ் வாழ்க்கைப்பட்டால் மிகவும் நன்றாயிருக்கும் என்றவர் சிலர். இப்படியாக ஒவ்வொருவரும் தத்தமக்கிணங்கியவாறு பேசிக்கொண்டனர். தாகர் கந்தப்புவும், கதிரவேலுவும் மிக்க மரியாதையாக நடத்தப்பட்டனர். கனகசூரியர், தான் வாலிபனாக நடிக்கவேண்டுமென்று தன் உபாயங்களால் நடித்துக்காட்ட முயன்றும், அனுகூலமடையவில்லை. ஏனெனில், போன வாலிபம் திரும்பி வரமுடியுமா ? அவரின் விருத்தாப்பிய வயதைக் கண்ட கதிரவேலுவுக்கு மனம் அவ்வளவு திருப்தியாய்த் தோற்றவில்லை. என்றாலும் இனி என்ன செய்யலாம் என்று மௌனமாயிருந்துவிட்டார். அவரின் புத்திரி விசாலாட்சியம்மாள், கனகசூரியர் தனக்கு நாயகனாய் வரயிருப்பதைப்பற்றி

யின்னும் அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில் கனகசூரியர் விருத்தாப்பிய வயதடைந்திருந்தபடியால், அவர் தனக்கு மாமனாயிருக்கலா மென்பதே அவளின் எண்ணம். உள் இரகசியங்களைப் பற்றியும், தாகர் கந்தப்புவின் சூதைப்பற்றியும், அவளுக்கென்ன தெரியும்? விவாகநாளும் குறிக்கப்பட்டு அழைப்புப் பத்திரங்களும் வெளியாய்விட்டன. இதன் பின்னர்தான், விசாலாட்சியம்மாள் தனக்கு வரப்போகிற நாயகன் யாரென்பதைத் தெரிந்து கொண்டாள். தன்னைப் பாண்கிணற்றிற் கொண்டுபோய்த் தள்ளிவிட்டார்களே யென்று மனஏக்கங் கொண்டவளாய், என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவளாகி மிக்க யோசனையிலாழ்ந்திருந்தாள். குறிக்கப்பட்ட விவாக தினத்தில் அனேக சினேகிதர்களும் மற்றும் அவரைச் சேர்ந்தோரும் வந்து குழுமினர். சமூகமளித்தவர்கள் எல்லோரையும் எழுத இப்புத்தகம் இடங்கொள்ளாதாகையால், பிற இடங்களிலிருந்து சமூகமளித்த சிலருடைய பெயரைமட்டும் இங்கே குறிப்பிடுகின்றோம். கோலாலம்பூரிலிருந்து சிறினிமுத்துக் குமாரசுவாமிப்பிள்ளையவர்களும், நிலவரிச்சாலையில் உத்தியோகம் பார்க்கும் திருவேங்கிட முதலியார் அவர்களும் அவரின் சினேகிதர்களும், பினாங்கிலிருந்து பெரியகடை வைத்திருக்கும் நடேசம்பிள்ளையவர்களும், சிங்கப்பூரிலிருந்து வைத்தியர் ஆறுமுகநாதன் அவர்களும், சிறம்பானிலிருந்து புகையிரதப்பகுதியில் உத்தியோகம் பார்க்கும் வேலாயுதம்பிள்ளையும் அவரின் சில சினேகிதர்களும் இன்னும் மலாய் நாட்டில் பற்பல விடங்களிலுமிருந்து அனேகர் கனகசூரியருடைய விவாகத்திற்கு வந்திருந்தனர். இவர்களைவிட அனேக பெண்களும் வந்திருந்தனர். அவர்களுட் சிலர் தற்கால நாகரிக உடைகளை யணிந்துகொண்டும், சிலர் இதைவிட வேறுதருணம் வாய்க்குமோ

வென்ற ஐயத்தினால், புதிதாக எடுப்பித்த சேலைகளையும் நகைகளையும் மற்றவர்களுக்குக் காண்பிக்குமாறு அணிந்து கொண்டும், இன்னும் பற்பல மாதிரியாக வந்து சேர்ந்தனர். சில பெண்கள் விண்ணாணம் பார்க்கும் பொருட்டே அவசர மில்லாதபடி தம் புருஷருடன் வந்தார்கள். இப்படியான ஜனக்கூட்டத்தின் மத்தியில், விவாகமும் வெகு சிறப்பாக நடந்தேறியது. வந்தவர்கள் சிற்றுண்டி, பானம் முதலி யன அளிக்கப்பட்டு வெகு மரியாதையாக நடத்தப்பட்ட னர். பின்னர் எல்லோரும் விடைபெற்றுக் கொண்டு தத்தம் இருப்பிடமேகினர். சமுகமளித்தவர்களுட் பெரும்பாலா ரும் இப்பெண்ணின் நிர்ப்பாக்கியத்தைப் பற்றியும் இவ ளின் வருங்கால ஜீவிதத்தைப் பற்றியும் பலவாறு பேசிக் கொண்டே சென்றார்கள். இவ்வாறு பலரும் பேச வேண்டி வந்ததற்கு முதற்காரணம் இப்பெண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளை வாய்க்காததினாலேயாம். விவாகம் நடந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னால், தரகர் கந்தப்பு, தான் ஊருக்கு அவசியம் போகவேண்டுமென்று கனகசூரியரிடம் சொன்னார்.

கனகசூரியர்:—கந்தப்புவைப் பார்த்து:—"ஐயா பெரி யவரே! தாங்கள் இவ்விவாகத்தை யொழுங்கு பண்ணி நிறைவேற்றிய உதவியை யான் எந்நாளும் மறக்கவே மாட் டேன். தங்கள் சிரமத்தைப் பாராது இந்நாட்டிற் கேகிய தற்காக யான் என்ன உதவியைச் செய்யப் போகின்றேன். என்னிடமிருந்த பணம் முழுதும் செலவாய்விட்டது. விவாகச் செலவிற்குத் தன்னும் கடன்பட்டு விட்டேன். ஆனபடியால், யான் கொடுக்கும் அற்ப தொகையைச் சந் தோஷமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்," என்று மூந்நூறு வெள்ளியைச் சட்டைப் பைக்குளிருந்து எடுத்துக் கொடுத் தார். தரகர் கந்தப்புவும் மிகச் சந்தோஷமாக அப்பணத்

ளை யேற்றுக்கொண்டார். பின்னர், தன் மாமனார் கதிரவேலுவுக்கும் ஐந்நூறு வெள்ளி கொடுத்துதவினர். தன் மகள் விசாலாட்சியம்மாளுக்கு இவ்விவாகம் மனத் திருப்தியைக் கொடுக்கவில்லை யென்பதைக் கதிரவேலு நன்றாக வறிந்து கொண்டார். என்றாலும் இனிமேல் என்ன செய்யலாம் என்று மனதிற்குள் நினைத்தவராய்த் தன் மகளிடம் விடை பெற்றுச் செல்லும் பொருட்டு அவளிருந்த அறைக்குட் புகுந்தார். அங்கே விசாலாட்சியம்மாள், ஓர் மூலையில் மிக முகவாட்டத்தோடு உட்கார்ந்திருந்தாள். கதிரவேலு அவளைப் பார்த்து:—"கண்மணியே! நீ முக வாட்டத்துடன் இருக்கவேண்டிய காரணமென்ன? உன் முகத்தைப் பார்த்தால் யாரும் என்ன சொல்லுவார்கள்? யாதொன்றையும் பற்றிச் சிந்தியாது மனச் சந்தோஷத்துடனிருக்கவேண்டும். மருகன் கனகசூரியர், உன்னை மிக்க அன்பாக நடத்திவருவார். கடவுள் செயல் கிடைத்தால் யான் அடுத்த வருஷம் உன்னைக் காணும் பொருட்டு வருவேன்," என்று ஆறுதல் கூறினர்.

விசாலாட்சியம்மாள்:—"தந்தையே! தாங்கள் எனக்குச் செய்த நன்மையை யொருநாளும் மறக்கமாட்டேன்" என்று சொல்லிக் கண்ணீர் தாரை தாரையாக விழுந்து கொண்டிருக்கத் தலை விரி கோலமாய்ப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

கதிரவேலு:—"என் குழந்தாய்! கண்மணீ! அழவேண்டாம்," என்று பலவாறு ஆறுதல் கூறி அவளின் அழுகையை மாற்றிய பின்னர், அவளிடம் விடைபெற்றுக்கொண்டு தாகர் கந்தப்புவும் தானுமாகக் கனகசூரியரிடம் போய், அவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, ஊருக்குச் செல்லப் புறப்பட்டுவிட்டார்கள். இனிமேல் கனகசூரியர் விசா

லாட்சியம்மாளுடன் எப்படிக் காலத்தைக் கழித்து வந்தா பதைச் சிறிது சொல்லுவோம்.

விவாகமாகி ஏழுநாட்கள் கழிந்துவிட்டன. ஆனல் விசாலாட்சியம்மாள் கனகசூரியரோடு பேசத்தன்னும் சம் மதிக்கவில்லை. அவளுடைய முகத்திற் சிறிதேனும் சந்தோ ஷமே காணப்படவில்லை. இதைக் கவனித்த கனகசூரியர் விசாலாட்சியம்மாளைப் பார்த்து, "என் கண்மணியே! செந் தாமலரைப் போன்ற உன் முகமானது வாட்ட மடைய வேண்டிய காரணமென்ன? நீ துக்கப்படவேண்டிய அவசி யமில்லையே? உல்லாசமாக விருந்து என்னுடன் காலத்தைக் கழிப்பதற்கு என்ன தடையிருக்கின்றது? என்ன குறைகள் தானிருக்கின்றன. வேண்டிய நகைகள் யாவும் உன்னைக் காத்துக் கொண்டிருக்கின்றன. என்ன விதமான சேலைகள் வேண்டுமோ அவ்வித சேலைகளெல்லாம் அலுமாரிக்குள்ளி ருக்கின்றன. நீ படுத்துத் தூங்குவதற்காகவே கட்டிலும் மெத்தையும் புதிதாக வேண்டிப் போட்டிருக்கின்றேன். நீ, உல்லாசமாய் வீற்றிருப்பதற்கு நாற்காலிகளும், சாய் நாற்காலிகளு மிருக்கின்றன. இன்னும் வேண்டிய யாவும் வாங்கித் தரத்தயாரா யிருக்கின்றேன். அப்படி யெல்லா வசதிகளுமிருக்க, நீ மனவாட்டமா யிருக்கவேண்டிய கார ணமென்னவோ? என் மாதரசே! சற்றே உன் பவள வா யைத் திறந்து மதுர மொழிகளால் ஏதும் சொல்லக் கூடா தா?"

விசா:—"ஐயா—என் பிதாவுக்குச் சரியானவரே! துக்க மொன்றுமில்லை; என் பிதாவையும் தாகர் கந்தப்பு வையும் நினைக்கச் சிறிது கவலை யேற்படுகின்றது."

கனக:—"என் கண்மணியே! என்னை ஐயா வென் றும், பிதாவுக்குச் சரியானவ ரென்றும், முறை தவறி




விசாலாட்சியம்மாள்:—“ஐயா! என் கைகளை விட்டு விடுங்கள்......” என்று கூறுதல். 145-ம் பக்கம் பார்க்க.

யழைக்கின்றாயே! என் கண்ணாளா! என் பார்த்தா! என் பிராணநாதா! என் காதலா! என்று அழைக்கக் கூடாதா? இனிமேல், கவலையைப் பற்றிச் சொன்னாயே? பிதாவுடன் கூடவிருந்து வளர்ந்தபடியாலும், தாரகர் கந்தப்பு உன்னை ஊரிலிருந்து கூடவே யழைத்துக்கொண்டு இங்கே வந்த படியாலும், அவர்களிருவரும் உன்மேல் மிக்க கரிசனை யுள்ளவர்களாதலாலும், அவர்களை விட்டுப் பிரிந்தமை சிறிது கவலையைக் கொடுக்கும் தானே. ஆனால், யானிருக்கும் பொழுது நீ இனிமேல் கவலைகொள்ள வேண்டிய அவசியமில்லை" என்று சொல்லி அவளைக் கிட்டவணுகி அவளின் கைகளைப் பிடித்துக்கொண்டு முத்தமிட முயன்றார்.

விசா:—"ஐயா! என் கைகளை விட்டுவிடுங்கள். என்னைக் கிட்டவணுகாதேயுங்கள். யான் ஓர் அதிட்டமில்லாத பாவி. என்னால், தாங்கள் என்ன சுகத்தை யனுபவிக்கப் போகின்றீர்கள்," என்றாள்.

கனகசூரியர் அவளை விட்டகன்று தனியே யொரு அறையிலிருந்து பின்வருமாறு யோசிக்கலானார்:—"பிள்ளையார் பிடிக்கக் குரங்காநற் போல" பெண் கொள்ளப் போய்க் காசைச் செலவழித்தும், அவள் இல்லற வாழ்க்கைக் குரியவளாகக் காணப்படவில்லையே. என்னுடைய வயதுபோன தோற்றம் அவளுக்கு ஓர் சமயம் வெறுப்பைக் கொடுக்கின்றதோ? ஈற்றில் பணத்தைத் தாரகர் கந்தப்புவுக்குக் கொடுத்தேனே. அதுவும் போதாமல், அவளின் தந்தைக்கும் ஐந்நூறு வெள்ளியைக் கொடுத்தேனே. பணம் ஒருபுறமிருக்க, உலகத்திலே அவமானப் பட வேண்டி யிருக்கின்றதே. இதற்கு யான் என்னதான் செய்வேன். ஆனால், இவள் இப்படியாக நெடுக யிருப்பாளென்று யான் நம்பவில்லை. நாட்கள் போகப் போகப்

படிப்படியாய் இல்லறப் பாரத்தைத் தலையில் சுமப்பாள் தானே," என்று எண்ணுதலெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விட்டவராய், இன்னுமொரு முறை அவளுடைய மனவியாகுலத்தைக் கேட்க வேண்டுமென்று அவாவுடனிருந்தார். சிறிது நாட்களுக்கு அவளுடன் ஒன்றும் பேசாமல் தன்மேல் அன்பு கொள்ளும்படி பிறிது வகைகளால் அன்பாக நடத்திவந்தார். ஆனால் அவளின் முகத்தில் ஒருவித சந்தோஷத்தையும் இன்னும் காணவில்லை. ஒரு நாளிரவு கனகசூரியரின் குழந்தைகளெல்லாம் நித்திரைக்குப் போன பின்னர், அவள் படுத்திருந்த அறைக்குட் சென்று அவளைப்பார்த்து, "என் கட்டிக் கரும்பே! நீ இவ்வித துக்கமுகத்துடனிருப்ப தென்றால் யான் எவ்விதம் உன்னுடன் இல்லறத்தை நடத்துவது? உனது குறைகளென்ன? எனக்குச் சொல்லாமல், பின் யாருக்குச் சொல்ல விருக்கின்றாய்? ஆனதால், பெண்ணே! உன் மனவிகாரத்தை எனக்குத் தெரிவிப்பாய்" என்று பணிவாய்க் கேட்டார்.

விசா:—"ஐயா! என்னுடன் தாங்கள் வார்த்தையாடுவது சரியல்ல. எனது மனவிகாரத்தைத் தாங்கள் தீர்ப்பதற்கு முன்வருவது மிகவும் சந்தோஷம்தான். ஆனால், உலகில் "குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசுவார்களோ" என்று அதிகம் சொல்ல மனமில்லாது அழத் தொடங்கினாள்.

கனக:—"கண்ணே! அழவேண்டாம்," என்று அவளின் கண்ணீரைத் துடைக்க முயன்றார்.

விசா:—"ஐயா! ஐயா! என்னைத் தொடாதீர்கள்" தொட்டால் தீங்கு வருமென்று சொல்லி யொருவாறு அழுகையை மாற்றி மூர்ச்சையாயினள். கனகசூரியரும் என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவராகி, வெளித்

திண்ணையில் விடியும் வரைக்கும் ஆழ்ந்த யோசனை யிலிருந் தார். அடுத்தநாட் காலமே, கனகசூரியர் காலைப் போசன மருந்திய பின்னர், அதிக யோசனையுடன், தன் உத்தியோ கச் சாலைக்குச் சென்று விட்டார். இவர் சென்றதும், விசா லாட்சியம்மாள், தான் இனிமேல் உலகிலிருப்பதால் ஒரு வித பிரயோசன மில்லை யென்றும், ஏனெனில் தான் இல் லறத்தை இன்புற நடத்துவதற்கு ஏற்ற புருஷனை யடைய வில்லை யென்றும், தனக்குள்ளே நினைத்து எப்படியும் தன் னுயிரை மாய்க்கக் கருதித் தானே தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாக ஒரு கடிதமு மெழுதி ஓர் மேசைமீது தெரி யும்படியாக வைத்துவிட்டு, ஓர் தனிப்பட்ட அறைக்குட் சென்று, கதவைத் தாழ்போட்ட பின்னர், மண்ணெண் ணெயைத் தன் சேலை முழுவதும் ஊற்றி நெருப்புக் குச்சி யால் தன் சேலைத் தொங்கலிற் பற்றவைத்து "சிவனே—நீயே துணை—உன்னையே நம்பினேன், ஏதும் பாவம் செய் தேனுகில் அதையும் பொறுத்தருள வேண்டும்," என்று சிவபெருமானையே சிந்தித்தவளாய் நின்றனள். நெருப்பு உடனே சீலைமுழுவதும் பற்றி யெரியத் தொடங்கிற்று. அறைக்குள் வெளிச்சத்தை மேல் வழியாகக் கண்ட கனக சூரியரின் மூத்த புதல்வி தங்கரத்தினம்மாள் "ஐயோ—ஐயோ! வெளிச்சம் தெரிகின்றதே, சின்னம்மா—அறைக் குள்—சின்னம்மா—அறைக்குள்" என்று பெலத்த சத்த மாய்க் கத்தினுள். உடனே அயல்வீட்டுக் காரர்கள் ஓடி வந்தார்கள். நெருப்பு, சுவாலையா யெரிவதை மேலே கண்டார்கள். கதவு தாழ்போடப்பட்டிருந்ததால், திறக்க முடியவில்லை. உடனே எல்லோரும் சேர்ந்து வலிவாய்க் கதவைத் தள்ளி யுடைத் தெறிந்து பார்க்கையில், விசா லாட்சியம்மாளின் தேகம் முழுவதும் நெருப்பா லெரியப் பட்டுக் குறை உயிரில் கிடக்கக் கண்டார்கள். சிறிது

நேரஞ் சென்றபின்னர், அவளுடைய ஆன்மா அவளின் உடலை விட்டு நீங்கியது. இக்காட்சியைக் காணச் சனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். கனகசூரியரும், ஐயோ! ஐயோ! என்று அலறிக் கொண்டு வந்தார். அவரின் குழந்தைகளும் ஓயோ—மாயோ—ஓயோ—மாயோ என்று கத்திக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் செல்ல பொலீஸ் உத்தியோகஸ்தர்களும், வைத்தியர்களும், வந்து சேர்ந்தனர். இவள், யாரால் கொல்லப் பட்டாளென்று எல்லோரும் சந்தேகமுற்றனர். ஆனால் அவர்கள் எல்லோருடைய சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டு மேசைமீது கடிதமொன்று கண்டெடுத்தார்கள். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

கிள்ளான்.

எனது அன்புள்ள தந்தைக்குத் தங்கள் புத்திரி விசாலாட்சி எழுதுவது, தாங்கள் என்னையோர் பிள்ளையாக வளர்த்து வந்தும், எனக்குச் செய்யவேண்டிய கடமையைச் சரிவரச் செய்யாததை யிட்டு மிக வருத்தமுற்றேன். தாகர் கந்தப்புவின் மொழிகளா லெடுபட்டு, என்னையோர் வயோதிக மடைந்தவருக்கு விவாகம் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்து விட்டீர்கள். வறுமை காரணத்தால் இச் செயலுக்குடன் பட்டிருந்தாலும், முக்கியமாகப் பெண்ணுக்காகக் கொடுக்கும் சீதனமொன்றில்லை யென்பதினாலேயே. ஒரு விஷயத்துக்குடன்படு முன்னர் இவ்விஷயத்தினால் ஏதும் நன்மை யுண்டா அல்லது தீமை ஏற்படுமா, என்ற எதிர்கால நன்மைக் குரிய கேள்விகளைக் கேட்டு நன்றாயறிந்த பின்னரே, ஒவ்வொரு விஷயத்திலும் தலையிடல் வேண்டும்.

"ஆய்ந்து பாராதான் காரியம்
தான் சாந்துயரம் தரும்"

என்பது பழமொழியும். எனக்குச் செய்த வுதவிக்காகத் தாங்கள் மனக்கவலை யடையப் போவதை யிட்டு, மிக வருத்தமுறுகின்றேன். என்னை மலாய் நாட்டிற்குத் தாங்கள் எண்ணிக்கொண்டு வந்ததாகிய கனகசூரியர் வீட்டுக்கு யான் வந்திறங்கியவுடன், அவர் விருத்தாப்பிய நிலையை யடைந்திருப்பதாலும், ஏழெட்டுக் குழந்தைகளுடன் இருப்பதாலும், எனது வரப்போகிற மாமனுயிருக்க வேண்டுமென்று முதலில் யூகித்தேன். இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பின்னர், அவர்தான் எனது நாயகனாய் வரப்போவதை யறிந்து திடுக்குற்றேன். எனக்கு வயது ஆகப் பதினைந்தானதாலும், அவருக்கு வயது ஏறக்குறைய ஐம்பதுக்கு மேலானபடியாலும், இவருடனிருந்து என்னவிதமான இல்லறத்தை நடத்துவதென்ற யோசனை எனக்கு ஏற்பட்டுவிட்டது. இப்படியாக விவாக நாளும் கணித்துச் சனங்களும் அனேகர் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். வந்த பெண்களுள் அனேகர் இப்பாலிய பெண் இக்கிழவனுடனிருந்து எவ்விதம் காலத்தைக் கழிப்பாளோ, என்ன இன்பத்தை யடையப் போகின்றாளோ, இக்குழந்தைகளுடன் இக்குடும்ப பாரத்தை எப்படிச் சுமப்பாளோ, வீட்டு வேலைகளை எப்படிச் செய்வாளோ, என்று துக்கப்பட்டவரும், சிலர் வேடிக்கையாகச் சிரித்தவரும், இதுவும் கலியின் வலிமையோ என்றவரும், இன்னும் பற்பல விதமாயும் குசு—குசு என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்த தெல்லாம் என் செவிகளில் விழுந்தன. எனக்கோ அந்நேரத்தில் பெரிய வெட்கமும் துக்கமுமாயிருந்தது. என்றாலும் ஒருவாறு மனதை யடக்கிக் கொண்டு விவாகச் சடங்குகள் முடியும் வரைக்கும் பசுப்

போலப் பொறுத்திருந்தேன். விவாகமும் முடிந்து, வந்தவர்களும் தத்தம் வீடுசென்றனர். தாங்களும் கந்தப்புவும், நாலைந்து தினங்களால், சுமை தீர்ந்து விட்டதென நினைத்து ஊர் போய்ச் சேர்ந்தீர்கள். யானும் மனக்கவலை யிலாழ்ந்திருந்தேன். கனகசூரியர் என்ற கிழவர் என்னுடன் அன்பாகப் பேசியும், மதுரமான சொற்களை நிகழ்த்தியும், யான் மறுமொழி கூறச் சம்மதிக்கவில்லை. நீடித்து மௌனம் சாதித்துத் துக்கமாகவே யிருந்தேன். எனது வருங்கால வாழ்க்கையை நினைத்து நினைத்துத் துக்கக் கடலில் மூழ்கி, இனிமேல் இவ்வுலகிலிருப்பதால் ஒரு வித பிரயோசனமில்லை யென்று எண்ணி, என் உயிரை மாய்ப்பதற்கே தருணம் எப்போது வருமென்று காத்திருந்தேன். தாங்கள் எனது வருங்கால நன்மையைக் கருதி யிருந்தால், தெருவிற் போகின்ற ஓர் கூலியாளுக்குத் தன்னும் என்னை விவாகம் செய்து வைத்தால் மிக ஒற்றுமையாகவும் இன்பமாகவும் வாழக் கூடியதாயிருந்திருக்கும். வறுமை காரணத்தால் சீதனமில்லை யென்று அடாத வேலையைச் செய்து பாண் கிணற்றிற்குள் தள்ளிவிட்டீர்களே. இவ்வாறாகத் தருணம் எப்போது வருமென்று காத்திருந்தேன். இன்று தான் தருணமு மேற்பட்டது. கனகசூரியர் என்றவர் தமது உத்தியோகத்திற்குப் போய்விட்டார். அவரின் குழந்தைகளும் அங்கு மிங்குமாக ஓடி விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவரின் மூத்த புதல்வி தங்கரத்தினம்மாள் மடைப்பள்ளி யறையில் சுயம்பாகியோடு சமையல் செய்து கொண்டிருக்கின்றாள். சில குழந்தைகள் பள்ளிக்குப் போய்விட்டனர். இரண்டாவது புத்திரி மனோன்மணியம்மாள் இன்னோர் அறைக்குள்ளிருந்து தையல்வேலை செய்து கொண்டிருக்கின்றாள். யான் அவர்களுக்குத் தெரியாதபடி ஓர் அறைக்குட் சென்று கதவைத் தாழிட்டு விட்

டேன். பக்கத்திலே தயாராயிருக்கும் மண்ணெண்ணெயை என் சேலைமேல் ஊற்றி என்னைத் தீக்கிரையாக்குவதற்கு ஆயத்தமாய் நிற்கின்றேன். என்னைப்பற்றி இனிமேல் கவலை கொள்ளவேண்டாம். என்னைப் பத்து மாசமும் சுமந்து பெற்றெடுத்த எனது தாயாரைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. இனிமேல் எனது சகோதரிமாருக்கும் இவ் வித விவாகங்களை ஒழுங்கு பண்ணுமல் வறிய குடும்பத் திலுதித்தவர் களாளுலும், அவர்களுக்குத் தோதான மாப் பிள்ளைகளைத் தேடி மணம் முடித்து வைக்கும் வண்ணம் வேண்டிக் கொள்ளுகின்றேன். ஆனல், எனது கற்பை யான் இழக்கவில்லை "கல் என்றாலும் கணவன் புல் என்றா லும் புருஷன்" என்ற வண்ணம், யான் விவாகம் செய்து கொண்டவர் எப்படிப்பட்ட வயோதிபராயிருப்பினும் அவ ருக்குக் கீழ்ப்பட்டு இல்லறத்தை நடத்தப் பின்னின்றமை யால் என்னையோர் நீலியென்றும் அவிசாரி யென்றும் புரு ஷனுக் கடங்காத பாவியென்றும், கற்புடையவளல்ல வென் றும் உலகிற் பலரும் பேசிக் கொள்ளுவார்கள். கடவுள் மூலமாக எனக்குப் பொல்லாத தண்டனை கிடைக்க நேர்ந் தாலும் யான் ஒருத்தி மாத்திரம் தான் அத்தண்டனைக் குட்படப் போகின்றேன். ஆனல் என்னைப் போலொத்த உலகில் வாழும் பெண்களின் தாய் தந்தையருக்கு இது வோர் நல்ல படிப்பனையா யிருக்குமென்பது எனது பூரண நம்பிக்கை. உலகிலே நாம் என்னத்திற்காக வுதித்தோ மென்ற எண்ணம் சிறிது மில்லாதவர்களாய் இல்லறத்திலே யிருந்து சிற்றின்ப மெல்லாம் அனுபவித்துப் பிள்ளைப் பேற் றையு மடைந்த பின்னர், இக்கிழவர்களுள் அனேகர் வாலி பரைப் போல நடித்துப் பின்னும் பின்னும் சிற்றின்ப சாக ரத்திலே மூழ்கி ஒருவித அறிவு மில்லாதவர்களா யிருப்ப தை நினைக்க நினைக்க எனக்குப் பெரிய ஆச்சரியத்தையும்

மனவருத்தத்தையுங் கொடுக்கின்றது. இனிமேலாகுதல் இப்படிப் பட்டவர்களுக்கு நல்லுணர்ச்சி வருமா?

என்னைப் பலவந்தப் படுத்தியாகுதல் இவ்விவாகம் ஒப்பேறுமென்பதை யான் பூரணமாக உணர்ந்திருந்தபடியால் விவாக தினத்தன்று யான் இதைக் குழப்பாமலிருந்தேன். ஆனால் என்மேல் தப்பிதமிருந்திருக்கலாம். இத்துடன் இக்கடிதத்தை நிறுத்துகின்றேன். இக்கடிதம் எழுதியதின் நோக்கமென்னவெனில், எனது சாவுக்கு நானே கொலையாளியென்றும் மற்றவர் யாரேனும் இக்கொலையிற் சம்மந்தப்படவில்லையென்று காட்டும் பொருட்டும், இன்னும் உலகில் வாழும் சில மூட பெற்றோர்களுக்கு இது வோர் படிப்பினையாயிருக்குமென்பதினாலேயுமாம். எனக்கோ நேரமாய்விட்டது. நெருப்புக்குச்சியை என் சீலைமேற் பற்றவைப்பதற்கு இன்னும் இரண்டு நிமிஷங்கள் தானிருக்கின்றன.

எனது கடைசியான நமஸ்காரம்

இப்படிக்கு,

உங்கள் நிர்ப்பாக்கியமுள்ள புத்திரி,

**விசாலாட்சி.**

இக்கடிதத்தை வாசித்து முடித்தவுடன் அங்கு நின்றவர்கள் எல்லோரும் இடிவிழுந்த மரம் போல் திகைத்துப் போனார்கள். சிலர் கண்ணீர் விட்டழுதார்கள். சிலர், இவள் எப்படி இச்செயலைச் செய்யத் துணிந்தாளோ வென்று மிக ஆச்சரியப்பட்டனர். ஆனால், கனகசூரியர் பட்டபாடு கொஞ்சமல்ல. பணமும் போய் பெண்ணும் போய், ஈற்றில் உலகில் அவமான மடைந்தேனே என்று பொல்லாத துயரக் கடலில் ஆழ்ந்திருந்தார். வெளியே

செல்ல வெட்கப்பட்டுச் சில நாட்கள் வீட்டிலேயே யிருந்தார். முன்னர் விவாகத்திற்கு வந்த ஜனங்கள் எல்லோரும் இதைக் கேள்வியுற்று மிக ஆச்சரியப்பட்டனர். தள்ளாத கனகசூரியருக்கு இப்படி நடந்தது தான் நலமென்று பேசினர் சிலர். மேலும் விசாலாட்சியம்மாள் இறந்த செய்தியை யவள் தாய் தந்தையர் அறிந்தவுடன் இடிவிழுந்த மரம்போல் மூர்ச்சையானார்கள். தம் புதல்வி எழுதிய கடிதத்தை வாசித்துக் கண்ணீர் சொரிய விழுந்துருண்டு புரண்டழுதார்கள். தரகர் கந்தப்புவின் சூதினால் எடுபட்டுத் தம்மருமைப் புதல்வியை யிழந்தோமே யென்று மிக வருந்தினார்கள்.

தரகர் கந்தப்புவும் இப்படியான அனேக விவாகங்களை அநீதியாக ஒழுங்குபண்ணி அடாத வேலை செய்து வந்தபடியால், ஏதோ ஒரு விவாக ஒழுங்கில் மாப்பிள்ளை பகுதியாரால் அடியும் உதையும் பட்டு வீண் வழக்குகளில் உள்ள காசெல்லாவற்றையும் செலவழித்து ஈற்றில் உண்ண உணவின்றியும் உடுக்கத் துணியின்றியும் தெருக்கடோறுஞ் சென்று பல்லைக் காட்டிப் பிச்சை யேற்று வயிறுவளர்த்து வந்தார். சிறிது காலஞ் சென்றபின்னர் க்ஷயரோக மென்னும் கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டு யமலோகத்தை யடைந்தார்.

"அடாது செய்தவர் படாது படுவர்"
"கெடுவான் கேடு நினைப்பான்."

இங்கே நாம் காட்டவேண்டிய விஷயமொன்றுளது. அதென்னவெனில் "சீதனம்" என்பதைப் பற்றியதேயாம். "சீதனம்" என்பது தாய் தந்தையர் தம்பெண்ணுக்கு அவளின் எதிர்கால நன்மையைக் கருதி விவாக தினத்தன்று கொடுக்கப் படும் தனம் அல்லது பொருளேயாம். இவ்வழக்கம் இலங்கையிலும், இந்தியாவிலும் சில,

பாகங்களில் நமது சாதியார்களுக்குள் நடந்து கொண்டே வருகின்றது. இவ்வழக்கம் ஒருபால் நன்மையை யளிப்பினும் பிறிதொருபால் அதிக தீமையையும் விளைவிக்கின்றது. இதனாலடையும் நன்மை யென்ன வென்பதைச் சிறிது ஆராய்வோம். ஓர் பெண் விவாகமாகிக் குழந்தைகளுடனிருக்குங் காலத்திலாவது அல்லது குழந்தைகளில்லாமலிருக்குங் காலத்திலாவது அவளின் நாயகன் இறக்க நேரிட்டால், இப்பெண்ணும் குழந்தைகளும் தம் ஜீவியத்தைப் போக்குவதற்கு இச் சீதனம் பெருமுதவியா யிருக்கின்றது. ஏனெனில் சில குடும்பங்களில் ஆடவர்கள் தாமிறக்கும் போது பணம் சேகரித்து வைத்துப் போவதில்லை. இதன் காரணமாக சில குடும்பங்களில் உறவினரையும் இன்னும் மற்றவர்களையும் தம் ஜீவியத்தின் பொருட்டு எதிர்பார்க்க நேரிடுகின்றது. சீதனமிருக்குமாயின் இப்பேர்ப்பட்ட குடும்பங்களுக்கு எவ்வளவு உதவியாயிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இதைவிடச் சில குடும்பங்களில் ஓர் பெண் விவாகமாகி ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளைப் பெற்றபின்னர், இருவரும் அதாவது தாயும் தந்தையு மிறக்க நேரிட்டால், இக்குழந்தைகளுக்கு இச்சீதனம் எவ்வளவு பயனளிக்கு மென்பதைச் சொல்லாமலே யெவரும் அறிந்து கொள்வார்கள். இன்னும் ஓர் குடும்பத்தில் புருஷனின் துர் அதிட்டத்தால் அவன் வருத்தத்திலாழ்ந்தும், பிழைக்க முடியாமலும் நேருங்காலத்தில், இப்பெண்ணின் சீதனம் எவ்வளவு பிரயோசனமாயிருக்கு மென்பதைப் பாருங்கள். இன்னும் இப்படியே. இனி இச்சீதனத்தால் வருங் கெடுதிகளைப் பற்றியும் சிறிது ஆராய்வோம். உலகில் நாம் என்னத்திற்காக வுதித்தோமென்பதை ஆராயுங்கால் சிவபெருமானின் திவ்விய மலர்ப் பாதங்களைச் சேரும் பொருட்டே யென்பது தெள்ளிதில்

விளங்கவரும். அதற்கு வழிகளிரண்டு. ஒன்று இல்லறம், மற்றொன்று துறவறம். இல்லறம் சிறந்த தென்பதை முன்னமே விளக்கி யிருக்கின்றோம். இல்லறத்திலிருந்து ஓர் ஆடவனும் பெண்ணும் ஒரே மனதாய் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தால், எவ்விதத்தும் அவர்கள் மேல் நோக்கி வருவார்க ளென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. அப்படி ஒற்றுமையாக வாழ்வதற்கு அன்புடைய மனைவியும் கணவனும் வேண்டும். எனவே, பெண்ணின் இலட்சணத்தையும் புருஷனின் இலட்சணத்தையு மெடுப்பதே தவிர, சீதனத்தைப் பற்றிய விஷயம் இங்கு வரவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், ஓர் கணவனும் மனைவியும் இல்லறத்தில் மிக ஒற்றுமையாகவும், ஒருவரோ டொருவர் மிக்க அன்பாகவும் நடந்து வருவார்களானால் அவர்கள் எவ்விதத்தும், பணமில்லாவிடினும், சிறிது கஷ்டப்பட்டாலும் மிக ஐக்கியமாக வாழ்நாளைக் கழித்து வரலாம். இதனாலன்றோ ஔவையாரும்,

"பத்தாவிற் கேற்ற பதிவிரதையுண்டானால்
எத்தாலும் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறு மாறாக விருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்நியாசங் கொள்"

என்று பாடியிருக்கின்றனர். இவ்விஷயங்களை யுணராத சில அறிவீனர்கள் சீதனத்திற்றான் அதிகம் தங்கியிருக்கின்ற தென்று மயங்குகின்றார்கள். மாப்பிள்ளையின் குணங்கள் எப்படிப்பட்டதோ, அவன் பெண்ணுடன் கூடி இனிதாய் வாழ்வானோ என்ற இவ்வித விஷயங்க ளொன்றையும் ஆராய்ந்தறியாதபடி அவனுடைய உத்தியோகத்தையோ அல்லது பணத்தையோ அல்லது கௌரவத்தையோ கண்டு மோகித்து ஓர் ஆடவனுக்குப் பல பெண்களைப் பேசுகின்றனர். சிலர், தம் பெண்ணுக்கு அனேக காணி பூமிகளும்,

வயல் தோட்டங்களும் சீதனமாகக் கொடுப்போமென்றும், சிலர் ஆயிரம் பதினாயிரம் பொன் தருகிறோ மென்றும், சிலர் சகல சொத்துக்களும் கொடுப்போ மென்றும், சிலர் பணத்துடன் வேண்டிய நகைகள் யாவும் செய்து கொடுப்போ மென்றும், நான் முந்தினேன் நீ முந்தினாய் என்று ஓர் ஆடவனுக்காகப் பல பெண்களைப் பேசுகின்றனர். இவ்விதமாகச் சித்தியடையும் பெண், தற்செயலாய் கல்வியில்லாதவளாயும், பழக்க வழக்கம் தெரியாதவளாயும் நற்குணமில்லாதவளாயும், புருஷனுக் கடங்காதவளாயும் வந்து வாய்த்தால், இவளைக் கட்டிய ஆடவன், ஆகா! தெரியாமல் பலர் பேச்சை நம்பிக் காசுக் காசைப்பட்டு எனக்குத் தோதில்லாத பெண்ணை யெடுத்தேனே! இவளைப் பார்க்கிலும் செல்வமில்லாத இடத்தில், கல்வியறிவுள்ளவளாயும், நற்குணங்களமையப் பெற்றவளாயும், புருஷனுக் கடங்கி நடப்பவளாயும் இன்னும் இல்வாழ்க்கைக் குரிய குணங்களமையப் பெற்ற ஓர் பெண்ணை யெடுத்திருந்தால் எனது வாழ்வு எவ்வளவு பாக்கியத்தையும் சிறப்பையும் ஐக்கியத்தையும் அடைந்திருக்குமென்று பின் நினைத்துத் துக்கப்படுகின்றான். சிலர், அப்பெண்களை யடித்துதைத்து விவாக விமோசனமும் செய்து விடுகின்றனர். சில சமயங்களில் இப்படியாகக் காசை யள்ளி யிறைத்து அதிக சீதனம் வாங்கிய பெண்ணுக்குத் துன்மார்க்கனும், குடிகாரனும், இல்லற வாழ்க்கைக்குரிய குணங்களில்லாதவனும் வந்து வாய்த்தால், "ஆ—கொடிது! ஐயோ—எனது தந்தை பெரிய மோசம் செய்துவிட்டாரே. மாப்பிள்ளையின் வெளி வேஷத்தாலெடுபட்டு என்னைப் பாண் கிணற்றில் தள்ளிவிட்டாரே. இத்துன்மார்க்கனுடனிருந்து எப்படிக் காலத்தைக் கழிப்பது? எமக்குத் தோதான மாப்பிள்ளையைத் தெரிந்தெடுக்காமல் விட்டு விட்டார்களே" என்று இப்பெண்ணானவள்

தன்னிலே நொந்தும் தன் பெற்றோரையும் இகழுகின்றனள். ஈற்றில், இப்படியாக இருபகுதியாரும் ஏமாந்து போகின்றனர். ஐயோ—பரிதாபம்! எத்தனையோ குடும்பங்களில் சீதனம் கொடுக்க வழியில்லாமல் பெண்கள் வீட்டுக்குப் பாரமாயிருக்கின்றனர். எத்தனையோ விவாகங்கள் சீதனப் பிசகாற் குழம்பிப் போகின்றன. இன்னுஞ் சில அறிவீனர்கள் சீதனமின்மையாலும் வறுமை காரணத்தாலும் தம் பாலிய பெண் இரத்தினங்களைக் கிழத்தடியர்களுக்கு விவாகம் செய்து கொடுக்கின்றனர். இப்படிப்பட்ட பாவிகள் இம்மையிற் கொடிய வியாதியினாற் பீடிக்கப்பட்டு மறுமையிலும் போய் மீளா நரகத்திற்கு மாளாகுவார்களென்று புராண இதிகாசங்கள் கூறுகின்றன. இப்படியாக இச்சீதனமென்னும் வழக்கத்தால் அநிக கெடுதிகளும் நேரிடுகின்றன. அந்தோ! கொடிது! கொடிது! என்ன அறியாமை! சீதனத்தை யாம் இங்கே முழுதும் கண்டிக்க வரவில்லை. ஒவ்வொருவரும் உலக வாழ்க்கையின் இரகசியங்களை யறிந்து தம் தம் தகுதிக் கேற்றவாறு பெண்களைத் தெரிந்து கொள்வதே தவிர சீதனத்தை யோர் காரணமாக வைத்துக் கொள்ளுதல் நீதியான தல்ல. மேலும் பெண்களைப் பகிரங்கமாய்ப் பலருக்கும் விவாகம் பேசுவதை விட்டுத் தம் பெண்களுக் கேற்ற ஆடவர்களைத் தெரிந்து கொள்வதே பெற்றோர்களுடைய கடமையாகும். இனிமேல், தற்காலத்து வாலிபர்களும், மூடகொள்கையுடைய சில தாய் தந்தையருடைய சொல்லைக் கவனியாது சீதனத்தைக் கருதாமல் தத்தமக் கேற்ற பெண்களைத் தெரிந்து கொள்வதே நலமென உணரவேண்டும். மன அன்புடன் பெண்ணின் தாய் தந்தையர் பெண்ணுக்காகக் கொடுக்கும் பொருளை மனத்திருப்தியோடு ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களை வருத்தி வேண்டுவதில் ஒரு வித பிரயோசனமில்லை யென்பது அறிவாளிகளுக்கே தெரியும்.

இன்னும் நமது நாட்டில் பெண் வீட்டாருக்குப் பொருள் கொடுத்துப் பெண் கொள்ளும் மாப்பிள்ளை வீட்டாரும் அவ்வழக்கத்தைச் சரியான வழியிற் கொண்டு நடத்தி மேற் சொன்ன இல்லற நெறிகளைக் கவனிக்கவேண்டுமாறு பிரார்த்திக்கின்றோம். இறைவன் அருள் பாலிப்பானாக.

---

## ஒன்பதாம் அத்தியாயம்.

"கேள்விச் செல்வமே சிறந்தது."

ஒரு நாட் சாயங்காலம் ஐந்துமணி யளவில் ஒரு காகிதச் சுருளைக் கையில் தாங்கிக்கொண்டு ஒரு மனிதன் வீடு வீடாக ஒவ்வொருவருக்கும் அக்காகிதச் சுருளைக் காட்டிக் கொண்டு சென்றான். இப்படியாகக் காட்டிக்கொண்டு செல்லும் பொழுது, எங்கள் சபாபதிப்பிள்ளை வீட்டுக்கும் கொண்டு வந்தான். ஆனால் அவனுக்குச் சபாபதிப்பிள்ளை யாரென்பதும் அதிலெழுதப்பட்டிருக்குஞ் சங்கதிகள் என்னவென்பதும் தெரியாது. சபாபதிப்பிள்ளை அச்சமயத்தில் வீட்டிலில்லை. ஞானமிர்தம் அக்காகிதச் சுருளை வாங்கிப் படித்தாள். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கோலாலம்பூர்,

நிகழும் புரட்டாசி மாசம் கஅ-உ சனிக்கிழமை பிற்பகல் ஆறுமணி யளவில் கோலாலம்பூரிலுள்ள பெரிய மைதானத்தில், தமிழில் பாண்டித்தியம் பெற்ற ஸ்ரீமான் பொ. சாம்பசிவ உபாத்தியாயர் அவர்களால் "எமது கடமைகள்" என்னும் விஷயத்தில் ஓர் சிறந்த உபன்னியாசம்

தமிழில் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அனை வரும் சமுகம் தந்து பிரசங்கத்தைக் கேட்டுணருமாறு மிக மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம். பிர சங்கம் தொடங்குவதற்கு முன்னர் சங்கீதக் கச்சேரி பக்க வாத்தியங்களுடன் நடைபெறும்.

இங்ஙனம்,

**கதிரவேற்பிள்ளை,**

சமய காரியதரிசி.

இதை வாசித்த மாத்திரத்தில், ஞானாமிர்தத்திற் குண்டான சந்தோஷத்திற் கோர் எல்லையில்லை. இப்பிர சங்கியார் *தனது சாம்பசிவமாய்த் தானிருக்க வேண்டு மென்று நினைத்துக்கொண்டு அக்காகிதத்திலிருக்கும் விஷ யத்தைத் தன் தந்தைக்கு அறிவிப்பதாகச் சொல்லியவனி டம் அதைக் கொடுத்து விட்டாள். அவன் அதை வாங்கிக் கொண்டு வேறு வீடுகளும் சென்று காட்டிய பின்னர் சமய காரியதரிசி கதிரவேற்பிள்ளையிடம் கொண்டுபோய்க் கொடுத்து விட்டுச் சென்றான். உபன்னியாசத் தினத் தன்று, கதிரவேற்பிள்ளை அங்குமிங்குமாக ஓடிக் கூட்டத் திற்காக வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந் தார். இப்பேர்ப்பட்ட பிரசங்கங்கள் நடந்து வருவது மிக அரிதானதாகையாலும், சாம்பசிவத்தைப் பற்றிக் கேள் விப்பட்டதேயன்றி முன்னொரு நாளும் அவரின் உபன்னி யாசத்தைக் கேட்கவில்லையாதலாலும், ஒரு சமயம் விசே ஷமாயிருக்கக் கூடுமென்று கருதிச் சனங்கள் இடம் பிடிப்

*சாம்பசிவத்தின் மேல் மிக்க அன்புள்ளவளாயிருந்தபடி யாலும், அவனையே தான் விவாகம் செய்யவேண்டுமென்று மனதில் நினைத்திருந்தபடியாலும், ஆசைமிகுதியால் தனது சாம்பசிவ மென் றாள்.

பதற்காக முந்தியே வந்து விட்டனர். சனங்கள் ஏராளமாகச் சமுக மளித்தபடியால் உட்காருவதற்குத் தன்னும் இடமில்லாமல் அக்கம் பக்கமாக அனேகர் சூழ்ந்து நின்றனர். சரியாய் ஆறுமணியளவில், சாம்பசிவ உபாத்தியாயரும் வந்து சேர்ந்தனர். அற்றை நாள் அரசாட்சியாரின் கீழ் ஓர் பிரபல உத்தியோகமாயிருக்கும் ஸ்ரீமான் பொன்னம்பலம்பிள்ளை யென்பவர் அக்கிராசனராக வீற்றிருந்தனர். பொன்னம்பலம்பிள்ளை யென்பவர் தமிழில் அதிகம் கற்றிராவிட்டாலும், உலக அனுபவமுள்ளவர். தேசபக்தியிற் சிறந்தவர். பெருமைக் குணமில்லாதவர். பின்னர், பொன்னம்பலம்பிள்ளை நாற்காலியை விட்டெழுந்து, "பிரிய சகோதரர்களே! இன்றைய தினத்தில், அனேக பிரபுக்கள் சமுக மளித்ததை நோக்குமிடத்து, இதுவோர் எமது தேச முன்னேற்றத்திற் கறிகுறியெனத் தோன்றுகின்றது. இன்றைய தினத்தில், எமது நண்பர் மகா வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ சாம்பசிவம்பிள்ளை அவர்கள் சொல்லப்போகும் விஷயத்தைக் கேட்டு அதன்படி ஒழுகி நடப்பீர்களென்று யான் நம்புகின்றேன். பிரசங்கம் தொடங்கப் போவதற்கு முன்பாக, இங்கு நடக்கப்போகும் சங்கீதத்தைக் கேட்டானந்தம் கொள்வீர்களாக," என்று சொல்லி நாற்காலி மீதுட்கார்ந்தார். பக்கத்திலே சாம்பசிவ உபாத்தியாயர் வீற்றிருந்தார். பின்னர், பிடில் வித்துவான் இரத்தினசபாபதி ஐயர் பிடில் வாத்தியத்தை யெடுத்து வாசிக்கவும், சாமிநாயுடு மிருதங்கம் வாசிக்கவும், இன்னும் மற்றப் பக்க வாத்தியங்களுடன் சங்கீத வித்துவான் கோவிந்த சாமிநாயக்கர் பாடத்தொடங்கியதே, சபையில் தொனித்துக் கொண்டிருந்த சத்தம் திடீரென்று நின்று விட்டது. முதலாவதாக விநாயகரை வேண்டித் தோத்திரம் பாடினார். பின்னர் "திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்"




சாம்பசிவம் பிரசங்கம்செய்தல். 161-ம் பக்கம் பார்க்க.

என்ற தேவாரத்தைப் பாடினதே, சபையார் அனல் கண்ட மெழுகுபோல் நெக்கு நெக்கென்று மனமுருகிக் கடவுளை ஒரே மனதாய்ச் சிந்தித்தவர்களாய்க் காணப்பட்டனர். பின்னர் கீர்த்தனங்கள் திருப்புகழ் பாடப்பெற்றன. சனங்களுக்கிருந்த ஆனந்தமென்றால் எவ்வளவென்று சொல்ல முடியாது. சங்கீதமென்றால் யாரைத்தான் கவரமாட்டாது. எம்பெருமானே, சங்கீதத்தில் மயங்கினரென்றால், சங்கீதத்தின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? ஆனால் தற்காலத்தில், சில அறிவீனர்கள் நானாவிதமாய்ப் பாடல்களை யியற்றியும் சொல்லப்பட்ட முறைகளை யனுசரியாமலும், சங்கீதத்தின் பெருமையைக் கெடுத்து விடுகின்றனர். இவற்றை விரிக்கிற் பெருகுமென விடுத்தாம்.

சங்கீதம் முடிந்த பின்னர், சாம்பசிவம் எழுந்து, "சபாநாயகரே! நமஸ்காரம்! சகோதரர்களே! நமஸ்காரம்! "கற்றது கைம்மண்ணளவு கல்லா துலகளவு" என்ற வண்ணம் என் சிற்றறிவுக் கெட்டிய வாறு சிலவற்றைக் கூறுவேன். அன்னப்பட்சியானது நீரைத்தவற்றிப் பாலை யெப்படி யறிந்து உண்கின்றதோ, அதுபோலச் சபையாரனைவரும் சிற்றறிவுடையோனாகிய யான் சொல்வன வற்றிற் பிழைகளிருப்பினும் அவற்றைக் கவனியாது குணத்தை மாத்திரமே யெடுத்துக் கொள்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்," என்றார்.

யான் எடுத்த விஷயத்தின் தலையங்கத்திற்குப் பெயர் "எமது கடமைகள்." "எமது கடமைகள்" என்பது எமது நாட்டாரின் கடமைகளைப் பற்றியதேயாம். யான், இத்தலையங்கத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் சிறிது விளக்கிக் காட்டுவேன். முதலாவதாகச் "சங்கங்கள்" என்ற விஷயத்தை யெடுப்போம்.

## 1— சங்கங்கள்.

ஒரு சாதி அல்லது ஒரு நாடு முன்னுக்கு வரவேண்டுமாயின், பலர் ஒன்று கூடி ஒரே மனதாய் மனமொத்து அந்நாட்டிற்கு அல்லது அச்சாதியார்க்கு வேண்டியனவற்றைச் செய்யும்பொருட்டு கூடும் சபைகளே சங்கங்கள் என்று சொல்லப்படும். யான் இங்கே கூறும் சங்கங்கள் என்பது எல்லா வகையான சங்கங்களையும், சபைகளையு மென்றே நண்பர்கள் உணரவேண்டும். இப்படியாகச் சங்கங்களைக் கூட்டும்போது, இவை யவசியந்தானா, அப்படிக் கூட்டினால் எல்லோரும் ஒற்றுமையாய்ச் சேர்ந்துழைப்பார்களா, இவை நன்மை பயக்குமா, என்ற இவ்வித கேள்விகளைக் கேட்டு நன்றாக ஆலோசித்த பின்னரே தொடங்கவேண்டும். இதனாற்றான் திருவள்ளுவரும்,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு"

எனப் பாடியிருக்கின்றனர். இப்படியாகச் சங்கங்களைக் கூட்டும்போது, ஒவ்வொருவரும் சுயநலங் கருதாது சேர்ந்துழைக்க வேண்டும். ஒருவன் மேலும் பொறாமையாயிருக்கக் கூடாது. சங்கங்களைத் தொடங்கிய பின்னர், இவன் மேல்சாதி, இவன் கீழ்சாதி, இவனை யெடுக்கக் கூடாது, என்று இவ்வித வீண் காரியங்களிற் பிரவேசிக்கக் கூடாது. எவ்வித சங்கங்களைத் தொடங்கினாலும் தொடங்கிய நோக்க மெதுவோ அதைக் கருதியே யுழைக்க வேண்டும். இனிமேல் சங்கங்களில் எல்லோரும் சேர்ந்து பிரமாணங்களைச் சங்க நன்மைக்காக உண்டாக்கினால் அப்பிரமாணங்களின்படி கட்டுப்படவேண்டும். பிரமாணங்களுக்குக் கட்டுப்படாதவன் சங்கத்திற் குரியவனாகமாட்டான். அவன் பொதுநயங் கருதுகிறவனல்லன். தமது நாட்டுக்கு

கப் பாடுபடுகிறவனல்லன். ஆனதுபற்றி, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்று பாரதியார் கூறியவண்ணம், எல்லோரும் சேர்ந்துழைத்தால், நமது நாடு முன்னேற்ற மடையும். சில சங்கங்களில் நடக்கும் திருவிளையாடல்களைக் கவனித்தால், அவற்றினும் பார்க்கச் சங்கங்களில்லாமலிருப்பது மிக்க நலம். அதென்னவெனில், சங்கங்கள் என்று மிக்க பெருமையாகத் தொடங்கிவிட்டுப் பின் குத்துமல்லுப் படுகின்றனர். சிலர், இவரை ஏன் அக்கிராசனராகத் தெரிவு செய்யவேண்டும், அவரிருந்தா லென்ன, அவர்தானே உத்தியோகத்தில் பெரியவர் என்று இவ்வித அவசரமில்லாத விஷயங்களிற் தலையிடுகின்றனர். சிலர் தாம் நினைத்தபடி தமக்கு உத்தியோகம் அகப்படாவிடில், உடனே சங்கத்தில் நடப்பதெல்லாம் பிசகு எனச் சாட்டுச் சொல்லிச் சங்கத்தினின்றும் விலகிவிடுகின்றனர். சிலர் உத்தியோகம் மட்டும் வந்தாற் போதுமெனக் கருதி என் பக்கத்துக்குச் சம்மதம் (Vote) கூறுங்கள், என்று உத்தியோகத்திற்கு மாத்திரம் நிற்கின்றனரே யல்லாது சங்கத்தின் நன்மையை விரும்பிப் பாடுபடுகிறவர்களல்லர். உத்தியோகம்தான் கிடைக்கப் பெற்றாலும் சங்கத்திற்காகப் பாடுபட்டு உழைக்காமல் பெண்டீர் பிள்ளைகளுடன் வீட்டில் இன்புற்றிருக்கின்றனர். சிலர், சங்கத்தில் தாம் பெயரெடுக்கும் பொருட்டுத் தமக்கு மேம்பட அறிவுள்ளவனும் வாய்ப் பேச்சு வல்லமை யுடையவனும் இன்னும் சங்கத்திற்காக உழைக்கக்கூடியவனு மிருக்கக் கண்டால், பொறாமை கொண்டு, பல வழிகளாலும் அவன்மேல் குற்றத்தைச் சுமத்தி, மற்றவர்களுக்கும் அவனைப்பற்றி வீணாய்க் கோள் சொல்லி அவனைச் சங்கத்தினின்றும் நீக்கிவிட முயல்கின்றனர். இப்படியாகக் குற்றம் சுமத்தப் படுகிறவன் இதைப் பார்த்து "ஐயோ—இவர்களுடன் யான் ஏன் சேர்ந்தேன்.

இவர்களுடைய அறிவல்லோ அறிவு, இவர்கள் பேருக்கும் புகழுக்குமல்லவோ இச்சங்கத்தைத் தொடங்கியிருக்கின்றார்கள்; இவர்களுடைய எண்ணத்தை யான் என் குலைக்க வேண்டும்" என்று தனக்குள்ளே நினைத்து முன்னதாகவே சங்கத்தினின்றும் விலகிக் கொள்கின்றான். இவன் சங்கத்தினின்றும் விலகினாலும், இவனுடைய பெயர் பெயராகவே விளங்கிக் கொண்டிருக்கின்றது. அத்துடன், இவன் வேறு வழிகளால் உலகத்திற்கு நன்மையைச் செய்து கொண்டே வருகின்றான். இன்னும் ஒருவிதமாயும் சங்கத்தில் முன்னின்று உழைக்கக் கூடிய வல்லமையில்லா திருப்பவர்களை அவர்களின் அரசாங்க உத்தியோகப் பெருமையைக் கருதி அவர்களுக்கே சங்கங்களில் பட்டத்தைச் சூட்டிவிடுகின்றனர். இப்படியாகப் பட்டஞ் சூட்டப்பட்டவர்கள் சங்கத்திலெழும்பிப் பேசத்தன்னும் சக்தியில்லாதவர்களாய் அறிந்தோரிடஞ் சென்று சில விஷயங்களைக் கேட்டுப் பாடமாக்கிக் கொண்டாகுதல் அல்லது புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து அவசியம் தேவையானவற்றைப் பாடமாக்கிக் கொண்டு வந்தாகுதல் தமிழிற் பேச நேர்ந்தால் அரை வீசம் ஆங்கிலத்தையும் கலந்து சிறிதைச் சொல்லிவிட்டுப் பின் புதினப் பத்திரிகைகளில் தம் பெயர் விளங்குமாறு மிக்க விளம்பரமாகப் பிரசுரஞ் செய்து விடுகின்றனர். சில சங்கங்களின் பெயர்களைப் புதினப் பத்திரிகையிற் பார்த்தால் அனேக தேசத் தொண்டுகளைச் செய்கின்றனபோற் றோன்றும். ஆனால் அங்கே சென்று பார்த்தால் உள்ளூர் வாசிகளுக்கே அப்படியான சங்கமிருப்பதாகத் தெரிய மாட்டாது. சில சங்கங்களில், சங்கத் தலைவர் மிகத் தொண்டு புரிவதுபோல மேடை மீதேறிப் பெரிய பிரசங்கமெல்லாஞ் செய்வர். ஆனால் "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்" என்றதுபோல அவர்கள் சொல்வது

றென்று செய்வ தொன்றாயிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட சங்கங்களால் யாது பயனோ யாமறியேம். இன்னுஞ் சில சங்கங்களில், எல்லோரும் வந்து தத்தமக்கேற்ற வீணை கதைகளைப் பேசிப் பொழுதைப் போக்கி விட்டு வீடு சேரும் புகின்றனர். இப்படிப் பொழுதுபோக்கிற்காக விருக்கும் சங்கங்களு மிருக்கின்றன. இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

இனிமேற் சங்கங்களிற் பெரும்பான்மையாக விஷய சூசிகைகளெல்லாம், தற்காலம் ஆங்கிலேயத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இது அவ்வளவு போற்றத் தக்கதல்ல. எமது நாட்டின் சேமத்தைக் கருதி உழைக்க விரும்பினால் சங்கங்களிற் பெரும்பாலும் எவ்விஷயங்களும் எமது தாய்ப் பாஷையிலேயே நடைபெற வேண்டும். இதனால் ஆங்கிலேயத்தை முற்றாக விடச்சொல்லவில்லை. அதிற் பாண்டித்திய முள்ளவர்கள் விஷயங்களை ஆராய்ந்தெடுத்துப் பொதுப்பட யாவருக்கும் உபயோகும் பொருட்டுத் தமிழிலே மொழி பெயர்த்துப் பகிரங்கப் படுத்த வேண்டும். பெரும்பான்மையாகச் சங்கங்களிலே எம்மவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகளைமட்டும் வாசித்து வருவதையே யான் கவனிக்கின்றேன். தமிழின் பெருமையை யறியாது அதை யலட்சியம் செய்யும் அறிவாளிகளின் செய்கையை யாம் என் செய்வது? இப்படி யலட்சியம் செய்வதால் எமது தாய்ப் பாஷை எப்படி முன்னுக்கு வரும்? பெரும்பான்மையோர் தமிழிற் பேசவென்றால் மிக வெட்கப் படுகின்றனர். சிலர், விஷயங்கள் தெரிந்திருப்பினும், அவற்றைத் தமிழிற் கோர்த்துச் சொல்லமுடியாமல் மௌனமாயிருந்து விடுகின்றனர். உதாரணமாக யான் கண்ட செய்தியொன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன் :—மலாய் நாட்டிலுள்ள ஓர் சங்கத்தில், ஓர் நாள் ஓர் கூட்டத்திற்குப்

போக நேர்ந்தேன். அன்றைய தினம் கூட்டத்தில் நடந்த விஷயங்கள் யாவும் தமிழிலேயே நடைபெற்றன. எமக்கு அதுவோர் மகா சந்தோஷத்தைக் கொடுத்திருந்தும் இன்னோர்பால் துக்கத்தையே கொடுத்தது. ஏனெனில் அக்கிராசனம் வீற்றிருந்தவரே கஞ்சிக்குப் பயறு போட்டது போலத் தமிழுடன் ஆங்கிலேயத்தை யுறவாடிப் பேசினார். இன்னொருவர் எழும்பி "அக்கிராசனாதிபதி" அவர்களுக்கு வந்தனம் என்று சொல்லுவதற்குச் சரியான தமிழ் தெரியாமல் "அக்கிசனர்" என்று வாய்க்குள் நசுக்கிச் சொல்லிவிட்டார். இப்படியாகத் தமிழைச் சுத்தமாய்க் கற்றுக்கொள்ளாதபடி சபையில் சிலர் ஏமாந்து போகின்றனர். ஆனதுபற்றி எமது தாய்ப்பாஷையை மேல்நிலைக்குக் கொண்டுவருவதற்குச் சங்கங்கள் முன்னின்று உழைக்க வேண்டும். வித்தியாசாலைகளில்லாத இடங்களில் வித்தியாசாலைகளமைப்பித்துத் தமிழை யாவருக்கும் கற்றுக்கொடுக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தவேண்டும். கல்வியிலேயே எமது நாடு தங்கியிருக்கின்றது. தமிழின் பெருமையைப்பற்றி யாவருக்கும் போதிக்கவேண்டும். அதனது மாட்சியைத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகப் பரவச்செய்தல் வேண்டும். சிவபெருமான் அகத்திய முனிவருக்கு அருளிச் செய்த தமிழ்ப்பாஷையை, குணகடல், குமரி, குடகம், வேங்கடம் என்னும் நான்கு எல்லைகளையும் உடைத்தான தென்னாட்டின் கண்ணே சிறப்புற்று விளங்கிய தமிழ்ப்பாஷையை, சேர சோழ பாண்டிய இராசாக்கள் ஆதரித்து வந்த தமிழ்ப்பாஷையை, சமயகுரவர்களாகிய, அப்பர், சுந்தரர், மாணிக்கர், சம்பந்தர் என்னும் நால்வரும் ஆதரித்த தமிழ்ப்பாஷையை, கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், ஔவையார் முதலான வித்வ சிரோன்மணிகள் போற்றியாதரித்த தமிழ்ப்பாஷையை, தலை, இடை, கடை என்னும் முச்சங்க

ளில் உலாவிச் சிறப்புற்ற தமிழ்ப்பாஷையை, பொதியமலையின் கண்ணே உதித்த தமிழ்ப்பாஷையை இன்னும்

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்பு பெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச் சொலோ மறபுலச் சொற்களோ சாற்றீர்."

என்று இவ்வித பெருமையுள்ள எமது இனிய தமிழ் மொழியை எம்மவருட் பெரும்பாலார் ஆதரியாது நவீன நாகரீகத்தில் மூழ்கி அதைத் தூஷிக்கின்றனர். இவர்களின் அறியாமைதான் என்னே!

(தமிழின் மாட்சி)

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல் வரைப்பி னிதன் பெருமை யாவரே கணித்தறிவார்.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை எட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்."

ஆகையால், சகோதரர்களே! எமது தாய்ப்பாஷையை விர்த்தி செய்வதற்குரிய வழிகளைத் தேடியும் சங்கங்களிலே சுயநலங்கருதாமலும், அழுக்காறில்லாமலும், ஒன்றுபட்டுழைத்து நமது சமூகத்தாரை மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கும் வண்ணம் பரம்பொருளை வேண்டித் துதிப்போமாக. இரண்டாவதாக "வேளாண்மையின் பெருமை" என்பதை யெடுப்போம்.

## 2.—வேளாண்மையின் பெருமை.

பயிரிடும் தொழிலுக்கே வேளாண்மைத் தொழிலென்று பெயர். இதற்கு விவசாயம் என்றும் சொல்லலாம். இத்தொழில், ஏனைய தொழில்களைப் பார்க்கினும் மிகச் சிறந்ததாகும். இதனால் வரும் செல்வம் அழியாத செல்வம். கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம். இத்தொழில் மற்றும் தொழில்களினும் பார்க்க மிக விசேஷமுடைத்து என்று எதற்காகக் கூறினதெனின் ஒருவருக்கும் கீழ்ப்படாமல் சுயாதீனமுள்ள தன்மையுடையதாதலினென அறிக. இதனாற்றான் திருவள்ளுவரும்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும்

"மேழிச் செல்வங் கோழை படாது"

"தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது"

"ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்று ஒளவையாரும் வேளாண்மைத் தொழிலைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ஒரு தேசத்தையாளும் அரசன்தானென்ன, மந்திரி படைவீரர்தானென்ன, இன்னும் மற்றும் தொழிலாளர்கள்தானென்ன, விவசாயிகளையே தம் உணவிற்காக எதிர்பார்க்கின்றார்கள். இதையிட்டுத் திருவள்ளுவர் தமது குறளில் உலகத்தார் என்னும் தேர்க்கு உழவார் அச்சாணியாவர் எனக்கருத்துப்பட

"உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து"

என்று பாடியிருக்கின்றனர். இன்னும் பலகாரணங்களா லும் வேளாண்மைத் தொழில் மிகச் சிறந்ததெனக் கூறப் பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சிறந்ததாகிய தொழி லைச் செய்வதற்கே நாம் முன் வரவேண்டும். ஆங்கிலேய பாஷையைக் கற்றுவிட்டு உத்தியோகத்திற்கென வீட்டுத் திண்ணைக்குப் பாரமாயிருக்கும் தற்கால வாலிபர்கள் இத் தொழிலைச் செய்வதற்கு முன் வந்தாலென்ன? தாய் தந் தையர் இதிற் கவனம் செலுத்த மாட்டார்களா? உத்தி யோகம்—உத்தியோகம் என்று சுயாதீனமற்ற தொழிலுக் குக் காத்துக்கொண்டிருக்க வேண்டிய காரண மென்ன வோ யாமறியேம். இந்தியாவிலும், இலங்கையிலும் எவ் வளவோ கணக்கற்ற காடுகளிருக்கின்றன. அக்காடுகளை யழித்து நாடுகளாக்கி, அங்கே வேளாண்மையைச் செய்து எமது தேசத்தை மேல் நிலைக்குக் கொண்டுவருவதன்றோ புத்திமான்களின் செய்கை. சில மூட புத்தியுள்ள பெற் றோர் ஆங்கிலம் கற்ற தம் பிள்ளைகளை இப்பேர்ப்பட்ட தொழில்களி லிறக்கிவிடுவது கௌரவமல்ல வென நினைக் கின்றனர். அந்தோ! என்ன அறியாமை! இவர்களுக்கு யாராவது புத்தி சொல்ல நேர்ந்தால் பொறாமையாற் சொல் லுகின்றனரெனச் சொல்லி அவர்களை நிந்தித்துவிடுகின்ற னர். இவற்றை விரிக்கிற் பெருகும். நண்பர்களே! எமது நாடு சேமமடையவேண்டுமானால், வேளாண்மைத் தொழி லைச் செய்வதற்கு அனேகர் முன்வர வேண்டும். தனியே நடத்த இயலாதவர்கள் கூட்டுறவு மூலமாக இத்தொழி லைச் செய்து விர்த்திக்குக் கொண்டுவரலாம். இவ்விஷயத் தை இவ்வளவில் நிறுத்தி "கல்வியும் கைத்தொழிலும்" என்ற விஷயத்தை யெடுப்போம்.

## 3.—கல்வியும் கைத்தொழிலும்.

ஒரு தேசம் முன்னேற்ற மடைவதற்குக் கல்வி அவசியம் வேண்டு மென்பதை யெவரும் மறுக்கமாட்டார். ஆனால், கல்வியைக் கற்பது உத்தியோகம் பார்க்கும் பொருட்டே யென்பது சிலருடைய எண்ணம். அப்படியாக நினைப்பது அறியாமை. அறிவின் நிமித்தம் நாம் கல்வியைக் கற்கவேண்டும். பின்னால் எத்தொழிலையும் செய்து ஜீவனம் பண்ணிக் கொள்ளலாம். பொதுவாக எமது தாய்ப் பாஷையைக் கற்றுக்கொண்டாற் போதுமானதே. ஆனால் அன்னிய தேசத்தாருடன் கூட்டுறவு, வியாபாரம், கைத்தொழில் செய்யும் பொருட்டு ஆங்கிலமும் கற்கவேண்டும். முதலிற் றமிழ்ப் பாஷையிலேயே கல்வியைத் தெளிவாய்க் கற்கவேண்டும். இனிமேல், பெண்களுக்கும் கல்வி அவசியம் வேண்டும். தாய்ப் பாஷையைக் கற்றால், அதே போதுமானதே. பெண் கல்விக்கும் ஓர் வரம் பிருத்தல் வேண்டும். அநாகரீகமான கல்வியைக் கற்றுத் தாமும் சட்ட சபைகளிலும் அரசாங்க உத்தியோகத்திலும் குதித்துவிட வேண்டுமென்றும், மேல் நாட்டாரைப் போலப் பலபேருடன் கைகோர்த்துத் திரிய வேண்டுமென்றும், இன்னும் இப்படியான எமது தாய் நாட்டிற்கு விரோதமான கல்வியைக் கற்கக்கூடாது. நமது நாட்டிற்குத் தேவையான கல்வி யாவும் எமது தாய்ப் பாஷையிலேயே யிருக்கின்றபடியால், எமது பெண்மணிகளுக்கு ஆங்கிலம் தேவையில்லை யென்பதே எமது அபிப்பிராயம். இனிமேல் கைத்தொழிலைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

உலகத்தில் பெரும்பான்மையாக ஒவ்வொரு தேசமும் தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே தேடிக் கொள்கின்றது. ஆனால் நமது நாடோ பெரும்பான்மை

யான எமக்குத் தேவையான பொருட்களெல்லாவற்றிற்கும் அன்னிய நாட்டையே மிக்க ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, ஜப்பான் தேசத்திலிருந்து நெருப்புப்பெட்டி, சீப்பு, கண்ணாடி, கோப்பைகள், பேனு, பென்சில்கள் முதலிய பொருட்களும், அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து சீலை, குடை, ஆயுதங்கள் முதலிய பொருட்களும் நமது நாட்டிற்கு இறக்குமதியாகின்றன. இவற்றை யெல்லாம் எமது நாட்டில் ஏன் செய்யக்கூடாது? முயற்சி எள்ளளவேனும் எமது நாட்டிலில்லை யென்பது பூரணமாகத் தெரிகின்றது. இப்படிப்பட்ட கைத்தொழிற் சாமான்களைச் செய்வதற்கு நமது நாட்டில் அவற்றிற்குரிய பொருட்கள் அதிகமிருப்பினும் எமது முயற்சியினைக் குறைவால், பிறர் நகைக்கும்படி பிறர் செய்த பொருட்களைப் பாவித்து இன்புற்றிருக்கின்றோம். உதாரணமாக, எமது நாட்டிலிருந்து செல்லும் பருத்தியானது அன்னிய நாடுகளுக்குச் சென்று நூல் அல்லது சீலையாயும், கொப்பறைத் தேங்காயானது இனிப்புப் பதார்த்தங்களாயும், பனந்தும்பானது துடைப்பக் கட்டைகளாயும் இன்னும் இப்படியே நூற்றுக் கணக்கான பொருட்கள் அங்கு சென்று, திரும்பியும் எமது நாட்டிற்கு வந்து, பணத்தைக் கொண்டு செல்கின்றன. இதனாலன்றோ அன்னிய நாடுகள் இவ்வித கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றில் மேம்பாடடைந்து சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. ஆகையால், இனிமேலாகுதல் உத்தியோகத்திற்குமட்டும் தான் என்று பிள்ளைகளைப் படிப்பிக்காமல், நமது நாடு முன்னேற்றமடையும் பொருட்டு வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய தொழில்களைச் செய்யும் பொருட்டு எமது வாலிபர்களைத் தூண்டிவிட முன்வருவோமாக.

அடுத்த விஷயமாக "தந்தை தாய் பேண்" என்ற விஷயத்தை யெடுப்போம்.

4.—தந்தை தாய் பேண்.

தந்தையையும் தாயையும் காப்பாற்றுவாய் என்பதே இதனது பொருளாகும். தாயானவள் எம்மைப் பெற்று வளர்த்த பெருமையைச் சொல்வதற்கு எம்போலியர்களால் முடியுமா? தொடக்கத்தில் பத்து மாசமும் சுமந்து ஈற்றில் எத்தனையோ உபத்திரவத்துடன் பெற்றுப் பின் வளர்த்த பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? ஊண் உறக்கமின்றி எத்தனை நாட்களிருந்திருப்பாள். நாம் குழந்தைப் பருவத்திலிருக்கும் பொழுது எவ்வளவு கஷ்டங்களை யனுபவித்திருப்பாள். எப்பொழுதாயினும் எம்மேல் வெறுப்படைந்திருப்பாளா? பின்னர், கல்விச் சாலையில் படிக்கவைத்து எம்மைச் சபைகளிலும் மற்றுமிடங்களிலும் முதன்மை பெறச் செய்பவர் யாவர்? தந்தையன்றோ? எம்மைப் படிக்கவைப்பதற்கு எவ்வளவு பணம்தான் செலவழித்தாரோ? சில சமயங்களில் குடி நிலம் தன்னும் விற்றுப் படிக்கவைத்து எம்மை மேல் நிலைக்கு வைத்தவர் யாவர்? தந்தையன்றோ? இப்படியாகப் பெற்றெடுத்துக் காப்பாற்றி வளர்த்து எம்மை மேல் நிலைக்கு வைத்த தாய் தந்தையருக்கு நாம் என்ன கைமாறுதான் செய்யமுடியும்?

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"

என்னும் தெய்வப் புலவரின் பொய்யாமொழியை நாம் கவனித்து நடக்க வேண்டுமன்றோ? அவர்களுக்கு பணிவிடை செய்து அவர்கள் திருப்தியடையும் வண்ணம் செய்விப்பதே மிக மேலான தர்மமாகும். இதனாலன்றோ "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று முதலாவதாகவும் "ஆலயம் தொழுவது சாலவு நன்று" என்று இரண்டாவதாகவும் வைத்து ஔவையாரும் பாடியிருக்கின்றனர். இப்படி யருமையாகப் பெற்றெடுத்து வளர்த்துச் சீராட்

வைத்த தாய் தந்தையரைத் தற்காலத்தில் சிலர் கவனிக்கின்றார்களில்லை. தாய் தந்தையர் பசியினால் வருந்தச் சில அறிவீனர் தங்களை மற்றவர்கள் மெச்சும்படிக்குப் பெரிய அன்னதானம், வித்தியாதானம் முதலிய அறங்களைச் செய்கின்றனர். பெற்றவள் பிச்சை யெடுக்கப் பிள்ளை 'கும்பகோணத்திற் பசுத்தானம் செய்யலாமா? அப்படிச் செய்தாலும் இப்பிள்ளை என்ன பிரயோசனத்தை யடையப்போகின்றான்? சிலர் தாம் உத்தியோகத்திலடைந்து விட்டோமென்று இறுமாப்படைந்து தாய் தந்தையரைக் கவனிக்கின்றார்களில்லை. அவர்களைக் கருநாடகச் சனங்களென அவமதிக்கின்றனர். சிலர், தம் பெண்டீர் சொல்லையே தேவவாக்கென மதித்துத் தாய் தந்தையருடைய சொல்லைக் கேட்கின்றார்களில்லை. அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடாமல் தம் பெண்டீர்கட்கு நல்ல கும்பகோணப்பட்டுச் சேலையும், புதுச்சேரி அட்டிய்லும், இன்னும் வேண்டியதெல்லாம் வாங்கிக் கொடுத்து, அவர்கள் தஞ்சமேயென வாழ்நாளைக் கழிக்கின்றனர். இம்மூடர்களின் செய்கையைக் கண்டு நாமென் செய்வது? இன்னுஞ் சிலர், தாம் பெரிய உத்தியோகத்தி லமர்ந்திருக்கும்போது, தற்செயலாகக் கல்வியிலாவது அல்லது அங்கலட்சணத்திலாவது குறைந்த தந்தையானவன் வரநேர்ந்தால், அப்படி வந்தவரை யாரென்று மற்றவர்கள் விசாரிக்கும் பட்சத்தில் சொந்தத் தந்தை யென்று சொல்வதற்கு வாய்வராமல் "இவர் நமது ஊரிலிருப்பவர்தான், இப்போ ஏதோ கருமத்திற்காகப் பொருள் சேகரிக்க வந்தவர்" என்று ஆங்கிலேயத்திற் கூறிவிடுகின்றனர். இப்படிப்பட்ட துரோகிகளின் செயலைக் கண்டு நாம் வருந்துவதே யல்லாது, பிறிதொன்றும் செய்ய இக்கலிகாலம் இடங்கொடாது. இன்னும் இப்படியாகத் தாய் தந்தையரை நிந்திக்கும் சண்டா

ளர் எம்மவருளனேகர் மலிந்து கிடக்கின்றனர். ஆனால் இப்படிப்பட்டவர்கள், ஈற்றில் ஒருவித சேமத்தையு மடைய மாட்டார்களென்பது நிச்சயமே. உலகிலே நல்ல புகழை யடையமாட்டார்கள். ஆகையால், தாய் தந்தையரை யலட்சியம் செய்யாமல் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்கள் திருப்தி யடையும்படி நடப்பதே ஒவ்வொருவருடைய முதற் கடமையாகும். இதனாலன்றோ.

"தாயினிற் சிறந்த தெய்வமில்லையுயர் தந்தை தன்னி
னேயநற் குருவுமில்லை யென்னின் மற்றிவர்கடாளிற்
றூய்மலர் தூவிநாளும் தொழுதிடு மறிஞர்தாமே
யாய்கதிர் பரப்பும் பொன்னாட் டமராயினிது வாழ்வார்."

"ஈன்றுவளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மாறியற் றிடுவா
ரான்றமதலை நூறுவயதளவு மடிமைத்திறம் பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருண் முற்றுமளித்து முறைமுறையே
யென்று வழிபாடியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கிணையாதே"

ஆனதால் எனது பிரிய நண்பர்களே! எனது பிரசங்கத்தை நீடிக்கின்றேனெனவும் தெரியவில்லை. இன்னும் இரண்டொரு விஷயங்களை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். அதாவது காலவேற்றுமை, ஜாதிவேற்றுமையைப் பற்றியதே.

### 5.—காலவேற்றுமையும் ஜாதிவேற்றுமையும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்றவிதிப்படி தற்காலம் நமது நாட்டில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. சென்ற ஆயிரம் அல்லது மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஆசாரங்களுக்கும் தற்சமயமிருக்கும் ஆசாரங்களுக்கும் அனேக மாறுதல்களுண்டு. இவை காலவேற்றுமையால் தாமாகவே வந்துவிடுகின்றன. தர்ம நீதியைவிட்டு அதர்ம நீதியைப் பேசுவதும், ஜாதி

ஆசாரங்களை விட்டுப் பல ஆசாரங்களைக் கைக்கொள்ளுவதும்; சமய ஆசாரங்களைவிட்டு வேறு சமய ஆசாரங்களைக் கைப்பற்றுவதும் இன்னும் இப்பேர்ப்பட்ட மாறுதல்கள் தற்காலம் நிகழ்ந்துகொண்டு வருகின்றன. இம்மாறுதல்கள் அடைய வேண்டி வந்ததற்குக் காரணம், ஒரு சாரார் வருணாச்சிரம தர்மத்தைக் கைநெகிழ விட்டதனாலேயே யென்று சொல்லுவர். இன்னோர் சாரார், கால வேற்றுமையினாலேயே யென்றும் சொல்லுவர். இன்னுமொரு சாரார், எமது நாடு சுயாதீனமற்றிருப்பதா லென்றும் சொல்லுவர். காரணம் எப்படியிருப்பினும், இனிமேல் நமது நாடு உய்யும் வழியைத் தேடுவதே எமது கடமையாகும். பண்டைக்காலத்தில், எமது நாடு எமது அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. வருணாச்சிரம தர்மமும் செவ்வனே நடைபெற்று வந்தது. வருணம், சாதியென்பன ஒரு பொருட் சொற்கள். இச்சாதி யென்னும் பெயர் அவரவர் செய்த தொழிலால் ஏற்பட்டிருந்தது. இச்சாதி நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை முறையே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்குமாம். வேதமோதலும், ஓதுவித்தலும், யாகஞ் செய்தலும், செய்வித்தலும், தானங் கொடுத்தலும், ஏற்றலும், என்னும் ஆறுமே பிராமணருடைய தொழில்களாம். பிராமணர் பிரமாவினுடைய முகத்தினின்றும் உதித்தவர்களாக வேதம் கூறுகின்றது. பூமியைக் காத்துப் படைக்கல வீரர்களுடன் தேசத்தைச் செங்கோல் தவறாது ஆளுவதும் இன்னும் சில தொழில்களே க்ஷத்திரியருடைய தொழில்களாம். பிரமாவினுடைய புயத்தினின்றும் க்ஷத்திரியர் தோன்றினரென வேதம் கூறும். வாணிகஞ் செய்தல், பயிரிடுதல் முதலியவைகளே வைசியருடைய தொழில்களாம். பிரம்மாவினுடைய தொடையினின்றும்

வைசியர் தோன்றினரென வேதம் கூறுகின்றது. வாணி கஞ் செய்தல் பசுக்காத்தல், பயிரிடுதல் முதலிய தொழில் களுடன் முதல் மூவர்க் கேவல் செய்தலும் சூத்திரரு டைய தொழில்களாம். சூத்திரர் பிரமாவினுடைய பாதத் தினின்றும் தோன்றின ரெனச் சொல்லப்படுகின்றது. இனி மேல், எவன் தன் சாதிக்குரிய தொழிலைச் செய்யத் தவறு கின்றானோ அவன் இழிகுலத்தவ னெனத் தள்ளப்படுகின் றான். உதாரணமாக, ஓர் பிராமணன் தன் குலத்திற் கேற்ப தன் வேதங்களை யோதாமலும், ஓதுவியாமலும் இன்னும் மற்றும் தன் தொழில்களைச் செய்யாமலுமிருந்தால் அவன் இழிகுலத்தவனாய் மதிக்கப் படுகின்றான். பின் அவனைப் பிராமணன் என்று சொல்லுவதற்கோர் பிரமாணமுமில்லை. இதனாற்றான் திருவள்ளுவரும்,

> " மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் " என்றும்

> " ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
> மிழிந்த பிறப்பாய் விடும்," என்றும்

பாடியிருக்கின்றனர். ஆனால், ஓர் சூத்திரன் பிராமண ஒழுக் கமுடையவனாகக் காணப்பட்டால், அவன் பிராமணனெ னக் கருதப்பட்டு எங்கும் மதிக்கப்படுகின்றான். இதனால் ஒழுக்கம் விட்டவன் கீழே யிறங்கவும் ஒழுக்கமுள்ளவன் மேலே யேறவும் இவ்வருணாச்சிரம தர்மம் இடங்கொடுக் கும். ஆகவே ஒழுக்கத்தாற் குலமேற்பட்டதே யன்றி ஒருவனுடைய பிறப்பால் ஏற்பட்டதென்று சொல்ல இட மில்லை. இதையிட்டே கபிலரும்

> " . . . . . . . . . . . . . .
> குலமு மொன்றே குடியு மொன்றே
> இறப்பு மொன்றே பிறப்பு மொன்றே
> வழிபடு தெய்வமு மொன்றே யாதலால்

முன்னோ ருரைத்த மொழி தவருமல்
எந்நா ளாயினு மிரப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து
நிலைபெற வறத்தி னிற்பவை யறிந்து
ஆணும் பெண்ணு மல்லவை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே."

என்று அருளியிருக்கின்றனர். இன்னும் இதற்கு அத்தாட்சிகளாக இழிகுல மென்று சொல்லப்படும் சண்டாளி வயிற்றிற் சத்தியர் பிறந்தா ரென்றும், செம்படவப் பெண்ணினிடத்தே வேதவியாசர் பிறந்தாரென்றும், ஆதி யென்னும் புலைச்சியின் வயிற்றிலே திருவள்ளுவர், கபிலர் முதலானோர் பிறந்தாரென்றும், நூல்கள் கூறுகின்றன. இப்படியாக இவர்கள் இழிகுலத்திற் பிறந்தபோதிலும், கல்வியினாலும், ஒழுக்கமேலீட்டினாலும் புகழ்பெற்று விளங்கியிருந்தார்களென்பது தெள்ளிதில் விளங்குகின்றது. உதாரணமாக, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை இப்போது தன்னும் மிக உயர்ந்த நூலாகக் கருதிப் படிக்கின்றோம். இன்னும்

"களர் நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளை நிலத்து நெல்லின் விழுமிதாக்—கொள்வர்
கடை நிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலை நிலத்து வைக்கப் படும்"

என்று நாலடியாரிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது தாழ்ந்த நிலத்திற் பிறந்த வுப்பைப் பெரியோர் உயர்ந்த நிலத்திற் பிறந்த நெல்லைப் பார்க்கினும் சிறந்ததாகக் கொள்வர். அதுபோல கீழான குலத்திலே ஒருவன் உதித்திருந்தாலும், அவனுடைய கல்வி கேள்வி யொழுக்கத்தால் அவன் கற்றோர் சபையின் கண்ணே வைக்கப்படுகின்றான்.

இவற்றை யெல்லாம் விரிக்கிற் பெருகும். இவ்வருணாச்சிரம தர்மத்தைப்பற்றிப் பேசப்புகின் அது பண்டைக்காலத்தில் செவ்வனே நடைபெற்று வந்ததென்பது மெய்தான். அக்காலத்தில் நான்கு வருணத்தாரும் தத்தம் ஆசாரத்தைக் கைப்பற்றியே நடந்தார்கள். மாதமும் மும்மாரி பொழிந்தது. இதையிட்டுத்தான்

"வேத மோதிய வேதியர்க் கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர் மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே."

என்ற பாடலு மேற்பட்டது. இன்னும் அக்காலத்தில் நாடும் சிறப்புற்று விளங்கியது. ஞானிகளும் வித்துவான்களும் சிறந்து விளங்கினர். ஆனால் தற்காலத்தில் இவையெல்லா மெங்கே? எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஒதுங்கிவிட்டன. வேத வேதியர் களெல்லாரும் வேதத்தைப் புறத்தே வைத்துவிட்டு இராசாங்க உத்தியோகங்களிலும் வேறு தொழில்களிலும் இறங்கிவிட்டார்கள். மற்றும் வருணத்தாரும் அப்படியே. அத்துடன் எமது நாட்டின் நிலைமையும் வேறாகிவிட்டது. இதனால், வருணாச்சிரம தர்மம் முறிந்துவிட்டது. இப்படியே எல்லோரும் தத்தமக் கிணங்கியவாறு நடக்கத் தலைப்பட்டுத் தற்கால மாறுதல்களுக்கு ஆகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கின்றனர். ஆகவே வருணாச்சிரம தர்மம் எப்போது குன்றியதோ, நான் உயர்ந்தகுலம், நீர் இழிந்த குலமென்ற சாதியுமில்லை. யாவரும் சமரச நிலையிலிருப்பதாகவே எண்ண வேண்டியிருக்கின்றது. நமது நாடு தற்சமயமிருக்கும் நிலைமையை யாவருமறிந்திருப்பீர்கள். எமது நாட்டில் தற்சமயம் சாதிப் பிளவுகள் அதிக முண்டு பட்டிருக்கின்றன. சிலர், இச்சாதிக் கட்டுப்பாடு எடுபட்டாற்றான் எமது நாடு மேல்

நிலையடையுமென்று சொல்லுகின்றனர். சிலர் வருணாச்சிரம தர்மத்தைக் கைவிட்டபடியாற்றான் எமது நாடு இவ்வித கேவல நிலைமை யடைந்திருக்கின்றதென்றும், ஆனதால் அத்தர்மத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதே இதற்கு வழியென்றும் சொல்லுகின்றனர். இப்படியே கன்னியாகுமரி தொடக்கம் இமயமலைவரைக்கும் பலபல கொள்கைகளுடன் தற்சமயம் எமது நாடு இருக்கின்றது. ஆனால் நமது நாட்டின் மேல்நோக்கத்திற்குத் தற்சமயம் என்ன அவசியமென்பதைத் தெரிந்துகொள்வதே எங்கள் கடமையாகும். எமது குறைகள் பலவிருப்பினும் அவற்றுள் முக்கியமாயுள்ள சாதி விவகாரத்தை வளர்க்காது எல்லோரும் சமரச நிலையில் நின்று, பொது விஷயங்களிற் சேர்ந்துழைத்து, எமது நாட்டை மேல் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே பல அறிவாளிகளின் நோக்கமாகும். தம்தம் குல ஆசாரங்களை யறவே விட்டுத் தாம் உயர்குலமென்று சொல்லிக் கொள்பவர் நெற்பதருக்குச் சமானமாவர்.

“கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே”

வருணாச்சிரம தர்மத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதானால் அதுவும் மிகச் சால்புடைத்து.

இவ்வண்ணமாகச் சாம்பசிவம் என்பவர் மேடைமீது நின்று மூன்று மணித்தியாலங்களாகப் பேசிக்கொண்டு நின்றார். சபையார் அவருடைய பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டவர்களாய், மிக ஆவலாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் எடுத்த தலையங்கத்தில் இன்னும் இரண்டு விஷயங்கள் தானுள்ளன.

சாம்பசிவம் சபையார்களைப் பார்த்து:—“அன்பர்களே! நேரமோ சென்றுவிட்டது. யான் எடுத்த தலையங்

கத்தில் இன்னும் இரண்டு விஷயங்கள் தானிருக்கின்றன. அவற்றையும் சொல்லிவிடு வதற்குச் சபையார்களுக்கு விருப்பமாயின் சொல்லுவேன்,'' என்று நேரம் அதிகம் சென்றபடியால், அக்கிராசனரை வினவினர். சபையி லிருந் தவர்களு ளனேகர் முழுவதையும் சொல்லி முடிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டபடியால், சாம்பசிவம் தன் எஞ் சிய பிரசங்கத்தைச் செய்யத் தொடங்கினர். அடுத்த விஷ யமாக "ஒற்றுமையும் பொறுமையும்'' என்றதை யெடுத் தார்.

## 6.—ஒற்றுமையும் பொறுமையும்.

நமது நாடு மேல் நிலைக்கு வரவேண்டுமாகில் நமக்குள் ஒற்றுமை அவசியம் வேண்டும். தற்சமயம் பொதுவாக நமது சாதியார்க்குள் ஒற்றுமையில்லை யென்றே சொல்லி விடலாம். மேல் நாட்டாருக்குள் ஒற்றுமை யதிகமிருப்ப தால் அவர்கள் நாடு உன்னத நிலைமையிலிருக்கின்றது. ஒற்றுமைக் குறைவால் எமது நாடு சீர் குலைந்திருக்கின்றது. உதாரணமாக மேல் நாட்டாரின் ஒற்றுமையைப் பற்றிச் சிறிது காட்ட விரும்புகின்றேன். அதாவது, இந்நாட்டில் அனேக மேல்நாட்டாரின் வியாபார ஸ்தலங்களிருக்கின் றன. இவற்றிற் கெல்லாம் பெரும்பாலும் சொந்தக்காரர் கள் தம்தம் நாட்டிலேயே யிருப்பார்கள். அங்கேயிருந்து சரக்குகள் இறக்குமதியாகி இவர்கள் பொறுப்பிலேயே எல் லாம் நடைபெறுகின்றன. இவர்கள் ஆகவேண்டிய கணக் குகள் வைத்து அவர்களுக்கு அதிக இலாபம் காட்டி மென் மேலும் வியாபார ஸ்தலங்களைப் பெருக்கிக்கொண்டே வரு கின்றனர். அவர்களுக்கு இவர்களில் அதிக நம்பிக்கை யுண்டு. இவர்களும் நேர்மையாகத் தமது கடமைகளைப் பார்க்கின்றனர். இப்படியாக எமது நாட்டவர்கள் செய்யும் தொழில்கள் அரிதினுமரிதே. ஏனெனின் நம்மவருக்குள்

ஒற்றுமை யில்லை. முதலாவதாக நம்பிக்கை யில்லை. நமக்கு நம்மிலே நம்பிக்கை யில்லாதிருக்க மற்றவர்களை நம்புவ தெப்படி? மற்றும் சாதியார்களைக் கவனித்தாகுதல் நடக்கக் கூடாதா? இதைவிட எமக்குள் பொறாமை யென்னும் சனியன் கூடவே பிறந்திருக்கின்றான். இவனையடித் தோட்டினால் நமக்குள் ஒற்றுமை வரும். மற்றவர்களுடைய செல்வத்தையோ, கௌரவத்தையோ, பதவியையோ கண்டு நாம் பொறாமை கொள்வதில் என்னதான் பிரயோசனமிருக்கின்றது? நாமும் அப்படி வரத் தெண்டிப்பதே தவிர மற்றவர்களைக் கண்டு பொறாமை கொள்வதால் இன்னும் நாமே நமக்குக் கெடுநிலை விளைவிக்கின்றோம்.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்றது

ஆன்றோர் வாக்கியமும்.

பொறாமை யுடையோனுக்கு வேறு விரோதி வேண்டிய தில்லை. அப்பொறாமையே யவனுக்கு எல்லாத் தீச்செயலையும் கொண்டுவந்துவிடும்.

"அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது"

என்றார் திருவள்ளுவரும். அன்பர்களே! இப்பொறாமை யென்னும் தீயகுணம் நம்மை எப்போது விட்டகலுமோ அப்பொழுதுதான் நாம் மனுஷரென்று எண்ணப்படுவோம். இத்தீய குணமிருக்கும் வரைக்கும் நமது நாட்டிற்கு வேண்டிய தொண்டுகளைச் செய்யமுடியாது. நமது நாட்டை மேல்நிலைக்குக் கொண்டுவரமுடியாது. மற்றும் சாதியார்களைப்போல வியாபார ஸ்தலங்களைப் பெருக்க முடியாது. ஆனதால், மற்றும் சாதியார்களைப் பார்த்தாகுதல் பொறாமை யென்னும் சனியனைத் தொலைத்து ஒற்றுமை யுடையவர்களாய் எக்காரியத்திலும் மனம் துணிந்து நமது நாட்

டிற்கு வேண்டிய தொண்டுகளைச்செய்து நாமும் ஓர் சாதியார் என்று காட்டுவதற்கு முன்வருவோமாக. இறைவன் அருள்பாலிப்பானாக.

"அன்பர்களே! இன்னுமொரு விஷயம் தானிருக்கின்றது. அதையுஞ் சொல்லிவிட்டு எனது பிரசங்கத்தை முடிப்பேன்" என்று சாம்பசிவம் சொன்னார்.

## 7.—தற்கால நாகரீக முழக்கம்.

எமது நாடு சீர்திருத்த ஆசாரத்தைக் கைப்பற்றி நாகரீகமாய் வளர்ந்து வருகின்றதெனப் பலர் எண்ணக்கூடும். ஆனால் உண்மையிற் பார்த்தால் வீண்மயக்குகளில் விழுந்து எமது ஆசாரத்தை யறவே விட்டு, மேல் நாட்டாரின் ஆசாரமே மிகச் சிறந்ததெனச் சொல்லிக்கொண்டு மேலும் மேலும் அவர்களின், நடவடிக்கைகளையே கைப்பற்றிக் கொண்டு வருகின்றோமே யல்லாது, தீர உணர்ந்து எமது தேச நன்மைக் குரிய வழிகளைப் பின்பற்றவேண்டுமென்ற எண்ணம், இன்னும் எமக்குள் வரவில்லை. ஓர் காரியத்தைச் செய்யத் தொடங்குமுன்னர், இது நன்மை பயக்குமா, தீமையளிக்குமா, என்ற இவ்வித கேள்விகளைக் கேட்ட பின்னரே அதைச் செய்யத் தொடங்கவேண்டும். இதை விட்டு முன்பின் யோசியாமல் மேல் நாட்டார் என்ன செய்கின்றார்களோ அவற்றையே நலமெனப் பெரும்பாலார் பின்பற்றுகின்றனர். ஒரு தேசத்துப் பழக்க வழக்கங்கள் இன்னோர் தேசத்துக்குப் பொருந்தத்தக்கவை யல்லவென்பது அறிவாளிகளுக்கே தெரியும், இவற்றைச் சற்றேனுஞ் சிந்தியாது அன்னிய நாட்டாரையே பின்பற்றுகின்றோம். இதனால் நமது தேசம் முன்னுக்கு வர இடமில்லை. ஒவ்வோர் நாடும் அந்நாட்டின் நாகரீகத்திலேயே தங்கி யிருக்கின்றது. ஆனால் தற்காலத்தில் எமது நாட்டார் செய்யும் அநாகரீகச்

செயல்களை சொல்வதென்றால் நேரம் போதாது. மேல் நாட்டு நாகரீகம் தொடங்க முன்னர் நமது நாட்டார் அதி காலையில் நித்திரைவிட்டெழுந்தவுடன், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கடவுளை நோக்கித் தேவாரம் திருவாசகம் பாடுவதிலும், கடவுளை நினைத்துத் தொழுவதிலும், இன்னும் பலவித தெய்வ வழிபாட்டைச் செய்தபின்னரே, தம்தம் முயற்சிக்குச் சென்றிருந்தார்கள். ஆனால், தற்காலத்தில் பெரும்பாலார் பெண்களென்ன, ஆண்களென்ன நித்திரைவிட் டெழுந்தவுடன், சாப்பாட்டு மேசைக்குச் சென்று முதலில் கோப்பி, தேநீர் முதலிய பானங்களையே யருந்துகின்றனர். நமது நாடு மிகச் சூடான தேசமான தால் அக்காலத்தி லிருந்தவர்கள் குளிர்ச்சிபொருந்திய மோர், ஊறுகாய்நீர், பழஞ்சோற்றுநீர், இளநீர், முதலிய நற்பானங்களை யருந்தித் தேக ஆரோக்கியமா யிருந்தார்கள். தற்காலத்தில், இப்பானங்கள் எம்மவருள் அனேகருக்குப் பிடிப்பதில்லை. அதற்குப் பதிலாகக் கோப்பி, தேநீர், சோடா, முதலிய தேக ஆரோக்கியத்தைக் கெடுக்கக்கூடிய பானங்களே வேண்டும். பண்டைக்காலத்தில், எமது நாட்டில், வர்த்தகம், கைத்தொழில் முதலிய நற்தொழில்கள் மிகமலிந்து எமது நாடு மிகச் சிறப்புற்றிருந்தது. ஆனால் தற்காலத்தில், அன்னிய நாட்டார்களே பெரும் பாலாக இவற்றை நடத்த நாம் உத்தியோகத்திற்கு அடிபடுகின்றோம். கைக்கூலி பெருந் தொகையைக் கட்டியும் உத்தியோகத்திற்கே அடிபடுகின்றோம். இக்கைக்கூலிப் பணமே ஓர் முயற்சியைத் தொடங்குவதற்குச் சில சமயங்களில் போதுமானது. அக்காலத்து மாணவர்கள், தாய் தந்தையருக்குக் கீழ்ப்பட்டு நடந்தும், பெரியோர்களை மிக்க மரியாதைபண்ணியும், ஆசிரியர்களை மதித்தும் இன்னும் நல்லொழுக்கங்களிற் சிறந்து விளங்கியிருந்தனர். ஆனால் இக்கா

லத்திலோ பெரியோர்களே இம்மாணவர்களுக்குப் பயந்து நடக்கவேண்டும். தாய் தந்தையரைத்தன்னும் மதிப்பதே கிடையாது. அக்காலமாணவர்கள் இடைநேரங்களில் பெற்றோர் சொல்லும் வார்த்தையைத் தட்டாமல் வீட்டு வேலைகளிலாவது, தோட்டச் செய்கைகளிலாவது வேளாண்மைச் செய்கையிலாவது உதவி புரிந்துவந்தார்கள். தற்காலத்திலோ ஆங்கிலப் புத்தகமும் கையுமாயிருக்கின்றனர். அல்லாவிடில் பந்தடி முதலிய விளையாட்டுக்களே நாகரீகமெனக் கருதுகின்றனர். சிலசமயங்களில் இவ்விளையாட்டுகளுக்குப் போய் கால் கைகளையும் முறித்தும் கொள்ளுகின்றனர். தற்காலத்து மாணவர்களின் சட்டைச் சாக்குகளில் நெருப்புப் பெட்டியும் சிகரெட்டும் அல்லது சுருட்டும் குறையாமலிருக்கும். இவர்கள் இதுவோர் மிக்க கௌரவமென்று நினைத்து எங்கே போனாலும் புகையை விட்டும் எடுத்துக்கொண்டே செல்வார்கள். இம்மாணவர்கள் இப்படியாகப் புகையிலையைப் பாவிக்கும்பொழுது மற்றும் வயது சென்றவர்கள் எப்படி யிருப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமா? சுருட்டுப் பிடிப்பதால் வருங் கெடுதிகளை இவர்கள் உடனே அறியாவிடினும் காலம் செல்லச் செல்லத் தாமாகவே யறிந்து கொள்வார்கள்.

“கண்புகையும் நெஞ்சுலருங் கைகா லயர்ந்துவிடும்
விண்பெரிய மேனி வெளுத்துவிடும்—திண்புவியில்
ஈரற் கருகிவிடும் இந்திரியம் நட்டமாம்
பாரப் புகையிலையின் பண்பு.”

இலக்குமி யென்றும் சீதேவியென்றும் பாராட்டிய வெற்றிலைக்குத் தற்காலம் கௌரவ மென்பதே சிறிது மில்லை. பெரும்பான்மையாக எவர் வீட்டை சென்றாலும், சீதேவி போன்ற தாம்பூலத் தட்டைக் கொண்டு வருவதற்குப் பதிலாக கெடுதியைய விளைவிக்கும் சுருட்டுத் தட்டையும் நெருப்

புப் பெட்டியையும் கொண்டுவந்து வைப்பார்கள். இது தானு நாகரீகம்? மேலும் இம்மாணவர்களுள் அனேகர் படக்காட்சி, நாடகம் முதலிய வற்றிற்குச் சென்று காசைச் செலவழிப்பது மல்லாமல், கெட்ட சினேகிதர்களுடன் சென்று தாசி வீடுகளுக்கு மேகப் பழகிக்கொள்ளுகின்றனர். தற்கால நாகரீகம் இன்னும் எவ்வளவு வேலையைச் செய்கின்றது. அக்காலத்திலிருந்தவர்கள் வேப்பெண்ணெய் நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் முதலிய எண்ணெய்களிலே விளக்கெரித்துப் பாவித்ததால் அறுபது எழுபது வயது வரைக்கும் கண்ணொளி கெடாதபடியிருந்தார்கள். தற்காலத்தில், இவ்விளக்குகளுக்குப் பதிலாகக் கொடிய மண்ணெண்ணெய் விளக்குகளும், மின்சார விளக்குகளும் ஏற்பட்டதால், அனேகர் கண்பார்வை யிழக்க நேரிடுகின்றனர். இதனால் பன்னிரண்டு வயது மாணவன்கூட, மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளுகின்றான். கண்களில் ஒருவித பிசகுமில்லாதவர்களுட் சிலர், குளிர்ச்சிக்கென வேறு வகையான கண்ணாடிகளை வாங்கி யணிந்து, சில சமயங்களில் உள்ள பார்வையையும் இழக்க நேரிடுகின்றனர் அந்தோ! என்ன கொடிது! அக்காலத்திற் கல்வியை யறிவிற்காகக் கற்று வந்தார்கள். தற்காலத்திலோ பெரும்பான்மையாக உத்தியோகத்திற்காகவே கல்வியைக் கற்றுவருகின்றனர். சிலர் தம்பிள்ளைகள் ஆங்கிலம் படித்தாற் போதுமெனக் கருதி ஈடுவைத்தும் நிலத்தை விற்றும் பிச்சையேற்றும் படிப்பிக்கின்றனர். பின்னர் இப்பிள்ளைகள் படித்து அனேகர் உத்தியோக மில்லாது தெரு வீதிகளிற்றிரிகின்றனர். தற்காலக் கல்வி ஒருபால் பிள்ளைகளைத் தெருவீதிகளிற் றிரிந்து காலத்தைக் கழிக்கவும் செய்கின்றது. சில ஆங்கிலம் படித்த பிள்ளைகள் வேளாண்மை, வர்த்தகம், கைத்தொழில் முத

லிய தொழில்கள் செய்வது அகௌரவமெனநினைத்து அவற்றைச் செய்வதற்கு முன்வரா விரும்புகின்றார்களில்லை. இதைப்பற்றிப் பெற்றோரும் சிந்திக்கின்றார்களில்லை. இன்னும் உடைகளை நோக்குங்கால் சிலர் வீட்டிலிருக்கும் பொழுதுதன்னும் மேல்நாட்டு உடையை யணிவதென்றால் வெளியிற் போகும்பொழுது என்னவிதமாய் நடப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமா ? எமது நாடு சூடான பூமியாதலால் எமது வைதீக உடை எவ்வளவு தேகத்துக்குப் பயனளிக்குமென்பதை இந்நவீன நாகரீகத்திற் சிக்குண்டவர்களுக் கென்ன தெரியும்? எமது நாடு உஷ்ண பூமியாதலால் நமது முன்னோர்கள் எண்ணெய் ஸ்நானத்தை வார மொருமுறையோ அல்லது இருமுறையோ கைப்பற்றி வந்தார்கள். அனேகர் இப்பழக்கத்தை இப்போதன்னும் அனுசரித்துவருகின்றனர். சில அறிவீனர் இப்பழக்கம் அனுவசியமென்றும் அநாகரீகச் செய்கையென்றும் சொல்லித் தலைவலி, தலைநோய் முதலிய நோய்களால் பெரும்பாலும் பீடித்திருக்கின்றனர். எங்கள் பாட்டியார் ஔவையாரே *"சனி நீராடு" என்று அருளிச் செய்திருக்கின்றனர். இன்னும் பாலிய குழந்தைகள் ஒருவர் உதவியின்றியும் தாமாகவே அப்பா—அம்மா—என்று அழைக்கச் சில பெற்றோர் அப்படி யழைப்பது அகௌரவமென நினைத்து, முளையிலேயே அக்குழந்தைகள் பப்பா—மம்மா என்று சொல்லப் பழக்கிவிடுகின்றனர். அந்தோ! இவர்களின் செய்கையைக் கண்டு யார்தான் சிரிக்கமாட்டார்கள் ? இன்னும் நமது முன்னோர்கள் ஈசுவரத்தியானம் வரும்பொருட்டுத் தம் சந்ததியார்கட்கு எவ்வளவோ முறைகளை விதித்தி

*ஆண்கள் சனிவாரந்தோறும், பெண்கள் வெள்ளிக்கிழமை தோறும் எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டும். ஆண்கள் புதன் கிழமைகளிலும் எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

ருந்தனர். கடவுளுடைய நாமங்களையே குழந்தைகளுக் கிட்டு வந்தனர். உதாரணமாக "நடராசா" என்ற பெயரைக் கவனித்தால் சிதம்பரத்தில் ஸ்ரீநடராசப் பெருமானது திவ்விய ஞாபக சின்னங்கள் நமக்கெட்டுகின்றன. அதாவது அவரது சிரசிலே கங்கை யிருப்பதும், அவரது ஒரு கரத்தில் மானும் மற்றொரு கரத்தில் அக்கினியும் இன்னும் மற்றும் அவயவங்களும் ஒவ்வொன்றைக் குறிப்பிட நமக்கு ஓர்வித ஈசுவரத்தியானம் இயல்பாகவே வந்துவிடுகின்றது. இவைகளெல்லாம் நமது முன்னோர்கள் அனுசரித்து வந்த முறைகள். இவ்வித திருட்டாந்தங்கள் இன்னு மனேக முள. ஆனால் தற்காலத்தில் நவீன நாகரீகத்திலே சிக்குண்ட நமது நண்பர்கள் முன்னோர்களுடைய விதியை விடுத்து அநாகரீகமான நாமங்களை யிடுகின்றனர். சிலர் இட்ட பெயர்களைக் குறுக்கி ஈற்றில் வருவதையே வழங்குகின்றனர். அதாவது "பாலசுப்பிரமணியம்" என்னும் பெயரை யெடுப்போம். இதில் முற்பகுதியைக் குறுக்கியோ அல்லது கத்தரித்தோ பா. சு. மணியம் (ஆங்கிலத்தில் P. S. Maniam) என்று மாற்றி விடுகின்றனர். இப்படியாக மாற்றுவதால் இவர்கள் ஏதோ மிக்க கௌரவமென எண்ணிக் கொள்ளுகின்றனர். இனி இப்பெயரைக் குறுக்குவதால் இப்பெயரிலடங்கியுள்ள கருத்து வித்தியாசப்பட்டுப் போகின்றது. எப்படியெனில் மேலே காட்டிய "பாலசுப்பிரமணியம்" என்னும் பெயரைக் கவனிப்போம். இப்பெயரின் கருத்து சூரபன்மனுகிய அசுரனைக் கொன்ற பாலனுகிய சுப்பிரமணியக் கடவுள் என்பதே. இன்னும் இவைபோன்றவை யதிகமுள.

இனிமேல் பெண்கள் நாகரீகத்தைச் சொல்லப்புகின் நாட்கள் தன்னும் போதா. "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று எமது பெண்மணிகளுள் அனேகர்

எமது ஆசாரங்களைக் கைநெகிழவிட்டு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு வேலிகளையும் பிடுங்கி யெறிந்து விட்டு அநாகரீகமான உடைகளை யுடுத்தியும் அன்னிய நாட்டாரைப்போல மோட்டர் ரதங்களில் உலாத்துக்குப் போகவும், படக்காட்சி, நாடகம், பந்தடி விளையாட்டுப் பார்த்தல், இன்னும் இவ்வித வீண் வேடிக்கைகளுக்குப் போவதும், இன்னும் எமது நாட்டிற்கு விரோதமான செயல்களில் இறங்கிவிடுகின்றனர். இவர்களுக்கு வாய்க்கும் கணவர் கதிதான் என்ன? இன்னும் சிலர் தம் பெண் குழந்தைகட்கும் தலைமயிரைத் தாறுமாறுகப் பின்னிப் பின் நாடாக்களைக் கட்டித் தொங்கவிட்டு, நாடகக்காரர்களுக்குப் பூச்சு வேஷம் போடுவதுபோலப் புசர்மாவால் முகமெல்லாம் வெள்ளை யடித்து, அன்னிய உடையை, உடைக்கு மேல் உடை உடுத்திக் கால்களுக்குச் சப்பாத்தணிந்து தங்களை யற்றவர்கள் பார்த்து மெச்சுவார்கள் என்று தேகத்தை நாலாயிரம் கோணல்களுடன் ஆட்டி அசைத்துக் கொண்டு செல்லும்படியாக விடுகின்றனர். இவற்றையெல்லாம் கவனிக்கும் மற்றும் சில சாதாரண பெண்களும் தாமும் இவ்விதம் செய்யவேண்டுமென்று கருதிக் "கண்ட பாவனையில் கொண்டை முடிப்பதுபோல" அலங்கோலமாய் உடைகளை யுடுத்திக்கொண்டும், சப்பாத்துடன் நடக்கத் தெரியாமல் கீழே விழுந்தருண்டும் "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்பதைச் சிந்தியாது இப்படியே பிறர் கைகொட்டி நகைக்க வாழ்நாளை வீண்நாளிற் கழிக்கின்றனர். இவர்களின் செய்கையானது "அன்ன நடை நடக்கப் போய்க் காகம் தன் நடையை யிழந்தது" போலாகின்றது. அந்தோ! என்ன நாகரீகம்! தற்காலத்துப் பெண்களுள் அனேகர் எமது தாய்ப் பாஷையை ஒரு பொருட்டாக மதிப்பதே கிடையாது. சில பெண்களுக்குத் தமிழில்

ஓர் காகிதம் தன்னும் எழுதத் தெரியாது. உதாரணமாக, யான் ஓர் வீட்டிற் கண்ட செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். அதாவது, ஒருநாட் சாயங்காலம் ஓர் நண்பர் வீடு சென்றிருந்தேன். அங்கே அவருடைய பெண் குழந்தைகள் நவீன நாகரீக உடையுடன் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்களுள் ஒரு பெண் குழந்தையைப் பார்த்து, "இங்கே வா பிள்ளை" என்று தமிழில் அழைத்தேன். அப்பெண்ணுக்குச் சுமார் எழு அல்லது எட்டு வயதென்று சொல்லலாம். யான் அக்குழந்தையைத் தமிழில் அழைக்க அக்குழந்தை ஓ—யெஸ் (அதாவது ஆம்) (oh yes) என்று ஆங்கிலேயத்தில் சொல்லிக்கொண்டு எனக்கருகே வந்தது. பின் அக்குழந்தையை நோக்கி:—"தங்கைச்சி! நீ என்ன படிக்கின்றாய்! தமிழில் என்ன வகுப்பு ஆய்விட்டது" என்று கேட்டேன். அக்குழந்தை என்னைப் பார்த்து, "மாமா! (I hate Tamil) எனக்குத் தமிழ் பிடியாது," என ஆங்கிலேயத்திலே மறுமொழி கூறிற்று. பார்த்தீர்களா! எமது பெண்களின் நாகரீகம் இதுதான். பெற்றோர்கள் தன்னும் இதைப்பற்றிச் சிந்திக்கின்றார்களா? இதுமட்டோ! இன்னுஞ் சில இடங்களில் பெண்களுக்கு நாடகம் தன்னும் பழக்கி மேடைகளில் அவர்களை யேற்றிவிடுகின்றனர். பெண்களுக்குரிய நான்கு வேலிகளையும் அழிப்பதுதான் தற்கால நாகரீகம் செய்யும் வேலை. சில பெண்கள் சட்ட சபைகளுக்குப் போகவும் ஆடவர்களுடன் கைகுலுக்கிப் பேசவும் வேண்டுமென்றும் எண்ணுகின்றனர். இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். பொதுவாகப் பெண்களுக்குத் தமிழ்க் கல்விமட்டும் போதுமானதென்பதே பல அறிவாளிகளின் துணிபு. தற்கால நாகரீகத்தைப் பற்றிச் சொல்லப் புகின் நேரம் இங்கே போதாது. மயிற் பட்சியைக் கண்டு வான்கோழி

சிறகை விரித்தாடி நடிப்பது போல, எமது நாட்டாரும் மேல் நாட்டாரைப் போல நடித்து ஈற்றில் அவமானப்படுகின்றனர். யான் இங்கே சொன்னவற்றால் எமது நாட்டின் சேமத்திற்கு இச் செய்கைகளெல்லாம் விரோத மென்பது யாவருக்கும் புலப்படுமென்று நம்புகின்றேன். இன்னும் இவ்வித செய்கைகள் அனேக மிருக்கின்றன. ஆனால் மேலே சொன்னவற்றால் இன்னும் இன்னின்ன செய்கைகள் எமக்குத் தேவையில்லை யென்பது யாவருக்கும் புலப்படும். இனிமேலாவது மேல் நாட்டாரின் நாகரீக மென்னும் வலையிலே சிக்குண்ணுமல், எமது ஆசாரங்களைக் கைப்பற்ற முன்வரவேண்டாமா? மேல்நாட்டாரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய நாகரீக மென்னவென்றால், அவர்கள் தம் தேசத்திற்காகப் பாடுபட்டு ஒத்துழைப்பது போல நாமும் எமது தேசத்திற்காகப் பாடுபடவேண்டியதும், அவர்கள் ஒற்றுமையாக எக்காரியங்களிலு மிருப்பதுபோல நாமும் ஒற்றுமையாக எக்காரியங்களிலிருப்பதும், அவர்கள் கைத்தொழில் வர்த்தகம் முதலிய தொழில்களைச் செய்து தம் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவது போல நாமும் கைத்தொழில், வர்த்தகம் முதலிய தொழில்களைச் செய்து நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டு வருவதும், அவர்கள் தம் தாய்ப் பாஷையிற் பக்தியாய் அதை விர்த்தி செய்வது போல நாமும் நமது தாய்ப் பாஷையை விர்த்திக்குக் கொண்டு வருவதும், இன்னும் அவர்கள் தம் சமயத்தைப் பரவச் செய்வதற்குப் பலவித வழிகளை யெடுப்பது போல நாமும் நமது சமயத்தைப் பரவச் செய்வதற்குத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவோ, பிரசங்கங்கள் மூலமாகவோ, கோவில்கள் மூலமாகவோ, அல்லது பத்திரிகைகள் மூலமாகவோ பிரயாசை யெடுப்பதும், இன்னும் அவர்கள் தம் தேசத்திற்காகப் பாடுபட்டுப் பலவித தேசத் தொண்டு

களைப் புரிவதுபோல நாமும் நமது தேசத்திற்காகப் பாடு பட்டுப் பலவித தொண்டுகளைப் புரிவதும், இன்னும் இப் பேர்ப்பட்ட மேலான கொள்கைகளைக் கவனித்து நடப்ப தே தவிர அவர்களுடைய சாதி ஆசாரங்களையும் நடவடிக் கைகளையும் நாகரீகமெனப் பின்பற்றினால் இன்னும் எமது தேசத்திற்குக் கேடு விளைவிக்கின்றோமே தவிர எமது தே சம் முன்னுக்கு வரத் தடையா யிருக்கின்றோ மென்பதை யுணர்கின்றோமில்லை. ஆனதால், எமது பிரிய நண்பர்களே! இது விஷயத்தில் நன்றாக ஊன்றி ஆலோசித்து நமது ஆசா ரங்களைக் கைப்பற்றி நேர் வழியிற் சென்று நமது நாட்டை மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கும் வண் ணம் அடியிடுவோமாக. பரம்பொருள் கிருபை பாலிப்பா ராக,'' என்று சொல்லிச் சாம்பசிவம் தன் பிரசங்கத்தை முடித்தார்.

சபையில் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் சாம்பசிவத்தின் கல்வித் திறமையையும், பேச்சு வல்லமை யையும், தேச பக்தியையும், இன்னும் அவருடைய விசேஷ குணங்களையும் கண்டு மிக வியந்தார்கள். கூட்டம் ஒன்ப தரை மணியளவில், அக்கிராசனர் முடிவுரையுடன் குலைந் தது. எல்லோரும் வீடு போய்ச் சேரும் வரைக்கும் சாம் பசிவத்தின் கல்வித் திறமையைப் பற்றியே பேசிக்கொண்டு சென்றார்கள். எங்கள் சபாபதிப்பிள்ளையும் சாம்பசிவத்தி னுடைய பாண்டித்தியத்தைப் பற்றி மிக வியப்புற்றார்.

# பத்தாம் அத்தியாயம்.

"அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்."

சென்ற ஐந்தாம் அத்தியாயத்தில், கனகேந்திரம் பிள்ளையின் மகன் ஆனந்தராசா சென்னைச் சர்வகலாசாலையிற் படித்துவருவதும், அவனுக்குப்பின்னும் 1,000 ரூபாய் சென்னைக் கனுப்பியதும், அவர் மகள் அன்னமலர் ஓர் விடுதிப் பெண்பாடசாலையில் ஆங்கிலம் கற்று வருவதும், இன்னும் அவ்வத்தியாயத்தோடு சேர்ந்த விஷயங்களை வாசகர்கள் மனதில் வைத்திருப்பார்கள். சென்னைச் சர்வகலாசாலையில் வருஷச் சோதனை முடிந்ததனால் இரண்டு மாச விடுமுறை வந்தது. மற்றும் மாணவர் விடுமுறை நாட்களுக்குத் தங்கள் தங்கள் ஊருக்குப் போவதுபோல ஆனந்தராசாவும் தானும் ஊருக்குப் போகப் புறப்பட்டான். தன் தந்தையிடம் எழுதிப்பெற்ற ஆயிரம் ரூபாய்க்கும் ஓர் தங்கமாலை செய்வித்துத் தான் கொண்டாடி வந்த மாயாசௌந்தரி யென்னும் நாடக வேசியிடம் போய் அதைக் கொடுத்துத் தான் ஊருக்குப் போய்ச் சீக்கிரம் திரும்பி வருவதாகச் சொல்லி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு சென்னைக் கடைவீதிக்கு விநோதமான சாமான்கள் வாங்குமாறு சென்றான். அங்கே போய் மேற்சட்டைக்கு நல்ல பட்டுத் துணியும், காற் சட்டைக்கு அதற்கேற்ற பட்டுத்துணியும் வாங்கி இரண்டிலும் மூன்று சோடி உடுப்புகள் தைப்பித்துக்கொண்டான். புதிய தொப்பி யொன்றும், அரைடசின் கழுத்துப்பட்டைகளும், தங்கத்தெறிகளும், உட்சட்டை அதற்கு மேற்சட்டைகளும், மூன்று சோடி உயர்ந்த சப்பாத்துக்களும், கையிற் கட்டுவதற்குத் தங்கக்கடி-

யாரமும், கைக்குட்டைகளும் வாங்கிக்கொண்டான். இதை விட தன் தங்கை அன்னமலருக்கும் தற்கால நாகரீகத்துக் கேற்ப முழங்கால்மட்டும் போடத்தக்க பாவாடைகளும், சட்டைத் துணிகளும், சித்திரத்தையற்றுணிகளும், தலை மயிரைக் கோணலாகப் பின்னி அக்கம்பக்கம் கட்டித் தொங்க விடுவதற்குரிய நாடாக்களும், தலைக்கு மேலே பக்கங்களுக்கு மாட்டுவதற்குத் தலையணிகளும் தலைக்கு மேலே கவிழ்ப்பதற்குத் தொப்பிகளும் தொப்பிகளின் மேற் சொருகிவிடுவதற்குப் பட்சி யிறகுகளும், சப்பாத்துக் களும், கால்மேசுகளும், பட்டுக்கைக்குட்டைகளும், நல்ல வாசனை வீசக்கூடிய சவர்க்காரப் பெட்டிகளும், அத்தர் புனுகு முதலிய வாசனை திரவியங்களும், இன்னும் தற்கால நவீன நாகரீகச் சாமான்களும் வாங்கி எல்லாவற்றையும் ஒரு இரும்புப்பெட்டியில் வைத்துக் கையில் தங்கப்பூண் கட்டிய பிரம்பும் பிடித்துக்கொண்டு துரைமகன் மாதிரியாகச் சென்னைப் புகையிரத ஸ்தானத்திற்கு வந்து சேர்ந் தான். புகையிரத ஸ்தானத்தில் இவனைக் கண்டவர்கள் எல்லோரும் வெகு வியப்பாகவே பார்த்தார்கள். ஏனெனில் அவனது தோற்றம் எவரையும் பிரமிக்கச் செய்து விடும். உடனே சீட்டு (Ticket) விற்கும் அறைக்குப் பக்கமாகச் சென்று யாழ்ப்பாணம் வரைக்கும் போவதற்கு ஓர் முதலாம் வகுப்புச் சீட்டு பெற்றுக்கொண்டு புகையிரத வண்டிக்குட் போயிருந்தான். இவனிருந்த பெட்டிக்குள் பெரிய உத்தியோகம் வகிக்கும் ஆங்கில துரைமார்களுமிருந்தார்கள். அவர்களுட் சிலர் இவன் ஓர் ஜமீன் தாராயிருக்கவேண்டு மென்றும், சிலர், ஓர் பிரபல நியாயவாதி (Lawyer) யாயிருக்க வேண்டுமென்றும்; சிலர் சில்லா அதிபதியாயிருக்கவேண்டுமென்றும், தாம் தாம் நினைத்தபடியே எண்ணிக்கொண்டார்கள். ஆனால், ஆனந்தராசா ஒரு

வருடனும் பேசாது பெருந்தன்மை யாயிருந்துகொண்டு போனான். புகையிரதம் காலமே ஆறு மணிக்குச் சென்னையை விட்டது. தான் வரும் செய்தியைத் தந்தி மூலமாகத் தன் தந்தைக்கு அறிவித்திருந்தபடியால் தந்தையாகிய கனகேந்திரம்பிள்ளை, தான் மரியாதையாகப் போகவேண்டுமென்று நல்ல பட்டுவேட்டி யொன்று பெட்டகத்திற்குள்ளிருந் தெடுத்து வடிவாக அதையுடுத்தி மேலுக்கு ஓர் பட்டுச் சட்டையையும் மாட்டிக்கொண்டு, காலிற் செருப் பணிந்தவராய் யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்திற்குத் தன் மகனுடைய வரவை யெதிர் கொள்வதற்குப் புதிதாய் வாங்கிய மோட்டர் ரதத்தில் வந்து சேர்ந்தார். தன் மகன் ஆனந்தராசா வருவானென்றறிந்து அவன் ஊரிலே தங்குமளவும் மிகக் கௌரவமாக உலாத்தித் திரியவேண்டுமென்றும், அடுத்த வருஷம் நியாயவாதியாய் விடுவானாதலால் இப்பொழுதே இதை வேண்டிக் கொடுத்தால் சந்தோஷப்பட்டுப் படிப்பில் மிகக் கவனமா யிருப்பானென்ற எண்ணத்தினாலும், புதிய மோட்டர் ரதமொன்றை 3,500 ரூபாய் கொடுத்து வாங்கி வந்தார். சென்னையைவிட்ட புகையிரதம் மூன்றாம் நாட்காலமே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. வண்டி தரித்து நின்றதும், கனகேந்திரம்பிள்ளை அங்குமிங்குமாக ஓடி மகனைப்பார்த்துத் திரிந்தார். அப்பொழுதுதான் ஆனந்தராசாவும் பெட்டியை விட்டிறங்கித் தந்தைக்கு நேராக நடந்துபோய், "ஐயா—தாங்களும் இங்கே வந்துவிட்டீர்களோ", என்றான். ஆனால் தந்தையானவர் முதலில் தன் மகனென அறிந்து கொள்ளமுடியவில்லை. ஏனெனில் அவனுடைய சரீரம் அதிகம் மெலிவுற்றிருந்தது. இதைவிட முகமும் வெளிறிப்போயிருந்தது. இவனுடைய கெட்ட ஒழுக்கங்களே இதற்குக் காரணமாம். பலவித உடுப்புகளை யணிந்திருந்தபடியால் பார்வைக்குச் சிறிது நன்

ருகத் தோற்றப்பட்டான். ஆனால் இவனுடைய உள் இரகசியங்களைப்பற்றிக் கனகேந்திரம்பிள்ளைக்கு என்ன தெரியும்? புகையிரத ஸ்தானத்தில் நின்றவர்களுளனேகர் ஆனந்தராசாவின் வேஷத்தைக் கண்டமாத்திரத்தில் அவனோர் பெரிய உத்தியோகஸ்தனாயிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டார்கள். உடனே கனகேந்திரம்பிள்ளை, "தம்பீ! யான் உனக்காக வேண்டிவந்த மோட்டார் ரதத்திலேறிச் செல்வோம்" என்று அழைத்துக்கொண்டு நடந்தார். இதற்கிடையில் அவன் சென்னையில் வாங்கிவந்த சாமான்களடங்கிய இரும்புப்பெட்டி மோட்டார் ரதத்திற்குள் அம்மோட்டார்ச் சாரதியால் கொண்டுவந்து வைக்கப்பட்டது.

ஆனந்தராசா:—"தந்தையே! வீணாகக் காசைச் செலவழித்து, இந்த மோட்டார் ரதத்தை ஏன் வாங்கினீர்கள்? யான் இங்கே இரண்டு மாசங்களுக்குத் தானே நிற்கமுடியும். பின்னால் நியாயவாதியாய் (Lawyer) வந்தவுடன் வாங்கினாலும் பாதகமில்லை," என்றனன்.

கனகேந்திரம்பிள்ளை:—தம்பீ! அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். நீ அனுபவியாமல் வேறு யாருக்குத்தான் யான் செலவழிப்பது? உன்னுடைய சீர் சிறப்பை யான் உயிருடனிருக்கும் பொழுதன்றோ பார்க்கவேண்டும்? அத்துடன் நீயோ எனக்கு அருமையாய் வந்துதித்த ஓரேயொரு புத்திரனாயிருக்கின்றாய். புத்திரப்பேறு கிடைப்பது இலேசான கருமமா? அத்துடன் கல்வி கேள்விகளிற் சிறந்த புத்திரனாய் வந்துவிட்டால் பிறிது என்ன பாக்கியந்தான் வேண்டும்?

இதனாலன்றோ திருவள்ளுவரும்,

> "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற"

என்று பாடியிருக்கின்றனர். ஆனதுபற்றி உனக்காகவே இந்த மோட்டார் ரதத்தை வாங்கினேன்." என்றார்.

ஆனந்த:—"மிகச் சந்தோஷம் தந்தையே! இப்படி யெத்தனை மோட்டார் ரதங்களில் ஏறி ஓடியிருப்பேன்! சென்னையில் இது பெரியநூதனமா? எனக்கு மோட்டார் ரதம் செலுத்தத் தெரியுமாதலால், யானே செலுத்திக் கொண்டு வருவேன்," என்று தந்தையை முற்பக்கத்தில் வந்துட்காரும்படி சொன்னான். கனகேந்திரம்பிள்ளையும் மிகச்சந்தோஷமாக முற்பக்கத்திலே ஏறியிருந்தார். சாரதி மோட்டார் ரதத்திற்குள்ளிருந்தான். ஆனந்தராசா தன் தகப்பனாரைச் சாரதியுடன் உள்ளேயிருக்கவிடுவது கௌரவமல்ல வென்று நினைத்தே முற்பக்கத்தில் தனக்கருகே யிருக்கும்படி செய்தான். மேல்நாட்டாரின் கொள்கைகளைக் கவனித்திருந்தான்போலும். இப்படியாக ஆனந்தராசா புகையிரத ஸ்தானத்திலிருந்து மோட்டார் ரதத்தை மற்றவர்கள் கண்டு மெச்சும்பொருட்டும், தன் தகப்பனார் தன்னை மெச்சும்பொருட்டும், அதிவிரைவாகச் செலுத்திக் கொண்டு வருகையில் அதேவழியாக எதிரில் ஓர் முடக்கில் ஓர் மோட்டார் ரதம் சட்டென வருவதைக் கண்ட ஆனந்தராசா உடனே தன் ரதத்தை ஒருபக்கமாக விலத்த எத்தனிக்கையில், ஏதோ ஒருவிதமாய் ஒன்றோடொன்று முட்டுப்பட்டு இவனுடைய ரதம் வீண்வல்லைக்குப் போகாமலிருந்த வேப்பமரமொன்றை மோதியடித்தது. எதிரே வந்த ரதம் தப்பித்துக்கொண்டது. ஆனந்தராசாவின் மோட்டார் ரதத்தால் பக்கத்தே வந்த ஓர் மனுஷியும் பிள்ளையும் மோதப்பட்டு மூர்ச்சையானார்கள். மனுஷி உடனே மோட்டார் எமனுக்கு இரையானாள். பிள்ளை ஒருவழியாகத் தப்பித்துக்கொண்டது. ஆனந்தராசாவின் ரதம் சின்னபின்னமாக உடைபட்டுக் கிடந்தது. உடனே ஆனந்தராசாவும் தந்தையும், சாரதியும் ஓட்டம் பிடித்தார்கள். சிறிது நேரத்திற்குள் வீடுபோய்ச் சேர்ந்தனர். வீடு சேர்ந்ததும் கன

கேந்திரம்பிள்ளை நடு நடுங்கிக்கொண்டு மனைவிக்கு நடந்த சம்பவத்தை யெடுத்துரைத்தார். இதற்கிடையில் நால்வர் திடீரென வந்து ஆனந்தராசாவையும் தந்தையையும் கைவிலங்கிட்டு அழைத்துக்கொண்டு போய் சிறைக்கூடத்தில் அடைத்து விட்டார்கள். "ஐயோ—மோசம் வந்துவிட்டதே; மோட்டர் ரதங்களால் வரும் கெடுதிகளை யான் உணர்ந்து இம்மோட்டர் ரதத்தை வாங்கவேண்டா மென்று சொல்லியும் கேளாமல் இதனால் பெருங்கெடுதியை யடைந்தாரே; யான் என் செய்வேன், நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டதே—ஐயோ என் மகனே! ஆனந்தராசா! கைவிலங்கிடப்பட்டுச் சிறையிலிருக்கவா இங்குவந்தாய்? என் கண்மணியே! பாலா!" என்று கனகேந்திரம்பிள்ளையின் மனைவி கனகாம்பாள் தலைவிரி கோலமாய் அழுதுகொண்டிருந்தாள். சில நாட்கள் கழிந்தபின்னர், கனகேந்திரம்பிள்ளைமேல் குற்றமில்லையென்று கண்டு அவரைச் சிறைக்கூடத்தினின்றும் விடுதலையாக்கிவிட்டார்கள். கனகாம்பாள் மனம் தெளிந்து நாதனை நோக்கி! "தாங்கள் இதினின்றும் தப்பித்துக்கொண்டது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. ஆனால் எங்கள் அருமைப் புத்திரன் ஆனந்தராசாவை எவ்விதத்தும் தப்புவிப்பதற்கு வழிதேடவேண்டும். எங்களுக்குப் பொருள் பெரிதல்ல. எவ்வளவு பணம் செலவழிந்தாலும் அவனை விடுவிப்பதற்கு வழிபார்க்க வேண்டும். பின்னால் அவன் நியாயவாதியாய் வந்தவுடன் பணத்தைச் சம்பாதித்துக்கொள்ளலாம். யான் கேள்விப்பட்டவளவில் "சுப்பராயர்" என்ற நியாயவாதி (Lawyer) மிகவும் கெட்டிக்காரனும். வாய்ப்பேச்சுத் திறமையுள்ளவனும், எந்த மெய்வழக்கையும் பொய்வழக்காக்கிவிடத்தக்க வல்லமையுடையவனும். அவனை நாம் ஒழுங்கு பண்ணி இவ்வழக்கை வெல்லவேண்டும். இனிமேல் இங்கு

தாமறியாமல் அவனிடம் சென்று ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்யுங்கள்,'' என்றாள். உடனே கனகேந்திரம்பிள்ளையும் வீட்டைவிட்டேகி நியாயவாதி சுப்பராயரிடம் சென்று சங்கதி முழுவதையும் தெரிவித்து எவ்விதத்தும் இவ்வழக்கைத் தள்ளிவிடும்படி செய்யவேண்டுமென்று மன்றாடிக் கேட்டார்.

சுப்பராயர் :—'' நீர் சொன்னதெல்லாம் விளங்கிக் கொண்டேன். ஆனால் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இவ்வழக்கைத் தோற்றடிக்கச் செய்வதற்கு வழிகளிருக்கின்றன. ஆனால் உண்மையில் உனது மகன்மேலே தான் குற்றமிருக்கின்றது. குற்றமில்லையென்று கண்டபின்னர் தானே எதிரே வந்த மோட்டார் ரதச்சாரதியை விடுதலையாக்கிவிட்டார்கள். சரியாய் விளங்க நேர்ந்தால் உனது மகன் கொலைத் தீர்ப்புக்குரியவனாகின்றான். இம்மெய் வழக்கைப் பொய்வழக்கென எடுத்துப்பேசி வென்ற காலத்தும் யான் அதிகம் பாவத்துக்குள்ளவனாவேன். இப்பாவச் செயலுக்குடன்பட்டு நிற்பதால் எனக்கு என்ன தொகை கொடுக்கவேண்டுமென்று தெரியவருமா?''

கனகேந்திரம்பிள்ளை :—''ஐயா! தொகையைப்பற்றி ஆலோசிக்கவேண்டாம். வழக்கை எவ்விதத்தும் வெல்வது தான் எனக்குத் தேவையானது. அப்படியாகத் தாங்கள் இவ்வழக்கை வென்று என் மகனை விடுதலையடையும்படி செய்வித்தால் 5,000 ரூபாய் கொடுப்பதற்குச் சம்மதமாயிருக்கின்றேன். அதற்குப் பிடியாக முன்பதாகவே வாக்குறுதிச் சீட்டை யெழுதிக் கொடுக்கின்றேன்,'' என்றார்.

சுப்ப :—''மிகவும் சந்தோஷம்! ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். வழக்குத்தினத்தில் என்னைக் காணலாம்,'' என்று வாக்குறுதிச் சீட்டையும் பெற்றுக்கொண்டு அவரை நல்விடையுடன் அனுப்பிவிட்டார். முன்னர் அச்சகாரமாக 1,000 ரூபாயையும் வேண்டிக்கொண்டார்.

ரூபாய் அதிகம் செலவானதையிட்டுச் சுப்பராயர் மிகச் சந்தோஷமாயிருந்தார். இப்படியாக வழக்குத் தினமும் வந்துவிட்டது. அநேக ஜனங்கள் திரள் திரளாய் இவ்வழக்கைப் பார்க்க வந்து கூடினார்கள். ஜனநெருக்கடியால் அநேகமானவர்கள் அப்புறத்தே துரத்திவிடப்பட்டார்கள். நியாயவாதி சுப்பராயருடைய வாய்ச் சாதுரியத்தாலும், உபாயமான புத்தியாலும் மடக்கக் கூடிய கேள்விகளாலும் நீதிபதியவர்கள், மோட்டார் ரதம் சரியான முறைப்படி செலுத்தப்பட்டிருக்கின்றதென்றும் இறந்த மனுஷி வழிதடுமாறி எதிரே வந்து ரதத்திற்கு ளகப்பட்டிறந்தாளென்றும், ஆனந்தராசாவின்மேல் குற்றமில்லையென்று தீர்ப்புச் சொல்லி அவனை விடுவித்தார். ஆனந்தராசாவுக்குண்டான சந்தோஷ மெவ்வளவென்று சொல்ல முடியாது. கனகேந்திரம்பிள்ளை மிக்க மகிழ்ச்சியடைந்தார். நியாயவாதி சுப்பராயருக்கு உடனே பேசிய ரூபாயுடன் இன்னும் ஐந்நூறு ரூபாயும் சேர்த்துக் கொடுத்து அவரைப் புகழ்ந்தார். என்னே! காலத்தின் கோலம்! மெய்யைப் பொய்யென்றும், பொய்யை மெய்யென்றும் நிரூபிக்கக் கூடிய காலமாயிருக்கின்றது. இது கலியின் வலிமையோ யாமறியோம். இவ்விதமாகக் கனகேந்திரம்பிள்ளை பணத்தைக் கொடுத்து வழக்கை வென்று மகனை யழைத்துக் கொண்டு வீடு திரும்பினார். மனைவி கனகாம்பாள் பணம் செலவழிந்தபோதிலும் மகன் தப்பியதே போதுமென்று மிக மகிழ்ச்சியடைந்தாள். ஆனால் கனகேந்திரம்பிள்ளையாவது அல்லது மனைவியாவது தங்கள் பணம் இப்படியாக வீணிற் செலவழிந்தமை என்ன காரணத்தின் பொருட்டென்பதை யுணர்ந்தார்களில்லை. மேலும் கனகேந்திரம்பிள்ளையும் மனைவியும் பணம் அதிகம் செலவழிந்ததையிட்டு ஒருவாறு மனவருத்தப்பட்டாலும் தங்கள் மகன் எப்படியும்

சுப்பராயரைப் போல ஒரு நியாயவாதியாய் (லாயர்) வருவானென்றும் அப்படி வருங்காலத்தில் சென்ற பணத்தையும் சேர்த்துச் சம்பாதிக்கலாமென்று மிக நம்பிக்கை யுடையவர்களா யிருந்தார்கள். இது இப்படியிருக்க விடுமுறை நாட்கள் முடியும் தருணமாதலால் ஆனந்தராசா தான் சென்னைக்குப் போகவேண்டுமென்று தன் தாய் தந்தையருக்குச் சொன்னான். கனகேந்திரம்பிள்ளை அவனிடம் இன்னும் 500 ரூபாய் கொடுத்து, "தம்பி! இனிமேல் உன்னாலே தான் எனது குடும்பம் மேலோங்க வேண்டும். உனக்காக அதிக பணம் வழக்கில் செலவழிந்துவிட்டது. இவ்வழக்கில் உன்னை மீட்டுவிட எவ்வளவு கஷ்டப்பட்டே னென்பதை யுனக்கே தெரியும். இதைவிட உனக்காக 3,500 ரூபாய்க்கு வாங்கிய மோட்டார் ரதமும் சிதறிப்போய் நாலு சல்லிக்கும் உதவாமற் போய்விட்டது. சம்பாதித்து வைத்திருந்த பொருளில் முக்கால்வாசியும் செலவழிந்து விட்டது. இதெல்லாவற்றையும் கவனித்து இம்முறை பீ. ஏ. (B. A.) பரீட்சையிற் றேறி வருவதற்கு முயற்சிக்கவேண்டும். பின் நியாயவாதிக்குப் படித்து முன்னிருந்த செல்வத்தைப் பார்க்கிலும் பதின்மடங்கு சம்பாதிக்க வேண்டுமென்ற அவாவுடன் மனம் வைத்து முயற்சிக்கவேண்டும்" என்று புத்திமதி கூறினார். ஆனந்தராசா தான் அவ்விதம் நடக்கச் சித்தமென்று ஆறுதல் சொல்லித் தன் தாய் தந்தையரிடமும் தன் தங்கை அன்னமலரிடமும் விடை பெற்றுக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டுவிட்டான்.

மேலும் இவ்வத்தியாயத்தில் நாம் கவனிக்க வேண்டிய விஷய மொன்றுளது. அது கைக்கூலியைப்பற்றியதே. இந்த இழிவான தொழில் எமது நாட்டில் பெரும்பான்மையாகப் பரவி யிருக்கின்றது. பணத்திற் காசைப்பட்டு மெய் வழக்குகளைப் பொய்யெனப் பேசவரும் சில நியாயவாதிகளின் செய்கைதான் என்னே!

"உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்றா லறு."

என்றார் ஔவையாரும். இதைவிட உத்தியோகஸ்தர்க ளுள்ளும் சிலர் இத்தொழிலைக் கைக்கொண்டு பிறருடைய பொருளை அநியாயமாக அபகரிக்கின்றனர். சில இடங்க ளில் கைக்கூலி கொடாமல் ஒரு அலுவலும் பார்க்கமுடி யாமலிருக்கின்றது. இக்கைக்கூலி வாங்குபவர்கள் பழிபா வத்துக் கஞ்சாது பொய்சொல்லி, முகமன் வார்த்தை கூறித் தம் மானத்தை விற்றுப் பொருளை யபகரிக்கின்ற னர். இப்படியாகப் பிறரிகழப் பொருளை யபகரித்து வாழ் பவன் உலகத்தி லிருப்பினும் இறந்தவனாகவே கருதப்படு கின்றான். இதனாற்றான் திருவள்ளுவரும்,

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத லன்று"

என்று கூறியிருக்கின்றனர். சிலர் ஆலயங்களுக்குச் சென் று மிகப் பக்தியாகவும் அன்பாகவும், சங்கரா! சம்போ! தண்டாயுதா! பழனிவேலா! கந்தா! என்று அர்ச்சித்து வணங்கிப் பின் பிறரிகழப் பொருளை யநியாய வழியாய்ச் சம்பாதிக்கின்றனர். இவர்களின் செய்கை குளிக்கப் போய்ச் சேற்றை யள்ளிப் பூசிக்கொண்டு வருவது போலேயாம். இப்படியாகக் கைக்கூலிவாங்கியும், தீய வழிகள் மூலமாகச் சம்பாதிக்கும் செல்வமானது முதலிலே ஒரு சமயம் அதிக மாக வந்து கூடினும் பின்னர் காலஞ் செல்லச் செல்ல உள் ளதையும் சேர்த்தள்ளிக்கொண்டு சென்றுவிடும். இதனாற் றான் குமரகுருபர சுவாமிகளும் தமது நீதிநெறி விளக்கத் தில்,

" இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வம்—மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடை போற் றேய்ந்து விடும் "

என்று அருளியிருக்கின்றனர்.

இதைவிடக் கைக்கூலி வாங்குவதால் அனேக தீங்குகளும் சம்பவிக்கின்றன. உதாரணமாக தென்னாட்டின்கண்ணே சென்னைமாநகரில் ஓர் உத்தியோகஸ்தன் கைக்கூலி வாங்கிச் சம்பாதித்துப் பின் துன்புற்ற கதையை யிங்கே குறிப்பிடுகின்றோம்.

சென்னைமாநகரில் குப்புச்சாமி யென்னும் ஒருவர் அரசாங்க உத்தியோகப் பகுதிகளி லொன்றில் ஓர் பிரதம லிகிதராய் உத்தியோகம் பார்த்துவந்தார். அவர் மனைவியின் பெயர் கமலாம்பிகை. கமலாம்பிகை யென்பவள் நவீன நாகரீகத்திற் சிக்குப்பட்டவள். அவளுக்கு இரு ஆண்களும் நாலு பெண்களுமிருந்தனர். கமலாம்பிகை ஆங்கிலத்தில் மற்றிக்குலேஷன் (Matriculation) என்று சொல்லப்பட்ட பரீட்சையிற் றேறினவள். தமிழில் பூச்சியம்தான். தன் புருஷனுடன் அதிகமாக ஆங்கிலத்திலேயே பேசிவருவாள். புருஷன் தமிழிற் பேசினாலும் அவள் ஆங்கிலேயத்திலேயே மறுமொழி கூறுவாள். குடும்ப காரியத்தில் இவள் சொற்படியே யெல்லாம் நடக்கவேண்டும். "பெண்ணுக்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்பதை விட்டு, அவள் சொல்லுக்குக் குப்புச்சாமி யென்பவர் எதிர் பேசாதிருக்கவேண்டும். அவரின் மாசச் சம்பளம் 120 ரூபாய். அவரின் மனைவி கமலாம்பிகை வீட்டு வேலை செய்வது வழக்கமில்லையாதலால், மாசம் 15 ரூபாய் கொடுத்து ஓர் சமையற்காரனை வைத்திருந்தார்கள். குழந்தைகளைப் பார்க்கும்பொருட்டு ஓர் ஆயாளும் 12 ரூபாய் சம்ப

ளத்திலிருந்தாள். நவீன நாகரீகத்திலடிபட்டவர்களாத லால் குழந்தைகளணிவதற்கு விதம் விதமான உடைகளுக் கும் நகைகளுக்கும், நவீன சாமான்களுக்கும் இன்னும் கம லாம்பிகையின் செலவுகளுக்கும், குப்புச்சாமியின் சம்பளம் போதாமலிருந்தது. ஆனால் எமது ஆசாரங்களைக் கைப் பற்றிக் குடும்ப வேலையைத் தானாகவே கமலாம்பிகை செய் திருந்தால் அரைவாசிச் சம்பளம் மாசவீதம் மிச்சம் பிடித் திருக்கலாம். இவளுடைய எண்ணப்படியே நடக்கவேண் டியிருந்ததால் இவருடைய சம்பளம் குடும்ப பாரத்தைத் தாங்குவதற்குப் போதாமலிருந்தது. ஆனதுபற்றிக் குப் புச்சாமி யென்பவர் பிறிது வகைகளால் பணத்தைச் சம்பா திக்க எத்தனித்தார். அதாவது முக்கியமாகக் கைக்கூலி வாங்கத் தலைப்பட்டுக்கொண்டார். இவரிடமிருந்து ஓர் அலுவல் பெறவேண்டியிருந்தால் கைக்கூலி கொடுத்தே தீரவேண்டும். அல்லாவிடில் ஒரு அலுவலும் செய்து கொள்ளமுடியாது. இதைவிடக் கீழ் உத்தியோகஸ்தர்களை வெருட்டியும், அவசரமில்லாதபடி குற்றங் குறை கண்டுபி டித்தும், இன்னும் மேல் உத்தியோகஸ்தர்களுக்கு அவர் கள்மேல் குற்றம் சாட்டுவிக்கப் போவதாகக் கபடமாகச் சொல்லி யவர்களிடமிருந்து கைக்கூலி வாங்கிப் பிழைத்து வருவார். ஓர் சக்கரவர்த்திக்குச் சிற்றரசர்கள் எப்படி மாச வீதம் திறைப்பணம் கட்டிவருவார்களோ அதுபோல இவ ருடைய சில கீழ் உத்தியோகஸ்தர்களும் மாசவீதம் 5 ரூபாயோ அல்லது 10 ரூபாயோ ஒவ்வொருவரும் கட்டி வரவேண்டும். அப்படிக் கட்டத்தவறினால் அவர்கள்மேல் எவ்விதத்தும் குற்றஞ் சுமத்தவே காத்திருப்பார். இனி மேல் இவரின் கீழ் உத்தியோகஸ்தர்களும் மற்றும் தே வைக்காக வருபவர்களும் "தொலைந்தான் பாவிப்பயல்" என்று திட்டித் திட்டியே கைக்கூலி கொடுத்துத் தம் அலு

வலை சில சமயங்களில் முடித்து வந்தார்கள். இவருடைய பொல்லாத செய்கைகளைக் கவனித்து "இவனுக்குக் கடவுளில்லையா ? இவனை அள்ளிக்கொண்டு போகாதா ? இவனுக்குக் கொள்ளை கோதாரி யில்லையா ?" என்று பலவாறு இவரை யிகழ்ந்து தெருத் தெருவாய்ப் பேசிக்கொண்டும் சிலர் செல்வர்.

இப்படியிருந்து வருங்காலத்தில், ஓர்நாள் குப்புச்சாமி தன் வேலைத்தலத்திலிருக்கும் பொழுது அப்பாபிள்ளை யென்னு மொருவர் ஒரு அவசரவேலையைச் செய்விப்பதற்காக இவரிடம் வந்தார். குப்புச்சாமி நேரமில்லை யென்று சாக்குச் சொல்லி அதைச்செய்து கொடுக்க மறுத்துவிட்டார்.

அப்பாபிள்ளை:—"ஓய்—லேககரே! நீர் என்னிடமிருந்து பறித்த தொகைக்கோர் கணக்கில்லை. அப்படியெல்லாம் நன்மைசெய்தும், இந்த அற்பவேலையைச் செய்து கொடுக்க மறுக்கின்றீரே! நன்றி கெட்ட மனுஷனாயிருக்கின்றாய் ?" என்றார்.

குப்புச்சாமி:—"ஓய்! அதிகம் பேசவேண்டாம். இவ்விடம் மரியாதையாகப்பேசு. அப்படி வீண் கதை என்னுடன் பேசினால் துரையிடம் சொல்லி உன்னைக் கைவிலங்கிடுவிப்பேன். தெரியுமா ? ஜாக்கிரதை!" என்றார்.

அப்பா:—"எடே! பிடுங்கித் தின்னி! உன்னைப்போலப் பத்துப்பேர் வந்தாலும் என்னை ஒன்றும் செய்யமுடியாது. துரையிடம் சொல்லப் போவதாகப் பயமுறுத்தினாய்! நன்றாகச் சொல்லலாம். உமக்குத்தான் துரை! எனக்கும் துரையோ ? காற் சட்டைக்குள் புகுந்தவுடன் தம்பிக்குக் கண்கடை தெரியவில்லை" என்று சொல்லிக் கன்னத்தில் எட்டியோர் அறை யறைந்தார்.

குப்பு:—கன்னத்தில் அறையையும் வாங்கிக்கொண்டு ஓடோடியும் போய்த் துரையிடம் நடந்தவற்றைச் சொன்னார். துரை அவன்மேல் வழக்குப் போடும்படியாகச் சொல்லிவிட்டார்.

வழக்குத் தினத்தில் அப்பாபிள்ளை குற்றஞ் சாட்டப்பட்டு 25 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். அப்பாபிள்ளை 25 ரூபாயையும் கொடுத்துவிட்டுச் சென்றார். சிறிது நாட்கள் சென்றபின்னர் கைக்கூலி வாங்கிப் பிழைக்கும் குப்புச்சாமியின் தீச்செயல்களைப் பற்றியும் மிக வருத்திக் கைக்கூலி வாங்குவதைப் பற்றியும் தக்க காரணங்களோடு நால்வர் கைச்சாத்துடனே ஓர் பெரிய மனுவொன்றை யெழுதி அவரின் துரையவர்களுக்கு அப்பாபிள்ளை அனுப்பிவிட்டார். துரையவர்கள் அதை வாசித்துப் பின் தீர விசாரித்து அதிலே யெழுதியிருக்கும் விஷயங்களெல்லாம் மெய்யெனக் கண்டபடியால் உடனே மேலதிகாரிகளுக்கறிவித்து அவரை உத்தியோகத்தினின்றும் தள்ளுவித்தார். இப்போதுதான் குப்புச்சாமி கைக்கூலியால் வருங் கெடுதிகளை யுணர்ந்து கொண்டார். குடும்பபாரத்தைச் சுமப்பதற்குப் பணமுமில்லை. உலகில் வெட்கப்படவேண்டி வந்துவிட்டது. ஐயோ—பாவம் என்ன செய்வார். அவரின் தீச்செயல்கள் அவரையே ஈற்றில் கெடுத்துவிட்டன மனைவி கமலாம்பிகை பாடு திண்டாட்டமாய்விட்டது. நவீன நாகரீகத்தாலடைந்த கெடுதிகளை நன்றாக வுணர்ந்து கொண்டாள். தற்சமயம் அவளுடைய ஆங்கிலப் பேச்செங்கே? அவளுடைய வேலைக்காரன் எங்கே? ஆயாள் எங்கே? நாகரீகமெங்கே? உடைகள் நகைகள் எங்கே? புசர்மாப்பெட்டியும் சவுக்காரமு மெங்கே? மேசைகள், நாற்காலிகள் எங்கே? தெரு திண்ணைகளுக்குப் போகவும் வெட்கமாயிருந்தாள். பின்னர் தானாகவே வீட்டு வேலைகளைச் செய்ய

ஆரம்பித்தாள். வீணைவாத்தியங்களிலும், வலைகளைப் பின்னுவதிலும், தையற் சூத்திரங்களிலும், பட்ட கைகளானவை ஈற்றில் பானை சுரண்ட நேர்ந்ததையிட்டு மிகவும் கவலை கொண்டாள். எல்லாம் தன்னாலேயே நேர்ந்ததெனவுணர்ந்து கொண்டாள். குப்புச்சாமி அனேக மாசங்களாய்த் தெருவில் அலைந்து திரிந்து ஈற்றில் 30 ரூபாய்க்கு ஓர் வேலையிலமர்ந்து தன் குடித்தனத்தை மிக ஒறுப்பனவாக நடத்திவந்தார். இந்த 30 ரூபாயைக்கொண்டு கமலாம்பிகை மிகக் கெட்டித்தனமாக நடந்து மாசம் 10 ரூபாய் மிச்சம் பிடித்துவந்தாள். பிறரை யனுப்பிப் பொருள் பறித்த கன்மம் அவரை யின்னும் விட்டு விலகவில்லை. நாட்கள் செல்லச் செல்ல கயரோக மென்னும் வியாதியாற் பீடிக்கப்பட்டு 4, 5 வருஷங்களாக அவ்வருத்தத்திலாழ்ந்து பாயோடு பாயுழன்று ஈற்றில் யமலோகத்தை யடைந்தார். அவரின் மனைவியும் பிள்ளைகளும் வறுமையாகவே பின்னர் காலத்தைக் கழித்து வந்தனர்.

ஆகவே கைக்கூலி வாங்குவது மிகவும் கெட்ட பழக்கமென்பது யாவருக்கும் விளங்கக்கிடக்கின்றது. ஒவ்வொருவனும் தனக்குக் கிடைக்கப்பெற்ற பொருளைக்கொண்டு இன்புற்று வாழவேண்டும். உள்ளதே போதுமென மனத்திருப்தி யடையவேண்டும்.

> "போதுமென்ற மனமே பொன்செய்யு
> மருந்து"

என்பது ஆன்றோர் வாக்கும். பிறருடைய பொருளைக் கண்டு நாம் ஆசை கொள்வதில் நமக்கு ஒருவித பிரயோசனமும் வரமாட்டாது.

> "வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
> பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி

நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாங்கேகித்
துஞ்சுவதே மாந்தர் தொழில்"

என்றார் ஒளவையாரும்.

ஆனதால் நமக்குப் பொருள் பண்டம் சேருவதெல்லாம் விதியின் வலிமையினாலேயாம். ஆகவே உள்ளதைக் கொண்டு நாம் திருப்தி யடைதல்வேண்டும். நமக்குக் கீழான நிலைமையிலுள்ளவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நாம் அவரினும் பார்க்க மிக்க நல்ல நிலைமையிலிருப்பதாக எண்ணி மனக் களிப்பை யடைவதே மிக உத்தமமாகும். இதனாலன்றோ குமாரகுருபரசுவாமிகளும்,

" தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க
. . . . . . . . . . . . . . . . "

என்றார். ஆகவே பிறர் பொருளுக் காசைப்பட்டு நாம் பாவத்தைத் தேடிக்கொள்ளாமல் உள்ளதைக் கொண்டு மனத்திருப்தியுடன் இனிது வாழ்வோமாக. கடைசியிற் கொண்டு செல்வது உலகிற் செய்த பாவபுண்ணியங்களெனக் கருதி நாம் கடைத்தேறும் வண்ணம் பொருளை நல்வழியில் ஈட்டுவோமாக. இறைவன் அருள் பாலிப்பானாக.

---

## பதினோராம் அத்தியாயம்.

### " மனங்கோண்டது மாளிகை "

சென்ற எழாம் அத்தியாயத்திற் சாம்பசிவத்தினிடம் ஞானமிர்தம் அவளின் தாய் தந்தையரில்லாத நேரத்திற் றன்னை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டதும் அதற்குச் சாம்பசிவம் மறுத்துச் சென்றதும்

வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஒருநாட் சாயந்தரம் ஐந்துமணி யளவில் சபாபதிப்பிள்ளையின் வீட்டுக்கருகிலிருக்கும் கற்பாதைபால் நாட்டுவாசிகள் நகரத்திலிருந்து சாமான்களை வேண்டிச் சுமந்துகொண்டும், சிலபெண்கள் தங்கள் குழந்தைகளைக் காவிக்கொண்டு தலையிலே பாரங்களைச் சுமந்துகொண்டும், மாட்டுவண்டிகள் பாரங்களுடன் சென்றுகொண்டிருக்கவும், தொழிலாளர்கள் தம் வேலையை விட்டு வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கவும், சில வாலிபப் பெண்கள் முழங்கால் வரைக்கும் பாவாடைகளை யணிந்து நவீன நாகரீக முறைப்படி கைகோர்த்தவர்களாய் உலாத்துக்குப் போய்க்கொண்டிருக்கவும், சில ஆடவர்கள் தங்களைக் கண்டு மற்றவர்கள் மெச்சும் பொருட்டு நவீன உடைகளைத் தரித்துக்கொண்டு; சிலர் வாயில் சிக்ரெட்டும் சிலர் சுங்கானும் பிடித்தவர்களாய்க் கையில் பிரம்புடன் உலாத்துக்குப் போய்க்கொண்டிருக்கவும், பள்ளிக்கூட மாணவர்கள் எறிபந்து அடித்து விளையாடுவதற்கு அதற்குரிய உடைகளை யணிந்துகொண்டு போய்க்கொண்டிருக்கவும், தென்றற் காற்று இடையிடையே வீசுவதால் ஜனங்கள் மிக உல்லாசமாகப் போய்க்கொண்டிருக்கவும், எங்கள் ஞானாமிர்தம் தனியே வீட்டுத்திண்ணையி லுட்கார்ந்து கொண்டு பெரிய யோசனையிலாழ்ந் திருந்தாள். சந்தோஷமே அவள் முகத்திற் காணவில்லை. முன்னொரு நாளாகுதல் இவ்வித முகவாட்டமா யிருந்திருக்கமாட்டாள். சீதாதேவி ஸ்ரீஇராமரைப் பிரிந்து அசோக வனத்தின் கண்ணே இராவணனுடைய சிறையிலிருந்து தன்நாயகனை நினைந்து துக்கத்திலாழ்ந்திருந்தது போலவும், தமயந்தியானவள் நளனை நினைந்துருகி மனவாட்டமடைந்திருந்தது போலவும், சந்திரமதி தன் பர்த்தாவை விட்டுப் பிரிந்து துக்கத்திலாழ்ந்திருந்தது போலவும், எமது ஞானாமிர்தமும்

சாம்பசிவத்தை நினைத்து மனமுருகிக் கொண்டிருந்தாள். "ஐயோ! என் பொல்லா மனமே! ஏன் இப்படியாக என்னை வருத்துகின்றாய்? ஏன் இவ்வித கவலைக்குள்ளானேன்? என் காதலா! சாம்பசிவா! நீ இப்போது எவ்விடத்திலிருக்கின்றாயோ தெரியவில்லையே! உன்னை நினைத்து நினைத்து என் மனமானது உருகி என் உடம்பு மெலிகின்றதே? எனக்கோர் ஆறுதலான வார்த்தையைச் சொல்லக் கூடாதா? பெண்ணைக் கண்டால் பேயு மிரங்குமென்றல்லோ பழமொழியும். என்மேல் இரக்கங் கொள்ளக்கூடாதா? மன்மதனைப் பழித்த உன் அழகும், கல்வித் திறமையும் நற்குணமும் என்னைப் பற்றி விட்டதே? யான் என் செய்வேன்! அன்றையதினம் யான் காத்திருந்து தங்களை வாய்விட்டுக் கேட்டதற்காகுதல் எனக்கு வாக்குப்பண்ணி என்னை சந்தோஷப்படுத்தி யிருக்கக் கூடாதா? யான் உன்னை மணக்காவிடில் இவ்வுடம்புடனிருப்பதால் என்ன தான் பிரயோசனம்? என் மனமானது உன்னைப் பற்றிவிட்டபடியால் உன்னையே யல்லாது வேறு ஆடவரைக் கனவிலும் நினைக்கமாட்டேன்," என்று பலவாறு மனத்தில் வந்ததெல்லாம் சொல்லித் தனக்குள்ளே பின்வரும் பாடல்களைப் பாடினாள்.

"பாராயோ என்னைமுகம் பார்த்தொருக்கால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே."

"எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்த தினிப் போதும் பராபரமே."

"ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயோதோ என்னையா பகராய் பராபரமே."

(தாயுமான சுவாமிகள் பாடல்)

என்று இவ்வாறு கவலைப்பட்டுக் கடவுளை வேண்டித் துதித்

து எப்படியும் யான் அவனை விவாகம் செய்வதற்குரிய வழிகளைத் தேடுவேன், என்று மிக நம்பிக்கையுடையவளாயிருந்தாள்.

ஒருநாள் சபாபதிப்பிள்ளை தன் மனைவியை நோக்கி:— "பெண்ணே! ஞானாமிர்தம் இந்த நாகரீக முறைகளை அனுசரிக்க விரும்புகின்றாளில்லையே! புசர்மாவுக்குப் பதிலாக விபூதிதரித்தல் நலமென நிற்கின்றாள். வாசனை எண்ணெய்களுக்குப் பதிலாக இயற்கையான நல்லெண்ணெய் போதுமென்கின்றாள். பீங்கான்களுக்குப் பதிலாக வாழையிலை, தாமரையிலை, முதலியன போதுமென்கின்றாள். உச்சிகளைப் பிரித்துப் பல பின்னல்களைப் பின்னி நாடாக்களைக் கட்டித் தொங்கவிடச் சொன்னால், அத்தோரணங்களெல்லாம் வீணென்றும் பெண்களுக்குரிய உச்சியொன்றுமே போதுமென நிற்கின்றாள். வேடிக்கையான நகைகளையணியச் சொன்னால் அவையெல்லாம் வீணென நிற்கின்றாள். நாகரீகத்துக் கேற்ப முழங்கால் வரைக்கும் சட்டையைப் போடச் சொன்னால் இதுதானா நாகரீகமென்கின்றாள். உலாத்துக்கு வரச்சொன்னால் அடுப்பூதும் பெண்களுக்கு என்ன உலாத்து என்கின்றாள். குசினி வேலையைச் செய்யாமல் சும்மா விருக்கச் சொன்னால் பெண்களுக்குப் பிறிது என்ன வேலை தான் என்கின்றாள். தேநீர், கோப்பி, சோடா முதலிய பானங்களைப் பருகச் சொன்னால் இளநீர், மல்லிநீர், மோர், ஊறுகாய்நீர் முதலிய நற்பானங்களே மிகவும் ஆரோக்கியமானவை யென்கின்றாள். படக்காட்சி, நாடகம் முதலிய வேடிக்கைகளுக்குப் போக வரச்சொன்னால், ஏன், என்னையும் மேடைமீது ஏற்றி விடப்போகின்றீர்களோ என்கின்றாள். மாமிச போசனத்தை மறுபடி பழகச்சொன்னால் அதிலிருந்து நஞ்சு மிக நலமென்கின்றாள். இன்னும் தாறுமாறாகத் தற்கால நவீன நாகரீகத்துக் கேற்றவாறு

நடவாமல் கருநாடகமெட்டுக்கே எல்லாம் நடக்கின்றாள். இப்பேர்ப்பட்டவளை பீ. ஏ. படித்த வாலிபனுக்குக் கட்டிக் கொடுத்தால் என்னென்றுதான் அவனுடனிருந்து காலம் விடுவாள்? இதைவிட அவனும் என்னென்று இவளுடன் காலம் கழிக்க முடியும்? இதற்கு யார் பொறுப்பாளி? காலத்துக்குத் தகுந்த கோலமாய் நடக்கவேண்டாமா? இவளுடைய நாகரீகம்தான் என்னே! மற்றப் பெண்களைப் பார்த்தாகுதல் நடக்கவேண்டாமா? இவையெல்லாம் இவளுக்கு ஏன் பிடிக்கவில்லை? என்றார்.

தங்கம்மாள்:—"நாதா! இதைப்பற்றித் தாங்கள் யோசிக்கவேண்டியதில்லை. பின்னால் எல்லாம் சரியாய் விடும். கல்லூரிகளிற் படித்த இவ்வித எத்தனையோ பெண் குழந்தைகளை யானறிவேன். உதாரணமாக முன்னர் பெரிய உத்தியோகத்திலிருந்து தற்சமயம் இளைப்பாறியிருக்கும் முருகேசம்பிள்ளையவர்களின் புத்திரி மகேசுவரியம்மாள் பள்ளியில் வாசிக்கும் பொழுது சுத்த சைவ அனுஷ்டானங்களை யனுசரித்தவளாம்; மாமிச போசனமில்லையாம், விடுமுறை நாட்களுக்குப் போயிருக்கும் பொழுது தாய் தந்தையருக்குப் புத்திகூறி அவர்களையும் மாமிச போசனத்தை விடுவிக்கச் செய்தவளாம்; எமது ஆசாரங்களைக் கைப்பற்றி நடந்தவளாம், வீட்டு வேலைகள்யாவும் செய்தவளாம்; பின்னர் அவளின் காலம்வரச் சிங்கப்பூர்ப் பகுதியில் உத்தியோகம் பார்க்கும் கனகசுந்தரம் என்றவனுக்கு விவாகம் செய்து வைத்தார்களாம்; அவன் தற்கால நாகரீக வலையிற் சிக்குண்டவனும்; பெரிய ஆடம்பரக்காரனும்; அவனுக்குக் கலியாணம் செய்தவுடன் மகேசுவரியம்மாள் எமது ஆசாரம் முழுவதையும் மறந்துவிட்டாளாம்; நாற்காலியை விட்டு எழுந்திருப்பதில்லையாம்; குசினிவேலை யென்பதை மறந்துவிட்டாளாம்; வேலைக்காரி, ஆயாள் வேண்டுமென்று

நின்றாளாம்; பிள்ளைகளைப் பெற்று ஆயாள் பொறுப்பிலேயே விட்டாளாம்; தாய்ப்பால் தன்னும் கொடுப்பதில்லையாம்; அநாகரீகமென நினைத்துவிடுவாளாம்; புருஷன் வேலையால் வீட்டுக்குத் திரும்புங் காலங்களில் அவனை யெதிர்கொண்டு உபசரியாது நாற்காலிகளில் படுத்துக்கொண்டு நாவல்களை வாசித்துக் கொண்டிருப்பாளாம், அல்லது சங்கீதப்பெட்டி வாசித்துக் கொண்டிருப்பாளாம், இன்னும் எத்தனையோ நாட்டியங்களெல்லாம் ஆடினாளாம். ஆனபடியால்; நாதா! ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். விவாகம் செய்தபின்னர் எங்கள் புத்திரியும் இவைபோன்றனவற்றைச் செய்வதற்குத் தானாகவே முன்வருவாள். தற்சமயம் குழந்தை தானே. சிறுபிள்ளைப் புத்தி யிருக்குந்தானே. ஏதோ சாம்பசிவம் சொல்லிக் கொடுத்ததைச் சரி யென்று நிற்கின்றாள். ஊருக்குப் போனவுடன் அதெல்லாம் சரிக்கு வந்து விடும். ஆனபடியால் இதைப்பற்றி தாங்கள் யோசிக்க வேண்டியதில்லை. பெண்கள் நினைத்தபடியோ? தாங்கள் பயணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள்," என்றாள்.

சபாபதிப்பிள்ளை:—(மனைவியின் வார்த்தைகளா லொருவாறு மனம் தேறினவராய்) "பெண்ணே! உன் பொறுப்பிலேயே விட்டிருக்கின்றேன். ஏதோ பழக்கவேண்டிய நாகரீகங்களைச் சீக்கிரம் பழக்கிவிடவேண்டும். யான் எனது கருமங்களை முடிக்கவேண்டும்," என்று சொல்லி வெளியே சென்றுவிட்டார்.

இது இப்படியிருக்க ஞானாமிர்தம் தனக்குள் பின்வருமாறு யோசிக்கின்றாள்:—"நாங்கள் இவ்வூரை விட்டகலுவதற்கு இன்னும் இரண்டு கிழமைகள் தானிருக்கின்றன. ஐயோ! யான் என் செய்வேன்! ஊர்போய் மன ஆறுதலாயிருக்க வழியில்லையே! இங்கே யிருந்தால் சாம்பசிவத்தை விவாகம் செய்யாவிடினும் அவர் இங்கே வருவதையும் போ

வதையும் பார்த்தாகுதல் மனக்களிப்பாயிருக்கலாம். அவருடைய உருவமானது எனக்கு முன்பாகத் தோன்றுகின்றதே. அவரை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு எப்படியும் ஓர் புகைப்படம் பிடித்துத் தீரவேண்டும்" என்று பலவாறு நினைத்துத் தன் தாயை யணுகி, "அம்மா! நாங்கள் ஊருக்கு அதிசீக்கிரம் போகவிருப்பதாலும், பின் இங்கே திரும்பி வருவது இல்லையாதலாலும் சாம்பசிவத்தையும் வைத்து ஒரு படம் பிடிக்க வேண்டும். அவரை நினைத்தால் எனக்குப் பெரிய கவலைவருகின்றது. அவரிடமிருந்து எவ்வளவு ஞானங்களைக் கற்றுவிட்டேன். எவ்வளவு ஆசார சீர்திருத்தங்களைப் பயின்றுவிட்டேன். அவர் எனக்குக் குருவாயிற்றே. அவரை என்னென்றுதா னழைப்பது. என்ன முறைக்கும் அவரை யெடுக்கலாமன்றோ?" என்று அந்தரங்கமாகச் சொன்னாள்.

தங்கம்மாள்:—"சரி—பிள்ளாய்! நீ அவனுடன் கூடிக் குலாவித்திரிந்து குழந்தையிலேயே விளையாடிக் கொண்டிருந்தபடியாலும் அவனிடம் மிக அன்பாகக் கல்வியைக் கற்றபடியாலும் இயற்கையாகவே அவன்மேல் அன்பு இருக்கும்தானே. அதற்காக என்ன முறைக்கும் அழைக்கலாமென்று ஏன் சொல்லுகின்றாய்? ஏன்—நீ அவனை விவாகம் செய்துகொள்ளப் போகின்றாயா? அல்லது எங்கள் சுற்றத்தாரி லொருவனா?" என்றாள்.

ஞானமிர்தம்:—"ஏன் அம்மா! அப்படித்தான் விவாகம் செய்தாலென்ன? அதனால் வந்த கெடுதியென்ன? அவருடைய படிப்புக்கும், ஞானத்திற்கும், நற்குணங்களுக்கும் யார்தான் அவரை விரும்பமாட்டார்கள்?" என்று தாயின் உள் இரகசியங்களைக் கேட்டறியுமாறு மிகக்கபடமான வார்த்தைகளை விகடமாகச் செப்பினாள்.

தங்க:—“மகளே! ஞானமிர்தம்! என்னே உன் துணிவு! இவ்வார்த்தைகளைப் பேச உனக்குத் துணிவு எப்படி உண்டானது? உன் தந்தை இவ்வார்த்தைகளைக் கேட்டிருந்தால் என் கதி அதோகதிதான். பிச்சையேற்றுப் பிழைத்தவனின் குணநிசயங்களைப்பற்றி நீ ஏன் பேசவேண்டும்? அவனை ஏன் நினைக்கவேண்டும்?” என்று சிறிது கோபமாகப் பேசினாள்.

ஞான:—“இல்லை அம்மா! யான் விகடமாகப் பேசினேனே யொழியப் பிறிதொன்றல்ல. தற்காலத்திற் சில குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணப்படியேதான் விவாகங்களை முடிப்பிக்கின்றனர். சிலகாரணங்கள் பொருட்டு அதுமிக நல்லதெனச் சில பத்திரிகைகளிலும் பார்க்க நேரிட்டேன். உதாரணமாக யான் கையிலே வைத்திருக்கும் நற்குண போதினி யென்னும் பத்திரிகையில் ஓர் பெண் எழுதியிருக்கும் விஷயமொன்றைத் தங்களுக்கு வாசித்துக் காட்டுகின்றேன்” என்று சொல்லி வாசித்தாள். அப்பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.:—

அனந்தபுரம்
ஆனி-கஉ.

கனம்தங்கிய பத்திராதிபரவர்கட்கு,

ஐயா!

யானோ ஓர் நற்குலத்தினுதித்து அன்பாய் என்பெற்றோரால் வளர்க்கப்பட்டு வந்தவள். எனது பெயர் மனோன்மணியம்மாள். யான் சிறு வயதிலேயே கல்வியைக் கற்கத் தொடங்கிப் பிராயமாவதற்குமுன் அனேக அறநூல்களை யெல்லாம் வாசித்திருந்தேன். இதனுடன் எனது பெற்றோர் ஆங்கிலேய பாஷை ஏதோ கௌரவ மென்றெண்ணி அதையும் சிறிது கற்பித்து வைத்தார்கள். எனது பெற்

றோர் சிறிது ஐசுவரிய முடையவர்களா யிருந்தார்கள். எனது சுற்றத்தாருக்குள் ஆங்கிலேயங் கற்றுப் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் செல்வரத்தினம்பிள்ளை யென்னும் வாலிபனுக்கு என்னை விவாகம் செய்து கொடுக்க எனது பெற்றோர்களும் மாப்பிள்ளையின் பெற்றோர்களும் ஒழுங்கு செய்தார்கள். ஆனால் மாப்பிள்ளையின் குணங்களை முன்னதாகவே எனது பெற்றோர்கள் தீர அறிந்திருந்தார்கள். அவரின் குணங்களாவன:—மதுபானம் செய்தல், தாசிவீடு செல்லுதல், கெட்ட சினேகிதர்களுடன் சகவாசஞ் செய்தல், சூதாடல், சம்பாதிக்கும் பணங்களை யெல்லாம் வீணிற் செலவு செய்தல் முதலியனவாம். இக்குணங்க ளமைந்திருந்தமையைப் பற்றிப் பலர் சொல்லும் பொழுதே யான் கேட்டிருந்தேன். இவ்வளவு குணங்களிருந்தமை தெரிந்தும் எனது மூட தாய் தந்தையர் மாப்பிள்ளை வீட்டாரின் பணத்தைக் கருதி எனக்கு விவாகம் செய்யத் தீர்மானித்து விட்டார்கள். யான் பலவழிகளால் மறுக்க முயன்றும் அனுகூலமடைய முடியாமற் போயிற்று. இப்படியாக விவாகமும் நடந்தேறியது. விவாகம் நடந்து சில மாசங்களுக்கு எனது நாதர் மிக அன்பாகவும் ஒற்றுமையாகவும் நடந்து வந்தார். சிறிது காலஞ் சென்ற பின்னர், என்னையு மழைத்துக்கொண்டு உத்தியோகம் பார்க்கும் பினாங்குமா நகரத்திற்கு வந்து சேர்ந்தார். சேர்ந்த சில தினங்களாக மிக அன்பாக இருவரும் நடந்து வந்தோம். விவாகஞ் செய்தபடியால் இவருடைய கெட்ட குணங்களெல்லாம் அவரை விட்டுப் பறந்துவிட்டன வென்று எண்ணி மிகச் சந்தோஷப்பட்டேன். ஆனால் சில தினங்கள் செல்ல இன்னுமோர் பெண்ணணவள் எனது கிருகத்தில் வந்திருக்கக் கண்டேன். முதலில் இதுவோர் எனக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது. பின்னர் அப்

பெண் இவருடைய வைப்பாட்டியா யிருக்கக் கண்டேன். அவளின் பெயர் பாலாம்பாள். பாலாம்பாளுடன் தான் மிக்க அன்பாக நடக்கத் தலைப்பட்டு விட்டார். வீட்டில் யான் சமையல் வேலையும் மற்றும் தொட்டாட்டு வேலைகளையும் செய்யவே விடப்பட்டிருந்தேன். பாலாம்பாளின் கோள் சொல்லுதலால் எனது நாதரால் அடியும், உதையும், பேச்சும் ஏச்சும் படவே ஈற்றில் நேர்ந்தது. புருஷர் எப்படிப்பட்டவர்களா யிருந்தபோதிலும் பெண்கள் பொறுத்து நடப்பதே விரதமாயிருப்பதாலும், இன்னும்

> "கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
> கண்டது கண்டு விழையாமை—விண்டு
> வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
> உறுப்போ டுணர்வுடையாள் பெண்."—(அறநெறிச் சாரம்)

என்ற வாக்கியத்தையும் நினைப்புற்று என் புருஷனிடமிருந்து எவ்வளவு அடியுதை பட்டபோதிலும் யான் வாய் கொடுத்து எதிர்பேசுவதே கிடையாது. நாட்கள் போகப் போக என்னையோர் கூலிக்காரியாக்கியே விட்டார்கள். எனது வாழ்வை நினைத்து நினைத்து பெரிய துக்கத்திலாழ்ந்திருந்தேன். எனக்கு ஆறுதல் சொல்வாரு மொருவரையும் காணேன். அவர்களிருவருமாகத் தனியே யோரறைக்குளிருந்து உல்லாசமாய்ப் பேசியும், விளையாடிக்கொண்டிருக்க, யான் பிறிதோர் அறைக்குள்ளிருந்து அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமா யிருந்தேன். அழுதகுரல் கேட்டாலும் உடனே வந்து மோதி மோதி யடித்துதைவார். இதனால் எனது உடம்பும் ஒருவாறு மெலிந்துவிட்டது. இன்னது செய்யலாமென்பதும் தெரியவில்லை. ஈற்றில் அவர் தானாகவே எனதண்டை வந்து, "இந்தட்சணமே உனது ஊருக்கு யாருடனாகுதல் சென்றுவிடு," என்று மிக்க பயமுறுத்தினர். இது விபரமறிந்த எனது தந்தையும்

இதற்கிடையில் வந்து சேர்ந்தார். அவரும் புத்தி சொல்லியும் எனது நாதரென்பவர் கேட்கவே யில்லை. ஈற்றில் எனது தந்தையுடன் ஊர்போய்ச் சேர்ந்தேன். பின்னர் தான் எனது தாய் தந்தையரும் என்னைப்பற்றிக் கவலைப் பட்டார்கள். முன்னரே யோசித்து இவ்விவாகத்தைச் செய்யாவிட்டால் யான் இவ்வளவு மரியாதை யீனப்பட வேண்டியதில்லை. பொதுவாக எனது தாய்தந்தையரே எனக்கு வினையைத் தேடிக்கொண்டார்கள். எனது விதியும் அப்படியென வறிந்து மிகக் கவலையிலாழ்ந்திருந்தேன். எனக்குப் புத்திரப்பேறும் கிடையாது. சிறிது காலஞ் செல்ல எனது நாதரென்று சொல்லப்பட்டவர் உத்தியோகத்தில் ஏதோ பாரிய குற்றஞ் சாட்டப்பட்டுப் பதினைந்து வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டா ரெனக் கேள்வியுற்றேன். கொண்ட மனைவிக்குத் துரோகம் நினைத்ததால் கடவுளால் தண்டனை யடைந்தாரென்று நினைத்துக் கொண்டேன். ஆனால் இது விஷயம் இப்பத்திரிகையில் யான் எழுதவேண்டியதற்குக் காரணமென்னவெனில், உலகத்திலிருக்கும் பெற்றோர்கள் இதுவிஷயங்களைக் கவனித்துத் தம் பெண்ணிரத்தினங்களுக்குத் தகுந்த மாப்பிள்ளைகளைத் தெரிந்து கொள்ளும்படி வேண்டுவதற்கேயாம்.

பெற்றோர்களே! பணத்தையும், கௌரவத்தையும் கண்டு மோகித்து உங்கள் மங்கையற் கரசிகளைக் குடியர், வெறியர், துஷ்டர், காமர் இன்னும் இப்பேர்ப்பட்ட ஆடவர்களின் கைகளிற் றள்ளிவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

நிர்ப்பாக்கியமுள்ள,

மனோன்மணியம்மாள்.

பத்திராதிபரின் குறிப்பு :—

இப்பெண்ணினுடைய வரலாற்றை யறிந்து மிகவும் வருந்தலானோம். இதை வாசிக்கும் பெற்றோர்கள் எவராகிலும் கண்ணீர் விடுவாரென்றே நம்புகின்றோம். இவ்விஷயத்தில் பெற்றோர்கள் அதிகம் கவனஞ் செலுத்தவேண்டும். பெண்களின் கல்விக்கும், அறிவுக்கும், குணங்களுக்கும் தோதான இல்லற நெறியைக் கொண்டு நடத்துவதற்கேற்ற ஆடவர்களைத் தெரிந்து கொள்வதே தவிரப் பணத்திற்காசைப்பட்டோ, உத்தியோகப் பெருமையைக் கண்டோ, அல்லது வேறு வெளி வேடங்களைக் கண்டு, மூர்க்கரையும், குடியரையும், ஒழுக்கமில்லாதவர்களையும் தெரிதல் கூடாது. இதனாற் குடும்பத்திற் பல தொல்லைகளேற்பட்டு இல்லறத்தைக் கொண்டுநடத்த முடியாமல் நேரிடும். எத்தனையோ ஆடவர்களின் துர் நடத்தையால் அனேக பெண்ணிரத்தினங்கள் மீளாக் கவலையுடனிருப்பதைக் கண்ணாரக் காண்கின்றோம். சில இடங்களில் தற்கொலைகளும் நடக்கின்றன. சில இடங்களில் பெண்களும் கற்பையிழக்கவும் நேரிடுகின்றனர். சிலர் சீவிய காலம் முழுவதும் துக்கக் கடலி லாழ்ந்திருக்கின்றனர். இப்படிப் பலவுள. இதை விரிக்கிற் பெருகும். இன்னுமொன்று இங்கே காட்டத் தக்கது என்னவெனில், ஆடவர்களும் பெண்களைத் தெரியும் போது பெண்களின் முகலட்சணத்தையும், நவீனநாகரீகச் செயல்களையும் அல்லது செல்வத்தையும் கண்டு மோகியாது, தமக்கேற்ற நற்குண நற்செய்கையுடையவளாயும், கற்பா ஸ்த்ரீயாயும், இல்லறத்தைக் கொண்டு நடத்தக்கூடியவளாயும், கல்வி யறிவுள்ளவளாயும், இன்னும் மேலான் குணங்களமையப் பெற்றவளையே தெரிந்துகொள்ள வேண்டும்

"வழிபா டுடையளாய் வாழ்க்கை நடா அய்
முனியாது சொல்லிற்றுச் செய்தாங்-கெதிருரையா
தேத்திப் பணியுமேல் இல்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் புரிந்து"

என்றார் முனைப்பாடியாரும்—(அறநெறிச்சாரம்)

இவற்றைப் பெற்றோர் சிந்தித்து நடப்பார்களாக. விரிக்கிற் பெருகுமெனவிடுத்தாம்.

இங்ஙனம்,

பத்திராதிபர்.

இப்படியாக ஞானாமிர்தம் தன் தாயாருக்குப் பத்திரிகையிலெழுதியிருந்ததை வாசித்துக் காட்டினாள்.

தங்கம்மாள்:—"இதெல்லாவற்றையும் இங்கே என்னத்திற்காக எனக்குச் சொல்லவேண்டும்? இதைப்பற்றி உன்னை வினாவினவர் யாவர்? என்ன விவாகப்பேச்சு! பிள்ளைகளின் பெற்றோர்க் கறிக்கை? உன்னைப்பார்த்தால் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கமாட்டாய் போலக் காணப்படுகின்றதே! உலக ஞானங்களை எனக்கு ஏன் ஓதுகின்றாய்?" என்றாள்.

ஞானாமிர்தம்:—"அம்மா! தாங்கள் என்னை விளங்க முடியாமற் போனீர்களே! பலநூல்களையும் சிறிது வாசித்தவளாதலால் ஏதோ சில உலக நியாயங்களை எடுத்துப் பேசினேனே யொழிய இப்போது என்ன கெட்ட வேலையைச் செய்தேன்? என்ன இழிவைத் தங்களுக் குண்டாக்கினேன்? சாம்பசிவம் என்னைப் படிப்பித்த குருவாதலால் அவர்மேல் அன்பிருக்கும்தானே. குருவை மறந்தவன் பெரும் பாவத்துக்குள்ளாவா னென்று அறநூல்களெல்லாம் கூறுகின்றனவே. அதுபோலச் சாம்பசிவமும் எனது சற்குருவாதலால் இவரே எனக்குக் கல்வி கற்பித்தாரென்று

சொல்வதற்கும் இவரை விட்டுப் பிரிவதால் அவருடைய ரூபத்தை மறவாது காணும்பொருட்டும் படம் பிடிக்கச் சொன்னேனே யன்றிப் பிறிதொன்றுமல்ல. குரு—ஆசானை —எவ்விடத்தும் நினைக்கும்படியே நூல்கள் கூறுகின்றன.

"நேசனைக்காணு விடத்தி னெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடிவில்." என்றார் ஔவையாரும்.

தங்க:—"சரி—பிள்ளாய்! அப்படியே படம்பிடித்துத் தரலாம்" என்று சொல்லிவிட்டு அப்புறமாகச் சென்றனள்.

தங்கம்மாள் அவ்விடத்தை விட்டகன்றதும், ஞானாமிர்தம் பின்வருமாறு யோசிக்கலானாள்:—"யான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததுவே. என் எண்ணம் வீண் போயிற்றே. என் தாயாருடைய உள் இரகசியங்களை யொருவாறு அறியும்பொருட்டுப் பல கருத்துக்கள் பட அந்தரங்கமான வார்த்தைகளையாடியும் அனுகூலமடையக்கூடிய வழிகளைத் தெரியவில்லையே. உண்மையைச் சொல்ல நேரிட்டால் என்கதி அதோ கதிதான். இனிமேல் என்வசத்தா லொன்றும் ஆகப்போவதில்லை.

"என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே."

என்றதுபோல, இனிக்கடவுள்தான் துணை; என்றாலும் இன்னும் என் முயற்சியை விடக்கூடாது.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." என்றும்

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்." என்றும்

அறநூல்கள் கூறுகின்றனவே. ஆனதால் சாம்பசிவத்தை யடைவதற்கே முயற்சிப்பேன். ஆனால் விதி யெங்கிருக்கின்றதோ யானறியேன்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

என்றபடி விதி பெலத்திருந்தால் காரியம் கைகூடும்," என்றவளில் ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டிருந்தாள்.

ஞானமிர்தம் நினைத்தபடியே ஓர் புகைப்படமும் எடுக்கப்பட்டது. ஞானமிர்தம் அப்படத்தைப் பார்த்து மிகக் களிப்பை யடைந்தாள். இப்படியாக சபாபதிப்பிள்ளையின் பயணமும் நெருங்கிவிட்டது. இன்னும் இரண்டு நாட்களே யிருக்கின்றன. பயணம் சொல்ல வேண்டியதெல்லாம் முன்னதாகவே முடித்துக்கொண்டார். இவருடைய நற்குணங்களையும் மற்றும் உத்தியோக விஷயமாய் இவர் உதவி செய்த நன்மைகளையும் நினைப்புற்று இவருக்கோர் பிரியாவிடைக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக இவருடைய சிநேகிதர்களாலும் மற்றும் கீழ் உத்தியோகஸ்தர்களாலும் நடைபெற்றது. அக்கொண்டாட்டத்தில் அவர்களின் ஞாபகசின்னமாக ஓர் தங்கக் கடியாரமும்—சங்கிலியும் அவருக்களிக்கப்பட்டது. சபாபதிப்பிள்ளை வீட்டிற்கு அனேகர் வருவதும் போவதுமாயிருந்தார்கள். அனேக பெண்களும் வந்து போயினர். ஆக ஒரு இரவுதானிருக்கின்றது. அவருடைய பெட்டிகள் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களைப் பாரமாகக் கட்டுவதற்குச் சாம்பசிவம் மிக உதவி புரிந்தான். சாம்பசிவத்தின் தாயாரும் அன்றையதினம் சபாபதிப்பிள்ளையின் வீட்டிலேயே தங்கி நின்றாள். சாம்பசிவம் தன் நன்றியறிதலைக் காட்டும்வண்ணம் சபாபதிப்பிள்ளையின் குழந்தைகளுக்குச் சில சாமான்கள் வாங்கி வந்து கொடுத்தான். ஞானமிர்தத்திற்கும் ஓர் தங்கமாலை செய்வித்துக்

கொடுத்தான். இவற்றைக் கவனித்த சபாபதிப்பிள்ளை, "இவை யெல்லாம் அனாவசியமென்றும் வீணாகக் காசை என் செலவழித்தாய்" என்று சாம்பசிவத்திற்குச் சொன்னார். சாம்பசிவம் சபாபதிப்பிள்ளையைப் பார்த்து, "ஐயா —தாங்கள் எனக்குச் செய்த உபகாரத்திற்கு என்னால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? குழந்தைகள் மேலும் தங்கள் மேலும் தங்கள் பத்நினிமேலும் கொண்ட அன்பின் நிமித்தமாக இவற்றை ஓர் ஞாபகசின்னமாகக் கொடுத்தேனே யன்றிப் பிறிதொன்றல்ல," என்று சொல்லுமளவில் அவன் கண்களினின்றும் அவனை யறியாமல் கண்ணீர் தாரை தாரையாக விழுந்துகொண்டிருந்தது. சபாபதிப்பிள்ளை அவனையாற்றி "இன்னும் மென்மேலும் புகழும் கீர்த்தியும், கல்வியும், ஞானமும் உனக்கு உண்டாகுக," என்று சொல்லி வாழ்த்தி அவனை ஆசிர்வதித்தார். அவ்விதமே அவர் மனைவி தங்கம்மாளும் சாம்பசிவத்தை யாசீர்வதித்தனள். மேலும் ஞானாமிர்தத்திற்கு ஒரு பக்கம் துக்கமும் ஒரு பக்கம் சந்தோஷமும் இன்னும் அவள் மனதில் பலவித எண்ணங்கள் பாய்ந்து அவள் மனதைச் சிதறச் செய்தன. அவளுக்கோ இன்னது செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. சாம்பசிவத்தை விட்டுப்பிரிகிற துக்கந்தான் முதற் காரணமாயிருந்தது. இரண்டாவது, தான், அவனை விவாகம் செய்வேனோ என்றது அவள் மனதில் குழப்படியாயிருந்தது. என்றாலும் தானும் அவனுக்குச் சிலவற்றை ஞாபகமாகக் கொடுக்கவேண்டு மென்று கருதித் தானாகவே செய்த சில சட்டைகளையும், கைக்குட்டைகளையும் கொண்டுபோய் அவனிடம் கொடுத்து, "மாமா! தங்களை நினைக்க எனக்குப் பெரிய மனவருத்தமா யிருக்கின்றது. தாங்கள் என்னைப் படிப்பித்துப் பல கலைகளையும் உணரச் செய்வித்ததற்காக அதிக நன்றியறிதலுள்ளவளா யிருக்கின்றேன்.

எப்போதும் தங்கள் எண்ணமுள்ளவளாகவே யிருப்பேன். தாங்களும் தொடக்கத்திலே என்மே லெவ்வளவு அன்பாக விருந்தீர்களோ அதுபோல நீடித்த அன்பை இனிமேலும் வைத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இன்னும் என்னை யன்புடன் *இரட்சித் தருளவேண்டு மென்றும் நினைப்பூட்டுகின்றேன்,'' என்று சொல்வதற் கிடையில் அவள் கண்களினின்றும் நீரானது முத்து முத் தாகச் சொரிந்தது. இதைக் கவனித்த சாம்பசிவமும் கண்ணீர் விட்டான். பின்னர் சாம்பசிவம் அவளைப்பார்த்து "குழந்தாய் ஞானாமிர்தம்! ஏன் கண்ணீர்விடுகின்றாய்; மனக்களிப்பை யடைவாயாக! மென்மேலும் உனக்குப் புகழும் கீர்த்தியும், கல்வியும் ஞானமும் உண்டாகுக!'' என்று சொல்லி யாசீர்வதித்து அவளிடம் விடை பெற்றான். இப்படியாக எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டு சாம் பசிவமும் தாயாரும் வீடு போய்ச் சேர்ந்தார்கள். சபாப திப்பிள்ளையும் குடும்பத்தாரும் அடுத்தநாட் காலமே பய ணமாகிப் பினாங்குமா நகருக்குச் சென்று அவ்விடத்திலிருந் து கப்பலேறி ஊர் போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் ஞானா மிர்தத்திற்கு மனதிற் சந்தோஷமே கிடையாது. சாம்ப சிவத்தைப் பற்றிய எண்ணங்களே அவள் மனதிற் குடி கொண்டுவிட்டன. அவளுடைய உள் இரகசியங்களைப் பற் றித் தாய் தந்தையர் இன்னும் அறிந்துகொள்ள வில்லை.

---

*ஞானாமிர்தம் தன் எண்ணத்தை மறுபடியும் சாம்பசிவத் திற்கு வற்புறுத்த முயன்றும் வெட்கத்தால் தன்னை இரட்சித்தருள வேண்டுமென்று ஒளிமறைவாகக் கேட்டுக்கொண்டாள். அதிகமாக விரித்துப் பேச எண்ணமிருந்தும் தாய்தந்தை யருக்கு முன்பாகப் பேச அவள் மனம் முன்வரவில்லை.

## பன்னிரண்டாம் அத்தியாயம்.

"ஆலயம் தொழுவது சாலவு நன்று."

சென்ற அத்தியாயத்திற் சபாபதிப்பிள்ளையும் குடும்பத்தாரும் ஊர் போய்ச் சேர்ந்தார்களென்றும் ஞானமிர்தமென்பவள் சாம்பசிவத்தினுடைய எண்ணமே மனதிற் குடிகொண்டவளாய்ச் சதா யோசனையிலாழ்ந்து சென்றிருந்தா ளென்றும் சொல்லி யிருந்தோம். இங்கே சாம்பசிவத்திற்கும் அவர்கள் வெளிக்கிட்ட நாட் தொடக்கம் சிறிது யோசனை யேற்பட்டுவிட்டது. ஏனெனில் ஞானமிர்தம் பயணம் வெளிக்கிட்ட தினத்தன்று தன்னை யன்புடன் இரட்சிக்க வேண்டுமென்று சொன்ன சொற்கள் அவன் மனதைச் சிதறச் செய்தன. ஓர் அறைக்குள்ளிருந்து பின்வருமாறு யோசிக்கலானான்:—

"இதென்ன விபரீதமோ தெரியவில்லையே! இப்பெண்ணோ என்மேல் மிக்க காதல் கொண்டிருக்கின்றாள். ஆனால் யானோ மனதார இதைப்பற்றி நினைக்கவில்லையே. அவளின் தாய் தந்தையர் இவ்விஷயத்தைப் பேசி யொழுங்கு பண்ணினாலும் பாதகமில்லை. ஆனால் அவர்களுக்கு விருப்பமாயின் என்னைக் கேட்டிருப்பார்கள்தானே. இனிமேல் இவளின் விவாக கருமங்கள் எப்படி முடியுமோ தெரியவில்லையே. தன்னை இரட்சிக்க வேண்டு மென்று சொன்ன சொற்களின் அர்த்தம் எமக்கு வெளிப்படையாகத் தெரிகின்றதே. இப்படி யிருக்க அவளின் தாய் தந்தையர் அவளுக்கு ஊரில் விவாக ஒழுங்குகள் செய்யும் பட்சத்தில் அவள் மறுக்க நேரிடில் என்ன சம்பவங்க ளேற்படுமோ! என்மேல் ஏதும் குற்றஞ் சுமத்துவார்களோ! என்ன கஷ்டங்கள் ஏற்படுமோ! என்று எண்ணாத தெல்லாமெண்ணி

இனிமேல் இதைப்பற்றி நெடுக ஆலோசிப்பதில் என்ன பிரயோசனமிருக்கின்றது! ஏதோ நடப்பது நடந்து தான் தீரும். இன்று பிரசங்கத்திற்காக என்னைக் கோவிலில் காத்துக் கொண்டிருப்பார்கள். யான் இதோ செல்ல வேண்டும்," என்று சந்தியாவந்தனையை முடித்துக்கொண்டு கோவிற் பக்கம் சென்றான்.

மேலும் கோவிலில் சாம்பசிவத்தினுடைய பிரசங்கம் கேட்கும் பொருட்டு முன்னதாகவே அநேக ஜனங்கள் வந்து குழுமியிருந்தனர். விளம்பரத்திற் கண்டபடியே "ஆலயவழிபாடு" என்ற விஷயத்தைப் பற்றிச் சாம்பசிவம் பேசத் தொடங்கினார்.

அன்பர்களே!

இன்று யாம் எடுத்துக்கொண்ட விஷயம் ஆலய வழிபாட்டைப் பற்றியதே. இவ்விஷயத்தை எம் போலியர்களால் எடுத்துரைப்பது மிகவும் கடினம். என்றாலும் என் சிற்றறிவுக் கெட்டியவாறு சிலவற்றைக் கூறுவேன்.

எமது நண்பர்காள்!

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

என்று பெருநாவலர் கூறிய வண்ணம் எழுத்துக்கள் அகரத்தை முதற் கொள்வனபோல சிருஷ்டி திதி சங்காரம் கொண்ட இவ்வுலகமானது ஓர் தலைவனா லுண்டாக்கப் பட்டிருக்கின்ற தென்பதையும் எல்லாவற்றிற்கும் அவனே தலைவனென்பதையும் நாமறிந்து கொள்ளவேண்டும். அத்தலைவன்தான் பரமாத்மா. பரமாத்மா வென்பது கடவுள். அக் கடவுள்தான் சிவபெருமான். சிவமென்பது சைவ சம்பந்த முள்ளது. இக்கடவுளைப் பதியென்றும் அழைக்கின்றோம். இனி ஆன்மாக்களாகிய நாம் பசுக்களென்று

அழைக்கப் படுகின்றோம். பரமான்மாவாகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினால் வழிபட்டு அவருடைய பாதாரவிந்தத்தைச் சேரும் பொருட்டே இம்மானிட சென்மத்தை யெடுத்தோம். பரமான்மாவைப் பற்றிச் சிந்திக்க விடாமல் தடுத்துக் கொண்டிருப்பதைப் பாசமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்பாசமானது ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களாற் கட்டுப் பட்டிருக்கின்றது. இவ்வநித்திய வாழ்க்கையிற் சிக்குண்டு அறநெறி பற்றி நடவாமல் தடுத்துக் கொண்டிருக்கும் பாசங்களைக் கழற்றி அமலனை யறிந்துய்யும் பொருட்டு முயற்சிக்க முன்வரவேண்டும். இனிமேல் கடவுளை யறிவதற்கு எம் போலியர்கட்கு ஆலய வழிபாடே மிகச் சிறந்ததாகும். இதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். ஆலயம் என்னும் பதத்தைப் பிரித்தால் ஆ—லயம் என்று நிற்கும். "ஆ" என்பது ஆன்மா. "லயம்" என்பது ஒடுங்குதல் அல்லது ஐக்கியப்படுதல். ஆகவே "ஆலயம்" என்னுஞ் சொல்லுக்கு ஆன்மா ஒடுங்குதல் எனப் பொருள் கொள்ளப்படும். அதாவது மும்மலங்களாற் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாவானது அவற்றினின்றும் விலக முயற்சித்து பரமான்மாவினுடன் ஐக்கியப்பட்டு அதனுடன் கலந்து விடும் மார்க்கமாகச் செல்லும் இடத்திற்கே ஆலயம் என்று பெயர். ஆகவே ஆலயமானது கடவுள் வசிக்கும் மிகப் பரிசுத்தமான இடமாயிருக்கின்றது. இனிக் கடவுள் எங்கு மிருக்கின்றாராதலால் அவரை ஆலயத்திற் சென்று ஏன் வணங்கவேண்டும், வீட்டில் வணங்க முடியாதா, என்று யாரும் வினவக் கூடும். இதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

பசுவினிடத்தே பால் எங்கும் வியாபித்திருப்பினும் முலையினிடத்தே பால் செறிவது போல, கடவுள் எங்கும் வியாபகமாய் நிற்பினும் ஆலயத்தின் கண்ணே தயிரில் நெய்

போல விளங்கி நின்று ஆன்மாக்களுக்குக் காட்சி கொடுப்பார். பிறவிடங்களில் பாலில் நெய்போல விளங்காது நிற்பர். இனிமேல் ஆலயத்தி லல்லாது வேறு இடங்களிலிருந்து உலக போகங்களை யனுபவித்துக் கொண்டிருக்கும் எமக்குக் கடவுளை வணங்க வேண்டு மென்ற சித்தை யதிக மில்லை. வணங்க விருப்ப மிருப்பினும் பூரணமாக நாம் அவரை நினைப்பதற்குப் பலவழிகளாலும் தடை பட நேரிடுகின்றோம். ஆனால் ஆலயத்துக்குச் சென்றதும் நமக்கு ஓர்வித பக்தி நம்மை யறியாமல் வந்து விடுகின்றது. நானென்னு மகந்தை ஒருவாறு ஒழிந்து விடவும் மற்றவர்களைப் பார்த்தாகுதல் கடவுளை வணங்க வேண்டு மென்ற அவா தானகவே வந்து விடுகின்றது. கோவிலைக் கிட்டிச் சேர்ந்ததும் எதிரே காணப்படும் கோபுரங்களையும், மற்றும் மதில்களையும், இன்னும் நானாவித சோலைகளையும், நந்தவனங்களையும், முதலிற் காணவே எமக்கு ஓர்வித ஆனந்தமுண்டாய் விடுகின்றது. மனம் முழுதும் ஈசுவரனிடத்தே செல்கின்றது. பின்னர் கோவிலுக்குள் நுழைந்ததும் மணி ஓசையினுடைய கீதமும், ஜெகசோதியாய் விளங்கிக் கொண்டிருக்கும் பற்பல விளக்குகளின் காட்சியும், ஆயிரக் கணக்கான அடியார்களுடைய கூட்டமும், அவர்கள் பாடும் கீதங்களினோசையும், பல விடங்களில் விளங்கிக் கொண்டிருக்கும் விக்கிரகங்களின் சிறப்பும், கோவிற் கட்டிடங்களின் அழகும், இன்னும் பல காட்சிகள் எமக்கு முன்பாகத் தோன்றுகின்றன. இவை யெல்லா வற்றையும் தாண்டி இன்னும் உட்செல்லுகையில், ஆகா! ஜோதிமயமான எம்பெருமான் மூலஸ்தானத்தில் வீற்றிருப்பதைக் கண்ட மாத்திரத்தில், அகந்தை யென்பது பறந்தோடி, மனமானது ஒரு வழிப்பட்டு எம்பெருமானையே பல முறையும் நின்றும், இருந்தும், புரண்டும் வணங்க ஏற்படுகின்றது. அவர் பீடத்தின்

மேல் வீற்றிருக்கும் சிறப்பும், அவர் அணிந்திருக்கும் பட்டாடைகளும், நவமணி கிரீடங்களும், இரத்தினபாணங்களும், இன்னும் தம்மை வந்தடைந்தோர்க்குப் "பயப்படாதே வாருங்கள், என்னை வந்தடையுங்கள்," என்று சொல்லும் அவருடைய திருக்கரங்களும், அவருடைய புன் சிரிப்புடன் விளங்கும் செந்தாமலர் போன்ற திரு முகமும், எம்மை யவர்பாற் செலுத்திவிடுகின்றன. ஆகா! எங்கு பார்த்தாலும் ஜெக சோதியான வெளிச்சம்! எங்கு பார்த்தாலும் திரள் திரளான ஜனக் கூட்டங்கள்! எவ்விடத்தும் பாடலும் கீதமும்! எங்கும் வேத வேதியர்களின் வேத கோஷம்! மணியோசையின் சத்தம்! எங்கும் பல வாத்தியங்களின் கோஷம்! எங்கே பார்த்தாலும் அடியார்களுடைய பற்பல வகையான் வணக்கங்கள்! ஆகா! என்ன காட்சி! தெய்வ லோகமோ, திருக்கைலாசமோ! என்று சொல்லும் வண்ணமான காட்சியைக் காண எமது மனம் எம்பெருமான்மேற் பற்றிவிடுகின்றது. தன்னையறியாமல் கண்களினின்றும் நீரானது சொரிந்து விடுகின்றது. சரீரம் சிலிர்த்து வியர்வை வெளிப்பட்டு ஈசன்பால் மட்டுமே மனம் செல்கின்றது. இதனாலன்றோ ஔவையாரும்,

"ஆலயம் தொழுவது சாலவு நன்று"

என்று பாடியிருக்கின்றனர்.

முற்றும் துறந்த ஞானிகளாகிய அப்பர், சுந்தரர், மாணிக்கர், சம்பந்தர் முதலானோரும் இன்னும் பல அடியார்களுமே ஆலய தெரிசனத்தைக் கைக் கொண்டிருந்தார்களென்றால் உலக மாயையிற் சிக்குண்ட எம்போலியர்கட்கு ஆலய வழிபாடு எவ்வளவு பயனளிக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? உதாரணமாக எமது தேசத்தை யாளும் சக்கரவர்த்தியை நாம் நேரிலே காணாவிடினும் அவருடைய பிரதி விம்பமாகிய படத்தைப் பார்த்து "இவர்தான் எமது

இராசா—இவர்தான் எமது நாட்டைப் பரிபாலிப்பவர்; இவர்தான் புண்ணியவான்,'' என அப்படத்தை யாகுதல் பார்த்து மிக மகிழ்ச்சி யடைகின்றோம். அதுபோல உலகத்துக்குக் கர்த்தாவாகியவரும் நித்தியானந்தருமாகிய எம்பெருமான் அடியார்களுக்குத் தோன்றி யருளிய பல வகைத் தோற்றங்களையுடைய விக்கிரகங்களை நாம் மனதாரப் பூசித்து வணங்குவோமானால் அவ் வணக்கத்தால் நாம் அவரைக் கிட்டிச் சேரலா மென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. உலக மாயையிற் சிக்குண்ட எம்போலியர்களின் மனத்தை ஒரு வழிப்படுத்திக் கடவுளை யறிந்துய்வதற்கே விக்கிரக வணக்கம் ஏற்பட்டது. இதைவிட்டு கல்லையும், செம்பையும், மாக்கட்டைகளையும் வைத்துக்கட்டி இவை யெல்லாம் ஏதோ வேடிக்கைக் கென நினைத்தால் நாம் ஒரு நாளும் கடவுளை அறிந்துய்யமாட்டோம்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"—(திருமந்திரம்)

அதாவது ஓர் மரத்தா லாக்கப்பட்ட யானையை நாம் ஒரே மனதாய்க் கருதிப் பார்க்கையில் மரத்தன்மை மறைந்து மெய்யான யானையினது உருவம் போலத் தோன்றும். ஆனால், ஓகோ! நாம் மரத்தை யல்லோ யானை யென்று கருதிவிட்டோம். இது இன்ன மரத்தா லல்லோ செய்யப்பட்ட தெனக் கருதுமிடத்து, யானையின் உருவம் போய் நமக்கு மரமாகவே தோன்றும். ஆதலால் நாம் மனத்தை ஒரு வழிப்படுத்திக் கோவிலிலுள்ள விக்கிரகத்தைப் பார்த்து, இவ்விக்கிரகம் பொன்னு அல்லது வெள்ளியா, இதற்கு மேலே யணிந்திருப்பது முத்தா அல்லது பவளமா, என்ற இவ்வித மூட எண்ணங்களை யொழித்து அவர்

ஆங்காங்கு அடியார்களுக்குக் காட்சி கொடுத்த உருவ அமைப்புகளென்றும், அவற்றை விக்கிரகமென்று கருதாமல் கடவுள் என்று பாவித்து நாம் வணங்குவோமானால் மெய்யான பக்தியுடையோராய் வருவது மல்லாமல் இம்மையிற் சகல பாக்கியங்களையும் பெற்று மறுமையில் மோட்சத்தையு மடைவோ மென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. இனி இவ்விக்கிரகங்களிலும் மற்றும் ஆலய அமைப்புகளிலும் அனேக ஆழ்ந்த கருத்துக்களடங்கியிருக்கின்றன. இவற்றை யுணர முடியாத அறிவீனர்கள் இவையெல்லாம் பிராமணரால் பிழைப்பின் நிமித்தமாக எடுத்துக் கட்டி வைக்கப்பட்டவைக ளெனப் பறை சாற்றுகின்றனர். ஏனெனில் இவர்களுக்கு அவற்றை யறிந்துணரச் சக்தியில்லாத நிலைமையாம். உதாரணமாக இவற்றுள் இரண்டொன்றைக் கூறுவோம்:—

ஆலயத்தின் கண்ணே சிவலிங்கமும் அதற்கு நேரே நந்திதேவரும், பலிபீடமு மிருக்கின்றன. இவற்றை ஆராயுமிடத்து இவை மூன்றையும் பதி, பசு, பாசம் என்று அழைக்கப்படும். பதியென்பது கடவுள். பசு என்பது ஆன்மா. பாசம் என்பது மும்மலங்கள். ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களை நாம் பலியிட இப்பசுவென்னும் ஆன்மா சுத்தமாகிப் பரமான்மாவாகிய பதியுடன் கலந்து விடு மென்பதற் கறிகுறியேயாம்.

" ஆய பதிதா னருட்சிவ லிங்கமா
மாய பசுவு மடலே றெனநிற்கு
மாய பலிபீட மாகுநற் பாசமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே."—

(திருமந்திரம்)

இன்னும் ஸ்தலங்களுள் சிதம்பரத்தை யெடுப்போம். அங்கே யிருக்கப்பட்ட ஆயிரக்கால் மண்டபம் தலையின்

கண்ணேயிருக்கும் ஆயிரவிதழுள்ள கமல மென்னப்படும் மூலையையும், "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லப்படும் சபையின் கண்ணே யிருக்கும் ஐந்து பீடங்களும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் பஞ்ச மூர்த்திகளுக்கெனவும், ஐந்து படிகளும் பஞ்சாட்சரமென்னும் ஐந்து எழுத்துக்களையும், இன்னும் 96 பலகணிகளும் 96 தத்துவங்களையும், அங்கேயிருக்கும் நான்கு பொற் கம்பங்களும் நான்கு வேதங்களையும், சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களையும், விமானத்தின் மேலேயுள்ள ஒன்பது கும்பங்கள் நவசத்திகளையும், கைமரங்கள் அறுபத்துநான்கு கலைகளையும், செப்போடுகள் இருபத்தோராயிரத்திருநூறும் மனிதனால் ஒவ்வொரு நாளும் விடப்படுகின்ற சுவாசங்களையும், எழுபத்தீராயிரம் ஆணிகளும் அச்சுவாசமெழும் எழுபத்தீராயிரம் நாடிகளையும் இன்னும் அங்கேயுள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்துக் கொண்டதாயே அமைக்கப் பட்டிருக்கின்றதெனச் "சிதம்பர ரகசியம்" என்னும் நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் விரிக்கிற்பெருகும்.

இப்படியாகப் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அச்சபையிலிருந்த ஒருவர் எழும்பிச் சாம்பசிவத்தைப் பார்த்து:—"ஐயா—தங்கள் போதனையால் அதிக ஞானங்களை யறிந்து விட்டேன். ஆனால் கடவுள் ஒருவரொன்றிருக்க எமது சமயத்தில் பல தெய்வங்களை வழிபடுகின்றார்களே. பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்றும், சுப்பிரமணியர், விநாயகர் என்றும் இப்படியாகப் பலதெய்வங்களை நாம் வணங்குவதேன், இதன் அர்த்தம் யாது? இதை யிட்டே சில புறச் சமயத்தவர்கள் நாம் பல தெய்வங்களை வணங்குகின்றோமென எள்ளனஞ் செய்கின்றனர். இதைப் பற்றிச் சிறிது விளங்க வைக்க வேண்டும்," என்றார்.

சாம்பசிவம்:—"இதைக் கேட்டதையிட்டு யான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனுயின் தோன்றும் சந்தேகங் களைக் கேட்டறிந்து கொள்வதே புத்திமான்களின் கடமை யாகும்," என்று சொல்லத் தொடங்கினர்:—

எமது சமய கொள்கைகளுள் அனேக இரகசியங்கள் அடங்கி யிருக்கின்றன. எம்மவருள் அனேகர் இது விஷயங் களை யறிந்து கொள்ளச் சக்தி யில்லாதிருப்பதற்குக் கார ணம் மதக் கல்வி யில்லாத நிலையேயாம். கல்வியைக் கசட றக் கற்றால் இவற்றின் சரியான அர்த்தங்களைத் தெரிந்து கொள்ளலாம். நுனிப்புல் மேய்வதுபோல அற்ப கல்வி யைக் கற்றவர்களே சிவன் பெரியவனென்றும் விஷ்ணு பெரியவனென்றும் வாதாடுவார்கள். சிலர், எமது சமய கொள்கைகளெல்லாம் சுத்த பொய் யென்றும், புராண இதிகாசங்களெல்லாம் கட்டுக் கதைகளெனவும், இன்னும் கோவிலில் நடக்கும் பூசைகளும் திரு உற்சவங்களும் வீணெனவும், இன்னும் வாயில் வந்ததெல்லாம் உளறி ஈற்றில் பெரியோர்களால் மதிக்கப்படாது பாப மூட்டை களைக் கட்டிக் கொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் மதக் கல்வி கற்காத குறையென்றே யாம் எண்ணவேண்டி யிருக்கின்றது. இனிமேல் எமது விஷயத்தை யெடுப் போம். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், விநயகர், சுப்பிர மணியர் முதலிய பலபேர்கள் கடவுளுக்கிருப்பினும் எல் லாம் அவர் ஒருவர் தானென்பதை ஓர் சிறு உதாரணத் தாற் காட்டுகின்றேன்.

அதாவது இந்நாட்டில் பல பல மாகாணங்களும் பல பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ் வொரு உட்பிரிவுக்கும் ஒவ்வோர் அதிகாரி யுண்டு. அவரை இந்நாட்டில் பொதுவாகப் பிரிவுத் தலைவர் (District Officer) என்று சொல்லுவார்கள். இதை விளக்கிக் காட்

டும் பொருட்டு இப்பிரிவுத்தலைவரை "அலி" என்ற பெயரா லழைப்போம். இவ்வுத்தியோகஸ்தர் பிரிவுத்தலைவரெனப் (District Officer) பொதுவாக அழைக்கப்பட்டாலும் அவரே நிலவரிகளைச் சேர்ப்பதால் நிலவரித்தலைவர் (Collector of Land Revenue) என்றும், பணத்தைச் சேகரித்து வைப்பதால் பொக்கிஷத் தலைவர் (Treasurer) என்றும்; அவரே நியாயங்களை விசாரிப்பதால் நியாயாதிபதி (Magistrate) என்றும், இன்னும் அவரே சுகாதார சங்க விஷயங்களைப் பார்ப்பதால் சுகாதார சங்கத் தலைவர் (Chairman, Sanitary Board) என்றும், அழைக்கப்படுகின்றார். இனிமேல் யார் யாருக்கு என்னென்ன காரியங்கள் முடியவேண்டியிருக்கின்றனவோ அவர்கள் அந்தந்த விலாசத்திற்கே எழுதிக் காரியத்தைப் பெறவேண்டும். இவ்வண்ணமாக "அலி" என்பவர் பல தொழில்களிலும் பங்கு பெற்றுப் பல தொழிற் பெயர்களால் அழைக்கப்பட்டிருப்பினும் உண்மையில் அவர் ஒருவரே பல தொழில்களையும் பார்க்கின்றனர். அதுபோல உலகமாயையிற் சிக்குண்ட மனுஷ ஜாதியார்க்கே இவ்வளவு தொழில்களிருந்தால் சகல அண்டங்களுக்கும் தலைவனுயிருக்கப்பட்ட பரம்பொருளுக்கு எவ்வளவு தொழில் முறைகளிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இப்படியே கடவுளுக்கும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன், சுப்பிரமணியர், விநாயகர் முதலிய பல நாமகரணங்களிருப்பினும் எல்லாம் அவர் ஒருவரே யாவர். அவர்தான் சிவபெருமான். யார் யார் என்னென்ன நாமத்தைச் சொல்லி வணங்குகின்றார்களோ அவர்க்கு அந்தந்த நாமமுள்ள ரூபமாக எழுந்தருளிக் காட்சி கொடுப்பர். இதனாலன்றோ சிவஞான சித்தியாரிலும்,

> "யாதொரு தெய்வங் கொண்டீ ர்த்தெய்வ
> மாகி யாங்கே
> மாதொரு பாகனார்தம் வருவர் . . . . ."

எனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இனிமேல் கடவுளின் பஞ்ச கிருத்தியங்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவைகளையே பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என்று சொல்லப்படும். இவற்றையே நாம் பார்வதி யென்றும், இலக்குமி யென்றும் சரஸ்வதி என்றும் இன்னும் பலவாறாக வணங்குகின்றோம். பார்வதி யென்று சொல்வது சிவபெருமானின் அருட்சத்தி ; அதாவது அவர் செய்யும் தொழிலுக்குண்டான வல்லமை. அக்கினியிலே சூடானது எவ்விதம் பிரிபடாமலிருக்கின்றதோ அவ்விதமே சிவமும் சத்தியும் ஒன்றேயாம். ஆகவே அருளையே குறிக்கும் பார்வதியை நாம் சிவமென்றே வணங்க வேண்டும். இவ்வாறே மற்றுமுள்ள திருட்டாந்தங்களும். இவற்றை யறிந்துணரச் சக்தி யில்லாதார் கடவுளுக்கும் மனைவி யுண்டென்பதாக எண்ணிக்கொள்ளுகின்றனர். இவர்களின் அறியாமையைக் கண்டு யார்தான் சிரிக்கமாட்டார்கள். அறநூல்களை ஆராய்ச்சி பண்ணுவார்களானால் இவற்றைப் பூரணமாக விளங்கிக் கொள்ளுவார்கள்.

மேலும் சாம்பசிவம் சபையைப் பார்த்து "அன்பர்களே! நேரமோ சென்றுவிட்டது. இன்னுஞ் சில முக்கிய விஷயங்களைச் சொல்லிவிட்டு எனது பிரசங்கத்தை முடிப்பேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

எமது சமயத்தின்கண்ணே முக்கியமாயுள்ள சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராட்சத்தைப் பற்றிக் கூற யாம் வல்லரல்லேம். நான்கு வேதங்களாலும் புகழப்பட்ட விபூதி உருத்திராட்சத்தைத் தற்சமயம் சில் பிரபுக்கள் அவமதிக்கின்றனர். சில அறிவீனர் தம் குழந்தைகட்கு விபூதிக்குப் பதிலாகப் புட்டாமாவைத் தடவுகின்றனர். இப்பேர்ப்பட்டவர்களின் நீறில்லா நெற்றியானது சுடுகாட்டுக்

கே சமானமெனப் பெரியோர்கள் கூறுகின்றனர். ஔவை யாரும்

"நீறில்லா நெற்றி பாழ் . . . ." என்றார்.

ஆனதால்

" கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"—(திருமந்திரம்)

என்னும் வாக்கை நினைப்புற்று விபூதியை நாமணிந்து ஈசுவரனுடைய கடாட்சம் பெறுவோமாக. இதுபோலவே உருத்திராட்சத்தையு மணியவேண்டும். ஸ்நானஞ் செய்யுங் காலங்களில் உருத்திராட்ச மணிகளினின்றும் வடியும் நீரானது கங்காநதியின் தீர்த்தத்திற்குச் சமான மென்றால் உருத்திராட்சத்தின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா ?

இன்னமொன்று யாம் இங்கே காட்ட வேண்டியிருக்கின்றது. அதென்னவெனில் பஞ்சாட்சரத்தைப் பற்றிய தேயாம். பஞ்சாட்சாத்தின் மகிமையைப்பற்றி யாம் இங்கே சொல்ல வல்லரல்லேம். நடராசமூர்த்தியின் வடிவமே பஞ்சாட்சரமாம். அவருடைய திருவடி "ந" காரமாகவும், திருவுந்தி "ம" காரமாகவும், திருத்தோள் "சி" காரமாகவும், திருமுகம் "வ" காரமாகவும், திருமுடி "ய" காரமாகவும் என "நடராச தத்துவம்" என்னும் நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. இத்தகைய பஞ்சாட்சரத்தை நாம் உச்சரிக்க முன்வரவேண்டும். இதை உச்சரிப்பதால் எவ்வகைத் தீங்குகளினின்றும் தப்புவித்துக் கொள்ளலாம். திருநாவுக்கரசு சுவாமிநாயனார் கடலினின்று கல்லுடன் கரை சேர்ந்ததும் இப்பஞ்சாட்சர மகிமை யினாலன்றோ. அவருடைய பஞ்சாட்சரப் பதிகப்பாடல்களை நீவிர் அனைவரும் கவனித்

திருப்பீர்களென்றே நம்புகின்றேன். அவற்றுள் ஒன்றைக் குறிப்பிடுவோம்

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

இன்னும் எத்தனையோ அடியார்கள் இப்பஞ்சாட்சரத்தின் மகிமையை யறிந்து அதை யுச்சரித்து முத்தி யடைந்தார்கள். அதுபோல நாமும் முறைப்படி தீட்சைபெற்று இப் பஞ்சாட்சரத்தைப் பக்தியாக உச்சரிப்போமானால் எமக்கு ஓர்வித ஆபாயமும் நேரிடமாட்டாது.

இதனாற்றான் ஔவையாரும்,

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்"

என்று கூறியிருக்கின்றனர். ஆனதால் சைவசமயிகள் என்று சொல்லப்படுபவராகிய நாம் சிவாகம முறைப்படி சைவ அனுஷ்டானங்களைப் பின்பற்றி நடந்தாற்றான் "சைவர்" என்று அழைக்கப் படுவோம். இனிமேல் உலக மாயையிற் சிக்குண்ட எம்போலியர்கட்கு ஆலயவழிபாடே மிகவும் சிறந்ததாகும். இவ்வழிபாட்டை நாம் பக்தியுடன் அனுசரித்து நடப்போமாயின் இம்மையில் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிதாய் வாழ்வதுடன் மறுமையில் இன்பத்தையும் அடைவோ மென்பது திண்ணம். யான் இதுகாறும் என் சிற்றறிவுக் கெட்டியவாறே சொல்லிவந்தேன். இது விஷயத்தில் அனேக கருத்துக்கள் ஆழ்ந்துகிடக்கின்றன. இவற்றை யெல்லாம் ஞானநூல்களிற் கண்டறிந்து கொள்ளலாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவிடங்

களிலும் எம்பெருமான் விளங்குகின்றபடியால் அடியார் களுக்குக் காட்சி கொடுத்தருளிய ஸ்தலங்களைக் கண்டு தெரிசித்தால் மிகவும் புண்ணியமாகும். இதை விடப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்வதால் அனேக பாவங்கள் நீங்கு மென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றை நாம் கவனித்து நடக்க முன்வருவோமாக. "ஈற்றில் முடிவுரையாக சில வார்த்தைகளைக் கூறி எனது சிற்றுப் பிரசங்கத்தை முடிப்பேன்" என்று சாம்பசிவம் சொல்லத் தொடங்கினார் :—

ஆலயவழிபாட்டின் பெருமையைத் தற்காலம் சில அறிவீனர்கள் உணர்ந்து கொள்ள முடியாமல் "கோவிலாவது குளமாவது எல்லாம் பொய்," என்று வாயில் வந்ததெல்லாம் உளறிப் பாவ மூட்டையைப் பெருக்குகின்றனர். இதற்கு முதற்காரணம் இவர்கள் கற்றுக்கொண்ட அற்ப கல்வியே. அற்ப கல்வி அதிக கெடுதியை விளைவிக்குமன்றோ? இது ஒருபுறமிருக்கப் பண்டைக்காலத்தில் நமது முன்னோர்கள் ஆலயவழிபாட்டை மிக அன்புடன் கைக்கொண்டு மிக உன்னத பதவியை யடைந்திருந்தனர். ஆனால் தற்காலம் சில ஆலயங்களில் நடைபெறும் திருவிளையாடல்களைக் கவனித்தால் எல்லாம் வேடிக்கைக்கும் விளையாட்டுக்குமே யென்வே தோற்றப்படுகின்றன. அதாவது சிலர், விவாகங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு எவ்விதம் தம்மை யலங்கரித்துக் கொண்டு போகின்றார்களோ அவ்விதமே ஆலயத்திற்கும் அழகிய பட்டாடைகளையும் இரத்தினாபரணங்களையும் அணிந்து வேடிக்கை பார்ப்பதற்கே செல்கின்றனர். சில பெண்கள் தம் பட்டாடைகளையும் ஆபரணங்களையும் மற்றவர்களுக்குக் காட்டுவதற்கு இதுதான் நல்ல தருணமென நினைத்து அதற்காகவே செல்கின்றனர். இவர்களுட் சிலர் கோவிலுக்குத் தாம் என்னத்திற்காக வந்

தோமென்பதைச் சிறிதுஞ் சிந்தியாது வேடிக்கையான கதைகளையும், இன்னும் பிரயோசனமற்ற பேச்சுக்களையும் பேசிவிட்டு வீட்டுக்குத் திரும்புகின்றனர். சில பெண்கள் கைகூப்பித் தொழவும் வெட்கப்படுகின்றனர். இன்னுஞ் சிலர் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வெட்கப்படுகின்றனர். இதைவிடக் குடித்து வெறித்துவிட்டுச் சில அறிவீனர்கள் கோவிலுக்குள் நுழைகின்றனர். இன்னுஞ் சிலர் நின்பண்டம் அகப்படுமென்றும் செல்கின்றனர். இன்னும் அறியாமையாற் செய்யும் செயல்கள் கணக்கற்றனவாம். பண்டைக்காலத்தில் ஆலய பூசைகள் விதிமுறைப்படி நடந்தமையால் நாடும் சிறப்புற்றிருந்தது. ஆனால் தற்காலத்தில் கோவில் அதிகாரிகளுக்குள் கோவிற் சொத்தை அபகரிக்கும் ஆசாமிகள் அனேகர் மலிந்திருக்கின்றனர். சிலர் இது காரணம் பற்றி ஈற்றில் தரித்திர திசையடைந்தும், சிலர் சந்ததியற்றும், சிலர் நோயாளிகளாயும் இன்னும் பலவித துன்பங்களுக்குள்ளிருப்பதைக் கண்ணாரக் காண்கின்றோம். இனிமேல் சில கோவில்களிலிருக்கும் பூசாரிமாருக்குப் பூசை விதிகளே தெரியமாட்டாது. இவர்கள் கஞ்சிக்குப் பயறு போட்டது போல அங்குமிங்குமாகச் சில கிரந்தங்களை மனப்பாடமாய் வைத்துக்கொண்டு எல்லாம் தெரிந்தவர்கள் போல நடித்துப் பூசை முறைகளைச் சரிவர நடத்த முடியாமலும் இன்னும் நாலுபேர் கேட்டால் அதற்குத்தரம் சொல்ல முடியாதவர்களாயும் திகைத்து நிற்கின்றனர். பொய்யோ—மெய்யோ—சொல்லிப் பணம் சம்பாதிக்கும் வழியைப் பார்க்கின்றார்களே தவிரக் கோவிற் கிரியைகளைச் செவ்வனே நடத்த வேண்டுமென்ற சிந்தனை அனேகருக்கில்லை. இன்னும் இவற்றை விரிக்கிற் பெருகும்.

மேலும் தற்சமயம் சில கோவில்கள் பொது ஜனப் பொறுப்பில் நடைபெறுகின்றன. இப்படி நடக்கும் கோ

யில்களிலும் பெரும்பான்மை கட்சிகளுண்டாகிக் கோவிற் கிரியைகள் ஒழுங்காய் நடைபெறுவதில்லை. இவர்களுட் பெரும்பாலார் பெருமைக்கும் புகழுக்குமாகக் குத்துமல் லுப் படுகின்றனர். இப்பேர்ப்பட்ட சில கோவில்களில் ஒருவிதமாயேனும் சமய அறிவில்லாதவனையும், குடிகார னையும், புலாலுண்போனையும், இன்னும் இன்னோரன்ன குணங்கள் வாய்ந்தவனை அவனின் உத்தியோகப் பெருமை யைக் கருதிக் கோவில் அதிகாரியாக்கிவிடுகின்றார்கள். இன் னும் சில கோவில்களில் அன்னிய துரைமார்களை யழைப் பித்துப் பூமாலை யிடுவதும், அவர்களை யுபசரிப்பதும் இன் னும் ஆசாரமற்ற செயல்களைச் செய்து கோவில்களை உபசா ரக் கொண்டாட்ட மேடைகளாக்கி விடுகின்றார்கள். இவர் களின் அறிவுதான் என்னே! இப்படியாக இவர்களுடைய செய்கை ஒவ்வொன்றும் குளிக்கப் போய்ச் சேற்றை யள் ளிப் பூசிக் கொண்டு வருவதுபோலாகின்றது. மேலும் சில கோவில்கள் இடிந்து கொட்டுண்டு திருப்பணிவேலை அவசியம் தேவையா யிருக்கப் புகழ் கீர்த்திக் கெனக்கருதி வாணவேடிக்கைகளிலும், தாசிகளை விட்டு நடனஞ் செய் விப்பதிலும், வேடிக்கையான திருவிழாக்களிலும், காசைப் பாழாக்குகின்றனர். இவர்களின் அறியாமையைக் கண்டு யார்தான் சிரிக்கமாட்டார்கள். இவற்றை யெல்லாம் விரிக் கிற் பெருகும். இவையெல்லாம் இப்படி நிகழ்வதற்குக் காரணம் மதக் கல்வி யில்லாததினாலேயாம்.

"இனி என்ன செய்யவேண்டும்?"

மதக் கல்வியை விர்த்திக்குக் கொண்டு வரவேண்டும். மதப்பாடசாலைகள் ஸ்தாபித்தல் வேண்டும். எமது சம யத்தைப் பற்றிச் சகலருக்கும் போதிக்க வேண்டும். பாட சாலைகளில் மதக்கல்வி கட்டாய பாடமாக வைத்தல் வேண் டும். கல்வி யறிவில்லாப் பாமரஜனங்களுக்கு எமது சமயத்

தைப்பற்றிப் பிரசங்கங்கள் வாயிலாகப் போதிக்க வேண்டும். இப்படிச் செய்தால் எமது சமயம் மேலோங்கும். நாடும் சிறக்கும்.

ஆனதால் அன்பர்களே!

நாம் இம்மானிடப் பிறவியை யெடுத்ததின் காரணம் சிவபெருமானின் முத்தியின்பத்தைப் பெறும் பொருட்டேயாம். ஆகையால் மனித சென்மமெடுத்த நாம் ஒவ்வொருவரும் கடவுளைக் கிட்டிச் சேர முயற்சிக்க வேண்டும். பிறவியென்னும் கடலை நீந்திக் கரையேற வேண்டும். உலகிலே நாம் ஜீவித்திருப்பது சொற்ப நாட்களே. ஈற்றில் நாம் உலகை விட்டுச் செல்லும் பொழுது நம்முடன் தாய் தந்தையர் வரப்போகின்றார்களா? நம் பெண்டீர் பிள்ளைகள் கூடவருவார்களா? உற்றார் உறவினர் முதலானோர் வரப் போகின்றார்களா? நாம் தேடி வைத்த பணமூட்டைகள் எம்முடன் பின்பற்றுமா? இன்னுமென்னதான் பின்பற்ற முடியும்? ஈசுவரனுடைய திருவடியைச் சேர்வது ஒன்று தான் நிச்சயம். இதனாற்றான் பட்டினத்தடிகளும்,

"ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே."

என்று பாடியிருக்கின்றனர்.

ஆனபடியால், நண்பர்காள்!

"போனநாள் வீணுய்ப்போனுற் புதியநாள் போய்விடாமல்
ஞானநாளிதுதானென்று நாடொறுங் குருவைப்போற்றி
வானநாளத்திற்சென்னி வழிக்கண்டு மதிப்பாலூறும்
தேனைநன் கருத்திநாகை லிங்கரைத் தெரிசிநெஞ்சே."

(நெஞ்சறிவிளக்கம்)

என்ற வண்ணம் இனிமேலாகுதல் நாம் நாளைப்போக்காமல் ஈசுவரனுடைய திருவடிப்பேற்றை யடைவதற்கு முயற்சிப் போமாக. அதற்கு ஆலயவழிபாடே மிகச் சிறந்ததாகும்." என்று சாம்பசிவம் தனது பிரசங்கத்தை முடித்தனர். சபையிலிருந்தவர்க ளெல்லோரும் அனல்கண்ட மெழுகு போல மனம் உருகி ஈசுவரனுடைய எண்ணமே மனதிற் குடிகொண்டவர்களாகக் காணப்பட்டனர். பின்னர் தேவார பாராயணத்தோடு கூட்டங் கலைய எல்லோரும் தத்தம் வீடேகினர். சாம்பசிவத்தின் கல்வித் திறமையையும் அவ ரின் ஞான குணங்களைப் பற்றியுமே எல்லோரும் பேசிக் கொண்டு சென்றனர்.

---

## பதின்மூன்றும் அத்தியாயம்.

"அடாது செய்தவர் படாதுபடுவர்."

சென்ற பத்தாம் அத்தியாயத்திற் கனகேந்திரம் பிள்ளை என்பவர் பணத்தை யதிகம் செலவிட்டு மகன் ஆனந் தராசாவை மோட்டார் வழக்கினின்றும் விடுவித்து மறுபடி யும் ஐந்நூறு ரூபாய் கொடுத்து அவனைச் சென்னைக் கனுப் பி யிருந்ததைப் பற்றி வாசகர்கள் மறந்திருக்க மாட்டார் கள். "என்னைப்போலக் கெட்டிக்காரர் வேறு உலகத்தி லிருப்பார்களோ ? என்ன உபாயத்தால் நான் காரியத்தை முடித்துக்கொண்டு வந்துவிட்டேன் ! மோட்டாரில் நடந்த நட்டம் ஒரு பக்க மிருக்கப் பின்பும் ஐந்நூறு ரூபாய் பெற் றுக்கொண்டு வந்துவிட்டேன் ! என் உள் இரகசியங்களைப் பற்றி யார்தான் அறியமுடியும்?" என்று பலவாறு தனக் குள்ளே சொல்லிக்கொண்டு ஆனந்தராசா சென்னைமா நகர்

வந்து சேர்ந்தான். தான் முன் வாடகைக் கெடுத்திருந்த வீட்டிலேயே தங்கி யிருந்தான். தன்னுடைய நிலைமையைப்பற்றிச் சிறிதுஞ் சிந்தியாது தான் முன் கொண்டாடிவந்த மாயாசௌந்தரி யென்னும் நாடக வேசியை விசாரித்தான். ஆனால் அவள் அங்கில்லை. நாடகத்திலே அவள் சேர்ந்திருந்தமையால் அச்சமயம் அந்நாடக சபை சென்னையை விட்டு வேறு ஊர் சென்றுவிட்டது. ஆனந்தராசாவுக்கு அதிக கோபமுண்டாகி விட்டது. தன்னை இப்படியாக ஏமாற்றிச் சென்று விட்டாளே என்று மிகவும் கவலை கொண்டான். ஆனால் "பெண்" என்னும் ஆசையானது அவனை இன்னும் விட்டகல வில்லை. வேறு பெண்களை நாடவேண்டு மென்று மனத்திடங் கொண்டான். ஆனால் தான் "பெண்" என்னும் பசாசால் மோசமடைந்ததையும், தந்தையின் சொத்தை யிழப்பதற்குத் தானே காரணன் என்பதையும் சிந்தியாது இனி மேலாகுதல் ஒழுங்கா யிருப்போமென்ற எண்ணம் அவன் மனதில் உதிக்கவில்லை.

ஆ—கொடிது! கொடிது! என்ன கொடிது? காமம் கொடிது. இக்காமத்தால் வருங் கெடுதிகளுக்கோர் கணக்கு முண்டோ? இக்காமமானது பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாயிருக்கின்றது. காமம் என்றால் ஆசை எனப் பொருள்படும். பிரதானமாய் ஓர் பெண்ணின்மீது ஓர் ஆடவன் கொள்ளும் பிரியத்தையே குறிக்கின்றது. பல பெரியோர்கள் முன்னிலையில் விவாகஞ் செய்துகொண்ட மனைவி யிடத்துச் செலுத்தும் அன்பிற்குக் "காதல்" என்று பெயர். இது மனுஷ இயற்கையும் தெய்வத் தன்மையும் பொருந்தியதே. பகுத்தறிவற்ற மாந்தரால் பலமாதர்களிடத்துச் செலுத்தும் அன்பிற்குக் "காமம்" என்று பெயர். இது மிருகத்தன்மை பொருந்தியது. இக்காமப் பேய் பிடித்தோர் நெறி தவறினவர்களாகி நல்லோருடைய சிநேகத்

தை விட்டும், பெரியோரை நிந்தித்தும், நாணம் சிறிதுமில்லாமலும், வேளைக்குச் சாப்பாடில்லாமலும், காசைத் தூசாய் மதித்தும், நாய்போல அலைந்து திரிந்தும், வீண் சண்டைகளிலும், வீண் வழக்குகளிலும் பிரவேசித்தும் இவற்றுடன் போதாமல் தம்முடம்பையும் கெடுத்துக் கொள்ளுகின்றனர். இவர்களுட் சிலர் உண்ணவும் உடுக்கவும் வழியின்றித் தெருவீதிகளிற் றிரிந்து ஒருவர் உதவியும் பெற இயல் பில்லாதவர்களாய் இடையில் நின்று தத்தளிக்கின்றனர். காமிகளின் மனமானது கடன்பட்டார் நெஞ்சம் போற் கலங்கி நிற்கும். இக்காமத்தால் உலகில் நடக்கும் கொலைகளோ கணக்கற்றன. சகல கொலைகளுக்கும், களவிற்கும் கள்ளுண்ணுதற்கும் காரணம் இக்காமம் என்று சொல்லிவிடலாம். சகல சாஸ்திரங்களையு முணாப்பெற்ற வித்வான்கள் இக்காமத்தால் துன்புற்றனர். இருடிகள் துன்புற்றனர். இராசாக்கள் துன்புற்றனர். உதாரணமாக தவத்தில் மேம்பட்டவராகிய விஸ்வாமித்திரர் இக்காமத்தால் தவத்தைக் குலைத்தார். இலங்காபுரியை ஒருகால் ஆண்ட இராவணன் என்னும் அசுரன் சீதாதேவி மீது கொண்ட ஆசையால் எவ்வகைத் துன்பத்தை யடைந்தானென்பதை யாவரு மறிந்திருப்பர். கீசகன் திரௌபதையின் மீது கொண்ட காமத்தால் எவ்வித துன்பமடைந்தானென்பதைச் சொல்லவும் வேண்டுமா? தமயந்திமீது வேடன் கொண்ட மோகத்தால் அவன் பிடிசாம்பலாய்ப் போனதை யார்தான் அறியாமலிருப்பர்? இன்னும் இப்படிப் பலவுள.

“காமமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்க
வந்த களங்கமாகும்,
காமமே தரித்திரங்க ளனைத்தையும் புகட்டி
வைக்குங் கடாரமாகும்,

காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங்
கபாடமாகும்,
காமமே அனைவரையும் பகையாக்கிக்
கழுத்தரியுங் கத்திதானே."

இதைப்பற்றி விரிக்கிற் பெருகுமென விடுத்து எமது கதைபாற் செல்வாம்.

இப்படியான கேடுகளை விளைவிக்கும் காமமென்னும் கொடிய பாதகத்தைப் பின்பும் செய்வதற்கே ஆனந்தராசா துணிந்துவிட்டான். அவனின் கைவசம் ஐந்நூறு ரூபாயும் இதற்குத் துணையாக இருந்தது. தருமஞ் செய்யாதார் பணம் இவ்வித கெட்ட வழிகளிற் செலவழியு மென்பதற்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? ஆனந்தராசா கெட்ட சினேகிதர்களுடன் மறுபடியுங் கூடி வேசி தாசிகளின் இல்லத்திற்குப் போய்க்கொண்டு வருவானாயினான். இதனுடன் குடிவகைகளையும் நன்றாக அருந்தப் பழகிக் கொண்டான். பொதுப்படப் பஞ்சமா பாதகங்களையே செய்துகொண்டு வந்தான். இடைவிடாத குடியினாலும் வேசிகளின் சேர்க்கையாலும் இவனை மேக நோயென்னும் கொடிய வியாதி பற்றிக்கொண்டது. அதாவது வெள்ளை, வெட்டை, நீரிழிவு முதலிய மேக நோய்கள் ஒன்றன்பின் னொன்றாக வரத் தலைப்பட்டன. ஐயோ! பாவம்! ஆனந்தராசா என்ன செய்வான்? பின்வருமாறு புலம்பலுற்றான்:— "ஐயோ தெய்வமே! யான் என் செய்வேன்! என்னை இந்த நோயானது வருத்துகின்றதே! என் காலத்தையெல்லாம் வீணிற் கழித்து, பணத்தை நாசமாக்கி, ஈற்றில் என் பொன்போலும் மேனியையும் கெடுத்தேனே! என் தெய்வமே! என்மேல் இரங்கக்கூடாதா? என்னைக் காக்கக்கூடாதா? இவ்வியாதியின் கொடுமை என்னால் பொறுக்க முடியவில்லை. என்னால் நடக்கமுடியவில்லையே. கை

யிற் காசுதானுமில்லையே. யான் எவ்வாறு பிழைக்கப் போகின்றேனே தெரியவில்லை. யான் கல்வி கற்கவென்று இங்கு ஏகித் தற்சமயம் என்ன நிலைமையை யடைந்திருக்கின்றேன். என்னைப்போலப் பாவி உலகில் யார்தான் இருப்பார்கள்? கெட்ட சினேகிதர்களின் கூட்டமும், குடியும், வேசிகளின் சேர்க்கையும் என்னை ஈற்றில் இவ்வித கேவல நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டன. பெரியோர்களின் வாக்கை அசட்டை செய்து அவர்களின் ஆசாரங்களைப் பழித்துக் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று நடக்கத் துணிந்தமையால் இவ்வித கேவல நிலைமையை யடைந்தேன். நல்லோர் சினேகத்தை வெறுத்தேன். பெரியோர்களின் புத்திமதியை அசட்டை செய்தேன். ஆசாரியர்களை அவமதித்தேன். தந்தையின் வாக்கைத் தட்டினேன். இவையெல்லாம் ஒருங்கு சேர்ந்து ஈற்றில் என்னைப் பாழாக்கிவிட்டன. இனிமேல் யான் பிழைப்பது மிக அரிது. ஆனால் வியாதியோ வர வர அதிகரிக்கின்றது. இனிமேல் யான் எங்கேயாகிலும் வைத்தியசாலைக்குத் தான் செல்லவேண்டும்,'' என்று பலவாறு புலம்பி மெல்ல மெல்ல நடந்து ஓர் வைத்தியசாலையை யடைந்தான். ஆனால் அனேக வாரங்கள் அவன் வைத்தியசாலையிலிருந்தும் சிறிதேனும் சுகமடையவில்லை. ஆனந்தராசாவும் தான் இனிமேல் உயிருடன் இருப்பது நிச்சயமில்லையென விளங்கிக் கொண்டான். தான் இறக்க நேரிட்டாலும் தன் தாய் தந்தையருக்கு அறிவிக்கும் வண்ணம் ஓர் காகிதமெழுதி அங்கே யிருக்கும் உத்தியோகஸ்தர்களுள் ஒருவரிடம் அதைக்கொடுத்துத் தான் இறக்க நேரிட்டால் அக்கடிதத்தைத் தன் தந்தைக் கனுப்பி வைக்கும்படியாக வேண்டிக்கொண்டான். இப்படியாக வருத்தமென் மேலும் அதிகரித்துக்கொண்டு வந்தபடியால் ஆனந்தராசா

ஈற்றில் இறக்கவே நேர்ந்தான். அவன் கேட்டுக் கொண்டபடியே வைத்தியசாலை அதிகாரிகள் அவன் இறந்த செய்தியை ஓர் காகிதத்தி லெழுதி அவன் எழுதிய கடிதத்தையும் ஓர் உறைக்குள் வைத்து அவனுடைய தந்தை கனகேந்திரம்பிள்ளைக்கு அனுப்பிவிட்டார்கள்.

இது இப்படியிருக்க, ஓர்நாள் கனகேந்திரம்பிள்ளை, தன் மகன் சென்னைக்கு மறுபடி சென்று அனேக வாரங்களாயிற்றே, ஓர் காகிதமென்றாலும் வரவில்லையே என்று பலவாறு அவனைப்பற்றித் தன் மனைவி கனகாம்பாளுடன் பேசிக்கொண்டிருந்தார். யாதேனும் வருத்தம் ஏற்பட்டிருக்குமா? அல்லது படிப்பின் நெருக்கடியோ? வருஷச் சோதனை நெருங்கும் காலமாதலால் பாடங்களிற்றான் அதிகம் கவனம் போலிருக்க வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் கனகேந்திரம்பிள்ளை மனைவியை நோக்கி, "பெண்ணே! அனேக கெட்ட சகுனங்கள் தோன்றுகின்றனவே. சென்ற இராத்திரி முழுதும் நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. அனேக சாதிப் பட்சிகள் எமது வீட்டைச் சுற்றிக் கத்திக் கொண்டிருந்தன. என்ன தீங்குகள்தான் ஏற்படுமோ யானறியேன். அத்துடன் ஆனந்தராசாவின் கடிதங்களும் அனேக நாட்களாய் வரவில்லை," என்று பலவாறு இருவருமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் இருவர் முகத்திலும் சந்தோஷமே யில்லை. சிறிது நேரஞ் சென்ற பின்னர், தபாற்காரன் ஓர் காகிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அக்காகித உறையின்மேல் துக்கக் குறியைக் காட்டும் ஓர் கறுத்தக் கோடு கிறப்பட்டிருந்தது. கனகேந்திரம்பிள்ளையின் சரீரம் மிகப் பதறியது. கைகால் நடுங்க ஆரம்பித்தன. என்றாலும் காகிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினார். "ஐயோ! ஐயோ! மோசம் போய் விட்டானே! ஆ—பாதகா! ஐயோ! யான் என்ன

செய்வேன்! எடே பாவி! உன்னை நம்பி மோசம் போனேனே! நீ எனக்கு வந்த புத்திரன் என்றல்லோ எண்ணியிருந்தேன்! அடே பாதகா! சண்டாளா! இப்படியும் மோசம் செய்தாயோ!'' என்று பலவாறு புலம்பிக் கொண்டிருக்கக் கனகாம்பாள், ''ஆ—என் மகனே! என் கட்டிக் கரும்பே! மோசம் போய்விட்டாயோ! என்னைவிட்டுப் பிரிந்தாயோ! உன் சீர் சிறப்பைப் பார்க்கவல்லோ யான் எண்ணியிருந்தேன். இதற்குள் இப்படிவருமென்று யான் ஒரு நாளும் காத்திருக்க வில்லையே. எங்களுக்குத் தெரிசனம் கொடுப்பதற்காகவா நீ இங்கு சில மாசங்கட்கு முன்பு வந்திருந்தாய்? என் மகனே! என் செல்வமே!'' என்று கனகாம்பாள் தலைவிரி கோலமாய்ப் புலம்பிக் கொண்டிருந்தாள். இதைக் கவனித்த கனகேந்திரம்பிள்ளை, ''சண்டாளி! நீ அவனுக்காக அழுகின்றாயே! அவன் செய்த வம்புத்தனத்தைக் கவனித்தாயா? அவன் தன்னைத்தானே கெடுத்துக் கொண்டான். அவனுடைய கடிதத்தைச் சிறிது வாசித்தால் எல்லாம் தெரியும்'' என்று சொல்லிவிட்டு ஓர் பக்கமாகப் போய் ஆழ்ந்த யோசனையிலிருந்தார். இதற்கிடையில் இவர்களின் அழுகுரலைக் கேட்ட அண்டைவீட்டுச் சனங்கள் எல்லோரும் வந்து குழுமினர். ஆனந்தராசாவின் சாச் செய்தியைப் பற்றி முதலில் அறிந்து கொண்டார்கள். பின்னர் அவன் எழுதிய கடிதத்தை யெடுத்து வாசித்தனர். அக்கடிதத்திற் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

வைத்தியசாலை,
சென்னை.

அருமையான தந்தைக்கெழுதுவது:

யான் உங்களை வஞ்சித்து உங்கள் பணத்தை வீணிற் செலவழித்ததை யிட்டு முதலில் வருத்தப்படுகின்றேன்.

முதன் முதல் நீங்கள் என்னைச் சென்னைக்குக் கல்வி கற்பிக்க அனுப்பி யான் கலாசாலையில் ஆக நாலு மாசங்கள் தான் கற்றேன். அதன்பின்னர் கெட்ட சிநேகிதர்களின் சகவாசத்தால் பஞ்சமா பாதகங்களுட் கொடியதாகிய குடியைப் பழகிக்கொண்டேன். குடிமயக்கத்தால் எத்தனையோ நாட்கள் கைவிலங்கிடப் பட்டிருக்கின்றேன். இதை விட வேசி தாசிகளின் இல்லத்திற்கு மேகப் பழகிக்கொண்டேன். பொதுவாகத் தங்கள் பணத்தை வேசி தாசிகளுக்கும், குடிக்கும் இன்னும் கெட்ட விஷயங்களுக்குமே செலவழித்திருந்தேன். யான் சில மாசங்கட்கு முன்னர் ஊர் வந்து அங்கே கற்றவன் மாதிரியாக நடித்து மோட்டார் வழக்கில் பணமெல்லாவற்றையும் செலவழிக்கச் செய்து விட்டேன். என்னைப்போலப் பாவி உலகில் யார்தா னிருப்பார்கள்? பின்பும் இவ்விடம் வந்திருக்கையில் இனிமேலாகுதல் திருந்துவோ மென்ற எண்ணம் என் மனத்தில் உதிக்காமல் மறுபடியும் வேசிகளின் வலையிலே சிக்குண்டு பணத்தைச் செலவழித்தது மல்லாமல் ஈற்றில் மேக நோயென்னும் கொடிய நோயானது என்னைப் பற்றிக்கொண்டது. நோயின் வேதனை பொறுக்க முடியாமல் தற்சமயம் தரும வைத்தியசாலையி லிருக்கின்றேன். எனக்கோ நோய் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. யான் இனிமேல் உயிருடன் இருக்கமாட்டேன். இனிமேல் என்னை இறந்தவனாகவே கருதிக்கொள்ளுங்கள். யான் இறக்க நேரிட்டால் இவ்வைத்தியசாலை அதிகாரிகள் எனது சாச் செய்தியைத் தங்களுக்கு அறிவிப்பது மல்லாமல் இக்கடிதத்தையும் அனுப்பிவைப்பார்கள். ஆ—யான் என் செய்வேன்! என்ன கொடிய பாவத்தைச் செய்தேன்! ஏன் இக்கெதியை யடையலானேன்? உங்கள் பழி ஒரு சமயம் என்னைச் சூழ்ந்து கொண்டதோ? இன்னும் ஏயாதார் பணம் வீணிற்

செலவழிந்து விடுமென்று சொல்லுகின்றார்களே. அது போல அற்பதருமமேனும் செய்யாமல் உலகில் உலோபி யென்ற பெயரை யெடுத்தீர்களோ? அப்படியானால் அப் பணத்தைப் பாழாக்குவதற்கே இம்மண்ணில் இப்பாவியா கிய யான் வந்துதித்தேனோ?

இதனாற்றான்,

> "நம்பனடியவர்க்கு நல்காத்திரவியங்கள்
> பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
> கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
> கள்ளர்க்காந் தீக்காகுங் காண்."—(ஔவையார்)

என்று பெரியோர்களும் கூறியிருக்கின்றனர். இன்னும் உங்கள் மருமகன் சாம்பசிவத்தையும் அவனின் தாயாரை யும் புறக்கணித்து அவர்களுக்காக வேண்டிய கடமையைச் செய்வதற்கு நீங்கள் பின்னின்றமையால் யான் இக்கெதி யை யடைந்தேனோ? எனது மாமியார் அம்பிகை யென் பவள் தன் நாயகனை யிழந்து உங்கள் தஞ்சமென்றேகி உங்கள் கிருகத்தில் மகனுடன் வசித்திருந்தபொழுது அவர் களுக்கு நீங்கள் செய்த கொடுமை என்னைப் பற்றிக் கொண் டதோ? சுற்றத்தார்க்குதவாதார் பணம் எப்படித் தரித்து நிற்கும். எப்படி உண்டென்று காணப்பட்டதோ அவ்வி தம் இல்லையென்று சொல்லக்கூடியதாக அழிந்தே விடும். இதனாற்றான்.

> "கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
> விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
> கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
> உள்ளன போலக் கெடும்."—(திரிகடுகம்)

என்று ஆன்றோர்களும் கூறியிருக்கின்றனர். ஈற்றில் நீங்கள் செய்த பழிபாவங்க ளெல்லாம் உங்களையே சூழ்ந்து கொண் டன. அத்துடன் போகாது என்னையும் பற்றிக் கொண்

டன. "திக்கற்றவருக்குத் தெய்வம் துணை" என்றது போல், சாம்பசிவம் மலாய்நாட்டில் ஓர் உபாத்தி வேலையிலமர்ந்து தனது தாயாருடன் இன்பமாய் வாழ்ந்து வருகிறானென அறிகின்றேன். இனிமேல் அவர்களிடம் போய் இரக்குங்காலம் உங்களுக்கு வந்துவிட்டது. இதுதான் உலக இரகசியம்.

"அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசரோ டிருந்தர சாளினு மாளுவர்."—(வெற்றிவேற்கை)

நீங்கள் செய்த பிழைகளை மன்னிக்கும்படி சாம்பசிவத்திற்கெழுதி அவனுடைய ஒத்தாசையை வேண்டுங்கள். அதிகம் எழுதவில்லை. எனது உயிர் இன்னும் சில மணித்தியாலங்களுக்குட் சென்றுவிடும். யான் செய்த பிழைகளை மன்னிக்கும்படி வேண்டுகின்றேன். இப்படி வருமென்று யான் கனவிலும் நினைத்தவனல்லன்.

இங்ஙனம்,
தங்கள் நிர்ப்பாக்கியமுள்ள புத்திரன்,
ஆனந்தராசா.

இதை வாசித்து முடியவும், பணம் போன செய்தி ஒருபக்கம், மகன் இறந்தமை ஒருபக்கம் இன்னும் பலவித கவலைகளும் ஒன்றாகச் சேர்ந்து கனகாம்பாளின் மனதைச் சிதறச் செய்தன. "ஓ" வென்று அலறினாள்; புரண்டாள். இப்படியாக இருவரும் புரண்டழுதார்கள். இவர்களுடன் அன்னமலரும் சேர்ந்தழுதாள். சிலர் இவர்களின் அழுகையை யாற்றி யாறுதல் கூறினர். சிலர் இப்படிப்பட்ட லோபிகளுக்கு ஆனந்தராசா செய்ததுதான் சரியென்று நினைத்து அவர்களுக் காறுதல் தன்னும் சொல்வதற்கு நிற்காமல் அவ்விடத்தை விட்டகன்றனர். இப்படியே அங்கு

வந்தவர்க ளெல்லோரும் சிறிது நேரத்தால் தத்தம் வீடு சென்று விட்டார்கள். கனகேந்திரம்பிள்ளையும் மனைவி கனகாம்பாளும் கவலையி லாழ்ந்திருந்தனர். இப்போது தான் அம்பிகைக்கும் சாம்பசிவத்துக்கும் தாம் செய்த துரோகத்தை யுணர்ந்தார்கள். எல்லாம் தங்கள் கர்வத்தால் நடந்ததென அறிந்து கொண்டார்கள். இப்படியாகச் சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் கனகேந்திரம்பிள்ளை கனகாம்பாளைப் பார்த்து, "பெண்ணே! எங்கள் வீண் பிரமையாலும், "நான்" என்ற ஆணவத்தினாலும், பணச் செருக்கினாலும், லோப குணத்தாலும் ஒருவரையும் மதியாமல் நடந்து ஈற்றில் இக்கதியானோம். உள்ள செல்வம் முழுதும் வீணில் அழிந்துபோய்விட்டது. இனிமேல் எமது ஜீவியத்திற்கு வழியென்ன? தற்சமயம் குடியிருக்கும் நிலத்தில் வரும் பிரயோசனம் வயிற்றைக் கழுவுவதற்கே போதாமலிருக்கின்றது. எங்கள் புத்திரி அன்னமலரின் விவாக காரியங்கள் எப்படி நடக்குமோ யானறியேன். யாரை அண்டி இனிமேல் யாம் சீவிப்பது? தெரு திண்ணைகளுக்குப் போகவும் வெட்கமாயிருக்கின்றதே. ஒரு முயற்சியைச் செய்யத் துணிவதற்கும் பொருளில்லையே! என்னால் யான் கெட்டேன். இதற்கு என் செய்வது?" என்று முகவாட்டமாய் நின்றார்.

கனகாம்பாள்:—"நாதா! எங்கள் காலகதி இப்படியாய் நேர்ந்து விட்டது. இனிமேல் இதைப்பற்றிச் சிந்திப்பதில் என்ன பிரயோசனம்? எதாகிலும் ஓர் அற்ப முயற்சியைச் செய்யவேண்டும். எங்கள் புத்திரி அன்னமலரைப் பள்ளியில் நின்றும் நிறுத்தி விட்டோமல்லவா? இவள் பள்ளியில் ஆங்கிலம் வாசித்து "யூனியர்" என்ற பரீட்சையிற் றேறி யிருக்கின்றாள். இப்படிப்பட்டவளுக்கு ஏற்ற புருஷனை யாம் எங்கே தேடுவது? யார்தான் தற்சமயம்

இதற்குடன்படுவார்கள்? தமிழ்க் கல்வியைக் கற்றிருந்தால் எவ்வளவு பிரயோசனத்தை யளித்திருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? தற்சமயம் இவளுக்கு நாயகனை யாம் எங்கே தேடுவது? உலகம் வெளிப்படையாக எங்கள் குணத்தையும் நடையையும் அறிந்து விட்டதே. இவை யெல்லாம் எங்கள் கர்வத்தாலே நிகழ்ந்தன. சென்ற காரியத்தைப் பற்றி யோசிப்பதில் ஒருவித பிரயோசன மில்லை. ஏதோ நடப்பது நடந்து தான் தீரும். இனிமேல் எல்லாம் ஈசுவரன் செயல். தாங்கள் இதற்காக இனிமேல் கவலை யடைவதில் ஓர்வித பிரயோசனமு மில்லை" என்று பலவாறு சொல்லித் தன் கணவனின் துக்கத்தை யொருவாறு ஆற்றிக்கொண்டிருந்தாள். இவை யெல்லாவற்றையும் இன்னோர் அறையில் கேட்டுக்கொண்டிருந்த அவர்களின் புத்திரி அன்னமலர், "ஓகோ! இவர்கள் என் விவாக கருமத்தைப்பற்றி மிக்க கவலை யடைகின்றார்கள். என்னால் இவர்கள் ஏன் கவலை யடையவேண்டும்? இவர்கள் தாமும் கெட்ட பெயரை யெடுத்தது மல்லாமல் எனக்கும் அநாகரீக கல்வியைக் கற்பித்து ஈற்றில் உண்ண உடுக்கத் தன்னும் வழியற்று இருக்கின்றார்கள். யான் இனிமேல் இவ்வுலகில் நிலைத்திருப்பது சரியல்ல" என்று காகித மொன்றை யெழுதித் தானிருந்த அறைக்குள் தெரியத்தக்கதாக வைத்துவிட்டுப் பிறிதோர் வழியாய்த் தன் பெற்றோர்க்குத் தெரியாதபடி சென்று அவர்களின் வளவிலுள்ள கிணற்றுக்குள் தன் உயிரை மாய்க்கும்படி குதித்துவிட்டாள். குதித்த சத்தமானது கனகேந்திரம்பிள்ளைக்காவது மனைவிக்காவது கேட்கவே யில்லை. அண்டை வீட்டுக் காரனாகிய "சுப்பர்" என்பவருக்குக் கிணற்றுக்குள் ஏதோ விழுந்த சத்தம் கேட்டு ஓடோடியும் வந்து, "ஓய்! ஓடி வாரும்! ஓய்! ஓடி வாரும்! கிணற்றுக்குள் ஏதோ பெலத்த சத்தம்," என்று

கனகேந்திரம்பிள்ளைக்குச் சொல்லிவிட்டு முன்னரே ஓடோடியும் போய்ப் பார்க்கையில் கனகேந்திரம்பிள்ளையின் புத்திரி அன்னமலர் நீரில் மிதக்கக் கண்டார். இதற்கிடையில் கனகேந்திரம்பிள்ளையும் வந்துவிட்டார். ஐயோ—ஐயோ—என்ற சத்தங்கேட்டு அயல் வீட்டுச் சனங்களும் மற்றும் தெரு வீதி வழியே போய்க் கொண்டிருந்தவர்களும் வந்து குழுமிவிட்டனர். உடனே இருவர் கிணற்றிற்குள் இறங்கி கயிற்றிலே கட்டி யிறக்கிய தொட்டில் மூலமாக அன்னமலரை வெளியே தூக்கினார்கள். வெளியே தூக்குவதற்கிடையில் அவளின் ஆன்மா அவளை விட்டகன்றுவிட்டது. கனகேந்திரம்பிள்ளையும் மனைவியுமாக விழுந்து புரண்டழுதார்கள். "ஐயோ! என் செல்வமே! என் புத்திரி அன்னமலரே! என் புஷ்பமே! என் செல்வக் கொழுந்தே! சென்று விட்டாயோ! என் புத்திரன் விண்ணுலகை யடைந்து ஒரு மாசமாகுதல் செல்லவில்லையே! அவனுடன் கூடப் போகவா எண்ணிவிட்டாய்? உன் அண்ணர் போனவழியைப் பார்த்துச் சென்று விட்டாயோ? என் கண்மணியே! உன் உருவமானது எனக்கு முன்பாகத் தோன்றுகின்றதே! ஆ—தெய்வமே! கண்கெட்ட தெய்வமே! இப்படியும் அநியாயம் செய்யலாமா? ஒரே முறையில் இருவரையும் கொண்டு போகலாமா? சிறிதேனும் எங்கள்மேல் இரக்கமில்லையா? யாம் என்ன பாரதூரமான குற்றத்தைச் செய்தோம்? என் அன்னமலரே! என் கட்டிக்கரும்பே! உன்னுடைய உடுப்புகளெல்லாம் பெட்டிக்குள் அடுக்கப்பட்டிருக்கின்றனவே! உன் புத்தகங்கள் எல்லாம் மேசைமேல் இருக்கின்றனவே? நீ எங்கு சென்றுவிட்டாய்? இப்போ எழும்பி எங்கள் முன் வரமாட்டாயா? நான் என் செய்வேன்! இவ்வுலகில் இனி நாம் இருப்பதால் என்ன பிரயோசனம்? எங்களுக்கு இவ்வித துன்பங்கள் வருமென்று

யான் ஒருநாளும் காத்திருக்கவில்லையே! துன்பத்திற்கு மேல் துன்பம் வந்து விட்டதே! பணம் தான் போய்விட்டதென்று எம் குழந்தைகளைக் கொண்டு சென்றாயே! கண்கெட்ட தெய்வமே! நீயும் இருக்கின்றாயா? நீ இருந்தால் இவ்வித கெடுதியை விளைவிக்கமாட்டாயன்றோ? கந்தா! வடிவேலனே! கார்த்திகை மைந்தா! இவ்வித துன்பத்தை எங்களுக்கு ஏன் அளித்தாய்? என் கண்மணியே! நான் பெற்ற இரத்தினமே! என் அன்னமலரே! உன்னை இனிமேல் எங்கே காணுவது? சொல்லிவிட்டுச் சென்றிருக்கக் கூடாதா? பாழ்பட்ட கிணறே! என் பிள்ளையைக் கொல்லவா பணத்தைக் கொட்டி உன்னைக் கட்டி வைத்தோம்?" என்று தலைவிரி கோலமாகக் கனகாம்பாள் புலம்பிக் கொண்டிருந்தாள். ஐயோ! பாவம், என் செய்வாள். கனகேந்திரம்பிள்ளையும் விழுந்து புரண்டழுது மூர்ச்சையாயினர். கனகாம்பாளும் மூர்ச்சையாய் விட்டாள். இவர்களின் பரிதாப நிலையைக் கண்டோர் மிக இரங்கினார்கள். அனேகர் சாவீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். மரணக் கிரிகைகளும் நடந்து முடிந்தன. இவர்களின் பரிதாப நிலையைக் கண்டு சிலர் அங்கே நாலைந்து நாட்களாகத் தங்கி அவர்களுக்காக வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களுக்காறுதல் *கூறினர்.

ஆனால் அன்னமலர் என்ன காரணம் பொருட்டுக் கிணற்றில் விழ்ந்திறந்தாளென்பது அனேகருக்கு முதலிற்றெரியாது. ஆயினும் அவள் எழுதி வைத்துப் போன கடிதத்தின் மூலமாகக் காரணமென்னவென்பதை யறிந்து கொண்டனர். அவளின் கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

*அண்டை வீட்டிலிருந்த "சுப்பர்" என்பவர் செய்த உதவிகள் தான் அனேகம்.

எனது அன்புள்ள தந்தைக்கும் தாயாருக்கும் எழுதுவது:—

தங்களின் வாக்குவாதங்களாலும், பேசிய கதைகளாலும், என்னால் தங்களுக்கு அதிக கவலை ஏற்பட்டதென்று அறிந்துகொண்டேன். அதென்னவெனில், என் விவாக கருமத்தைப் பற்றியதே. முதலில் உங்கள் பணம் முழுவதும் அழிந்ததும், எனது அண்ணர் சென்னையில் இறந்ததும், எனக்குப் பொல்லாக் கவலையை யுண்டாக்கிவிட்டன. தொடக்கத்திலே நீங்கள் செல்வந்தர்களா யிருந்தபடியால் என்னை ஆங்கிலம் கற்கும்படி பள்ளிக்கனுப்பி யிருந்தீர்கள். பள்ளியில் நவீன நாகரீகத்தை மற்றும் அனேகரைப்போல் யானும் பழகிக்கொண்டேன். அன்னிய நாகரீகத்தால் வரும் கெடுதிகளை இப்போதுதான் அறிந்து கொண்டேன். இப்போது தன்னும் எங்கள் வறுமையை யறிந்து நடக்க முயன்றாலும், எங்கள் கிருகத்தில் இனிமேல் ஒருவரும் என்னை விவாகம் செய்து கொள்ள வரமாட்டார்க ளென்பதை நன்றாக விளங்கிக் கொண்டேன். ஏனெனில் நீங்கள் முதலிலே உலோபிகள் என்ற பெயரை யெடுத்து விட்டீர்கள். இரண்டாவது உங்கள் உலோப குணத்தால் உள்ளதையு மிழந்தீர்கள். மூன்றாவதாய் உங்கள் மகனையு மிழந்தீர்கள். “அவருடைய சாவுக்கும் நீங்களே காரணராவர்” என்றே யான் விளங்குகின்றேன். இப்படியாக ஈற்றில் ஓர் பெரிய இழிவை உலகிலடைந்தீர்கள். இப்படிப்பட்ட இழிவான குணமுள்ளவர்கள் வீட்டில் ஓர் குடிகூலிக்காரன் கூட விவாகம் செய்து கொள்ள வரமாட்டா னென்பதை நன்றாக விளங்கிக் கொண்டேன். அத்துடன் பணமும் உங்களிடமில்லை. யான் உயிருடன் இருப்பின் உங்களுக்கு இன்னும் அதிக பாரமேற்படு மென்று நினைத்து என் உயிரை மாய்ப்பதற்குத் துணிந்து விட்டேன். இனிமேல் நீங்கள் ஓர்

தொல்லையுமில்லாது வாழ்நாளைக் கழிக்க வேண்டு மென் பதே எனது கோரிக்கை. ஆனால் நீங்கள் உங்கள் மருமகன் சாம்பசிவத்திற்கும் அவனின் தாயாருக்கும் கொடிய துரோ கத்தைச் செய்திருந்தீர்கள். அதன் பயனாக இத்துன்ப மெல்லாம் அடையப் பெற்றீர்கள். இனிமேல் அவர்களி டம் நீங்கள் செய்த பிழைகளைச் சொல்லி உங்களை மன் னிக்கும் வண்ணம் கேட்டு அவர்களின் உதவியை நாடிச் சந்தோஷமா யிருங்கள். பிறரிடம் போய் உதவியை வேண் டாதீர்கள். இவ்வுலகில் வாழ்வு தாழ்வு உண்டென்பதை இப்போது அறிவீர்களென்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் நிர்ப்பாக்கியமுள்ள புத்திரி,
அன்னமலர்.

இவ்வண்ணமாகக் கனகேந்திரம்பிள்ளையும் மனைவியும் மிக்க கவலையி லாழ்ந்திருந்தனர். தங்களின் வருங்கால வாழ்வை நினைத்து மிக்க ஏக்கங் கொண்டனர். தங்கள் புத்திரி எழுதிய வண்ணம், தங்களுக்கு நடந்த இடையூறு களையும் தாங்கள் பட்ட கஷ்டங்களையும், பணம் செல வழிந்த வகைகளையும் எழுதி, இனிமேல் தங்களைக் காத்து இரட்சிக்க வேண்டுமென்று விரிவாய் ஓர் காகிதம் சாம்பசி வத்திற்கு அனுப்பிவிட்டார்கள். அக்கடிதத்தில் வரைந்தி ருப்பதைப் பின்வரும் அத்தியாயங்களிற் காணலாம்.

# பதினான்காம் அத்தியாயம்.

## "விதித்த விதியை விட வேறு நடக்குமா?"

சென்ற பதின்மூன்றாம் அத்தியாயத்தில் சபாபதிப்பிள்ளையும் குடும்பத்தாரும் ஊர் போய்ச் சேர்ந்தார்களென்று சொல்லியிருந்தோம். ஊரால் வந்திறங்கியவுடன் சபாபதிப் பிள்ளை வீட்டுக்கு அனேகர் வருவதும் போவதுமாயிருந்தார்கள். அவரின் மைத்துனர் காசிநாதபிள்ளை இடையிடையே வந்து போய்க்கொண்டிருந்தார். இப்படிப் போய்க் கொண்டு வருங்காலங்களில், ஞானாமிர்தத்தின் விவாக விஷயங்களைப் பற்றி ஒரு நாள் சபாபதிப்பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்தார். முன்னர் பேசியபடி ஞானாமிர்தத்தைத் தனது புத்திரன் ஜீவரத்தினத்திற்கு விவாகம் செய்து கொடுப்பதில் ஒரு வித தடை யில்லை யென்பதாக வாக்குறுதி பண்ணினார். இப்படி யிருவரும் பேசி விவாக ஒழுங்குகளை முடிவெடுத்தனர். இது இவ்வளவிலிருக்க, ஞானாமிர்தம் என்பவள், தன் பெற்றோரும் மற்றும் பகுதியார்களும் நாளுக்கு நாளாகத் தனது விவாக கருமங்களைப் பற்றியே பேசிக்கொண்டு வருவதை நன்றாகக் கவனித்திருந்தாள். என்ன வழியால் தன் விவாக ஒழுங்குகளைக் குழப்பிவிடலாமெனப் பின்வருமாறு யோசிக்கலானாள்:—"ஆகா! என்ன ஆச்சரியம்! ஒருவித யோசனையுமில்லாது எனது பெற்றோர்கள் எனது விவாகத்தை யொழுங்கு பண்ணிவிட்டார்கள். அவர்கள், பணத்தையும் கௌரவத்தையும் கண்டு மாப்பிள்ளையை விரும்பினார்களே யன்றித் தம் புதல்விக்கேற்ற மாப்பிள்ளையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சிறிதுஞ் சிந்தித்தார்களில்லை. எனது தந்தை உத்தியோகத்தி லிருந்தும் உலக ஞானங்களை யறிந்திலர். எனது வருங்கால நன்மை

யைப் பற்றிச் சிறிதும் யோசித்தாரல்லர். ஒவ்வொரு விஷயமும் நன்றாக ஆலோசித்துச் செய்யவேண்டுமன்றோ? பின்னர் துக்கப் படுவதில் என்னதான் பிரயோசனம். இது நோற்றன் திருவள்ளுவரும்,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு."

என்று பாடியிருக்கின்றனர். வழியில் நடந்து செல்லு மொருவன் முள்ளொன்றைக் காண நேர்ந்தால் அதில் மிதிப்பானோ? அதுபோல யானும் மாப்பிள்ளையின் குணங்களை யறிந்துகொண்டும் இவ்விஷயத்தில் எப்படிப் பிரவேசிப்பேன்? தொடக்கத்தில் விலகி விடுவதன்றோ புத்தியாகும். எப்படியும் யான் சாம்பசிவத்தையே விவாகம் செய்யவேண்டும். ஏனெனின் அவரை யன்றி வேறு ஆடவரை யான் நினைக்கவில்லை. இவர்களுக்கும் நன்றாக இதைப்பற்றி முன்னுக்கே சொல்லிவிட வேண்டும்," என்று பலவாறு எண்ணி மிக்க யோசனையி லாழ்ந்திருந்தாள். இது இப்படி யிருக்க, ஒருநாள் காசிநாதபிள்ளையின் புத்திரன் ஜீவரத்தினம், தான் மணந்து கொள்ளப்போகும் பெண்ணாகிய ஞானமிர்தத்தின் வடிவழகையும் இன்னும் அவளின் நடையுடை பாவனைகளையும் கவனிக்கும் பொருட்டுப் பயணத்தால் வந்திருப்பவர்களைக் காண்பதற்குச் சிநேகிதர்களும் சுற்றத்தார்களும் போவதுபோல மாமனார் சபாபதிப்பிள்ளை வீட்டுக்கு மோட்டார் ரதத்தில் வந்திறங்கினான். அந்த நேரத்தில் சபாபதிப் பிள்ளை வீட்டிலில்லை. மோட்டாரிலிருந்து இறங்கி வந்தவரை ஞானமிர்தம் ஓர் அறைக்குள்ளிருந்து கவனிக்க நேர்ந்தாள். உடனே தன் தாயினிடஞ் சென்று யாரோ ஒருவர் அன்னிய நாகரீக உடையுடன் வந்திருப்பதாகச் சொன்னாள். தாய் தங்கம்மாள் வெளியே வந்து பார்க்கையில் தன் மருமகன் வந்திருப்பதைக் கண்டாள். ஆனால் ஞான

மிர்தத்திற்கு வந்திருப்பவர் யாரென்பது தெரியமாட்டாது. தான் முன்னர் கேள்விப்பட்டவளவில் அவரின் உடைகளிலிருந்து தனக்குப் பேசிய மாப்பிள்ளையா யிருக்கக் கூடுமெனவும் ஒருவாறு நினைத்தாள். பின்னர் தங்கம்மாள் நாற்காலி கொடுத்து மருமகனை மிக உபசரித்தாள். இதற்கிடையில் ஞானமிர்தம் ஓர் அறைக்குள்ளிருந்து குசினிப் பக்கமாகச் செல்லுகையில் ஜீவரத்தினம் அவளின் வடிவழகைக் கடைக் கண்ணாற் பார்த்து மிக மனப்பூரிப்பை யடைந்தான். ஞானமிர்தம் தன்னுடன் நேருக்கு நேராகச் சமுகமளித்து வார்த்தை யாடுவாளென்று நம்பியிருந்தான். ஆனால் இது விஷயம் அனுகூலமடைய வில்லை. சிறிது நேரஞ் சென்ற பின்னர், ஜீவரத்தினம் தன் மாமியாரிடம் விடைபெற்றுக்கொண்டு வாயில் சிக்ரெட் பிடித்தவனாய் மோட்டர் ரதத்திலேறி வீடு திரும்பினான். ஜீவரத்தினம் வீடு சென்றதும் பின்வருமாறு யோசிக்கலானான் :—

"யான் இன்று ஞானமிர்தத்தைக் கண்டு அவளுடன் நேருக்கு நேராக வார்த்தை யாடலாமென்று யோசித்தும் அனுகூலமடையாமற் போயிற்று. அவளோ பழய நாகரீகத்தையே கைக்கொண்டிருக்கின்றாள் போலத் தோன்றுகின்றது. இப்படிப்பட்டவளுடன் யான் எப்படித்தான் காலம் கழிப்பது? நவீன நாகரீகங்களெல்லாம் பழக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்களே! ஆனால் காரியத்தில் ஒன்றையும் காணோம். யூனியர், சீனியர் படித்தவர்களும் இன்னும் தற்கால நாகரீகமான பெண்களனேகர் இருக்க என் தந்தையானவர் இவ்விவாகத்தைப் பேசவேண்டிய அவசரமில்லை. ஆனால் உலகிலே இப்படிப்பட்ட எத்தனையோ பெண்கள் விவாகமானதும் மிக நாகரீகமாக நடப்பதையும் யானறிவேன். இது விஷயத்திலும் விவாகமானபின் எனது எண்ணத்திற் கெல்லாம் இசைந்து நடப்பாள்தானே,"

என்று ஒரு பக்கம் வெறுப்பும் ஒரு பக்கம் விருப்பமுமாய்ப் பெரிய யோசனையி லாழ்ந்து ஏதோ இனிமேல் நடப்பதைக் கண்டுகொள்வோ மென்று எண்ணியிருந்தான். இங்கேயும் ஞானாமிர்தமென்பவள் அன்று மோட்டாரில் வந்திறங்கியவர் தனக்குப் பேசிய மாப்பிள்ளை யெனத் தனது தாயாரா லறிந்து பின்வருமாறு யோசிக்கலானாள்:—“ஆகா! யான் கேள்விப்பட்டபடியே எனக்குப் பேசிய மாப்பிள்ளையின் சில குணங்களைக் குறிப்பாலறிந்து கொண்டேன். அவருடைய கால்வீச மீசையும், உடை நடையின் பாவனையும், இன்னும் அவரின் நவீன நாகரீகச் செயல்களும் என் கொள்கைகளுக்கு நேர் விரோதமா யிருக்கின்றன. இப்படிப்பட்டவருடன் யான் என்னென்று தான் காலம் விடுவது? எப்படியும் இவ்விவாகத்தை யான் குழப்பவே வழி தேடுவேன்” என்று பல எண்ணங்கள் குடிகொண்டவளாய்ச் சதா யோசனையி லாழ்ந்திருந்தாள்.

மேலும் விவாகத்திற்குரிய ஆயத்தங்கள் நடைபெற ஆரம்பித்தன. விவாக நாளுக்கு ஒரு மாசத்திற்கு முன்னரே பெண்வீட்டிலும் மணமகன் வீட்டிலும் பந்தல் போடத் தொடங்கி விட்டார்கள். பந்தல் வேலைகளைக் கவனித்த ஞானாமிர்தம் தனது விவாகத்திற்காகவென நல்லாயறிந்து கொண்டாளாதலால் இனிமேல் தன் எண்ணத்தைப் பெற்றோர்க்கு வெளியாகச் சொல்லிவிடத் தீர்மானித்தனள். ஒருநாள், ஞானாமிர்தம் தன் தாயை யணுகி மிக, வாட்டத்துடன் கண் கலங்கினவளாய், “அம்மா! நீங்கள் யாதொன்றையும் விசாரியாமல் உங்கள் எண்ணத்திற்கு என் விவாக கருமங்களை நடத்தத் துணிந்துவிட்டீர்கள். முன்பின் யோசிக்கவேண்டாமா? விவாகம் பண்ணிக் குடித்தனம் நடத்துவது யானல்லவா? எனது அபிப்பிராயத்தையும் சிறிதேனும் கேட்கக்கூடாதா? நீங்கள் தற்சம

யம் பேசி யொழுங்கு பண்ணி யிருக்கும் மாப்பிள்ளையின் குணங்கள் எனக்குச் சிறிதேனும் பிடிக்கவில்லை. ஏனெனின் யானோ சைவ அனுஷ்டானங்களைக் கைக்கொண்டிருக்கின்றேன். நவீன நாகரீகச் செயல்களை வெறுத்து நடப்பவளா யிருக்கின்றேன். மச்ச மாமிச போசனத்தை விலக்கிச் சைவ உணவையே கைக் கொண்டவளா யிருக்கின்றேன். ஆனால் நீங்கள் ஒழுங்கு பண்ணியிருக்கும் மாப்பிள்ளையோ முதலாவது மதுவருந்துபவர்; இரண்டாவது மாமிசபோசனி; மூன்றாவது நவீன நாகரீகத்திலடிபட்டவர்; நாலாவது எமது சைவ அனுஷ்டானங்களைக் கைப்பற்றுதவர்; இன்னும் அவருடைய குணங்களை யான் அதிகம் கேள்விப்பட்டிருக்கின்றேன். இவருக் கேற்ப மோட்டார் ரதங்களில் உலாத்தித் திரியவும், பல ஆடவர்களுடன் கை குலுக்கவும், இன்னும் இவருக் கேற்ப நடக்க என்றால் எப்படி முடியும்? ஒரு ஆடவனும் பெண்ணும் கூடி இருவர் மனமும் ஒன்றுபட்டு வாழ்வதுதான் இல்லறம். அதுதான் வாழ்க்கைத் துணைநலம். அதுதான் செல்வம். அதுதான் வாழ்வு. அதுதான் ஈற்றில் மோட்சம். இதனாற்றான் ஔவையாரும்

> "ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
> காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
> பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு"

என்று பாடியிருக்கின்றனர். இவற்றை விரிக்கிற் பெருகும். அப்படி விரித்துப் பேசினும் தற்சமயம் இது விஷயங்கள் உங்கள் காதில் ஏறமாட்டா. ஆனால் எனது விதி வேறு இடத்திலிருக்கும் பொழுது நீங்கள் பேசிய மாப்பிள்ளையின் குணங்களைப் பற்றி யான் பேசவேண்டிய அவசியமுமில்லையே. ஆனதால் எனது அன்னாய்! எனது எண்ணத்துக்கு

மாறாக இவ்விவாகத்தை யொழுங்கு பண்ணவேண்டாம். யானோ எப்படியும் ஈற்றில் இவ்விவாகத்தைக் குழப்பவே துணிந்திருக்கின்றேன். ஆனதால் பின்வரும் காரியங்களை யுணர்ந்து இப்பொழுதே மாப்பிள்ளை வீட்டாருடன் பேசி இவ்விவாகத்தைக் குழப்பி விடுங்கள். இது விஷயத்தை முன்னதாகவே சொல்லி விடுகின்றேன்,” என்று ஒருவாறு புலம்பினாள்.

தங்கம்மாள்:—“என் குழந்தாய்! என் கண்மணீ! என் ஞானாமிர்தம்! நீ வருந்தவேண்டாம். சொந்தப் பிள்ளையாகிய ஜீவரத்தினத்தை வெறுத்தால் பின் உனக்கு வேறு யார்தான் இருக்கின்றார்கள்? அவனுடைய படிப்பென்ன! பணமென்ன! நாகரீகமென்ன! ஏதும் சில குறைகளிருந்தால் பின்னால் திருத்த முடியாதா? அதற்காக “விவாகத்தைக் குழப்புவேன்” என்று சொன்னால் உன் தந்தை என்ன சொல்லுவார்? பின் யாரைத்தான் விவாகம் செய்ய யோசித் திருக்கின்றாய்?”

ஞானாமிர்தம்:—“அம்மா! எனக்கு ஜீவரத்தினமும் வேண்டாம், அவரின் பணமும் வேண்டாம், அவரின் உத்தியோகம், கௌரவம் முதலியனவும் வேண்டாம். யான் மனதில் நினைத்திருக்கும் சாம்பசிவத்தை மணஞ் செய்தால் என்ன பாக்கியம் பெற்றிருப்பேன்; அவரிடம்தான் யான் என் அன்பைச் செலுத்திவிட்டேன். விதியும் அங்கேதானிருக்கின்றது. ஆனதால் அம்மா! பல ஆடவரை விரும்புவது பெண்களுக் கழகல்ல; மனதாரச் சாம்பசிவத்தையே நினைத்துவிட்டேன். அவரையே யான் விவாகம் செய்வேன். அப்படிச் செய்வது உங்களுக்கு விருப்பமில்லையாயின் யான் விவாகம் செய்யாமல் இப்படியே காலத்தைக் கழிப்பேன்” என்றாள்.

தங்கம்மாள் :—"அடீ! பிள்ளாய்! மோசம் வரப்போகின்றது. சாம்பசிவத்தை என் நினைத்தாய்? யாரோ பிறத்தியானின் பிள்ளை. வறிய குடும்பத்திலுதித்தவன். வறுமையாக வளர்ந்தவன். எங்களிடம் உதவி பெற்று ஏதோ சிறு உத்தியோகத்திலமர்ந்திருக்கின்றான். அவனை நினைக்க உனக்குச் சிறிதேனும் வெட்கமில்லையா? இதனாலடையும் அகௌரவத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்? உன் தந்தை இது விஷயம் அறிந்தால் என்ன கலக்கடி ஏற்படுமோ யானறியேன். ஆனதால் நீ மனச்சந்தோஷமாய் யாம் பேசிய விவாகத்திற்கு இசையவேண்டும். வீண் மனஸ்தாபத்தை உண்டாக்க வேண்டாம்," என்று சிறிது கோபத்துடன் சொன்னாள்.

ஞானு :—"யான் தங்களை வீண் மனஸ்தாபப்படவைக்கவில்லை. என்னைத்தான் தாங்கள் வீண் மனஸ்தாபத்திற்குள் வைக்கின்றீர்கள். என் மேல் தாங்கள் கோபங்கொள்ளவேண்டிய அவசியமில்லையே," "விதித்த விதியைவிட வேறு நடக்குமா," என்றாள்.

தங்க:—(கோபக்குறியுடன்) "சரி—சரி, அதெல்லாம் பின்னால் பார்ப்போம். உன்னைப் பார்க்குமிடத்துப் பெற்றோர்க் கடங்கி நடப்பவளாய்த் தெரியவில்லை. ஏதோ விதியைப் பற்றிப் பிதற்றுகின்றாய். உன்னுடன் எனக்கு அதிகம் பேச்சு வேண்டியதில்லை. எல்லாம் அந்நேரத்தில் என்ன நடக்கின்றதென்பதைப்பார்," என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

தாய் சென்றதும், ஞானுமிர்தம், "யான் என் மனக்கிடக்கையை வெளியாகச் சொல்லிவிட்டேன். அவர்கள் அதைச் சிறிதேனும் கவனிக்கவில்லை. இனிமேல் என் மேற் தப்பிதமில்லை. யான் எப்படியும் இவ்விவாகம் நடைபெறுவண்ணம் வழிகளைத் தேடவேண்டும்," என்று ஆலோ

சித்துக் கொண்டிருக்கலானாள். இதற்கிடையில் வெளியே போயிருந்த சபாபதிப்பிள்ளை வீடு திரும்பி வரவும், தங்கம்மாள், தம் புதல்வி ஞானமிர்தம் சொன்னவற்றையெல்லாம் அவருக் கறிவித்தாள். சபாபதிப்பிள்ளைக்கு வந்த ஆத்திரமோ கொஞ்சமல்ல. கண்கள் சிவந்து மிக்க கோபாவேசங் கொண்டு, “பெட்டை நினைத்தபடியோ? இதற்காகவோ இக்கல்வி யெல்லாம் கற்றுக்கொண்டாள். என் சொல்லுக்கு எதிர் பேசமாட்டாள், என் சொல்லைத் தட்டமாட்டாள், எனக் கடங்கி நடப்பாளென்று இன்னும் அவள் மேல் நல்லெண்ணங்களை வைத்திருந்தேனே. இப்போது பார்க்கையில் இவளின் கொள்கைக ளெல்லாம் மாறிவிட்டனவே. இவள் படித்த கல்வியெல்லா மெங்கே? தான் நினைத்தபடி நடக்கத் தலைப்பட்டுவிட்டாளோ? பெருமூச்சுக்காரியா யிருக்கின்றாள். பிச்சை யேற்றுப் பிழைத்தவனை இவளேன் நினைப்பாள்? எனக்கு அவமானக் கேட்டை விளைவிக்க நினைத்தாள் போலும். மூச்சுக் காட்டாமல் இருக்கச் சொல்லு” என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு விவாக கருமங்களிற் புலனைச் செலுத்தினார்.

இனிமேல் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் விவாகத்திற் குரிய ஒழுங்குகள் செய்த விபரத்தைக் கூறுவோம். சபாபதிப்பிள்ளை தனது சிநேகிதர்களுக்கும் இன்னும் மற்றும் உறவினருக்கும் தனது புத்திரியின் விவாகத்தைப் பற்றி “விவாக அழைப்புப் பத்திரம்” அச்சிடுவித்து அனுப்பி யிருந்தனர். அநேகமானவை மலாய் நாட்டிற்கே அனுப்பப்பட்டிருந்தன. சாம்பசிவத்திற்கும் ஓர் அழைப்புப் பத்திரம் அனுப்பப்பட்டிருந்தது. மாப்பிள்ளை பகுதியாரும் விவாக அழைப்புப் பத்திரங்கள் அச்சிடுவித்து தம் உற்ரார் சிநேகிதர்களுக் கனுப்பி யிருந்தனர். பெண் வீட்டாருக்காகச் சபாபதிப்பிள்ளை அழைப்புப் பத்திரத்திற்




ஜீவரத்தினம் மணக் கோலத்துடன் பெண்வீடு வருதல். 266-ம் பக்கம் பார்க்க.

கீழே கையொப்பமிட்டு அனுப்பியதுபோல, மாப்பிள்ளை பகுதியாருக்காக ஜீவரத்தினத்தின் தந்தை காசிநாதபிள்ளை யென்பவரின் கையொப்பமே விவாக அழைப்புப் பத்திரத்தில் அச்சிடப்பட்டிருந்தது. காசிநாதபிள்ளையை முன்னர் காசி—காசி யென்றே அழைப்பார்கள். மகன் ஜீவரத்தினம் எவ். ஏ. (F.A.) என்ற வகுப்பிற் றேர்ச்சி யடைந்து பீ.ஏ. (B.A.) வகுப்பிற் படிக்குங் காலத்தில் காசிநாதர் என்று அழைக்கத் தொடங்கினார்கள். பின்னர் ஜீவரத்தினம் நியாயவாதிக்குப் (Barrister) படிக்கத் தொடங்கவே காசிநாதபிள்ளை என்ற பட்டத்தையும் பெற்றார். பணம் என்னதான் செய்ய மாட்டாது? காசிநாதபிள்ளைக்கு வயது அறுபதுக்கு முன்பின்னா யிருக்கும். ஆனால் தான் வயோதிபமடைந்தவரெனக் காட்ட அவருக்கு விருப்பமில்லை. ஜீவரத்தினம் பள்ளியில் வாசிக்கும்போதே இவருடைய பற்கள் அனேகம் விழுந்து விட்டன. மயிர் நரைத்து விட்டது. தற்சமயம் வாய்நிறையத் தங்கப் பற்களைக் கட்டுவித்தார். ஆனால் நரைத்த மயிரைக் கறுப்பாக்குவதற்கு அவரால் முடியவில்லை. முன்னர் நாலு முழத்துண்டையே யணிந்து வருவது இவரது வழக்கம். இப்போ நல்ல பட்டு வேட்டியும், காஸ்மீரன் சால்வையு மணிந்து கொள்ளத் தலைப்பட்டார். காதில் வெள்ளை வைரமும் போட்டுக் கொண்டார். கையில் பத்தரை மாற்றுத் தங்கப்பூண் போட்ட பிரம்பொன்று பிடித்துக் கொண்டார். இவையுடன் சருகைத் தலைப்பாகையு மணிந்து கொள்ளத் தலைப்பட்டார். இன்னும் இவருடைய புது நாகரீகத்தை விரிக்கிற் பெருகுமெனை விடுத்தோம். இவருடைய மனைவியும் பழயமாதிரி நடந்த தெல்லாவற்றையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டுப் புது நாகரீகத்தையே கைப்பற்றிக் கொண்டாள். ஆனால் வயதோ சென்றுவிட்டது.

இவற்றை விரிக்கிற் பெருகுமென விடுத்து நமது கதைபாற் செல்வாம்.

இப்படியாக விவாக ஒழுங்குக ளெல்லாம் நடைபெற்றன. இன்னும் மூன்று தினங்கள் தானிருக்கின்றன. இரு பகுதியிலும் பந்தற் சோடினை மிகச் சிங்காரமாயிருந்தது. பல வகையான புஷ்ப மாலைகளாலும் தோரணங்களாலும், வாழை, கமுகு முதலிய நற்சோலைகளாலும், வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் மணவறையின் அழகு யாவர் கண்களையும் பற்றி விடக்கூடியதாயிருந்தது. இப்படியாக விவாக நாளும் வந்து விட்டது. இரு பகுதிகளிலும் ஜனக்கூட்டங்கள் வருவதும் போவதுமா யிருந்தார்கள். இவ்வித சுபதினத்தில் மணமகன் ஜீவரத்தினம் நல்ல பட்டுடைகள் அணியப் பெற்றவனாய் மாப்பிள்ளைக் கோலத்துடன் மிக உல்லாசமாக மோட்டார் ரதத்தில் மாப்பிள்ளைத் தோழனுடன் வீற்றிருக்க, முற்பக்கமாக மேளவாத்தியங்கள் முழங்கவும், இன்னோர் பக்கத்தில் நடனமாதர்கள், வீணை, மத்தளம், முதலிய வாத்தியங்களுடன் நடனமாடிக் கொண்டு வரவும், ஏராளமான ஜனக்கூட்டங்கள் மிக ஆனந்தமாய்த் தம் மனம் போனவாறு பேசிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து வரவும், இன்னும் எத்தனையோ ஆடம்பரங்களுடன் தீ வெளிச்சத்துடன் மாப்பிள்ளை பகுதியார் பெண் வீடு வந்து சேர்ந்தனர். வேடிக்கை பார்ப்பதற்காகத் தெரு வீதி வழியே போய்க் கொண்டிருந்த அனேக ஜனங்கள் மாப்பிள்ளை பகுதியாருடன் வந்து குழுமினர். வந்தவர்களெல்லோரும் வெகு மரியாதையாக வரவழைக்கப்பட்டு ஆசனத்தமரச் சந்தனம் பன்னீர் வழங்கப்பட்டுப் பின்னர் தாம்பூலம் பரிமாறப்பட்டனர். இதற்கிடையில் வேத வேதியர்கள் தம் வேலைகளை ஆயத்தப்படுத்தினர். விவா

கத்தை நடத்தும் குருவானவர் நல்லாசனத்தின் மீதமர்ந்து கொண்டு, "பண்டாரம்! அந்த மணியை யெடு, இந்த மாலையை யெடு" என்று இவ்விதம் சொல்லிக் கொண்டே மணவாளன் ஜீவாத்தினத்தை மணவறையில் வந்தமரும்படி ஆஞ்ஞாபித்தனர். மாப்பிள்ளைத் தோழன் பக்கத்தே வீற்றிருந்தான். சில பெண்கள் விண்ணணம் பார்க்கும் பொருட்டுத் தாமிருந்த இடத்தைவிட்டு மணவறைக்குள் வந்து சேர்ந்தனர். சிறிது நேரம் மேளக்கச்சேரி நடந்தது. பின்னர் சங்கீதக் கச்சேரி நடந்தது. இதற்கிடையில் குருவானவர் சபாபதிப்பிள்ளையை நோக்கி, "பெண்ணை யழைத்து வாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தனர். சபாபதிப்பிள்ளை அதிவிரைவுடன் வீட்டுக்குள் நுழைந்து அங்கு நிற்கும் பெண்களைப் பார்த்து "பிள்ளை ஞானமிர்தத்தை யழைத்து வாருங்கள்" என்றார். அங்கு நின்ற பெண்கள், "ஆகா! என்ன ஆச்சரியம் என்ன புதுமை! என்ன விநோதம்! ஞானமிர்தத்தைக் காணவில்லையே! பொல்லாங்காயல்லோ வந்து விட்டது," என்று பதறி உளறிப் பேசினர். சிலர் வாய்க்குள் குசு—குசு வென்று வாயில் வந்ததெல்லாம் பேசினர். சபாபதிப்பிள்ளை திடுக்குற்று, "மெய்தானா?" என்றார். அவர் சொல்லுகையில் அவரின் சரீரம் மிகப் பதறியது. கைகால் நடுக்கமுற்றன. "எங்கே போகப்போகின்றாள்; குசினிப்பக்கம் அல்லது வெளியே பாருங்கள்", என்றார். சபாபதிப்பிள்ளையின் மனைவி தங்கம்மாளும் மற்றும் பெண்களும் அங்குமிங்குமாக ஓடி, மூலை முடக்குகள், வீட்டுக்கோடிகள், முற்றங்கள் முதலிய இடங்களெல்லாம் போய்ப் பார்த்தும் காணவில்லை. "ஐயோ! என் ஞானமிர்தம்! என் அருமைக் குழந்தாய்! என் கட்டிக் கரும்பே! கற்றறிவள்ளலே! கல்விக் கடலே! எங்கே சென்று விட்டாய்? உன்னை எங்கே காணுவது? ஐயோ! என்

அருமைக் கண்மணியே!" என்று புத்திரியைக் காணுத தால் தாய் தங்கம்மாள் "ஓ" வென்று அலறத் தொடங்கி ஞள். சபாபதிப்பிள்ளைக்கு மகளைக் காணுத துக்கம் ஒரு வாறு ஏற்பட்டிருப்பினும் "சபையில், தான் அவமானப்பட வந்து விட்டதே" என்றது தான் அவருக்கு அதிக கவலை யைக் கொடுத்தது. "யான் என் செய்வேன்! இப்படியாக ஏமாற்றுவாளென்று யான் ஒருநாளும் காத்திருக்கவில்லை யே! தற்சமயம் உயிருடன் இருக்கின்ருளோவும் தெரிய வில்லையே! என் சம்பந்தி காசிநாதபிள்ளைக்கு யான் எவ்வா று மறுமொழி கூறுவது? மருமகன் ஜீவரத்தினத்திற்கு முன்பாக யான் எப்படி முழிக்கப் போகின்றேன்? சபை யிலுள்ளவர்கள் என்னைப்பற்றி என்ன கேவலமாய் நினைப் பார்கள்," என்று எண்ணுததெல்லா மெண்ணிப் பலகவலை களும் ஒன்ருகச் சேர்ந்து என்ன செய்வதென்று ஒன்றும் தோன்ருதவராகி நின்ற நிலையை விட்டுக் கீழே விழுந்து மூர்ச்சையாயினர். இதற்கிடையில் வீட்டுக்குள் அழுத குரலைக்கேட்ட சபையிலிருந்தவர்க ளெல்லோரும் ஓடி வந்தனர். என்ன சங்கதி யென்பதை விசாரித்தனர். பெண்ணைக் காணவில்லை யெனவறிந்து மிக ஆச்சரியப்பட் டனர்; சிலர் ஆரவாரித்தனர்; சிலர் ஏக்கங்கொண்டனர்; சிலர் குசு—குசு வென்று தமக்கிணங்கியவர்களுடன் கதைத்தனர்; சிலர் அங்குமிங்குமாக ஓடி வேடிக்கை பார்த்தனர்; சிலர் சிரித்தனர்; சிலர் கலியின் வலிமையோ என்றனர்; சிலர் பரிகாசமாகப் பேசினர்; இவ்விதமே ஜனங் களின் ஆரவாரம் கொஞ்சமல்ல. ஆனுல் மாப்பிள்ளை ஜீவ ரத்தினத்திற் குண்டான ஆத்திரமோ கொஞ்சமல்ல. ஜீவ ரத்தினம் மிகவும் கோபாவேசமாகி, "இந்த நாட்டுச் சனங் களுக் கிடையில் யான் ஏன் வந்தகப்பட்டேன்? என் மரி யாதையை யிழந்தேன். சபையில் அவமானப்பட்டேன்!

என் தந்தையே எனக்கு வினையைத் தேடிவிட்டார். யான் இவ்விவாகத்தைச் செய்வதற்குப் பூரண விருப்பமில்லை யென முன்னதாகவே என் தந்தைக்குச் சொல்லியும், ஈற்றில் அவரால் அவமானப்பட்டேன்,'' என்று பல எண்ணங்கள் அவன் மனதிலுதித்து இனிமேல் அங்கு நிற்பதால் என்ன பிரயோசனமென்று நினைத்துத் தலையில் மாட்டிய தலைப்பாகையையும், மேலிற் போட்ட சட்டையையும் கழற்றி அப்புறமாக எறிந்துவிட்டு வீடு போய்ச் சேர்ந்தான். காசிநாதபிள்ளைக்கு வந்த ஆத்திரமும் கொஞ்சமல்ல. ஆனால் சபாபதிப்பிள்ளையின் கோலத்தைப் பார்த்தவளவில் அவரால் இக்குழப்பம் நடக்கவில்லை யெனவறிந்து என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவராகி ஓர் பக்கமாக வெட்கிப் போய் நின்றனர். இதற்கிடையில் மேளவாத்தியக்காரர், ''எங்கள் பணம் போய்விட்டதே. இதற்கு யார் பொறுப்பு; பேசிய தொகையை யாரிடம் தான் வேண்டுவது? இச்சமயத்தில் கேட்கப் புகின் அடியும் உதையும் தான் பட வேண்டிவரும்'' என்று விறைத்துப் போய் ஓர் பக்கமாய் நின்றனர். சங்கீத வாத்தியக்காரர்களும் இவ்வண்ணமே நின்றார்கள். வேதவேதியர்கள், ''இன்று பெருந் தொகையான சோமன் சோடுகள், பட்டு வேஷ்டிகள், இன்னும் ஆக வேண்டிய பொருட்களை யள்ளிக்கொண்டு போகலாமென்று நம்பிவந்தோமே; இப்படி வருமென்று யார்தான் காத்திருப்பர். நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததுவே'' என்று கொட்டாவி விட்டுக்கொண்டு ஒரு பக்கமாய் நின்றனர். சிலர் நிற்பதில் என்ன பிரயோசனமென்று வீடு திரும்பினர். வேடிக்கை பார்க்கவந்த பெண்கள் ''இன்று யாம் வெட்கிப் போனோமே; எவ்வளவு நேரமெடுத்து யாம் எம்மை அலங்கரித்துப் பலவித ஆபரணங்களை யணியப்பெற்று மிகச் சிங்காரமாக வந்தோமே''

என்று விறைத்துப் போய் நின்றனர். சிலர் தம் நகைகளை யும் சேலைகளையும் மற்றவர்களாகுதல் பார்க்கட்டும் என்று நினைத்து ஏதோ பெரிய அலுவல் பார்ப்பதுபோல அங்கு மிங்குமாக ஜனக்கூட்டங்களுக் கிடையில் உலாவிக் கொண்டு நின்றனர். சிலர் தாமணிந்து கொண்டு வந்த நகைகளையும் சேலைகளையும் திருப்பித் திருப்பிப் பார்த்தபடியே நின்றனர். இன்னும் இப்படியே மற்றும் ஜனங்களும் தத்தமக் கிணங் கியவாறு பலகதைகளையும் பேசிக்கொண்டு வேடிக்கையாக நின்றனர். பெண்ணைத் தேடும் பொருட்டுக் கிட்டிய உறவி னர் தெரு வீதி வழியாகப் போய் விட்டனர். விவாகச் சடங்கு குழம்பி விட்டதென வறிந்து அனேக ஜனங்கள் தத்தம் வீடு சென்று விட்டார்கள். சிலர், பெண்ணுக்கு மாப்பிள்ளை பேரில் விருப்பமில்லையாதலால் எங்கேயாகினும் ஓடி ஒளித்திருப்பாளென்றும், சிலர், இப்பெண் தன்னிலே யேதும் குற்றமிருந்து இனிமேல் உலகிலிருப்பது நல்ல தல்ல வென்று நினைத்துத் தூங்கி யிறந்திருப்பாளென்றும், சிலர், இப்பெண் ஒரு சமயம் வேறு ஆடவன்மேற் காதல் கொண்டு இவ்விவாகத்தைக் குழப்புவதற்காக எங்கேயாகி னும் ஓடி மறைந்திருப்பா ளென்றும், இன்னும் தத்தம் மனதில் தோன்றியவாறு பேசிக்கொண்டு சென்றார்கள். இப்படியே ஒவ்வொருவராக அவ்விடத்தை விட்டகன்ற னர். கலியாணம் குழம்பிய சங்கதி அவ்வூர் முழுதும் பரம் பிவிட்டது. அன்றிரவு முழுதும் அனேக ஜனங்கள் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். இங்கே ஞானமிர் தத்தின் தாய் தந்தையருக்குப் புத்திரியைக் காணாத சோ கம் மென்மேலும் அதிகரித்துக்கொண்டு வந்தது. சபா பதிப்பிள்ளை பின்னரும், "யான் என் செய்வேன்! என் புத்திரியை யான் எங்கே தேடுவேன்! அவளின் எண்ணப் படியே விடாமல் ஈற்றில் அவமானப்பட்டேனே! அவள்

சொன்னது போல விதியை யாரால் வெல்ல முடியும்? ஆனால் அவள் உயிருடன் இருந்தால் மட்டும் எனக்குப் போதுமானது; ஜெகதீசா! எனது புத்திரிக்கு ஒருவித ஆபத்தும் வாராமல் காக்கவேண்டும்'' என்று கடவுளை வேண்டித் துதித்தும் அவர் மனம் திருப்தியடையவில்லை. பெரிய மனக்கவலையுடன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தேடச் சென்றவர்களின் வரவை வெகு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கலானார். மனைவி தங்கம்மாள் புத்திரியைக் காணாத சோகத்தால் மனம் வாடிக் கைகால் சோர்வடைந்து, கீழே விழுந்து மூர்ச்சைபோயினள். தேடச் சென்றவர்களுட் சிலர் பல இடங்களும் தேடிக் காணாமையால் இரவு ஒரு மணியளவில் வீடு வந்து சேர்ந்தனர். சிலர் வேறு இடங்களுக்கு ஞானமிர்தத்தைத் தேட அனுப்பப்பட்டிருந்தனர்.

---

# பதினைந்தாம் அத்தியாயம்.

## "சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்."

ஒருநாட் சனிக்கிழமை காலமே சுமார் பத்துமணியளவில் சாம்பசிவம் ஓர் சாய்நாற்காலி மீது படுத்துக்கொண்டு ஔவையார் அருளிச் செய்த நல்வழிச் செய்யுட்களை வாசித்துக்கொண்டு வரும்பொழுது பின்வரும் பாடலையும் கண்ணுற்றான்:—

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்."

இப்பாடலைக் கவனித்த மாத்திரத்தில் அவனை யறியாதபடி பல எண்ணங்கள் அவனைச் சூழ்ந்துகொண்டன. என்றாலும்

இன்னும் மற்றும் பாடல்களையும் வாசித்துக்கொண்டே போனான். இப்படி வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது, தபாற்காரன் தூரத்தில் வருவதைச் சாம்பசிவம் காண நேர்ந்தான். அவனும் சாம்பசிவம் வீடு நோக்கியே வந்தான். வந்ததும் தன் பைக்குள்ளிருந்த கட்டை யவிழ்த்து சாம்பசிவத்துக்கு வந்த கடிதங்களையும் புதினப் பத்திரிகைகளையும் பிரித்துக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான். வந்த கடிதங்களுள் இரண்டு ஊரிலிருந்து அனுப்பப்பட்டிருந்தன. ஆனால் ஒரு கடிதம் யாரும் திறந்து வாசிக்கக் கூடிய கடிதமாயிருந்தது. புதினப் பத்திரிகைகளைப் பின்பு வாசிக்கலாமென்று சாய்நாற்காலிமீது வைத்துவிட்டுக் கடிதங்களை வாசிக்கத் தொடங்கினான். திறந்து வாசிக்கக்கூடிய கடிதத்தையே முதலில் வாசிக்க நேர்ந்தான். காகிதத்தை யுடைத்ததும், மேலே "விவாக அழைப்புப் பத்திரம்" என வரையப்பட்டிருந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

ஸ்ரீமான் பொ. சாம்பசிவம் அவர்கள் சமுகத்திற்கு:—

ஐயா,

நிகழும் ஐப்பசி மீ கருஉ புதன்கிழமை சப்தமி திதியும் உத்தராட நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் மாலை எட்டு மணியளவில் எமது புத்திரி ஞானமிர்தம் அம்மாளை மேற்படி இவ்வூர் எமது மைத்துனர் ஸ்ரீமான் காசிநாதபிள்ளை யவர்களின் சிரேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி ஜீவரத்தினம்பிள்ளைக்குப் பாணிக்கிரகணம் பல பெரியோர்கள் முன்னிலையிற் செய்ய நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர குடும்பசமேதராய்ச் சமுகம் தந்து தம்பதிகளை யாசீர்வதித்துத் திரும்புமாறு மிக மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

சபாபதிப்பிள்ளை.

இதை வாசித்து முடியவும் ஞானாமிர்தத்தின் விவாக அழைப்புப் பத்திர மெனப் பூரணமாக அறிந்து கொண்டான். உடனே அவன் மனதில் அவனை யறியாமல் பல எண்ணங்கள் தோன்றிவிட்டன. பின்வருமாறு யோசிக்கலானான்:—“ஆகா! பெரிய நூதனமா யிருக்கின்றதே! எப்படியும் தான் என்னையன்றி வேறொருவரையும் மணக்க மாட்டேனென்று முன்னர் ஞானாமிர்தம் எனக்குச் சொல்லியிருந்தாளே! இதற்கெப்படி யுடன்பட்டாளோ யானறியேன். அவள் மனம் விரும்பி இவ்விவாகம் நடைபெறுவதானால் எனக்கும் சந்தோஷமே. ஆனால் அவளின் விருப்பத்திற்கு மாறாக அவளை வலோற்காரப் படுத்தி இவ்விவாகம் நடைபெறுவதானால் அவளின் சீவியம் எவ்வளவு நிர்ப்பாக்கியமாய் முடியும். எமக்கு இதில் அதிக சந்தேகம் ஏற்படுகின்றது. ஏனெனின் அவள் என்னிடம் அதிக அறநூல்களைக் கற்றறிந்தவளாதலாலும், தற்கால நவீன நாகரீகத்தை வெறுத்தவளாதலாலும், சைவ அனுஷ்டானங்களைப் பின்பற்றி நடப்பவளாதலாலும், இன்னும் என்னையன்றி வேறு ஆடவரைக் கனவிலும் நினைக்கமாட்டேனென்று உறுதிமொழி கூறிச் சென்றனளாதலாலும், இவ்விவாகத்திற்கு எப்படி யிசைந்தா ளென்பதை ஆலோசிக்குமிடத்து எமக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. ஏ பேய் மனமே! இவ்வித எண்ணங்களை ஏன் எண்ணுகின்றாய்? யான் அவளை மணக்க வேண்டுமென்று எண்ணினவனல்லவே. அவள் என்மேற் காதலாகச் சென்றாளேயன்றி யான் கனவிலும் அவளை விவாகஞ் செய்யவேண்டுமென்று எண்ணினவனல்லன். ஆனால் அவளின் விருப்பப்படி இவ்விவாகம் நடக்குமே யானால் எனக்கும் சந்தோஷமே. விவாகத்திற்காக அழைப்புப் பத்திரம் வந்திருப்பதால் உலக வழக்கப்படி யானும் ஓர் ஆசீர்வாதத் தந்தி

யொன்று கொடுக்கவேண்டும்,'' என்று தன் மனம் போன படி யெல்லாம் எண்ணி யெண்ணிப் பின்னும் மனத் திருப் தியடையாமல் சாய்நாற்காலிமீது படுத்துக்கொண்டு பெரிய யோசனையிலாழ்ந்திருந்தான். மணியும் கடிகாரத்தில் ஒன் று அடித்தது. ஆனால் சாம்பசிவம் போசன மருந்துவோ மென்று சிறிதுஞ் சிந்திக்கவில்லை. இன்னும் சாப்பிட வர வில்லையே யென்று தன் மகனை யழைக்கும் பொருட்டு அவனிருந்த அறைக்குள் அவனுடைய தாயார் அம்பிகை யென்பவள் வந்து பார்க்கையில், தன் மகனின் முகம் வேறுபட்டிருப்பதைக் கவனித்து, "தம்பீ! என்ன ஒரு விதமா யிருக்கின்றாய். உன் முகமானது இன்று மாறுபட் டிருக்கின்றதே! காரணமென்ன? பயப்படாமல் சொல் வாய்!'' என்றாள்.

சாம்பசிவம்:—"அம்மா! அப்படி யொரு விசேஷ மில்லை. ஆனால் ஒரு காரியத்தை யிட்டே சிறிது யோசிக் கின்றேன்,'' என்றான்.

அம்பிகை:—"மகனே! விஷயத்தைத் தெரிவிப்பாய். எனக்குச் சொல்லாமல் பின் யாருக்குச் சொல்லப்போகின் றாய்'' என்றனள்.

சாம்ப:—"அம்மா! விஷயத்தை மறைப்பதில் ஒரு வித பிரயோசனமில்லையாதலால் அதைச் சொல்லிவிடுகின் றேன்:—அதாவது முன்னர் என்னைக் காப்பாற்றிப் படிப் பித்து உத்தியோகமு மெடுத்துக் கொடுத்த எமது உத்தம புருஷராகிய சபாபதிப்பிள்ளையின் புத்திரி ஞானாமிர்தத் துக்கு விவாகம் நடக்கப்போவதாக "விவாக அழைப்புப் பத்திரம்,'' எனக்கு வந்திருக்கின்றது. இதைப்பற்றிச் சிறிது யோசித்தது மன்றி ஒருவாறு மனக்கிலேசமுமா னேன்,'' என்றான்.

அம்பி:—"மகனே! இப்பெரும் சந்தோஷச் செய்தியைக் கண்டு மகிழ்வடைவதை விட்டு இதில் மனக்கிலேசப் படவேண்டிய காரண மென்ன? ஒருசமயம் ஞானமிர்தத்தை நீ விவாகஞ் செய்யவேண்டு மென்று எண்ணியிருந்தாயோ?"

சாம்ப:—"அம்மா! தாயே! யான் அவளை விவாகஞ் செய்யவேண்டுமென்று சிறிதுஞ் சிந்தித்தவனுமல்லன்; காதல் கொண்டவனுமல்லன். ஆனால் முன்னர் யான் படிக்குங் காலத்தில் இங்கு அவளின் வீட்டில் இருந்தபொழுது அவள் என்னை மிக்க நேசித்து வந்தாள். அவளை யானும் நேசித்து வந்தேன். அவளின் நேசமானது ஈற்றில் என்மேல் காதலாகவே மாறிவிட்டது. ஒருநாள் தாய் தந்தையரில்லாத நேரத்தில் தன்னை விவாகஞ் செய்வதற்கு வாக்குப் பண்ணவேண்டுமென்று கேட்டாள். அப்படிச் செய்வது அவளின் தாய் தந்தையருக்கு அகௌரவமாயிருக்கக்கூடுமென நினைத்து அதற்கு யான் உடன்படமாட்டேனென்று மறுமொழிகூறி யிருந்தேன். ஆனால் அவள் அதை யொரு பொருட்டாக மதியாமல் எப்படியும் தான் என்னையே விவாகஞ் செய்வேனென்றும், வேறு ஆடவரைக் கனவிலும் நினைக்க மாட்டே னென்றும் மிக உறுதியாகச் சொல்லியிருந்தாள். அத்துடன் பயணம் வெளிக்கிட்ட தினத்தன்றும் தன்னை அன்புடன் இரட்சிக்க வேண்டு மென்றும் கேட்டிருந்தாள். ஆனால் தாய் தந்தையருக்கு இவ்விஷயம் ஒன்றும் தெரியமாட்டாது. எப்படியும் அவளின் விருப்பத்தைக் கேட்டு இவ்விவாகம் நடைபெறுமென்பது எனக்கு மிகச் சந்தேகத் திலிருக்கின்றது. அவளை வலோற்காரப்படுத்தி விவாகம் செய்வதில் என்னதான் பிரயோசன மிருக்கின்றது? அவளின் பிற்கால ஜீவியம் சந்தோஷமா யிருக்க மாட்டாதன்றோ? அவள்

சந்தோஷமில்லாத வாழ்வைப்பெற என் மனம் சகிக்க மாட்டாது. ஏனெனில் அவள் ஓர் நற்குணசாலி; நல்லொழுக்க முடையவள்; சமயப் பற்றுள்ளவள்; ஆனால் அவளைக் கேளாமல் இவ்விவாக ஒழுங்குகள் நடந்திருக்கின்றதென யான் இங்கே சொல்லவும் முடியாது. இதைப்பற்றியே யான் சிறிது யோசித்தேன்,'' என்றான்.

அம்பி:—''தம்பி! சாம்பசிவம்! நல்ல கதை சொன்னாய். இவ்விவாகத்தையிட்டு நீ அதிகம் யோசிக்கவேண்டிய அவசியமில்லையே. ஞானமிர்தமென்பவள் மிகவும் கற்றறிந்தவள். நல்லொழுக்கமுடையவள்; சமயப்பற்றுள்ளவள். இப்படிப்பட்டவளைத் துன்மார்க்கன் கையில் தாய் தந்தையர் தள்ளிவிடுவார்களோ? விவாக ஒழுங்குகள் நடக்குங் காலத்தில் அவளுக்கும் தெரிந்திருக்கும்தானே. ஆனபடியால் அவளின் விருப்பத்தையும் ஒருவாறு கேட்டுத்தானே யிருப்பார்கள். அவள் இணங்காவிடில் இவ்விவாக அழைப்புப் பத்திரம் வெளிவந்திருக்க மாட்டாதன்றோ? நீ சொன்ன விதம் முன்னர் உன்னுடன் மிகச் சந்தோஷமாக நடந்தபடியால் உன்னை விவாகஞ் செய்யவேண்டுமென்று பேசியிருந்தாள். ஆனால் பின்னர் மனம்மாறி யிருந்தாலென்ன? தாய் தந்தையருடைய எண்ணத்துக்கும் இசைய வேண்டுமன்றோ? ஆனபடியால் நீ இதைப்பற்றி யோசிக்க வேண்டிய அவசிய மில்லையே. விவாக விஞ்ஞாபனத்தின்படி நாம் இதைச் சுபகருமமென எண்ணி அவர்களை யாசீர்வதிக்க வேண்டுமன்றோ? விவாக தினத்தன்று ஓர் ஆசீர்வாதத் தந்தி கொடுக்கவேண்டும்'' என்று சொல்லி அவனைப்போசனத்திற் கழைத்துச் சென்றாள். சாம்பசிவம் அதிக யோசனையுடனிருந்தபடியால் அரை குறையாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பின்னரும் சாய்நாற்காலிமீது படுக்க எத்தனிக்கையில், இன்னோர் கடிதம் மேசைமேலிருக்கக்

கண்டான். "ஓகோ! இக்கடிதம் ஞானமிர்தத்தின் விவாக அழைப்புப்பத்திரத்துடன் வந்திருந்தும் என் மன வேறு பாட்டினால் வாசிப்பதற்குப் புலனில்லாதிருந்தேன்! ஏ! பேய் மனமே!" என்று சொல்லி அக்கடிதத்தைத் திறந்து வாசித்தான். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

நல்லூர்.

எனது அன்புள்ள மருமகன் சிரஞ்சீவி சாம்பசிவத்திற்கு உனது மாமனார் கனகேந்திரம்பிள்ளை அதிக வணக்கத்துடன் எழுதிக்கொள்வது பின்வருமாறு :—

உனது தந்தையானவர் நீ ஐந்து வயதாயிருந்த காலத்தில் பரமகதியடைய, நீயும் உனது தாயாரும் எனது கிருகத்திலிருக்க நேர்ந்தீர்கள். அச்சமயம் நீங்கள் சிறிது வறுமை யடைந் திருந்தீர்கள். யான் சிறிது செல்வந்தனாயிருந்தேன். எனது செல்வச் செருக்கால் யான் உங்களைக் கவனிக்காதிருந்தேன். "மாதர் சொற் கேளேல்" என்பதைச் சிறிதேனும் உணராமல் எனது மனைவியின் வாக்கைப் பொன் வாக்கென மதித்து அவளின் கோள் சொல்லுதலாலும், அவளின் வஞ்சனை மொழிகளாலும் என் தங்கையென்பதைச் சிறிது முணராமல் உனது தாயாரை ஓர் வேலைக்காரியாக நடத்திவந்தேன். இன்னும் நீ கல்வி கற்க வேண்டுமென்று உனது தாயார் மூலமாக எங்களைக் கேட்டதற்கு யாங்கள் மறுத்ததும் இன்னும் நீ பட்ட கஷ்டங்களையும் இனிமேல் சொல்வதில் என்ன பிரயோசனமிருக்கின்றது. பொதுவாக உங்களிருவரையும் மதியாமல் மிக ஏளனமாய் நடத்தி வந்தோம். அதன் பயனைக யான் தற்சமயம் அடைந்திருக்கும் நிலைமையை எப்படித்தான் சொல்வேன்! ஆ! என் சாம்பசிவம்! என் அருமைக் கண்மணியே! யான் தற்சமயம் உண்ண உடுக்க வழியின்றி உனது

கிருபையை யெதிர் பார்த்திருக்கின்றேன். எனது மகன் ஆனந்தராசாவைச் சென்னைக்கு உயர்தரக் கல்வி கற்பதற்கு விட்டிருந்ததை நீ அறிந்திருப்பாயென்று நினைக்கின்றேன். அவன் அங்கு சென்றதும் சில நாட்கள் கலாசாலையில் வாசித்து வந்தான். பின்னர் கெட்ட சினேகிதர்களுடன் கூடிக் குடித்து வெறித்துத் திரிந்ததுமல்லாமல், வேசி தாசிகளின் இல்லத்திற்கு மேகப் பழகிக் கொண்டான். ஆனால் முதலில் இவையெல்லாம் எனக்குத் தெரியவரமாட்டாது. அங்கிருந்து விடுமுறை நாட்களுக்கு ஊரில் வந்திருந்தபொழுது அவன் ஏறி ஓடும்பொருட்டு ஓர் புதிய மோட்டர் ரதத்தை 3,500 ரூபாய் கொடுத்து வாங்கியிருந்தேன். முதன் முதலாக அவனே மோட்டரைச் செலுத்திக்கொண்டு போகையில், இன்னோர் மோட்டர் ரதத்துடன் மோதுண்டு எமது ரதம் சின்னாபின்னமாகப் போய் விட்டது. அத்துடன் போதாமல் ஓர் பெண்ணையும் இடறிக் கொன்று விட்டது. உடனே நாமிருவரும் கைவிலங்கிடப் பட்டிருந்தோம். சில நாட்களுக்குப் பின் என்னைக் கைதியல்லவென்று விடுதலையாக்கி விட்டார்கள். என் மகனையும் எப்படியும் விடுதலையாக்கிவிடும் பொருட்டு ஓர் பிரபலநியாயவாதிக்கு 5,000 ரூபாய் கொடுத்துக் கடவுள் செயலால் வழக்கை வென்றோம். எனது மகன் பீ. ஏ. வகுப்பில் படிக்கிறானென்று பின்னரும் அவனிடம் ஏராளமான பணத்தைக் கொடுத்துச் சென்னைக்கனுப்பி விட்டேன். அவன் அங்கே படிக்கிறேன் படிக்கிறேன் என்று எங்களுக்கு ஆசை வார்த்தை கூறி எங்களை யனுப்பிக் கெட்ட சினேகிதர்களுடன் கூடிக் கெட்ட செய்கைகளிற் பிரவேசித்துப் பின்னர் மேக நோயால் வருந்தி ஈற்றில் ஓர் தரும வைத்தியசாலையில் இறந்துபோனான். அவன் தான் இறப்பதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பாக தன் விருத்தாந்தத்

த்தைப் பற்றி ஓர் காகிதம் விரிவாக எழுதி வைத்தியசாலை அதிகாரிகளிடம் எங்களுக்கு அனுப்பிவிடும்படி கொடுத்திருந்தான். அவன் எழுதிய கடிதத்தையும் சாட்சி செய்தியையும் வைத்தியசாலை அதிகாரிகள் எமக்கு அனுப்பியிருந்தனர். அவன் எழுதிய கடிதம் மூலமாகவே யான் அவனின் தீச்செயல்களை யறிய நேர்ந்தேன். அவனுக்காக யான் செலவழித்திருந்த தொகைக்கோர் கணக்கில்லை. ஈற்றில் அவன் என்னை ஓட்டாண்டியாக்கி விட்டான். இது மட்டுமா? என் அருமைப் புத்திரியாகிய அன்னமலரை ஆங்கிலம் கற்கும் பொருட்டு விடுதிப் பெண்பாடசாலைக்கு விட்டிருந்ததும் உனக்குத் தெரிந்திருக்கு மென்றே யான் நம்புகின்றேன். அவள் படிப்பில் மிகத் திறமை காட்டிக் கடைசியாக "யூனியர்" என்ற வகுப்பில் தேறியிருந்தாள். படித்துவருங் காலத்தில் அன்னிய நாட்டாரின் நாகரீக வலையிற் சிக்குண்டு எமது பழக்க வழக்கமெல்லாவற்றையும் தொலைத்துவிட்டாள். ஆனால் அவள்மேல் பிழை சொல்ல இடமில்லை. அதற்கு உதவியாயிருந்த நாங்களே அதற்குக் காரணர். இப்படியா யிருந்து வருங்காலத்தில் எங்கள் மகனுடைய இறந்த செய்தியையும், பணம் அழிந்து போனதையும், இன்னும் எங்களுக்கு வந்த கெடுதிகளையும்பற்றி மிக்க கவலையிலாழ்ந்து எங்கள் புத்திரி அன்னமலரின் வருங்கால நன்மையைப் பற்றி யானும் என் மனைவியுமாக யோசித்துப் பேசிக்கொண்டிருந்தோம். அதாவது "அவளின் விவாக காரியங்கள் எப்படி முடியுமோ? பணமும் இல்லையே! செல்வந்தனாயிருந்து வறுமையை யடைந்த எங்களை யார்தான் இனிக் கவனிக்கப் போகின்றார்கள்? இவளுக்குத் தோதான மாப்பிள்ளையை இனி எங்கே தேடுவது? அப்படி வந்து வாய்த்தாலும் பணமில்லாதபடியால் யார்தான் அவளை விவாகஞ் செய்ய முன்வரப் போகின்றார்கள்?

அன்னிய நாகரீகத்தால் வந்த கெடுதி இதுதானே? மற்றும் பெண் இரத்தினங்களைப்போல இனி எப்படித் தான் வீட்டு வேலைகளைச் செய்யப்போகின்றாள்? அப்படித்தான் செய்தாலும் மாப்பிள்ளையை இனி எங்கே தேடுவது," என்று இவ்வாறு அவளின் விவாக காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவள் அடுத்த அறைக்குள்ளிருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்ததை நாங்கள் கவனிக்கவில்லை. இதெல்லாவற்றையும் அவள் யோசித்து இனிமேல் உலகிலிருப்பது புத்தியல்லவென்றும், தன் தாய் தந்தையர்க்கு ஏன் கஷ்டங்களைக் கொடுக்கவேண்டுமென்றும், தன்னால் நாங்கள் ஏன் கவலை கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்து, எங்கள் வளவிலிருந்த கிணற்றிற்குள் குதித்து உயிரை மாய்த்து விட்டாள். இது செய்தியையும் அவள் ஓர் கடிதத்தில் எழுதி விட்டுச் சென்றதால் யாங்கள் அறிய நேர்ந்தோம். ஐயோ! எங்கள் புத்திரனும் போய், புத்திரியும் போய் விட்டாள். ஐயோ— என்ன பாவத்தைச் செய்தோமோ? ஆ—ஜெகதீசா! இப்படியும் விதித்தாயோ? பிள்ளைகளும் போய் செல்வமு மழிந்து, ஈற்றில் உண்ண உடுக்கவும் வழியின்றி ஓட்டாண்டியாயிருக்கின்றேன். இக்கேடுகளெல்லாம் விளைந்ததற்கு யாமே காரணராவர். ஏனெனின் கடவுள் கொடுத்த செல்வத்தை எமது செல்வமென்று கருதி ஒருவிதமான தான தருமத்தையும் செய்யாமல் மிக உலோபியாயிருந்தேன். செல்வமிருந்த காலத்தில் கடவுளைத் தன்னும் நினைத்தேனா? இதனாலன்றோ

"செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்."

(பாரதம்)

என்று ஆன்றோர்களும் கூறியிருக்கின்றனர். தற்சமயம் தான் கடவுளையும் நினைக்க வருகின்றது. உன்னையும் உன் தாயாரையும் கவனியாமல் புறக்கணித்து நடந்ததாலன்றோ ஈற்றில் இக்கதியை யடையலானேன். இனிமேல் யான் என் செய்வேன்! தெருவீதிகளிற் போய்ப் பல்லைக்காட்டிப் பிச்சை யெடுப்பதைப் பார்க்கிலும் உன்னிடமிருந்து உதவியைப்பெற்று என் காலத்தைப் போக்கலாமென நினைத்து இக்கடிதத்தை யெழுதலானேன். யான் செய்த பிழைகள் எல்லாவற்றையும் பொறுத்தருளி எங்களைக் காப்பாற்றுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன். அதிகம் எழுதவில்லை. உன்னையும் உன் தாயாரையும் பார்க்க மிக ஆவலுள்ளவர்களாயிருக்கின்றோம்.

இங்ஙனம்,
உனது மாமனார்,
கனகேந்திரன்.

இக்கடிதத்தை வாசித்து முடியவும் சாம்பசிவம் "ஓ" வென்று பெருமூச்சு விட்டழுதான். தனக்கு அவர்கள் முன் செய்த கொடுமையைப்பற்றிச் சிறிதும் அவன் சிந்திக்கவில்லை. எப்படியென்றாலும் தன்னையும் தனது தாயாரையும், தன் தந்தை யிறந்த காலத்தில் வீட்டுக் கழைத்துக்கொண்டு போய்க் காப்பாற்றிய சிறு உதவியைச் சாம்பசிவம் பெருமுதவியாக மதித்தான். இதுதான் அறிஞர்க் கழகு. இதனாற்றான் பெரு நாவலரும்,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்."

என்றருளி யிருக்கின்றனர். இவன் அழுத சத்தத்தைக் கேட்ட தாயார் அம்பிகை யென்பவள் ஓடி வந்து, "என்ன மகனே! என்ன மகனே! ஏன் அழுகின்றாய்" என்று கேட்

டாள். சாம்பசிவம், "அம்மா! தாயே! காகிதத்தை வாசித்துப் பாருங்கள்" என்று சொல்லி மிகக் கவலையிலாழ்ந் திருந்தான். அம்பிகை காகிதத்தை வாசித்து முடியவும் மீளாத் துயரமடைந்து விழுந்தழுதாள். "இப்படியும் என் அண்ணருக்கு நேர்ந்ததோ! ஜெகதீசா! இதுவும் உன்னருளோ! இருகுழந்தைகளேயும் கொண்டு சென்றயோ! இவ் வித துன்பம் வருமென்று யான் ஒருநாளும் காத்திருக்க வில்லையே" என்று பலவாறு துக்கப்பட்டாள். தன்னைப் பணிப் பெண்ணாக முன்னர் வைத்து நடத்தியதையும், இன்னும் தனக்கும் தனது பிள்ளைக்கும் அவர்கள் செய்த கொடுமையை நினைத்து அவர்களுக்கு இப்படி வந்ததுதான் நல்லதென்று எள்ளளவேனும் அவள் மனம் நினைக்கவில்லை. பின்னர் சிறிது தெளிந்து தன் மகனைப்பார்த்து, "தம்பீ! உலக வாழ்க்கையின் இரகசியங்களைக் கவனித்தாயா? எனது அண்ணர் முன்னிருந்த நிலையென்ன! தற்சமயமிருக்கும் நிலையென்ன! எல்லாம் ஈசன் செயல். நாம் நினைத்தபடி ஒன்றும் ஆகப்போவதில்லை. உலகில் இருக்கும் வரைக்கும் கெட்ட பெயர் எடாமல் நீதியாக நடப்பதுதான் முறையாகும். ஏதோ தற்சமயம் ஆண்டவன் கிருபையால் நாமிருவரும் இவ்வித நிலையிலிருப்பதற்கு என்ன புண்ணியம்தான் செய்தோமோ? ஆனால் அவர்கள் துன்பப்பட்டுக் கொண் டிருக்க நாம் சந்தோஷத்துடன் சீவிப்பது எங்களுக்கழகல்ல. முதலில் அவர்கள் எமது சுற்றத்தவர்கள். இரண்டாவது அவர்கள் எங்களை முன்னர் சிறிது காப்பாற்றி யிருந் தார்கள். அதை மறந்து போகாமல் நாம் தற்சமயம் அவர்களுக்குதவி செய்யவேண்டும்" என்று அம்பிகையானவள் தன் மகனுக்குச் சொன்னாள்.

சாம்பசிவம்:—"அம்மா தாயே! யான் சொல்ல வேண்டுமென்று நினைத்தவற்றைத் தாங்களே முன்னுக்குச்

சொல்லிவிட்டீர்கள். 'எமது சுற்றத்தார்கள் வருந்த நாம் இங்கு சுகமடைவதென்றால் எம்மை மானிட செனமமென்று எப்படி யழைக்கலாம். இனிமேல் ஒருவர் தீமை செய்தாலும் நாம் அதற்கு நன்மையே செய்யவேண்டும். அது போல அவர்கள் எங்களுக்குச் செய்த தீமையை நாம் மறந்து, அவர்களுக்கு எங்களாற் கூடிய உதவியைச் செய்ய வேண்டும். இதையிட்டே முதற்பாவலரும்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

என்று பாடியிருக்கின்றனர். இனி உலகில் தாம் தாம் செய்த வினையைத் தாமே அனுபவிக்க வேண்டும். ஆனால் நாம் எங்கள் கடமையைச் செய்வதில் பின்னிற்கக்கூடாது. நாளைவிட்டு மற்றை நாளைக்கு நூறு ரூபாயை முன்னுக்கு அனுப்பிவிடுவோம்" என்றான்.

அம்பிகை :—"தம்பீ! மிகவும் நல்லது. இருவர் மனமும் ஒரே மனதாய் வந்ததையிட்டு யான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். "எல்லாம் அவன் செயலேயாகும்," என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

அம்பிகை அவ்விடத்தை விட்டகன்றதும் சாம்பசிவம் எழுந்துபோய்க் கை கால் முகங் கழுவி மாலைச் சந்தியாவந்தனத்தை முடித்தான். பின்னரும் ஓர் நாற்காலி மீதுட் கார்ந்துகொண்டு ஞானாமிர்தத்தின் விவாக கருமங்கள் எப்படி நடைபெறுமென்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். "ஏ—பேய் மனமே! என் இவ்வித எண்ணங்களைக் கொள்கின்றாய்? விவாகம் சிறப்பாய்த்தானே நடைபெறும். யான் என் இதிற் சந்தேகங்கொள்ளவேண்டும்? யான் விவாகம் செய்யவேண்டுமென்று நினைத்திருந்தேனாகில் பல எண்ணங்களுக்காளாகலாம். விவாக தினமும் வருகிற புதன்கிழமையாதலால் அன்று காலமே தபாற் கந்

தோர் சென்று ஓர் ஆசிர்வாதத் தந்தி கொடுக்கவேண்டும்'', என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு வேறு அலுவல்களில் தன் புலனைச் செலுத்தினுன்.

மேலும் திங்கட்கிழமை காலமே சாம்பசிவம் தன் காலைக் கடன்களெல்லா வற்றையும் முடித்துக்கொண்டு தபாற்கந்தோருக்குச் சென்று தன் மாமனுர் கனகேந்திரம் பிள்ளைக்கு நூறு ரூபாய் அனுப்பிவிட்டான். அத்துடன் அவருக்கு ஓர் காகிதமும் எழுதியிருந்தான். அக்கடிதத்தில் தானும் தனது தாயாரும் அவருக்கு நேர்ந்த இடையூறுகளை நினைத்துப் பெரிய அனுதாபப்படுகிறதாகவும், இனிமேல் சென்ற கருமங்களை யோசிப்பதில் பிரயோசனமில்லையென்றும், இன்னும் தானும் தனது தாயாரும் கூடிய சீக்கிரத்தில் ஊருக்கு வர யோசித்திருப்பதாகவும் இன்னும் மன ஆறுதலான மொழிகள் வரையப்பட்டிருந்தன.

மேலும் ஞானுமிர்தத்தின் விவாக தினத்தன்று சாம்பசிவம் தான் முன் தீர்மானித்தபடியே தபாற் கந்தோர் சென்று "கங்கையைத் தரித்த கங்காளன் அருளால் மணமகன் ஜீவரத்தினமும் ஞானுமிர்தமும் நீடூழி வாழ்க" என ஓர் ஆசிர்வாதத் தந்தி சபாபதிப்பிள்ளைக்கு அனுப்பிவிட்டு வீடு திரும்பலானுன். வீடு சேரும் வரைக்கும் ஞானுமிர்தத்தின் விவாக கருமத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு வந்தான். சந்தேகமே அவன் மனதில் தோன்றியது.

இவ்வத்தியாயத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அது என்னவெனில் "சுற்றத்தாரைக் காத்தல்" என்பதைப் பற்றியதே. அதாவது சுற்றம், இனம், கிளை, உறவு என்பன ஒரு பொருட் சொற்கள். இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் சுற்றத்தாருடைய உதவி வேண்டியிருக்கின்றது. நாம் ஓர் கஷ்டத்திலிருக்கும் பொ

போது நமக்காக வேண்டிய உதவியைச் செய்து நம்மைக் காப்பவர் யாவர்? சுற்றத்தார்களன்றோ? நம்முடைய வீட்டில் ஓர் சுபகருமம் நடக்குங் காலத்தில் அதற்காக வேண்டிய கடமைகளைச் செய்து அச்சுப கருமத்தை இனிது நடைபெறச் செய்பவர் யாவர்? சுற்றத்தார்களன்றோ? இன்னும் நம்முடைய வாழ் நாட்களிற் சம்பவிக்கும் சுக துக்கங்களில் முதன்மையாக ஈடுபடுவது யாவர்? சுற்றத்தார்களன்றோ? இதனால் எச்சீமானுக்கும் சுற்றத்தாருடைய உதவி வேண்டியிருக்கின்றது. இனிமேல் இச்சுற்றத்தார்க்குள் ஒருவன் பெரிய தனவந்தனுயிருக்கக்கூடும். இன்னொருவன் மிக ஏழையாகவு மிருக்கக் கூடும். இப்பேர்ப்பட்ட தனது ஏழைச் சுற்றத்தவனை • அத்தனவந்தன் காத்து இரட்சிப்பதன்றோ முக்கிய கடமையாகும். இதனாலன்றோ

"செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்"

என்றும்

"சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்" என்றும்

"நப்போல் வளை" என்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

ஆனால் தற்காலத்தில் எம்மவருட் பெரும்பாலார் தாம் செல்வமடைந் திருக்குங் காலத்தில் இறுமாப்படைந்து தம் மினத்தவரைச் சிறிதேனும் கவனிக்கின்றார்களில்லை. தம் முறவினர் பசியினால் வருந்த உலகில் புகழைக் கருதிப் பெரிய தானஞ் செய்கின்றனர். இதனால் உலகில் தாமடையும் இழிவைச் சிறிதேனும் உணர்கின்றார்களில்லை. இன்னுஞ் சிலர் தம்மினத்தவர் பசியினால் வருந்தத் தாம் அறுசுவை யுண்டியுடன் உண்டு இன்புற்றிருக்கின்றனர். ஆனால் இப்பேர்ப்பட்டவர்களின் செல்வம் எப்படி வந்து சேர்ந்ததோ அவ்விதமே இல்லை யென்று சொல்லத் தக்கதாய் அழிந்துவிடும். இதனாலன்றோ

"கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்"—(திரிகடுகம்)

என்று ஆன்றோர்களும் கூறியிருக்கின்றனர். ஆகவே

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திருக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி யேகம்பனே."

என்று பட்டினத்தடிகள் கூறிய வண்ணம் செல்வமோ நிலையற்றது. நாம் சாகும் பொழுது இச்செல்வத்தைக் கொண்டுபோக மாட்டோமென்று நினைத்து அறங்களைச் செய்யவேண்டும். அவற்றினும் சுற்றத்தாரைக் காப்பதே மிகப் புண்ணிய தருமமாகும், அற்ப பிராணியாகிய காகமானது ஓர் சிறு உணவைக் காணுமிடத்துத் தன் இனத்தாரைக் "கா—கா" என்னும் தன் சத்தத்தால் வரவழைத்து எல்லாம் ஒன்று சேர்ந்து உண்பதென்றால் பகுத்தறியும் மானிட சென்மமாகிய நாம் எப்படி யிருக்கவேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இவ்வண்ணமே ஒவ்வொருவரும் தம்மினத்தைத் தழுவி நடந்தால் நமது நாட்டில் வறுமை யென்பதே நிகழமாட்டாது. இதனால் அன்னியரைக் காக்கக்கூடா தென்று யாம் இங்கே சொல்லவாவில்லை. ஒருவன் தன் ஏழைச் சுற்றத்தவனைக் காத்துக்கொண்டு வருவானாகில் அன்னியனையும் சகோதரமாகவே நடத்தி அவனையும் இரட்சிக்கவேண்டுமென்ற எண்ணம் தானாகவே வந்து விடும். இன்னும் பிறர் செய்த குற்றத்தை நாமெடுத்துப்பாராட்டாது நாம் நன்னிலையி லிருக்கும்போது அக்குற்றம் செய்தோர்க்கே நாம் நன்மை செய்யவேண்டும். இச்

செய்கைதான் பெரியோரால் வேண்டப்படுவதும் வேத வாக்கியமும். இதனாற்றான் முதற்பாவலரும்,

" இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

என்றருளி யிருக்கின்றனர். உதாரணமாக இவ்வத்தியாயத்தில், சாம்பசிவம், தன் மாமனார் தனக்குச் செய்த தீமையை மறந்து அவருக்கு நன்மையைச் செய்வதற்கு முன் வந்தமை வாசகர்கள் நன்றாக உணர்ந்து கொள்வார்களென்றே நம்புகின்றோம். இச் செய்கை அவனுடைய பேரறிவைக் காட்டுகின்றது.

---

## பதினாறும் அத்தியாயம்.

"காவல்தானே பாவையர்க் கழகு."

"ஆ! என் மனம் பதறுகின்றதே! என் உடம்பு நடுங்குகின்றதே! கை கால்கள் சோர்வடைகின்றனவே! ஆகா! விவாக உற்சவங்கள் ஒருபுறம் நடக்க யான் இப்பெண்ணை ஒருவர் உத்தரவின்றியும் கூட்டிக்கொண்டு வந்து விட்டேனே! இவளின் தாய் தந்தையர் இப்போ என்ன பாடு படுவார்கள்! இவளைக் காணவில்லை யென்று கேணி, கிணறு, மூலை, முடக்கு முதலிய இடங்களெல்லாம் தேடிப் பார்ப்பார்களே! பின்வரும் காரியங்களை யோசிக்காமல் அவளின் பரிதாபமான வேண்டுகோளுக்கிணங்கி அவள் எண்ணப்படியே, விவாகம் நடைபெறுவண்ணம் வீட்டை விட்டு வெளியே கொண்டு வந்து விட்டேன்! யானோ அவர்கள் வீட்டில் வேலை செய்யும் ஓர் ஏழைப் பணிப் பெண். இப்பெண்ணினுடைய பரிதாபமான நிலையைக் கண்டு

அவள் வேண்டுகோளுக் கிணங்கி இவ்வேலையைச் செய்யத் துணிந்துவிட்டேன்! இவளின் தாய் தந்தையர் தற்சமயம் தேடிக் கொண்டிருப்பார்களே! எல்லாம் என் சூழ்ச்சியென்று விளங்கிக் கொள்ளுவார்களோ தெரியவில்லையே," என்று பல எண்ணங்கள் கமலத்தின் மனதில் தோன்றின. அவளுக்கோ என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. ஏறக்குறைய இருவரும் ஒரு மைலுக்கு நடந்து வந்து விட்டார்கள். ஆனால் கமலத்துக்கோ அதிக யோசனை யேற்பட்டுவிட்டது. சுறுசுறுப்பாய் நடந்துவந்த அவளின் கால்கள் பின்வாங்கின; தேகம் பதறத் தொடங்கிற்று; கைகள் அயர்ந்து போயின; சிறிது நேரத்தால் நடக்க வியலாமல் கீழே விழுந்து மயக்கமானாள். இதைக் கண்ட ஞானுமிர்தம் "ஐயோ—சிவமே! இதுவும் உன்னருளோ? முதலில், யான் எனது விவாகத்தைக் குழப்புவதற்கு நாலைந்து நாட்களாக அதிக யோசனை செய்து ஈற்றில் இக் "கமலம்" என்னும் மனுஷியிடம் என் உள்ளக் கிடக்கையை வெளிவிட்டு என்னை எப்படியும் விவாக தினத்தன்று வீட்டிலில்லாதபடி செய்யவேண்டுமென்று கேட்டேன். பலவிதமாயேனும் இம்மனுஷி எனக்குப் புத்தி கூற, யான் அதற்குச் சம்மதியாமல் என்மேற் கிருபைகூரும்படி வேண்டினேன். என் பரிதாபமான நிலையைக் கண்டு என் எண்ணத்திற்கு இம்மனுஷியு மிசைந்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி இருவரும் ஜன்னல் வழியாகக் குதித்து இதற்கென முன்னர் ஆயத்தப்படுத்தி யிருந்த வேறு வழியால் வெளிவந்து இவ்வளவு தூரம் வந்து சேர்ந்தோம். ஆனால் தற்சமயம் இம்மனுஷிக்கு மயக்கம் வரவேண்டிய காரணமென்னவோ? நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததுவே. "ஒருவருக்கும் பேசாமல் என்னைக் கூட்டிவந்ததற்காக என் தாய் தந்தையர் என்ன குற்றத்தைச்

சுமத்தப் போகின்றார்களோ" என்பதுதான் இம்மனுஷிக்கு இடைநடுவில் பல எண்ணங்களைக் கொடுத்து இவ்வித மயக்கத்தை யுண்டாக்கியது போலும். "யான் இந்நேரத்தில் என்னதான் செய்யமுடியும்," என்று பலவித யோசனைகள் ஏற்பட்டாலும் கமலத்தைத் தேற்ற வேண்டு மென்று எண்ணங் கொண்டவளாய், "அம்மா கமலம்! தாயே! தற்சமயம் தங்களுக்கு வேண்டியது யாது?" என்று கேட்டாள். யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. ஞானமிர்தம் மிகப் பதறினாள். என்றாலும் மனத்தைச் சோரவிடாமல் பின்னும் "அம்மா! கமலம்!" என்றழைக்க ஒருவித மறுமொழியும் கிடையாததால் முகத்தைத் தடவிப் பார்த்தாள். வியர்வை வெளிப்பட்டு வருவதைக் கவனித்தாள். உடனே தன் முந்தானையால் அவளின் வியர்வையைத் துடைத்துக் காற்று வரும்படியாக அம்முந்தானையை விசிறியாகப் பாவித்தனள். சில நிமிஷங்கள் செல்லத் "தண்ணீர்" என்ற வார்த்தை ஞானமிர்தத்தின் காதிற் கேட்டது. இம்மொழியைக் கேட்டதே ஞானமிர்தம் சிறிது தெளிந்தாள். ஆனால் அச்சமயத்தில் ஞானமிர்தம் தண்ணீருக்கு எங்கேதான் போகமுடியும்? நேரமோ சுமார் பத்து மணியிருக்கும். இதைவிடப் பாதை தானும் தெரியவிடாதபடி இருளானது எங்கும் பரவியிருந்தது. அக்கசையிருளின் கண்ணே ஞானமிர்தம் எப்படித்தான் போவாள்? ஐயோ—பாவம், என் செய்வாள்! பின்வருமாறு யோசிக்கலானாள்:—"ஜெகதீசா! இதுவும் உன் சோதனையா? யான் எண்ணிப் புறப்பட்டு வந்தது ஒன்று; தற்சமயம் நடப்பது இன்னொன்றாயிருக்கின்றது. என் காதலா! சாம்பசிவம்! இந்நேரத்தில் என்னை யிரட்சிக்க மாட்டாயா? உன்னை நினைத்தபடியாலன்றோ யான் இவ்வித கஷ்டங்களுக்குள்ளானேன்? எப்படியும் யான் உன்னை மறக்கவே மாட்

டேன். ஏ! பேய் மனமே! இந்நேரத்தில் நீ என்ன யோசிக்கின்றாய்? என் எண்ணத்திற் கிசைந்து என்னை இன்று வீட்டினின்றும் வெளி கிளம்புவதற்கு உதவிபுரிந்த கமலத்திற்கு யான் என்னவிதப்பட்டும் தண்ணீர் கொண்டுவர வேண்டும்," என்று தீர்மானித்தவளாய்க் கமலத்தைப் பார்த்து, "அம்மா கமலம்! இவ்விடத்திற்றானே இருந்து கொள்ளுங்கள். யான் எங்கேயாகிலும் சென்று அதிசீக்கிரத்தில் தண்ணீர் கொண்டு வருகின்றேன்" என்று அவளுக்குக் கேட்கும்படியாகச் சொல்லி அவளைக் கட்டிப் பிடித்து மெதுவாக நடக்கச் செய்து ஓர் பக்கமாகப் படுக்க வைத்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

"ஆ—சிவமே! இதுவும் உன்னருளோ? இந்தக் கசை யிருளின் கண்ணே யான் எங்குதான் செல்லுவேன்! வழியும் தெரியவில்லையே! முன்னொரு நாளாகுதல் இவ்வழியால் வந்தறியேனே! நடக்கவும் பயமாயிருக்கின்றதே! வழியில் திருடர் துஷ்டர் முதலானோர் யாருமிருப்பார்களோ? அதுவு மறியேனே! யாரைத்தான் இந்நேரத்தில் உதவிக்கு வேண்டுவேன்? ஆ—சாம்பசிவா! என் அருமைக் காதலா! நீ என்னை இவ்விடத்தில் வந்து இரட்சிக்க மாட்டாயா? ஜெகதீசா! இதுவுன் சோதனையோ? கருணாகரா! சடைமுடியோனே!

"என் செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன் செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன் செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே."

என்ற வண்ணம், இனித் தெய்வமே! உன்னையன்றி இவ்வேழைப் பெண்ணுக்கு யார்தான் உதவி? எப்படியும் கமலத்துக்குத் தண்ணீர் கொண்டு போகவேண்டும். யாருடைய வீட்டுக்குத்தான் போவது? இதைவிடத் தெருப்

*படலைகளெல்லாம் பூட்டப்பட்டிருக்கின்றனவே! யான் என் செய்வேன்!'' என்று பலவித எண்ணங்களுடைய வளாய்ப் பெண்களுக்குரிய இயற்கையான பயத்துடன் மெல்ல மெல்ல நடந்து கொண்டுவந்தாள். இப்படியாக வரும்பொழுது ஓர் பெரிய கல்வீடொன்றைக் காணநேர்ந் தாள். வீட்டுக்கு முன்பாக—அதாவது தெரு வோரமாக ஓர் சிறு தலைவாசல் கட்டப்பட்டிருந்தது. அத்தலைவாசலை நோக்கி வருகையில் யாரோ நடந்து வரும் காலடிச் சத்தம் அவள் காதிற் கேட்டது. திடீரென இரு ஆடவர் வரு வதைக் கண்டாள். அவர்களைக் கண்டதும் மிக நடுங்கினாள். வந்தவர்கள் யாவரெனில் குடித்து வெறித்துத் திரிபவரும் இன்னும் கெட்ட செய்கைகளிற் பிரவேசிக்கும் சண்டாள ராவர். இனிமேல் அங்கே யிருந்த கல் வீட்டில் அச்சம யம் குடியிருப்பவர்கள் கிடையாது. ஏனெனில் சொந்தக் காரர் "கொழும்பு" என்னும் நகரில் வசிப்பவர்கள். கொ ழும்பிலே முயற்சி பார்ப்பவர்களாகையால் அனேகமாய் இங்கு வருவது கிடையாது. இடையிடையே சில வாரங் கள் மட்டும் வந்து இவ்வீட்டில் தங்கி நின்று போவார்கள். அவர்கள் கொழும்பில் இருக்குங் காலத்தில் இவ்வீடு தனி மையாகவே யிருக்கும். இது விபரமெல்லாம் மேற்சொன் ன துஷ்டர் களிருவருக்கும் நன்றாகத் தெரியும். இத்துஷ் டர்கள் குடித்து வெறித்துவிட்டுச் சில சமயங்களில் இக் கல் வீட்டுக்கு முன்பாக விருக்கும் தலைவாசலின் கீழ் வந்து படுத்துத் தூங்குவார்கள். அன்றும் நன்றாக அன்னிய நாட்டாரின் குடிவகைகளை யருந்தி மிக உல்லாசமாக ஆடிப் பாடிக் கொண்டு தெரு வீதிவழியே வரும்பொழுது தற் செயலாய் இத்தலைவாசலின் கீழ் வர நேர்ந்தார்கள்.

*படலைகளென்பது தெருவாசற் கதவுகளையே குறிக்கின்றன.

மேலும் இத்துஷ்டர்களைக் கண்டதும் ஞானமிர்தம் மிகப்பயங்கரமாய்த் திகைத்து நின்றாள். அச்சமயம் இருட்டாயிருந்த போதிலும் சாதாரணமான ஆகாய வெளிச்சம் காணப்பட்டது. ஞானமிர்தத்தைக் கண்ட துஷ்டர்களி லொருவன், "அடே *மச்சான்! யாரோ ஓர் பெண்ணின் உருவம் தோன்றுகின்றது. அத்துடன் மிக வாலிபமாகவும் தோன்றுகின்றாள். கிட்டவாடா அவள் யாரென்று கேட்போம்" என்று சொல்லிக்கொண்டு இருவரும் கிட்ட நெருங்கினார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்து (மெல்ல) "அடே! மச்சான்! இன்று எங்கள் பாடு நல்லதிட்டம் தான். நீ ஒன்றும் பேசாதே யான் அவளுடன் மெதுவாக வார்த்தை யாடுகிறேன்," என்றான். மற்றவன் "சரி—ஆகட்டும்" என்றான். முந்தியவனின் பெயர் கோபாலன். பிந்தியவனின் பெயர் அண்ணாமலை. உடனே கோபாலன் ஞானமிர்தத்தை நோக்கிப் "பெண்ணே! நீ யார்? இந்நேரத்தில் நீ இவ்வழியால் வரவேண்டிய காரணமென்ன?" என்று கேட்டான். ஞானமிர்தம் (மிகப்பயந்தவளாய்) அவர்களைப் பார்த்து, "எனது அண்ணமாரே! யான் இருப்பது நல்லூர். எனது சுற்றத்தாருள் ஒருவரைக் காணும் பொருட்டு எங்கள் வீட்டிலிருந்த "கமலம்" என்னும் வேலைக்காரியுடன் வெளிக்கிட்டு வந்தேன். வழிநடுவில் அப்பெண்ணுக்கு மயக்கமேற்பட்டு மூர்ச்சையாய்க் கிடக்கின்றாள். அவளின் மயக்கத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தண்ணீர் எடுக்க இவ்வழியால் வந்தேன்; உங்களைக் கண்டேன். ஆனதால் என்மேல் கிருபைகூர்ந்து ஏதாகிலும் ஓர் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பீர்களா

*குடிவெறியின் உற்சாகத்தால் "மச்சான்" என்றழைத்ததேயன்றி இருவரும் இனத்தவர்களல்லர்.

கில் அதிக புண்ணியம் கிடைக்கும்,'' என்று பணிவாய்ச் சொன்னாள்.

கோபாலன்:—"பெண்ணே! உனக்கு விவாகமாய் விட்டதா ?'' என்று கேட்டான்.

ஞானமிர்தம்:—அவனைப்பார்த்து, "தாங்கள் அதைப் பற்றி விசாரிக்க வேண்டிய அவசியமில்லையே. தண்ணீர் எடுத்துக் கொடுக்க முடியுமாயின், தய்வு செய்யுங்கள்; அல்லாவிடில் யான் வேறு எங்கேயாகிலுஞ் சென்று தண்ணீர் கொண்டு வரவேண்டும்,'' என்றாள்.

கோபா:—"தண்ணீராவது—கிண்ணீராவது! யான் கேட்டதற்கு மறுமொழி சொல்லு'' என்றான். இதற்குள் அண்ணாமலை அவளைப் பார்த்து "அடீ—சிறுக்கி! விசாரிக்கவேண்டிய அவசியமில்லையே யென்று மறுமொழி கூற உனக்குத் தத்துவம் எப்படி யுண்டானது? கேட்டதற்கு மறுமொழி கூறுவாய்! அல்லாவிடில் என்ன நடக்குமென்பதைப் பார்,'' என்று மடிக்குள் வைத்திருந்த கத்தியை விரித்துக் காட்டினான்.

ஐயோ! பாவம்! ஞானமிர்தம் என் செய்வாள். "ஜெகதீசா! இதுவும் உன் சோதனையா? இத்துஷ்டர்களின் வலையிற் சிக்கிக் கொண்டேனே! இவர்களைப் பார்க்குமிடத்துப் பழிபாவத்துக் கஞ்சாத மூர்க்கர்களா யிருக்கின்றார்கள் போலத் தோற்றப் படுகின்றதே! யான் என் செய்வேன்! இவர்களினின்றும் எப்படித் தப்புவது?'' என்று யோசித்து என்ன செய்வதென்றும் ஒன்றும் தோன்றாதவளாகி மிகப் பயந்து பின்வாங்கி நின்றனள். இதற்கிடையில் கோபாலன், "அடீ! பெண்பாவாய்! என்ன யோசிக்கின்றாய்? யாம் சொல்லும் எவற்றிற்கும் இணங்கி வரவேண்டும். இதற்கு என்ன மறுமொழி கூறப்போகின்றாய்? சீக்கிரம் சொல்'' என்று அவளின் கைகளைப் பற்றிப்

பிடிக்க நெருங்கினன்.

ஞான:—"அடே பாவிகள்! என்னைக்கிட்ட நெருங்காதீர்கள். யான் உங்களுடன் என்ன தொந்தரவுக்கு வந்தேன்? உங்களைப் போலொத்த ஆடவர்கள் இப்படிப்பட்ட கேள்வியை யென்னிடம் கேட்பது அழகல்ல. நீங்கள் பெண் சகோதரத்துடன் பிறக்கவில்லையா? உங்கள் சகோதரியை இன்னொருவன் இப்படித் துன்புறுத்த விட்டுவிடுவீர்களா? அதுபோல என்னையும் உங்கள் தங்கை போலப் பாவித்து எனக்குத் தற்சமயம் வேண்டிய உதவியைச் செய்து விடுங்கள்" என்றாள்.

கோபா:—"அடீ—பெண்ணே! என்ன ஞானங்களெல்லாம் இங்கே பிளக்கின்றாய்? எங்களை யாவரென்று தெரியுமா? மரியாதையாகப் பேசு! எப்படியும் உன்னை விட்டுவிட்டுப்போக மாட்டோம். யாம் சொன்னபடி நடக்க வேண்டும்! அல்லாவிடில்—பார்! இங்கே—இக்கத்தியால் உன் உயிரை மாய்த்து விடுவோம்," என்றான்.

ஞானமிர்தம் நடுநடுங்கி, "ஐயோ மோசம் வரப்போகின்றதே! இவர்களின் வாக்கு வாதங்களிலிருந்து இத்துஷ்டர்கள் என்மேல் மையல் கொண்டிருக்கின்றார்களென நன்றாகத் தெரிகின்றதே! என் கற்பை எப்படிக் காக்கப் போகின்றேன். ஜெகதீசா—யான் என் செய்வேன்!" என்று மனக்கலக்கத்துடன் கடவுளை நினைத்துக்கொண்டு அத்துஷ்டர்களைப் பார்த்து "என் அண்ணமாரே! யான் தங்களுடன், ஒரு சச்சரவுக்கும் வரவில்லையே! ஆனதால் என்னைத் தொந்தரவு செய்யாதேயுங்கள்" என்று வணங்கி நின்றாள்.

அண்ணமலை:—"அடீ! பெண்பாவாய்! சொன்னவற்றை யெல்லாம் திருப்பித் திருப்பி ஏன் கூறுகின்றாய்? யாங்களுமோ நினைத்ததை முடியாமல் விடுகிற ஆட்களல்ல. ஆனதால் பெண்ணே! நேரத்தை வீணே போக்காதே.

கையில் வைத்திருக்கும் கத்தியைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்,'' என்றான்.

ஞான:—''அடே சண்டாளர்காள்! உங்களுக்கு வெட்கம் சிறிதேனு மில்லையா? ஓர் பெண்ணை இப்படியாக வருத்துவது உங்களுக்கழகா? உங்களை ஆண்மக்களென்று சொல்வதெப்படி? துரோகிகாள்! இத்தீச் செயலுக்குடன்படுவார்களு முண்டோ? வீணாக என்னுடன் ஏன் வாதாடுகின்றீர்கள்? பெண்ணைக் கண்டால் பேயுமிரங்கு மென்றல்லோ பழமொழியும். ஆனால் நீங்கள் அதற்கு மாறாக நிற்கின்றீர்களே! உங்களுக்கு இது தருமமல்ல. இது நீதியல்ல. இது முறையல்ல. ஆனதால் என்னுடன் வாதாடாமல் என்னை மன்னித்துவிடுங்கள்.'' என்றாள்.

கோபா:—''அடீ! சின்னஞ் சிறுக்கி! மிக்க மரியாதையாகப்பேசு! ''சண்டாளர்'' என்று எம்மைத் துணிவாய்ச் சொல்ல உனக்குத் தத்துவம் கொடுத்தவர் யாவர்? ஓர் பெண்ணைக் கண்டு நாம் பயந்து விடுவோமென்று நினைக்கின்றாயா? நாம் நினைத்த காரியத்தை முடியாமல் போக மாட்டோம். நீ எங்கள் கேள்விக் கிசையாது மறுக்குங் காலத்தில், பார்! இதோ—இக்கத்தியால் உன் கழுத்தை இரண்டு துண்டமாக வெட்டி யெறிந்து விடுவோம். இனி ஒன்றும் மூச்சுக் காட்டாதே.'' என்று சொல்லிக்கொண்டு ''அடே மச்சான்! உன் கத்தியையு மெடுத்து விரித்து வைத்துக் கொள்'' என்று அண்ணாமலைக்குச் சொன்னான்.

''ஐயோ! என் தெய்வமே! இதுவும் உன்னருளோ! இந்நேரத்தில் இப்பாவிகளின் கையிலகப்பட்டுக் கொண்டேனே! ஏதும் பெலத்துப் பேசினாலும் அவர்கள் வைத்திருக்கும் கத்திக்கிரையாகி விடுவேன் போலத் தோன்றுகின்றது. இப்பாவிகளோ என் மீதில் மையல் கொண்டிருக்கின்றார்கள். தாம் நினைத்த காரியத்தை முடியாமல் விடமாட்

டார்கள் போலும் தோன்றுகின்றது: இச்சமயத்தில் எனக்கு யார்தான் உதவி செய்ய இருக்கின்றார்கள்? எனது கற்புக்குப் பங்கம் வரப்போகின்றதே! ஐயோ! முக்கியமாகப் பெண்களுக்குக் கற்பன்றோ ஆபரணமாகும். இக்கற்பு அழிந்துவிட்டால் பின் உயிருடனிருந்துதான் என்ன பிரயோசனம்? கற்பை யழித்து விட்டு உயிருடன் இருப்பதைப் பார்க்கிலும் இறந்து விடுவதே மிக்க நலம். ஆனால் இங்கே இறந்து விடுவதென்றாலும் இத்துஷ்டர்கள் விடமாட்டார்களே! இதற்கு யான் என்ன வழியைத் தேடுவேன்! யாரை நொந்து அழுவேன்! பொன்னம்பலவா! காசி விசுவநாதா! இதுவும் உன் செயலோ? என் காதலா! சாம்பசிவம்! நீ இப்போ எவ்விடத்திலிருக்கின்றாயோ? உன்னை விட்டு இவ்வூர் வந்தபடியாலன்றோ இத் துன்பங்களுக் காளானேன்? தற்சமயம் நீ இவ்விடத்திலிருப்பாயேயாகில் யான் என்ன பாக்கியம் பெற்றிருப்பேன்! எனது கற்பை இச் சமயம் எப்படிக் காக்கப் போகின்றேன்.

"கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃதென்னார் பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப்பட் டார்."—(நீதிநெறி விளக்கம்)

என்ற வண்ணம் இச்சண்டாளர்கள் காமமென்னும் நோயாற் பீடித்திருக்கின்றமையால் ஒருவித பழிபாவத்திற்கு மஞ்சாமல் நிற்கின்றனர். இனிமேல் கற்பின் மகிமையால் எவ்வித தீங்குகளி னின்றும் தப்பலாமெனஃ அறநூல்கள் கூறுகின்றனவே.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்ற திருவள்ளுவர் வாக்குக் கிணங்கப் பிற தெய்வங்களைத் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனையே தெய்வமென்




ஞானமிர்தம் தன் கற்பின் வலிமையால் இரு துஷ்டர்களையும் கொன்று விட்டுக் கமலத்திற்குத் தண்ணீர் எடுக்கச் செல்லல். 302-ம் பக்கம் பார்க்க.

று நாள் வீதம் பூசித்து வருபவள் "பெய்" என்றவுடன் மழை பொழியுமாயின் கற்பின் மகிமையைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? அப்படியாயின் எனக்குத் தெய்வம் எனது காதலன் சாம்பசிவமன்றோ? யான் வேறு ஆடவரை நினைக்காமல் அவரையே நினைத்தேனாகையால் அவரே எனக்குத் துணைவர். அவரே எனக்குத் தெய்வம். வேறொருவரையும் நினைக்காமல் யான் ஒரே மனதாய் மெய்யாக அவரை நினைத்தவளாகில் யான் இச்சமயம் இச் சண்டாளர்களினின்றும் தப்புவிக்கவேண்டும். அப்போதுதான் என்னைக் கற்புடையவளென்று சொல்லக்கூடும். பண்டைக் காலத்தில் சற்புடையோராகிய சாவித்திரி, சீதை, தமயந்தி முதலானோர் தங்கள் கற்பு நெறியால் அனேக காட்சிகளை உலகுக்குக் காட்டினார்களே! கீசகன் திரௌபதை மீதில் வைத்த ஆசையால் என்ன கதியை யடைந்தானென்று படித்திருக்கின்றோமே! தமயந்தியானவள் பாம்பின் வாயிலிருந்து ஓர் வேடனால் விடுவிக்கப்பட்டபொழுது அவளின் அழகைக் கண்ட அவ்வேடனானவன் அவள் மேல் மோகங்கொண்டு அவளை யணைய வரும்பொழுது தமயந்தியானவள் கோபமுகத்துடன் அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவ்வேடனானவன் பிடி சாம்பலாய்ப் போனானென்று நைடதத்தில் யான்படித்த

> வெய்ய வரவின் பகுவாயின் விடுத்த மடமானெழிலைநோக்கி
> மையல்கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற்றடக்கை வயவேடன்
> றெய்யின்முலைமேற் புல்லுதற்குத் தொடரத் துஞ்சாவருங்கற்பின்
> றையனமுனிந்து நோக்குதலுஞ் சாம்பராயிற்றவனுடலே."

என்ற செய்யுளும் எனக்கு நினைப்பூட்டுகின்றதுவே. ஆனதால்

> "நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
> கொண்ட கருவளிக்குங் கொள்கைபோ—லொண்டொடீ

போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்"—(நல்வழி)

என்ற வண்ணம் இப்பாதகர்களுக்கு ஒரு சமயம் நாசகாலம்தான் வந்து விட்டதோ? என்ன வழியால் யான் தப்பித்துப் போகலாம். பெண்கள் கல்வி கற்றிருந்தால் கற்பைக் காக்கலாமென்று சொல்லுகின்றார்களே! அப்படியாயின் யான் அதிக கற்பிலக்கண நூல்களை வாசித்திருக்கின்றேனே! என்னவித உபாயங்களை யான் இச்சமயத்தில் தேடுவேன்," என்று பலவித எண்ணங்களை யோசித்தவளாய் நிற்கையில் அவள் மனதில் ஓர் யுத்தி திடீரென ஏற்பட்டது. உடனே ஞானாமிர்தம், "ஏதோ கடவுள் செயலால் என் மனதில் ஓர் யுத்தி ஏற்பட்டிருக்கின்றது. முதலில் இவர்களைச் சோதித்துப் பார்ப்போம். சித்தியடையாவிடில் வேறு உபாயங்களைத் தேடுவோம்," என்று நினைத்துக்கொண்டு, அத்துஷ்டர்களைப் பார்த்து, "அன்பர்காள்! யான் சொல்லப்போகும் வார்த்தைகளைத் தாங்கள் சிறிது கேட்பீர்களானால் யான் உங்கள் எண்ணத்திற் கிசைய ஓர் வித தடையுமில்லை" என்றாள். இதைக் கேட்ட கோபாலனும் அண்ணாமலையும் மிகவும் சந்தோஷமானார்கள். இப்போது தான் தங்கள் எண்ணத்திற்கு இசையப் போகின்றாளென நம்பிக்கை கொண்டு, கோபாலன் ஞானாமிர்தத்தைப் பார்த்து, "அன்பிற் சிறந்தவளே! என்ன சொல்லப் போகின்றாய்? கேட்கச் சித்தமா யிருக்கின்றோம்," என்றான்.

ஞானா:—"அன்பர்களே! நீங்களிருவரும் என்மேல் மோகமா யிருக்கின்றீர்க ளென்பதை யான் நன்றாக விளங்கிக் கொண்டேன். எனக்கும் இன்னும் விவாகமாக வில்லை. எப்படி யென்றாலும் ஓர் கணவன் வேண்டுமன்றோ? ஆனால் நீங்களிருவரும் என்மேற் காதல் கொள்வது முறையல்ல. ஏனெனின் இருவர் சேர்ந்து ஒரு பெண்ணை வைத்திருப்பது

முறையாக மாட்டாது. நீங்களிருவரும் உற்ற சிநேகித ராதலால் நன்றாக ஆலோசித்து ஒருவர் மாத்திரமே என்னை வைத்திருக்கலாம். ஆனதால் நன்றாக ஆலோசித்து இதற்கு விடையளியுங்கள்" என்றாள்.

இச் சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் இரு சண்டாளர்களும் மிக மகிழ்ச்சி யடைந்தனர். ஞானமிர்தம் அழகில் ரதியை யொத்திருந்தபடியால் இருவரும் அவள்மேல் மோகமுற்றிருந்தனர். இனித்தங்களில் "யார் ஞானமிர்தத்தைக் கொண்டு செல்வது" என வாதாடத் தொடங்கினார்கள்.

கோபா:—அண்ணாமலையைப் பார்த்து—"அடே மச்சான்! உனக்கு நூறு கும்பிடு போடுகின்றேன். இவ்விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்யவேண்டும். உனக்குக் காலமிருக்கின்றது. உன்னுடைய காலம் வருங்காலத்தில் யான் ஆகவேண்டிய உதவியைச் செய்வேன். இவ்விஷயத்தில் மட்டும் பிரவேசிக்க வேண்டாம்" என்றான்.

அண்ணா:—"போடாப் பயலே! இவளை விட வேறு உலகத்தில் அழகுள்ள பெண்கள் யாவர்? இவளைப் புணராத சென்மமும் ஓர் சென்மமாமோ; நீ ஏன் வீணாக அலைகின்றாய். யானே அவளைக் கொண்டுபோக வேண்டும். வேணுமாயின் உனக்குத் தேவையான பணம் யான் தருகின்றேன். இது விஷயத்தில் வீணாய்ப் பிரவேசிக்காதே. அப்படிப் பிரவேசித்தால் பின் என்ன நடக்...............” என்றான்.

கோபா:—"என்னடா! அது—என்னடா! "அப்படிப் பிரவேசித்தால் பின் என்ன நடக்"...........என்று அரைகுறையாகச் சொன்னாயே. முழுவதையும் சொல்லி முடி பார்ப்போம்."

அண்ணா:—"ம் ம்மு......ம்மு! முழுவதையும் சொன்

ஞல் என்ன செய்து போடுவாய் ?"

கோபா :—"கெட்டித்தனமிருந்தால் சொல்லு பார்ப்போம்" என்ருன்.

அண்ண :—"ஏன்—கெட்டித்தனத்திற் கென்ன! என் தாய் என்னைப் பத்து மாசத்திற்ருனடா பெற்றெடுத்தாள்!"

கோபா :—"அடே மடையா! அதிகம் பேசாதே; யானும் பத்துமாசம் தானடா; கெட்டித்தனமிருந்தால் அதைச் சொல்லு பார்ப்போம்" என்ருன்.

அண்ண :—"அடே! நாயே! யான் பயந்தவனென்று விளங்கவேண்டாம். சொல்லுகின்றேன் கேள்! இப்பெண்ணை யான் விடப்போவதில்லை. நீ கொண்டுபோக விடுவதுமில்லை. இதில் வீணுகப் பிரவேசியாதே. அப்படிப் பிரவேசித்தால் என்ன நடக்குமென்பதைச் சொல்ல வேண்டுமா ?"

கோபா :—(சட்டென்று ஓர் அறை யவன் கன்னத்திலறைந்து) "பின் என்ன நடக்குமென்பதைச் சொல்லடா" என்ருன்.

அண்ண :—(மிகவும் கோபாவேசங்கொண்டு சள்ளென ஓர் உதை அவன் வயிற்றில் உதைத்து) "அப்படி யிவ்விஷயத்தில் நீ பிரவேசித்தால் உன்னைத் தோற்றடிக்கச் செய்து இப்பெண்ணை யழைத்துச் சென்று விடுவேன். மிஞ்சிவிட்டால் உன்னை ஓர் குத்தாக இக்கத்தியாற் குத்திக் கொன்று விடுவேன்" என்ருன்.

கோபா :—(கோபாவேசங்கொண்டு அடுத்த உதையும் அடிவயிற்றிற் கொடுத்து) "கெட்டித்தனமிருந்தாற் சண்டைக்கு வாடா பார்ப்போம்" என்ருன். இருவர் கண்களிலும் கோபாவேசப் பொறிகள் பறந்தன. ஆளுக்காள் கை பரிமாறத் தொடங்கினர். திடீரென அண்ணுமலை தன் கத்தியை யுருவியெடுத்து கோபாலன் வயிற்றில் ஓர் குத்துப்

பளீரென விட்டான். கோபாலன் குத்தையும் வாங்கிக் கொண்டு கையில் ஆயத்தமாயிருந்த வுருவிய கத்தியைச் சட்டென அண்ணுமலையின் மார்பிலே விழும்படி வீசினன். உடனே அண்ணுமலை கீழே விழுந்து மாண்டான். கோபாலனும் அடிவயிற்றிற் குடல் புறப்படக் குத்து வாங்கியதால் குறை உயிரில் கீழே விழுந்தான். சில நிமிஷங்களால் அவனும் மாண்டான்.

ஐயோ! கொடிது! கொடிது! காமம் கொடிது. பிற மாதர்கள்மேல் வைக்கும் பாசம் கொடிது. இக்காமத்தால் மாண்டவர்களுக்கோர் கணக்கில்லை.

மேலும் இத்துஷ்டர்கள் இறந்துகிடப்பதைக் கண்ட எங்கள் ஞானுமிர்தம் கைகளிரண்டையும் கூப்பிக் கொண்டு "ஜெகதீசா! உனக்கே நமஸ்காரம்! தஞ்சமென்றடைந் தோர்க்குச் சஞ்சலம் தீர்க்கும் கருணுகரா! உனக்கே நமஸ் காரம்! அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பொருளே! உனக்கே நமஸ்காரம்! அடியார்க்கெளியவனே! உனக்கே நமஸ்காரம்! பரப்பிரம சொரூபியே! உனக்கே நமஸ்காரம்! மூவுருவும் ஒருருவாய் விளங்கி நிற்கும் பரம்பொருளே! உனக்கே நமஸ்காரம்! ஓங்காரப் பொருளே! உனக்கே நமஸ்காரம்! என் கற்பைக் காத்து இரட்சித்த குருவே! உனக்கே நமஸ்காரம்!" என்று பலமுறையும் எம்பெருமானை நினைத்து ஸ்தோத்திரஞ் செய்த பின்னர், பின் வருமாறு சொல்லலுற்றுள்:—"ஈசுவரன் செயலால் யான் என் கற்பைக் காத்துக் கொண்டேன். கமலம் தற்சமயம் என்ன ஸ்திதியிலிருக்கின்றுளோ தெரியவில்லை. தண்ணீர் எடுக்க வந்து பொல்லாக் கஷ்டத்துக்குளகப்பட்டு ஈற்றில் தப்பித்துக் கொண்டேன்! யான் இனிமேல் இங்கே நிற்பதில் ஒரு வித பிரயோசனமில்லை. எப்படியும் தண்ணீர் கொண்டு செல்லவேண்டும்! ஜெகதீசா! இவ்வுதவியைச் செய்து

என்னைக் காக்கவேண்டும்,'' என்று கடவுள் மேல் மிக நம்பிக்கை யுடையவளாய்ச் சிறிது மனத்துணிவுடன் அதிவிரைவாக நடந்துகொண்டு சென்றாள். சிறிது தூரஞ் சென்றபின்னர், குடிமனைகளும் தென்னந்தோப்புகளும் அவளின் கண்ணுக்குப் புலப்பட்டன. ஆனால் வீடுகளுக்கு முன்பாக விருக்கும் தெருப்படலைகளெல்லாம் பூட்டப்பட்டிருந்தன. ஞானமிர்தம்—என்ன செய்வாள்—பாவம். என்றாலும் ஒவ்வோர் படலையாகப் பார்த்துக்கொண்டு வருகையில் ஓர் பெரிய கல் வீடொன்றைக் காண நேர்ந்தாள். தெருவோரத்திற் கல் மதில் கட்டப்பட்டிருந்தது. இடை நடுவில் ஓர் இரும்புக்கதவு போடப்பட்டிருந்தது. இக்கதவில் இடையிடையே இரும்புக் கம்பிகள் மாட்டப்பட்டிருந்ததால் வெளியே நின்று யாரும் வீட்டைப் பார்க்கவேதுவாயிருந்தது. இவ்வண்ணமாக ஞானமிர்தமும் இக்கதவண்டை வந்து பார்க்கையில் வீட்டுக்குள் வெளிச்சத்தைக் கண்டாள். திறந்து உட்செல்வோமென்று பார்த்தாள். ஆனால் உள்ளுக்குக் கதவு பூட்டப்பட்டிருந்தது. "கடவுள் என்னைக் காப்பாற்றவே இங்கு கொண்டு வந்தார். வீட்டுக்குள் வெளிச்சம் தெரிவதால் வீட்டுக்காரர் இன்னும் நித்திரை போகமாட்டார்களென்றே யான் விளங்குகின்றேன். திறந்து போவோமென்றால் கதவு பூட்டப்பட்டிருக்கின்றதே! இனி என் செய்வது! ஏதோ ஒரு விதமாய் அவர்களை யழைக்க வேண்டும்'' என்று மனம் துணிந்தவளாய், "அம்மா! தாயே! அம்மா! தாயே! இந்த ஏழையைக் காப்பாற்றுங்கள்'' என்று பெலத்த சத்தமாகக் கத்தினாள்.

இதற்கிடையில் வீட்டுக்குள் நெடுநேரமாகப் பேசிக்கொண்டிருந்த பூரணம் தன் கணவனைப் பார்த்து, "நாதா! இன்று யாம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டோம். மணியும் தற்சமயம் பன்னிரண்டாகப் போகின்றது. இனி

நித்திரைக்குச் செல்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து வீட்டு ஜன்னலைத் தாழ்போட வருகையில் "அம்மா! அம்மா!" என்ற சத்தங் கேட்டுத் திடீரெனச் சென்று "நாதா! யாரோ—வெளியில் நின்று, "அம்மா! தாயே—அம்மா தாயே!" என்று கூப்பிடும் சத்தங் கேட்கின்றது. அதுவும் பெண்குரல் போலத் தோன்றுகின்றது. வாருங்கள்! சென்று பார்க்கலாம்" என்றாள். அவளின் கணவன் அம்பலவாணர் "நீயும் கூடவா!" என்று இருவருமாகக் கைவிளக்குடன் சென்று படலையைத் திறந்ததும், ஞானாமிர்தம் "ஐயா! நமஸ்காரம்! அம்மா! நமஸ்காரம்! கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார். இவ்வேழைப் பெண்ணின் குரலைக் கேட்டுத் தங்கள் சிரமத்தையும் பாராமல் என்மேல் தயை கூர்ந்ததற்காக யான் கோடி நமஸ்காரம் செலுத்துகின்றேன். தங்கள் நித்திரைக்குப் பங்கம் விளைவித்தேனாகில் என்னை மன்னித்து விடவேண்டும்," என்று இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில் அவள் கண்களினின்றும் நீரானது முத்து முத்தாகச் சொரிந்தது. இவளின் கோலத்தைக் கண்ட அம்பலவாணர், ஏதோ பெரிய மனவியாகுல மடைந்திருக்கின்றா ளென்று நினைத்து அவளைப் பார்த்துக் "குழந்தாய்! நீ யார்? உனது பெயரென்ன? இந்நேரத்தில் நீ தனியே வரவேண்டிய காரணமென்ன? நீ மனவிகாரமாய்த் தோற்ற வேண்டிய காரணமென்ன?" என்று கேட்டார்.

ஞானா:—"என் தந்தைக்குச் சமானமானவரே! எனது விருத்தாந்தத்தைச் சொல்வதற்கு முன்னர் எனக்கோர் சிறு உதவி செய்யத் தங்கள் மனம் கிருபைகூருமா" என்றாள்.

அம்பலவாணர்:—"குழந்தாய்! என்ன உதவி செய்வதற்கும் தடையில்லை. பயப்படாமற் சொல்லுவாய்" என்றார்.

ஞான:—"தரும குணசீலரே! தற்சமயம் என்னுடன் கூட வந்த ஓர் பெண் சிறிது தூரத்திற்கப்பால் மயக்கமேற் பட்டு மூர்ச்சையாகக் கிடக்கின்றாள். அவளுக்குத் தண்ணீர் கொடுத்து அவளின் மயக்கத்தைத் தீர்த்து இவ்விடம் கொண்டு வரவேண்டும். இவ்வுதவியைச் செய்தால் தங்களுக்குப் பெரிய புண்ணிய முண்டாகும்" என்றாள்.

அம்பல:—"இதைத்தானா கேட்டாய்?" என்று தன் மனைவியிடம் ஓர் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரும்படி ஆஞ்ஞாபித்தனர்.

பூரணம் உடனே அடுக்களைக்குச் சென்று ஓர் பெரிய செம்பில் தண்ணீர் நிறையக் கொண்டுவந்தாள். பின்னர் அம்பலவாணரும் ஞானாமிர்தமுமாகக் கமலம் மூர்ச்சையாயிருக்கு மிடத்திற்கு எதிர் நோக்கிச் சென்றனர். வரும் வழியில் இரு ஆடவர் இறந்து கிடப்பதை அம்பலவாணர் காணநேர்ந்தார். ஞானாமிர்த மென்பவள் அதன் விபரத்தையும் தான் பிற்பாடு சொல்லுவேன் என்று அழைத்துக் கொண்டு கமலமிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் வருவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்பாகக் கமலம் சிறிது மூர்ச்சை தெளிந்து ஞானாமிர்தத்தைக் காணாததால் மிகப்பிரலாபித்துக் கொண்டிருந்தாள். மேலும் ஞானாமிர்தம் கொண்டு வந்த தண்ணீரால் கமலத்தின் முகத்தைக் கழுவச் செய்து சிறிது குடிக்கவும் கொடுத்தாள். கமலம் மூர்ச்சை தெளிந்து ஞானாமிர்தத்தைப் பார்த்துக், "குழந்தாய்! நீ இவ்வளவு கஷ்டப்பட்டதற்காக யான் மிகவும் கடமைப் பட்டவளாக விருக்கின்றேன்," என்று இன்னுஞ் சொல்ல உன்னுதற் கிடையில், அம்பலவாணர் "வாருங்கள் வீட்டுக்குச் செல்வோம். இந்நேரத்தில் இங்கு தரித்து நிற்பது சரியல்ல. வீட்டிற்

போய் எல்லாவற்றையும் ஆறுதலாகப் பேசிக்கொள்ளலாம்'' என்று இருவரையுமழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர். வீடு சேர்ந்ததும், அம்பலவாணர், ஞானம்மிர்தத்தைப் பார்த்துக் "குழந்தாய்! இனிமேல் உன் விருத்தாந்தத்தை விபரமாக உரைப்பாயாக'' என்றார்.

ஞானு:—"புண்ணியசீலரே! எனது விருத்தாந்தத்தைச் சொல்ல எனக்கு ஒருபக்கம் வெட்கமும் ஒருபக்கம் துக்கமுமாயிருக்கின்றது. என்றாலும் சொல்லுகின்றேன்.—ஐயா! யான் தற்சமயம் சீவிப்பது நல்லூர். எனது பெயர் ஞானம்மிர்தம். என் தந்தையின் பெயர் சபாபதிப்பிள்ளை. என் தாயின் பெயர் தங்கம்மாள். எனது பிதாவானவர் சிங்கப்பூர்ப் பகுதியில் உத்தியோகம் பார்த்துத் தற்சமயம் உபகாரச் சம்பளத்தில் இளைப்பாறி யிருக்கின்றார். அவருடைய மைத்துனரின் மகன் "ஜீவரத்தினம்'' என்னும் நியாயவாதிக்கு (Lawyer) என்னை விவாகஞ் செய்து கொடுப்பதாக என்து தாய் தந்தையரும் மற்றும் பகுதியாரும் ஒழுங்குகள் செய்திருந்தனர். ஆனால் இவ்விவாக ஒழுங்கு எனது மனதுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் இவர்கள் பேசிய மாப்பிள்ளையின் குணங்களுக்கும் என்னுடைய குணங்களுக்கும் அனேக வித்தியாசங்களிருந்தன. அதாவது யான் அன்னிய நாட்டாரின் நாகரீகத்தை வெறுத்தவள். அவரோ அந்நாகரீகத்திலே மயங்கியிருக்கின்றனர். அவர் பொதுவாகச் சைவன் என்றழைக்கப் பட்டாலும் சைவ அனுஷ்டானங்களைக் கைக்கொள்ளாதவர். சமயப் பற்றில்லாதவர். அனுவசிய விஷயங்களிற் பணத்தைச் செலவழிப்பவர். மது வருந்துபவர். புலாலுண்பவர். இன்னும் அவருடைய கூடா வொழுக்கங்களை விரிக்கிற் பெருகும். இப்படிப்பட்டவருட னிருந்து யான் இல்லறத்தை எப்படி நடத்துவது? இல்லறமென்றால் விளையாட்டான கருமமா?

"காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கற்ன்
கண்ணிரண்டு மொன்றையே காண்."—(நன்னெறி)

என்ற வண்ணம் இருவரும் ஒரேமனதாய்க் கூடி வாழும் அறமே இல்லறமென்று சொல்லப்படும். வெளி வேஷங்களைக்கண்டு மோகிப்பதில் என்ன பிரயோசனமிருக்கின்றது? ஆனால் இது ஒருபுறமிருக்க யானும் என் குணங்களுக்கிணங்க இன்னோர் ஆடவன்மேல் என் காதலைச் செலுத்தி யிருந்தேன். ஆனதால் எனது தாய் தந்தையருக்கு இதை முன்பாக அறிவித்துவிட்டேன். ஆனால் அவர்கள் அதை யொரு பொருட்டாக மதியாமல் தாம் பேசிய மாப்பிள்ளைக்கே என்னை விவாகஞ் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்து விட்டார்கள். இப்படியாக யானும் இவ்விவாகத்தை எவ்விதம் குழப்பிவிடலாமென யோசித்துக் கமலமென்னும் இப்பெண்ணினிடம் என் உள்ளக்கிடக்கையை வெளிவிட்டு என்னை எப்படியும் விவாக தினத்தன்று எங்கேயாகிலும் கொண்டுபோய்விடும்படி பரிந்து கேட்டேன். அவளும் ஒருவிதமாய் இதற்கிசைந்தாள். இன்றுதான் விவாக தினமும் வந்தது. மாப்பிள்ளையும் மிக்க ஆடம்பரங்களுடன் மணவாளக் கோலத்துடன் எனது வீட்டுக்கு வரவும் யான் இதற்கெனவே முன்னர் ஆயத்தமாயிருந்ததால் கமலத்துடன் ஜன்னல் வழியாகக் குதித்து வீட்டுத் தெருவாசல் வழியாகப் போகாமல் வேறு பாதையால் வீட்டைவிட்டேகி மிக வேகமாய் இருவரும் நடந்துகொண்டு வந்தோம். இடை வழியில் கமலத்திற்கு அதிக எண்ணங்களேற்பட்டுக் கீழே விழுந்து மயக்கமானாள். யான் என் கதியை யுணர்ந்து மிக்க கவலைகொண்டு என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவளாகி விறைத்துப்போய்

நின்றேன். சிறிது நேரஞ் செல்லத் "தண்ணீர்" என்ற வார்த்தை என் காதிற் கேட்டதால், தண்ணீர் கொண்டு வரும்படி யான் வெளிக்கிட்டு வரும்பொழுது இரு துஷ்டர் களின் கையிலகப்பட்டேன்," என்று சொல்லிப் பின் தான் தப்பி வந்த விபரத்தையும் இன்னும் மற்றும் விஷயங்களையும் ஆதியோடந்தமாக எடுத்துரைத்தாள். இதைக் கேட்ட அம்பலவாணரும் மனைவியும் ஞானமிர்தத்தின் கற்பைப்பற் றி மிக வியந்தார்கள். அவள்பட்ட கஷ்டங்களை நினைத்து அவள் மேல் மிக்க அனுதாபங் காட்டினார்கள். பின்னும் அவளின் வரலாறுகளைப் பற்றிப் பேசிக்கொண்டு வருகை யில் அம்பலவாணர் ஞானமிர்தத்தின் தந்தை சபாபதிப்பிள் ளையை நன்முக விளங்கிக் கொண்டார். சிறுவயதில் தாமிரு வரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் வாசித்ததும், பின்னர் தான் கொழும்புக்கு முயற்சியாகச் செல்ல அவர் சிங்கப் பூர்ப் பகுதிக்குச் சென்றதும், இன்னும் மற்றும் சங்கதிகள் யாவும் அவர் நினைவுக் கெட்டின. கிட்டத்தட்டச் சபாபதிப் பிள்ளையின் வயதே அம்பலவாணருக்கும். மேலும் அம்ப லவாணர் தனது மனைவிக்கு ஞானமிர்தம் யாரென்பதை நன்முகவிளக்கிக் காட்டினார். பின்னர் அம்பலவாணர் அவ ளின் கற்பு நிலைமையைக் கண்டு மிக வியப்புற்றுப் பின் வரு மாறு தனக்குள்ளே விளம்பலுற்முர் :—"இப்பெண்ணை வள் மிகவும் கற்புவாய்ந்தவளாக விருக்கின்முள். இப்பேர்ப் பட்ட கற்புக்கரசிகளைக் காண்பது தற்காலத்தில் மிக அரிது. அவள் தன் கற்பின் வலிமையால் அச்சண்டாளர் களுக்குள் ளே கலகத்தை வருவிக்கச் செய்து அவர்களைக் கொன்று ஈற்றில் தன் கற்பையும் காத்துத் தானும் தப்பித்துக் கொ ண்டாள். என்ன வலிமை! என்ன அற்புதம்! கற்புள்ள ஸ்திரீகள் இவ்வுலகிலில்லா விட்டால் மழை எங்ஙனம் தான் பொழியும்? இதனுலன்றே

"வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே."

என்று ஆன்றோர்களும் கூறியிருக்கின்றனர். இப் பெண்ணானவள் அநிக சமயநூல்களையும் கற்பிலக்கண நூல்களையும் எமது தாய்ப் பாஷை மூலமாகக் கற்றிருக்கின்றாள் போலத் தோன்றுகின்றது. அல்லாவிடில் இவளுக்கு இப் பால்ய வயதில் இவ்வளவு அறிவும் கற்புடைமையும் எங்ஙனம் வர ஏற்படும்?" என்று இவ்விதமாகச் சொல்லிக் கொண்டு பின்னும் அவளுடைய கற்பைச் சோதிக்குமாறு ஞானமிர்தத்தைப் பார்த்துக் "குழந்தாய் ஞானமிர்தம்! உன் பெற்றோர் பேசிய மாப்பிள்ளை உனக்கு விருப்பமில்லையென்று கண்டால் விவாக தினத்திற்கு முதல் நாள் அல்லது மூன்று நாலு நாட்களுக்கு முன்பாகவே உனது தாய் தந்தையரிடம் பிடிவாதமாய்ச் சொல்லி இவ்விவாகத்தைக் குழப்பி யிருக்கக் கூடாதா? அல்லது இன்னும் வேறு வழிகளால் இலேசாக இவ்விவாகம் நடைபெறா வண்ணம் செய்விக்கலாமே! இதைவிட்டு மாப்பிள்ளையை வீட்டுக்கு வரவழைத்து விவாக உற்சவம் நடைபெறுஞ் சமயத்தில் நீ வெளிக்கிட்டு ஓடி வரலாமா? இது நீதியா? உலகம் எவ்வளவு ஏளனமாய் உன்னை நினைக்கும். உனது தாய் தந்தையருக்கு அகௌரவத்தை விளைவித்தது மன்றி மாப்பிள்ளைக்கும் ஓர் அபகீர்த்தியை விளைவித்து விட்டாயன்றோ? இப்படியாக எல்லாரையும் ஏமாற்றலாமா?" என்றார்.

ஞான:—"ஐயா! தாங்கள் சொல்வது சரிதான். ஆனல் விஷயத்தை நன்றாக ஆராய நேரிடின் என்மேற் தப்பிதம் சொல்ல இடமில்லை. முதலாவதாக யான் என் அன்பை வேறு ஆடவன்மேற் செலுத்திவிட்டேன். பெண்கள்

பல புருடரை விரும்புவது அழகல்ல. இது விஷயத்தை யான் என் பெற்றோர்க்குப் பூரணமாக அறிவித்திருந்தேன். அவர்கள் அதையொரு பொருட்டாக மதிக்கவில்லை. மாப்பிள்ளை வீட்டாரின் பணத்தையும் கௌரவத்தையும் கண்டு மாப்பிள்ளையை விரும்பினார்களே தவிரத் தம் புத்திரிக் கேற்ற ஆடவனைத் தெரிய வேண்டுமென்று நினைத்தார்களில்லை.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு."

என்றவண்ணம், ஓர் விஷயத்தைத் தொடங்குவதற்கு முன்னர் நன்றாக ஆலோசித்தே செய்யவேண்டும். பின்னர் நினைத்துத் துக்கப்படுவதில் என்ன பிரயோசன மிருக்கின்றது. ஆனதால் மற்றவர்களின் சந்தோஷத்தைக் கருதி ஓர் விஷயத்தைப் பிழை யெனத் தெரிந்து கொண்டு செய்வது அறிவீனர் செய்கையாகும். எப்பொழுதும் நீதியான விஷயங்களுக்கு மற்றவர்களுக்குப் பயந்திருக்கக்கூடாது. இவ்வாறே உலகத்திற்குப் பயந்திருந்தால் நாம் நல்வழியில் நடக்கவும் முடியாது. உலக பயமென்றிருந்துவிட்டால் குற்றங்களுடனிருப்பதாய் முடிந்துவிடும். ஆதலினால் எனது விஷயத்திலும் எனது பெற்றோர்கள் பேசிய மாப்பிள்ளை என் குண நடை பாவனைகளுக்கு எதிர் மாறாக விருந்ததாலும், முன்னரே யான் என் அன்பை இன்னோர் ஆடவன் மேற் செலுத்தியதாலும் இவ்விவாகத்திற்கு யான் இணங்கவில்லை. இது விஷயத்தை என் பெற்றோர்க்குச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. வீட்டில் யான் தரித்து நின்றால் எப்படியும் என்னைப் பலவந்தப்படுத்தி விவாகத்தை நடத்திவிடுவார்களாதலால் யான் வீட்டைவிட்டு வெளியே வரநேர்ந்தேன். பலவித யோசனைகளுடனும் எண்ணங்களுடனும் என் மனம் மூழ்கி யிருந்ததால் விவாக தினத்திற்றானே வெளிக்

கிட வேண்டுமென்ற எண்ணம் என் மனத்தில் தீர்மானமா யிருந்தது. இதைவிட உலகத்திலிருக்கும் பெற்றோர்களுக் கும் இதுவோர் படிப்பனையாயிருக்கு மென்ற எண்ணமும் என் மனதில் ஒருவாறிருந்தது" என்றாள்.

அம்பல:—"குழந்தாய்! உனது பெற்றோர் பேசிய மாப்பிள்ளையின் குணங்கள் உனக்குப் பிடிக்கவில்லை யென் று சொன்னாயல்லவா? ஆனால் அவர்கள் தீர்மானித்தபடி யே விவாகஞ் செய்த பின்னர் நாளுக்கு நாளாக அவருக்கு நற்போதனையைப் புகட்டி உன் குணங்களுக் கேற்ப நடக் கத்தக்கதாகச் செய்விக்க முடியாதா? உலகில் இவ்விதம் நடக்கவில்லையா?"

ஞான:—"ஐயா! தாங்கள் சொல்வது சரிதான். ஆ னால், தான் சாக மருந்து தின்பார்களுமுண்டோ? இதை விட இன்னோர் ஆடவன்மேல் யான் காதலைச் செலுத்தியி ருக்கும்போது வேறு ஆடவர்களை யான் நினைக்க எப்படி முடியும்?" என்றாள்.

அம்பல:—"குழந்தாய்! நீ மனதில் நினைத்திருக்கும் காதலனின் பெயரென்ன?"

ஞான:—"அவரின் பெயர் சாம்பசிவம். மலாய் நாட்டில் ஓர் உபாத்தி வேலையிலமர்ந்திருக்கின்றார்."

அம்பல:—"நீ சாம்பசிவத்தை விரும்பவேண்டிய கார ணமென்ன? நவீன நாகரீகங்களை வெறுத்தவளென்றும் எமது ஆசாரங்களையே கைக்கொள்ள வேண்டு மென்றும் சொன்னாயல்லவா? அப்படியானால் நீ நினைத்த வண்ணம் ஓர் ஆடவன் மேற்காதல் கொள்வதும் நவீன நாகரீகம் தானே."

ஞான:—"ஓர் ஆடவனை மணக்க வேண்டுமென்று நினைப்பது அந்நிய நாகரீகமாக மாட்டாது. நமது நாட் டின் ஆசாரங்களல்லாத நவீன நாகரீக முறைகளேயன்றி

ஓர் ஆடவன்மேற் காதல் கொள்வது அந்நிய நாகரீகமல்ல. எச்சமயத்தார்க்கும் எச்சாதியினர்க்கும் "காதல்" என்பது ஒன்றேயாம். அக்காதலைச் சரியான வழியிற் செலுத்த வேண்டு மென்பதையே நாமறிந்து கொள்ள வேண்டும். இங்கேயும் நமது குணங்களுக்கும் நடைபாவனைகளுக்கும் ஒத்துக் கொள்ளத்தக்கதாயிருந்ததால் இல்லறத்தைச் சரியான வழியில் நடத்தலா மென்று நினைத்து யான் அந்த ஆடவன்மேற் காதல் கொள்ள நேர்ந்தேன். இனிமேல் விவாக மென்பது விளையாட்டான கருமமல்ல. இப்பூமியின் கண்ணே ஆண் பாலார் பெண்பாலா ரிருவரும் ஒருவரோ டொருவர் பூவும் மணமும் போல மிக ஐக்கியமாக இல்லற தருமத்தை நடத்தும் பொருட்டுக் கடவுளாலளிக்கப்பட்ட ஓர் ஏற்பாடாம். இம்மை மறுமைச் சுகத்திற்கு இதுவே முதற்காரணமாயிருக்கின்றது. இனிமேல் பகுத்தறியும் தன்மை மானிட சாதியார்க்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றமையால் அப்பகுத்தறிவைக் கொண்டு கடவுளால் விதிக்கப்பட்ட முறைகளை யனுசரித்து இல்லறத்தை நடத்திப் புத்திர சந்தானத்தை விருத்தி யடையச் செய்து இம்மையிற் சுகத்தையும் மறுமையில் மோட்சத்தையு மடைவதற்கே விவாகம் ஏற்பட்டிருக்கின்றது. இனிமேல் விவாகஞ் செய்யுங் காலத்தில் ஆண் பெண் பாலாருடைய குணங்களை முதலில் நன்றாக ஆராய்ந்து கொள்ளவேண்டும். உதாரணமாக ஓர் வீடொன்றைக் கட்டுவதாக வைத்துக் கொள்ளுவோம். வீட்டைக் கட்டுவதற்கு முன்னர் அதற்காகக் குறிக்கப்பட்ட இடம் மிக்க சிலாக்கியமா யிருக்கின்றதா என்பதை முதலில் ஆராய்கின்றோம். பின்னர் கட்டப்படும் வீடானது நெடுங்காலத்திற்கிருக்கும் வண்ணம் அதன் அத்திபாரத்தை மிக உறுதியாக அமைப்பிக்கின்றோம். சரியான அத்திபாரமில்லாவிடில் மேற்கட்டிடம் சிறிது காலத்திற்குள்

இடிந்து கீழே விழுந்துவிடும். இதுபோலவே ஓர் ஆடவ னுக்காகுதல் அல்லது பெண்ணுக்காகுதல் விவாகம் பேசுங் காலத்தில், அவ்வாடவன் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங் கி யிருக்கின்றனு வென்பதையும், ஜீவகாருண்யம், கொடை முதலிய நற்குணங்களமையப் பெற்றவனுயிருக்கின்றனு வென்பதையும், இன்னும் குடி, சூது, வியபிசாரம் முதலிய துற்குணங்களில்லாமல் நல்லொழுக்கங்களிற் சிறந்து விளங் குகின்றனு வென்பதையும், இன்னும் மேக நோய், கச நோய் முதலிய கெட்ட வியாதிகளுக்குட்படாம லிருக்கின் றனு வென்பதையும் நாமறிந்து கொள்ளவேண்டும். அதே விதம் பெண்ணும் கல்வி யறிவுள்ளவளா யிருக்கிறளா வெ ன்பதையும், ஜீவகாருண்யம், கொடை, பொறுமை, அடக் கம் முதலிய நற்குணங்களமையப் பெற்றவளா யிருக்கின்ற ளா வென்பதையும், வீட்டு வேலை செய்வதிலும், புருஷனுக் கடங்கி நடப்பதிலும், கோள் சொல்லாதிருப்பதிலும், இன் னும் இல்லற நெறிக்குரிய குணங்களிற் சிறந்து விளங்குகின் றளா வென்பதையும், நாமறிந்து கொள்ளவேண்டும். இப் படி ஆராய்ந்தறிந்த பின்னர் விவாகம் நடக்குமானல் அவ் வில்லறம் மிகச் சிறந்து விளங்கும். அல்லாவிட்டால் சரி யான அத்திபாரமில்லாத வீடு எப்படிக் கீழே விழுகின்ற தோ அதே விதம் இவ்வில்லறமும் இடையில் குழம்பிப் பெரிய சண்டை சச்சரவுகளும் பிரிவினைகளும் நடக்க இயல் பாகிவிடும். இன்னும் பிரதானமாய்ப் பெண்ணைக் கொடுக் கும் பொழுது தாய் தந்தையர் மிக்க கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில் ஓர் பெண்ணனவள் கன்னிகையா யிருக்குங் காலத்தில் தாய் தந்தையருடைய காவலின் கீழி ருக்கின்றள். விவாகமான பின், தன் நாயகன் ஆதீனத்தி லிருக்கின்றள். நாயகனுக்குப் பின் தன் புத்திரனின் பார் வையி லிருக்கின்றள். இப்படியே இப்பெண்ணனவள்

சுயாதீனமற்றிருக்க நேரிடுகின்றாள். இப்படிப்பட்ட பெண்ணை யோர் ஆடவன் கையிற் கொடுக்கும் பொழுது தாய் தந்தையர்கள் தம் புத்திரியின் எதிர்கால நன்மையைக் கருதி அவளுக்கேற்ற ஆடவனைத் தெரிந்து கொள்வதன்றோ முக்கிய கடமையாகும். எத்தனையோ பெண் இரத்தினங்கள் துர்நடத்தையுள்ள ஆடவர் கையிற் சிக்கி யம ஆய்க்கினைக்குட்படுவதைக் கண்ணாரக் காண்கின்றோம். இப்படிப் பட்ட ஆடவர்களுடனிருந்து இவ்வில்லற மென்னும் வண்டியை யிழுப்ப தெப்படி? இதனாலன்றோ அறநெறிச்சாரத்திலும்,

"மருவிய காதல் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று"

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும் இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். இவ்வாறாகச் சாம்பசிவத்தினுடைய தயாள குணமும், ஜீவகாருண்யமும், தன்னுயிரைப் போலப் பிறவுயிர்களைக் கருதும் எண்ணமும், கல்வித் திறமையும், மெய்யான கடவுள் பக்தியும், பொறுமையின்மையும், சமயாசாரமும், இன்னும் அவருடைய கணக்கற்ற சிறந்த குணங்கள் என்னை யவர்பாற் செலுத்திவிட்டன. அவர்மேற்றான் யான் மெய்யான அன்பைச் செலுத்தி விட்டேன். இனிமேல் அவரே எனக்குத் தெய்வம். அவருடனிருந்தால் இல்லறத்தை நெறி தவறாமல் நடத்தலாமென்று நம்பிக்கை கொண்டே யான் அவர்மேல் என் காதலைச் செலுத்தினேன்," என்று பலவாறாக ஞானாமிர்தம் அம்பலவாணருக்குச் சொன்னாள்.

அம்பல:—"குழந்தாய்! ஞானாமிர்தம்! உன்னுடைய புத்தி சாதுரியத்தையும், ஞான அறிவையும், உன் சிறந்த கற்பையும் கண்டு யான் மிகவும் சந்தோஷமானேன். உன்

னைச் சோதிக்கும் பொருட்டே பல வார்த்தைகளை யுன்னிடம் செப்பியிருந்தேன். நீ இச்சிறு வயதில் இவ்வளவு ஞானங்களையும், பதிவிரதா தர்மங்களையும், இன்னும் இல்லற நெறிக்குரிய குணங்களையும், கற்றுக் கொண்டதற்கு என்ன புண்ணியம்தான் செய்திருந்தாயோ யானறியேன். இன்னும் மென்மேலும் உனக்கு ஞானமும் கல்வியும் உண்டாகுக,'' என்று வாழ்த்திப் பின்னும் ஞானாமிர்தத்தைப் பார்த்து, "குழந்தாய்! நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நீ நினைத்த காதலனையே மணம் முடிப்பதற்கு யான் ஒழுங்குகள் செய்து தருகின்றேன். உனது தந்தையின் நினைவும் இன்று உன்னால் ஞாபகத்திற்கு வரவேற்பட்டது. சிறுவயதில் நாமிருவரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பிலே வாசித்திருந்தோம். இதைவிட மிகச் சினேகிதமாகவு மிருந்தோம். பின்னர் உயர்தரக்கல்வி கற்கும் பொருட்டு யான் அவரை விட்டுப் பிரிய நேர்ந்தேன். அவரும் சிறிது காலத்திற்குள் மலாய் நாட்டிற்கேகி விட்டார். யானும் பின்னர் கொழும்புக்குச் சென்றிருந்தேன். அவரைக் கண்டு இப்போ ஏறக்குறைய 25 வருஷங்களாகின்றன. ஆனதால் குழந்தாய்! நீ ஒரு வித கூச்சமுமில்லாது எனது வீட்டை யுனது தாய் தந்தையர் வீடாகப் பாவித்து மிகச் சந்தோஷமாக எனது பத்தினி—குழந்தைகளுடனிருக்கலாம். யான் நாளைக் காலமே உனது செய்தியை யுனது தந்தைக்கு ஓர் கடிதம் மூலமாக அறிவித்து அவரை இங்கு அழைப்பித்து ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்வேன்'' என்று சொல்லி அவளை யாசீர்வதித்தார்.

ஞானு:—"ஐயா! தாங்கள் என் தந்தையை யறிவீர்களென்று கேள்விப்பட்டதை நினைக்க எனக்குப் பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. தாங்கள் சொன்னபடியே தங்கள் வீட்டிலிருக்கின்றேன். அத்துடன் தாங்கள் செய்யப்போகு முதவிக்கும் யான் மிகக் கடமைப் பட்ட

வளாக விருக்கின்றேன்," என்று சொல்லுமளவில் அவளை யறியாதபடி அவளின் கண்களில் நீர் ததும்பியது. இதைக் கவனித்த அம்பலவாணரும் மனைவியும் ஆறுதலான மொழிகளா லவளை யாற்றிப் படுக்கையறைக்கு அழைத்துச் சென்றனர். கமலமும் அங்கேயே தங்கியிருந்தாள். நெடுந் தூரம் நடந்து வந்த களையாலும், ஆயாசத்தாலும் ஞானமிர்தம் சிறிது அயர்ந்து நித்திரை போயிருந்தாள்.

ஞானமிர்தம் நித்திரைபோகவும், பூரணம் தனது நாயகனைப் பார்த்து "நாதா—இப்பெண்ணின் கற்புடைமையைப் பற்றி என்னென்றுதான் விரித்துரைப்பேன்! இப்படிப்பட்ட கற்புள்ள மங்கையர்களைக் காண்பதற்கு யாம் என்ன புண்ணியம்தான் செய்தோம். இச்சிறு வயதிலே இவ்வளவு ஞானமும், கல்வியும், பொறையும், தயையும், இன்னும் பெண்களுக் குரிய குணங்களும் இப்பெண்ணிலே காணப்படுகின்றமையால், இன்னும் காலம் போகப் போக எவ்வளவு காட்சிகளை யுலகிற்குக் காட்டவிருக்கின்றாளோ யானறியேன். இவளைப் பெறுதற்கு இவளின் தாய் தந்தையர் முற்பிறப்பில் என்ன புண்ணியம் தான் செய்திருந்தார்களோ? அத்துஷ்டர் களினின்று தன் கற்பைக் காத்துக்கொள்ள அவள் எடுத்துக் கொண்ட உபாயமும், ஈற்றில் அவர்கள் மாண்டதும், எனக்கு ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இப்பெண்ணை நினைக்கும் போது சந்திரமதி, தமயந்தி, சாவித்திரி, திரௌபதை முதலிய பதிவிரதைகளின் ஞாபகம் எனக்கு வருகின்றதே. இப்படிப்பட்ட கற்புள்ள மங்கையர்க ளில்லாவிட்டால் உலகில் மழையும் பொழியுமா?" என்று ஞானமிர்தத்தின் சிறந்த குணங்களைப் பற்றித் தன்கணவனுடன் பேசிக் கொண்டு எல்லோரும் நித்திரை போனார்கள்.

---

# பதினேழாம் அத்தியாயம்.

"காதலின் வெற்றி"

சென்ற பதினாலாம் அத்தியாயத்திற் சபாபதிப்பிள்ளையும் மனைவியும் தம் புத்திரி ஞானாமிர்தத்தைக் காணாத சோகத்தால் மனம் வாடி மிக்க கவலையி லாழ்ந்திருந்தார்களென்றும் இன்னும் அவளைத் தேடும் பொருட்டுக் கிட்டிய உறவினர் பல இடங்களுக்கு மனுப்பப்பட்டிருந்தன ரென்றும் கூறியிருந்தோம். அவ்வாறே தேடச் சென்றவர்கள் பல இடங்களும் சென்று காணாமையால் மனம்வாடி வீடு திரும்பலாயினர். சபாபதிப்பிள்ளையும் மனைவியும் பொல்லாத மனக்கவலையுடன் அன்னந் தண்ணீரின்றி அவ்விரவைப் போக்கினார்கள். அடுத்த நாட்காலமே ஞானாமிர்தத்தின் புதினத்தைப் பற்றி யறியும் பொருட்டு அண்டை வீட்டுச் சனங்களும் மற்றும் சுற்றத்தார்களும் சபாபதிப்பிள்ளை வீட்டுக்கு வருவதும் போவதுமா யிருந்தார்கள். அவளின் சங்கதி எப்படி முடிந்திருக்கு மென்பதைப் பற்றியே எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் சபாபதிப்பிள்ளையின் இளைய குமாரனாகிய அருட்சோதி யென்னும் சிறுவன் தன் தாயினிடமணுகி, "அம்மா! அம்மா! எனக்கோர் சந்தேகம் தோன்றுகின்றது. அதாவது எங்கள் வீட்டிலிருக்கும் வேலைக்காரியாகிய கமலமென்னும் பெண்ணை இங்கே காணவில்லை. விவாக தினத்திற்கு நாலைந்து நாட்களுக்கு முன்னர் எனது அக்கா கமலத்துடன் குசு குசு வென்று ஏதோ பேசிக் கொண்டிருந்ததை யான் நன்றாகக் கவனித்தேன் ஆனால் விஷய மென்ன வென்பது எனக்குத் தெரியமாட்டாது. ஆனபடியால், அம்மா! கமலத்துடன்தான் அக்கா எங்கேயோ சென்றிருக்க வேண்

டும். அக்காவுக்கு ஒரு கெடுதியும் நேரிடமாட்டாது. நீங்கள் கவலைகொள்ள வேண்டாம்" என்று சொல்லுமளவில் தாய் தங்கம்மாள் சிறிது மனம் தெளிந்து மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டுத் தன்நாதனிட மணுகிக் கமலமும் அங்கில்லாத சங்கதியைத் தெரிவித்தாள். சபாபதிப்பிள்ளைக்கும் இது விஷயத்தில் பெரும் யோசனை யேற்பட்டு மற்றவர்களுடன் இதைப்பற்றி யாலோசித்துச் சிறிது மனம் தேறியிருந்தார். இது விஷயத்தில் முதலில் தங்கம்மாள் சிறிது மனம் தெளிந்தாளானாலும் பின்னர் அவள் மனம் திருப்தி யடையாமல் பல எண்ணங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டன. அங்கு நின்றவர்களுட் சிலர் அவளுக் காறுதல் கூறினர். இப்படியாக மணியும் பத்தாகிவிட்டது. அங்கு வந்தவர்களுட் சிலர் இனிமேல் நிற்பதில் பிரயோசனமில்லை யென்று கருதித் தத்தம் வீடு சென்றுவிட்டனர். சிறிது நேரஞ் சென்ற பின்னர், ஓர் மனிதன் கையில் ஓர் காகிதத்தைத் தாங்கிக் கொண்டு, தனக்கு நேராக நடந்து கொண்டு வருவதைக் கண்ட சபாபதிப்பிள்ளை ஓடோடியுஞ் சென்று மிக்க அவதியுடன் அக்கடிதத்தை வாங்கினார். மேலுறையில் "சபாபதிப்பிள்ளை வரம் கொடுப்பது" என வரையப்பட்டிருந்தது. உடனே பிரித்து வாசித்தார். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

எமது பிரிய நண்பர் அவர்களுக்கு :—

தங்கள் புத்திரி ஞானமிர்தத்தைக் காணாத சோகத்தால் தாங்களும் தங்கள் பத்தினியும் மனம் வாடியிருப்பீர்களென்று யான் நம்புகின்றேன். ஆனால் தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். தங்கள் புத்திரி கமலத்துடன் எனது வீட்டில் சுகமேயிருக்கின்றாள். அவளிடம் சகல சங்கதிகளையும் விசாரித்து விஷயம் இன்ன தென்பதை

யறிந்து கொண்டேன். ஆனால் தங்கள் புத்திரி தன் கற்பின் வலிமையால் சென்ற இராத்திரி தனக்கு இடைவழியில் நேர்ந்த ஓர் பெரிய ஆபத்தினின்றும் நீங்கியே எனது வீடு வந்தடைந்தாள். விபரமெல்லாம் நேரே கண்டு பேசுவது தான் மிகவும் நல்லது. இனி, நான் யாரென்பதை யறிய ஒரு சமயம் விரும்புவீர்கள். அப்படியானால் தங்களுடன் சிறு வயதில் ஒரே வகுப்பிற் படித்த "கட்டை அம்பலவன்" என்றால் ஞாபகத்திற்கு வருமென்று நினைக்கின்றேன். மற்றும் விஷயங்க ளெல்லாம் நேரே கண்டு பேசிக் கொள்வோம்.

தங்கள் வரவை யன்புடன் எதிர்பார்க்கும்
தங்கள் உண்மையுள்ள,

அம்பலவாணர்.

இக்கடிதத்தை வாசித்து முடியவும், சபாபதிப்பிள்ளைக் குண்டான சந்தோஷம் எவ்வளவென்பதைச் சொல்ல முடியாது. ஆனால் இடைவழியில் அவளுக்கேற்பட்ட ஆபத்து என்ன வென்பதைப் பற்றி யறியவே மிக ஆவலாயிருந்தார். தன் புத்திரியின் சுக செய்தியை யறிந்த தாய் தங்கம்மாள் ஆனந்தக் கடலில் மூழ்கலானாள். ஒருகால் விழுந்து புரண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டழுதாள்; ஒருகால் சிரித்தாள்; ஒருகால் "என் அமிர்த ரத்தினமே! என் ஞானாமிர்தமே! நீ உயிருடனிருக்கின்றாயோ" என்று புலம்பினாள்; ஒருகால் "இப்போதே யான் சென்று என் கண்மணியைக் காண வேண்டும்" என்று வெளியே செல்ல உன்னினாள்; "நல்லூர்க்கந்தா! என் புத்திரியை நீயே காத்து வைத்தாய்" என்று சுப்பிரமணியனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினாள். இவ்விதமே அவள் கொண்ட ஆனந்தத்திற் கோர் அளவில்லை. அங்கு நின்றவர்க ளெல்லோரும் மிகச் சந்தோஷமா

ஞர்கள். சிறிது நேரத்தால், ஞானமிர்தம் உயிருடனிருக்கின்ற ளென்ற செய்தி அவ்வூர் முழுதும் பரம்பி விட்டது. ஆனால் அவளுக் கேற்பட்ட இடையூறு என்ன வென்பதைப் பற்றி யறியவே சபாபதிப்பிள்ளையும் மனைவியும் மிக ஆவலானார்கள். கடிதமெழுதிய அம்பலவாணர் யாரென்பது சபாபதிப்பிள்ளையின் ஞாபகத்திற்கு நன்றாக எட்டியது. தன் புத்திரி தன் பழய சினேகிதன் வீட்டிலே போயடைந்ததைப் பற்றி மிகச் சந்தோஷமானார். இதற்கிடையில் தங்கம்மாள் தன் புத்திரியைப் பார்ப்பதற்கு உடனே வெளிக்கிட்டுப் போகத் தன் நாதனை யழைத்தாள். சபாபதிப்பிள்ளையும் "சரி ஆகட்டும்" என்று சொல்லி யிருவருமாக ஓர் வண்டியிலேறி அம்பலவாணர் வீடு நோக்கி வரலானார்கள். சபாபதிப்பிள்ளையின் வரவை யெதிர் பார்த்துக் கொண்டிருந்த அம்பலவாணர் தனது வீட்டின் தெருப்படலைக்கருகே ஓர் வண்டி வந்து தரித்து நிற்பதைக் கண்டார். உடனே வண்டியினின்றும் இருவர் (ஆணும் பெண்ணுமாக) இறங்கித் தனது வீட்டுக்கு நேராக வருவதைக் கவனித்தார். ஞானமிர்தத்தின் பெற்றோராய்த்தா னிருக்கவேண்டு மென்பதைக் குறிப்பாலறிந்து கொண்டு, உடனே யவர்களை யெதிர் கொண்டழைத்து வீட்டுக்குளிட்டுச் செல்வதற்கிடையில், அவர்களைக் கண்ட ஞானமிர்தம், கிட்ட நெருங்கிக் கீழே விழுந்து தாய் தந்தையரை நமஸ்கரித்தனள். நமஸ்கரிக்கும் பொழுது அவளையறியாதபடி அவள் கண்களினின்றும் நீரானது முத்துமுத்தாகச் சொரிந்தது. அவளின் கோலத்தைக் கண்ட சபாபதிப்பிள்ளை முதலில் கண்ணீர் விட்டாராணாலும், விவாக மகோற்சவத்திற் றன்னை யேமாற்றிச் சென்றா ளென்பதை நினைத்தமாத்திரத்தில், அவருக்கு அந்நேரத்தில் என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் நின்ற இடத்தைவிட்டுப் பின்வாங்கினர். இதற்

கிடையில் அம்பலவாணர் அவரை யழைத்து வீட்டுத்திண்ணைக்கிட்டுச் சென்றனர். இனித் தாய் தங்கம்மாள் புத்திரியைக் கண்டமாத்திரத்தில், உடனே தன் இருகைகளாலும் அவளைக் கட்டி யணைத்து "என் கண்மணியே! உன்னைக் காணாததால் யான் பட்டபாடு கொஞ்சமல்ல. கேணி கிணறுகளென்ன! மூலை முடக்குகளென்ன! தெருத்திண்ணைகளென்ன! ஊர் மனைகளென்ன! கோவில் குளங்களென்ன! காடு வனாந்தரங்களென்ன! இன்னும் எத்தனையோ இடங்களெல்லாம் தேடிப்பார்த்தோமே! என்ன மாயமாய் ஒருவர் கண்ணுக்கு மெட்டாதபடி இவ்விடத்தில் வந்து சேர்ந்தாய்! உன்னைக் காணாததால் நானடைந்த சோகங் கொஞ்சமோ! அன்னந்தண்ணீரின்றி சிவபட்டினியாயிருந்தேனே! உனக்கு விருப்பமில்லாவிடில் உடனே சொல்லக்கூடாதா? இப்படி யெல்லாரையு மலையவைத்தாயே!" என்று இன்னும் வாயில் வந்ததெல்லாம் சொல்லிக் கண்ணீர் விட்டாள். அவள் விட்ட *கண்ணீரானது கவலைக்காகவோ அல்லது ஆனந்தத்திற்காகவோ என்று சொல்லமுடியாமலிருந்தது. இதற்கிடையில் அம்பலவாணரின் மனைவி பூரணம், தங்கம்மாளைத் தேற்றி யாறுதல் கூறினள்.

மேலும் சபாபதிப்பிள்ளை அம்பலவாணரைப் பார்த்து:—"நண்பரே! தங்களிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேசமுன்னர் எனது புத்திரிக்கு நேர்ந்த ஆபத்து என்னவென்பதைச் சொல்லுங்கள்" என்றார். கமலமென்னும் பெண்ணுடன் கூடிக்கொண்டு ஞானமிர்தம் வீட்டைவிட்டு வெளிக்கிட்டதும், இடைவழியில் கமலத்துக்கு நேர்ந்த மயக்கத்தையும், இன்னும் ஞானமிர்தம் கமலத்தின் மயக்கத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தண்ணீரெடுக்கச் சென்ற

---

*ஆனந்தக் கண்ணீரென்றே நாம் எடுக்கவேண்டியிருக்கின்றது.

தும், பின்னர் அவள் இரு துஷ்டர்களின் கையிலகப்பட்டுப் பின்னோர் உபாயத்தால் அவர்களுக்குட் சண்டை வரச் செய்து அவர்களிறந்ததும், இன்னும் அவள் தன் கற்பின் வலிமையால் தப்பித்த செய்திக ளெல்லாவற்றையும் ஒன்றும் தவறவிடாமல் ஆதியோடந்தமாக எடுத்துரைத்தனர். இதைக் கேட்ட சபாபதிப்பிள்ளை விறைத்துப்போய் நிற்கத் தாய் தங்கம்மாள் பெருமூச்சு விட்டழுதாள். பின்னர் அம்பலவாணரின் ஆறுதலான மொழிகளால் இருவரும் தேர்ச்சி யடைந்தது மல்லாமல் தங்கள் புத்திரியின் கற்பை நினைத்து ஆனந்தக்கடலில் மூழ்கினோர்கள். மேலும் தங்கம்மாளும் பூரணமும் ஞானமிர்தத்தின் விவாக கருமங்களைப் பற்றியும் மற்றும் புதினங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்க, இன்னோர் புறத்தில் அம்பலவாணர் சபாபதிப்பிள்ளையுடன் பலகதைகளையும் பேசிக்கொண்டிருக்கலானோர். இவ்வாறு பேசி ஈற்றில் ஞானமிர்தத்தின் விவாக கருமத்தை யெடுத்தார்கள். அம்பலவாணர் சபாபதிப்பிள்ளையைப் பார்த்து:—"நண்பரே!, தாங்கள் தங்கள் புத்திரியின் விருப்பத்திற்கு மாறாக இவ்விவாகத்தை ஏன் ஒழுங்கு பண்ணியிருந்தீர்கள்?" என்றார்.

சபாபதிப்பிள்ளை:—"ஆனால் யான் இப்படியாக ஏமாந்துபோவேனென்று ஒருநாளும் காத்திருந் தவனல்லன். முதலில், எனது புத்திரி சாம்பசிவம் மேற் காதல் கொண்ட விஷயம் எள்ளளவேனும் எனக்குத் தெரியவரமாட்டாது. இவள் சிறு வயதாயிருந்த காலத்திலே எனது மைத்துனர் காசிநாதபிள்ளை தனது புத்திரனுக்கு அவளை விவாகஞ் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்னர் அவளின் காலம் வரவும் இதைப்பற்றி விரிவாக அவர் ஞாபகப்படுத்தியதில் யான் அவளை விவாகஞ் செய்துகொடுப்பதாக வாக்குப்பண்ணி யெழுதியிருந்தேன். அவ்வாறே

ஊர் வந்து சேர்ந்ததும், மைத்துனருடன் விவாக ஒழுங்குக ளெல்லாம் பேசி முடிவெடுத்துக் கொண்டோம். இதன் பின்னர் தான் எமது புத்திரி யாம் பேசிய மாப்பிள்ளை மேல் விருப்பமில்லை யென்றும், தான் இன்னோர் ஆடவன் மேற் காதல் கொண்டிருப்பதாகவும் தனது தாயாரிடம் சொன்னாள். இதைக் கேள்வியுற்றதும் யான் மிகவும் ஆத்திரமானேன். "பெண்கள் நினைத்தபடியோ" என்று இவ ளின் சொல்லை யொருபொருட்டாக மதியாமல் யாம் நினைத் தபடி விவாகஞ் செய்யவே தீர்மானித்து விட்டோம். இவ் வாறு விவாக நாளும் குறித்து மாப்பிள்ளையும் பெண்வீடு வந்து சேர்ந்தனர். இதற்கிடையில் இவள் இப்படிச் செய் வாளென்று யார்தான் காத்திருப்பர்? சபையில் எம்மைப் பகிரங்கமாக அகௌரவப்படுத்தி விட்டாளே! இனிமேல் இதைப்பற்றிப் பேசுவதில் என்னதான் பிரயோசனம்," என்றார்.

அம்பலவாணர் :—"தாங்கள் சொல்வது சரிதான். ஆனால், தாங்கள் பேசி முடிவெடுத்த மாப்பிள்ளைமேல் தனக்கு விருப்பமில்லை யென்று முன்னதாகவே தங்கள் புத்திரி சொல்லியிருக்கத்தக்கதாகத் தாங்கள் இவ்விவாகத் தை எப்படி யொழுங்கு பண்ணலாம்?" என்றார்.

சபா :—"இது விஷயத்தில் என்மேல் தப்பிதம்தான். ஆனால் இப்படிச் செய்வாளென்று யான் கனவிலும் நினைத் தவனல்லன்."

அம்பல :—"எமது நண்பரே! தாங்கள் சொல்வதெல் லாம் சரிதான். ஆனால் யான் சொல்வதைச் சிறிது கவனி யுங்கள். அதாவது யான் கவனித்தவளவில், தங்கள் புத் திரியோ மிக்க ஞானங்களைக் கற்றிருக்கின்றாள். தற்காலத் தில் இவ்வித பெண்ரத்தினங்களைக் காண்பது மிக்க அரிது. இதைவிட ஓர் கற்பாஸ்த்ரீயாயு மிருக்கின்றாள். தன் கற்

பின் வலிமையாலன்றோ அச்சண்டாளர்களினின்றும் தன் கற்பையும் காத்துத் தானும் தப்பித்துக்கொண்டாள். இவளின் கல்விக்கும், ஞானத்திற்கும், ஒழுக்கத்திற்கும், பொறுமைக்கும், கற்புக்கும், இன்னும் எவ்வளவோ கணக்கற்ற குணங்களுக்கும் தோதான மாப்பிள்ளையைத் தெரிவதன்றோ தங்கள் கடமையாகும். இவ்விஷயத்திலும் அவள் தனக்கேற்ற கல்விகேள்வி யொழுக்கங்களிற் சிறந்த ஆடவனைத் தெரிந்து கொண்டாள். அவள் இதைப்பற்றிப் பூரணமாகத் தங்களுக்கறிவித்திருந்தும், தாங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆகவே, அவள்மேல் பிழை சொல்ல இடமில்லை. பணத்தையும் கௌரவத்தையும், உத்தியோகத்தையும் கவனிக்காமல், கல்வியையும், ஞானத்தையும், நல்லொழுக்கத்தையும் கண்டு இல்லறத்தைச் சரிவர நடத்துவதற்குத் தனக்கேற்ற ஆடவனைத் தெரிந்து கொண்டாள். அது ஒருநாளும் குற்றமல்ல. இனிச் சென்ற இராத்திரி, தங்கள் வீட்டில் தான் நிற்க நேரிட்டால், தன்னை எப்படியும் வலோற்காரப்படுத்தி விவாகத்தை நிறைவேற்றிப் போடுவார்களென்று நினைத்தே வீட்டை விட்டு வெளியே வர நேர்ந்தாள். "துணையோடல்லது நெடுவழியேகேல்" என்ற வாக்கை நினைப்புற்றுத் தனியே செல்ல விருப்பமில்லாது கமலத்துடன் வரநேர்ந்தாள். இவையெல்லாம் அவளின் சிறந்த அறிவைக் காட்டுகின்றது. ஆனபடியால் இனிமேல் ஒன்றையும் யோசிக்காமல் அவள் நினைத்த ஆடவனாகிய சாம்பசிவத்திற்குக் கடிதமெழுதியவனை வரவழைத்து விவாகத்தைச் சிறப்பாக நடத்தி வையுங்கள்" என்றார்.

சபா:—"நண்பரே! சாம்பசிவத்துக்கு விவாகஞ் செய்துவைப்பதில் எனக்கோர் விதமான தடையுமில்லை. முதலாவது அவன் எமது ஊர்வாசி; இரண்டாவது கல்வி கேள்

வி யொழுக்கங்களிற் சிறந்தவன் ; மூன்றாவது எமது புத்திரியால் காதலிக்கப்பட்டவன். ஆனால் "எமது மைத்துனர் காசிநாதபிள்ளைக்கு என்ன மறுமொழி கூறுவேன்," என்பதுதான் எனக்கு மனதில் வேலை செய்கின்றது. அப்படியானால் அவரின் புத்திரன் ஜீவரத்தினம்பிள்ளைக்கு முதலில் எங்கேயாகிலும் விவாகஞ் செய்வதற்குரிய வழிகளைத் தேடவேண்டும்," என்றார்.

அம்பல :—"அப்படிச் செய்வது மிகவும் நல்லதுதான். ஆனால் தாங்கள் தெரியாமற் செய்த பிழையை மன்னிக்கும் வண்ணம் காசிநாதபிள்ளையிடம் கேட்கவேண்டும். அவரிடம் போய் உள்ள இரகசியங்களைச் சொல்லி அவருக்குமோர் ஆறுதலான வார்த்தை கூற வேண்டும். காசிநாதபிள்ளையிடம் வேணுமாயின் யானும் கூடவருகின்றேன். ஆகவேண்டிய விஷயங்களைப் பேசி முடிவெடுக்கலாம்" என்றார்.

சபா:—"தங்கள் சிரமத்தைப் பாராது என்னுடன் வந்து எனக்காக வேண்டிய உதவியைச் செய்வதற்கு முன் வந்ததற்காக யான் மிகவும் கடமைப்பட்டவனா யிருக்கின்றேன்." என்று சொல்லிக் காசிநாதபிள்ளை வீடு செல்வதற்கு ஆயத்தமானார்கள். முதலில் எல்லோரும் அதாவது சபாபதிப்பிள்ளையும் மனைவியும், புத்திரி ஞானமிர்தமும், இவர்களுடன் அம்பலவாணரும் மனைவி பூரணமும், அவர்களின் இளைய புத்திரி (சிறுமி) அன்னரத்தினம்மாளுமாக ஓர் மோட்டார் ரதத்திலேறிச் சபாபதிப்பிள்ளை வீடு வந்து சேர்ந்தனர். இவர்களெல்லோரும் மத்தியானப் போசனத்தை அம்பலவாணர் வீட்டிலேயே முடித்துக் கொண்டனர்.

மேலும் அன்று சாயங்காலம் ஐந்து மணியளவில், சபாபதிப்பிள்ளையும் அவரின் நண்பர் அம்பலவாணரும்

காசிநாதபிள்ளை வீடு வந்து சேர்ந்தனர். இவர்களைக் கண்டதும் காசிநாதபிள்ளை, "வாருங்கள்! வாருங்கள்!" என்று சொல்லி ஆசனங் கொடுத்துபசரித்தனர். காசிநாதபிள்ளைக்கு அம்பலவாணரை நன்ருகத் தெரியும். பின்னர் அம்பலவாணர் காசிநாதபிள்ளையை யொருபக்கமாக அழைத்துக்கொண்டு போய் அவரைப் பார்த்து, "அப்பா பெரியவரே! தங்கள் மகன் ஜீவரத்தினத்தின் விவாக விஷயங்களைப் பற்றி யான் எல்லாம் கேள்விப்பட்டேன். இதை யிட்டே சிலவிஷயங்கள் தங்களுடன் பேசும் பொருட்டு இவ்விடமேகினேன். அதாவது தாங்கள் தங்கள் மைத்துனர் சபாபதிப்பிள்ளையுடன் தங்கள் மகன் ஜீவரத்தினத்தை அவரின் புத்திரி ஞானமிர்தத்திற்கு விவாகஞ் செய்யவேண்டுமென்று சில வருஷங்களுக்கு முன்னரே பேசியிருந்ததும், பின்னர் ஆளுக்காள் வாக்குப்பண்ணியதும் உண்மையே. ஆனால் இதற்கிடையில் அவரின் புத்திரி ஞானமிர்தமென்பவள் மலாய் நாட்டில் இன்னோர் ஆடவன்மேற் காதல் கொண்டிருந்ததை இவளின் பெற்றோர்க்குத் தெரிய, வரமாட்டாது. தங்கள் புத்திரன் ஜீவரத்தினத்திற்கு விவாக ஒழுங்குகள் நிச்சயிக்குங் காலத்திலுங்கூட ஞானமிர்தமென்பவள் இதையறிந்து தனக்கு இவ்விவாகத்தில் விருப்பமில்லையாதலால் விவாக ஒழுங்குகளைக் குழப்பிவிடும் பொருட்டுச் சொன்னதை இவளின் பெற்ருேர் தங்களுக்கு முன் வாக்குப் பண்ணியதால் இவளின் சொல்லை யொரு பொருட் படுத்தவில்லை. இனி ஞானமிர்தமென்பவள் தன் விருப்பத்திற்கு மாருகத் தனது பெற்ருேர் விவாகத்தை யொழுங்கு பண்ணியதால் எப்படியும் விவாக தினத்தன்று இதைக் குழப்பவேண்டுமென்று மனதில் நிச்சயித்து விவாக உற்சவங்கள் ஒருபுறம நடக்க ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி கமலமென்னும் வேலைக்காரியுடன் வீட்டை

விட்டு வெளிக்கிளம்பி இடை வழியில் ஓர் பெரிய ஆபத்தி னின்றும் தப்புவித்து ஈற்றில் எனது வீட்டில் ஏதோ காகத் திராப்பிரகாரமாக வந்து சேர்ந்தாள். இவள் எமது வீடு வந்து சேர்ந்த பின்னர்தான் அவள் மூலமாக எல்லா மறிய நேர்ந்தேன். ஆனால் உண்மையில் தம்புத்திரி இப்படிச் செய்வாளென்று கனவிலும் சபாபதிப்பிள்ளை யாகுதல் அல் லது அவர் மனைவியாகுதல் காத்திருக்கவில்லை. இவ்விஷ யத்தில் அவர்களால் ஒரு சூதும் நடக்கவில்லை யென்பது தங்களுக்குத் தெரியாமலிருக்கமாட்டாது. "தங்களுக்கு என்ன மறுமொழி கூறுவது" என்பதைப்பற்றியே சபாப திப்பிள்ளைக்கு இடைவிடாத யோசனை மனதிற்பட்டிருக் கின்றது. ஐயோ—பாவம்—அவர் இப்படி நிகழுமென்று ஒருநாளும் காத்திருக்கவில்லை. "தனது மருமகன் சபை யில் அவமானப்பட வந்துவிட்டதே" என்பதை நினைக்க நினைக்க அவர் மனம் புண்ணுகின்றது. தங்களிடம் மன் னிப்புக் கேட்டு எப்படியும் தனது மருமகன் ஜீவரத்தினத் திற்கு வேறு எங்கேயாகிலும் ஓர் பெண்ணை விவாகஞ் செய் து கொடுக்க வேண்டு மென்பதைப் பற்றியே தங்களிடம் சொல்லி மன ஆறுதலாயிருக்க இவ்விடம் வந்தார். அத் துடன் முன்னர் விவாகத்திற்குச் செலவழித்த நட்டத் தொகையைத் தான் தருவதாகவும் வாக்குப் பண்ணி யிருக்கின்றனர். யான் அவரின் உற்ற சினேகிதராதலால் தங்களிடம் எல்லாவற்றையும் யானே சொல்லும்படி வேண்டினர். ஆனதால் அப்பா பெரியவரே! இவ்வுலகில் நாமொன்று நினைக்கத் தெய்வமும் ஒன்று நினைக்கும். இதெல்லாம் விதியைப் பொறுத்ததே. இதனாற்றான் ஒளவையாரும்

"ஒன்றை நினைக்கி னது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை

நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்றருளி யிருக்கின்றனர். ஆனதால் விதியை வெல்வது அரிதென்பது எமக்கு நன்ருகப் புலப்படுகின்றது. சென்ற விஷயங்களை இனிமேல் யோசிப்பதில் ஒரு பிரயோசனமில்லை. கடவுளுக்குச் சம்மதமில்லாதபடி யாற்ருன் இவ்விவாகமும் குழம்பவேண்டி வந்தது. ஆனதால் ஜீவரத்தினத்திற்கு எப்படியும் ஓர் விவாகஞ் செய்யவேண்டும். என்ன உதவி செய்வதற்கும் தங்கள் மைத்துனர் சபாபதிப்பிள்ளை காத்திருக்கின்ருர். இதைப்பற்றி யோசிக்கவே இருவரும் இவ்விடம் வந்தோம்" என்று அம்பலவாணர் சொன்ருர்.

காசிநாதபிள்ளை:—(அம்பலவாணரை நோக்கி) "வாணரே! இவ்விவாக விஷயத்தில் எனது மைத்துனர்மேல் யான் குற்றமொன்றுஞ் சுமத்தவில்லை. அவரால் ஒரு குழப்பமும் நடக்கவில்லை யென்பதை யான் நன்ருக அறிவேன். இனிமேல் நடந்த கருமங்களை நினைப்பதில் என்ன பிரயோசனமிருக்கின்றது. பெண்ணுக்கு மாப்பிள்ளைமேல் விருப்பமில்லாதிருக்கும் பொழுது இவ்விவாகத்தைச் செய்தாலும் பின்னுக்குக் கூடாதுதானே! ஆனதால் அவர் என்னிடம் என்ன மன்னிப்புத்தான் கேட்பது? இனி எனது மகனுக்கு விவாகம் பேசும் விஷயத்தில் யான் தலையிடமாட்டேன். ஏனெனில் அவன் என் மேல் சிறிது கோபமா யிருக்கின்ருன்போலத் தெரிகின்றது. நீங்கள் யாராவது அவனுக்கெழுதி அவனுடைய சம்மதத்தைக் கேட்டு ஒழுங்கு செய்தால் எனக்கோர் வித ஆட்சேபனையு மில்லை. அவனும் இன்று காலமே கொழும்புக்குப் பிரயாணமாய் விட்டான்" என்ருர்.

சபாபதிப்பிள்ளை:—"மைத்துனரே! தாங்கள் என்னை மன்னித்ததை யிட்டு மிகவும் சந்தோஷப்படுகின்றேன்.

ஆனால் தங்கள் மகன் விஷயத்தில் யான் தலையிட்டு விவாகத்தை ஒப்பேற்றுவேன்" என்றார்.

காசி :—"அப்படியானால் மிகவும் சந்தோஷம்" என்றார்.

இவ்விதமாகப் பல கதைகளையும் பேசியிருவரும் காசிநாதபிள்ளையிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பலாயினர். வீடு வந்து சேர்ந்ததும் இருவரும் யோசனை செய்து ஓர் காகிதம் ஜீவரத்தினத்திற்கு எழுதவேண்டுமென்று தீர்மானித்தனர்.

கொழும்புமா நகரில் ஒருநாள் ஜீவரத்தினம் தான் வாடகைக்கெடுத்திருந்த வீட்டின் வெளியறையில் ஓர் சாய் நாற்காலிமீது படுத்துக்கொண்டு பின்வருமாறு யோசிக்கலானான் :—"ஆகா! என் விவாக கருமத்தைநினைக்கும் பொழுது எனக்கு என்ன ஆச்சரியமுண்டாகின்றது! சபையில் மாப்பிள்ளைக் கோலத்துடன் இப்படியாக ஏமாந்து போவேனென்று ஒரு நாளும் யான் காத்திருக்கவில்லையே! விஷயமொன்றையும் ஆராயாமல் நடந்தபடியாலன்றோ ஈற்றில் இவ்வித அவமானத்தை யடைந்தேன்!

"ஆய்ந்து பாராதான் காரியம்
தான் சாந்துயரந் தரும்"

என்பது ஆன்றோர் வாக்குமன்றோ? முதலில் ஞானமிர்தமென்பவள் இன்னோர் ஆடவன்மேற் காதல் கொண்டிருக்கின்றாளென்பதைத் தெரிந்தேனாகில் யான் இதற்குடன்பட்டிருக்க மாட்டேனன்றோ? இன்னொருவனை மணக்கவேண்டுமென்று காதல் கொண்டிருப்பவளை யான் மணம் செய்தேனாகில் அது இல்லறமாகமாட்டாதன்றோ? இதைவிட விவாக தினத்திற் குழம்பிய சங்கதியை யறிந்தவுடன் வந்திருந்தவர்களுட் பலர் தத்தம் மனதுக் கேற்றவாறு என்னைப் பற்றிப் பேசிக்கொண்டு சென்றதெல்லாம் என்

காதில் விழுந்தன. அதாவது யான் ஓர் குடிகாரன் என்றும், நவீன நாகரீகத்திலடிபட்டவனென்றும், சைவ சமய ஆசாரங்களைக் கைப்பற்றாதவனென்றும், அதனாற்றான் பெண்ணுக்கு மாப்பிள்ளைபேரில் விருப்பமில்லை யென்று குசு குசு வென்று பேசிக்கொண்டு சென்றதெல்லாம் யான் சிறிது கவனித்திருந்தேன். இதனால் நவீன நாகரீகம் எமது நாட்டாருக்குத் தேவையில்லை யென்பதை இப்போது சிறிது உணர்கின்றேன். தெரியாமற் செய்த பிழைகளைத் திருத்தி இனிமேல் யான் எமது நாட்டு ஆசாரத்தைக் கைப்பற்றவேண்டும். சைவசமய ஆசாரங்களைக் கைக்கொண்டு அதன்படி யொழுகி நடக்கவேண்டும். அத்துடன் குடிவகை முதலிய கெட்ட பழக்கங்களையும் இன்று தொடக்கமாக விட்டு விட ,வேண்டும். இனி விவாகஞ் செய்வதானால் கல்வி கேள்விகளிற் சிறந்தவளும், எமது சைவ சமய ஆசாரத்தைக் கைக்கொண்டவளும், புலால் புசியாதவளும், இன்னும் பெண்களுக்குரிய குணங்கள் வாய்ந்த ஓர் பெண்ணையே விவாகஞ் செய்யவேண்டும். சென்ற கருமங்களைப் பற்றி இனிமேல் ஆலோசிப்பதில் என்னதான் பிரயோசனம்? சென்ற விவாக ஒழுங்கு கடவுளுக்கும் சம்மதமில்லைப் போலும். ஆனபடியால் மற்றவர்களைக் குறை கூறுவதில் என்ன பிரயோசனம்?'' என்று ஆழ்ந்த யோசனையிலிருக்கும்பொழுது, தபாற்காரன் ஓர் கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். உடனே அக்கடிதத்தைத் திறந்து வாசித்தான். அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

எனது மருமகன் ஜீவரத்தினம்பிள்ளைக்கு உனது மாமனார் எழுதுவது உமக்கு விவாகதினத்தில் நடந்த சம்பவத்தையிட்டு யான் மிகவும் துக்கக் கடலி லாழ்ந்திருக்கின்றேன். விவாக குழப்பம் ஏற்பட்ட காரணத்தை இவ்வள

வில் அறிந்திருப்பீரென்று நினைக்கின்றேன். யான் ஏதும் குற்றம் செய்திருந்தால் அதைப் பொறுத்தருளும் பொருட்டு மிக மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன். தற்சமயம் உனக்கு இன்னோர் பெண்ணை விவாகஞ் செய்து வைக்காமல் எனது புத்திரிக்கும் விவாகஞ் செய்துவைக்க மாட்டேனெனத் தீர்மானம் செய்திருக்கின்றேன். இது விஷயத்தை உன் தந்தையிடம் யான் பேசியதில் எல்லாவற்றையும் உன்னிடம் கேட்டு நீர் இணங்கி வரும்பட்சத்தில் தனக்கோர்வித தடையுமில்லையென்பதாகச் சொல்லியிருக்கின்றார். ஆனதால் சென்ற கருமங்களைப் பற்றி இனி யோசிக்காமல் இதற்கிணங்கி வரும்பொருட்டு மன்றாட்டமாய்க் கேட்கின்றேன். எனது புத்திரியை உமக்குக் கொடுப்பதற்குக் கடவுளுக்கு விருப்பமில்லைப் போலும். அவளின் விதியும் இன்னோரிடத்தி லிருந்து விட்டது. விதியை வெல்வது அரிதன்றோ? ஆனதால் எல்லாம் கடவுள் செயலால் நடந்ததென்று நினைத்துச் சென்ற கருமத்தை யோசிக்காமல் சந்தோஷமாயிருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன். உமக்கு இன்னோரிடத்தில் உமக்கேற்ற பெண்ணை விவாகஞ் செய்தாலன்றி என் மனம் திருப்தியடைய மாட்டாது. என் மனதைக் களிப்புறச் செய்வதற்கு உனது மனம் திரும்புமென்று மனதார நம்புகின்றேன்.

அன்பான மறுமொழியை யெதிர்பார்க்கும்,
உமது மாமனார்,
சபாபதிப்பிள்ளை.

இக்கடிதத்தைக் கண்டவுடன் ஜீவரத்தினம் மிக அனுதாபம் கொண்டான். பின்னர் அவன் மனம் திருப்தியடைந்து, தான் விவாகஞ் செய்ய விருப்பமுள்ளவனு

யிருக்கிறதாகவும், அப்படி விவாகம் பேசுங்காலத்தில் கல்வி கேள்வி யொழுக்கங்களிற் சிறந்தவளும், சைவ அனுஷ்டானங்களைப் பின்பற்றி நடப்பவளும், இன்னும் இல்லற நெறிக்குத் தகுந்த ஓர் பெண்ணைத் தெரிவு செய்யும்படியும், தான் சில வாரங்களுக்குள் ஊர் வந்து சேர்ந்துவிடுவதாகவும் ஓர் காகித மெழுதி மாமனார் சபாபதிப்பிள்ளைக் கனுப்பி விட்டான். இரண்டு நாட்கள் சென்றபின்னர், இக்கடிதம் சபாபதிப்பிள்ளையின் கையிற் கிடைத்தது. அக்கடிதத்தில் வரைந்திருப்பதைப் பார்த்துச் சபாபதிப்பிள்ளை மிகச் சந்தோஷமானார். நவீன நாகரீகத்தை வெறுத்து எமது ஆசாரங்களைக் கைக்கொள்வதற்கு முன் வந்தமையை அக்கடிதம் மூலமாகவே கவனித்தார். பின்னர் தன் நண்பர் அம்பலவாணருடன் யோசித்துத் தன் மனைவியின் தங்கையின் புத்திரியாகிய பாலாம்பிகை யென்னும் பெண்ணுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்து ஜீவரத்தினத்திற்கு இதைப்பற்றி யறிவித்திருந்தார். சில நாட்களால் ஜீவரத்தினமும் ஊர் வந்து சேர்ந்தான். தாய் தந்தையரும் மற்றும் பந்துக்களும் சபாபதிப்பிள்ளை பேசி முடிவெடுத்த விவாகத்திற் கிசைந்தனர். ஓர் சுப முகூர்த்தத்தில் எமது சைவ சமய விதிப்படி ஜீவரத்தினத்திற்கும் பாலாம்பிகை யம்மாளுக்கும் விவாகஞ் சிறப்பாக நடந்தேறியது. முக்கியமாகச் சபாபதிப்பிள்ளையே இதைக் கொண்டு நடப்பித்தார்.

இனிமேல் ஞானமிர்தத்தின் விவாக கருமத்தைப் பற்றிக் கூறுவோம். ஞானமிர்தத்தின் விவாகம் குழம்பிய சங்கதி அடுத்தநாளே மலாய் நாட்டிற்கு மெட்டிவிட்டது. பலர் மிக ஆச்சரியப்பட்டனர். சாம்பசிவத்திற்கும் இது சங்கதி தெரியவந்தது. தான் சந்தேகங் கொண்டதை இப்போது சரியென விளங்கிக் கொண்டான். ஞானமிர்

தத்தின் சொல்லுறுதியையும், கற்பு நெறியையும் கண்டு மிக வியப்புற்றான்.

ஒருநாள் சாம்பசிவம் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும்போது தபாற்காரன் ஓர் கடிதமொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான். முத்திரையிலிருந்து ஊர்க்கடிதமென்பதை யறிந்துகொண்டு உடனே அவசரமாகக் கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

நல்லூர்.

பட்சமுள்ள தம்பி சிரஞ்சீவி சாம்பசிவத்திற்கு:—

யான் சில நாட்களுக்கு முன் அனுப்பியிருந்த எனது புத்திரியின் விவாக அழைப்புப் பத்திரத்தின்படி எமது புத்திரியின் விவாகம் நடைபெறவில்லையென்பதை இவ்வளவில் அறிந்து ஆச்சரியப்பட்டிருப்பா யென்று நம்புகின்றேன். முதன் முதல் எமது புத்திரி ஞானாமிர்தம் உம்மை நேசித்து வந்தா ளென்பதை யான் நன்றாக அறிந்திருந்த போதிலும் ஈற்றில் அந்நேசமானது உன்மேற் காதலாக மாற நேரிட்டதை யானறியேன். இவ்விடம் யாமனைவரும் வந்து சேர்ந்தவுடன் எமது மைத்துனரின் புத்திரன் ஜீவரத்தினம் பிள்ளைக்கு விவாகஞ் செய்ய ஏற்பாடாய் விட்டது. ஏனெனில் எமது மைத்துனர் யான் மலாய் நாட்டிலிருக்கும் போதே எனது புத்திரிக்குத் தனது மகனை விவாகஞ் செய்ய வேண்டுமென்று எண்ணமுள்ளவராய் அறிவித்ததில் யானும் அதற்குடன்பட்டு வாக்குப் பண்ணி யிருந்தேன். பின்னர் விவாகம் பேசி முடிவெடுக்குங் காலத்தில் எமது புத்திரி ஞானாமிர்தம், நாம் பேசியிருக்கும் மாப்பிள்ளைமேல் தனக்கு விருப்பமில்லை யெனவும், தான் உன்மேல் காதலைச் செலுத்தியதால் இன்னோர் ஆடவனை மணக்கமாட்டே

னென்றும், நாம் பேசி யொழுங்கு பண்ணிய விவாகத்தைக் குழப்பிவிடும்படியாகவும், அப்படிக் குழப்பாவிடில் தான் அதற்குரிய வழிகளைத் தேடுவதாகவும் முன்னுக்கே சொல்லியிருந்தாள். யாம் அவளின் சொற்களை யொருபொருட்படுத்தாமல் "பெண்கள் நினைத்தபடியோ" என்று விவாகத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்திருந்தோம். இப்படியாக விவாக நாளும் குறித்து மாப்பிள்ளையும் மணவாளக் கோலத்துடன் வெகு ஆடம்பரமாக உற்றார் உறவினர் முதலானோர் சூழ்ந்து வர, எமது வீடு வந்து சேர்ந்தனர். பின்னர், மாப்பிள்ளை மணவறையில் வந்துட்காரும்படி ஆஞ்ஞாபிக்கப்பட்டனர். சிறிது நேரஞ் செல்ல குருவானவர் பெண்ணை யழைத்து வரும்படி ஆஞ்ஞாபிக்க; நாம் வீட்டுக்குள் போய்ப் பார்க்கையில் எமது புத்திரியைக் காணவில்லை. மூலை முடக்குகள், கேணி கிணறுகளெல்லாம் போய்ப் பார்த்தும் காண முடியவில்லை. பெண்ணைக் காணவில்லை யென்ற சங்கதி சபையில் கதையாய் விட்டது. யானும் எனது மனைவியாரும் புத்திரியைக் காணாததால் மனம் வாடி மூர்ச்சையா யிருக்கக் கலியாணம் குழம்பி விட்டபடியால் ஜனங்களும் தத்தம் வீடேகினர். இன்னும் அன்று நடந்த சங்கதிகளை யெழுதுவதென்றால் மிக விரியும். எமது புத்திரி, தான் வீட்டிலிருக்க நேரிட்டால் எப்படியும் தன்னை வலோற்காரப் படுத்தி விவாகத்தை நிறைவேற்றிப் போடுவார்களென்று நினைத்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி எமது வீட்டு வேலைக்காரியாகிய கமல மென்னும் பெண்ணுடன் கூடிக்கொண்டு வீட்டை விட்டு வெளிக் கிளம்பிப் போகையில், இடையில் கமலத்துக்கு மயக்க மேற்பட்டு அவளுக்குத் தண்ணீர் கொண்டுவரத் தனியே செல்லும் பொழுது, வழியில் இருதுஷ்டர்களின் கையிலகப்பட்டுத் தன் கற்பின் வலிமையால் அவர்

களுக் கிடையில் சண்டை வரச்செய்து அவர்களைக் கொன்று விட்டுப் பின் ஓர் வீடு போய்ச் சேர்ந்தாள். தற்செயலாய் அவ்வீடும் எனது நண்பர் வீடாகவே இருந்தது. அடுத்த நாட் காலமேதான் அந்நண்பர் மூலமாக ஞானாமிர்தத்தைக் கண்டோம். இப்படி வைராக்கியமான மனத்துடன் இருந்தாளென்று எமக்கு முன்னரே தெரிந்திருந்தால் இவ்விவாக ஒழுங்குகளைக் கட்டாயம் குழப்பி யிருந்திருப்பேன். எமது மைத்துனருக்கு வாக்குப் பண்ணியிருந்ததால் எப்படியும் விவாகத்தை நடத்த வேண்டு மென்ற எண்ணம் எமக்கிருந்தது. இனி ஏதோ ஒரு விதமாய் எமது சம்மந்தப் பகுதியாரைச் சமாதானப்படுத்தி மருமகன் ஜீவரத்தினத்திற்கு எமது மனைவியின் சகோதரியின் புத்திரி பாலாம்பிகை யென்னும் பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்தேன். இனி எமது புத்திரி உம்மையே காதலித்தாளாதலால் நீர் அவளின் விருப்பத்திற் கிசைந்து அவளுடன் கூடி இல்லறத்தை இன்புற நடத்த வேண்டுமென்பதே எமது கோரிக்கை. இதற்கிணங்கி நடப்பீரென்று யான் நம்புகின்றேன். பழயபடி நீர் எமது வீட்டில் எங்களுடன் கொண்டாட வரப்போவதை யிட்டு யான் மிகவும் சந்தோஷப் படுகின்றேன். உமக்கு மென் மேலும் கல்வியும் ஞானமும் புகழுமுண்டாகுக.

உமது மறுமொழியை யெதிர்பார்க்கும்,

உண்மையுள்ள,

சபாபதிப்பிள்ளை.

இக்கடிதத்தை வாசித்து முடியவும் சாம்பசிவத்தின் கண்களிலிருந்து தன்னை யறியாமல் நீரானது கங்காநதிப் பெருக் கெடுத்தது. ஞானாமிர்தத்திற்கு நேர்ந்த இடை

யூறுகளை நினைத்து நினைத்து மிகத் துயரமடைந்தான். பின்னர் சிறிது தெளிந்து அவளின் கற்பின் மகிமையை நினைத்து நினைத்து மிக ஆச்சரியப்பட்டதுமல்லாமல் இப்பேர்ப்பட்ட பெண்ணுடன் கூடி இல்லறத்தை நடத்த என்ன புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமென்று பல எண்ணங்கள் கொண்டவனாய் அதிவிரைவாய் நடந்து இப்புதினத்தைத் தனது தாயாருக்குச் சொல்லி மகிழும் பொருட்டு வீடு வந்து சேர்ந்தான். சேர்ந்ததும் தனது தாயாருக்கு எல்லாவற்றையு மெடுத்துரைத்தான். தாயாகிய அம்பிகை யென்பவள் மகனைப் பார்த்துத், தம்பீ! "அவனன்றி யோரணுவு மசையாது" என்ற வண்ணம் கடவுள் செயலால் எல்லாம் இப்படி நிகழ்ந்தன. விதியை வெல்ல யாரால் முடியும்?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்பது பொய்யாமொழியன்றோ? இனி ஞானமிர்தத்தின் கற்பு நெறியை நினைக்க எனக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இப்பேர்ப்பட்ட கற்புள்ள மங்கையர்களில்லாவிட்டால் மழையும் பொழியுமா? இனிமேல் கல்வி கேள்விகளிற் சிறந்தவளும், எமது ஆசாரங்களைக் கைக்கொண்டவளும், பெண்களுக்குரிய குணங்களமையப் பெற்ற "ஞானமிர்தம்" என்னும் அமிர்தரத்தினத்தை நீ அடைவதற்கு என்ன புண்ணியம்தான் முற்பிறப்பில் செய்திருந்தாயோ? அவளின் மேல் நீ காதல் கொள்ளாவிட்டாலும் அவள் உன்மேற் கொண்ட காதல்தான் உம்மையறியாதபடி ஓர் அபூர்வ சக்தி ஏற்பட்டு உம்மை அவளின் விவாகதினத்தன்று சந்தேகத்திற்குள்ளாக்கியது. இவ்விவாக ஒழுங்கு எம்பெருமானால் ஏற்பட்டதென்று நினைத்து உம்மைக் காப்பாற்றி யாதரித்த புண்ணிய சீலராகிய சபா

பதிப்பிள்ளைக்கு விவாகத்தைக் கூடிய சீக்கிரத்தில் வந்து செய்வதாக நல்விடை யனுப்பி விடக்கடவாய்" என்றனள்.

சாம்பசிவம் :—"தாயே! யான் இவ்விதம் நிகழுமென்று கனவிலும் நினைத்தவனல்லன். ஈற்றில் கடவுள் செயலால் இம்மங்கையுடன் கூடி வாழ ஏதுவானேன். விதியும் அப்படித்தானிருந்தது போலும். பொதுப்பட யான் இம்மங்கையர்க்கரசியை யடைவதற்கு முற்பிறப்பில் ஏதோ பெரிய புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமென்பதே எனது துணிபு" என்று சொல்லி உடனே தான் இரண்டு மூன்று மாசத்திற்குள் ஊர் வந்து சேர்ந்து விடுவதாகவும், பின்னர் விவாகத்தைச் செய்து கொள்ளலா மெனச் சாபாபதிப்பிள்ளைக்கோர் காகிதம் விரிவா யெழுதி யனுப்பி விட்டான். சில நாட்கள் செல்ல இக்கடிதம் சபாபதிப்பிள்ளையின் கையிற் கிடைத்தது. வாசித்து மிகவும் சந்தோஷப்பட்டுத் தன் மனைவியிடமும் இதைப்பற்றி யறிவித்தார். இதை யறிந்த ஞானாமிர்தத்துக் குண்டான சந்தோஷத்திற்கோர் எல்லையில்லை. தான் நேசித்த காதலனை யடையப் போவதற் கருள் புரிந்த முக்கண்ணனைப் பன்முறையும் சிந்தையில் வைத்துப் போற்றித் துதித்தனள்.

இது இவ்வளவிலிருக்கச் சாம்பசிவத்தின் பயணத்தைப் பற்றிக் கூறுவோம். சாம்பசிவம் தமிழிற் பாண்டித்தியம் பெற்றதுமல்லாமல் ஆங்கிலேயத்திலும் முதன்மை பெற்று விளங்கியிருந்தான்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."—(நீதிநெறிவிளக்கம்)

என்ற வண்ணம் வீண் காரியங்களிற் பிரவேசியாமல் தன் கல்வியிலேயே புலனைச் செலுத்தியிருந்ததால் காலம் செல்

லச் செல்ல வேறு சில ஆங்கிலேய பரீட்சைகளிற் றேறினது மல்லாமல் பீ—ஏ (B.A.) என்று சொல்லப்படும் பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தான். அவனுக்கு இனிமேல் மலாய் நாட்டில் உத்தியோகம் பார்க்க விருப்பமில்லை. தனது தாய் நாட்டிற்குச் சென்று பொதுவிஷயங்களிலும், வேறு தேசத் தொண்டுகளிலும், சிறிது உழைக்க வேண்டுமென்று மிக ஆவலுடனிருந்ததால், தன் உத்தியோகத்தை நீக்கி விட்டு ஊருக்குப் புறப்பட ஆயத்தமானுன். இவனுடைய தேச, பாஷ, சமய அபிமானத்தைக் கண்டோர் மிக ஆச்சரியப்பட்டனர். சிலர், இப்பேர்ப்பட்ட அறிவாளியை யிழந்தோமெனத் துக்கப்பட்டனர். இப்படியாகப் பிரயாணமும் கிட்டிவிட்டது. அவனுக்கு நடந்த பிரியாவிடைக் கொண்டாட்டங்களுக்கோர் கணக்கில்லை. பயணத் தினத்தன்று அனேகர் அவனை யாசீர்வதித்து நல்விடை கூறினர். இதைவிடச் சபாபதிப்பிள்ளையின் புத்திரி ஞானமிர்தத்தை மணக்கப்போவதைக் கேள்விப்பட்ட அவனின் சினேகிதர்கள் மிகவும் சந்தோஷப்பட்டுப் பலவித சோபனங்களால் வாழ்த்தினர். சாம்பசிவமும் எல்லோருக்கும் தகுந்த விடை யளித்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தனது தாய் அம்பிகையுடன் பிரயாணமாகி ஊர் போய்ச் சேர்ந்தான்.

மேலும் சாம்பசிவத்தின் மாமனர் கனகேந்திரம்பிள்ளையும் அவர் மனைவி கனகாம்பாளும் இவனையும் தாயாரையும் கண்டமாத்திரத்தில் பெருமூச்சு விட்டழுதார்கள். தங்களுக்கு நேர்ந்த இடையூறுகளை யொவ்வொன்று யெடுத்துரைத்து மனமுருகினுர்கள். தாங்கள் அவர்களுக்கு முன் செய்த கொடுமையை மன்னித்துவிடும்படி வேண்டினுர்கள். சாம்பசிவமும் தாயார் அம்பிகையும் நடந்த காரியங்களைப் பற்றிப் பேசுவதில் இனிமேல் என்ன பிரயோசனமென்றும்,

எல்லாம் ஊழின் வலியென்றும், பலவாறாக ஆறுதலான வார்த்தைகளால் அவர்களைத் தேற்றி, இனிமேல் ஒருவித இடைஞ்சலு மில்லாது மிக இன்பமாகத் தங்களுடன் வாழ்ந்து வரலாமென்று சொல்லி யவர்களுக் காறுதல் கூறினர். இவ்வார்த்தைகளால் அவர்களிருவரும் சிறிது மனம் தேறி யிருந்தனர். மேலும் சாம்பசிவம் தானும் தனது தாயாரும் முன் வசித்திருந்து பின்னர் வறுமையால் விற்ற பழய குடி நிலமாகிய இரண்டு பாப்புத் தோட்டத்தையும் மறுபடியும் விலை கொடுத்து வாங்கி அதில் ஓர் வீடும் கட்டி எல்லோருமாக வாழ்ந்து வருவாராயினர். இதைவிட வேறு சில தோட்டங்களும் நெற்காணிகளும் வாங்கி யிருந்தான். சாம்பசிவம் சிறிது பணக்காரனாய் வந்தும் மற்றுஞ் சிலரைப் போல் தன் பணப் பெருமையைச் சிறிதுங் காட்டினனல்லன். தன் பழய நிலைமை யுணர்ந்து மற்றவர்களைப்போல் மிகச்சாதாரணமாகவே வாழ்வை நடத்தி இயன்ற தருமமுஞ் செய்து வந்தான். ஊர் வந்து சேர்ந்த சில தினங்களுக்குள்ளாக ஓர் சைவ ஆங்கில வித்தியாசாலையில் தலைமை உபாத்தி வேலை யவனுக்குக் கிடைத்தது. இதனுடன் பல பொது விஷயங்களிலும் உழைத்துவரத் தலைப்பட்டான். இனிச் சாம்பசிவம் ஊர் வந்து சேர்ந்த செய்தியை யறிந்த சபாபதிப்பிள்ளையும் மனைவியும் மிகச் சந்தோஷமானார்கள். ஆனால், ஞானமிர்தத்துக் குண்டான சந்தோஷம் எவ்வளவென்பதை யிங்கே சொல்லமுடியாது. தனது காதலனை எப்போது சந்திப்பே னெனக் காத்துக்கொண்டிருக்கலானாள்.

இனி ஞானமிர்தத்தின் விவாக ஆடம்பரங்கள் வெகு மும்மரமாக நடைபெற ஆரம்பித்தன. பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் விவாக அழைப்புப் பத்திரங்கள் அச்சிடுவித்துத் தத்தம் இனஜன பந்துக்களுக்கும் மற்றும்

இஷ்டமித்திரர்களுக்கும் அனுப்பியிருந்தனர். இனிப் பெண்வீட்டிலும் மணமகன் வீட்டிலும் நல்ல சுபயோகத்தில் பந்தற்கால் நாட்டப்பட்டது. மணமகன் வீட்டில் பந்தற் சோடினை மிக விமரிசையாக நடைபெற, இங்கே மணமகள் வீட்டிலும் இன்னும் பதின் மடங்கதிகமாக நடைபெறத் தொடங்கியது. முன்னர் போடப்பட்ட பந்தலைப் பிரித்துப் புதிதாகப் பந்தற்கால் நாட்டப்பட்டதை வாசகர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இனிப் பந்தலின் விசித்திரத்தைச் சொல்வதற்கு ஆயிரம் நாவுள்ள ஆதி சேடனாலும் முடியாது. பலவர்ணமுள்ள பட்டு வஸ்திரங்களால் மிகச் சிங்காரமாக வெள்ளை கட்டி, அதற்கு மேல் மிகக் கைதேர்ந்த சித்திர வேலைக்காரர்களைக் கொண்டு பலவர்ணமுள்ள காகிதங்களால் யாளி, குதிரை, சிங்கம், முதலிய படங்கள் செய்வித்து இடையிடையே ஒட்டப்பெற்றுத் தூண்கடோறும் வாழை, கமுகு, கரும்பு முதலிய மரங்களை நாட்டி யதற்குமேல் தேங்காய்க் குலைகள், மாங்காய்க் குலைகள், கூந்தற் பனைகள் முதலியன கட்டப்பட்டு நாற்புறமும் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. பந்தலின் கீழ்ப் பல காந்த விளக்குகள் மாட்டப்பட்டிருந்தன. இன்னும் இருபக்கங்களில் பெரிய நிலக்கண்ணாடிகள் மாட்டப்பட்டுத் தரை முழுவதும் அழகான கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. இனிச் சொல்லப்பட்ட விதிப்படி திட்டாணி மேடை யுண்டாக்கி அதற்கு மேற்புறத்தில் மணமகன், மணமகள் வீற்றிருப்பதற்கு மணப்பீடம் அமைக்கப்பட்டு அப்பீடத்தின்மேல் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. இன்னும் விவாகத்தோடு சம்மந்தப்பட்ட அரசாணிக்கால், கும்பங்கள், அட்டதிக்குப்பாலகர் முதலியன வெல்லாம் முறையே அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறாக விவாக முகூர்த்தமும் வந்துவிட்டது.

எங்கள் மாப்பிள்ளையாகிய சாம்பசிவம் பால்அறுகு தேய்த்து ஸ்நானம் செய்து, நல்ல பட்டாடை யணிந்து, சிவசின்னங்கள் தரிக்கப் பெற்றவனாய் மணவாளக் கோலத்துடன் பேரி மத்தளம் முரசு சல்லியம் முதலிய சங்கீத வாத்தியங்கள் முழங்கத் தீவெளிச்சத்துடன் தன் இனஜன பந்துக்கள் சூழ்ந்துவரப் பெண்வீடு வந்து சேர்ந்தான். எல்லோரும் மிக மரியாதையாக வரவழைக்கப் பட்டு மிக உபசரிக்கப்பட்ட பின்னர், மாப்பிள்ளை சாம்பசிவத்தை மணவறையில் வந்துட்காரும்படி குருவானவர் ஆஞ்ஞாபித்தனர். பக்கத்தே தோழன் வீற்றிருந்தான். சபையிலிருந்த ஜனக்களுக்கோர் கணக்கில்லை.

இதற்கிடையில், எங்கள் ஞானமிர்தத்திற்கும் ஸ்நானம் செய்வித்து, வாசனையுள்ள திரவியங்களைப் பூசி, உச்சி வார்ந்து தலைமயிரை முடித்து, நறுமணம் வீசும் முல்லைமாலையைச் சூடிக் கண்களுக்கு மையும் நெற்றியில் திலகமுமிட்டுப் பொற் சருகையாற் செய்த இரவிக்கை யணிந்து மிக விலை யுயர்ந்த பட்டுச் சேலையை யுடுத்திச் சிரசின் கண்ணே சந்திரப்பிறை, சூரியப்பிறை, நெற்றிப்பட்டம், நெற்றிச்சுட்டி, உச்சிமாலை, நெற்றிமாலை, மயிர்மாட்டி, திருகுபூ முதலிய ஆபரணங்களைத் தரித்துக் காதில் விலை யுயர்ந்த வெள்ளை வைரமும், கழுத்தில் தங்க அட்டியலும் இரத்தினப் பதக்கமும், முத்துமாலையு மணியப் பெற்றுக் கைகளுக்குத் தங்கக் காப்பும் கொலுசும், கால்களுக்குத் தங்கப் பாதசரமும் தண்டையும் கொலுசுமணிந்து அரையில், ஒட்டியாணமும் இன்னும் ஆகவேண்டிய வற்றால் மிகச் சிங்காரமாக அலங்கரித்துத் தோழிப் பெண்களுடன் மணமகள் ஞானமிர்தத்தை மணவறையில் மாப்பிள்ளையின் வலது பக்கமாகக் கொண்டுவந்திருத்தினார்கள். அம்மணப் பீடத்தின் மேல் வீற்றிருக்கும் இருவர் அழகையும் கண்டு, சபையிலி




சாம்பசிவம்-ஞானமிர்தம் விவாக மகோற்சவம்.

342-ம் பக்கம் பார்க்க.

ருந்தோர் மிக வியப்புற்றூர்கள். சிலர், மன்மதனும் ரதியுமோ வென்றனர். சிலர், இராமபிரானும் சீதாதேவியுமோ வென்றனர். சிலர், நளனும் தமயந்தியுமோ வென்றனர். சிலர், துஷ்யந்தனும் சகுந்தலையுமோ வென்றனர். இப்பேர்ப்பட்டவர்களைப் பெறுதற்குத் தாய் தந்தையர் என்ன தவம்தான் செய்தார்களோ என்றனர் சிலர். உலகத்துக்குக் கர்த்தாவாகிய சிவபெருமான் மணக்கோலங் கொண்டு உலகமாதாவாகிய பார்வதியை மணஞ்செய்ய எழுந்தருளினரோ என்றனர் சிலர். இவ்வளவு அழகு வாய்ந்த பெண்ணைப் படைத்த பிரமனுனவன் எம்மையும் அப்படியாகப் படைக்க மறந்தானே என்றனர் சில பெண்கள். இரு துஷ்டர்களைக் கொன்று தன் கற்பைக்காத்த பதிவிரதா சிரோன்மணியல்லோ என்றனர் சிலர். இவ்வளவு பதிவிரதா குணத்தை யடைவதற்கு இவள் எவ்வளவு ஞானங்களைக் கற்றிருப்பாள் என்றனர் சிலர். ஞானத்தையே யுருவாகக் கொண்டமையால் ஞானமிர்தம் என்னும் பெயரை யெடுத்தாளோ என்றனர் சிலர். தன் ஞானத்திற் கேற்ற வரனைத் தானுகவே தெரிந்த பாக்கியவதியன்றோ என்றனர் சிலர். இப்படியாக அச்சபையிலிருந்தவர்கள் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசியதற்கோர் எல்லையில்லை.

இனிக் குருவானவர் தான் செய்யவேண்டிய கிரிகைகளெல்லாவற்றையும் விதிப்படி செய்தபின்னர், பெண்ணின் தாயாகிய தங்கம்மாள் தாரை வார்க்கத் தந்தையாகிய சபாபதிப்பிள்ளை தன் புத்திரி ஞானமிர்தத்தைச் சபையார் சாட்சியாகத் தத்தம் பண்ணிக் கொடுத்தேனென்று குறிக்கும் வண்ணம், சபையார்கள் வாழ்த்த மணமகன் சாம்பசிவம் கையில் தாராதத்தம் செய்து கொடுக்க, மாப்பிள்ளை யெழுந்து அதை யேற்றுக்கொண்ட பின்னர், சபையாரால் தொட்டாசீர்வதிக்கப் பெற்ற பருத்தி நூலிற் கோர்த்த

திருமங்கிலியத்தைக் குருவானவர் ஆசிர்வாதஞ் செய்து கொடுக்க, மணமகன் சாம்பசிவம் அதை வாங்கிக் குருவானவர் மந்திரங்களை யுச்சரித்து ஆசிர்வதிக்கவும், புரோகிதர்கள் வேதபாராயணஞ் செய்து கொண்டிருக்கவும், இன்னும் மற்றும் வேத வேதியர்கள் பூமாரி பொழியவும், பேரி மத்தளம் முரசு சல்லியம் முதலிய வாத்தியங்கள் முழங்கவும், சங்கு நாதங்கள் ஒலிக்கவும், தாய் தந்தையர்கள் மனம் குளிர்ந்து மகிழ்ச்சி யடையவும், இனஜன பந்துக்களும் மற்றும் சபையிலுள்ளோர்களும் கண்டு களிகூரவும், இன்னும் பலவித ஆசிர்வாதத்துடன் மனதில் பஞ்சாட்சரத்தை யுச்சரித்துக் கொண்டு மணமகள் ஞானமிர்தத்தின் கழுத்தில் சூட்டினான். இதன் பின்னர், நடக்கவேண்டிய கிரிகைகளாகிய அரசாணிக்காலை மூன்று தரம் வலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், அறுகரிசி ஆலாத்தி யெடுத்தல் முதலியன வெல்லாம் ஒழுங்காய் நடந்தன. இவ்வாறெல்லாம் முடிந்தபின்னர் மாப்பிள்ளையும் பெண்ணும் விவாகச் சடங்குகளை நிறைவேற்றிய குருவை வணங்கி யவருடைய ஆசிர்வாதம் பெற்று இன்னும் சபையிலுள்ள பெரியோர்களுடைய ஆசிர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு அந்தப்புரம் செல்லலானார்கள். மேலும், குருவுக்குக் கொடுக்க வேண்டிய தட்சணையை யவர் மனம் திருப்தி யடையும்படி கொடுத்து அவரைத் தக்க மரியாதையுடன் அனுப்பிவிட்டனர். இவ்விதமே மற்றும் புரோகிதர்களுக்கும் நடந்தன. பின்னர், சபையிலுள்ளோர் யாவருக்கும் தாம்பூலம், சந்தனம், பன்னீர், புட்பம் முதலியன வழங்கப்பட்டு அவர்களை மிக்க மரியாதையாக அனுப்பிவிட்டனர். இனி, இன ஜன பந்துக்கள் யாவரும் அறுசுவை யுண்டியுடன் அமுதையுண்டு இன்னும் மற்றும் உபசாரங்களுடன் அந்நாளை மங்களகரமாக இனிது கொண்டாடினர். எங்கள் ஞானமிர்தமும்

தான் நினைத்த காதலனை யடையப் பெற்றதை நினைத்துச் சிவபெருமானை மனதில் முன்னரைக் காட்டிலும் பன்மடங் கதிகமாகப் பூசித்துத் தன் கொழுநனிடம் மெய்யான பக்தி பூண்டொழுகி யிருவரும் உடலும் உயிரும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பூவும் மணமும் போலவும், கரும்பும் இரசமும் போலவும், மிக அந்நியோந்நியமாய் இல்லற தருமத்தை யினிது நடத்திவரலாயினர்.

முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

ஓம் தத் ஸத்.

PRINTED BY S. LAZAR & SONS, 13, SCOTT ROAD,
KUALA LUMPUR.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 8 | ஓா | ஓர் |
| 17 | 16 | ொன்னும் | ரென்னும் |
| 27 | 2 | நகைக்ளை | நகைகளை |
| 27 | 21 | பள்ளியில | பள்ளியில் |
| 31 | 17 | முத்தமுட்டுத் | முத்தமிட்டுத் |
| 58 | 12 | உல்கிற்கு | உலகிற்கு |
| 144 | 1 | வந்தாபதைச் | வந்தாரென்பதைச் |
| 155 | 9 | தவுர | கவிர |
| 200 | 22 | த்ந்தையரிடமும் | தந்தையரிடமும் |
| 227 | 13 | காணப்படும | காணப்படும் |
| 234 | 26 | சில் | சில |
| 243 | 13 | முணாப்பெற்ற | முணரப்பெற்ற |
| 253 | 21 | இாக்க | இரக்க |
| 266 | 6 | தோரணங்காலும் | தோரணங்களாலும் |
| 280 | 28 | வலிெதன் | வலிெதன் |
| 314 | 3 | ஞானங்களையம் | ஞானங்களையும் |